918332
N49
110956

538/1-49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1949
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1949
MADRAS

# கன்ஜுல் கருமாத்து.

நான்காம் பதிப்பு பிரதிகள் : 1000

பிஸ்மில்லாஹ்.

# கன்ஜுல் கருமாத்து.

(நாகூர் மீருன்சாகிபு ஆண்டவரவர்கள் சரித்திரம்.)

நாகூர். தர்கா - மகாவித்துவான்
ஸ்ரீ லஸ்ரீ.
குலாம் காதிறு நாவலர்
செய்தது.

௪-ம் பதிப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1949
MADRAS

இது
நாகூர்
ஹாஜி. எஸ். வி. எம். ஹுசைன் ஆலிம் சாஹிபு
அவர்களால்

சென்னப்பட்டணம் :
கபீர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1949

All Rights Reserved.

Q7:332
N49

TAMIL NADU ARCHIVES LIBRARY
110956

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1949
MADRAS

4-ம் பதிப்பு

## அறிவிப்பு

---

கன்ஜுல் கருமாத்து என்னும் இப் புஸ்தகத்தை இதன் கிரந்த கர்த்தாவாகிய நாகூர் தர்கா மகா வித்வான் ஸ்ரீலஸ்ரீ வா. குலாம்காதிறு நாவலரவர்கள் சென்ற ஹிஜ்ரி. 1313-ம் ௵த்தில் செய்து முடித்து, ஈசவி 1902-ம் ௵த்தில் அச்சிற் பதிப்பித்தார்கள்.

அதின் விவரங்கள் ௸ நாவலரவர்களால் இதன் பின்னால் எழுதியிருக்கிற முகவுரையால் தெரிந்துகொள்ளலாம்.

இக் கிரந்தத்தின் ரிஜிஸ்டர் உரிமையாளரான நாகூர் ஜனாப். பெ. செய்யிது முகியித்தீன் சாகிபு மரைக்காயர் அவர்களால் ௸ முதல் பதிப்பு (1902-௵) புத்தகங்கள் பதிப்பிக்கப்பட்டு, அப் புத்தகங்கள் இந்தியாவிலும், மலேயா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலும் வெகு விரைவிலேயே செலவாகிவிட்டன.

இதற்குப் பிறகு 1922 ௵த்தில் நாகப்பட்டணம் ஸ்ரீமான் ஹானரபில் கான்பஹதூர் அ. க. கு. அகமது தம்பி மரைக்காயர் Member, Council of State அவர்களின் நன்முயற்சியால் ௸ செய்யது முகியித்தீன் சாகிபு மரைக்காயர் அவர்களால் இரண்டாம் பதிப்பும் வெளியிடப்பட்டு அதுவும் விரைவில் செலவாகிவிட்டன.

பின்பு சென்ற 1939 ௵த்தில் ௸ பெ. செய்யது முகியித்தீன் சாகிபு மரைக்காயர் அவர்கள் குமாரரும் இக் கிரந்தத்தின் சகல உரிமைக்காரருமான ஜனாப். பெ. செ. அப்துல் றெஜாக்கு மரைக்காயர் அவர்கள் இந்தக்

கிரந்தத்தை மூன்றும் பதிப்பாக அச்சிட்ட ஷை மூன்றும் பதிப்பு பிரதிகளும் செலவாகிவிட்டன. ஆதலால் உலகில் நிகழ்ந்த பல காரணங்களினாலும் அடுத்த பதிப்பு வெளிவரவில்லை.

இந்த நிலைமையில் மற்றொரு பதிப்பை வெளியிட வேண்டுமென்கிற நோக்கத்துடன் இந்தக் கிரந்தத்தின் சகல உரிமைகளையும் பாத்தியங்களையும் ஷை பெ. கெ. அப்துல் றஸாக்கு மரைக்காயர் அவர்களிடமிருந்து ஷை சரித்திர நாயகமவர்களாகிய ஹலறத்து ஆண்டவரவர்களின் 15-வது வம்சத்திலுள்ள ஹஜரத்து வா. சு. செய்யிது முஹம்மது கல்து வஞ்சூர் பகீர் ஆலிம் சாஹிபு காதிரி அவர்கள் குமாரரான ஹாஜி. S. V. செய்யிது முஹம்மது ஹுசைன் ஆலிம் சாஹிபு ஆகிய நான் சென்ற 1948 ஷ கிரையம் வாங்கிவிட்டேன்.

ஆதலால் எனது ஆத்ம நண்பரும் இந்நாயகமவர்கள் மீது அதிக பக்தி விசுவாசங் கொண்டவர்களும், பிரபல வியாபாரியுமான மதுரை ஆலி ஜனாப் K. K. சிக்கந்தர் ராவுத்தர் அவர்களும், நாகூர் பிரபல வியாபாரியும் மிராசுதாருமான ஆலிஜனாப். தா. முஹம்மது யூசுபு மரைக்காயர் அவர்களும், பிரபல வியாபாரியும், ஆடிட்டரும் தயாளம் மிகுந்தவர்களுமான திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தற்காலம் இலங்கையில் வாசம் செய்யும் ஆலி ஜனாப் ஹாஜியார் V. M. ஷம்சுத்தீன் சாகிபு இவர்களும் செய்துவந்த அரும் பெரும் முயற்சியின் ஊக்கத்தினாலும், இம்மஹானவருடைய சரித்திரத்தை ஜாதிமத பேதமின்றி யாவர்களும் வாசித்து பேரின்பங் கொண்டு ஷை நாயகமவர்களின் கிருபா கடாக்ஷத்தை பெற்று இம்மை மறுமை பேர்களையடைந்து வாழ வேண்டுமென்ற ஆவலாலும், இக்கால விலையுயர்வை கொஞ்சமும் பொருட்படுத்தாது இந்நூலை நான்காவது பதிப்பாக அச்சிட்டு வெளியிட முன்வந்தேன்.



சிறியேனால் செய்த இந்த அரும் பெரும் முயற்சியை ஷை நாயகமவர்களின் பொருட்டால் இறைவன் நேர்மையாக இலேசாக்கி முடித்து தருவதுடன் எனக்கும் இது விஷயமாக என் முயற்சியில் பங்கெடுத்துக்கொண்ட மேற்கூறிய எனது அன்பர்களுக்கும் ஷை நாயகம் அவர்கள் பொருட்டால் இறைவன் இருலோக வாழ்க்கைக்கும் உதவி புரிவானாகவும் ஆமீன்.

இந்த வருஷத்திய ஷை நாயகமவர்களின் கந்தூரிக்கு முன் இந்த வேலையை செய்து முடிக்க வேண்டுமென்று அவசரமாக செய்த வேலையால் இந்தக் கிரந்தத்தில் சில தவறுகள் இருந்தாலும் அவைகளை பொருட்படுத்தாது திருத்தி வாசித்துக்கொள்ளுமாறு அன்பர்களை பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். வாசகர்கள் எடுத்துக்காட்டும் தவறுகளை அடுத்த பதிப்பை இன்னும் திருப்திகரமான முறையில் வெளியிட ஆண்டவனருள் புரிவானாகவும்.

இந்த புஸ்தகம் கவர்ன்மெண்டில் 1867 ஷ 25வது ஆக்ட்டுப்படி என் பெயரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஹாஜி S. V. M. ஹுசைன் ஆலிம் சாஹிபு,

புரொப்ரைட்டர்,

நாகூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 1 MAR 1949
MADRAS

# கிரந்த கர்த்தாவின் முகவுரை

கன்ஜுல் கறாமாத்து என்னும் இப்புத்தகம், ஹலறத்து மீறான் சுல்தான் சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாதுஷா சாகிபு ஆண்டவரவர்களின் சரித்திர முதலான அற்புதங் களனைத்தும் அடங்கின முழுக்கிரந்தம். இதில், கறாமாத்து என்னும் அற்புதங்கள் அநந்தம் புதைந்திருப்பதாலும், இச்சரித்திர நூற்களுள் முதலாவதுக்கும் கன்ஜுல் கறாமாத்து என்று பெயரிட்டிருப்பதாலும், இவ்வரலாற்று நூற்கள் பெரும்பாலும் கன்ஜ் என்னுஞ் சொல்லுடன் பெயர்பெற்றிருப்பதாலும், இதற்கும் கன்ஜுல் கறாமாத்து என்று நான் பெயர் வைத்தேன். இப்பெயருக்குப்பொருள் அற்புதப் புதையல் என்பதாம்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் சரித்திர நூற்கள் இக்கிரந்தத்தின் பீடிகையிற் சொல்லியிருக்கிறபடி பூர்வமும், அபூர்வமுமாய் அநேக மிருக்கின்றன. இருந்தாலும், பூர்வ கிரந்தங்களனைத்தும் அறபி, பார்ஸி ஹிந்தியென்னும் பாஷைகளிலும், அபூர்வகிரந்தங்க ளனைத்தும் அறபு தமிழில் கலிகிப் பிரதியாயு மிருக்கின்றன. ஒரேயொரு அறபுதமிழ்க் கிரந்தம் அச்சிடப்பட்டிருக்கின்றது. அது அறபு அட்சரங்கல்லாதார்க்குப் பலன்படாது. தமிழிலும் காரணைச்சரித்திரம் என்றொரு நூல் அச்சிட்டிருக்கின்றது. அது, இக்கிரந்தத்திலுள்ள அநேக கறுமாத்துகளில்லாத தாய், சரித்திரதாதந்திரப் போதுமானதல்லாததாய் வழங்கு கின்றது. துலாஸத்துல் கறாமாத்து என்னும் கிரந்தமே பூர்வ கிரந்தங்களிலுள்ள எல்லாக் கறுமாத்துகளையும் ஒருங்கடக்கினதாயிருந்தாலும், அது கலிகித்து ஒரே பிரதியாயேயிருக்கின்றது. காரணைப் புராணமோ கவிதை களாற் செய்த காப்பியம்.

முஸ்லிம்களால் மாத்திரமன்றி, அந்நியமான சர்வ மதஸ்தர்களாலும் "நாகூர் மீறான்சாகிபாண்டவர்கள்!" என்று தோத்திரஞ்செய்து கொண்டாடப்படுகிற நாயகமவர் களின் சரித்திர நூற்கள் இவ்வளவாய் மறிந்திருந்தும், இந்நாட்டுச் சாமானிய ஜனங்களும் எளிதில் படித்தறியத் தக்கதாக எல்லாக்கறுமாத்துகளும் ஒருங்கமைந்து வசன ரூபமாய் ஒரு முழுக்கிரந்தம் தமிழில் இல்லாதது இதுவரை யும் பெருங் குறையாயே யிருந்தது. இக்குறைதீர வேண்டு மென்னும் பேரெண்ணம் நாகூர் - தர்கா ஆதினஸ்தரு ளொருவராகிய காஸிம் சையிது முகம்மது பாகிறுசாகிபவர்கள் மனதில் வெகுநாள் வேரூன்றியிருந்தது. அதனாலவர்கள் என்னைச் சந்திக்கும்போதும் "இக்குறை உன்காலத்தில் தான் தீரவேண்டும்; நீதான் இதைச் செய்துமுடிக்க வேண்டுமென்று சொன்ன மணியமாய் இருந்தார்கள். இதுபோல பலரிடத்திலும் அடுத்தடுத்துச் சம்பாஷித்தும் வந்தார்கள். இச்சம்பாஷணையை, நபிகளுநாயகம் முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களின் முப்பத்தைந்தாம் பௌத்திரரும், இச்சரிதாநாயகரான ஆண்டவரவர்களின் அருமைப் புத்திரராகிய ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹி யவர்களின் நான்காங்குமாரரான ஹலறத்து சுல்தான் ஹக்கானீ சாகிபவர்களின் ஒன்பதாந் தௌஹித்திரரும், சையிது ஹாம்முகியித்தீன் சாகிபவர்களின் குமாரரும், நாகூர் தர்கா ஆதினஸ்தரு ளொருவருமாகிய சையிது ஹஸான் முகம்மது கௌது சாகிபவர்கள் பலதரங் கேட்டிருந்து, இதனை நாமே செய்விக்க வேண்டுமென்று

ஆவல்கொண்டு, என்னையடைந்து தமது ஆண்டவரவர்களின் சரித்திரம் முதலான அற்புதங்களனைத்தையும் ஒருங்கு திரட்டி, தெள்ளிய தமிழில் வசனரூபமாக ஒரு கிரந்தஞ் செய்யுங்கள்" என்று ஏவினார்கள், அவ்வேலையை நான் உள்ளமுவந்தேற்று, மிகப்பிரயாசையுடன் இக்கிரந்தத்தைச் செய்யத்தொடங்கினேன்.

இதனைச் செய்து முடிப்பதற்கு முதற்கருவிகளாக இச்சரித்திர நூற்கள் பல எனக்குக் கிடைத்தன. அவையும், முன்சொன்ன குலாஸத்துல் கறாமாத்து என்னுங் கிரந்தமும் இதற்கு இன்றியமையாததா யிருந்தபடியால், நாகூர் - தர்கா ஆதீனஸ்தருளொருவரும், நாட்டாண்மை வாப்புச் சாகிபவர்களின் குமாரருமாகிய சையிது முகம்மது கலீபா சாகிபவர்கள் அதனை எனக்குக் கொடுத்துதவினார்கள். அதனையும், காரணப்புராணம் முதலிய மற்ற நூற்களையுந் தழுவி, ஹிஜ்றத்து ஆயிரத்து முந்நூற்றுப் பதின்மூன்றாம் வருஷம் இக்கிரந்தத்தை நான் செய்து முடித்தேன். ஆண்டவரவர்களின் உபாத்துக்குப் பின்னிகழ்ந்த சில சரித்திராதி யற்புதங்களைக் கொண்டு கவிதைகளால் நானியற்றியிருக்கின்ற நாகூர்ப் புராணத்தையும் மொழிபெயர்த்து, இதிற் சேர்த்திருக்கின்றேன்.

இவ்வுருவில் முடிதற்கரிதா யிருந்த இந்தப் பென்னம் பெரியகாரியம் சின்னஞ்சிறிய என்னால் செய்துமுடிந்தும், அச்சிட்டு வெளிவருவதற்கு இதுபரியந்தம் சில அசந்தர்ப்பங்களே தடையாயிருந்தன. காலம் வீணாய்க் கழிவதால், விரைவில் இது அச்சிட்டுத் தீரவேண்டுமென்னும் அபிலாஷை இராப்பகல் என்னை வருத்திவந்தது. அதனால் நான், என் அரிய நண்பரும், கல்விகேள்விகளிற் சிறந்த உத்தமருமான நாகூர், மா-ா-ஸ்ரீ பெ. சையிது முகியித்தீன் சாகிபு மரைக்காயர் என்னும் தம்பி சனி மரைக்காயரவர்களிடம் பலதடவைகளில்



இதைப்பற்றி ஆலோசனை பண்ணினேன். பொதுநலப் பிரியரான இந்தத் தனவான் செய்த முயற்சியே இது அச்சாவதற்குக் காரணமா யிருந்தது. கலாபிவிர்த்தி முதலிய சன்மார்க்க விஷயத்தின் பொருட்டுக் கௌரவமுள்ள தனவான்களால் நாகூரில் ஸ்தாபிக்கப்பட்டுப் பெயர் பெற்று விளங்கும் "ஹமீதிய்யாகிளப்" என்னும் சபையாரவர்கள் அம்முயற்சியைக்கொண்டு இதனை அச்சிட்டு முடித்தார்கள். உத்தம விஷயங்களில் பொருட் செலவுசெய்தல் அசாத்தியமான இக்காலத்தில் பெரும் பொருளைச் செலவு செய்து இப்பாரிய கிரந்தத்தை யச்சிட்ட அச்சபையாரவர்களின் கீர்த்தி என்றும் நின்று விளங்குமென்பதில் யாதும் சந்தேகமில்லை.

இதில், கிரந்த பேதத்தினாலுண்டான சரித்திர மாறுதல்களையும், அறிதற் கவசியமான விஷயங்களையும், நக்ஷத்திரப்புள்ளி முதலான அடையாளங்களிட்டு அவ்வப் பக்கங்களின்கீழ் குறிப் பெழுதியிருப்பதோடு, இக்கிரந்தத்தின் முக்கியாம்சங்களையும் வேண்டுமிடங்களில் சிறிய அட்சரத்தினால் பதிப்பித்திருக்கின்றேன்.

குலாம் காதிறு நாவலர்,

கிரந்த கர்த்தா.

# அத்தியாய நாமாவலி.


| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| க | தலைமுறைகள் | ... | க |
| உ | அவதாரம் | ... | ௬ |
| ௩ | பொற்பணங் கொடுத்தது | ... | உ0 |
| ௪ | பிறையறிவித்தது | ... | உ௨ |
| ௫ | பாலையீட்டினது | ... | உ௩ |
| ௬ | திருவாக்களித்தது | ... | உ௫ |
| ௭ | அடிசிலாக்கியது | ... | உ௮ |
| ௮ | கலிறுநபியைத் தரிசித்தது | ... | ௩க |
| ௯ | புறப்பாடு | ... | ௩௩ |
| க0 | இல்யாசுநபியைத் தரிசித்தது | ... | ௩௮ |
| கக | புலிகள் வழிபட்டது | ... | ௪0 |
| க௨ | திருடர்கள் வழிபட்டது | ... | ௪௨ |
| க௩ | ஒலிக்குக் கொம்பு முளைத்தது | ... | ௪௬ |
| க௪ | கபீதை விலக்கியது | ... | ௫௨ |
| க௫ | குவாளிர் சேர்ந்தது | ... | ௫௪ |
| க௬ | சற்குரு வரவானது | ... | ௫௭ |
| க௭ | காரண நாமம் பெற்றது | ... | ௬௨ |
| க௮ | முரீதானது | ... | ௬௪ |
| க௯ | அரம்பையரைத் தெரிசித்தது | ... | ௬௭ |
| உ0 | முகாஷபா | ... | ௮௨ |
| உக | மீட்சி | ... | ௯0 |
| உ௨ | கபோதனர் நியமிப்பு | ... | ௯௮ |
| உ௩ | பந்தலை யெரித்தது | ... | க00 |
| உ௪ | ஜின்கள் வழிபட்டது | ... | க0௨ |
| உ௫ | சிறு பெண்ணை ரக்ஷித்தது | ... | ககக |





| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| உ௬ | அரசகன்னி நீர்குடித்தது | ... | கக௫ |
| உ௭ | இறந்தவரை யழைத்தது | ... | க௨க |
| உ௮ | பட்டமரந் தழைத்தது | ... | க௨௪ |
| உ௯ | ஜின்னிடர் தவிர்த்தது | ... | க௨௭ |
| ௩0 | மான்குட்டிகளை மீட்டினது | ... | க௩க |
| ௩க | இறந்தவனை யெழுப்பினது | ... | க௩௩ |
| ௩௨ | சைகுமுஈனுத்தீன் தாயாரைத் தரிசித்தது | ... | க௩௬ |
| ௩௩ | தபஅல் ஔலியாவுக்குப் போனது | ... | க௩௯ |
| ௩௪ | மாணிக்கப்பூருக்கு மீண்டது | ... | க௪௩ |
| ௩௫ | குஷ்டந் தீர்த்தது | ... | க௪௪ |
| ௩௬ | திரவியாலயத்தை வசமாக்குவித்தது | | க௪௬ |
| ௩௭ | ஒட்டகமழைத்தது | ... | க௫க |
| ௩௮ | ராபுலிகள் வழிபட்டது | ... | க௫௪ |
| ௩௯ | கொலையுண்டவர்கள் பிழைத்தது | ... | க௬0 |
| ௪0 | முகம்மது யூசுபுசாகிபு அவதரித்தது | | க௬௨ |
| ௪க | விக்கிரக நாசஞ் செய்தது | ... | க௭க |
| ௪௨ | முனிவர்கள் வழிபட்டது | ... | க௭௬ |
| ௪௩ | குடித்தபாலை மீட்டினது | ... | க௮க |
| ௪௪ | முடந் தீர்த்தது | ... | க௯0 |
| ௪௫ | சர்ப்பத்தை நீக்கினது | ... | க௯௨ |
| ௪௬ | நதி கடந்தது | ... | க௯௪ |
| ௪௭ | விக்கிரகம் தண்ணீர் குடித்தது | ... | க௯௬ |
| ௪௮ | ஜாபாயோகி மாண்டது | ... | உ0௪ |
| ௪௯ | அரசன் இறந்துயிர்த்தது | ... | உ0௮ |
| ௫0 | தச்சன் பிணி தீர்த்தது | ... | உக௩ |
| ௫க | சத்துருக்கள் சங்காரமானது | ... | உ௨0 |
| ௫௨ | காபிர்கள் வெருண்டோடினது | ... | உ௨௬ |
| ௫௩ | பறவைகள் அடைக்கலம் பெற்றது | | உ௨௯ |

| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| ௫௪ | அஜ்மீருக்குப்போனது | .... | ௨௩௨ |
| ௫௫ | மக்கா யத்திரை | ... | ௨௩௩ |
| ௫௬ | மக்காவுக்குப் போனது | ... | ௨௩௬ |
| ௫௭ | ஹஜ்ஜு செய்தது | ... | ௨௩௯ |
| ௫௮ | மதீனாவுக்குப் போனது | ... | ௨௪௪ |
| ௫௯ | திருவாக்குப் பெற்றது | ... | ௨௪௬ |
| ௬0 | கொழிஞ்சிக்கனி பெற்றது | ... | ௨௪௮ |
| ௬௧ | மரக்கலத்தானஞ் செய்தது | ... | ௨௪௯ |
| ௬௨ | புத்திரர் வந்து சேர்ந்தது | ... | ௨௫௫ |
| ௬௩ | திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்தது | ... | ௨௬௪ |
| ௬௪ | பொன்னுணிக்கு வந்தது | ... | ௨௭௧ |
| ௬௫ | பட்டமரந் தழைத்தது | ... | ௨௭௫ |
| ௬௬ | முகல்லதீவுக்குப் போனது | ... | ௨௭௮ |
| ௬௭ | ஜின்னைக் கடலிலாழ்த்தினது | ... | ௨௮௧ |
| ௬௮ | ஆதம்மலையைத் தரிசித்தது | ... | ௨௮௮ |
| ௬௯ | காயற்பட்டணத்திற்குப் போனது | ... | ௨௯௧ |
| ௭0 | கீழக்கரைக்குப் போனது | ... | ௨௯௪ |
| ௭௧ | பட்டணமாரிக்குப் போனது | ... | ௨௯௫ |
| ௭௨ | இடபமுயிர்த்தது | ... | ௩0௧ |
| ௭௩ | பசாசுகளழிவுண்டது | ... | ௩0௪ |
| ௭௪ | தோலுக்குப் பொன்கொடுத்தது | ... | ௩0௬ |
| ௭௫ | பொதியமலைக்குப் போனது | ... | ௩௧௧ |
| ௭௬ | திருச்சினப்பள்ளிக்குப் போனது | ... | ௩௧௭ |
| ௭௭ | தஞ்சாவூருக்குப் போனது | ... | ௩௨0 |
| ௭௮ | தோரம்பேட்டைக்குப் போனது | ... | ௩௨௬ |
| ௭௯ | கூத்தனூருக்குப் போனது | ... | ௩௨௯ |
| ௮0 | திருவாரூருக்குப் போனது | ... | ௩௩௧ |
| ௮௧ | எருது கொடுத்தது | ... | ௩௩௪ |
| ௮௨ | மேலைநாகூருக்குப் போனது | ... | ௩௩௬ |





| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| ௮௩ | நாகூர் ஸ்தல ஸ்தாபனம் | ... | ௩௪௫ |
| ௮௪ | முதுபக்கு வெளியானது | ... | ௩௪௯ |
| ௮௫ | சித்திரகூடங் கண்டது | ... | ௩௫௪ |
| ௮௬ | பற்கொம்பு தளிர்த்தது | ... | ௩௫௬ |
| ௮௭ | திருமணம் பேசினது | ... | ௩௬௨ |
| ௮௮ | தர்ஞச்சரிக்குப் போனது | ... | ௩௭௨ |
| ௮௯ | விக்கிரகங்கள் பேசினது | ... | ௩௭௫ |
| ௯0 | திருமணஞ் செய்வித்தது | ... | ௩௮௪ |
| ௯௧ | மதுபான கண்டனம் | ... | ௩௮௭ |
| ௯௨ | ஸ்தனங்களை மீட்டினது | ... | ௩௮௯ |
| ௯௩ | பாரிற்பொறுத்த கப்பலை மீட்டினது | | ௩௯௨ |
| ௯௪ | கள்ளிக்குருவிகளை மீட்டினது | ... | ௩௯௫ |
| ௯௫ | கம்பத்துக் கப்பலை கண்ணுடியா லடைத்தது | ... | ௩௯௮ |
| ௯௬ | பச்சைக்கராம்பழைத்தது | ... | ௪0௨ |
| ௯௭ | காணிக்கை நிலைப்பாடு | ... | ௪0௪ |
| ௯௮ | பார்ப்பாரூருக்குப் போனது | ... | ௪0௬ |
| ௯௯ | பிளவைநோய் தீர்த்தது | ... | ௪௧௩ |
| ௧00 | வாஞ்ஞூருக்குப்போனது | ... | ௪௧௯ |
| ௧0௧ | புதையலை வெளியாக்கினது | ... | ௪௧௮ |
| ௧0௨ | புளியமரம் பேசினது | ... | ௪௨0 |
| ௧0௩ | உபாத்து | ... | ௪௨௧ |
| ௧0௪ | உத்தரவளித்தது | ... | ௪௩௪ |
| ௧0௫ | தபோதனர் புறப்பாடு | ... | ௪௩௭ |
| ௧0௬ | பள்ளிகட்டினது | ... | ௪௪௧ |
| ௧0௭ | கந்தூரி | ... | ௪௪௪ |
| ௧0௮ | விவாகம் | ... | ௪௫௪ |
| ௧0௯ | ஹலறத்தவர்களின் உபாத்து | ... | ௪௬௨ |
| ௧௧0 | போர்வை வந்தது | ... | ௪௬௮ |

| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| ௧௧௧ | கொலைதீர்ப்பை மாற்றினது | ... | ௪௭௨ |
| ௧௧௨ | மரக்கல மழைத்தது | ... | ௪௭௮ |
| ௧௧௩ | கூலிகொடுத்தது | ... | ௪௮௪ |
| ௧௧௪ | அற்புதவாட் செய்தி | ... | ௪௮௯ |
| ௧௧௫ | சேவற்செய்தி | ... | ௪௯௦ |
| ௧௧௬ | குருடுமாற்றினது | ... | ௪௯௭ |
| ௧௧௭ | தரியாபீவியின் சபதம் | ... | ௫௦௦ |
| ௧௧௮ | மலடு தீர்த்தது | ... | ௫௦௧ |
| ௧௧௯ | இலியாஸ் விருந்தது | ... | ௫௧௧ |
| ௧௨௦ | ஊமையுங்குருடுந் தீர்ந்தது | ... | ௫௧௩ |
| ௧௨௧ | அற்புத நாகச்செய்தி | ... | ௫௧௫ |
| ௧௨௨ | பஞ்சமாற்றினது | ... | ௫௧௮ |
| ௧௨௩ | முதல் மனுருக் கட்டினது | ... | ௫௨௧ |
| ௧௨௪ | கொம்புத் தேங்காய்ச் செய்தி | ... | ௫௨௪ |
| ௧௨௫ | இரண்டாம் மனுருக்கட்டினது | ... | ௫௨௭ |
| ௧௨௬ | மூன்றும் மனுருக்கட்டினது | ... | ௫௨௯ |
| ௧௨௭ | உருவமாற்றினது | ... | ௫௩௦ |
| ௧௨௮ | நாலாம் மானுருக்கட்டினது | ... | ௫௩௯ |
| ௧௨௯ | குன்மந்தீர்ந்தது | ... | ௫௩௮ |
| ௧௩௦ | ஐந்தாம் மனுருக்கட்டினது | ... | ௫௪௩ |
| ௧௩௧ | மானியம்விட்டது | ... | ௫௪௮ |


அத்தியாய நாமாவலி முற்றிற்று.

## பீடிகை.

புகழடங்கலும், தஅய்யுன் அவ்வல் என்னும் இல்மில் ஹுவிய்யத்து என்னும் அக்ஷரத்தைவிட்டு மறைவான கந்துல்கன்ஸ் என்கிற பொக்கிஷப் பொருளாயிருந்த நம்மை, தஅய்யுன் தானியான அஃயான்ஸாபிதா என்னும் அக்ஷரத்தின் வழியாகி, நம்மிலே மறைந்து, நம்மிலே வெளியாய், அஃயான் ஹாரிஜாவாகிய ஆலமுல்கோவ்ன் வல்பஸாது என்னும் கோலங் கொண்டு என்றைக்கும் நாமே நாமாயிருக்கும்படி வெளியாக்கினோனே அந்த மகத்துவமுள்ள றப்பானவனு அல்லாஹுத்தஆலாவுக்கே யுரியன.

ஸலவாத்தும் ஸலாமும், முதலான தஸ்பீஹைப் படைப்பு முகத்தில் முன்னையதேவ்வும் உடையையவரிந்து, மேற்புகழ்ப்பட்ட றப்பானவனுடைய இல்மென்னும் கஜானவின் கன்ஸுல் மஹ்பியானவான பொக்கிஷப் பொருட்களை ஏவற்பிரகாரம் தங்கள் உம்மத்துமார் அள்ளியநுபவிக்க அதன் திறவுகோலைக் கைக்கொண்டு, நுபுவ்வத்து ரிஸாலத்துகளை சுத்தம் செய்வதற்காக ஆகிறுல்அம்பியா யவதரித்த காதமுன்னபியயீன், ஸையிதுல் முர்ஸலீன், ஹபீபுல் முத்னபீன், ஹபீபுறப்பல் ஆலமீன், அஹ்மது முஜ்தபா, மஹ்மூது முஸ்தபா, முகம்மது ரஸூலா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரிலும், அவர்கள் ஆல்கள் பேரிலும், அஸ்ஹாபுகள் பேரிலும் உண்டாவதாக.

அல்லாஹுத்தஆலாவின் காரியகாரர்களான ஒலியாமார்கள் நபி முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் உரிமையாளர்களும், அகிலாண்டங்களுக்கு ஸ்தம்பங்களும், முனிகளுமானவர்கள். உலகத்திற்குத் தீபமுமானவர்கள். அவர்களுக்குரிய இலக்ஷணாதி மகத்துவங்களை விவரித்தெழுதுவதானால், எத்தனை வகைகளினாலும் முடிவுபெற மாட்டா.

| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| ௧௧௧ | கொலைநீர்ப்பை மாற்றினது | ... | ௪௭௨ |
| ௧௧௨ | மரக்கல மறைத்தது | ... | ௪௭௮ |
| ௧௧௩ | கூலிகொடுத்தது | ... | ௪௮௪ |
| ௧௧௪ | அற்புதவாட் செய்தி | ... | ௪௮௯ |
| ௧௧௫ | சேவற்செய்தி | ... | ௪௯௦ |
| ௧௧௬ | குருடுமாற்றினது | ... | ௪௯௭ |
| ௧௧௭ | தரியாபீவியின் சபதம் | ... | ௫௦௦ |
| ௧௧௮ | மலடு தீர்த்தது | ... | ௫௦௩ |
| ௧௧௯ | இலையான் விருந்தது | ... | ௫௧௧ |
| ௧௨௦ | ஊமையுங்குருடுந் தீர்ந்தது | ... | ௫௧௩ |
| ௧௨௧ | அற்புத நாகச்செய்தி | ... | ௫௧௫ |
| ௧௨௨ | பஞ்சமாற்றினது | ... | ௫௧௮ |
| ௧௨௩ | முதல் மனுருக் கட்டினது | ... | ௫௨௧ |
| ௧௨௪ | கொம்புத் தேங்காய்ச் செய்தி | ... | ௫௨௪ |
| ௧௨௫ | இரண்டாம் மனுருக்கட்டினது | ... | ௫௨௭ |
| ௧௨௬ | மூன்றும் மனுருக்கட்டினது | ... | ௫௨௯ |
| ௧௨௭ | உருவமாற்றினது | ... | ௫௩௦ |
| ௧௨௮ | நாலாம் மானுருக்கட்டினது | ... | ௫௩௬ |
| ௧௨௯ | குன்மந்தீர்ந்தது | ... | ௫௩௮ |
| ௧௩௦ | ஐந்தாம் மனுருக்கட்டினது | ... | ௫௪௩ |
| ௧௩௧ | மானியம்விட்டது | ... | ௫௪௮ |


அத்தியாய நாமாவலி முற்றிற்று.

---

# பீடிகை.

புகழுடங்கலும், தவ்ஹீதுல் அவ்வல் என்னும் இல்மில் ஹூவல்லாஹு என்னும் அக்ஷரத்தைவிட்டு மறைவான குன்து கன்ஸ் என்கிற பொக்கிஷப் பொருளாயிருந்த நம்மை, தவ்ஹீதுல் தானீ யான அஹியான்தாபிதா என்னும் அக்ஷரத்தின் ஷூஹூது, நம்மிலே மறைந்து, நம்மிலே வெளியாய், அஹியான் காரிஜா வாகிய ஆலமுல்கௌன் வல்பஸாது என்னும் கோலங் கொண்டு என்றைக்கும் நாமே நாமாயிருக்கும்படி வெளியாக்கினோனே அந்த மகத்துவமுள்ள றஹ்மானுகிய அல்லாகுத்த ஆலாவுக்கே யுரியன.

ஸலவாத்தும் ஸலாமும், முதலதான தஸ்பீஹைப்பட்டய முகத்தில் முஹையதேன்னும் உடையையணிந்து, மேற்புகழ்ப்பட்ட றஹ்மானுடைய இல்மென்னும் கஜானுவின் கன்ஸுல் மகுபியானான பொக்கிஷப் பொருட்களை எவற்பிரதாரம் தங்கள் உம்மத்துமார் அள்ளியநுபவிக்க அதன் திறவுகோலைக் கைக்கொண்டு, நுபவ்வத்து றிஸாலத்துகளை சுத்தம் செய்வதற்காக ஆகிறுபியா யவதரித்த காததிமுன்னபியயீன், ஸையிதுல் முறுஸலீன், ஷபீஉல் முதுனபீன், ஹபீபுறப் பல் ஆலமீன், அகுமது முஜ்தபா, மகுமுதுமுறுத்தலா, முகம்மது முஸ்தபா ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் பேரிலும், அவர்கள் ஆல்கள் பேரிலும், அஸ்ஹாபுகள் பேரிலும் உண்டாவதாக.

அல்லாகுத்தஆலாவின் காரியகாரர்களான ஒலியுமார்கள் நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களின் உரிமையாளர்களும், அகிலாண்டங்களுக்கு ஸ்தம்பங்களும், மூலைகளுமானவர்கள். உலகத்திற்குத் தீபமுமானவர்கள். அவர்களுக்குரிய இலக்ஷணாதி மகத்துவங்களை விவரித்தெழுதுவதானால், எத்தனை வகைகளினாலும் முடிவுபெற மாட்டா.

அவர்கள் இவ்வுலகத்தைவிட்டு மறைந்தாய் அவ்வுலகத்திற் சேர்ந்தபின்னும், இவ்வுலகம் அவர்களுக்கு மறைந்திராது. இவ்வுலக விஷயம் ஒவ்வொன்றையும் ஜீவியகாலத்தில் இங்கிருந்து நேரிற் பார்த்ததுபோல, அங்கிருந்தும் பார்ப்பார்கள். அவர்கள் ஜீவியவந்தரா யிருக்கும்போது பெற்றிருந்த பார்வை கேள்விகளைப் பார்க்கிலும், நிரியாணத்திற்குப்பின் மிகத்தெளிவான பார்வை கேள்விகளையுடையவர்களா யிருப்பார்கள். ஜீவியகாலத்தில் இவ்வுலக காரியங்களை எவ்வாறு நடத்தினார்களோ, அவ்வாறே நிரியாணத்திற்குப்பின் கபுறிலிருந்துகொண்டு யுகமுடியும் வரையும் நடத்துவார்கள். ஜீவியகாலத்தில் ஒரு கருமத்தை நடத்தினதற்கும், நிரியாணத்திற்குப்பின் நடத்துவதற்கும் பேதமில்லை. அவர்கள் ஹயாத்தா யிருக்கும்போதும், வபாத்தாய்விட்டபோதும், அவர்களை ஒருவன் கூப்பிட்டு, தன் நாட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று எவ்வளவு தூரந் தொலையிலிருந்து வேண்டினாலும், அவன் கூப்பிடுதலையும், நாட்டத்தையும், தாங்களாகவேயாவது, மலக்குகளாலாவது அறிந்துகொள்ளுவார்கள். ஒருவன் எந்தத்திக்கிலிருந்து கூப்பிட்டாலும் அங்கேபோய், அவனுக்கு வேண்டியவைகளைச் செய்து முடிப்பார்கள். அவர்கள் ஹயாத்தாயிருந்தால், அவர்களின் சமூகத்திலாவது தூரத்திலாவது இருந்துகொண்டும், வபாத்தாயிருந்தால், கபுறடியிலாவது வேறெங்கேயாவது இருந்து கொண்டும், அவர்களின் திருநாமங்களைச் சொல்லிக் கூப்பிட்டு, தீனுக்காவது துன்யாவுக்காவது வேண்டுமான நற்காரியங்களை நிறைவேற்றக் கேட்கலாம். இவ்வாறு கேட்பதில் யாதொருபிசகும் உண்டாகாது. ஏனென்றால் :—அவர்கள் செய்கிற ஒவ்வொரு கருமமும் அல்லாகுத்தஆலாவினு லன்றி, அவர்களாலாகிறதல்லவென்பதை முஸ்லிமானவர்கள் அறிந்தவர்கள் தாமே. அவ்வாறு கேட்டவுடன் அவர்கள் அல்லாகுத்தஆலாவினிடம்



கேட்டே நிறைவேற்றுவார்கள். அதனால்தான் ஒலியாக்களிடம் நாட்டை நிறைவேற்றக் கேட்பது மேலான காரியமா யிருக்கின்றது. அவர்களை எங்கிருந்தும் கூப்பிட்டு, நற்கருமத்தில் எதையும் நிறைவேறக் கேட்கலாம். அவர்களின் உதவி யொத்தாசைகளை அவசியம் தேடலாம். அல்லாகுத்தஆலா தன் அடியார்கள் கேட்பதை நிறைவேற்றும் தத்துவத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றானென்று முஸ்லிமான நாம் சந்தேகமற நிருணயங்கொள்ளவேண்டும். இவையனைத்தும் பலமான ஹதீதுகளால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. சுன்னத்து ஜமாஅத்து உலமாக்கள் எல்லாரும் இதில் ஐக்கியப்பட்டிருக்கின்றார்கள்.

குத்புமார்கள் ஒலியாமார்களைப் பார்க்கிலும் மேலானவர்கள். மேற்கூறிய மகத்துவமுள்ள ஒலியாக்களனைவரும் குத்புகளின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந் திருப்பவர்களே. குத்புகளின் இலக்ஷணங்களையும், பதவியையும், அதிகாரவலிமையையும் இன்ன இனையவென்று விவரிக்க யாராலும் இயலாது. அவர்கள் ஷறஉடைய கண்ணாடியும், அல்லாகுத்தஆலாவின் அஸ்மா ஸிபாத்துகள் வெளியாகுந் தானமுமானவர்கள். கலாகதறு என்னும் கற்பனைகளின் அந்தரங்கங்களை அறிந்தவர்கள். உலகமுழுவதும் ஆடாமல் அசையாமல் நிறுத்தின முளைகளானவர்கள். அவர்களின் அதிகாரம் மகாபெரிதும், வலிமையுமானது. சிருஷ்டிகளடங்கலும் அவர்களுக்கு வழிபட்டு ஒழுகுகிற்கும். உலகமுழுவதையும் உள்ளங்கையில் வைத்துப் பார்ப்பார்கள். அவர்கள் எதையும் அல்லாகுத்தஆலாவின் உத்தரவு கொண்டே செய்வார்கள். கௌது என்னும் உயர்பதம் பெற்றவர்களும் அவர்களே. ஒரு ஒலியிடம் ஒருகருமத்தை நிறைவேற்றிக் கேட்பதைப் பார்க்கிலும், குத்பிடம் கேட்பது மிகவும் மேலானதாகும். ஒலிமாரால் ஆகாத வொன்றை, குத்புமார் செய்வார்கள்.

இக்கிரந்தத்தின் சரிதாநாயகரான குத்புல் அக்தாபு, மஃறு துல் அஃவ்பாபு, கௌதுல் இஸ்லாம், மீறான்குல் நாஸ், ஸையிது அப்துல்காதிறு ஜைதுல்ஹஸனீது ஹஸனைனிய் ஹுஸைனிய், பாந்து ஷாகாகிபு ஆண்டவரவர்கள் மேற்கூறிய ஒலியாக்களிலும் குத்புகளிலும் மிகச் சிறந்தவர்கள். நபி முகம்மது ஸல்லல் லாகு அலைகிவஸல்லமவர்களின் பௌத்திரர். இவர்கள் ஹிஜ்றத்துத் தொளாயிரத்துப் பத்தாம் வருஷம் * மாணிக் கப்பூரில் பிறந்தார்கள். பிறக்குமுன் தாயார் வயிற்றில் கருப்பமாயிருக்கும் போதே பல அற்புதங்களைச் செய்திருக் கின்றார்கள். பிறந்தபின், குழந்தைப் பருவத்திலும், சிறு பிராயத்திலும், அநேக அற்புதங்களைச் செய்துவந்தார்கள். வயதேற ஏற அற்புதங்களும் அதிகரித்துக்கொண்டே நிகழ்ந்து வந்தன. இறந்த மனிதர்களையும், மிருகங்களையும் எழுப்பியிருக்கின்றார்கள். மிருகங்களும், விருக்ஷங்களும், கற்களும் இவர்களோடு பேசின. இவர்கள் ஜீவியகாலமுழு தும் செய்துவந்த ஆச்சரியமான ஒவ்வொரு கருமாத்தும், நிரியாணதிசைக்குப்பின் செய்துவருகிற அற்புதங்களும், மகாமகிமையுள்ளதும், மனிதர் திடுக்கிடத் தக்கவைகளும், சர்வஜாதியாரும் ஒப்புக்கொள்ளத் தக்கவைகளுமா யிருக் கின்றன. இவர்களின் சரித்திரங்களையும், கருமாத்து களையும் கூறும் கிரந்தங்கள் அநேகம் வழங்குகின்றன. அவை:—இவர்களின் கலீபாக்களுளொருவராகிய ஸைகு முஃறுந்தீனவர்கள் இவர்களோடு கூடவே யிருந்து ஒவ்வொன்

* மாணிக்கப்பூர் அயோத்தியிலுள்ள பிரதான பட்டணங்க ளில் அலஹாபாத் என்னும் பிரயாகை நகரத்தின் பக்கத்திலுள்ளது. அது, தமிழில் மாணிக்கப்புரம் என்று சொல்லப்படும். தமிழ் மொழியில் தற்பவமாய் வந்து வழங்கும் வடமொழிப் பதங்கள் வட மொழியில் பெரும்பாலும் அம்மென்னும் பிரத்யயமின்றி வழங்கு மாதலால், மாணிக்கபுரம் என்பது மாணிக்புரீ என்றாய், அது மாணிக்கப்பூர் என்று மருவி வழங்குகின்றது.



றையும் நேரிற்கண்டு எழுதின கஸீதுல்கறுமாத்து, ஸைகு மதுமது ஆரிபுபில்லாஹி யவர்கள் இயற்றிய நுபதுல்ஹகா யாத்துல் மஷ்ஹூறாத்து, ஸைகு கலந்தர் அலி மவ்லவி யவர்கள் இயற்றிய கஸீதுல்கறுமாத்து - பாஞ்சுகுனாஜ், ஸைகு அஜீஜித்தீனுமியவர்கள் இயற்றிய கஸீதுல்துதுபத்து, ஸைகு முகம்மதுஸியவர்கள் இயற்றிய ஸஹுநத்துல்முஷ்தவி-கறுமாத்துல்காதிறி, ஸைகு பீர்முகம்மது சுத்தாறியவர்கள் இயற்றிய நுபதுல்ஹகாயாத்து, ஸையிதுமுகம்மது ஆலி மவர்கள் இயற்றிய முனூகிபு முதலியவைகளாம். இவ்வக ளனைத்தும் முதலும், வழியும், சார்புமாக எழுதப்பட்ட பூர்வகிரந்தங்களாம். இவையன்றி, காயற்பட்டணத்து மகாவித்துவான் ஸைகு அப்துல்காதிறு நயினார்லெப்பை ஆலிம் புலவரவர்கள் இயற்றிய காரணப்புராணமும், பூர்வ கிரந்தங்களிலுள்ள கருமாத்துகளனைத்தையும் ஒருங்கு சேர்த்து, நாகூர்-தர்கா ஆதினஸ்தருளொருவராகிய ஸையிது முகம்மது கௌதுராகிபு ஆலிமவர்கள் இயற்றிய குலாஸத்துல் கறுமாத்தும் இன்னும் பலவேறு வகைப்பட ஒருவரொருவரா யெழுதிக்கொண்ட சில அறபு தமிழ்க்கிரந்தங்களும் உண்டு. இவையனைத்தும் அபூர்வகிரந்தங்களாம்.

இப்பூர்வாபூர்வ கிரந்தங்களிலுள்ள கருமாத்துகளனைத் தையும் ஒருமிக்கத்திரட்டி யெழுதினதே இக் கஸீதுல்கறு மாத்து ஹலறத்து ஆண்டவரவர்களின் கருமாத்துகளை அறிய விரும்பினவர்கள் இக்கிரந்தம் முழுவதையும் வாசித்தல் வேண்டும். இதனை வாசிப்போர்யாரும் ஆண்டவரவர்க ளின் தர்கா என்னும் சந்நிதிக்குவரப் பேரவல் கொள்ளா திரார்கள். இவர்களின் மகத்துவமுள்ள கபுறுஸ்தானமாகிய றோளா வானது மனிதர்களின் உடலிலும், உள்ளத்திலு முள்ள வியாதிகளைப் போக்கத்தக்கதாயும், துஆக்களை கபூ லாக்கிறதாயும், உலகத்தாரை ரக்ஷிக்கிறதாயு மிருக்கின்றது. இவர்கள் அல்லாதுந்த ஆலாவின் காதிறு என்னும் திருநாமத்

திற்கு நிலைக்களமானபடியால், இவர்களிடம் எதைக்கேட்டாலும் உடனே நிறைவேறும். இவர்கள் அளவற்ற அற்புதங்களைச் செய்வதற்கு இவர்களின் திருநாமமே தகுந்த காரணமாயிருக்கின்றது.

இஸ்லாமான ஒருவன் உலு செய்துகொண்டு இவர்கள் தர்காவிற்போய், நம்முடைய இயற்கை செயற்கைகளைத் தையும் இவர்கள் காண்கிறார்களென்று எண்ணி அதிக பய பக்தியாய்க் கைகட்டித் தலைகுனிந்து நின்றுகொண்டு, வாய்க்குள் "யாகுத்புல் அக்தாபு" "யாகௌதுல் இஸ்லாம்" "யாமீறன் சுல்தான்" "யாஷாகுல்ஹமீது" என்று ஸலாம் சொல்லிக் கூப்பிட்டு, வேறு பராக்கின்றி, சூறத்துல் இக்லாசு நூறுதரம் ஓதி ஹதியாசெய்து, பாத்திஹா வோதி, தன் நாட்டத்தை நிறைவேற்றக்கேட்டு இரந்தால், கட்டாயம் நிறைவேறும். இவர்களிடம் "என்னை ரக்ஷியுங்கள்" "என்னைக் காப்பாற்றுங்கள்" "என் துன்பந்துயரங்களை நீக்குங்கள்" என்று கேட்கலாம். அவைகளைச் செய்வார்கள். இம்மை மறுமைகளில் நற்பேறுகளைப் பெறவேண்டி இவர்களின் தர்காவுக்கு எவ்வளவு மேலானவர்களும் வருவது உலகறிந்ததே.

ஆகையால், மனிதர்களே, ஜாதிபேதம், மதபேதமின்றி உலகத்தை யொருமிக்கக் காக்கும் உத்தமரக்ஷகரான நமது ஆண்டவரவர்களின் கருமாத்துகளை வாசித்துக் களிகூர்ந்து, இவர்களிடம் பூரணவிசுவாசம் வைத்து, நீங்கள் எங்கிருந்தாவது உங்களுக்கு ஆகவேண்டியவைகளை முறையிட்டுக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, சுகத்துடன் வாழ்வீர்களாக.

பீடிகை முற்றிற்று

---

பிஸ்மில்லாஹி.

# கன்ஜுல் கருமாத்து.

## க-ம் அத்தியாயம்.

## தலைமுறைகள்.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தந்தைவழியையும், தாய்வழியையும், முரீதுவழியையும் சொல்லுகின்றது.]

குத்புல் அக்தாபு, கௌதுல் இஸ்லாம், மீறுன் சுல்தான், சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் அறபிக் கோத்திரத்தில், குறைஷிக் குலத்தில், ஹாஷிம் கிளையில் பிறந்த நாயகமானவர்கள்.

தந்தைவழி :—

நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களுடைய பாட்டனார் அப்துல் முத்தலிபு உடைய மக்கள் பன்னிருவருள் ஒருவர்,

அபீத்தாலிபு. இவர்கள் குமாரர்
அமீறுல் மூமினீன் அலிறலியல்லாதுஅன்து. இவர்கள் குமாரர்
இமாம் ஹஸன்றலியல்லாதுஅன்து. இவர்கள் குமாரர்
சையிது ஹஸனுல் முதன்னா. இவர்கள் குமாரர்
சையிது அப்துல்லா. இவர்கள் குமாரர்
சையிது மூசா. இவர்கள் குமாரர்
சையிது அப்துல்லாதானி. இவர்கள் குமாரர்
சையிது மூசாதானி. இவர்கள் குமாரர்
சையிது தாவூது. இவர்கள் குமாரர்
சையிது முகம்மது.

சையிது யஹியா. இவர்கள் குமாரர்
சையிது அப்துல்லா. இவர்கள் குமாரர்
சையிது மூசாஜங்கி. (அபீஸாலிகு.) இவர்கள் குமாரர்
ஹலறத்து சையிதுமுகியித்தீன் அப்துல்காதிறு. இவர்கள் குமாரர்
சையிது அப்துற்றஜ்ஜாக்கு. இவர்கள் குமாரர்
சையிது இமாதுத்தீன். இவர்கள் குமாரர்
சையிது முகம்மது. இவர்கள் குமாரர்
சையிது ஹஸன். இவர்கள் குமாரர்
சையிது முகம்மது. இவர்கள் குமாரர்
சையிது அலி. இவர்கள் குமாரர்
சையிது மூசா. இவர்கள் குமாரர்
சையிது ஹஸன் குத்தூஸ். இவர்கள் குமாரரே
சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு
ஆண்டவரவர்கள்.

தாய்வழி :—

ஹலறத்து முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்களின் குமாரர் சையிது அப்துற்றஜ்ஜாக்குடைய குமாரரான சையிது இமாதுத்தீனுடைய குமாரர் சையிது முகம்மது அவர்களுக்கு இரண்டு குமாரர்களிருந்தார்கள். மூத்தகுமாரராகிய சையிது ஹஸனவர்களே மேற்கூறிய தந்தை வழியிலுள்ளவர்கள். இளைய குமாரர்,

சையிது ஜமாலுத்தீன். இவர்கள் குமாரர்
சையிது றகுமத்துல்லா. இவர்கள் குமாரர்
சையிது அப்துல்லா. இவர்கள் குமாரர்
சையிது பைஜுல்லா. இவர்கள் குமாரர்
சையிது அப்துற்றஜ்ஜாக்கு. இவர்கள் குமாரர்
சையிது பகுறுத்தீன். இவர்கள் குமாரர்
சையிது ஹமீதுத்தீன். இவர்கள் குமாரத்தியே
சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு
ஆண்டவரவர்களின் தாயாராகிய சையிதத்து பாத்திமா.



முரீதுவழி :—

நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லம். இவர்கள் முரீது
அமீறுல் மூமினீன் அலிறலியல்லாகு அன்கு. இவர்கள் முரீது
இமாம் ஹுஸைன் றலியல்லாகு அன்கு. இவர்கள் முரீது
இமாம் ஜைனுல் ஆபிதீன். இவர்கள் முரீது
இமாம் முகம்மதுபாகிறு. இவர்கள் முரீது
இமாம் ஜகுபறுஸாதிகு. இவர்கள் முரீது
சைகு அபூயஜீதுல் புஸ்தாமி. இவர்கள் முரீது
சைகு முகம்மது மகுறபி. இவர்கள் முரீது
சைகு அஉறுபுஜைதுல்இஷ்கி. இவர்கள் முரீது
சைகு அபுல் முலப்பர். இவர்கள் முரீது
சைகு அபுல்ஹஸன் ஹன்காரி. இவர்கள் முரீது
சைகு முகம்மது கதாகலி. இவர்கள் முரீது
சைகு முகம்மது ஆஷிகு. இவர்கள் முரீது
சைகு முகம்மது ஆரிபு. இவர்கள் முரீது
சைகு அப்துல்லா. இவர்கள் முரீது
சைகு முகம்மதுகாஸின் பனீயிஸ்றயீல். இவர்கள் முரீது
சைகு அபுல்பத்ஹு ஹிதாயத்துல்லாகுபிஸர்மஸ்து. இவர்கள் முரீது
சைகு ஹுகூறு ஹாஜி குஹூறு. இவர்கள் முரீது
சைகு முகம்மது கௌது குவாலீரி. இவர்கள் முரீதே
சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு
ஆண்டவரவர்கள்.

இவ்வழி சுத்தாரிய்யா என்னும் தரீக்கின்வழி. காதிரிய்யா என்னும் தரீக்கின் வழியானது :—

நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லம். இவர்கள் முரீது
அமீறுல் மூமினீன் அலிறலியல்லாகு அன்கு. இவர்கள் முரீது
இமாம் ஹுஸைன் றலியல்லாகு அன்கு. இவர்கள் முரீது
இமாம் ஜைனுல் ஆபிதீன். இவர்கள் முரீது

இமாம் முகம்மது பாகிறு. இவர்கள் முரீது
இமாம் ஜகுபறுஸாதிகு. இவர்கள் முரீது
இமாம் மூசாகாலிம். இவர்கள் முரீது
இமாம் அலிமூசாறலா. இவர்கள் முரீது
சைகு மஃறூபுல்கர்கி. இவர்கள் முரீது
சைகு ஸிர்றிஸ்ஸக்தி. இவர்கள் முரீது
சைகு ஜுனைதுல்பகுதாதி. இவர்கள் முரீது
சைகு அபூபக்கர் அப்துல்லாஷிப்லி. இவர்கள் முரீது
சைகு அபுல் அப்பாசு அகுமது ஹுஸைனி.
இவர்கள் முரீது
சைகு அப்துல் அஜீஜுல்யமனி. இவர்கள் முரீது
சைகு யூசுபிபுனு யூசுபு. இவர்கள் முரீது
சைகு அபுல்ஹஸன் அலியுல்ஹென்காரி. இவர்கள் முரீது
சைகு அபூஸயீதுல்முபாறக்கல்மகுசூமி. இவர்கள் முரீது
சையிது முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி.
இவர்கள் முரீது
சைகு அப்துற்றஜ்ஜாக்குத் தாஜுத்தீன். இவர்கள் முரீது
சைகு அப்துல்லா. இவர்கள் முரீது
சைகு அபூ இபுறுகீம் ஹுஸைனி. இவர்கள் முரீது
சைகு ஜகுபறு அகுமதுஹுஸைனி. இவர்கள் முரீது
சைகு அலிஹஸன். இவர்கள் முரீது
சைகு ஷாஹா முகம்மது. இவர்கள் முரீது
சைகு அப்துல் கப்பாறு. இவர்கள் முரீது
சைகு ஷாஹா மகுமூது. இவர்கள் முரீது
சைகு அப்துற்றஜ்ஜாக்கு. இவர்கள் முரீது
சைகு ஷாஹா அப்துல் வஹ்ஹாபு. இவர்கள் முரீது
சைகு முகம்மதுகாலின்பனீயிஸ்றாயீல். இவர்கள் முரீது
சைகு அபுல்பக்ஹு ஹிதாயத்துல்லா சூபிஸர்மஸ்து.
இவர்கள் முரீது
சைகு ஷகூறு ஹாஜி குஹாறு. இவர்கள் முரீது



சைகு முகம்மது கௌது குவாலீரி. இவர்கள் முரீதே சையிது அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் ஞானசிரியராகிய சைகுல் இஸ்லாம் சையிது முகம்மது கௌது குவாலீரி றலியல்லாகு அன்கு அவர்கள் கான்வாதாக்கள் பதினான்கிலும் பலிடத்தில் முரீதாய், கிலாபத்துப் பெற்றவர்கள். அது போலவே தங்கள் முரீதாகிய ஷாகுல் ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்களையும் பதினான்கு கான்வாதாவிலும் முரீதாக்கி, கிலாபத்துக்கொடுத்தார்கள். அந்த கான்வாதாக்களின் தரீக்கு விவரங்களை இங்கே சொல்வதானால் மிகவும் விரிவாகு மாதலால், ஆண்டவரவர்கள் முரீதான தரீக்குகளில் பிரதானமான சுத்தாரிய்யா, காதிரிய்யா என்னும் இரண்டு தரீக்குகளின் வழியை மாத்திரம் இங்கெழுதினேன். மற்றத் தரீக்குகளின் விவரங்களை அறிந்தமட்டுக்கு இனி வரும் 21-ம். அத்தியாயத்தில் சொல்லியிருக்கின்றேன்.

இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட மகான்களின் திருநாமங்களுக்குமுன் சையிது என்றும், சைகு என்றும் குறிக்கப்பட்டிருக்கும். அவற்றுள் சையிது என்பது குலத்துவத்தையும், சைகு என்பது குருத்துவத்தையும் விளக்குவதென்றறிக. சையிது சைகாயும், சைகு சையிதாயும் இருத்தலுங் கூடும்.

தலைமுறைகள் முற்றிற்று

உ-ம் அத்தியாயம்.

# அவதாரம்.

[இவ் வத்தியாயம் ஹஸறத்து ஆண்டவரவர்கள் அவதாரமானதையும், அக்காலங்களில் நடந்த காரணங்களையும் சொல்லுகின்றது.]

அகிலாண்ட புவனங்கள் அனைத்தையும் அகங்கையில் அடக்கியாளும் அதிகாரிகளாகிய அக்தாபுகளுக்கு அவதாரஸ்தலமாக அல்லாஹுத்த ஆலா அமைத்த பட்டணங்களுள் மாணிக்கப்பூரும் ஒன்று. அது, இந்தியாவின் வடகிழக்கிலிருக்கும் * அயோத்தி மாகாணத்திலுள்ளது. அப்பிரதேசங்கள் பூர்வத்தில் ஹிந்து அரசர்களால் ஆளப்படினும், சில நூற்றாண்டுகளுக்கு முன் அவற்றை முஸ்லிமான அரசர்களே கட்டியாண்டபடியால், அந்தப் பட்டணத்துக் குடிகளில் முஸ்லிமானவர்களே பிரதான குடிகளாயிருந்தார்கள். ஸாதாத்துகளான சையிதுமார்களும், மஷாயிகுமார்களும், ஒலியாக்களும், உலமாக்களுமாய் அநேகர் அவ்வூரில் வாசம்பண்ணினார்கள்.

மலையருவிகள் தவழ்ந்து திரண்டு, அகன்று நீண்டு, பலபக்கமும் பிரிந்தோடும் நதிகளையும், மான் மரை முயல் முதலிய புல்வாய் விலங்கினம் துள்ளிவிளையாடும் பசும் புல்லடர்ந்த தவழ் குன்றுகளையும், நறுமணம் வீசும் நானாவிதப் புஷ்பங்களைப் பூத்துச் சொரியும் மரஞ்செடி கொடிகளோடு தீந்தேனொழுகும் மதுரமான பலவகைக் கனிவர்க்கங்கள் பழுத்துக்குலுங்கும் தருக்களுமடர்ந்து, பலவினப் பக்ஷிசாலங்களின் கீதநாதங்கள் மெய்ஞ்ஞானானந்தத்தின் துறையில் முழுகிநிற்கும் ஒலியாக்களுக்குப் பேரின்பானந்தத்தைப் பெரிது மூட்டுகின்ற தண்ணென்ற சோலைகளையு முடையதாய், உன்னதமான மாடமாளிகை கூடகோபுரங்களால் பார்ப்பவர் கண்களைப் பறிக்கத்தக்க பேரழகு

* அயோத்தியை ஔட் என்பார்கள்.



பெற்றதாய் விளங்கும் அந்த மாணிக்கப்பூரில், சையிது மார்களுள் ஒருவராகிய மகத்துவமுள்ள ஹஸறத்து சையிது ஹஸன் குத்தூஸவர்கள் குலத்திலும், நலத்திலும் தங்களோடொத்த குடும்பத்தில், கற்பிலும் அழகிலும் சிறந்த சையிதத்து பாத்திமா என்னும் மாதர் திலகத்தை மணம்புரிந்து, தீனுல் இஸ்லாத்தின் முறைமை தவறாது ஒழுகி, அல்லாஹுத்த ஆலாவுக்குச் செலுத்தக் கடமையான உபூதியத்தென்னும் அடிமைத்தனமாகிய வணக்கத்தில் தரிபாடாய், இகபர சாதனங்களை யேற்று, இல்லாச்சிரமத்தில் எவ்விதக் குறைவுமின்றி, மனிதரெல்லாருங் கொண்டாடும் மனப்பாக்கியத்துடன் வாழ்ந்திருந்தார்கள்.

சையிது ஹஸன்குத்தூஸ் சையிதத்து பாத்திமா என்னும் நாயகர் நாயகி யிருவரும் இவ்வாறு இன்புற வாழுங்காலத்தில், ஹிஜறத்துத் தொளாயிரத்து ஒன்பதாம் வருஷக் கடைக் கூற்றில் ஒருநாள் இராப்போஜனமருந்தி, சற்று நேரம் இபாதத்தில் பராக்காயிருந்து, பின் பள்ளியறைக்குள் சப்பிரமஞ்சத்தில் படுத்து நித்திரைசெய்தார்கள். அர்த்தசாமத்தில் முகவஜீகரமுள்ள பெரியோரொருவர் பாத்திமாவுடைய சொப்பனத்தில் தோற்றரவாய் வந்துநின்று, அவர்களை நோக்கி " பாத்திமாவே, அல்லாஹுத்த ஆலா உமக்கு ஸலாம் சொன்னான். என்னுடைய ஸலாமும் உமக்கு உண்டாவதாக. இவ்விரவில் ஒலியாக்களில் ஒருவர் உமது வயிற்றில் கருப்பமானார். அதற்காக அல்லாஹுத்த ஆலா உமக்கு நன்மாராயஞ் சொல்லுகிறான் " என்று சொன்னார்கள். அப்போது பாத்திமா அவர்களைப்பார்த்து " புகழ் அடங்கலும் அல்லாஹுத்த ஆலாவுக்கே யுரியன. தாங்கள் யார்? தங்கள் பெயரென்ன? " என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் " நான் அல்லாஹுத்த ஆலாவுடைய பணிவிடைகளை ஒலியாக்களுக்குத் தெரிவிக்கிறவன் ; என்பெயர் கலிறு " என்று விடைகூறிவிட்டு, மறைந்துபோனார்கள்.

சந்தோஷகரமான இந்தச் சொப்பனத்தை பாத்திமா கண்டு விழித்தெழுந்து, அருகிற் படுத்திருக்கும் தங்கள் நாயகரைத் தட்டியெழுப்பி, இப்போது நான் ஒரு சொப்பனங் கண்டேனென்று கண்டகனவைச் சொல்லிக்காட்டினார்கள். அதைக்கேட்ட ஹலறத்து ஹஸன்குத்தூஸ் மனம் பூரித்து, அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள். சிறப்பான அன்றிரவே ஹலறத்து சையிது அப்துல் காதிறு ஷாகுல்ஹமீது பாத்தாஷாசாகிபு ஆண்டவரவர்கள் தந்தையாகிய சையிது ஹஸன்குத்தூஸவர்களின் முதுகந்தண்டிலிருந்து, தாயாராகிய பாத்திமாவின் வயிற்றில் கருப்பமானார்கள். அதற்காக மலக்குகளாலும், ஜின்களாலும், ஒளலியாக்களாலும், சோபனங் கூறப்பட்டது. அன்று பொழுது விடிந்ததுமுதல் ஒவ்வொருநாளும் சையிது ஹஸன்குத்தூஸவர்களும், பாத்திமாவும் தங்கள் மகனாக ஒரு ஒலியைப் பிறப்பிக்கும் வரிசைக்குச் சந்தோஷப்பட்டவர்களாய், அந்தநன்றியறிதலாக அல்லாஹுத்தஆலாவை மனம் வாக்குக் காயம் ஒத்துத் துதித்துப் புகழ்ந்து வந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் கருப்பமான மூன்று மாதம் தந்தையாகிய ஹஸன் குத்தூஸவர்களுக்குக் கடுமையான வியாதி கண்டது. அந்தவியாதியிலிருந்து அவர்கள் தப்பிப் பிழைப்பார்களென்று எண்ணக் கூடாமையாயிருந்தது. அதனால் தங்கள் நாயகர் மௌத்தாய் விடுவார்களென்று பாத்திமா பயந்து, மனங்கலங்கி, அந்த வியாதி தீரும்படி அல்லாஹுத்தஆலா இடம் இராப்பகல் துஆ இரந்துகொண்டிருந்தார்கள். எந்நேரமும் பாத்திமாவுடைய மனக்கலக்கத்தினால் முகம் செழிப்பற்றுக்குறுகியிருந்தது.

இப்படியிருக்கும் நாட்களில் ஒருநாள் கருப்பவதியாயிருக்கும் பாத்திமாவுடைய வயிற்றிலிருந்து ஆச்சரியமான ஒருசத்தம் பிறந்தது. அதாவது:— " என் அன்னையே,



தாங்கள் அஞ்சாதீர்கள். என் தந்தை இந்த வியாதியால் மௌத்தாக மாட்டார்கள். இன்றைத்தினமே அவர்கள் வியாதி முழுதுந் தீர்ந்து, பூரணசுகத்தைப் பெறுவார்கள். ஆதலால், தாங்கள் மனங்குளிர்ந்து சந்தோஷமாயிருங்கள் " என்பதே.

தங்கள் வயிற்றிலிருந்து எழும்பின இன்பமான மெல்லிய குரலோசையை பாத்திமா கேட்டு அச்சந்தீர்த்து, அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்தார்கள். அதனால் அவர்கள் மனம் கவலையற்றிருந்தது. அந்தச் சத்தத்தின்படி ஹஸன்குத்தூஸவர்களின் வியாதி முழுதும் அன்றைத்தினமே தீர்ந்து, சுகமடைந்தார்கள். அதைக்கண்ட பாத்திமாவின் இருதயம் ஆநந்தசாகரத்தில் முழுகிற்று. தந்தைதா யிருவரும் வயிற்றுச் சிசுவின் வாய்மொழிக்காக அளவற்ற சுக்று செய்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் கருப்பமான ஆறுமாதம் ஓரிரவில் பாத்திமா நித்திரைசெய்யும்போது, நடுச்சாமத்தில் நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் கனவில் வந்து நின்று " பாத்திமா, உமக்கு சோபனமுண்டாவதாக. உமது வயிற்றிலிருப்பவர் அல்லாஹுத்தஆலாவுக்கு முடுகுதலான குத்பு. ஜீவகோடிகள் அனைத்தையும் ரக்ஷிக்கும் கௌது. அவரை நீர் பெற்றெடுத்தவுடன் அப்துல்காதிறு என்று அவருக்குப் பெயரிடவேண்டுமென்று அல்லாஹுத்தஆலா கட்டளைபண்ணினான் " என்று சொல்லிவிட்டு மறைந்தார்கள்.

இந்தக் கனவை பாத்திமா கண்டுவிழிந்தார்கள். அந்நேரம் தஹஜ்ஜத்து நேரமாயிருந்தது. தஹஜ்ஜத்துத் தொழுகைக்கு உளுசெய்வதற்காகத் தண்ணீரள்ளும்படி கலசமும் கயிறுமெடுத்துக்கொண்டு கொல்லைக் கிணற்றிற் போய் கயிற்றைக் கலசத்திற்பிணித்துக் கிணற்றிற்குள் விடுத்து, தண்ணீரைமொண்டு தூக்கினார்கள். பிணிப்பவிழ்ந்து

கலசம் கிணற்றுள் விழுந்தது. அப்போது பாத்திமா தஹஜ்ஜத்துத் தொழுகை தவறிப்போகுமென்று அஞ்சி "யா அல்லா, இந்த வேளை தவறாமல் எனக்குக் காத்தருள்" என்று அழுது இரந்தார்கள். இரந்தவாய் மூடுமுன் "தண்ணீர் நிறைந்த கலசம் தங்கள் பக்கத்தி லிருக்கின்றது" என்று வயிற்றிலிருந்து ஒரு சத்தம் பாத்திமா காதிற் கேட்டது. இச்சத்தம் கேட்டவுடன் பாத்திமா திரும்பி, கிணற்றுள் அமிழ்ந்து விழுந்த கலசம் தண்ணீர் நிரம்பி அருகி லிருக்கக்கண்டு, சந்தோஷத்துடன் உளுசெய்துகொண்டு, அந்தத் தொழுகையைத் தொழுது முடித்து, அல்லாதஆலாவைப்புகழ்ந்து சுக்று செய்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் கருப்பமான ஏழாமாதம் மாணிக்கப்பூரில் பஞ்சம்பிடித்தது. தானியாதி ஆகார வர்க்க மனைத்தும் நாட்குநாள் அருகின. ஜனங்கள் வெருவாய் வருந்தினார்கள். பாக்கியவான்கள்கூடப் பட்டினி கிடக்க நேர்ந்தது. எளியவர்கள் அவித்துத்தின்று பசிதீர்க்கத்தக்க மூலவர்க்கங்களும் காய்ந்தன. இலைகுழைகளை அவித்துத் தின்ன ஏழையெளியோர் தலைப்பட்டு மரஞ்செடிகளையெல்லாம் மொட்டை யடித்தார்கள். நெடுநாள் மழையின்றி வெயில்காயுங் கொடுமையால், பசிய பூண்டுகளெல்லாம் கருகின. ஏரி குளம் கிணறு ஊற்றுகளான ஜலதாரங்கள் அனைத்தும் வற்றி வறண்டன. குடிக்கத் தண்ணீருமற்றுக் கன்று காலிகளெல்லாம் விழுந்து மடிந்தன. மனிதரும் பலர் மாண்டார்கள்.

சீவராசிகள் பரிதபித்துத் தத்தளிக்கும் அந்தக் கொடிய பஞ்சத்தில், ஆண்டவரவர்களின் பிதாமாதாக்கள் இருவரும் ஆகாரமின்றி மூன்றுநாள் வரையும் ஒரேபட்டினியாயிருந்தார்கள். ஆயினும், இபாதத்தில் பலங்கொண்டு இறுகின தேகிகளாதலால், அவர்கள் கொஞ்சமும் களைக்கவில்லை. திடகாத்திரர்களாயே யிருந்தார்கள். இருந்தாலும், குடிகொண்டிருக்கும் பஞ்சந் தொலைந்து தங்கள் பந்துமித்திரர்கள் பசியால் வருந்தாதபடி சுகம் பெறும்பொருட்டு, அல்லாதஆலா இடம் பிரதிதினமும் துஆவிரந்து மன்றாடிக் கொண்டிருந்தார்கள். அக் காலத்தில் ஒருநாள் பாத்திமாவின் வயிற்றிலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று, அந்தச் சத்தமானது "என் அருமையான பிதாமாதாக்களே, இந்தப் பஞ்சத்தைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் வீட்டுக் களஞ்சியத்தைப் பாருங்கள், அதில் தானியமுண்டாயிருக்கும். கொஞ்சமாயிருந்தாலும் அதையெடுத்துப் பெரிய பாத்திரத்திற் போட்டுப் பாகஞ்செய்து, பிறருக்குங் கொடுத்து நீங்களும் புசியுங்கள். அது ஒருநாள் முழுதும் எல்லாருக்கும் போதுமானதாகும். பஞ்சந்தீரும் வரையும் நாள்தோறும் களஞ்சியத்தில் தானியமிருக்கும். அதை அன்றாடகம் எடுத்து அநுபவித்துக் கொள்ளுங்கள்" என்பதே.

தங்கள் அருமைப் பாலகர் வயிற்றி லிருந்துகொண்டு சொன்ன இவ்வுத்தம வசனத்தை பாத்திமா கேட்டு, உடனே எழுந்துபோய்க் களஞ்சியத்தைப் பார்த்தார்கள். அதில் ஒரு சிறங்கையரிசி மாத்திரம் இருந்தது. அந்த அரிசியை யெடுத்துவந்து, ஒரு பாரிய செப்புப்பாத்திரத்திற் போட்டுச் சோறாக்கினார்கள். அது அதிகம்பேர் பசியடங்கவுண்ணத்தக்க அவ்வளவாய்ப் பெருகி, அந்தப் பாத்திரம் நிரம்பி யிருந்தது. பாத்திமா களிகூர்ந்து, அந்தச்சோற்றைத் தங்கள் சுற்றத்தார், அந்நியர், எளியோர் எல்லாருக்கும் கொடுத்து, தாங்களும் நாயகரும் உண்டார்கள். ஒரு சிறங்கையரிசியில் ஆக்கினசோறு பெரியபாத்திரம் நிறைந்திருந்ததும் அல்லாமல், அள்ள அள்ளப் பல்கிக்கொண்டு மிருந்தது. அன்றுதீர்ந்து மறுநாளும் அப்படியே களஞ்சியத்தில் அரிசி யிருக்கக்கண்டு, அவ்விதமே சோறாக்கி அனைவர்க்கும் பகிர்ந்து தாங்களுமுண்டார்கள். இவ்வாறே பஞ்சந்

தீரும் வரையும் ஒவ்வொரு நாளும் செய்துவந்தார்கள். சில தினங்களுக்குள் பஞ்சந்தீர்ந்து, தேசம் செழிப்படைந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் கருப்பமான ஒன்பதா மாதம் மாணிக்கப்பூரில் ஒரு கலகம் நேர்ந்தது. அதாவது:— அவ்வூரின் பக்கத்திலுள்ள அடர்ந்த வனத்தில் அக்கினியாராதனைகாரர்களான மஜூஸிகள் அநேகர் குடியிருந்தார்கள். ஒவ்வொரு சமயங்களில் அவர்கள் திரண்டுகூடி, மாணிக்கப்பூரில் வந்து கொள்ளையிடுவது வழக்கமாயிருந்தது. அவர்கள் திருட்டுத் தொழிலிலேயே காலங்கழிப்பார்கள். ஆண்டவரவர்கள் கருப்பமாயிருக்கும் ஒன்பதா மாதக் கடைக்கூற்றில் அத்திருடர்கள் வழக்கம் போல் ஒருங்கு கூடி, ஆயுதபாணிகளாய், கொள்ளையடிப்பதற்காக மாணிக்கப்பூரில் வந்து நுழைந்தார்கள். பட்டணத்திற்குள் அவர்கள் புகுந்தநேரம் இரவாயிருந்தது. அப்போது ஊரிலுள்ள ஜனங்கள் எல்லாரும் திகில் பிடித்து அவரவர் மனைகளிற் புகுந்து கபாடபந்தனஞ் செய்துகொண்டு, அரவங்காட்டாமல் ஒளித்துக் கொண்டார்கள். அநேகர் உயிரைக் காக்க வேண்டி ஊரைவிட்டோட யத்தனமாயிருந்தார்கள். அதிக்கிரமித்துக் கொள்ளையிடவந்து ஊருக்குள் நுழைந்திருக்கும் திருடர்களை எதிர்த்து நின்று தட்டிவிலக்க யாரும் வெளிவரவில்லை. ஊர் ஒருமிக்கக் கலக்கடிப்பட்டிருந்தது.

அப்போது ஹலறத்து ஆண்டவரவர்களின் தந்தையாகிய சையிது ஹஸன்குத்தூஸ் தங்கள் இபாதத்துகானாவில் புகுந்து, வணக்கத்தில் பராக்காயிருந்தார்கள். தாயாராகிய பாத்திமா ஊரில் நடக்கும் விஷயங்களைக் கேட்டுத் தாங்களும் தங்கள் வீட்டுக் கதவைச் சார்த்தித் தாட்பாளிட்டுக்கொண்டு, அல்லாகுத்த ஆலாவை இரண்டு றக்அத் தாத்தொழுது, அத்தொழுகையின் இருப்பிலேயே யிருந்து "யா அல்லா, இந்தத்திருட்டு மஜூஸிகளின் தீங்கான செய



லுக்கு எங்களை இலக்காக்காமல் காப்பாற்று. இத்துஷ்டர்களை இங்கிருந்து தொலைந்துபோகும்படி தூரத்து" என்று துஆ விரந்தார்கள். அந்த துஆ அல்லாகுத்த ஆலா இடம் கபூலாக்கப்பட்டது. அந்தநேரத்தில் மாணிக்கப்பூரில் நடக்கும் ஒவ்வொரு கருமமும் மறைவில்லாமல் கண்ணாடிக்குள் தெரிவதுபோல, மனைக்குள்ளிருக்கும் பாத்திமாவின் கண்களுக்குத் தெரிந்துகொண்டிருந்தது. அதுகளை அவர்கள் பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொண்டு மனைக்குள்ளேயே யிருந்தார்கள்.

இவ்வாறிருக்கும்போது, தாயார்வயிற்றில் நிறைகருப்பமாயிருக்கும் ஆண்டவரவர்கள் ஆச்சரியகரமாகவும் அறியப்படாமலும் வயிற்றிலிருந்து வெளிப்பட்டு, தக்க பருவமுள்ள பாலியராய், பசுமையான உடைகளணிந்து, பிரகாசமிக்க வாளொன்றைக் கையிற் பிடித்துக்கொண்டு தாயார் சமுகத்தில் வந்துநின்று " என் தாயாரவர்களே, இப்போது ஊரிற் புகுந்திருக்கும் திருடர்களுக்காகத் தாங்கள் அஞ்சாதீர்கள். இவ்வூரிலுள்ள ஒரு சிறு துரும்பையும் எடுக்கவொட்டாமல் அவர்கள் எல்லாரையும் இங்கிருந்து அடித்து வெருட்டுகிறேன். அவர்கள் மாணிக்கப்பூரைக் கனவிலும் நினைக்காதவண்ணம் செய்கிறேன். இன்று முதல் அவர்கள் இவ்வூரில் அடியெடுத்துவைக்கத் துணியமாட்டார்கள் " என்று சொல்லிவிட்டு, அடைத்திருக்கும் மனையின் தலைவாசற் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டார்கள். வாசலில் சிவப்புக் குதிரையொன்று நின்றது. உடனே அதில் ஆண்டவரவர்கள் ஏறி, கையிற் பிடித்த வாளுடன் யுத்தசன்னத்தராய் நின்றார்கள். தங்கள் வயிற்றிலிருக்கும் பாலகரே பாலியராய் வந்து சொன்ன சொற்களை பாத்திமா கேட்டு, பின் அவர்கள் தலைவாசலிற்போய் நிற்கும் யுத்தயத்தனத்தையும் பார்த்துக்கொண்டு, இனி நடப்பதையறிவோமென்று அதிக ஆவலா யிருந்தார்கள்.

பின்பு, சற்று நேரத்திற்குள் பச்சை சிறு உடைகளுடுத்தி சிவப்புக் குதிரைகளின்மேலேறின ஒரு கூட்டத்தார் ஆயுதங்களைக் கையிற் பிடித்தவர்களாய் ஆகாயத்திலிருந்து இறங்கி ஒவ்வொருவராக ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கையைத்தொட்டு முத்தமிட்டு ஸலாம் சொல்லி, எல்லாரும் ஒருமிக்கத் திரண்டு நின்றார்கள். உடனே ஆண்டவரவர்கள் தாங்களே தளகர்த்தராய் அந்தக்கூட்டத்தைத் திருடர் மீதுவிழும்படி கட்டளைபண்ணி நடத்திக்கொண்டு, அங்கே வீதிகளில் திரண்டு நிற்கும் மஜூஸித் திருடர்கள் மீது சிங்கம்போலப் பாய்ந்தார்கள். அப்போது ஆண்டவரவர்களின் அற்புதச்சேனை அத்திருடர்களை நடுவில்வைத்து நாற்புறமும் சூழ்ந்து வளைந்துகொண்டது.

எதிர்ப்பாரின்றிச் சுயேச்சையாய்க் கூடிக் கொள்ளையிடத் துணிந்து நின்ற அந்தத்திருடர்கள், தங்களை ஒரு குதிரைச் சேனை திடீரென்று வந்துவிழுந்து வளைந்து கொண்டதையும், அச்சேனைக்கு அதிபராய் முகவசீகரமுள்ள ஒரு இளம்பாலியர் சினங்கொண்டு நிற்பதையுங் கண்டு கலங்கி, தங்கள் எண்ணம் தட்டுக்கெட்டுத்தடுமாறி வெருண்டார்கள். ஆனால், அவர்களுள் ஒருவராவது தப்பியோட இடம் வாய்க்கவில்லை. பார்க்குந் திசையெல்லாம் அந்தச்சேனையும் அச்சேனாபதியுமே நிற்பதாக அவர்கள் கண்களுக்குத் தோற்றின. ஆதலால், ஓடவும் ஒதுங்கவும் அவர்களுக்கு இடம்படவில்லை. இதைக்கண்ட அவர்கள், நாம் எல்லாரும் மாண்டே போவோமென்று நினைத்தார்கள். ஊரிற் கொள்ளையிடக் கொண்டிருந்த எண்ணத்தைக் கைவிட்டு, இனி தப்பிப்பிழைக்க வழிதேடவேண்டுமென்கிற எண்ணத்தையே கொண்டார்கள்.

அத்திருடர்களான மஜூஸிகள் தங்கள்மீது ஆயுதப் பிரயோகமுண்டாகுமுன் எல்லாரும் ஒருமித்து, சிதறியோட



வும் வழியில்லாமல் நம்மை நாற்புறமும் சேனாவெள்ளமொன்று வந்து சூழ்ந்து நிற்கின்றது. நாம் எதும் முரணுவோமானால், நம்மில் ஒருவரும் தப்பமாட்டோம். அதோ நிற்கிற சேனாபதிக்கு நாம் எல்லாரும் கீழ்ப்படிந்து, அவரிடம் மன்னிப்புக் கேட்பதே புத்தி யென்று தீர்மானம் பண்ணிக்கொண்டு, தங்கள் ஆயுதங்களை யெல்லாம் எறிந்துவிட்டு, அங்கு நிற்கும் சேனாபதியாகிய ஆண்டவரவர்கள் சமுகத்தில் அபயந் தேடினவர்களாய் வந்து கூடிநின்று "எஜமானவர்களே, தாங்கள் எங்கள் பிழையை மன்னித்து, எங்களைக் காப்பாற்றவேண்டும். இனி ஒருபோதும் நாங்கள் இந்த மாணிக்கப்பூரைக் கனவிலும் நினைக்கமாட்டோம். இங்குவந்து கொள்ளையடிக்கும் எண்ணத்தை இப்போதே மறந்து விட்டோம். இது உண்மையென்று தங்கள் மேலான சமுகத்தில் சத்தியஞ் செய்கிறோம். வார்த்தைப்பாடும் தருகிறோம். மனதிரங்கி எங்களை ரக்ஷியுங்கள்" என்று பரிதாபத்துடன் சொல்லி, கெஞ்சிமன்றாடினார்கள்.

அகிலரக்ஷகரென்றும் அரிய நாமத்துடன் அவதரிக்கவிருக்கும் ஆண்டவரவர்கள் அத்திருடர்கள் கெஞ்சி மன்றாடுவதில் மனதிளகி, கோபந்தணிந்து, தங்கள் சேனாவீரர்களை அவர்கள் மீது ஆயுதப் பிரயோகஞ் செய்யாதபடி தடுத்துவிட்டு, அவர்கள் சொற்படி அவர்களிடம் வார்த்தைப்பாடு வாங்கினார்கள். "நாங்கள் இன்றுமுதல் இனி எப்போதும் இந்தவூரில் கொள்ளையிட நினைக்கவுமாட்டோம்" என்று வார்த்தைப்பாடு கொடுத்தார்கள். பிறகு ஆண்டவரவர்கள் அவர்களைப் போகும்படி கட்டளை பண்ணினவுடன், பிழைத்ததே பாக்கியமென்று வந்தவழியே மீண்டு போய்விட்டார்கள். திருடர்கள் ஓடிப்போனபின் ஆண்டவரவர்கள் தங்கள் சேனையை வந்தவாறேபோக உத்தரவு பண்ணிவிட்டு, தங்கள் வீட்டுவாசலில் வந்து குதிரையை விட்டிறங்கி உள்ளே புகுந்தார்கள். இதற்குள்

அர்த்த சாமமாயிற்று. இவ்வளவையும் தாயாராகிய பாத்திமா மனைக்குள்ளிருந்து பார்த்துக்கொண்டேயிருக்கின்றார்கள்.

வீட்டுக்குள் புகுந்த ஆண்டவரவர்கள் தாயார் சமுகத்தில் மறுபடியும் போய் நின்று ஸலாம்சொல்லி "அன்னாய், தமியேன் தங்கள் வயிற்றிலிருந்து பிறக்கும் நாள் முடுகிவிட்டது" என்று சொல்லிவிட்டு மறைந்தார்கள். இந்த அற்புதக்காட்சிகள் அனைத்தையும் கண்கூடாய்க் கண்ட பாத்திமா ஆநந்தமும், ஆச்சரியமுமடைந்து, பொழுது விடியும் வரையும் அல்லாதஆலாவைப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள்.

அன்று பொழுது விடிந்து சூரியோதயமானவுடன் பாத்திமா தங்கள் நாயகர் சமுகத்திற்போய், தாங்கள் கண்ட காட்சிகளையும், நடந்த சம்பவங்களையும் சொல்லிக் காட்டினார்கள். இவற்றைக் கேட்ட ஸைக் துந்நாஸ் நாயகர் அல்லாதஆலாவைப் புகழ்ந்து, தங்கள் மனைவியை நோக்கி, உமது வயிற்றிலிருக்கும் குழந்தை அல்லாதஆலாவுக்கு உவப்பான ஒலியாக்களில் ஒருவர். அவர் குத்பும், கௌதுமாவார். உம்முடைய கனவு முதலான காட்சிகளெல்லாம் அந்தப் பிள்ளையின் மகத்துவத்தால் உண்டானவையேயன்றி வேறல்லவென்று சொன்னார்கள். பாத்திமா இதைக் கேட்டுப் பின்னும் சந்தோஷத்தில் மூழ்கினார்கள்.

அன்றிரவு மஜூசித்திருடர்களால் தங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் ஒவ்வொருவரும் உயிரையும் பொருளையும் காக்கப்பெற்றதையும், அது இன்னாரால் இன்னபடி நடத்தப்பட்டதென்பதையும் மாலிக்கப்பூரார் தெரிந்து, ஆச்சரியமடைந்து, அன்று தொட்டுக் கள்ளர் பயம் நீங்கியிருந்தார்கள்.

பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் கருப்பமாய் ஒன்பது மாதங்களும் நிரப்பமாயின. அவ்வொன்பது மாதங்



களிலும் ஒரு நாளாவது பாத்திமா அற்புதங்காணாத நாளாயிருக்கவில்லை. அநந்த அற்புதங்களைக் கண்டுகொண்டேயிருந்தார்கள். அல்லாதஆலா கலிறு அலைஹிஸ்ஸலாமவர்களிடம் அடுத்தடுத்து ஆண்டவரவர்களுக்கு ஸலாம் சொல்லியனுப்பிக்கொண்டிருந்தான். காண்பதற்கரிய பல காரணாதிகளால் ஆண்டவரவர்களின் பிதாமாதாக்களும், சுற்றத்தார்களும், சந்தோஷ சாகரத்தில் மூழ்கி, வயிற்றுப் பிள்ளைமீது அதிக பயபக்தியாயிருந்துவந்தார்கள்.

இவ்வாறிருக்கையில், ஹலறத்து ஆண்டவரவர்கள் அவதரிக்கும் சிறப்பான நாள் அடுத்தது. ஜமாத்துல் ஆகிறு மாதம் ஒன்பதாந் திகதியாகிய வியாழக்கிழமைப் பகல், பாத்திமா பிள்ளைப்பேற்றின் குணங்குறிகளில் ஒன்றுமில்லாமல் உட்கார்ந்திருந்தார்கள். கருப்பஸ்திரீகளுக்குப் பேறுகாலத்தில் உண்டாகும் நோக்காட்டின் குறிகூட எவ்வளவுமில்லை. அன்று பகல் முழுதும்போய், வெள்ளிக்கிழமை யிரவாயிற்று. ஆனால், இவ்விரவு பேறுகாலத்து இரவாயிருக்குமென்று மாத்திரம் சிலகாரணங்களால்தெரிந்திருந்தது. அதனால், அவ்விரவில் அடிமைப் பெண்களும், அயல் வீட்டாரும், சுற்றத்தாருமான ஸ்திரீகள் பலர் பாத்திமா பக்கத்தில் ஹாலிருயிருந்தார்கள். அவ்விரா முழுதும் போய், பின்னேரமாகிய தஹஜ்ஜுத்து வேளையாயிற்று.

மேற்கூறிய சிறப்பான ஹிஜுறத்துத் தொளாயிரத்துப் பத்தாம் வருஷம், ஜமாத்துல் ஆகிறுமாதம், பத்தாந் திகதி, வெள்ளிக்கிழமை தஹஜ்ஜுத்து நேரத்தில், சுல்தானுல் ஒளலியா, குத்புல் அக்தாபு, கௌதுல் இஸ்லாம், மீறான் சுல்தான், சையிது அப்துல் காதிறு ஷாகுல் ஹமீது கன்ஜஸவாய் கன்ஜபக்ஷ் பாத்ஷா சாகிபு ஆண்டவரவர்கள் அற்புதக் கிரணங்களை அள்ளியெறிந்து அஞ்ஞான விருளை அறுத்துவிலக்கும் ஞானசூரியன் போல அன்னை வயிற்றிலிருந்து அகன்றமாநிலத்தில் அவதாரமானார்கள்.

ஆலத்திற்கு அதிகாரியான குத்பாகவும், அளவற்ற ஜீவகோடிகளை ரக்ஷிக்கும் அன்பு நிறைந்த கௌதாகவும், தீனுல் இஸ்லாத்தின் சிறந்தசூரியனாகவும், நபிமார்களுக்கும் றசூல்மார்களுக்கும் வாரிதாகவும், ஆரிபீன்களுக்கும், ஆஷிக்கீன்களுக்கும் ஔலியாக்களுக்கும் அலங்காரமான தாஜாகவும், முஸ்லீம்களுக்கு யஜமானாகவும், உலமாக்களுக்கு நாயகமாகவும், இம்மைக்கும் மறுமைக்கும் ஒளியாகவும், மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் போதக ராகவும், கஷ்பு கறாமாத்துகள் விளை நிலமாகவும், அற்புதத்திற்கு அலைகடலாகவும், அகலாப்பிணிகளுக்கு அருமருந்தாகவும் துன்பந் துயர்களைத் தொலைப்பவராகவும், ஹனபி மதுஹபுக்கு இமாமாகவும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் இருதயத்தையொத்த இருதய முடையோராகவும், நாயிபு றசூலாகவும் முஹியித்தீன் தானியாகவும், பீருன்சாகிபாகவும், காதிறொளியாகவும், பிதா மாதாக்கள் வமிசத்தால் சுல்தானாகவும், கியாமபரியந்தம் நிலைத்து நிற்கும் காரணீகராகவும், அடியார்களுக்கு அருநிதியாகவும், ஈடித் தொண்டரை இம்மையிற்காத்து மறுமையிலுங் காக்கு மகத்துவராகவும், எல்லார் தம்மையும் இரக்கம்வைத்தாளும் வல்லார்புகழு மன்னவராகவும், ஹலறத்து ஆண்டவரவர்கள் அவதரித்தவுடன், மலாய்க்கத்துகளும் ஹூறுல்ஈன்களும், அன்பியாக்களும், ஔலியாக்களும் ஆகாய மார்க்கத்தில் கூட்டங் கூட்டமாயிறங்கி, ஆண்டவரவர்களைத் தூக்கியெடுத்து முத்தமிட்டு, துஆவும்செய்து, தாயாராகிய பாத்திமாவுக்கு ஸலாமும் சுபசோபனமும் சொல்லிப் போய்க்கொண்டிருந்தார்கள். அன்று பொழுது விடியும் வரையும் இது நடந்துகொண்டேயிருந்தது. பின்பு, பொழுது விடிந்து சூரிய னுதயமாயிற்று.

சூரியனுதித்த அதிகாலையில் நபி இல்யாஸ் அலைஹிஸ்ஸலாமவர்களும், நபி கலிறு அலைஹிஸ்ஸலாமவர்களும் பாத்தி



மாவின் மாளிகைக்கு வந்து, அன்று பிறந்த பிள்ளையாகிய ஹலறத்து ஆண்டவரவர்களைத் தூக்கி முகர்ந்து, அவ்விருவர் வாயாலும் சையிது அப்துல்காதிறு என்று பெயரிட்டு அழைத்து, துஆவும் செய்து, தாயாருக்கு ஸலாமும், சோபனமுஞ் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

அதன் பின் தந்தையாகிய ஹலறத்து சையிது ஹஸன் ஜந்தூஸவர்கள் தங்கள் குடும்பத்தாருடன் பலரையும் அழைத்து வந்து, மைந்தரைத்தூக்கி மார்போடணைத்து முத்தமிட்டு, மடியில் வைத்து, வலதுசெவியில் பாங்கும், இடதுசெவியில் இகாமத்தும் சொல்லி, சையிது அப்துல் காதிறு என்று நாமகரணஞ்செய்து, துஆ விரந்து, சந்தோஷங் கொண்டாடினார்கள். பின்பு, தாயார் ஆநந்தத்துடன் பாலகரை மடிமீதுவைத்து அமுதூட்டினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் பிறந்த அன்றுகாலை தொடங்கி மனிதர்கள் திரள்திரளாய் அங்குவந்து, ஆண்டவரவர்களைத் தூக்கி முத்தமிட்டு, துஆசெய்து, அவர்களால் தங்களுக்கு பறக்கத்துத் தேடிக்கொண்டு போனார்கள். அன்றுபகல், அவ்வூரில் மகோதரநோய் கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளை தான்படும் வருத்தத்துடன் மெல்லமெல்ல நகர்ந்து பாத்திமாவின் மாளிகைக்குவந்து, ஆண்டவரவர்களின் பக்கத்திற் போயிருந்துகொண்டு, தன் இரண்டு கைகளையும் எடுத்தேந்தி, ஆகாயத்தை அண்ணாந்துபார்த்து "யா அல்லா, இந்தக் குழந்தை உன்னால் உவக்கப்பட்ட ஒலியாயிருக்குமானால், இதன் சங்கைகொண்டு என் வியாதி தீரவேண்டும். இப்போதே நீ என்னைச் சௌக்கியப்படுத்த வேண்டும்" என்று இரந்தாள். அவள் இப்படி யிரக்கும் வாய்ச்சொல் முடிவுபெறுமுன் அவளுக்கிருந்த மகோதரமும், மற்றுந் துன்பங்களும் அறவே நீங்கிவிட்டன. திடகாத்திர சரீரமும், அவயவலக்ஷணமும், சந்தோஷ மனமு

முடையவனானான். உடனே அவன் ஆச்சரியப்பட்டு ஆண்டவரவர்களைப் புகழ்ந்து துஆ செய்துவிட்டு, சுகதேகி யாய்த் தன் வீட்டுக்குத் திரும்பினான்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அவதரித்த அந்நாள் முதல் இவ்வாறே அநந்த அற்புதங்கள் இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தன. ஆண்டவரவர்களை ஒலித்தன முள்ள குழந்தையென்று ஊரார் எல்லாரும் வெகு பயபக்தி யாகப் போற்றிக் கொண்டாடிப் பாராட்டி வந்தார்கள்.

அவதாரம் முற்றிற்று.

---

௩-ம் அத்தியாயம்.

## பொற்பணங் கொடுத்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு பகீருக்குக் கொடுப்பதற்காகப் பொற்பணங்கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

குத்புல் அக்தாபு ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் அவதாரமான அந்நாள் முதல் அவர்களால் மனிதர்களுக்கு அவரவர் வேண்டின அநேக நற்கருமங்கள் நிறைவேறிவந்தன. இவ் வற்புதம் பிரஸ்தாப மாகவாகப் பல திசைகளிலுமிருந்து அநந்தம் பேர்வந்து ஆண்டவரவர்களைத் தரிசித்து, அவரவர் காரியம் கைகூடப்பெற்றுப்போகத் தொடங்கினார்கள். வாத பித்த சிலேட்டுமங்களா லுண்டான பலவித ரோகஸ்தரும், கூன், குருடு, செவிடு, முடம், மலடுகளான பிறவித் துன்பமுடையோரும், ஜின் ஷைத்தான்களால் பிடிக்கப்பட்டோரும், மன வேதனையால் மாய்வோருமாகிய எல்லாரும் வந்து ஆண்டவரவர்களைத் தரிசித்து, அவரவர் துன்பம் நீங்கி இன்பத்துடன் போவார்கள். அதனால் உண்டாகும் ஜனசந்தடி



ஆண்டவரவர்களிருக்கும் வீட்டுவாசலில் மாறாமல் இருந்து வந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்களை அவர்களின் பிதா மாதாக்களும், சுற்றத்தாரும், ஊராரும், மற்றோரும், தங்கள் தங்கள் ஜீவனையும், இருதய கமலத்தையும் இருகண் மணிகளையும் பேணிப் பாதுகாப்பது போலவே காத்து வளர்த்தார்கள். அல்லாஹுத்த ஆலா அதிகமான மலக்குகளை அவர்களுக்குக் காவலாளராக நியமித்தான். அதனால், ஆண்டவரவர்கள் அதிக அருமையாக வளர்க்கப்பட்டார்கள். வரவர அற்புதங்களும் அதிகரித்து வந்தன. மூன்று மாதக் குழந்தையா யிருக்கையில், றமலான்மாத முப்பதுதினமும் பாலருந்தாமல் பகற்காலத்தைப் போக்கினார்கள்.

ஐந்துமாதக் குழந்தையா யிருக்கும்போது, ஒரு நாள் தாயாராகிய பாத்திமா ஆண்டவரவர்களைத் தூக்கி மடிமீது வைத்து அமுதூட்டி, முத்தமிட்டுக் கொஞ்சி விளையாடிக் கொண் டிருந்தார்கள். அப்போது, வீட்டுவாசலில் ஒரு பகீர்வந்து நின்று: அல்லாவுக்காக ஏதாவது கொடுங்கள் என்று கேட்டார். அந்த வேளையில் அவருக்குக் கொடுக்கக்கூடிய வஸ்து ஒன்றாவது வீட்டில் இல்லை. பாத்திமா அவர் சொல்லைக்கேட்டு மனம்வருந்தி, இதற்கென்ன செய்வோம்! ஒன்றுங்கொடாமல் அவரைப்போகச் சொல்வது தருமமல்லவே! என்று கவலைப்பட்டு, மடியிலிருக்கும் மைந்தர் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அப்போது ஆண்டவரவர்கள் வாயிலிருந்து உமிழ்நீர் வடிந்து கொண்டிருந்தது. வடியும் அந்த வாய்நீருடன் அவ்வூரில் வழங்கும் பொற்பணம் ஒன்றுவந்து வெளியில் பிதுங்கிற்று. பொற்பணம் வந்ததை பாத்திமா பார்த்து ஆச்சரியப்பட்டு, அதையெடுத்து வாசலில் நிற்கும் பகீர்கையிற் கொண்டுபோய்க் கொடுத்து அவரைச் சந்தோஷத்துடன் அனுப்பிவிட்டு, அல்லாஹுத்த ஆலாவைப் புகழ்ந்து சுக்றுசெய்

தார்கள். இப்படியே வாசலில்வரும் பகீர்களுக்குக் கொடுக்கும்படி பல தடவைகளில் ஆண்டவரவர்கள் வாயிலிருந்து பொற்பணம் வந்துகொண் டிருந்தது.

பொற்பணங்கொடுத்தது முற்றிற்று.

---

௪-ம் அத்தியாயம்

## பிறையறிவித்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஊராரால் அறியப்படாமலிருந்த றமலான்மாதப் பிறையை அறிவித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்சுல்தான் ஷாஹுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் பிறந்து பதினைந்துமாதப் பாலகரா யிருக்கும்போது, றமலான்மாதம் வந்தது. அந்தமாதத்துப் பிறைகாண வேண்டிய அன்றுமாலையில் ஆகாயத்தின்மேல் புறம் மேகபடலம் வந்து மூடி, மந்தாரமா யிருந்தது. ஆதலால், அன்று பிறைகாணப் படவில்லை. அதனால், ஊரார் உபவாசமாகிய நோன்பு வைத்துக்கொள்ளாம லிருந்துவிட்டார்கள். அன்றைப் பின்னிரவாகிய ஷஹறுநேரம் பாத்திமா தங்கள் பாலகராகிய ஆண்டவரவர்களைத் தூக்கிப் பாலூட்டப்போனபோது, ஆண்டவரவர்கள் பாலருந்தாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். அன்று பொழுதுவிடிந்தும் பால் குடிக்கவில்லை.

பொழுது விடிந்தபின்னும் பாலகர் பாலுண்ணாதிருப்பதைப் பாத்திமா கண்டு, குழந்தை பாலருந்தாமலிருக்கின்றது. இன்றிரவு றமலான்பிறை பிறந்திருக்கும். சென்ற வருஷத்து றமலான்மாத முப்பதுதினமும் பாலுண்ணாதிருந்தபடியால், இப்போதும் அப்படியே யிருக்கின்றது. ஆதலால், இன்றிரவுதான் றமலான்மாத முதல்திகதியென்று



தீர்மானித்து, தாமும் அன்றைக்கே உபவாசமாகிய நோன்பாயிருந்து கொண்டு, ஊராருக்குந் தெரிவித்தார்கள்.

சையிது ஹஸன்குத்தூஸின் பாலகரான சையிது அப்துல் காதிறு இன்றிரவின் பின்னேரமுதல் பாலருந்தாதிருப்பதால், இன்றுதான் றமலான்மாத முதல்திகதியென்று ஊராரனைவரும் ஒருமித்து, எல்லாரும் அன்றைக்கே நோன்பு வைத்துக் கொண்டார்கள். அந்தவருஷம் அவ்வூராருக்கு முப்பது நோன்பும் சரிவரக் கிடைத்தன.

இவ்வித அற்புத நாயகரான ஆண்டவரவர்கள் மார்க்க நிபந்தனைப் பிரகாரம் பால்குடி மறக்குங்காலம் வந்தபோது, பிதா மாதாக்களின் முயற்சியின்றித் தாங்களாகவே வலியப் பால்குடி மறந்துவிட்டார்கள். இதுவும் எல்லாருக்கும் ஆச்சரியகரமாகவே யிருந்தது.

பிறையறிவித்தது முற்றிற்று.

---

௫-ம் அத்தியாயம்.

## பாலைமீட்டினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் அடுப்பிற் கொட்டுண்டபாலை மீட்டின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்சுல்தான் ஷாஹுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் தாமாகப் பால்குடிமறந்து, நல்லுணவுண்டு, சிற்றடிவைத்து நடக்கும் திருநடைபயின்று, மதுரவாய்மழலை மனங்குளிர்ப்பிக்கப் பேச்சுப்பழகி, நாளொரு வண்ணமாய் வளர்ந்து வந்தார்கள். இப்படி வளர்ந்துவருங் காலத்தில் வயது மூன்று நிரப்பமாயிற்று.

அக்காலத்தில் ஒருநாள் அன்னையாகிய பாத்திமா அடுக்களையில் பால்காய்ச்சிக்கொண் டிருந்தார்கள். அப்போது ஆண்டவரவர்கள் அங்குப்போய் அன்னையை நோக்கி "அன்னாய், அடுப்பிலிருக்கும் பால்காய்ச்சி முடிந்தால், எனக்குக்

குடிக்கக் கொடுங்கள்" என்று கேட்டார்கள். உடனே ஒரு பாத்திரத்தை யெடுத்துக்கழுவி, அதில் அடுப்பிலிருக்கும் பாற்பானையைச் சாய்த்துத் தாயார் ஊற்றினார்கள். கைந் நழுவிப் பாற்பானை அடுப்பிற்கவிழ்ந்து, பால் முழுதும் கொட்டுண்டது. ஒருதுளியும் அந்தப்பானையி லிராமல் எல்லாப்பாலும் தழலடுப்பிற் சிந்தினமாத்திரத்தில் பாத்திமா மனஞ்சலித்து, என்னசெய்வோம்! குழந்தை பால் கேட்கிறதே யென்று மயங்கினார்கள்.

அடுப்புநெருப்பில் பால் சிந்திப்போனதையும், அதற்காகத் தாயார்மனமயங்குவதையும் ஆண்டவரவர்கள் கண்டு "அன்னையே, மனவிசனங் கொள்ளாதீர்கள். அந்தப் பாத்திரத்தைத் தங்கள் வலதுகையி லெடுத்து, பிஸ்மில்லாஹி என்று அடுப்புக்குள் இட்டு மொண்டெடுங்கள்" என்று சொன்னார்கள். இச்சொல்லைக் கேட்ட வுடனே தாயார் மைந்தர் சொற்படி பாத்திரத்தை அடுப்பிலிட்டு அள்ளி யெடுத்தார்கள். கொட்டுண்டபால் அவ்வளவும் சாய்ச்சின படி மாசுமறு வில்லாமல் அந்தப் பாத்திரத்தில் மீண்டு நிறைந்தது. தாயார் மனம்பூரித்து, அந்தப்பாலை மைந்தர் கையில் கொடுத்தார்கள். அதை ஆண்டவரவர்கள் வாங்கிக் கொஞ்சம்பருகிப் பசிதீர்த்து, அல்லாதுத்த ஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள்.

அடிக்கடி இவ்விதப் புதுமைகளைப் பார்க்கும் தாயார் முதலான எல்லாரும் இக்குழந்தையைக் கொடுத்த அல்லாதுத்த ஆலாவைத் துதிக்காதிருந்த நாள் இல்லை. சுற்றத்தார்களுக்கு உண்டான ஆநந்தத்திற்கும் அளவில்லை. இவ்வற்புதங்கள் அங்குப் பரவிக்கொண்டிருப்பதால், சுற்று நாட்டாரும் அதிக ஆச்சரியமுள்ளவர்களாயே பயபக்தியாயிருந்துவந்தார்கள்.

பாலைமீட்டினது முற்றிற்று.

---

௫-ம் அத்தியாயம்.

## திருவாக்களித்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒருவருக்குத் தரித்திரந்தீரத் திருவாக்கு அளித்தவரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீருன்சுல்தான் காதிறுவலி கன்ஜஸவாய் ஆண்டவரவர்கள் அவதரித்த மாணிக்கப்பூரில், சைகு அப்துற்றகுமான் தஞ்ஜாரியென்று ஒரு பாலிய ரிருந்தார். அவர் பெருந்தொழில் செய்து பிரபல வர்த்தகராயிருந்தபடியால், அவருக்கு ஆஸ்திகள் அதிகமுண்டா யிருந்தன. பாக்கியவந்த னென்னும் மேலான அந்தஸ்தில் வாழுங் காலத்தில் திடீரென்று அவருக்குக் கஷ்டதிசை திரும்பிற்று.

இம்மையில் மனப்பாக்கியத்தைப் பெறும் திரவியவந்தவராய்க் குறைவற்ற செல்வத்துடன் வாழுங் காலத்தில் கஷ்டதிசை திரும்பி, தரித்திரம் வந்து தொட்டது. "உடைமையும் வறுமையு மொருவழிநில்லா" என்றபடி செல்வமும், தரித்திரமும் ஒரேவழியில் தரித்து நில்லாமல், மாறி மாறிப் பிறழ்வது உலகத் தியற்கைதானே. ஆதலால், "—நிறைசெல்வம் நீரிற்சுருட்டும் நெடுந்திரைகள்—" என்றார்போல அவருக்குண்டாயிருந்த செல்வப் பெருக்கின் அலைகள் ஓங்கியெழுந்து, நில்லாமல் அடங்கி யமிழ்ந்தன. அவர் செய்த வர்த்தகமெல்லாம் ஒடுங்கின. அதனாலவர் வர வர உண்ண உடுக்க வகையற்று, பரிதபிக்கத்தக்க எளிய நிலைமையிலானார். தாம் பாக்கியவந்தரா யிருந்ததையும், பின் எளிமையடைந்து வருந்துவதையும், எண்ணியெண்ணி அவர் மனம் புண்பட்டது. முன் அநுபவித்த சுகாநுபவங்கள் அனைத்தும் மாறி, தற்போது அநுபவிக்கும் அநுபவம் அவருக்கு ஆறாத்துயரைக் கொடுத்தது. உன்னத நிலையில் நின்ற ஒருவர் மனம் அந்நிலைமாறிக் கீழ்மையடைந்தால்,

என்றைக்கு நீராச் சஞ்சலத்தில் முழுகியிருப்பது இயற்கைதான்.

அப்துற்றகுமான் தஞ்ஜாரி தரித்திரராய் இவ்வாறு மனோ சஞ்சலத்துடன் காலங்கழித்துக்கொண் டிருக்கையில், ஓரிரா தமது நிலைமையை நினைந்து மனம் நொந்தவராய், படுத்து நித்திரை செய்தார். அந்த நித்திரையில் அவருக்கு ஒரு சொப்பனங் காணப்பட்டது. அந்தச் சொப்பனத்தில், யவ்வன சுரூபமுள்ள ஒரு அழகிய பாலியர் அருகில் வந்து நின்று, அவரைப் பார்த்து "அப்துற்றகுமானே, உமது நிலைமையைக் குறித்துக் கவலைப்படாதீர். இவ்வூர் சையிது ஹஸைந்தூந்நாசுடைய பாலகராகிய சையிது அப்துல்காதிறு என்னும் சிறுபிள்ளையை நீர்போய்த் தரிசிப்பது ஒன்று மாத்திரம் உமது பாக்கியத்திற்குப் போதுமானதாயிருக்கும். ஆதலால், அவரைப் போய்த் தரிசியும்" என்று சொன்னார். இந்தச் சொப்பனத்தைக் கண்ட அவர் அதிகாலையில் எழுந்து தமது தகப்பனாராகிய வயோதிபரிடம் சொல்லிக் காட்டினார்.

மனத்துயரிருந்த மைந்தர் கண்டுசொன்ன கனவை அவர் தந்தை கேட்டு அதிக ஆச்சரியப்பட்டு, கண்டபடி செய்யவேண்டு மென்று மைந்தரையும் அழைத்துக் கொண்டு, ஆண்டவரவர்களைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டார். அவ்விருவரும் தங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு, ஆண்டவரவர்களிருக்கும் வீட்டில் வந்து புகுந்தார்கள். அப்போது ஆண்டவரவர்களுக்கு வயது நான்கு.

சைகு அப்துற்றகுமான் தஞ்ஜாரியும், அவர் தந்தையும் தங்கள் வீட்டுக்குள் வந்து புகுந்தபோது, ஆண்டவரவர்கள் தொட்டிலாடிக்கொண் டிருந்தார்கள். இருவரும் உள்ளே நுழைந்த மாத்திரத்தில் அவர்களை இதற்குமுன் கண்டு பழகி அறிமுகமா யிருந்ததுபோல அவ்விருவர்



பெயரையுஞ் சொல்லி ஆண்டவரவர்கள் கூப்பிட்டு, பிறகு அப்துற் றகுமான் முன்னிருந்த பாக்கிய ஸ்திதியையும், இப்போதிருக்கும் நிர்ப்பாக்கியத்தையும், இதனால் அவரடையும் துயரத்தையும் விவரமாகச் சொல்லிக்காட்டினார்கள். அதன் பின், அன்றிரவு அவர்கண்ட கனவையுந் தெரிவித்து, அப்துற்றகுமானைப் பார்த்து "அப்துற் றகுமானே, நீர் முன் சீமானாயிருந்து இப்போது ஏழையானதைப்பற்றித் துக்கப்படுகிறீர். அது சரியன்று. அப்படித் துக்கப்படக் கூடாது. ஏனென்றால்;—முன் உமக்குண்டாயிருந்த செல்வம் உம்மிடத்தில் நிலைபெறாமற் போனதுபோல், இப்போ துண்டாயிருக்கும் தரித்திரமும் நிலைபெறாமற் போய், பழயசெல்வம் மீண்டுவந்து உம்மைச் சேரவுங்கூடும். முந்தியிருந்த பாக்கியத்தைப் பார்க்கிலும் அதிக பாக்கியத்தையும், ஈடேற்றத்தையும் அல்லாஹுத்த ஆலா உமக்குக் கொடுப்பான். அவன் திராணியுள்ளவன். உமது கஷ்டங்களெல்லாந்தீர்ந்து, நீர் சுகம் பெறுவீர். துக்கப்படாதீர்" என்று ஆறுதல் சொல்லி, இன்னும் பல உத்தம வாக்குகளையும் அவர் மனங்குளிரச் சொன்னார்கள்.

இந்த அருமந்த சொற்களை சைகு அப்துற் றகுமான் தஞ்ஜாரியும், அவர் தந்தையும் கேட்டு இதயம் பூரித்து, ஆண்டவரவர்களைப் போற்றிப் புகழ்ந்து விடைபெற்றுக் கொண்டு, அங்கிருந்து போய்விட்டார்கள். ஆண்டவரவர்களின் திருவாக்குப்படி சொற்பகாலத்திற்குள் அல்லாஹுத்த ஆலா அப்துற்றகுமான் தஞ்ஜாரிக்கு அளவற்ற பாக்கியத்தைக் கொடுத்தான். அவர் என்றும் அடையாத செல்வத்தையடைந்து, இம்மைப்பேறும் மறுமைப்பேறும் பெற்று, தமது சீவியகாலமுழுதும் மனப்பாக்கியத்துடன் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தார்.

திருவாக்களித்தது முற்றிற்று.

எ-ம் அத்தியாயம்

## அடிசிலாக்கியது.

[இவ் வத்தியாயம் ஹஸறத்து ஆண்டவரவர்கள் தீயிற் பாகஞ் செய்யாமல் சோறு முதலியன ஆக்குவித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹஸறத்து மீறான் கல்தான் ஷாகுல்ஹமீது கன்ஜுஸவாய் பாத்ஷா சாகிபு ஆண்டவரவர்கள் நான்கு பிராயமாயிருக்கும்போது, பிதா மாதாக்க ளிருவரும் தங்கள் அருமை மைந்தரை மார்க்கவிதிப் பிரகாரம் ஓதுவிக்க வேண்டுமென்று, தக்க ஆசிரியரொருவரைத் தேடி, தக்க காலத்தில் சுபதினம் பார்த்து வித்தியாரம்பம் செய்தார்கள். அன்று முதல் ஆண்டவரவர்கள் பிரதிதினமும் மதறஸா என்னும் கல்விச்சாலைக்குப்போய்க் கல்வி பயின்று கொண்டு வந்தார்கள்.

ஹஸறத்து ஆண்டவரவர்கள் அதிகாலையி லெழுந்து சிற்றுண்டி யுண்டு கல்விச்சாலைக்குப் போய் மத்தியானம் வரையும் ஓதிக்கொண்டிருந்து, பின் மத்தியான வுணவுக்காக மனைக்குவந்து ஆகாரம்புசித்து, மீண்டும் கல்விச்சாலைக்குப்போய், மாலைநேரம் மனைக்கு வருவார்கள். இடையில் தொழுகைக்குரிய ஒவ்வொரு வேளையிலும் தவறாமல் தொழுது கொள்வார்கள். இரவு காலங்களைக் கல்விபயிற்சியிலும், வணக்கப் பழக்கத்திலுமே போக்குவார்கள். மார்க்கச் சட்டத்தின் பாரத்தைச் சுமந்துகொள்ளும் பருவத்தை யடையு முன்னமே ஆண்டவரவர்கள் அந்தச்சட்ட நிபந்தனைப்படி நடக்க நன்றாய்ப்பழகி, விதி விலக்குகளில் எள்ளத்தனையுந் தவறாமல் ஒழுகி நடந்து வந்தார்கள்.

இவ்வித நல்லொழுக்கத்துடன் ஆண்டவரவர்கள் கல்வி கற்றுவருங் காலத்தில், ஒருநாள் அதிகாலையி லெழுந்து



வழமைப்படி கல்விச்சாலைக்குப் போய்விட்டார்கள். அன்று முற்பகல் தாயாராகிய பாத்திமா அல்லாதுந்த ஆலாவுக்குரிய இபாதத்து என்கிற வணக்கத்தில் அதிகநேரம் பராக்காயிருந்து விட்டார்கள். ஆண்டவரவர்கள் மத்தியானவுணவுக்காக மனைக்குவரும் வேளை அடுத்தது.

வணக்கத்தில் பராக்காயிருந்த தாயார் நேரமான துணர்ந்து, மைந்தர் பசித்து வருவாரே யென்று பதறியெழுந்து, நெருப்பெடுத்து வரும்படி அசல் வீட்டுக்கு ஆளனுப்பிவிட்டு, அதிக விரைவாய் அரிசிகளைந்து அடுப்பிலேற்றி, சமைக்க வேண்டிய கறிவகைப் பதார்த்தங்களையெல்லாம் ஆய்ந்து கழுவிப் பாத்திரங்களில் வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்நேரம் ஹஸறத்து ஆண்டவரவர்கள் கல்விச்சாலையிலிருந்து மனைக்கு வந்தார்கள்.

உணவருந்திப் பசிதீர்க்கவந்த ஆண்டவரவர்கள் மனைக்குள் நுழைந்தபோதே தாயாரைக் கூப்பிட்டு "அம்மா, பசிக்கின்றது; ஆகாரங்கொடுங்கள்" என்று கேட்டார்கள். மைந்தர் இப்படிக் கேட்டபோது தாயார் "என் கண்மணியான மகனே, சற்றே பொறுங்கள்; ஆக்க வேண்டிய எல்லாம் தயாராயிருக்கின்றன; நெருப்பு மாத்திரமில்லை. அதற்காக அண்டைவீட்டுக்கு ஆளனுப்பியிருக்கிறேன். இதோ வந்தது. ஒரு க்ஷணத்தில் சமைத்துத் தருகிறேன். கொஞ்சம் பொறுத்திருங்கள்" என்று அன்புடன் சொன்னார்கள். இச் சொல்லைக்கேட்ட ஆண்டவரவர்கள் மறுத்தும் தாயாரைநோக்கி "அன்னாய், இனி நெருப்புவந்து எல்லாஞ் சமைத்துத்தீர நேரம்போம். அல்லாதுந்த ஆலா என் பசியையறிந்து உணவு கொடுக்கும் கிருபாகரன். ஆகையால், தாங்கள் சமைப்பதற்காகத் தயார்பண்ணின எல்லாவற்றையும் திறந்து பாருங்கள்; அவை முழுதும் சமைக்கப்பட்டிருக்கும்" என்று சொன்னார்கள். இச் சொல்லைக்கேட்டபோது தம் புத்திரரின் அற்புதாதிகளைக் கையு மெய்யுமாகக் கண்ட

றியுந் தாயாராகையால், அதை நம்பி உடனே யெழுந்து போய், அடுப்பிற் களைந்துவைத்த அரிசியைத் திறந்து பார்த்தார்கள். பானைநிறையச் சோறு சமைந்து பொங்கி, ஆவியெழுந்துகொண்டிருந்தது. கறிப் பாத்திரங்களையும் ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்தார்கள். அந்தப் பாத்திரங்களிலுள்ள கறிகளும் பாகஞ்செய்யப்பட்டுச் சுடச்சுடவிருந்தன. அவற்றின் நறுமணங்களும் கமகமவென்று வீசின. இந்த அதிசயத்தைக்கண்ட தாயார் மனமகிழ்ந்து, உடனே, உண் கலன்களைக் கழுவிச் சோறு முதலியவற்றை வைத்துப் பரப்பி, புசிக்கும்படி மைந்தரைக் கேட்டுக் கொண்டார்கள்.

அடுப்பில் வைத்துத் தீயாற் பாகஞ்செய்யப் படாமல் சமைந்த அருமையான உணவுகளை ஹலறத்து ஆண்டவரவர்கள் சந்தோஷத்துடன் உண்டு, அல்லாஹுத்த ஆலாவுக்கு சுக்று செய்தார்கள். அதன்பின், ஆச்சரியகரமான அந்த ஆகாரங்களைப் பிதா மாதாக்களும் ஆனந்தத்துடன் புசித்து, என்றும் சமைப்பனவற்றைப் பார்க்கிலும் இவை அதிக மதுரமான ருசியுடையனவா யிருக்கக்கண்டு அல்லாஹுத்த ஆலாவைப்புகழ்ந்து, மைந்தரைக் கொண்டாடினார்கள்.

அடிசிலாக்கியது முற்றிற்று.

---

௮-ம் அத்தியாயம்.

## கலிறு நபியைத் தரிசித்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் நபி கலிறு அலைஹிஸ்ஸலாமவர்களைத் தரிசித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஙௌதுல்ஹமீது ஆண்டவரவர்கள் நான்கு வயதில் கல்வி கற்றுவருங் காலத்தில், ஒருநாள் ஒரு மரநிழலில் தனித்து நின்றார்கள். அப்போது, பரிமளங் கமழும் பரிசுத்தமான வெள்ளுடை யணிந்த ஒரு முதியவர் ஆண்டவரவர்கள் முகதாவில்வந்து நின்றுகொண்டு "அல்லாஹுத்த ஆலாவுக்கு உவப்பான ஒலியே, ஹஸன் குத்தூஸின் புத்திரரே, அப்துல் காதிறே, இங்கே தனித்தோ நிற்கிறீர்? உமது வாயைத் திறந்து கொள்ளும்" என்று சொன்னார்கள். உடனே ஆண்டவரவர்கள் வாயைத் திறந்தார்கள். அப்போது அந்தப் பெரியவர் ஆண்டவரவர்களின் வாயில் துப்பினார்கள். மூன்று தரம் துப்பிவிட்டு, பின்னும் பேர்சொல்லி யழைத்து "அல்லாஹுத்த ஆலா இன்றைத்தினம் உமக்கு இல்மையும், விலாயத்தையும் நிரப்பமாக்கினான்" என்று சொன்னார்கள். ஆனந்தந்தரும் இச் சொல்லைக்கேட்டுச் சந்தோஷமாய், அந்த முதியவரைப் பார்த்து "தேவரீர் யார்?" என்று ஆண்டவரவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் "நான் கலிறு" என்று சொல்லிவிட்டு மறைந்து போனார்கள்.

பின்பு அடிக்கடி கலிறு அலைஹிஸ்ஸலா மவர்கள் வந்து ஆண்டவரவர்களைச் சந்தித்து, ஸலாம் சொல்லிப் பேசிக் கொண்டிருப்பார்கள். பல தடவைகளில் மதறஸாவுக்கு வந்து ஆண்டவரவர்களுக்கு ஓதிக் கொடுப்பார்கள். அதுவன்றியும், அடுத்தடுத்து மலாயிக்கத்துகளும், றிஜாலுல்கைபு என்னும் மறைவான மனிதர்களும்வந்து ஹலறத்து ஆண்டவரவர்களைச் சந்தித்து, ஸலாம்சொல்லி, சோபனங்கூறிப்

போவார்கள். இது நடக்குந் தோறெல்லாம் ஆண்டவரவர்கள் இதைக் குறித்துப் பிதா மாதாக்களுக்குத் தெரிவிப்பார்கள். இவைகளை அவர்கள்கேட்டு ஆநந்தங்கொண்டு, மைந்தர் மீது அதிக பக்தியுடன் இருப்பார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஐந்து பிராயம் நிரப்பமாவதற்குள் குறுஆன் முழுவதையும் பாராயணஞ்செய்து, மனப்பாடம் பண்ணிவிட்டார்கள். எட்டுப் பிராயத்திற்குள் அறபு இலக்கிய இலக்கணம் முதலான [illegible], நஹ்வு ஸறுபு முதலிய எல்லா நூல்களையும் யந்திரமாக்கற்றுத் தேறி, பிக்ஹு, அகாயிது, தஸவ்வுபு என்கிற மூன்றுவகை அறிவுகளையும் கற்றுத்தெளிந்தார்கள். பதினான்குவகை இல்முகளும் அவர்கள் மனமே இருப்பிடமென்று குடிகொண்டன. ஆண்டவரவர்களின் மனம் அறிவிற் கடல் போற் பரந்தது. இனிக்கற்கவேண்டியது ஒன்றில்லையென்னுமளவு எல்லாக் கல்விகளையும் கற்று நிரப்ப மானார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் வயது ஏற ஏற ஒழுக்க வழக்கங்களில் கண்டோர் கேட்டோர் மனங்குளிர்ந்து சந்தோஷப்படத்தக்க விதமாக நடந்து வந்தார்கள். பிதா மாதாக்கள், குடும்பத்தார்கள் முதலான எல்லாருக்கும் நன்றி செய்கிறவர்களாயும், நற்கருமங்களைச்செய்து மனமகிழ்விக்கிறவர்களாயும் ஒழுகி நடந்தார்கள்.

அன்றியும், தீனுல் இஸ்லாமுடைய ஷறஉ என்கிற கட்டளைப் பிரகாரம் விதிவிலக்குகள் முழுவது முணர்ந்து, விதியை உவந்து தொடர்ந்தும், விலக்கை அருவருத்து விலக்கியும் நடந்தார்கள். ஒரு சிறுபாவத்தையும் பெரும் பாவமென்று பாவித்து, கூடியமட்டும் அதைத்தவிர்த்து நடக்கவே முயல்வார்கள். எந்நேரமும் அல்லாஹுத்த ஆலாவின் வணக்கத்திற் பராக்கா யிருந்து, அவனுக்கு அஞ்சி அழுவார்கள். ஐந்து வேளைத் தொழுகைகளையும் வேளை தவறாமல் தொழுவார்கள். பகற்கால முழுதும் உபவாச விர



தத்தோடும், இராக்கால முழுதும் விழிப்போடிருந்து வணக்கஞ் செய்வார்கள். இஷா தொழச்செய்த உளுவுடனிருந்து பஜ்று தொழுவார்கள். ஒவ்வோ ரிரவிலும் குறுஆன் முழுவதும் ஓதி, ஆயிரம் றக்அத்துக் தொழுவார்கள். அவர்களின் சரீரத்து இயக்க வொடுக்கங்கள் வணக்கத்திலன்றி, மற்றதில் இல்லை. தங்கள் அகக்கருவி புறக்கருவிகள் அனைத்தையும் ஒவ்வொரு நிமிஷத்திற்கும் அல்லாஹுத்த ஆலாவின் இபாதத்திற்கே பிரயோகித்து வந்தார்கள். உலக விஷயத்தின் பராக்குக் கொஞ்சமு மில்லை. ஆண்டவரவர்களின் செயல், குணம், குறி முதலிய எல்லாம் மனிதர்கள் அதிசயிக்கத்தக்க மேன்மைபெற்று விளங்கின. வயது வர வர அவர்கள் கருமங்களுஞ் சிறந்து, நிகரின்றிப் புகழத்தக்கனவாய், அதிக மேன்பாடு பெற்றனவாய் விளங்கின.

கலிறு நபியைத் தரிசித்தது முற்றிற்று.

---

௪-ம் அத்தியாயம்

## புறப்பாடு.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் முரீதாகுவதற்காக ஞானதேசிகரைத் தேடிப் புறப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான் சுல்தான் சையிது அப்துல் காதிறு ஷாகுல்ஹமீது பாத்ஷாசாகிபு ஆண்டவரவர்கள் தீனுல்இஸ்லாமுடைய இல்முகள் எல்லாவற்றிலும் கரைகண்டவர்களாய், முமீன்களுக்கெல்லாம் நாயகமாய் விளங்கிவரும் காலத்தில், அவர்களுக்கு வயது பதினெட்டு நிரப்பமாயிற்று. அறியவேண்டிய முக்கியமான எவ்வகை யறிவுகளிலும் குறைவற நிரப்பமாய், பாத்தின், லாகிறு என்னும் அகம் புறம் ஆகிய இருவகைப் பொருள்களையும், உலகாதி சிருஷ்டிகளின்

அந்தரங்கம் பகிரங்கங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காணத்தக்க பக்குவமடைந்தார்கள். இகத்தில் நடந்து கொள்ளவேண்டிய முக்கிய கடமைகள் இன்னவை யென்றும், பரத்திற் பெறவேண்டியது இன்னது என்றும், இகத்தில் இன்னது செய்தால், பரத்தில் இன்னது பயக்கும் என்றும் நன்குயறிந்தார்கள். பிறகு, அல்லாஹுத்த ஆலாவை உள்ளபடி யறியவேண்டியது ஒன்றுமாத்திரம் மீதியா யிருந்தது. ஆகையால், அவர்கள் இருதயத்தில் அவனை யறியும் விசாரம் குடிகொண்டது.

ஆண்டவரவர்களுக்குமேற்படி விசாரம் பிறந்தபோது, நிலத்தையும் நீரையும் வைத்திருக்கும் ஒருவன், அந் நிலத்தில் நட்டி நீர்பாய்ச்சிப் பயிராக்கிப் பலனடையத் தக்க வித்தில்லாதிருப்பானாயின், அவன் என்ன பலனை யடையப் போகிறான்? ஒன்றுமில்லை. அப்படியே நாமும் அல்லாஹுத்த ஆலாவை யறிவதற்குச் சாதனங்களாகிய நாவையும், ஜடத்தையும், அறிவையும் வைத்திருக்கிறோம். இருந்தாலும், இவற்றில் விதைத்துப் பலன்பெறக்கூடிய வித்து நம்மிடத்தி லில்லை. அந்த வித்தாவது, தக்க ஆசிரியரால் உபதேசிக்கப் படும் உபதேசமேயாம். அவ்வுபதேசத்தை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும். அதற்காக ஒரு ஆசிரியரைத் தேடிப் போகவேண்டும் என்று நினைத்தார்கள். ஞான தேசிகரைத் தேடும் இந்த உத்தம வெண்ணம் அவர்கள் இருதயத்தில் வேரூன்றிற்று. தங்கள் பதினொன் பிராயத்திற் பிறந்த இந்த மேலான வெண்ணத்தினால் ஆண்டவரவர்கள் தூண்டப்பட்டு, ஒரு நாள் தங்கள் பிதா மாதாக்களின் சமுகத்திற் போய்ப் பணிந்து நின்று, பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்கள்.

"என்னை அன்போடு பெற்றெடுத்த என் அருமையான பிதாமாதாக்களே, இப்போது நான் சொல்லும் சொற்களை நீங்கள் கவனமாய்க் கேட்கும்படி கேட்டுக்கொள்



றுகிறேன். அவையாவன:—இவ்வுலகத்தில் ஒருவன் எவ்வளவுபெரிய பாக்கியவந்தனா யிருந்தாலும், எவ்வளவு மிகைத்த கல்விமானா யிருந்தாலும், தரையிற் பரந்துகிடக்கும் மணல்களையும், வானத்திலிருந்து சொரியும் மழைத்துளிகளையும் அளவிட்டுச் சொல்லவல்லவனா யிருந்தாலும், மறைந்த பொருள்களை யெல்லாந் தெரியக் கூடியவனா யிருந்தாலும், ஆகாய கமனஞ் செய்யுந் திராணியுள்ளவனாயிருந்தாலும், பரகாயப் பிரவேசியாயிருந்தாலும் அல்லாஹுத்த ஆலாவை அறியாதவனா யிருந்தானானால், அவன் பிரயோஜனமில்லாத அபாக்கியனே யாவான். நரனாய்ப்பிறந்த எவனும் கண்ணுக்கினிமையான காட்சிகளைக் காணவும், காதுக்கினிமையான கீதநாதங்களைக் கேட்கவும், நாசிக்கினிமையான நறுமணங்களை முகக்கவும், வாய்க் கினிமையான பதார்த்தங்களைப் புசிக்கவும், சரீரத்திற் கினிமையான ஸ்திரீ பரிசஞ் செய்யவுமே சித்தங்கொண்டு, தன் இந்திரியங்களை அல்லாஹுத்த ஆலாவை யறியும் ஞானசம்பந்த விஷயங்களிற் பிரயோகிக்காமல், இவ் வுலகவிச்சையிற் பிரயோகித்து திரிபானானால், அவன் எத்தனை நூல்களைக்கற்றுத் தெளிந்தவனானாலும் மோக்ஷத்தை யடைய மாட்டானென்பது நன்றாய்த்தெரிந்த காரியம். ஆகையால், கயிற் றரவுபோன்ற இவ் வுலகத்தையும், சொப்பனக் கூத்துப்போன்ற இவ் வுலகவாழ்வையும், நீர் மேற்குமிழிபோன்ற தேகத்தையும் நாம் நம்பி, அல்லாஹுத்த ஆலாவை யறியுங் கருமத்தில் தலையிடாமல் வாணாளை வீணாளாக்கி மடிவதானால், பின்பு மிகவுந் துக்கிக்க நேரிடும். இவ் வுலகத்திற் பிறந்த ஒவ்வொருவனும் நாம் இங்கேவந்தது எதற்காக வென்பதை விசாரித்தறிந்து, அந்தக் காரியத்தை நிறைவேற்றுவது கடமை. அப்படி வந்தகாரியம் அல்லாஹுத்த ஆலாவை யறியும் ஒன்றேயன்றி வேறன்று. அந்தக் காரியத்தை அறவே மறந்து, இவ்வுலக விச்சையிற் பராக்காயிருந்து மடிந்தால்,

பின் அடையும் வைசேசமும், அநுபவிக்கும் துன்பமும் சொல்லவும் வேண்டுமோ? எவ்வளவு பெரிய கல்விமான்களையும் இவ்வுலகம் மருட்டவுங்கூடும் என்றல்லவா? முன்னுள்ள பெரியோர் பலர் முழுதுந் துறந்து, வனவாசிகளாய்க்காலங் கழித்தார்கள்; அல்லாத பலர் தாமரையில் தண்ணீர் போலப் பட்டும் படாமல் இருந்துவிட்டுச் சென்றார்கள். அப்படிப்போல ஒருவன் இவ்வுலகத்தின் பற்றற்று அல்லா தத்தஆலாவின் சாயுட்சிய பதவியை யடைய வேண்டுமானால், அவனுக்கு எவ்விதப் பொல்லாங்குகளையும் ஒழித்து நல்லாங்கி லொழுகி நடக்கும் நற்கருமங்களோடுகூட, முடிவான மந்திரோபதேச மொன்றும் அவசியம் வேண்டும். அவ் வுபதேசம் மேலான சற்குருவிடத்திலல்லாமல்பெறக் கூடாது. ஆகையால், எவ்வளவு தூரங்கடந்த கல்விமானு யிருந்தாலும், ஒருவனுக்கு ஒரு சற்குரு அவசியம் வேண்டும். அவ்விதக் குருவில்லாத எவனும் கண்ணில்லாத குருடனுக்குச் சமானமானவனே யாவான். என்பிதா மாதாக்களே, இதைப்பற்றி நான் உங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டியதில்லை. முடிவாகச் சொல்லுகின்றேன். 'ஒருவன் இம்மையில் அல்லாதுந்த ஆலாவை அறியாதவனுனால், அவன் மறுமையிலும் குருடனாயிருப்பான்' என்று நமது மார்க்க நூல்கள் முறையிடுகின்றன. ஆதலால் சிருஷ்டியாகிய என்னை இன்றுமொன்றும் சிருஷ்டிகனாகிய அல்லாதுந்த ஆலாவை இப்படிப் பட்டவனென்றும், எனக்குத் தெளிவா யுணர்த்தக்கூடிய ஒரு உத்தமகுருவை நான் தேடி, அந்தச் சற்குருவின் உபதேசத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றேன். தேவரீர்களாகிய நீங்கள் 'உன் விருப்பத்தின்படி ஒரு சற்குருவைத் தேடிக்கொள்வாயாக' என்று இப்போதே எனக்கு உத்தரவு தரவேண்டும்."

என்று இவ்வாறு ஹலறத்து ஆண்டவரவர்கள் சொல்லி உத்தரவு கேட்டபோது, பிதாமாதாக்கள் இருவரும் மன



மகிழ்ந்து, மைந்தரை நோக்கி "எங்கள் கண்மணியான அருமைமகனே, உமது வாய்ச்சொற்கள் எங்களை ஆநந்த சாகரத்தில் அமிழப் பண்ணிவிட்டன. அல்லாதுந்த ஆலா உமது நாட்டத்தை நிறைவேற்றுவிப்பானாக. நீர் உமது கருமங்களை அல்லாதுந்த ஆலா இடம் சாட்டிவிட்டு, அவன் புறம் முகம்வைத்து, இன்றைக்கே புறப்படும். நீர் ஒரு சற் குருவைத் தேடிக்கொள்வது எங்களுக்கும் பொருத்தமான காரியம். ஆனால், மகனே, நீர் குருவைத் தேடிக்கொண்டு மற்றெங்கேயும் போகவேண்டாம். குவாலீர் என்னும் பட்டணத்தில் ஒலியாக்களும், சிறந்த மஷாயிகுகளும் அதிகம்பேர் குடியிருக்கின்றார்கள். நீர் அங்கே போவீரானால், அல்லாதுந்த ஆலா அங்கேயே உமக்குத் தக்க ஒரு குருவை நியமிக்கவுங்கூடும். அவனுடைய அடைக்கலமாக நீர்போய் வாரும் மகனே. உமது காரியம் சிறப்பாகக் கடவது" என்று ஆசிர்வதித்து உத்தரவு கொடுத்தார்கள்.

பிதா மாதாக்க ளிருவரும் மேற் கண்டபடி உத்தரவு கொடுத்தபோது, ஆண்டவரவர்கள் சற்குருவைத் தேடிக் கொண்டு, அவர்கள் சொன்னபடி குவாலீர் நகரத்திற்கே பிரயாணப்பட எத்தனப் பட்டார்கள். தங்கள் பிரயாணத் திற்காக வழித்துணை, வழிச்செலவுக்கான பொருள் யாதொன்றும் தேடவில்லை. அல்லாதுந்த ஆலா வொருவனை தங்களோடிருக்கும் வஸ்துவன்றி, மற்றொன்று மில்லாமல் தன்னந்தனியே புறப்படத் துணிந்தார்கள்.

ஹிஜ்றத்துத் தொளாயிரத்து இருபத்தெட்டாம் வருஷத்து ஜமாத்துல்லாகிறு மாதத்தில் ஒரு திங்கட்கிழமை யன்று ஆண்டவரவர்கள் பிதா மாதாக்கள் உத்தரவுபெற்றுக்கொண்டு, மாணிக்கப்பூரை விட்டு குவாலீரைநோக்கி, சற்குருவை நாடினவர்களாய்ப் புறப்பட்டார்கள்.

புறப்பாடு முற்றிற்று.

௫-ம் அத்தியாயம்

# இல்யாசு நபியைத் தரிசித்தது.

[இவ் வத்தியாயம் ஆண்டவரவர்கள் வழியில் நபி இல்யாசு அலைஹிஸ்ஸலா மவர்களைத் தரிசித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாஹுல்ஹமீது பாதுஷா சாஹிபு ஆண்டவரவர்கள் மாணிக்கப்பூரைவிட்டுப் புறப்பட்டு, சற்குருவைத் தேடிக்கொண்டு குவாலியரை நோக்கிப் போகும்போது, பாதையில் ஒரு பெரியவர் எதிரேவரக் கண்டார்கள். கண்ட போது, தங்கள் திருவாய் மலர்ந்து அந்தப் பெரியவரை நோக்கி ஸலாம் சொன்னார்கள். உடனே அந்தப்பெரியவர் பிரதிசொல்லி "என் அருமை மகனே, நீர் எங்கே போகிறீர்?" என்று ஆண்டவரவர்களைப் பார்த்துக் கேட்டார். அதற்கு ஆண்டவரவர்கள் "நான் அல்லாகுத்தஆலாவில் ஆசை வைத்தவனாய், முரீதாக வேண்டி ஒரு குருவைத் தேடிக்கொண்டு குவாலியருக்குப் போகிறேன். தங்கள் எனக்காக துஆ செய்யுங்கள்" என்று விடைகூறினார்கள். இதைக்கேட்டவுடனே அந்தப் பெரியவர் ஆண்டவரவர்களுக்காக அல்லாகுத்தஆலா இடம் துஆ இரந்தார். அப்போது அவர்கள் இருவருக்குமிடையில் ஒரு தாலத்தில் மேலான உணவுகளும், ஒரு கரகத்தில் தண்ணீரும், ஆகாயத்திலிருந்து தாமாகவே இறங்கின. அப்போது அந்தப் பெரியவர் ஆண்டவரவர்களை நோக்கி "மகனே, அல்லாகுத்தஆலா உம்மைப் பொருந்திக்கொண்டு, உம்மை விருந்தாக வரவழைத்திருக்கிறான். இதை நீர் உண்ணும்" என்று சொன்னார்கள். ஆண்டவரவர்கள் சந்தோஷத்துடன் பிஸ்மில் சொல்லி அந்த உணவைப் புசித்துத் தண்ணீர் குடித்து, அல்லாகுத்தஆலாவுக்கு நன்றி செய்தார்கள்.

பிறகு, அந்தப் பெரியவர் ஹலறத்து ஆண்டவரவர்களை நோக்கி: "சையிது அப்துல் காதிறே, நீர் எந்தக் கல்வி



களையும் புத்தியுடன் தெளிய விளங்கிக் கற்றுக்கொள்வீராக; எந்தக் கருமங்களையும் பொறுமையுடன் செய்துகொள்வீராக; ஒளலியாக்கள் முதலான பெரியோர்களின் சமுகத்திற் போவீரானால், அவர்கள் உம்மை உவக்கும்படி நடந்துகொள்வீராக. ஏனென்றால், அவர்கள் ஒருவனை உவந்தால் அல்லாகுத்தஆலாவும் அவனை உவப்பான்; அவர்கள் வெறுத்தால், அல்லாகுத்தஆலாவும் வெறுப்பான் என்று சொல்லி, இன்னும் பல அறிவுகளையும் கற்பித்து இஸ்முல்லதுலம் என்னும் திருமந்திரத்தையும் போதித்தார்கள்.

இவ்வளவும் நடந்தபின் ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தப் பெரியவரைப்பார்த்து "என் பிதாவே, தங்களை இன்னாரென்று நான் அறியக்கூடவில்லையே. அதை அறியும்படி தேவரீர் கிருபை செய்யவேண்டும். தாங்கள் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் "நான் இல்யாசு" என்று விடை சொல்லிவிட்டு, உடனே மறைந்து போனார்கள். நபி இல்யாசு அலைஹிஸ்ஸலா மவர்கள் தரிசனையாய்ச் சம்பாஷித்து மறைந்த அப்போதே ஹலறத்து ஆண்டவரவர்களுக்குத் தங்கள் நப்சு வசப்பட்டது. ஷைத்தானிய்யாவின் ஊசாட்டம் அனைத்தும் பற்றறத் தொலைந்தன; றஹுமானிய்யாவின் குணம் மேலிட்டது. அவர்கள் கருமங்கள் அனைத்தையும் அன்றைத்தினமே அல்லாகுத்தஆலா எளிதாக்கினான். அவர்களை அவன் பொருந்திக் கொண்டான். துன்யாத்து கௌதியத்துகளுக்கு அவர்களைப் பக்குவமாக்கினான். அவர்கள் இருதயம் களங்கமற்ற கண்ணாடிபோலாயிற்று. அகிலபுவனங்களாதியான சராசரங்கள் எல்லாம் கண்களுக்கெதிரே காணப்பட்டன. விலாயத்தின் போர்வையைச் சரிவரப்போர்த்து, ஒலித்தனத்தில் நிரப்பமானார்கள். அதன் பிறகு ஹலறத்து ஆண்டவரவர்கள் அங்கிருந்து குவாலியரை நோக்கி நடக்

தார்கள். சிலநாட்களுக்குப்பின், *முசாறுத்தீன் என்பவரொருவர் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு வழித்துணைவராய் இடையில்வந்து கூடினார். அவரையுங் கூட்டிக்கொண்டு இருவருங்கூடிக் குவாலீரை நோக்கி நடந்து போனார்கள்.

இல்யாசு நபியைத் தரிசித்தது முற்றிற்று.

---

௧௩-ம் அத்தியாயம்.

## புலிகள் வழிபட்டது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுக்குக் காட்டில் புலிகள் வழிபட்டுவந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல் காதிறு ஆண்டவரவர்கள் முசாறுத்தீன் என்பவர் கூடவரும்படி வழிநடந்து, ஓங்கி வளர்ந்த பலவகை விருக்ஷங்கள் அடர்ந்து நெருங்கின ஒரு வனத்திற்போய்த் தங்கினார்கள். அப்போது அந்த வனத்திற் சஞ்சரிக்கும் புலிகள் அடங்கலும் ஒருங்குதிரண்டு, பெருங்கூட்டமாய் ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து தலைகுனிந்து பணிந்து நின்றன. அப்புலிகளுள் பாரிய வேங்கையொன்று ஆண்டவரவர்கள் முன்வந்து தாழ்ந்து நின்று, ஆண்டவரவர்களை விளித்து "ஒலியுல்லாவே, தாங்கள் எங்களில் எதின் முதுகில் ஏறியிருந்துகொள்ள வேண்டுமோ அதின் முதுகில் ஏறியிருந்துகொண்டு, எங்கெங்கே போகவேண்டுமோ அங்கங்கே போகலாம். இதற்காக நாங்கள் அல்லாதந்த ஆலாவால் ஏவப்பட் டிருக்கிறோம்" என்று வாய்திறந்து

* இவர்கள் தாம் ஆண்டவரவர்களின் இரண்டாம் கலீபாவாகிய சைதுமுசாறுத்தீன். இவர்கள் அநேக கருமாத்துகளை ஆண்டவரவர்களின் தாயாரிடம் நேரிற் கேட்டதாகவும், அநேக கருமாத்துகளை ஆண்டவர்கள் கூடவேயிருந்து பார்த்ததாகவும், தாங்கள் இயற்றிய கல்ஜூல் கருமாத்து என்னும் கிரந்தத்தில் சொல்லுகிறார்கள்.



சொல்லிற்று. தலைமையான வேங்கை இப்படிச் சொன்னபோது, மற்றப்புலிகளெல்லாம் தலைசாய்த்து நின்றன.

புலிகள் திரண்டுவந்து முகதாவில் நின்றுகொண்டு சொன்ன இச்சொல்லை ஆண்டவரவர்கள் கேட்டு, அப்புலிகளைப் பார்த்து "நான் உங்கள் முதுகில் ஏறியுலாத்த வரவில்லை. உங்களுக்கும், எனக்கும், "அல்லாதந்த ஆலாவே போதுமானவன். நீங்கள் உங்கள்காரியத்திற் போகலாம்" என்று சொல்லி, அந்தப்புலிகளைப் போகும்படி அனுப்பிவிட்டார்கள்.

உடனே இச்சொல்லைக்கேட்ட புலிகளெல்லாம் காட்டிற் சென்றன. பின், ஆண்டவரவர்கள் முசாறுத்தீனைப் பார்த்து "மூசாறுத்தீனே, நீர் நன்றாயறிந்துகொள்ளும். ஒருவன் அல்லாதந்த ஆலாவுக்கு வழிபட்டு நடந்தானானால், அவனுக்கு எல்லாப் படைப்புகளும் வழிபடுகிறதுமல்லாமல், அவன் அல்லாதந்த ஆலாவைச் சந்தித்து, விலாயத்தையும் பெற்று, என்றைக்கும் சந்தோஷமாயிருப்பான்" என்று சொன்னார்கள்.

பிறகு ஆண்டவரவர்கள் அந்த வனத்தை விட்டுப் புறப்பட்டு, குவாலீரை நோக்கி நடந்தார்கள். இவர்கள் எந்த வனத்திற்குள் புகுந்தாலும் அங்குள்ள எல்லா மிருகங்களும் திரண்டுவந்து ஆண்டவரவர்களைப் பணிந்து, தரிசனை பெற்றுக்கொண்டு போகும். இவ்வித மகத்துவத்துடன் வனம், வனாந்திரம், மலை, நதி எல்லாவற்றையும் கடந்து நடந்து போனார்கள்.

புலிகள் வழிபட்டது முற்றிற்று.

---

௧௨-ம் அத்தியாயம்.

# திருடர்கள் வழிபட்டது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் போகும்பாதையில் வந்து எதிர்த்த திருடர்கள் இஸ்லாத்தில் வழிபட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் தங்களோடு மூசஹுத்தின் தொடர்ந்து வரும்படி குவாலியரை நோக்கி நடந்து போகிறபோது, நான்கு திருடர்கள் பக்கத்திலுள்ள வனத்திலிருந்து புறப்பட்டு, ஆண்டவரவர்கள் முன்வந்து நின்று மறித்துக்கொண்டு: நீங்கள் உங்கள் வசத்திலிருக்கிற எவ்விதப் பொருள்களையும் எங்களிடம் கொடுத்துவிட்டுப் பேசாமற் போகவேண்டும். இல்லாவிட்டால், எங்கள் கைகளிலுள்ள இந்த வாட்களால் உங்களை வெட்டி வீழ்த்துவோம் என்றுசொல்லி, வாட்களை யசைத்து உறுக்கினார்கள். இதைக்கண்ட ஆண்டவரவர்கள் அந்தத் திருடர்களைப் பார்த்து: நாங்கள் உடுத்தியிருக்கும் இந்த உடைகளைத்தவிர வேறேயொன்றும் எங்கள் வசம் இல்லை. அப்படி நாங்கள் ஒன்றையும் நாளைக்கென்று வைத்துக்கொள்ளவு மாட்டோம் என்று சொன்னார்கள். இச்சொல்லைக்கேட்ட திருடர்கள் பின்னும் ஆண்டவரவர்களை நோக்கி அப்படியா? ஆனால், அந்த உடைகளையாவது களைந்து கீழே வைத்துவிடுங்கள் என்று சொன்னார்கள். ஆண்டவரவர்கள் மறுத்தும் அந்த திருடர்களைப்பார்த்து: உடுத்தியிருக்கும் உடையைக் களைந்தால் மருமஸ்தானம் வெளிப்படும். பிறர் காணும்படி மருமஸ்தானத்தை வெளிப்படுத்துவது ஹறாமாயிருக்கும். அவ்வித ஹறாமான காரியத்தை நாங்கள் செய்யமாட்டோம் என்று சொன்னார்கள். இச்சொல்லைக்கேட்ட திருடர்கள் சினங்கொண்டு, கைகளிலிருக்கும் வாட்களை யோங்கிஹல



றத்து ஆண்டவரவர்களை வெட்டினார்கள். அந்த வெட்டுகள் அனைத்தும் ஆகாயத்தில் ஊடுருவுவது போலப் போயினவல்லாமல், ஆண்டவரவர்கள் திருமேனியிற் படவேயில்லை. அன்றியும், ஒவ்வொருவன் வெட்டின ஒவ்வொரு வெட்டும் அவனவன் சரீரத்திலேயேபட்டு, எந்தெந்த உறுப்பைப்பார்த்து வெட்டினானோ அந்தந்த உறுப்புகள் வெட்டுண்டு, ஒவ்வொருவனாக நான்கு திருடர்களும் தரையில் முகங்கவிழ விழுந்தார்கள்.

இந்த நான்கு திருடர்களையும் முந்தி ஏவியனுப்பிவிட்டு, அடவியிற் பதுங்கிநின்று பார்த்துக் கொண்டிருக்கும் மற்றத் திருடர்களின் கண்களுக்கு, இந்த நால்வரையும் ஹலறத்து ஆண்டவரவர்களே வெட்டி விழுத்தாட்டினது போலத் தோன்றிற்று. அதனால் அவர்களுக்கு அதிக சினம் மீறி, உடனே அடவியிலிருந்து பெருங் கூட்டமாய் ஓடிவந்து, ஆண்டவரவர்களை நெருங்கிநின்று பலதரம் வாட்களை ஓங்கி யோங்கி வெட்டினார்கள். அந்த வெட்டுகளும் ஒன்றாவது ஆண்டவரவர்களின் திவ்விய சரீரத்திற் படாமல் அவர்கள் மேலேயேபட்டு, காலறுந்தும், கையறுந்தும், தோளறுந்தும், தொடையறுந்தும், பலவாறு சின்னாபின்னப்பட்டுத் தரையில் விழுந்தார்கள். எல்லாரும் குறைப்பிராணியாய் ரத்தம் சிந்திக் காயத்தோடு விழுந்தார்களன்றி, ஒருவராவது மாளவில்லை.

திருடர்களனைவரும் உதிரம்பெருகப் படுகாயப்பட்டு விழுந்தபோது, அங்கே அழுகுரலும் அமளியும் உண்டாயின. காடதிரக் கதறும் அந்தத் திருடர்களின் கூக்குரல் வெகுதூரம் எட்டிற்று. அந்த அடவியில் ஒரு புறத்தில் குடிசைகள் கட்டிக் குடியிருக்கும் அந்தத் திருடர்களின் இனத்தாராகிய திருடர்களின் செவிகளில், இந்த அமளியான சத்தம் விழுந்தவுடன், அங்குள்ள ஆண்பெண் அனைவரும் திடுக்கிட்டுப் பதறியெழுந்து ஓடிவந்து, தங்கள்

சாதியார் அனைவரும் குற்றுயிராய் விழுந்து கிடப்பதைப் பார்த்து, அருகில் நிற்கும் ஆண்டவரவர்களை விசாரித்தார்கள். அப்போது ஆண்டவரவர்களின் மகத்துவமே இப்படியாக்கிற்று என்று அவர்களுக்கு நன்றாகத் தெரிந்தது. உடனே அவர்கள் எல்லாரும் அஞ்சி, ஆண்டவரவர்களின் இரண்டு பாத கமலங்களிலும் சாஷ்டாங்கமாய் விழுந்து, தங்கள் இனத்தார் செய்த பிழையைப் பொறுக்கும்படி மன்றாடினார்கள். அன்றியும், அவர்கள் இனி ஒருகாலும் இவ்வித வழிப்பறித் தொழில் செய்கிறதில்லையென்றும் ஆண்டவரவர்கள் சமூகத்தில் வார்த்தைப்பாடு செய்தார்கள். பிறகு, அவர்கள் ஆண்டவரவர்களை நோக்கி, எஜமானவர்களே, தங்கள் மகத்துவத்தை இன்னதென்று அறியாத மதிகேட்டினால் வெட்டுண்டு கிடக்கும் இவர்களைத் தாங்கள் மனதிரங்கிச் சுகப்படுத்தியருளவேண்டும் என்று இரந்து கெஞ்சினார்கள்.

துன்பஞ் செய்வாருக்கு இன்பமேசெய்யும் கருணைக் கடலாகிய ஹலறத்து ஆண்டவரவர்கள், சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுப்பது உத்தமமான காரியம் என்பதை உலகத்தாருக்கு மெய்ப்பித்தாற்போல அவர்கள் மீது மனதிரங்கி, அறுப்புண்டு கிடக்கும் உறுப்புகள் அனைத்தையும் ஒவ்வொன்றாகப் பொருத்தி, அவைகள்மேல் தங்கள் திருவாய் உமிழ்நீரை யுமிழ்ந்து அல்லாகுத்த ஆலா இடம் இருகரங்களையும் ஏந்தி: இவர்களுக்குச் சுகம் புரிவாயாக வென்று துஆ செய்தார்கள். உடனே அவர்கள் எல்லாரும் அவயவங்கள் பொருந்தி, வெட்டின தழும்புமில்லாமல் பண்டுபோல எழுந்து நின்றார்கள். அப்போது அத்திருடர்கள் எல்லாருக்கும் உண்டான ஆச்சரியமும், சந்தோஷமும் கொஞ்சமல்ல. பின் இனி வழிபறிக்கிறதில்லையென்று இவர்களும் வார்த்தைப்பாடு கொடுத்தார்கள்.



பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த எல்லாத் திருடர்களையும் பார்த்து: நீங்கள் இவ்வித வழிகேடான குபுர் மார்க்கத்தில் இருப்பது சரியன்று. தீனுல்லிஸ்லாமென்கிற பரிசுத்த மார்க்கத்தையே பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் நல்லபலன் கிடைக்கும் என்று பல அறிவுகளையும் போதித்தார்கள். இந்தப் போதனைப்பிரபை அவர்கள் இருதயங்களிற் புகுந்து அஞ்ஞானவிருளை அறப்போக்கிவிட்டு, மெய்ஞ்ஞானச்சுடரை யெழுப்பி வேரூன்றிப் பதிந்தது. உடனே அவர்கள் ஆண்பெண் அனைவரும் வழிபட்டு, ஆண்டவரவர்களின் கையைப்பிடித்துக் கலிமா சொல்லி, இஸ்லாமி லானார்கள்.

திருடர்களனைவரும் முஸ்லிமானபோது, ஆண்டவரவர்கள் அவர்கள் கூடவே அவர்கள் குடியிருக்கும் சிறுபாடியிற் போய் நாற்பதுநாள் வரையு மிருந்து, மார்க்க சம்பந்தமான அறிவுகளை அவர்களுக்குக் கற்பித்துக் கொடுத்துவிட்டு, பின் அவர்களுக்காக அல்லாகுத்த ஆலா இடம் துஆ செய்து அங்கிருந்து புறபட்டு, மூசனுத்தீனுடன் குவாலீரை நோக்கி நடந்தார்கள். அங்குள்ள திருடர்கள் ஆண்டவர்களின் துஆப்பறக்கத்தினால் நேர்வழி பெற்று, ஸாலிகான பெரியோர்களாய் விட்டார்கள்.

திருடர்கள் வழிபட்டது முற்றிற்று.

௧௫-ம் அத்தியாயம்.

## ஒலிக்குக் கொம்பு முளைத்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஆச்சரியகரமாக நதிகடந்ததும் நஜ்முத்தீனொலிக்குக் கொம்பு முளைத்ததும், அதனை மாற்றினதுமான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து காதிறேலி கன்ஜஸவாய் கன்ஜபக்ஷ் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் நைமுமுஈனுத்தீனுடன் முவாலீரை நோக்கி மலை, நதி, வனம், வனாந்திரங்களை யெல்லாங்கடந்து நடந்து போகிறபோது, வழியில் பஸ்தாம் என்னும் பட்டணம் எதிர்ப்பட்டது. அந்தப் பட்டணத்தின் வெளிப்புறத்தில் ஒரு அகன்ற நதி ஓடுகின்றது. அந்த நதிக்கரையில் ஆண்டவரவர்கள் போனவுடன் சூரியன் அஸ்தமித்தது.

பொழுதுபட்டபோது, நோன்பு திறந்து பசியாறுவதற்கான யாதொரு உணவும் அவர்களிடம் இல்லை. முன்னிருளாயிருந்தபடியால், பக்கத்திற்போய் உணவுதேடவுங் கூடவில்லை. அதனால், ஆண்டவரவர்கள் கைகளை யேந்தி அல்லாகுத்த ஆலா இடம் துஆ செய்தார்கள். உடனே ஆகாயத்திலிருந்து இரண்டு ரொட்டிகளும், இரண்டு கரகத்தில் தண்ணீரும் இறங்கின. அவற்றில் ஒரு ரொட்டியையும், ஒரு கரகத்தண்ணீரையும் எடுத்து முஈனுத்தீன் கையிற்கொடுத்து : இதை நீர்தின்று பசியாறும் என்று சொல்லிவிட்டு, மற்றொரு ரொட்டியைத் தாங்கள் நோன்பு திறந்து தின்று பசியாறினார்கள். இருவரும் பசியாறின பின், ஆண்டவரவர்கள் அந்த ஆற்றங்கரையிலுள்ள ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து, அல்லாகுத்த ஆலாவின் தொழுகையில் பராக்காயிருந்து விட்டார்கள்.

ஆண்டவரவர்கள் அன்று இராமுழுவதையும் இபாதத்தாகிய வணக்கத்திலேயே போக்கிக்கொண் டிருந்தார்கள். பின்பு பஜ்றுநேரமாயிற்று. கிழக்கு வெளுத்தபோது ஆண்டவரவர்கள் பஜ்று தொழுதுவிட்டு, எழுந்து ஆற்றைப் பார்த்தார்கள்; மிகவும் ஆழ்ந்து அகன்ற அந்தநதி அன்று காலையில் பிரவாகித்து, அதிக வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. ஏறிக்கடப்பதற்குப் பாலமாவது, ஒரு வள்ளமாவது அங்கில்லை. ஆண்டவரவர்கள் அதையறிந்து, பக்கத்தில் நிற்கும் ஆலவிருக்ஷத்தின் இலையொன்றைப் பறித்துச் சில அஸ்மாக்களை ஓதி அதில் ஊதி, அதை ஆற்றில் எறிந்தார்கள். உடனே அவ்விலை ஒருவள்ளமாய்த் தரிபட்டு நின்றது.

ஆலிலை வள்ளமானபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் முஈனுத்தீனை யழைத்துக்கொண்டு அந்தவள்ளத்தில் ஏறி உட்கார்ந்தார்கள். ஏறி யுட்கார்ந்தவுடன் அந்த வள்ளம் அக்கரைநோக்கி ஓடத் தொடங்கிற்று. ஆலிலையே ஆளேறிப்போகத்தக்கதாகி, பாய்விரிக்கப்படாமலும் தண்டு வலிக்கப் படாமலும் தானாகத் திரும்பி அக்கரை பிடித்து ஓடத் தொடங்கி, அம்பெறிந்தாற்போல ஆச்சரியமாக விரைந்து ஓடிற்று. அவ்வித விசையாய் ஓடும் வள்ளம் நட்டாற்றிற் போனவுடன், பிரவாகித்து ஓடும் அந்நதி திடீரென்று கொந்தளித்தது. காற்று மும்முரத்தினால் கொந்தளிப்புக்கொண்ட அலைக்கிளர்ச்சியில் ஆண்டவரவர்கள் ஏறியிருக்கும் வள்ளம் அகப்பட்டுச் சுழன்றது, சுற்றிலும் அலைகள் எழுந்து மோதுவதாலும், காற்று விசைத்து அடிப்பதாலும், வள்ளம் புரண்டு கவிழுந் தருணமாயிற்று. இதைக்கண்ட ஆண்டவரவர்கள், திடுகூறாய் நேரிட்ட ஆபத்தை நீக்குவதற்காகத் தங்கள் இரு கரங்களையும் ஏந்தி, அல்லாகுத்த ஆலா இடம் துஆ இரந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் துஆ இரந்தபோதே காற்றுவேகம் தணிந்து, கொந்தளிப்பு அடங்கி, அலைக் கிளர்ச்சி ஒடுங்கி, நதி சாந்தமாயிற்று. அதனால், வள்ளம் நேராய் முன்போல அக்கரை நோக்கிச் சீராய் ஓடிற்று. நீரோட்டத்தின் குறுக்காய், வலிதன்றி, பாய்களில்லாமல் போகிற காரணவள்ளம் விக்கினமின்றி யோடிக் கரை சேர்ந்தபோது, ஆண்டவ ரவர்கள் முஈனுத்தீனுடன் கரையில் இறங்கினார்கள். உடனே வள்ளம் பழைய ஆலிலையாய்மாறி, ஆற்றில் மிதந்து போயிற்று.

கரையில் இறங்கின ஆண்டவரவர்கள் லுஹறுவேளையடுத்தபடியால் உலு செய்துகொண்டு, ஒருபக்கத்திலிருந்து தொழுதுவிட்டு, ஒளிபா ஓதிக்கொண்டு முஸல்லாவிலேயே உட்கார்ந்திருந்தார்கள். முஈனுத்தீனும் பக்கத்திலிருந்து ஓதிக்கொண்டிருந்தார். இருவரும் ஓதுவதில் பராக்காயிருந்தார்கள். இவ்விதம் ஓதிக்கொண்டு உட்கார்ந்திருக்கும்போது, முஸ்லிமான ஒருகூட்டத்தார் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து கைகட்டிப்பணிந்து நின்று, ஸலாம் சொல்லி, இதன்கீழ் வருமாறு சொல்லத் தொடங்கினார்கள் :—

எஜமானவர்களே, இந்த பஸ்தாம் என்னும் பட்டணத்தில் சைகு நஜ்முத்தீன் என்று ஒரு பெரியவர் இருக்கின்றார். அவர் அல்லாஹுத்தஆலாவுக்கு முகுருபானுள்ள ஒரு ஒலி. அவருக்குக் கறாமாத்துகள் அதிகமுண்டு. அடுத்தடுத்து அவருக்கு ஜதுபுவருகிறது வழக்கம். அதற்காக அவர் பட்டணத்தில் குடியிருக்கிறதில்லை. இந்த ஆற்றங்கரையில் ஒரு மாளிகைகட்டி, அதிலிருந்து வணங்கிக் கொண்டிருக்கின்றார். இன்றைத்தினம் அவர் தமது மாளிகையின் மேன்மாடத்து ஜன்னலைத் திறந்து அதில் தலையையிட்டுக்கொண்டு, ஆற்றின் பிரவாகத்தைப் பார்த்துக்



கொண்டிருந்தார். இருக்கையில், திடீரென்று அவர் தலையில் இருபுறமும் இரண்டு கொம்புகள் முளைத்துக் கிளையிட்டுப் படர்ந்துகொண்டன. அதனால், தலையை உள்ளுக் கிழுக்கக்கூடாமல் மிகவும் வருத்தப்படுகின்றார். அவரைக் காண்கிறதற்காகப் பட்டணத்திலுள்ள பெரியமனிதர்கள் அனைவரும் வந்து கூடி, அவருக்கு நேரிட்ட வில்லங்கத்தைப் பற்றி அதிசயப்பட்டுக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்த ஒலி வந்தஜனங்களைப்பார்த்து "என் நேசர்களே, எனக்கு நேரிட்டிருக்கும் இந்தச் சோதனையான வில்லங்கத்தைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் புலப்படாது. இது வந்தவழியையும், விவரத்தையும் நான் அறிவேன். இதை நிவர்த்தித்துக்கொள்ளும் விதம் எனக்குத் தெரியும். இந்த வில்லங்கத்தைத் தீர்க்கும்படி நான் அல்லாஹுத்தஆலாவிடம் மன்றாடினேன். அதற்கு அவன்: நஜ்முத்தீனே, உமது பிழை பொறுக்கப்பட்டது. ஆனாலும், நீர் யாருக்கு இந்தப்பிழையைச் செய்தீரோ அவர், ஸையிது அப்துல் காதிறு, அவரிடம் மன்னிப்புக் கேட்பதில் நீர் பிரயாசை யெடுத்துக்கொள்வீராக என்று கட்டளை பண்ணினான். அந்த ஸையிது அப்துல்காதிறு என்பவர் இப்போது இந்த ஆற்றங்கரையில் இன்ன இடத்தில் தொழுதுவிட்டு, ஓதிக்கொண்டிருக்கின்றார். நீங்கள் அவரிடம் போய், என்ஸலாம் சொல்லி என் நிலைபரத்தை அறிவித்தால், அவர் மனதிரங்கி என் அருகில்வந்து, என்னைப் பார்த்து துஆ செய்வார். அப்போது இந்த ஆபத்து என்னைவிட்டு நீங்கிப்போம்" என்று சொல்லி, எங்களைத் தங்கள் சமுகத்திற்கு அனுப்பி, தங்களை அழைத்துவரச் சொன்னார் என்றார்கள்.

இதைக் கேட்டவுடன் ஹலறத்து ஆண்டவரவர்கள், ஆ! அப்படியா!! என்று ஹௌக்கலா சொல்லி விரைந்து எழுந்து, அவர்களோடு நஜ்முத்தீனொலியுடைய மாளிகைக்

குப் போனார்கள். அங்கே ஊரிலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் கூடியிருந்தார்கள். ஒலிகணாயகமான ஆண்டவரவர்கள் மாளிகையிற் போய், நஜ்முத்தீனொலி தலையில் கொம்புமுளைத்து ஜன்னலில் மாட்டிக்கொண்டு பாடுபடுவதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, அவரைநோக்கி: ஐயகோ, இதென்னகாரியம் என்று கேட்டார்கள். அப்போது அவர் ஆண்டவரவர்களை நோக்கி "என் சகோதரரே, நீர் வெள்ளத்தில் ஏறிக்கொண்டு நட்டாற்றில் வரும்போது, உம்மைப் பார்த்து நான் சோதிக்கவேண்டுமென்று நதியைக் கொந்தளிக்கப்பண்ணி, வெள்ளத்தைப் புரண்டுபோகச் செய்தேன். அப்போது நீர்செய்த பதுஆ வினால் என்தலையில் இந்தக் கொம்புகள் முளைத்தன. அதனால், தலையையெடுக்க வராமல் வருத்தப்பட்டு, இந்த வில்லங்கந் தீர வேண்டுமென்று அல்லாஹுத்த ஆலா இடம் இரந்துகேட்டேன். அதற்கு அவன்: இந்த வில்லங்கம் உம்மிடம் மன்னிப்புக் கேட்பதைக் கொண்டு தான் நீங்கவேண்டு மென்று கட்டளைபண்ணினான். ஆகையால், ஸையிது அப்துல் காதிரே நீர் அல்லாஹுத்த ஆலாவுக்காகவேண்டி நான் செய்த பிழையை மன்னித்து, இந்த வில்லங்கத்தை நீக்கி என்னை ரக்ஷிப்பீராக" என்று சொல்லி, மிகவும் பிரார்த்தித்தார்.

அவர் பரிந்து கூறி வேண்டிக்கொண்டபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் சித்தமிரங்கி, தங்கள் வலதுகையைத் தூக்கி ஸைகு நஜ்முத்தீனொலி யுடைய தலையில்முளைத்திருக்கும் இரண்டு கொம்புகளுக்கும் இடையில் வைத்தார்கள். உடனே அந்தக் கொம்புகள் இரண்டும் சுருங்கிக் காணாமற்போயின. அவர் ஜன்னலுக்குள் மாட்டியிருந்த தலையையிழுத்துக் கொண்டு உடனேயெழுந்து ஆண்டவரவர்களைக் கட்டித் தழுவி அதிக மரியாதைபண்ணி, ஒரு பீடத்தின்மேல் உட்காரும்படி வேண்டிக்கொண்டார். ஆண்டவரவர்கள் அந்தப் பீடத்தில் உட்கார்ந்தார்கள்.



வில்லங்கந்தீர்ந்த ஸைகு நஜ்முத்தீனொலி தமது மாளிகையில்வந்து கூடியிருக்கும் ஜனங்களைப்பார்த்து "என் நேசர்களே, நீங்கள் எல்லாரும் எழுந்துநின்று இவருக்கு மரியாதை பண்ணுங்கள். இவர், அல்லாஹுத்த ஆலாவுக்கு மிகவும் முடுகினவர். இனிமேல் குத்புகளுக்கெல்லாம் குத்பாவார்; மனிதர்களையும், ஜின்களையும் ரக்ஷிக்கும் கௌதாவார்; அவ்விரு கூட்டத்திற்கும் நேர்வழி காட்டுவார். இவருடைய கருமாத்துகள் இனி கியாமத்துண்டாகும் வரையும் நிலைபெறும். இவருடைய சீவிய காலத்தில் இவரை நாடினஜனங்களை இவர் ரக்ஷிப்பதுபோல, மரணத்தின் பின்னும் ரக்ஷிப்பார். இவரைப் பின்பற்றின மனிதர்களும், ஜின்களும் இவருடைய அடைக்கலத்தில் அச்சமற்றிருப்பார்கள். இவருடைய மகிமை என்னால் சொல்லுந் தரமுடைய தன்று" என்று சொல்லிக் காட்டினார். இதைக்கேட்ட அந்த ஜனங்களெல்லாரும் எழுந்து நின்று ஹலறத்து ஆண்டவரவர்களுக்குத் தாழ்ந்து, மரியாதை பண்ணினார்கள்.

பிறகு ஹலறத்து ஆண்டவரவர்கள் ஸைகு நஜ்முத்தீன் முதலானவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, முஈனுத்தீனுடன் பஸ்தாம் என்னும் பட்டணத்திற்குள் புகுந்தார்கள்.

ஒலிக்குக் கொம்பு முளைத்தது முற்றிற்று.

௧௬-ம் அத்தியாயம்

# கபீதை விலக்கியது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பஸ்தாம் பட்டணத்தில் ஒரு பெண்ணைப் பிடித்திருந்த கபீதை விலக்கின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாதுஷாநாயகம் ஆண்டவரவர்கள் பஸ்தாம் என்னும் பட்டணத்துட்புகுந்து, அங்குள்ள ஒருபள்ளியிற்போய்த் தங்கியிருந்தார்கள். அந்த வூரில் மலிக்குந்துஜ்ஜாரி என்று ஒருவரிருந்தார். ஒரு நாள் அவர் ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து ஸலாம் சொல்லிப் பணிந்துநின்று: எஜமானவர்களே, என் மனைவியை மகா கொடுமையான ஒரு கபீது பிடித்து ஐந்துவருஷமாக மிகவும் வாதிக்கின்றது. அதனால் அவள்படும் துன்பம் கொஞ்சமல்ல. எவ்விதப் பரிகாரங்கள்செய்தும் அது விலகவில்லை. இராப்பகலாக அவள் அநுபவிக்கும் தாங்கரியவேதனையால், நானும் என் குடும்பமும் பரிதபித்து வருந்துகிறோம். எங்களுக்கு நல்லூண், நல்லுறக்கம் இல்லை. அவள் சரீரமெங்கும் எரிவும், குத்தலும், இசிவும், அலறுதலும், புலம்புதலும் ஒய்வொழிவில்லாம லிருக்கின்றன. அதற்காகப் பக்குவம் பண்ணப் பண்ண இவை அதிகரிக்கின்றனவன்றி, இருந்தபடியு மிருக்கவில்லை. பார்ப்பவர் கேட்பவர் அனைவரும் பரிதாபப்படத்தக்க வேதனையாயிருக்கின்றது என்று முறைப்பாடுசெய்து அழுதார்,

மலிக்குந்துஜ்ஜாரி என்பவர் இவ்வாறு சொல்லி அழுத போது, அதைக்கேட்ட ஆண்டவரவர்கள் அவரைப் பார்த்து மலிக்குத்துஜ்ஜாரியே, நீர்போய் உமது மனைவியருகில் நின்று கொண்டு "ஹபீத்து என்னும் கபீதே, இப்போதே நீ இவளைவிட்டு புறப்படு; உன் இருப்பிடம் போய்ச் சேர். எளிதாய்ப் போய்விடுவதே உத்தமம். இல்லாவிட்டால், துன்புறுத்தி வெருட்டப் படுவாய். ஆதலால், நீ தானே வெளியப்போய்விடு. போனபின்னும், இனி யாரையும் பிடித்து வருத்தாதே" என்று சையிது அப்துல்காதிறு என்பவர் சொன்னாரென்று அவளுடைய காதில் இரகசியமாகச் சொல்லும் என்று சொல்லி அவரை வீட்டுக்கு அநுப்பினார்கள்.

இதைக் கேட்ட மலிக்குத்துஜ்ஜாரி சந்தோஷமாய்த் தமது மனைக்குவந்து, மனைவி யருகிற்போய் நின்று, ஹலறத்து ஆண்டவரவர்கள் சொல்லிக் கொடுத்தபடி அவள் காதில் இரகசியமாகச் சொன்னார். ஒரு போதும் உருக் கொள்ளாத அந்த கபீது இச்சொல்லைக்கேட்டவுடன் உருக் கொண்டு, அவரை விளித்துக் கீழ்வருமாறு பயங்கரமாகச் சொல்லுகின்றது :—

"ஏ, மலிக்குத்துஜ்ஜாரியே, நீ என்னை ஹபீத்து என்கிற கபீதென்று அறிந்து கொண்டாயா? ஆம்; நான் ஹபீத்துதான். உன் மனைவியை நான் அநியாயமாகப் பிடித்துக்கொள்ளவில்லை. சொல்லக்கேள் : இவளுடைய பாட்டன் அமீரென்பவன் முந்தி என் ஆஸ்திகளைப் பலவந்தமாக அபகரித்துக் கொண்டு, என்னையும் கொன்று விட்டான். ஆனதால், நான் கபீதாய் அவன் மீது சாட்டப்பட்டேன். அன்று முதல் நான் அவனைப்பிடித்திருந்து, அவனைக் கொன்றேன். பின் அவன் சந்ததிகளைத் தொடர்ந்து, ஒவ்வொருவராகப் பிடித்துக் கொன்றுவருகின்றேன். அது போலவே அவனுடைய பௌத்திரியாகிய இவளையும் பிடித்துக்கொண்டேன். இன்னும் சொற்பகாலத்திற்குள் இவளையும் கொன்றுவிடுவேன். ஆனால், இன்றுமுதல் நான் இவளிடம் இருக்கவும், இவளை வாதிக்கவும், கொல்லவும் இடம்பாடில்லை. இன்றைக்கே நான் புறப்பட்டுப் போகும்படி எனக்குக் கட்டளைபிறந்து விட்டது. இதோ நான் என் இருப்பிடம் போகின்றேன். இவள் நிமித்தம் இனியாரையும் நான் பிடிக்கிற தில்லையென்று சத்தியமுஞ் செய்கிறேன்."

என்று இவ்வாறு சொல்லிவிட்டு, உடனே அந்தகபீது அவளைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டது. அப்போதே அவளுக்குள்ள எவ்விதத் தீங்கும் தொலைந்து, நல்ல சுகத்தைப் பெற்றாள். அவள் சரீரத்திலுள்ள நோய்களும், குணமாறுதலும் நீங்கி, பண்டுபோலானாள். அன்றுமுதல் அவளுக்கு யாதொரு தீங்கும் உண்டாகவில்லை. தானிருந்த நிலைமைகூட அவளறியாதவளாயிருந்தாள். இதைக்கண்ட அவள் கணவராகிய மலிக்குத்துஜ்ஜாரியும், குடும்பத்தார்களும், ஆச்சரியமாய்ச் சந்தோஷப்பட்டு ஹலறத்து ஆண்டவரவர்களைத் துதித்து, அல்லாகுத்தஆலாவுக்கு சுக்று செய்தார்கள்.

கபீதை விலக்கியது முற்றிற்று.

---

௩௩-ம் அத்தியாயம்.

## குவாலீர் சேர்ந்தது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் குவாலீர் என்னும் நகரம்போய்ச் சேர்ந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாதுஷாசாகிபு ஆண்டவரவர்கள் சொற்பநாள் அந்த பஸ்தாம் பட்டணத்திலிருந்து, பிறகு முஃறுத்தீனையும் அழைத்துக் கொண்டு அந்தப்பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, குவாலீரை நோக்கி நடந்தார்கள். வழியில் எதிர்ப்படும் உன்னதமான மலைகளையும், அகன்ற நதிகளையும், அடர்ந்த வனங்களையும், நிர்மானுஷியமான வனாந்தரங்களையும் கடந்து நடந்து, மகாமகிமையும் சிறப்புந் தங்கிய * குவாலீர் என்னும் நகரம்போய்ச் சேர்ந்தார்கள்.

அந்தக்குவாலீருக்கு வெளிப்புறத்தில் மனிதர் பழக்கமற்றுப் பாழடைந்த ஒரு பள்ளியிருந்தது. ஆண்டவரவர்

* இவ்வூர் வட இந்தியாவில் சிந்தியாநாட்டுப் பிரதான நகரம். இதை இந்துக்கள் காலியூர் என்கிறார்கள்.



கள் அந்தப் பள்ளியிற்போய்த் தங்கியிருக்க நாட்டங்கொண்டு, அங்கேபோய்ச்சேர்ந்த அன்றைத்தினமே தங்களுடன் கூட வந்த முஃறுத்தீனைப்பார்த்து முஃறுத்தீனே, நான் என் பிதா மாதாக்களுடைய கட்டளைப்படி குவாலீரில் வந்து சேர்ந்துவிட்டேன். ஆனால், இனி, என் சற்குரு இன்னாரென்று அல்லாகுத்தஆலா எனக்குத் தெரிவிக்கும் வரையும் நான் உண்கிறதில்லை; உறங்குகிறதில்லை; இந்தப்பள்ளியை விட்டு வெளிப்படுகிறது மில்லையென்று பிரதிக்கினை செய்துகொண்டேன். இதை நீர் அறிவீராக என்று சொன்னார்கள். இதைக்கேட்ட முஃறுத்தீன்: எஜமானவர்களே, எனக்கென்ன புத்தி சொல்லுகிறீர்கள்? என்று கேட்டார். அப்போது ஆண்டவரவர்கள் பின்வருமாறு அவருக்கு அறிவு சொல்லத் தொடங்கினார்கள்.

"முஃறுத்தீனே, நீர் பிரதானமாய் அல்லாகுத்தஆலாவைப்பயந்து நடந்து கொள்வீராக. அவனை வணங்கும் வணக்கத்தை ஒருபோதும் மறந்திடாதீர். துன்யாவுடைய இச்சையில் மருண்டு, ஆகிறத்தை எண்ணிப்பாராமல் இருக்காதீர். அல்லாகுத்தஆலா சொன்னபடியும், நபிகணா யகம் முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் சொன்னபடியும் விதியைத் தொடர்ந்து, விலக்கைத் தவிர்ந்து ஒழுகி நடப்பீராக. அதிகநேரம் உறங்காதீர். உண்கிற பதார்த்தங்களை வயிறு நிறைய உண்ணாதீர். உபவாசமாயிருப்பதைத் தொடர்ச்சியாக்கிக் கொள்வீராக. ஒரு சற்குருவைத்தேடிப் பெற்றுக் கொண்டபின், வைராக்கியத்துடைய விரிப்பில் ஒழுக்கந் தவறினவராயிராதீர். கல்விமான்களையும், பெரியோர்களையும் அடுத்துக் கற்றுக்கொள்ளுங் கருமத்தில் அவர்களுக்குப் பொருந்தும்படி நடப்பீராக. அல்லாகுத்தஆலாவுக்கு வழிப்பட்டு நடப்பதில் பிசகாதீர். ஒருவன் அவனுக்கு வழிபட்டால், படைப்புகள் அனைத்தும் இவனுக்கு வழிபடும். உமது

நபுஸை வசப்படுத்துவதில் பிரயாசைப் படுவீராக, நபுஸ் வழிபட்டுவிட்டால், எல்லாம் உமக்கு வசப்படும். அல்லாகுத்தஆலா உமக்கு நேர்வழி காட்டுவானாக.''

என்றும், இன்னும்பல அறிவுரைகளையும் போதித்தார்கள். முஈனுத்தீன் இந்த நல்லறிவுரைகளைக் கேட்டுக்கொண்டு, ஹலறத்து ஆண்டவரவர்களிடம் உத்தரவுபெற்றுக் குவாலீருக்குள் போய்விட்டார். ஆண்டவரவர்கள் மாத்திரம் தன்னந்தனியே அந்தப்பாழும் பள்ளிக்குள் * புகுந்து, முன்சொன்ன பிரதிக்கினைப்படி அல்லாகுத்தஆலாவில் பராக்காய், வேறே யாதொரு ஊசாட்டமும் மனதில் இல்லாமல் வணக்கத்திலேயே யிருந்துவிட்டார்கள்.

அந்தக்காலத்தில் குவாலீரில் ஔலியாக்களும், மஷாயிகுமார்களும், கல்விச்சாலைகள் வைத்துக் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களும், மனிதர்களுக்குள் நேர்வழிகாட்டும் பெரியோர்களும் அதிகம்பேர் குடியிருக்கின்றார்கள். இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் நாயகமாயும், குத்பாயும், மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் நேர்வழிகாட்டும் சற்குருவாயும், அநந்த அற்புதங்களைச்செய்யும் அதிபராயும், சைகுல்இஸ்லாம் ஹலறத்து சையிது முகம்மது கோது சுத்தாறிறலியல்லாகு அன்கு ஆண்டவரவர்களே வீற்றிருந்து, தங்கள் சமூகத்திற்கு வரப்பட்ட மனிதர்களுக்கும், ஜின்களுக்கும் சர்வஉதவிகளும் செய்வித்து, அவரவர்களுக்கு இல்முகளும் போதித்து, அல்லாகுத்தஆலாவுடைய விசாலில் சேரும்படி செய்துகொண்டு, அதிக பிரபலமாயிருக்கின்றார்கள்.

குவாலீர் சேர்ந்தது முற்றிற்று.

---

* ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தப்பள்ளிக்குள் புகுந்தது ஹிஜறத்துத் தொளாயிரத்து இருபத்தெட்டாம் வருஷம், றபீயுல்லாகிறு மாதம், பத்தாந்திகதியென்று குலாஸத்துல்கறாமாத்து என்னும் கிரந்தம் சொல்லுகின்றது.

## ௯-ம் அத்தியாயம்.

## சற்குரு வரலாறு.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் சற்குருவாகிய ஹலறத்து சையிது முகம்மது கோது றலியல்லாகு அன்கு ஆண்டவரவர்களின் வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாதுஷா சாகிபு ஆண்டவரவர்களின் உபதேசகுருவாகிய சைகுல்லிஸ்லாம் ஹலறத்து சையிது முகம்மதுகோது றலியல்லாகு அன்கு அவர்கள், ஹிஜறத்துத் தொளாயிரத்து ஆறாம் வருஷம், பெர்ஷியா தேசத்து குறாசான் பகுதியிலுள்ள நைசாப்பூரில் பிறந்தார்கள். அவர்கள் பிறந்தபோது, அவர்களுக்கு முகம்மது என்று பெயரிடப்பட்டது. அவர்கள் ஹலறத்து இமாம் ஹுஸைன் றலியல்லாகு அன்கு அவர்களின் வமிசத்திலுள்ள சையிது கதீறுத்தீனுடைய புத்திரர். அவர்களுக்கு ஷாஹபூல் என்று ஒரு தமையனாருண்டு.

ஹலறத்து சையிது முகம்மதுகோது சாகிபு ஆண்டவரவர்கள் எழுபிராயமா யிருக்கும்போது ஒரு நாள் பகல் தங்கள் மாளிகையின் மேல்மாடத்திலிருந்து லுகறு தொழுது ஸலாம் கொடுத்தார்கள்; அப்போது அந்த மாடத்தின் சுவர் படீரென்று வெடித்துப் பிளந்தது, உடனே அந்தப் பிளவிலிருந்து ஒரு பெரியவர் வெளிப்பட்டு, ஹலறத்தவர்களைப் பார்த்து: மகனே, உன் வாயைப்பிள என்று சொன்னார். இதைக் கேட்ட ஹலறத்தவர்கள் தங்கள் வாயைத் திறந்தார்கள். அந்தப் பெரியவர் ஹலறத்தவர்கள் வாயில் எழு தரம் துப்பினார். அதை அவர்கள் விழுங்கிவிட்டார்கள். பிறகு அவர் ஹலறத்தவர்களைப் பார்த்து: உன் தந்தை ஓதுகிற குர்ஆனை எடுத்துக்கொண்டுவா என்று சொன்னார். உடனே ஹலறத்தவர்கள் எழுந்துபோய், தங்கள்

தகப்பனர் ஓதுகிற குர்ஆனை எடுத்துக் கொண்டுபோய் அவர் முன் வைத்தார்கள்." அப்போது அவர் ஹலறத்தவர்களைப் பார்த்து: மகனே, குர்ஆனை அவிழ்த்து ஓது என்று ஏவினர். ஹலறத்தவர்கள் இச் சொல்லைக்கேட்டு, நாம் இன்னும் குர்ஆன் ஓதப்படிக்க வில்லையே. இப்போது எப்படி ஓதுகிறது! என்று மனதில் எண்ணிக் கொண்டு, குர்ஆனை அவிழ்த்து விரித்துப் பார்த்தார்கள். பார்த்த அந்த நேரத்தில் அட்சரங்கள் அனைத்தும் அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்து, ஓதவந்தது. உடனே அதைதொடங்கி ஓதினார்கள்.

ஹலறத்தவர்கள் காரிகளும் வெட்கும்படி குர்ஆனை ஓதும்போதே அதிலுள்ள அகப்பொருள், புறப்பொருளாகிய இருவகை அர்த்தங்களும் அவர்களுக்கு மிகத் தெளிவாய்ப் புலப்பட்டன. ஒவ்வொரு ஆயத்தின் இருவகைப் பொருள்களையும் ஹலறத்தவர்கள் விளக்கி, அப்பொருள்களை அந்தப் பெரியவருக்குச் சொல்லிக் காட்டினார்கள். அப்போது அந்தப் பெரியவர் ஆநந்தமடைந்து, கைகளையேந்தி, ஹலறத்தவர்களுக்காக துஆ செய்தார். அதற்கு ஹலறத்தவர்கள் ஆமீன் சொன்னார்கள். அதன் பிறகு ஹலறத்தவர்கள் அந்தப் பெரியவரைப் பார்த்து "என் பிதாவே, தாங்கள் யார்?" என்று கேட்டார்கள். இக் கேள்விக்கு அவர் "மகனே, நான் உன் பாட்டனாகிய ஐதுரூஸாகித்" என்று விடைகூறி விட்டு, வந்த சுவரின் பிளப்பிற் புகுந்து மறைந்தார். பிளந்த சுவர் முன்போலப் பொருந்திக் கொண்டது.

இமாம் ஐதுரூஸாகித் றலியல்லாகு அன்கு அவர்கள் தரிசனை காட்டிப் போனபின், அன்றைய தினமே ஹலறத்தவர்கள் மனம் கடல் போல் விரிந்தது. அன்று முதல் எந்த நூல்களையும் எடுத்து மனப்பாடமாக வாசிக்கவும், அவற்றி னுட்பொருள்களை விளங்கிப் பிறருக்குப் போதிக்கவும்; வேறு பல நூல்களைச் சுயமாக இயற்றவும் அவர்



களுக்குத் திறன் உண்டாயிற்று. பதினொன்கு இல்முகளும் அவர்கள் மனதிற் குடிகொண்டன. கல்விகளிற் சிறந்த மகா நிபுணராானார்கள்.

ஹலறத்தவர்கள் தங்கள் சிறுபிராயத்திலேயே அல்லாகுத்தஆலாவைத் தொழ எத்தனிக்குந் தோறும் வானத்திலிருந்து மலக்குகள் இறங்கி, உலு செய்வதற்காகத் தண்ணீர் கொணர்ந்து அவர்கள்முன் வைத்து: அல்லாகுத்தஆலாவுடைய ஒலியே, நீர் இந்தத் தண்ணீரைக் கொண்டு உலு செய்து தொழும் என்று சொல்லுவார்கள். ஹலறத்தவர்கள் அந்தத் தண்ணீரைக் கொண்டு உலு செய்து தொழுவார்கள். இதை அயலார் அறிந்து ஹலறத்தவர்களை நோக்கி "உமக்கு உலு செய்வதற்காக இந்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது?" என்று அடிக்கடி கேட்பார்கள். அதற்கு ஹலறத்தவர்கள் "எவனொருவன் அல்லாகுத்தஆலாவுக்கு வழிபட்டு நடந்தானோ, அவன் நாடிய வெல்லாம் உண்டாகும்" என்று அவர்களுக்கு பதில்சொல்லுவார்கள்.

ஹலறத்தவர்கள் பிராயம் அடைந்தபோது, ஒரு நாள் தங்கள் தந்தையாகிய சையிது கதீறுத்தீனவர்களின் சமுகத்திற் போய்ப் பணிந்து நின்று: என் பிதாவே, எனக்குக் குரு யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்று கேட்டார்கள். அதற்குத் தகப்பனர்: மகனே, உன் தமையன் ஷாஹுல்லூல் என்னைப் பிரிந்துபோய் ஒரு குருவைத் தேடிக்கொண்டதுபோல, நீயும் ஒரு குருவைத் தேடிக் கொள்வாயாக என்று கட்டளை பண்ணினார்கள்.

ஹலறத்தவர்கள் தங்கள் தகப்பனர் கட்டளை பண்ணின அன்றைத்தினமே குருவைத் தேடிக்கொண்டு, ஊரைவிட்டுப் புறப்பட்டார்கள். தங்கள் பிதா முதலானவர்களையும் ஊரையும் விட்டுப் பிரிந்து சற்குருவைத்தேடினவர்களாய், நேரே அறபிராச்சியஞ்சேர்ந்து, பரிசுத்த

நகரமாகிய மக்காவுக்குப் போய் ஹஜ்ஜு செய்து கொண்டு, பின் திவ்விய நகரமாகிய மதீனாவுக்குப்போய் நபி முஹம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களின் றோஜாஷரீபை ஜியாறத்துச் செய்துகொண்டு, அங்கிருந்து ஷாம் ராச்சியத்திற்குப்போய் பைத்துல் முகத்திஸ் முதலான பிரதான நகரங்களை யெல்லாந் தரிசித்துக்கொண்டு, மறுபடியும் குருவைத்தேடினவர்களாய்க் கிழக்கு ராச்சியத்திற்குத் திரும்பினார்கள்.

ஹலறத் தவர்கள் பல விராச்சியங்களையும் கடந்து இந்தி ராச்சியம்வந்து சேர்ந்து, குருவைத்தேடிப் பலவூர்களையுஞ் சுற்றித் திரிந்தார்கள். திரியும்போது, ஒரு தலத்தில், சுல்தானுல் முவஹ்ஹிதீன் ஸைகுஷுகூறு ஷாறீ துஸூறு றகுமதுல்லா அவர்களைத் தரிசித்தார்கள். அந்த ஹலறத்து ஸைகுஷுகூறு சாகிபவர்களை அவர்கள் சீஷர் கூட்டத்திடை ஹலறத்தவர்கள் கண்டவுடன், இவர்கள் நமக்குக் குருவாயிருப்பதை அல்லாகுத்த ஆலா பொருந்தியிருப்பாரு னால், நம் கருத்தையெல்லாம் இவர்கள் நம்மிடஞ் சொல்லி, நம்மைத் தங்கள் கூட்டத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மனதில் எண்ணிக்கொண்டு அவர்கள் சமுகத்திற்போய் நின்று ஸலாம்சொன்னார்கள். அப்போது ஸைகுஷுகூறு சாகிபவர்கள் ஹலறத்தவர்களைப் பார்த்துப் பிரதிஸலாம் சொல்லி முகம்மதே, நீர் குருவைத் தேடிக் கொண்டல்லவா திரிகிறீர்? நல்லது வாரும்; இந்தக் கூட் டத்திற் சேர்ந்திரும் என்று சொல்லி, தங்கள் சீஷர் கூட் டத்திற்சேர்த்துக் கொண்டார்கள். அப்படியே ஹலறத் தவர்கள் அந்தச் சீடர் கூட்டத்தில் சேர்ந்திருந்தார்கள்.

ஸைகுஷுகூறு சாகிபவர்கள் சில நாட்களுக்குப் பின் ஹலறத்தவர்களைப் பார்த்து முகம்மதே, நீர் என் குருவாகிய ஸைகு ஹிதாயத்துல்லா குபிஸர்மஸ்த் றகுமதுல்லா அவர்களிடம் போயிரும் என்று கட்டளைபண்ணி, அவர்க



ளிருக்கும் தானத்திற்கு அநுப்பினார்கள், ஹலறத்தவர்கள் ஸைகுஷுகூறு சாகிபவர்களை விட்டுப் புறப்பட்டு, ஸைகு ஹிதாயத்துல்லா சாகிபவர்களைத் தேடிக்கொண்டு, அவர்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது அவர்கள் ஹலறத்தவர்களைப் பார்த்து: முகம்மதே, நீர் ஸைகுஷுகூறிடத் திற்கே போவீராக என்று கட்டளை பண்ணினார்கள். அதைக்கேட்ட ஹலறத்தவர்கள் உடனே அங்கிருந்து திரும்பி ஸைகுஷுகூறிடம் வந்தார்கள். ஸைகுஷுகூறு சாகிபவர்கள் பின்னும் ஹலறத் தவர்களை ஸைகு ஹிதாயத்துல்லா சாகிபவர்களிடத்திற்கே திருப்பியனுப்பினார்கள். ஹலறத்தவர்கள் திரும்பி அங்கே போக, அவர்கள் மறுபடியும் ஸைகுஷுகூறு சாகிபவர்க ளிடத்திற்கே திருப்பி யனுப்பினார்கள்.

இவ்விதம் ஒருவருக் கொருவர் மாறிமாறி ஆறுதரம் ஹலறத் தவர்களைத் திருப்பினபின், ஏழாந்தரமாக ஸைகு ஹிதாயத்துல்லா சாகிபவர்க ளிடத்திற்கே ஸைகுஷுகூறு சாகி பவர்கள் திருப்பி விட்டார்கள். கடைசியாய் ஹலறத் தவர்கள் அங்கே வந்தபோது, ஸைகு ஹிதாயத்துல்லா சாகி பவர்கள் ஹலறத்தவர்களைப் பார்த்து மனதிரங்கி: முகம் மதே, வாரும், நீர் என் சீஷர் கூட்டத்திற் சேர்ந்திரும் என்று உத்தரவு செய்தார்கள். ஹலறத்தவர்கள் அந்த உத்தரவைப் பெற்றுக்கொண்டு மனமகிழ்ந்து, அந்தக் கூட்டத்திற் சேர்ந்திருந்தார்கள்.

ஹலறத்து ஸைகு ஹிதாயத்துல்லா குபிஸர் மஸ்த் சாகி பவர்களிடம் முரீது பெறுவதற்காக எண்ணிறந்த ஜனங்கள் அங்கே வந்து கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லாருக்கும் அங்கே உணவு முதலியன கொடுக்கப் படுகின்றன. உணவும் நாள் ஒன்றுக்கு ஒருதரந்தான் கொடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வுணவு சமைக்க ஒவ்வொரு நாளும் காட்டிற்போய் விறகு வெட்டிக்கொண்டு வரும்படி ஐம்பது

ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுள் ஹலறத்தவர்களும் ஒருவராகச் சேர்க்கப்பட்டு, அந்தப் பணிவிடையில் இருந்தார்கள்.

ஒரு நாள் வழக்கப்படி ஹலறத்தவர்களுள்பட ஐம்பது பேர்களும் விறகு தறிக்கக் காட்டிற்குப் போனார்கள். போய், விறகுதறித்துக்கொண்டிருக்கும்போது எல்லாரும் தாமதப்பட்டுவிட்டார்கள். ஹலறத்தவர்கள் மாத்திரம் தாமதிக்காமல் விரைவாக ஒரு கட்டு விறகை வெட்டித் தோளிற் சுமந்துகொண்டு, எல்லாருக்கு முந்தி வந்து விட்டார்கள். எல்லாரும் விறகு கொணரத் தாமதப் பட்டதால் சமையற்காரன் ஹலறத்தவர்கள் முந்திக் கொணர்ந்த விறகைக்கொண்டு சமைக்கத் தொடங்கினான்.

ஐம்பது பேர் கொணரும் அம்பாரமான ஐம்பது கட்டு விறகு முழுவதுங்கொண்டு அத்தனை ஜனங்களுக்கும் சமைக்கும் சோறு கறி முதலிய எல்லாம், ஹலறத்தவர்கள் கொணர்ந்த ஒரு சிறு கட்டிற் பாதி விறகைக்கொண்டு மற்ற விறகுகள் வருமுன் சமைக்கப்பட்டு, பாதி விறகு மிஞ்சியது. இது யாருக்கும் ஆச்சரியமாயிருந்தது. ஹலறத்தவர்களாலுண்டான இந்த அற்புதமான செய்தி சைகு ஹிதாயத்துல்லா சாகிபவர்கள் காதில்விழுந்தபோது, அவர்கள் தங்கள் ஏவலாட்களைப் பார்த்து அந்தப் பாலியர் கொணர்ந்த விறகு நிமித்தம் நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை உணவு சமைத்து எல்லாரும் உண்ணுங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். அவ்வாறே ஹலறத்தவர்கள் பொருட்டினால், ஒவ்வொரு தினமும் இவ்விரு வேளை எல்லாரும் உண்டுகளித்து, ஹலறத்தவர்களைப் போற்றி வாழ்த்தினார்கள்.

ஒரு நாள் சைகு ஹிதாயத்துல்லா சாகிபவர்கள் தங்கள் சிஷர்களைப் பார்த்து, ஹலறத்தவர்களைச் சுட்டிக்காட்டி. "இவர் இனி காமிலான சைகாகவும், மேன்மையான ஒலி-



யாகவும், சிருஷ்டிகளனைத்தையும் ரக்ஷிக்கும் கௌதாகவும், குத்பாகவும் நியமிக்கப் படுவார்" என்று வியந்து சொன்னார்கள். இதைக்கேட்டுச் சிலர் பொறாமை கொண்டார்கள்; பலர் சந்தோஷங் கொண்டார்கள்.

இது நடந்து சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் சைகு ஹிதாயந்துல்லா சாகிபவர்கள் ஹலறத்தவர்களை யழைத்து, முகம்மதே, நானொரு துறவி. நீர் என்னிடம் உபதேசம் பெறுவதைப் பார்க்கிலும், உம்மை இங்கனுப்பின ணைதுலுகூறிடம் பெறுவது சிலாக்கிய மென்று நினைக்கிறேன், ஆகையால், நீர் அங்கேயே போவீராக. அவர் இனி உம்மை முரீதாக்கி உபதேசஞ் செய்வார். அவருடைய தீக்ஷை கொண்டு நீர் நேர்வழி பெறுவீர் என்று சொல்லி: துஆ செய்து பழயபடி ணைதுலுகூறு சாகிபவர்களிடம் திருப்பி யனுப்பி விட்டார்கள். உடனே ஹலறத்தவர்கள் அந்த உத்தரவைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, ணைதுலுகூறு சாகிபவர்களை நாடி வந்தார்கள்.

ஹலறத்தவர்கள் முன்போலத் தன்னந் தனியாய் ணைதுலுகூறு சாகிபவர்களை நாடி வரும்போது, வெயிலினாலும், பசியினாலும், இளைத்து மெலிந்து, ஒரு மலைச்சாரலில் ஒதுங்கி மெள்ள மெள்ள நடந்து போனார்கள். அப்படிப் போகையில் "முகம்மது கௌதே" நீர் என்னிடம் முன்னோக்கி விரைந்து வாரும்" என்று ஒரு அழைப்புத் தொனி திடீரென்று ஹலறத்தவர்கள் காதிற் கேட்டது. இந்த அசரீரியான தொனி தங்கள் காதில் விழுந்தபோது, நமது பெயர் முகம்மது தானே. அந்தப் பெயருடன் கௌது என்று மற்றொரு பெயரையுஞ் சேர்த்து நம்மைக் கூப்பிட்டது யார்? இப்படிக் கூப்பிட்டவர் ஒருகால் இந்த மலைமேலிருக்கக் கூடும் என்று ஹலறத்தவர்கள் எண்ணி அந்த மலைமேலேறி அதன் உச்சியிற் போனார்கள். போய்ப்

பார்த்தபோது, அந்த மலைச் சிகரத்தில் விருத்தாப்பியமான பெரியவர் ஒருவர் கண்மூடி நிஷ்டையிலிருக்கக் கண்டு, அவரருகிற் போய் ஸலாம் சொல்லி, கை கட்டித் தாழ்மையாய் நின்றார்கள். சற்றும் அப்போது அந்தப் பெரியவர் கண்ணைத் திறந்து ஹலறத்தவர்களை ஏறிட்டுப் பார்த்து "முகம்மது கௌதே, உமது காதிற்கேட்டது அல்லாகுத்த ஆலாவுடைய கூப்பீடு சத்தம். அவன் உம்மைப் பொருத்திக் கொண்டான். அவன் கூப்பீடுவதற்கு நீர் பிரதி சொல்லும்" என்று சொன்னார். இதைக் கேட்டவுடனே ஹலறத்தவர்கள் அல்லாகுத்த ஆலாவுக்குத் தாழ்மையாய் ஸஜ்தில் விழுந்து, நெடு நேரம் தலையை உயர்த்தாமற் கிடந்தார்கள். அப்போது "முகம்மது கௌதே உமது பிழையைப் பொறுத்து, உமக்கு கௌது பட்டத்தையும் கொடுத்து, நீர் செய்த ஸஜ்தையும் நான் ஒப்புக் கொண்டேன். தலையை உயர்த்தும்" என்று மறுபடியும் ஒரு சத்தம் கேட்டது. இருதயாகாசத்தில் பொருந்தக்க மகத்துவம் பொருந்தின இந்தச் சத்தத்தை ஹலறத்தவர்கள் கேட்டு, ஸஜ்தை விட்டுத் தலையை யெடுத்து எழுந்து, பக்கத்திலிருக்கும் அந்தப் பெரியவரைப் பார்த்தார்கள். அப்போது அவர் மௌத்தாகிப் பிரேதமாய்க் கிடந்தார்.

தங்களோடு பேசிக்கொண்டிருந்த பெரியவர் இம்மென்று மௌத்தாய்க் கிடக்கக் கண்ட ஹலறத்தவர்கள் இன்னாலில்லாஹி யென்று சொல்லி, துக்கப்பட்டுக் கொண்டு நின்றார்கள். அப்போது, வானத்திலுள்ள அநேக மலக்குகளும், கலிறு அலைகிஸ்ஸலாமவர்களும் அங்கே வந்து, ஹலறத்தவர்களை நோக்கி "முகம்மது கௌதே, அல்லாகுத்த ஆலா உம்மை கௌது என்றழைத்து, உமக்கு ஸலாமும் சொன்னான்" என்று சொன்னார்கள். இதை ஹலறத்தவர்கள் கேட்டுச் சந்தோஷமடைந்து, அல்லாகுத்த ஆலாவிற்கு ஸுக்று செய்தார்கள். அதன் பிறகு, கலிறு அலைகிஸ்



ஸலாமவர்கள் ஹலறத்தவர்களை நோக்கி : முகம்மது கௌதே, இதோ மௌத்தாய்க் கிடக்கிறவரை நீர் இன்னாரென்று அறிவீரா? இவர் அல்லாகுத்த ஆலாவை நெருங்கின ஒலியாக்களில் ஒருவராகிய ஹிதாயத்துல்லா ஸூபிஸர்மஸ்த். அல்லாகுத்த ஆலா இடம் இவர் துஆ கேட்குந்தோறும் "ஆண்டவனே, நான் மௌத்தானால், என்னை அடக்கஞ் செய்வதற்கு நீ உவந்த ஒலிகளில் ஒருவரை யனுப்பு" என்று இரந்து கேட்பார். இவருடைய துஆ கபூலாயிற்று. இவர் மௌத்தாகும் வேளையானபோது அடக்கஞ் செய்வதற்காக அல்லாகுத்த ஆலா உம்மை இங்கனுப்பினான் என்று சொன்னார்கள். இதைக்கேட்ட ஹலறத்தவர்கள் சுக்று செய்தார்கள். பிறகு, அங்கே மௌத்தாயிருக்கும் ஷைகு ஹிதாயத்துல்லா சாகிபவர்களை மலக்குகள் கொணர்ந்த சுவர்க்கத்துத் தண்ணீரால் குளிப்பாட்டி, சுவர்க்கத்து ஆடையால் கபனிட்டு, சுவர்க்கத்துப் பரிமளாதிகளைக் கொண்டு செய்யவேண்டிய கருமங்களைச் செய்து, ஹலறத்தவர்கள் இமாமாய் மற்றவர்கள் மஃமூமாய் நின்று தொழுவித்து, மலக்குகள் கொணர்ந்த குந்தாலி, கடப்பாரை முதலிய தரையகழ் கருவிகளால் அந்த மலையில் குழிகல்லி அடக்கஞ் செய்தார்கள். மகாவரிசை பெற்ற ஷைகு ஹிதாயத்துல்லா சாகிபவர்களை அடக்கினபின், கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஹலறத்தவர்களை நோக்கி "முகம்மது கௌதே, நான் கலிறு இவர்களெல்லாரும் நீர் சிறுவராயிருக்கும்போது உளு செய்யத் தண்ணீர் கொணரும் மலக்குகள். நீர் நாடும் போது நாங்கள் உம்மிடம் வந்து, உமது கட்டளைகளைச் செய்யக் காத்திருக்கிறோம் என்று சொல்லி, ஸலாமும் சொல்லிவிட்டுப்போய் விட்டார்கள்.

கலிறு அலைகிஸ்ஸலாமவர்களும், மலக்குகளும் போன பிற்பாடு, ஹலறத்தவர்கள் தனித்து அந்த மலைச்சிகரத்தை விட்டிறங்கி, ஷாதுரூசூ சாகிபவர்களை நாடினவர்களாய்

பலவனங்களை யெல்லாம் கடந்து அவர்களிருக்கும் தலஞ்சேர்ந்து, அவர்கள் சமுகத்தில் போனார்கள். சைகுலு கூறு சாகிபவர்கள் ஹலறத்தவர்களைக்கண்டு "முகம்மது கௌதே, வாரும். உமக்கு அல்லாகுத்த ஆலா அருள் செய்வா னாக" என்று அன்போடழைத்து, தங்கள் கூட்டத்தில் தரிபடுத்தினார்கள். ஹலறத்தவர்கள் அன்று முதல் அங் கேயே தரிபட்டிருந்தார்கள்.

இதற்கு முந்தியே சையிது சத்துத்தீனவர்களின் மூத்த குமாரரும், ஹலறத்தவர்களின் தமையனாருமாகிய ஷாஹுபூல் சாகிபவர்கள் முரீதாவதற்காகக் குருவைத் தேடித் திரிந்து, சைகுலுகூறு சாகிபவர்களிடம் வந்து சேர்ந்திருக் கின்றார்கள். தமையனாருடன் ஹலறத்தவர்களுஞ் சேர்ந்து அங்கிருந்தார்கள். சில நாட்களின் பிறகு, சைகுலுகூறு சாகிபவர்கள் ஹலறத்தவர்களையும், அவர்கள் தமையனார் ஷாஹுபூல் சாகிபவர்களையும் அழைத்து, இரண்டு குற்றிகளை யுடைத்து அவ் விருவர் கையிலுங் கொடுத்து: நீங்கள் இருவரும் வனத்திற்போய் இக்குற்றிகளை நட்டு வைத்து, இது தளிர்க்கிற பரியந்தம் இருந்து அல்லாகுத்த ஆலாவை வணங்குங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். ஷைகவர் கள் இட்ட கட்டளையைச் சகோதரர் இருவரும் தலை மேற் சுமந்து, அந்தக் குற்றிகளையும் ஆளுக்கு ஒன்றாக வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு வனத்திற்குப் போய், அங்கேயொரு ஆட்பழக்கமற்ற தானத்தில் வெவ் வேறாக அந்தக் குற்றிகளை நாட்டி, அவரவர் தம்தம் குற் றிக்குப் பக்கத்திலிருந்து வணங்கிக்கொண் டிருந்தார்கள்.

இவ்வாறு இருவரும் சிலநாள் வணங்கிக்கொண்டிருக் கும்போது இடையில் ஒரு குற்றியாவது தளிர்க்கவில்லை. ஒருநாள் ஷாஹுபூல் சாகிபவர்கள் ஹலறத்தவர்களைப் பார்த்து: தம்பீ, இந்தக் காய்ந்த குற்றியை நட்டிக்கொண்டு எத்தனைநாள் வரையும் நாம் வணக்கஞ் செய்துகொண்டிருக்



கிறது! இவை என்றைக்குத் தளிர்க்கும்! வணங்கினது போதும், எழுந்திரும்; நமது குருவிடம் போகலாம் என்று சொல்லி, ஹலறத்தவர்களின் கையைப்பற்றி இழுத்தார்கள். தமையனார் சொல்லுக்கு ஹலறத்தவர்கள் உடன்படாமல் கையை யுதறிவிட்டு, குருவின் கட்டளைப்படி வணக்கத்திற் பராக்கா யிருந்தார்கள். அதனால், ஷாஹுபூல் சாகிபவர் களும் தம் சகோதரரைப் போலவே பழையபடி வணக்கத்தி லேயே யிருந்து விட்டார்கள்.

அதன்பின் சில நாட்கள் சென்று சைகுலுகூறு சாகி பவர்கள் தாங்கள் அனுப்பிய சகோதரர் இருவரையும் பார்ப்பதற்காகப் புறப்பட்டு, அந்த வனத்திற்கு வந்தார்கள். வந்து இருவரையும் பார்த்தபோது, ஹலறத்தவர்கள் நாட்டின குற்றி மாத்திரம் தளிர்த்திருந்தது. ஹலறத் தவர்கள் குற்றி தளிர்த்து, ஷாஹுபூல் சாகிபவர்களின் குற்றி தளிர்க்காமல் நட்டினபடி யிருப்பதை சைகுலுகூறு சாகி பவர்கள் கண்டு, அவ்விருவரையும் எழுந்திருக்கச் சொல்லி அழைத்துக்கொண்டு தங்கள் இருப்பிடத்திற்கு வந்தார்கள்.

ஹலறத்தவர்களையும், அவர்கள் தமையனாரையும் தங்கள் இருப்பிடம் அழைத்துக் கொண்டுவந்தபின், சைகுலு கூறு சாகிபவர்கள் ஹலறத்தவர்களுக்கு உபதேசஞ் செய்து சுத்தாறிய்யா தரீக்கின் படி திக்றையும் போதித்து, அவர்களை நோக்கி: நீர் இன்ன மலைச்சாரலிற் போய், இன்னபடி யிருந்து, இவ்விதம் தவஞ்செய்வீராக என்று கட்டளைப் பண்ணி அனுப்பினார்கள். உபதேசம் பெற்றுக் கொண்ட ஹலறத்தவர்கள் குருவின் உத்தாரப்படி அந்த மலைச்சாரலிற் போய்த் தவஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்போது ஹலறத்தவர்களுக்குப் பசியெழுந்தது. அந்தப் பசியைத் தணிக்கத்தக்க யாதொரு உணவும் அங்கே அகப்படாமை யால், பக்கத்தில் நின்ற வேப்பமரத்தில் ஒருபிடி யிலையை

யுருவி யாயிற்போட்டு மென்று விழுங்கிவிட்டு, கண்களை மூடிக்கொண்டு, முட்டிக்கால் நிலையில் நிஷ்டையிலிருந்து விட்டார்கள். மூடின கண்களைத் திறவாமலும், நின்ற நிலை பெயராமலும், பசிதாகம் ஒன்றும் இல்லாமலும் ஒரே நிலையாய், பனிரண்டு வருஷம் வரையும் நின்றுவிட்டார்கள்.

பனிரண்டு வருஷங்களுக்குப்பின் ஹலறத்தவர்கள் கண்களைத் திறந்தபோது, அந்தக் கண்களின் பார்வை யானது, அந்நேரம் அந்த மலைச்சாரலில் வேட்டை யாடு வதற்காக வந்து ஒரு மானைத்துரத்திக்கொண்டு அங்குநின்ற அவ்வூர் இராசகுமாரன் மேல் விழுந்தது. ஹலறத்தவர்களின் தவச் சொரூபப் பார்வையானது மேற்படி இராசகுமாரன்மீது தாக்கினவுடன், அவன் களிம்புபற்றி யிருந்தபொன் அக் களிம்பு நீங்கி பிரகாசித்தாற் போலப் பிரகாசித்து, மஸ்து கொண்டு மெய்மறந்து, ஆநந்தம் பாடி ஆடத் தொடங் கினான். இவ்விதம் அந்த இராசகுமாரன் ஹலறத்தவர்கள் முன்னின்று ஆநந்தக் கூத்தாடுவதை அவன் கூடவந்த பரிவார ஜனங்கள் கண்டு அஞ்சி, அங்கிருந்து விரைந் தோடிப் போய், அவன் தந்தையாகிய அரசனிடம் தெரி வித்தார்கள். வேட்டை யாடப்போன தன் மைந்தன் வனத்திற் சென்றவிடத்து, பித்தேறினார்போலத் திமெ ரென்று நின்று ஆடுகிறான் என்னுஞ்சொல் காதில் விழுந்த போது அரசன் பதறி, இனி என் அரசைச் சுமப்பவர் யார்? என் குடிகளைக் காப்பவர் எவர்? என்று வாய்விட்டுப் புலம்பியழுது, ஆசனத்தைவிட்டு எழுந்து, ஸைதுறுகூறு சாகிபவர்கள் சமுகத்திற்போய்க் கைகட்டி நின்று, தன் மகனுக்கு வனத்தில் திடீராய் நேரிட்டிருக்கும் ஆபத்தை முறைபாடு செய்தான்.

முடிமன்னனொருவன் தங்கள் சமுகத்தில் வந்து நின்று அழுதிடும் முறைப்பாட்டை ஸைதுறுகூறு சாகிபவர்கள்



கேட்டு, நிகழ்ந்த காரியம் இன்னதினாலென்று அறிந்து சந் தோஷமாய், அந்த அரசகுமாரனுடைய நாமத்தைச் சொல்லி அழைத்தார்கள். வனத்தின் மலைச்சாரலில் நிற்கும் இராசகுமாரன் பெயரைச்,சொல்லி, ஊருக்குள்ளிருக்கும் ஸைதுறுகூறு சாகிபவர்கள் அழைத்தவுடன், அவன் அங்கி ருந்து வெகுவிரைவாய் அவர்கள் சமுகத்தில்வந்து நின்று, தனக்கு நேரிட்டது பயங்கொள்ளத்தக்க ஆபத்தல்லவென் றும், மறுமை லாபத்தைப் பெற்றுக்கொண்டதனு லுண் டான ஆனந்த மென்றும் தகப்பன் அறிந்து மனமகிழும்படி பின்னும் ஆடினான். பின் ஸைதுறுகூறு சாகிபவர்கள் அவன் கொண்டிருக்கு மஸ்தைத்தெளித்து அவனைத் தந்தை யுடன் போகும்படி யநுப்பிவிட்டு, தங்கள் சீஷருக்குண் டான பக்குவத்தைப்பற்றி மனம் பூரித்தார்கள்.

சத்திய வேதமாகிய குறுஆனில் "நமது திருமத்தை, நாம் நாடிய பேருக்குக் கொடுப்போம்" என்று அல்லா துத்த ஆலா சொன்னபடி, நமது முரீதாகிய முகய்யதுகோதுங் குக்கொடுத்து விட்டான் என்று மனம்பூரித்த ஸைதுறுகூறு சாகிபவர்கள், பிறகு ஹலறத்தவர்களைப்போய்க் காண்ப தற்காக வண்டில் கொணரும்படி கட்டளைபண்ணினார்கள். உடனே இரண்டெருதுகள் பூட்டிய கோலாரிவண்டி லொ ன்று தயாராயிற்று. ஸைதுறுகூறு சாகிபவர்கள் அவ்வண்டி யில் ஏறிக்கொண்டு தங்கள் சீஷரிருக்கும் மலைச்சாரலுக் குப் புறப்பட்டார்கள். அப்போது, தங்கள் குரு தங்களைக் காணவருகிறார்கள் என்னும் சங்கதியை அல்லாதுத்த ஆலா ஹலறத்தவர்களுக்குத் தெரிவித்தான். அது தெரிந்தபோது ஹலறத்தவர்கள், நம் குரு நம்மிடம் வருமுன் நாமே எதிர்கொண்டு போகவேண்டு மென்று கருதி எழுந்தார் கள்; பனிரெண்டுவருஷம் வரையும் ஆடாமல் அசையாமல் உண்ணாமல் உறங்காமல் ஒரே படியா யிருந்த படியால் எழக்கூடவில்லை. அப்போது சைகவர்கள் ஏறிவரும் வண்

டில் ஹலறத்தவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. தங்கள் கண்களுக்கு முன் குரு ஏறிவரும் வண்டியைக் கண்டவுடன் நாம் அடிபெயர்த்து நடக்கக்கூடாமையால், உருண்டாயினம்போய் அவர்கள் ஏறியிருக்கும் வண்டியுருளைகளையடுக்கலாமென்று ஹலறத்தவர்கள் நினைத்து, தாங்கள் இருந்த தானத்திலேயே தரையில் விழுந்து உருண்டார்கள். ஒட்டியுலர்ந்து என்புந்தோலுமாய் மெலிந்தொடுங்கின திருமேனியையுடைய ஹலறத்தவர்கள் தரையிற் கிடந்து உருண்டுகொண்டு தங்கள் வண்டியையடுக்க வருவதை சைகுநூறு சாகிபவர்கள் கண்டு, இவரை நம் வண்டியடியில்வர விடக் கூடாதென்று கருதி, வண்டியிலிருந்து கீழே குதித்தார்கள். அவர்கள் குதிக்குமுன் ஹலறத்தவர்கள் நம் குருவின் திருவடிகளைத் தரையிற் படவிடாமல், நம் புயத்தில் தாங்கியே விட வேண்டுமென்று எண்ணி, விரைவாயுருண்டு சக்கரத் தருகிற்போய், குதித்த குருவின் திருவடிகளைப் புயத்தில்தாங்கி மெல்ல விடுத்தார்கள். இதை சைகுநூறு சாகிபவர்கள் கண்டு அதிசயித்து, ஆனந்தங்கொண்டு ஹலறத்தவர்களை அன்போடு தழுவி வண்டியில் ஏற்றிக் கொண்டு, தங்கள் மனைக்கு வந்தார்கள்.

ஹலறத்தவர்களை அழைத்துக்கொண்டு மனைக்குவந்த அன்றைத்தினமே சைகுநூறு சாகிபவர்கள் அவர்களுக்கு நல்ல விருந்துகொடுத்து, இன்னுஞ் செய்யவேண்டிய காரியங்களுஞ்செய்து, கிலாபத்துக் கொடுத்து, தங்களுக்கு கலீபாவாக்கினார்கள். பின், தாங்கள், செய்த கிதாபு ஒன்றும் ஹலறத்தவர்களுக்குக் கொடுத்தார்கள். அன்றியும், தாங்கள் நூற்றைம்பது வயது வரையிலும் நூற்றுமுப்பது ஆசிரியர்களிடம் கற்ற கல்விகளையும் ஹலறத்தவர்களுக்குப் புகட்டினார்கள். செய்யவேண்டியவை யெல்லாம் ஹலறத்தவர்களுக்கு சைகுநூறு சாகிபவர்கள் செய்தபின், மேற்படி ஷாஹபூல் சாகிபவர்களை ஹலறத்தவர்களிடம்



சேர்த்து உமது தமையனாராகிய இவருக்கு நீரே உபதேசஞ் செய்து முரீதாக்கும் என்று கட்டளை செய்தார்கள்.

இது நிகழ்ந்த சொற்ப நாட்களுக்குப் பின் சைகுநூறு சாகிபவர்கள் வபாத்தாய் விட்டார்கள். தங்கள் குரு வபாத்தானவுடன், ஹலறத்தவர்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய பாத்திஹாகத்தம் அடங்கலுஞ்செய்து கொண்டு நாற்பது தினம் வரையும் அங்கிருந்து, பின் அங்கிருந்து புறப்பட்டுத் தங்கள் தமையனாருடன் குவாலீர் என்னும் தங்கள் சுயநகரம்வந்து சேர்ந்து, அங்கேயே குடியாயிருந்தார்கள்.

சைகுல் இஸ்லாம், சையிதுஸ் ஸாதாத்து, சைகு முகம்மதுகௌது றலியல்லாகு அன்கு அவர்கள் குவாலீர் நகரத்தில் தங்களோடொத்த குலத்தில் விவாகஞ்செய்து கொண்டு, ஷரீஅப்பேணி ஒழுகி நடக்கிற ஒளலியாக்களில் சிறந்த குத்பாயும், ஜீவராசிகளை ரக்ஷிக்கிற கௌதாயும், மனிதர்கள் ஜின்களுக்கு நேர்வழி காட்டுகிற சற்குருவாயும், முன் ஹனபிமதுஹபிலிருந்து பின் முஜ்தஹிதாகிய இமாமாயும், பஞ்சரத்தினம் என்னும் அர்த்தமுள்ள ஜவாஹிறுல் கம்ஸா முதலான கிதாபுகளை யியற்றிய நூலாசிரியராயும், மதறஸா என்கிற பாரிய கல்விச்சாலையை ஸ்தாபித்துச் சகல கல்விகளையும் போதிக்கிற போதகாசிரியராயு மிருந்து விளங்கினார்கள். அவர்கள் மதறஸாவில் அநேக ஒளலியாக்கள் வந்து கல்விபயன்று, முரீதுமாவார்கள்.

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் மாணிக்கப்பூரிலிருந்து குவாலீரை நாடிவரும் போது வழியில் கூடச் சேர்ந்துவந்து, பின்பு முன்னே சொன்ன பாழ்ம்பள்ளியிற் பிரிந்துபோன முஹுயுத்தீன் என்பவரும் குவாலீரிலுள்ள அந்த மதறஸாவில் போய்ச் சேர்ந்திருந்து, கல்விபயின்று கொண்டிருந்தார். ஹலறத்து ஆண்

டவரவர்களின் ஞானதேசிகராகிய ஹலறத்து ஸையிது முகம்மதுகோதுஸாகிபு அவர்கள் இவ்விதக் கருதியுடன் குவாலியரில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

[ஹலறத்து ஸையிது முகம்மதுகோது சாகிபு ஆண்டவரவர்கள் ஹிஜறத்துத் தொளாயிரத்து எழுபதாம் வருஷம், றமலான் மாதம், பதினைந்தாம் திகதி வபாத்தாய், குவாலியரிலேயே அடக்க மிருக்கின்றார்கள்.]

சத்குருவரலாறு முற்றிற்று.

---

௧௭-ம் அத்தியாயம்.

## காரணநாமம் பெற்றது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் அல்லாகுத்த ஆலாவினால் ஷாகுல்ஹமீது என்கிற காரணநாமம் பெற்ற வரலாற்றுடன், உமக்கு ஆசிரியர் இன்னார்; அவரிடம் போவீராகவென்ற உத்தரவு பெற்ற வரலாற்றையுஞ் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது கன்ஜுஸவாய் ஆண்டவரவர்கள் முன்சொன்னபடி குவாலியர் நகரத்தின் வெளிப்புறமுள்ள பாழும் பள்ளியுட் புகுந்து, எனது குரு இன்னாரென்று அல்லாகுத்த ஆலா எனக்குத் தெரிவிக்கும் வரையும் நான் உண்ணமாட்டேன்; உறங்கமாட்டேன்; இந்தப் பள்ளியைவிட்டு வெளிப்படமாட்டேனென்று பிரதிக்கினை பண்ணிக்கொண்டு, வணக்கத்தில் ஒரேயிருப்பாயல்லவா இருக்கின்றார்கள்? இவ்விதக் கடைப்பிடியுடன் * சிலகாலம் வரையும் இருந்தார்கள்.

ஆண்டவரவர்கள் இவ்வா றிருக்கும்போது ஒருநாள் பஜ்றுநேரம் தங்கள் சிறப்பான நெற்றியைத் தரையிற்பொருந்தவைத்துக்கொண்டு, அல்லாகுத்த ஆலாவின் மேலான

* ஏழுவருஷம் வரையு மிருந்தார்களென்று சில கிரந்தங்கள் சொல்லுகின்றன.



வரிசையை நாடினவர்களாயிருந்தார்கள். அந்நேரம் ஆகாயத்திலிருந்து "ஷாகுல்ஹமீதே, எழுந்திரும். என்னை வணங்குங் காரியத்தில் நீர் புகழப்பட்டவரானீர். அதனால், ஷாகுல்ஹமீது என்கிற காரணநாமத்தை இன்றைத்தினம் உமக்கு நான் சூட்டினேன். உமக்கு ஆசானாகிறவர் இவ்வூரிலுள்ள ஸையிது முகம்மதுகோது ஸாகிபுறாகவிருக்கின்றார். அவரிடம் போய் முரீதாகும்" என்று அசரீரியானதொனி ஆண்டவரவர்கள் காதில் கேட்டது. இந்தச் சத்தங்கேட்ட அப்போதே மலக்கூத்துடைய ஆலமும், துன்யாவுடைய ஆலமும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல அவர்கள் கண்களுக்கு முன் தெரிந்தன. அன்றியும், ஞானதேசிகரான ஹலறத்து ஸையிது முகம்மதுகோது ஸாகிபு ஆண்டவரவர்களும் எடுத்துக் காட்டப்பட்டுத் தோற்றரவாகக் கண்டார்கள்.

அந்தச்சமயத்தில் நபி கிலுறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து நின்று "ஷாகுல்ஹமீதே, அல்லாகுத்த ஆலா உம்முடைய வணக்கத்தை யேற்றுக்கொண்டு, ஷாகுல்ஹமீது என்று உமக்குக் காரணப் பெயரிட்டுக் கூப்பிட்டான். எழுந்திரும் உமக்குக் குருவாகிறவர் இந்தக் குவாலியரி லிருக்கிற முகம்மதுகோது அவர் நீர் வருவதை எதிர்பார்க்கின்றார். அவரிடம்போய் முரீதாகும்படி அல்லாகுத்த ஆலா உம்மை ஏவினான். அவன் உமக்கு ஸலாமும் சொன்னான். என்னுடைய ஸலாமும் உண்டாவதாக. புறப்படும். உமக்கு நன்மாராய முண்டாகக் கடவது" என்று சொல்லிவிட்டு மறைந்தார்கள்.

ஆகாயத்திற் கேட்ட அசரீரி வாக்கியங்கள் முடிந்த சமயத்தில் இதுவும் அறிவிக்கப் பட்டவுடன் ஹலறத்து ஆண்டவரவர்கள் அதிக ஆனந்த பரவசமடைந்து, சுஜூதிலிருந்த தங்கள் தலையையெடுத்து நிமிர்ந்து அல்லாகுத்த ஆலாவுக்கு நன்றியறிதலான சுக்றுசெய்து, அந்த நேரத்திலேயே

தாங்களிருந்த பள்ளியை விட்டு வெளிப்பட்டார்கள். பிரமாதமாக வைத்துக் கொண்ட தங்கள் பிரதிக்கினைப்படி சாதித்து நிறைவேறின சந்தோஷத்தினால் அதிக விரைவில் அங்கிருந்து நடந்து குவாலீருக்குள் புகுந்து, அங்குள்ள அலங்காரமான மாடமாளிகைகள் செறிந்த வீதிகளைக் கடந்து, ஞானதேசிகரிருக்கும் சாலையைத் தேடிக்கொண்டு வந்தார்கள்.

காரணநாமம் பெற்றது முற்றிற்று.

---

௧௮-ம் அத்தியாயம்.

## முரீதானது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் முரீதான வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து குத்புல் அக்தாபு, கௌதுல் இஸ்லாம் மீருன்சல்தான், ஷாதுல்ஹமீது பாதுஷா ஆண்டவரவர்களுக்குப் பாழ்ம்பள்ளியில் அசரீரியான சத்தங்கேட்ட அந்த பஜ்றுநேரம் ஹலறத்து சையிது முகம்மது கோதுசாகிபு ஆண்டவரவர்கள் குவாலீர் நகரத்தில் தங்கள் மாளிகையை விட்டுப் புறப்பட்டுத், அவ்வூர்ப் பிரதான ஆலயத்திற்குவந்து, அநேக பெரியோர்கள் மௌனமாய் நிற்கத் தாங்கள் இமாமாய் நின்று பஜ்று தொழுகையைத் தொழுது முடித்து, அந்த ஆலயமுகப்பில் வந்திருந்து, ஒளிபா ஓதிக்கொண் டிருந்தார்கள். ஹலறத்தவர்கள்கூட ஒலியாக்களும், மஷாயிகுமார்களும், அநேகர் உட்கார்ந் திருந்தார்கள்.

இவ்வாறிருக்கையில், அங்குக் கூடியிருக்கும் எல்லார் காதுகளிலும் "அப்துல்காதிறு ஷாகுல்ஹமீதுக்குக் குருவாகிறவர் முகம்மதுகோது சுத்தாரி!" என்று அசரீரியான சத்தம் பலதிக்கிலுமிருந்து கேட்டது. இச்சத்தங் கேட்டு அங்குள்ளவர்கள் அனைவரும் ஆச்சரியமடைந்து, ஹலறத்தவர்களை நோக்கி "எங்கள் நாயகமே, இந்த அற்புதகரமான சத்தம் யாருடையது? இச்சத்தத்திற் சொல்லப்படுகிற அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது என்பவர் யார்? என்று ஆவலோடு கேட்டார்கள். இப்படிக்கேட்ட தங்கள் சமுகத்திற் கூடியிருக்கும் பெரியோர்களை ஹலறத்தவர்கள் பார்த்து, கீழ்வருமாறு அவர்களுக்குப் பிரதி சொன்னார்கள். அதாவது :—

"என் அரிய சகோதரர்களே, நீங்கள் கேட்ட சத்தம் சர்வ வல்லவனாகிய அல்லாகுத்த ஆலா வுடையது. அது எனக்கும், அந்த அப்துல்காதிறு ஷாதுல்ஹமீது என்பவருக்கும் அறிவிக்கும் ஒரு அறிவிப்பு. அவர் எப்படிப் பட்டவரானால் ;—குத்புல் அக்தாபு, கௌதுல் அகுலம், சையிது முகியித்தீன் அப்துல் காதிறு ஜைலானியவர்களின் பௌத்திரர்; வணக்கத்தில் தரிபாடான ஒலியாக்களுக்கு நாயகமானவர்; அல்லாகுத்த ஆலா வினால் காக்கப்பட்டவர்; ஏற்றுக் கொள்ளப்பட்டவர். இனிமேல் குத்புல் அக்தாபாவார். கௌதுல் இஸ்லாமுமாவார். அவர் தமது ஞானகுரு இன்னார்தாமென்று அல்லாகுத்த ஆலா தமக்குத் தெரிவிக்கும்வரையும் உண்ணவும் உறங்கவும், இருப்பிடம் விட்டுப்பெயரவு மாட்டேனென்று கடைப்பிடித்து, இவ்வூர்க்கு வெளியிலுள்ள பாழ்ம்பள்ளி புகுந்து வணக்கத்தில் தரிபட்டிருந்தார். இப்போது அல்லாகுத்த ஆலா அவரை யேற்றுக்கொண்டு, அவருடைய வணக்கத்திற்காக மெச்சிப்புகழ்ந்து, ஷாதுல் ஹமீது என்று காரண நாமமும் அவருக்கிட்டு, தன் அடிமையாகிய என்னை அவருக்குக் குருவென்று தெரிவித்து, என்னிடம் முரீதாகும்படி அனுப்பி யிருக்கின்றான். அவர் என்னைத் தேடிக்கொண்டு இவ்வூருக்குள் வருகிறார். அவருக்குக் குருவாவதற்கு நான் அருகனல்லன். ஆயினும் அப்படி

யாவதற்கு அல்லாஹுத்த ஆலாவின் கட்டளை பிறந்துவிட்டது. ஆகலால், அவரை நானே எதிர்சென்றழைக்க வேண்டும்" என்று இப்படிச் சொல்லி முடித்து, உடனே அங்கிருந்து எழுந்தார்கள். அப்போது அங்குக் கூடியிருந்த சர்வஜனங்களும் ஹலறத்தவர்கள் கூடவே யெழுந்தார்கள்.

பெருந்திரளான ஜனங்கள் பின்வர ஹலறத்து முகம்மது கௌது சாகிபவர்கள் ஆலயத்தைவிட்டுப் புறப்பட்டு, தங்கள் மாணாக்கரை நாடினவர்களாய், குவாலீரின் ஒரு அகன்றவீதி வழியே வந்தார்கள். முன் பாழ்ம்பள்ளியி லிருந்துவந்து குவாலீருக்குட் புகுந்துபல தெருக்களையுங் கடந்து, ஆசிரியரைத் தேடிவருகிற ஆண்டவரவர்களும் அந்த வீதிவழியே வந்தார்கள். ஆகலால் அவ்விருவரும் அந்த வீதியிலேயே சந்தித்தார்கள். பெருந்திரளான ஜனங்களுக்கு முன்வருகிற ஹலறத்தவர்கள்மீது ஆண்டவரவர்களின் பார்வை விழுந்தபோது, தங்களுக்குப் பாழ்ம் பள்ளியில் தோற்றரவான ஞானதேசிகர் இவர்களேயென்று தெரிந்துகொண்டு, விரைந்தோடி அவர்கள் இரண்டு திருவடிகளிலும் விழுந்து பற்றிப் பிடித்து முத்தமிட்டவர்களாய், நெடுநேரம் குப்புறக்கிடந்தார்கள்.

ஜகத்குருவாகிய ஸையிது முஹியித்தீன் அப்துல் காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்களின் பௌத்திரர் தங்கள் பாதங்களில் வந்து விழுந்து, வாலகுரியனென்று விழுந்து கிடப்பது போலக் கிடந்தபோது, ஹலறத்து முகம்மது கௌது சாகிபு ஆண்டவரவர்கள் சீக்கிரங் குனிந்து ஆண்டவரவர்களின் இருகரங்களையும் பிடித்துத் தூக்கி யணைத்து, அவர்கள் முகத்தை உற்றுநோக்கி "ஏதாகிலுமிதே அல்லாஹுத்த ஆலா உமக்கு இம்மையிலும், மறுமையிலும் திருவருள் புரிவானாக" என்று ஆசீர்வதித்து, அங்கிருந்து அழைத்துக்கொண்டு தங்கள் மாளிகைக்கு வந்தார்கள்.



ஹலறத்து ஸையிது முகம்மது கௌது ஆண்டவரவர்கள் ஹலறத்து ஸையிது அப்துல் காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களைத் தங்கள் மனைக்கு அழைத்துவந்து, பசியாறுவதற்குக் காலைப்போசனம் தயார்பண்ணி அன்புடன் உபசரித்துக்கொடுத்து, அன்றைத்தினமே பையாலா என்னும் ஞானமிர்தத்தைப் புகட்டி, உபதேசஞ்செய்து, முரீதாக்கினார்கள். ஹலறத்து ஆண்டவரவர்கள் முரீதாய், அன்று முதல் தங்கள் ஞானதேசிகரிடத்திலேயே தரிபட்டிருந்தார்கள்.

முரீதானது முற்றிற்று.

---

## ௧௯-ம் அத்தியாயம்.

## அரம்பையரைத் தெரிவித்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் அடிமைப் பெண்களுக்குத் தங்கள் சட்டைக்கையில் அரம்பையராகிய ஹூறுல் லீன்களைத் தெரிவித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது அப்துல் காதிறு ஷாகுல் ஹமீது ஆண்டவரவர்கள் தங்கள் ஞானதேசிகராகிய ஹலறத்து ஸையிது முகம்மது கௌது சாகிபு ஆண்டவரவர்களிடத்திலேயே யிருந்து, சகல கல்விகளையும் பயின்று வந்தார்கள். தேசிகராகிய ஹலறத்தவர்கள் ஆண்டவரவர்களைத் தங்களிடத்திலிருக்கும் மற்ற மாணாக்கர்களைப் பாவிப்பது போலச் சாமானியமாகப் பாவிக்காமல், தங்கள் சொந்த வீட்டு மனிதர்களில் ஒருவராகப் பாவித்து, அதிக அன்புடனும், ஆதரவுடனும் நடத்தினார்கள். ஆண்டவரவர்கள் மீதுள்ள ஆசிரியரின் பக்ஷம் அளவு கடந்ததாய் விசேஷித் திருந்தது. அதனால், வீட்டுமனிதர்களும், மதறஸாவில் பயிலும் மாணாக்கர்களும், ஆண்டவரவர்களை மிகவும் பாராட்டி நடந்தார்கள்.

சற்குருவாகிய நிறைநிறைந்தவர்கள் ஆண்டவரவர்களை முரீதாக்கின சில காலத்திற்குள் எல்லா இல்முகளையும் அவர்களுக்கு நிறையக் கற்பித்து, உண்மையான வணக்கத்திற்குத்தக்க பக்குவப்படுத்தி, தனித்திருந்து வணங்குவதற்காகத் தங்களின் தவச்சாலைக் கூடத்தில் குறுக்கே சுவரெழுப்பி ஒரு தனியறை தடுத்து, அதற்கொரு வாசலும் வைத்து, அவர்களை அவ்வறைக்குள்ளிருந்து வணங்கும்படி கட்டளை பண்ணினார்கள். அக்கட்டளைப்படியே ஆண்டவரவர்கள் அவ்வறையில் தனித்திருந்து இபாதத்துச் செய்து வந்தார்கள். அவர்களுக்கு அவ்வவ்வேளைகளில் வீட்டிலிருந்து ஆகாராதிகள் கொணர்ந்து கொடுப்பதற்கு வீட்டுப் பணிப் பெண்களில் இரண்டுபேர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அன்றியும், எப்போதும் ஆண்டவரவர்கள் பக்கத்திலிருந்து கொண்டு அவர்கள் இடும் பணிவிடைகளைச் செய்து வருவதற்கு, முன்னே கூடவந்த முஈனுத்தீன் என்பவரும் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அவ்வறை வாசலில் எப்போதும் பணிவிடைக்கு எதிர்பார்த்திருப்பார். இவ்வாறாக ஆண்டவரவர்கள் அவ்வறைக்குள்ளிருந்து தவஞ்செறிந்துடைய வணக்கமாக அல்லாதஆலாவை வணங்கிக்கொண்டு சிலகாலமிருந்தார்கள்.

அறைக்குள்ளிருந்து இபாதத்துச் செய்யும் ஆண்டவரவர்கள் சில சமயங்களில் வெளியில் வந்து ஓதிக்கொண்டிருப்பதுமுண்டு. அவ்வழக்கப்படி ஒருநாள் வெளியில் வந்து ஓதிக்கொண்டிருந்தார்கள். அப்போது, முன் நியமித்திருக்கும் அடிமைப் பெண்கள் இருவரும் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து, வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பெண்கள் எப்போதும் ஆகாராதிகளைக் கொணர்ந்து பயபக்தியுடன் கொடுத்துவிட்டுப் போவதே யொழிய, தனித்திருந்து நீண்ட நேரம் பேசும் வழக்கமில்லை. இப்போது நூதனமாக அப்பெண்கள் ஆண்டவரவர்களோடு



பேசிக்கொண்டிருப்பதை முஈனுத்தீன் என்பவர் தூரத்தில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். அதைப்பற்றி அவருக்குப் பல வெண்ணங்கள் பிறந்தன. அதனால் அவர் கொஞ்சம் கவனமாக நோட்டமிட்டுக் கொண்டிருந்தார். அந்தப்பெண்கள் ஆண்டவரவர்களிடம் இரகசியமாகச் சில சொற்களைச் சொல்லுகிறதும், ஆண்டவரவர்கள் அதற்கு உடன் படாத விதமாகத் தலையை அசைத்துக்கொண்டு ஓதுவதிற் பராக்காய்க் குனிந்தபடியே யிருப்பதுந்தான் அவருக்குத் தெரிகின்றன வல்லாமல், அந்தச் சம்பாஷணை இன்னதென்று விளங்கவில்லை.

தங்களிடம் சொல்லும் சொல்லுக்கு இசையாதவர் களாய்த் தலையை யசைத்துக் கொண்டு ஆண்டவரவர்கள் ஓதிக் கொண்டிருக்கும்போது, சங்கதி சொல்லிக்கொண் டிருந்த இருபெண்களும் திடீரென்று தரையில் விழுந்து பிரேதம் போலக் கிடந்தார்கள். அதை ஆண்டவரவர்கள் ஏறிட்டுப் பார்க்கவேயில்லை. இவ்வெல்லாவற்றையும் தூரத்திற் பார்த்துக் கொண்டிருக்கிற முஈனுத்தீன், பெண்கள் பிணமாய் விழுந்து கிடப்பதைக் கண்டு பதறி யெழுந்து, ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கைகட்டி நின்று "எஜமானவர்களே, தங்களோடு பேசிக்கொண் டிருந்த பெண்கள் மையத்தாய்க் கிடக்கிறார்களே!" என்றார். இதைக் கேட்ட ஆண்டவரவர்கள் மெல்ல நிமிர்ந்து, அந்தப் பெண்களைப் பார்த்தார்கள். மெய்ம்மறந்து கிடந்த இரு பெண்களும் ஆண்டவரவர்களின் மகத்துவமுள்ள பார்வை விழுந்தவுடன் ஸ்மரணையடைந்து எழுந்து, அங்கிருந்து பறந்து விழுந்து ஓடினார்கள். திகில் பிடித்தாற்போலப் பதறி யோடுகிற பெண்களை முஈனுத்தீன் தொடர்ந்து போய்த் தேறுதல் சொல்லி, ஒரு பக்கத்தில் நிறுத்திக்கொண்டு "நடந்த காரியம் என்ன?" என்று கேட்டார். மேன்

மூச்சுக் கிழ்மூச்சுடன் திக்கு முக்காட்டங் கொண்ட அப்
பெண்கள் மூசனுத்தீனைப் பார்த்துச் சொல்லுகின்றார்கள்:—

நாங்கள் ஹலைத்து வாயிது அப்துல் காதிறு அவர்களிடம்
பேசிக்கொண்டிருந்த தெல்லாம் வேறொன்றுமல்ல; அவர்
களுக்கு விவாகம் பண்ணும் விஷயத்தைப் பற்றினதுதான்.
நமது எஜமானாகிய ஹலைத்தவர்களின் செல்வமகளாரை
விவாகஞ்செய்துகொள்ளப் பிரியமுண்டாவென்று அவர்களை
உசாவும்படி எஜமானியவர்கள் எங்களிடம் சொல்லி, உசா
வினோம். அதற்கு அவர்கள் உடன்படாமல், என் இயக்க
வொடுக்கங்களெல்லாம் அல்லாகுத்த ஆலா வின் புறத்தில்
இருக்கின்றன வன்றி, நீங்கள் சொல்லும் கருமத்திலில்லை
என்று சொல்லி, எங்கள் கேள்வியை மறுத்துவிட்டார்கள்.
நாங்கள் மறுபடியும், துறவுபூண்டவர்களே விவாகஞ்செய்ய
மாட்டார்களென்றும், அப்படி தாங்களொரு துறவியல்ல
வாதையால் விவாகஞ் செய்து கொள்ளலாமென்று, "விவா
கஞ் செய்தவன் தீனில்முக்காற் பாகத்தை யெடுத்துக்கொண்
டவன்" என்று நபிநாயகமவர்கள் திருவாய் மலர்ந்து
சொன்ன ஹதீதைக் கவனியுங்களென்றும், விவாகஞ்
செய்வது பிரதான சுன்னத் தென்பது தாங்கள் அறிந்தது
தானே யென்றும், விவாகத்தினால் சந்தான முண்டாய்,
அதனால் நன்மை விளையுமே யென்றும் அவர்களுக்குச்
சொன்னோம். எங்கள் சொற்களை உண்மையென்று அவர்கள்
ஒப்புக் கொண்டும், தங்களுக்கு அது சம்மதமில்லை யென்று
அவர்கள் ஒப்புக் கொண்டும், தங்களுக்கு அதுசம்மதமில்லை
யென்று தலையை யசைத்துக்கொண்டு, ஓதுவதில் பராக்கா
யிருந்தார்கள். எப்படியும் இவர்களை இணங்கச் செய்ய
வேண்டுமென்று நாங்கள் கருதி அதை விடாமல் மறுத்தும்
பலவிஷயங்களை எடுத்துக்காட்டி சொல்லிக் கொண்டிருந்
தோம். அதனால் அவர்கள் மனச்சடை வடைந்து,
எங்களைப் பார்த்து "நீங்கள் சொல்லும் காரியத்திற்கும்



பிரதியாக அல்லாகுத்த ஆலா எனக்குத் தயார்பண்ணிவைத்
திருப்பதைப் பாருங்கள்" என்று சொல்லி தங்கள் இடது
கையைத் தூக்கினார்கள். அந்தக் கைச்சட்டைக்குள் எங்கள்
பார்வை விழுந்தது. அதற்குள் நாங்கள் கண்டோம்.
ஆனால், கண்டதை என்னென்று சொல்லி முடிப்போம்.
பலவர்ணப் பூஞ்செடிகளும், நானாவகைக் கனிதரும் விருக்ஷங்
களும், தண்ணீ ரருவிகளும் நெருங்கியமைந்த அலங்கார
மான ஒரு பூங்காவனமும், அதன் நடுவே ரத்தினகஜித
மாய்த் தங்கமயமாய்ப் பிரகாசிக்கும் பலவிதச் சாமான்
களால் சோடிக்கப்பட்ட ஒரு சிறந்த மாளிகையும், எங்கள்
கண்களில் தோன்றின. நாங்கள் அந்த மாளிகையைப்பார்த்
தோம். அதன் மேன்மாடத்து ஜன்னல்கள் திறக்கப்பட்
டிருந்தன. அந்த ஜன்னல்வழியே எங்கள் பார்வைசென்றது.
அங்கே உள்ள பவளத்திற் கடைந்த கால்களாலும் முத்துச்
சட்டங்களாலும், மாணிக்கப் பலகைகளாலும் அமைந்த
ரத்தினத்தொட்டில் ஒன்று பொற்சங்கிலியிற் கொளுவி
ஆடிக்கொண் டிருந்தது. அந்தத் தொட்டிலில் இரண்டு
பெண்கள் உட்கார்ந் திருந்தார்கள். அப்பெண்களுக்குப்
பணிவிடைசெய்யும் தாதிமார் பலர் பக்கத்தில் கைகட்டி
நின்றார்கள். அவ்விரு பெண்களின் சுரூபலாவணியத்தையும்,
அவயவலக்ஷணங்களையும் நாங்கள் எப்படி வருணிப்போம்.
அப்பெண்கள் இவ்வுலகப் பெண்களா யிருந்தாலல்லவா
அவர்களின் உறுப்பு ஒவ்வொன்றுக்கும் உவமை சொல்ல
லாம்! அவ்வுலகப் பெண்களை யார்தாம் வருணிப்பார்! அந்
தப் பெண்கள்மீது எங்கள் பார்வை விழுந்த மாத்திரத்தில்
பொறிகலங்கி, மெய்ம்மறந்து விழுந்தோம். அதன்பின் நடந்
ததை இன்னதென்று அறியோம். பின்பு உணர்வுபிறந்து
எழுந்தோம். அந்தக் கலக்கடியினாலேதான் இப்படி ஓடி
வருகிறோம் என்று சொன்னார்கள். இதைக்கேட்ட மூச

ஹாத்தின் ஆச்சரியப்பட்டு, அந்த இருபெண்களையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

தங்கள் வீட்டுக்குப்போன தாதிமார் இருவரும் நடந்த காரியத்தை எஜமானி யவர்களிடம் சொன்னார்கள். அன்றோடே விவாக நாட்டம் அவர்களைவிட்டு ஒழிந்தது. அந்தரங்கத்தில் நடந்த இந்தச்சம்பவம் பின்பு பகிரங்கப் படவே, ஹலறத்து பாத்திமதுஜோஹறா அவர்கள் காதிலும் விழுந்தது. உடனே அவர்கள் "இனி என் அனுமதி பெறாமல் அவருடன் ஒருவரும் போகவேண்டாம்" என்று கட்டளை பண்ணிவிட்டார்கள். அப்படியே எல்லாரும் அஞ்சியிருந்தார்கள்.

அரம்பையரைத் தெரிவித்தது முற்றிற்று.

---

## ௨௦-ம் அத்தியாயம்.

## முகாஷபா.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் முகாஷபாவிலுண்டான காட்சிவரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து பீருன்கல்தான் ஷாதுலியாவுது பாத்திமாஷா தாதிப ஆண்டவரவர்கள் முரீதாய்ச் சிலகாலஞ் சென்றபின் சற்குருவாகிய ஹலறத்தவர்கள் ஆண்டவரவர்களை இரண்டு வருஷம் வரையும் கித்மை யென்னும் புஷாருததாவில் வைத்துப் பழக்கினார்கள். அதன்பின் ஆண்டவரவர்கள் தங்களுக்கென்று நியமித்த தனியறையி லிருந்து இபாதத் தச்செய்யுங் காலமெல்லாம் அடிக்கடி முஷாஹதா வுண்டாய்க் கொண்டிருந்தது.

ஒரு நாளிரவு ஆண்டவரவர்கள் இஷாதொழுது முடித்து, ஒளிபாக்களை ஓதிவிட்டு, மறுபடியும் அத்தஹியாத்துடைய இருப்பிலாகி, தங்கள் சிறப்பான தாடியை நெஞ்சாங்குழியில் பொருந்தும்படி வைத்துக்கொண்டு, தஹஜ்ஜத்து நேரம்வரையும் ஒரேபடி ஷுஹூதில் இருந்துவிட்டார்கள். தஹஜ்ஜத்து நேரமானவுடன் அவ்விருப்பைவிட்டு எழுந்து, அந்தநேரத்துத் தொழுகையைத் தொழுதார்கள். தொழுது முடிந்தவுடன் ஆண்டவரவர்கள் பின்புறம் திரும்பிப்பார்த்து "அங்கேயிருக்கிறவர் முசனுத்தீனா?" என்று கேட்டார்கள். அங்கு உட்கார்ந்திருந்த அவர் "ஆம், எஜமானவர்களே" என்று விடை கொடுத்துவிட்டு, மறுபடியும் ஆண்டவரவர்களை நோக்கி "எஜமானவர்களே இன்றிரவிலுண்டான முகாஷபாவில் தாங்கள் கண்ட காக்ஷிகளை இந்த அடிமைக்குச் சொல்லும்படி மன்றாடுகிறேன்" என்றார். ஆண்டவரவர்கள் முசனுத்தீனைப் பார்த்துத் தாங்கள் கண்ட முகாஷபாவைச் சொல்லுகின்றார்கள்.

முசனுத்தீனே, கேட்பீராக. இன்றிரவு முராக்கபாவிருந்துடைய ஆரம்பத்தில் கலிறு அலைகிஸ்ஸலா மவர்கள் என்னிடம் வந்து, அல்லாகுத்தஆலாவுடைய ஸலாமும், தங்கள் ஸலாமும், நன்மாராயங்களும் எனக்குச் சொன்னார்கள். அப்போது எனக்கு மறைவாயிருந்த திரைகளெல்லாம் ஒவ்வொன்றாய்த் திறந்தன. நான் பூமிமுழுவதையும் சுற்றிப்பார்த்து, வானத்திற்குப் போனேன். அங்கே ஏழுவானங்களையுஞ் சுற்றி, அங்கங்குள்ள அற்புதங்களை யெல்லாம் கண்டேன். பின் அங்கிருந்து மகத்துவம் பொருந்திய மகாமுல் அஃறுறு என்னும் தானம் போய்ச் சேர்ந்தேன். அங்கே எனக்குக் கிடைக்கவேண்டிய பதவிகளெல்லாம் கிடைத்தன. அவற்றை நான் பெற்றுக்கொண்டு அங்கேயே தரிபட்டிருந்து, இறந்தகாலத்து ஒளியாக்கள் அனைவரையுங் கண்டு, ஒவ்வொருவருக்கும் ஸலாம் சொல்லித் தரிசனை செய்தேன். அவர்களெல்லாம் எனக்குப் பிரதிஸலாம் சொல்லி, ஒருவரொருவராக அவரவரை எனக்குத் தெரிவித்தார்கள். அப்போது, சுல்தானுல்லாரிபீன், சைகு அபாயசீ

துல்புஸ்தாமி றழியல்லாகு அன்கு அவர்களும், அவர்களைச் சேர்ந்த ஆரிபீன்களும் என்னைப் பாராட்டிப் பெருமை யாக்கி, என்னைப்பார்த்து "ஷாதுலீயுடையே, அறிவீராக; தன்யானிலுள்ள ஒருவன், அவன், வணக்கங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டு குத்பியத்தைப் பெற்றுக்கொண்டாலன்றி, இந்த உன்னத பதவியிலுயர்ந்து இங்கே வரமாட்டான்" என்று சொல்லி, சந்தோஷங் கொண்டாடினார்கள். மறுபடி யும் அங்கே இவ்வாறுக நான், ஸைகு சல்மான் இபுறு ஹீமிபுனு அஸ்ஹம், ஸைகு குவாஜா முஈனுத்தீன்சிஸ்தி, ஸைகுகுவாஜா குத்புத்தீன், ஸைகு அபாஅபுபுன்னஜுஷபீ, ஸைகு அப்துல்வாஹிது புனுஸைது, ஸைகு அபா இஸ் ஹாக்கு, ஸைகு தாவூதுத்தாயி, ஸைகு ஹபீபுல் அஜமி, ஸைகுஅபுல்பஹுலு, ஸைகு பீறுத்தீன் அத்தாரி, ஸைகு அலி யுல்குர்தீ, ஸைகு புலைலிபுனு இயாலு, ஸைகு ஸபீயுத்தீன்; ஸைகு நஸ்றுத்தீன், ஸைகு கப்பாறு, ஸைகு மாலிக்கிபுனு தீனார், ஸைகு முகம்மது ஈஸாதாகிறு, ஸைகு அபுல்ஹஸன் கிர்கானி, ஸைகு அபுல்காசிமுல்யமனி, ஸைகு அப்துற்ற குமானுல் மதனி, ஸைகு உவைசுல் கர்னி, ஸைகு அபுல்ஜ ஹ்ஹலில்காமிலி; ஸைகு ஸைபானிற்றுஇ, ஸைகு முகம்மதி புனுயாசிஇ, ஸைகு சுபியானித் தௌரி, ஸைகு அபுல்காசி முஞ் ஜாகிதி, ஸைகுகின்னுவாலில்மிஸ்ரி, ஸைகு அபூபக்கரின் வஜாசி, ஸைகு இமாதுத்தீனிஸ்ஸாலிஇ, ஸைகு அபிஸா லிகு மூசாஜங்கி, ஸைகு நஸ்முத்தீனுல் இஷ்கி, ஸைகு பது றுத்தீனுல்சிஸ்தி, ஸைகு ஷகீகில்பல்கி, ஸைகு மஹ்றூபுல் கர்கி, ஸைகு சிற்றிஸ்ஸகிதி, ஸைகு சுகைனுல்வர்தி, ஸைகு ழிலாமுத்தீனுஸ்ஸூபி, சுல்தா னுல்லாரிபீன் ஸைகு ஸையிது அகுமது கபீறுர்ரிபாயீ ஸைகு அபீஸகியால் முபாறக்கல் மகு ஜூமி, ஸைகு யகியாபுனுமீ ஆது, ஸைகு மஃரூபுல்கல்லாஜி, ஸைகு அருமதுத்ஜைதகி, ஸைகுல் அக்பர் முகியித்தீனிபுனு அறபி, ஸைகு ஹஸனில் பசரி, ஸைகு யகியாபுனு அக்தமி,



ஸைகு உமறிபுனு அப்துல் அஜீஜில்மிஸ்ரி, ஸைகு அபூபக் கரிஷ்ஷிப்லி, ஸைகு பிஷ்றுல்ஹாபி, ஸைகு சுனைலிபுனு அப்துல்லாகில்துஷ்தரி, ஸைகு சஉதுல் மஜ்னூனி, ஸைகு பகுறுல்மப்தூனி, ஸைகு அருமதுல் கர்கி, ஸைகு மகுறூ துல் ஆரிபி, ஸைகு அருமதுஷ்ஷாத்தாறி, ஸைகு ஜுனை துல் பகுதாதி, ஸைகு உதுமான் அலிய்யுல்பாகி, ஸைகு அபூ இஸ்ஹாக்குஷ் ஷாத்தாறி, ஸைகு அப்துல்லாகில் ஹனபி, ஸைகு நஜ்முத்தீனுல் பிர்தௌசி, ஸைகு அலாவுத்தீனுத் தூசி, ஸைகு ழியாஉத்தீனுச்சிஸ்தி, ஸைகு வஜ்குத்தீனுல் இஷ்கி, ஸைகு மும்லாதுல் உலூவி, ஸைகு அருமதுசிஸ்தி, ஸைகு அலிய்யுல் கின்னூறி றழியல்லாகு அன்கும் இத்தனை மகான்களையும், இவர்களையொத்த இன்னுமுள்ள குத்புகளை யும், கௌதுகளையும், ஔலியாக்களையும் திரள் திரளாகக் கண்டேன். இவர்கள் எல்லாரும் என்னைச் சந்தித்துப் பெருமைப்படுத்திக் கொண்டாடினார்கள். பிறகு, என்பாட்டனார் சுல்தானுல் ஔலியா, குத்புல் அக்தாபு, கௌதுல் அகுலம், ஸையிது முகியித்தீன் அப்துல் காதிறு றழி யல்லாகு அன்கு அவர்களையும், அவர்கள்கூட இன்னுஞ் சில ஔலியாக்களையும் கண்டு, அவர்களைச் சந்தித்து ஸலாம் சொன்னேன். அவர்க ளெல்லாரும் எனக்குப் பிரதி ஸலாம் சொன்னார்கள். அப்போது என் பாட்டனா ரவர்கள் என்னைப் பார்த்து "என் அருமை மகனே, உம்மை யும், உமது கருமங்களையும் அல்லாகுத்தஆலா ஏற்றுக் கொண்டான். அன்றியும் உமக்கு உன்னதமான பதவி களைக் கொடுத்து, குத்பாகவும், கௌதாகவும் உம்மைத் தெரிந்து கொண்டான். அவனிடம் நீர் சங்கை பெற்றிருப் பதற்காக வேண்டி உம்மை உயர்த்தும் பொருட்டு இந்த மகாமில் வந்து கூடியிருக்கிற ஔலியாக்களுக் கெல்லாம் நீரே இமாமாய் நின்று, இரண்டு றக் அத்துத் தொழுவி யும்" என்று சொல்லி, என்னை எல்லாருக்கும் முன்னே

கிறுத்தினூர்கள். நான் மரியாதைக்காக அப்படி நின்று தொழத் தாமதித்தேன். இதை யறிந்த பாட்டனூரவர்கள் பின்னும் என்னைப் பார்த்து ஷாகுல்ஹமீதே, இந்த நேரம் உம்முடைய நேரம். நீர் தாமதியாமல் தொழுது, துஆ கேட்டுக்கொள்வீராக" என்று ஏவினூர்கள். உடனே நான் அவர்களுக்கெல்லாம் இமாமாய் நின்று இரண்டு றக்அத்துத் தொழுது முடித்து, துஆ கேட்டேன்; அவர்களெல்லோரும் ஆமீன் கூறினூர்கள். அந்த நேரத்தில் அல்லாஹுத்த ஆலாவின் புறத்திலிருந்து எனக்கு ஆக வேண்டியவெல்லாம் ஆயின. மதுரமான பானகங்கள் கொணர்ந்து எனக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; மேலான உத்தரியங்கள் கொணர்ந்து எனக்கு போர்த்தினூர்கள்; அப்புறமான பரிமளாதிகளை என் மீது சொரிந்தார்கள். குத்பு என்றும், கௌது என்றும் என்னைக் கூப்பிட்டார்கள். அந்தத் தானத்தில் நான் பெறவேண்டியவெல்லாம் பெற்றேன். மலக்கூத்துடைய ஆலத்தையும் போய்ப்பார்த்தேன். பிறகு பைத்துல் மஃமூறு பள்ளியைப் பிரதக்ஷணம் செய்துகொண்டேன். அங்கே மலக்குகளைக் கண்டு, அவர்களுக் கெல்லாம் ஸலாம் சொன்னேன்; அவர்கள் எனக்குப் பிரதி சொன்னூர்கள். சில மலக்குகள் முந்தி எனக்கு ஸலாம் சொன்னூர்கள்; நான் பிரதி சொன்னேன். பின் அல்லாஹுத்த ஆலாவுடைய அற்புதங்களில் காணுதனவெல்லாம் அங்கே கண்டேன். ஒவ்வொரு அற்புதத்திற்கும் அவனைப் புகழ்ந்தேன். அதன் பின் நபிமார்களைக் கண்டேன். ஆதம், ஷீது, நூகு, இபுறாகீம், இதுரீசு, இஸ்மாயீல், இஸ்ஹாக்கு, யஃகூபு, யூசுபு, ஸக்கரிய்யா, யூனுஸ், துல்கிப்லி, ஸாலிகு, ஷுஐபு, உஜைறு, லூது, தாவூது, சுலைமான், மூசா, ஹாரூன், ஈசா அலைகிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் இவர்களையும், இன்னுஞ் சில நபிகளையும் கண்டு ஸலாம் சொன்னேன்; அவர்கள் எல்லாரும் எனக்குப் பிரதி சொல்லி, துஆ செய்தார்கள்.



நரகத்திற் புகுந்துப் பார்த்தேன். அதற்குப் பாத்திரமானவர்களுக்கு அங்கே தயார் செய்திருக்கிற யாதனைகளைக் கண்டு, பிழைபொறுக்கும்படி அல்லாஹுத்த ஆலா இடம் பிரார்த்தித்தேன். பின்பு, சுவர்க்கத்திற்புகுந்து பார்த்தேன். அதற்குப் பாத்திரமானவர்களுக்கு அங்கே தயார் செய்திருக்கிற சுகங்களைக் கண்டு அல்லாஹுத்த ஆலாவைப் புகழ்ந்தேன். பிறகு, சுவர்க்கத்து இராஜகுமாரர்களாகிய என் பாட்டன்மார் இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் றலியல்லாகு அன்ஹுமா இருவரையும், இமாம் ஜைனுல்ஆபிதீன், இமாம் முகம்மது பாகறு, இமாம் ஜஃபறு ஸாதிகு, இமாம் மூஸாகாளிம், இமாம் அலி மூஸற்ரிலா, இமாம் முகம்மது தகிஇ, இமாம் அலி நகிஇ, இமாம் ஹஸன் அஸ்கர் றலியல்லாகு அன்ஹும் இவர்களையும், இமாமுல் அஃலம் அபூஹனீபா நுஃமானிப்னுதாபித்து, இமாம் மாலிக்கு, இமாம் முகம்மது ஷ்ஷாபிஇ, இமாம் அகுமதுல் ஹம்பலி, இமாம் முகம்மதுல் கஸ்ஸாலி றலியல்லாகு அன்ஹும் இவர்களையும், மற்ற இமாம்களையும் கண்டு தரிசனை பண்ணி ஸலாம் சொன்னேன். அவர்களெல்லாரும் எனக்குப் பிரதி சொன்னூர்கள். அங்கே எனக்குக் கிடைக்க வேண்டியவெல்லாம் கிடைத்தன. பின் அங்கிருந்து மேன்மையும் மகத்துவமுமான மகாமுல் மஹ்மூது என்னும் தானம் போய்ச் சேர்ந்தேன். அங்கே அல்லாஹுத்த ஆலாவுடைய றசூல் சுல்தானுல்அன்பியாஇ, தாஜுல் அஸ்பியாஇ, அகுமதுல் முஜ்தபா, முகம்மது முஸ்தபா ஸல்லல்லாகு அலைகி வஸல்லமவர்களையும், அவர்கள் பக்கத்தில் அமீறுல் மூமினீன் அபூபக்கருஸ்ஸித்தீக்கு, உமறுபாறூக்கு, உதுமானிந்நூறைனி, அலியியில் முறுத்தலா, சஃது, சயீது, தல்ஹா, ஜுபைறு, ஆமிறு, அப்துற்றகுமான், ஹம்ஸா, அப்பாசு றலியல்லாகு அன்ஹும் இவர்களையும், இன்னுமுள்ள மேலான அஸ்ஹாபிமார்களையும் கண்டு, மிகத்தாழ்மையாய்.

நின்று ஸலாம் சொன்னேன்; எல்லாரும் எனக்குப் பிரதி சொன்னார்கள். அப்போது, காத்திமுல்லன்பியா, ஸையிதுல் முர்ஸலீன், முகம்மது முஸ்தபா ஸல்லல்லாகு அலைகி வஸல்லமவர்கள் என்னைக் கிட்ட அழைத்து, என் இரு புருவங்களுக்கு மிடையில் முத்தமிட்டு "என் சின்னமகனே, அல்லாகுத்தஆலா உமக்கு இருமையிலும் அருள் புரிவானாக. உம்மையும், உமது கருமங்களையும் அவன் பொருந்திக் கொண்டு, உம்மைகுத்பாகவும், கௌதாகவும் ஏற்றுக் கொண்டான்" என்று சொல்லி, அவர்களும் என்னை புவந்துகொண்டு, மஃரிபத்துடைய இல்முகளையும் எனக் குப் போதித்து, துஆ செய்தார்கள். அப்போதே எனக் குள்ள மனத்தினில் முதலான எவ்விதத் தீமைகளும் பற்றற்று, பரிசுத்தமான நேர்வழி திறந்தது. உடனே நான் அங்கிருந்து அல்லாகுத்தஆலாவின் ஸந்நிதிற்போனேன். அப்போது, அளவற்ற நிஃமத்துகள் என்மேல் சொரியப் பட்டன. பின் அல்லாகுத்தஆலா தனக்கு முன் என்னை நிறுத்திக்கொண்டு ஷாதுல்லமீதே, நான் உமக்கு வானங் களையும், பூமிகளையும் சுற்றிப்பார்க்க இடந்தந்து, அங்கங் குள்ள அற்புதங்களை யெல்லாம் நீர் காணும்படி வெளி யாக்கி, அவற்றை உமக்கு வசமாகச் செய்திருக்கின்றேன், அன்றியும், மண், நீர், நெருப்பு, காற்று என்னும் பூதங் களையும் உமது சொற் கேட்டு நடக்கக் கற்பித்திருக்கின் றேன். ஒன்றை ஒன்றாக மாற்றவும், இறந்ததை உயிர்ப் பிக்கவும், உயிருள்ளதை இறப்பிக்கவும் உமக்கு அதிகாரங் கொடுத்திருக்கின்றேன். இன்னும் உம்மை உயர்ந்த குத்பாக வும், கௌதாகவும் ஆக்கினேன். என்னை யறியும் இல்மு அவ்வளவையும் உமக்குத் தந்தேன் பின்னும் நீர் என்னிடத்து ஏதோ ஆவலாயிருக்கின்றீர். நல்லது; இன்னும் உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். அப்போது நான் "யா அல்லா, யாரஹீம், யாகரீம் உன்னைத் தவிர எனக்கு



யாதொன்றும் வேண்டியதில்லை. நீயேயன்றி எனக்கு வேறே யாருமில்லை" என்று பதில் சொன்னேன். அதற்கு அவன் "நீர் உண்மையான அடிமை; என்னைவேண்டி துன்யாவின் இச்சையைப் பற்றறவெறுத்து விட்டீர். பரி சுத்தமாக என்னை வணங்குகின்றீர். நான் உம்மை உவந்து ஒப்புக்கொண்டேன்" என்று சொல்லி, எந்தக் காலமும் அச்சந் தீர்தலையெனக்குத்தந்து, என்னை அனுப்பிவிட்டான் என்று இவ்வளவும் சொல்லி முடித்தார்கள். அப்போது ஹலறத்து ஆண்டவரவர்களின் திருமேனியில் நூதனமான பரிமளம் கமழ்ந்துகொண்டிருந்தது. என்றுமில்லாத சில அடையாளங்களும் காணப்பட்டன. முகம் பூரணமதி போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. முசனுத்தின் ஹலறத்து ஆண்டவரவர்கள் சொன்ன வரலாற்றைக் கேட் டுச் சந்தோஷமடைந்து, மேனியின் பரிமளாதிகளைக்கண்டு புதுமையாய், அவர்களின் சிறப்பான இரு கரங்களையும் பிடித்துக் கண்ணில்வைத்து முத்தமிட்டுக்கொண்டு, தமக் காக துஆ இரந்தார்.

முகாஷபா முற்றிற்று.

௨௭-ம் அத்தியாயம்.

## மீட்சி.

[இவ்வத்தியாயம் ஹஸறத்து ஆண்டவரவர்கள் ஞானதேசிகரின் உத்தரவுபெற்றுக் குணங்குடியைவிட்டு மாணிக்கபுருக்கு மீண்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹஸறத்து ஸையிது ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் பாதுஷாசாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் சற்குருவாகிய ஹஸறத்து ஸையிது முஹம்மது கௌது சாகிபவர்களிடத்தில் *பத்து வருஷம் இருந்தார்கள். இதற்கிடையில் ஆசிரியர் வழியாக் கற்றறியவேண்டிய சகல இல்முகளையும் குறைவறக்கற்று, இனிக் கற்கவேண்டிய தொன்றுமில்லை யென்னும்படி நிரப்பமானார்கள். தங்கள் இயற்கையினாலும், ஆசிரியர் சகவாச முதலிய செயற்கையினாலும், நிறைவுடைய கருமங்கள் முழுதும் சித்தியாயின.

ஒரு நாள் ஹஸறத்து ஆண்டவரவர்கள் தங்கள் ஞானதேசிகர் சமுகத்திற் போய் ஸலாம் சொல்லிப் பணிந்து நின்று: அடியேன் பிதாமாதாக்களைக் காண்பதற்காக மாணிக்கப்பூருக்குப் போகப் பிரியப்படுகிறேன். தேவரீர் உத்தரவருள வேண்டும் என்று கேட்டார்கள். கிடைப்பதற்கரிய தங்கள் அருமை மாணாக்கர் சுயவூருக்குப்போக உத்தரவு கேட்டபோது ஹஸறத்தவர்கள் சந்தோஷமடைந்து ஆண்டவரவர்களை நோக்கி: ஸையிது அப்துல்காதிரே, உமது பிரியப்படி போய்வாரும் என்று உத்தரவுகொடுத்துவிட்டு, பின் அவர்களுக்குச் செய்யவேண்டிய கருமங்களில் பிரதானமாயிருந்த கிலாபத்துக் கொடுத்தல் முதலானவைகளைச் செய்து முடிக்கத் தொடங்கினார்கள்.

*பத்து வருஷம் இருந்தார்களென்று பல ரிசாலாக்கள் சொல்லுகின்றன. இரண்டு ரிசாலாக்களில் மாத்திரம் இரண்டு வருஷம் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.



ஞான குருவாகிய ஹஸறத்து முஹம்மதுகௌது சாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் அருமந்த சீஷராகிய ஹஸறத்து ஸையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களை அமீறுல் மூமினீன் அலிறலியல்லாகு அன்கு அவர்களிலிருந்து இமாம் ஹுஸைன் றலியல்லாகு அன்கு அவர்கள் வழியாய்வந்த சுத்தாரிய்யா, காதிறிய்யா என்னும் இரண்டு தரீக்குகளிலும் முந்தியே முரீதாக்கி, கிலாபத்துக்கொடுத்திருந்தது மல்லாமல், தாங்கள் கிலாபத்துப் பெற்றுள்ள பதினான்கு கான்வாதாக்களிலும் கிலாபத்துக் கொடுத்து, கலீபாவாக்கினார்கள். அந்த கான்வாதாக்களாவன :—

1. ஹபீபிய்யா.
2. தைபூரிய்யா.
3. கர்கிய்யா.
4. ஸிக்திய்யா.
5. ஜுனைதிய்யா.
6. காஜரூனிய்யா.
7. தூஸிய்யா.
8. பிர்தௌஸிய்யா.
9. ஸுஹரவர்திய்யா.
10. ஜைதிய்யா.
11. இயாலிய்யா.
12. அத்ஹமிய்யா.
13. ஹுபைரிய்யா.
14. சிஸ்திய்யா.

என்பனவாம். இந்த கான்வாதாக்கள் பதினான்கும் அமீறுல்மூமினீன் அலிறலியல்லாகு அன்கு அவர்களிலிருந்து ஹஸன்பஸரீ றலியல்லாகு அன்கு அவர்கள் வழியாய் வந்தவைகளாம்.

இவையன்றி, அமீறுல் மூமினீன் அபூபக்கர் றலியல்லாகு அன்கு அவர்கள் வாஸ்தாவிலுள்ள நக்ஷபந்திய்யா, அமீறுல் மூமினீன் உமறு றலியல்லாகு அன்கு அவர்கள் வாஸ்தாவி லுள்ள பாறூக்கிய்யா, அமீறுல் மூமினீன் உதுமான் றலியல்லாகு அன்கு அவர்கள் வாஸ்தாவிலுள்ள ஹம்தானிய்யா, உவைசுல்கர்னி றலியல்லாகு அவர்கள் வாஸ்தாவிலுள்ள உவைசிய்யா என்னும் இந்தத் தரீக்குகளிலும் ஆண்டவரவர்களை முரீதாக்கி, கிலாபத்துக் கொடுத்தார்கள்.

[இன்னும், அருமதிய்யா, ருபாஇய்யா, சக்ஷபத்திய்யா என்பன முதலிய பலவேறு வகைப்பட்ட தரீக்குகள் அநேகமுண்டு. ஆண்டவரவர்கள் மேற்கூறிய தரீக்குகளில் மாத்திரம் கிலாபத்துப் பெற்றதாகச் சொல்லப்படுகின்றதன்றி, மற்றத் தரீக்குகளில் முரீதாய்க் கிலாபத்துப் பெற்றதாக ஒரு கிரந்தத்திலுஞ் சொல்லப்படவில்லை.]

ஞானாசிரியர் அருமை மாணாக்கராகிய ஹலறத்து ஆண்டவரவர்களைக் குருத்துவத்தில் நிலை நிறுத்தத்தக்க சடங்குகள் அனைத்தையுஞ் செய்துமுடித்து, கடைசியாகப் போதிக்கவேண்டிய விஷயங்களை ஆரம்பித்து அல்லாஹுத்தஆலாவை வணங்கும் வணக்கத்தின் அந்தரங்கங்களையும், இல்லறம் நீத்துத்துறவறம் பூண்டு வனசஞ்சாரிகளாய்த் திரிந்து காலங்கழிப்பவர்களின் இயற்கை செயற்கைகளையும், அவர்களின் பராக்கு இன்ன தென்பதையும், அவ்பாக்களை நியமனமாக ஓதிவரும் இலக்ஷணம் இன்னதென்பதையும், இருந்தோதுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் நாட்கணக்குகளையும், ஜின்களும், ஷைத்தான்களும், வசப்படுவதற்காக ஏற்பட்டிருக்கும் அவ்பாக்கள் இவையென்பதையும், அவற்றை ஓதும் வகை இன்னதென்பதையும் எழுத்தைக்கொண்டும், சொல்லைக் கொண்டும், பொருளைக் கொண்டும், இலக்கத்தைக் கொண்டும், கோடிகோடி அவ்பாக்களை யடைக்கும் விவரங்களையும் தெளிவாக வுணர்த்தினார்கள்.

அதன்பின், நபிமார்களுடையவும், குத்புமார்களுடையவும், ஒலிமார்களுடையவுமான இயற்கை செயற்கைகள் இன்னின்னவை யென்று தெரிவித்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் திருவாய் மலர்ந்து "எனக்கு குறுஆன் இறங்குமுன் ஷைத்தானுடைய இல்மு என் இருதயத்திற் குடிகொண்டிருந்தது. அதைக் கொண்டே நான் எல்லாவற்றையும் அறிந்தேன்" என்று பாராட்டிச் சொன்ன இல்முஷைத்தானையும் உணர்த்தி, அனுபவ



என்னும் நீர்முதலான நான்குவகைப் பூதங்களினால் எழுவகையாய்ப் பிறக்கும் சர்வஜீவராசிகளின் அந்தரங்கங்களையும், மற்றைய சிருஷ்டி வர்க்கங்களின் அந்தரங்கங்களையும் தெரிவிக்கிற ஸிர்றுல்ஹயாத்து என்னும் இல்மையும் தெள்ளத் தெளியக் கற்பித்து, ஆபிதீன்களுடைய இபாதத்து விவரமும், ஸாஹிதீன்களுடைய ஜுஹுது விவரமும், தாயிபீன்களுடைய தவ்பத்து விவரமும், முஹக்கிகீன்களுடைய அமலின் ஹக்கை ஆதனங்கொள்ளும் விவரமுமாகிய ஐந்து பொருட்களையும் ஐந்து ரத்தினமாகக் கொண்டு பஞ்சரத்தினம் என்னும் அர்த்தமுள்ள ஜவாஹிறுல் கம்ஸா என்று பெயரிட்டுத் தாங்கள் இயற்றிய கிதாபையும் கொடுத்து: ஷாதுல்ஹமீதே, இந்தக் கிதாபை நீர் மிகவு முவந்திரும் என்று கட்டளை பண்ணினார்கள்.

பிறகு சற்குரு வவர்கள் தங்கள் கல்விச்சாலையில் கல்விபயின்றுகொண்டிருக்கும் நானூறுபேர்களடங்கிய ஒரு கூட்டத்தாரை அழைத்து ஆண்டவரவர்கள் முன்விட்டு: ஷாதுல்ஹமீதே, இவர்கள் இன்னிடம் தீக்ஷை பெறுவதற்காகவந்து கல்விகற்றுக் கொண்டிருக்கிறவர்கள். இவர்களுக்கு நீர் உபதேசஞ்செய்து முரீதாக்குவதை நான் விரும்பியிருக்கின்றேன். இவர்களை இன்னாரென்று நீர் அறிவீரா? என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவரவர்கள் ஆசிரியரை நோக்கி: நாயகமே, நான் இவர்களை அறிந்திருக்கவில்லை என்று வதில் சொன்னார்கள்.

சற்குருவவர்கள் ஆண்டவரவர்களை நோக்கி: ஷாதுல்ஹமீதே, இவர்கள் மாணிக்கப்பூரைச்சேர்ந்த அடர்ந்த வனத்திற் குடியிருந்துகொண்டு, வழிப்போக்கர்களை அடித்துப் பறிக்கும் திருடர்கள். இவர்கள் செய்யும் அவ்வதிக்கிரமம் நான்குநாள் அதிகப்பட்டுவந்தாலும், இவர்களை யடக்க வேறுவழி யில்லாததாலும், நான் அல்லாஹுத்தஆலா இடம் பலதரம் கையேந்தி "யா அல்லா, வனத்திலிருந்து

கொண்டு மனிதர்களுக்கு விலங்கஞ்செய்கிற இந்தத் திருட்டுத் துஷ்டர்களைத் திருத்தி, நேர்வழியில் ஆக்கியருள்" என்று இரந்து கேட்டு வந்தேன். என் இரப்பாகிய துஆ ஒப்புக்கொள்ளப்பட்டு, இவர்களெல்லாரும் திரண்டு; நேர்வழி பெறுவதற்காக என்னிடம் வலியவந்து சேர்ந்தார்கள். இவர்களெல்லாரையும் கலிமா சொல்லுவித்து, தீனுல்இஸ்லாமில் சேர்த்தேன். இவர்கள் உண்மையுள்ள முஸ்லிம்களா யிருக்கின்றார்கள். இனி நீரே இவர்களை முரீதாக்கி, உமக்குச் சிஷர்களாகவும், வழித் தோழர்களாகவும் நியமித்துக் கொள்வீராக" வென்று சொல்லி முடித்து, அந்த நானூறுபேர்களையும் ஆண்டவரவர்கள் வசம் ஒப்படைத்து விட்டு, பின்னும் தங்களிடம் முரீதாகவந்து காத்திருக்கும்* முசய்யத்தின்; இபுறுகீம், முகம்மது ஹைவன் முகம்மது ஹாமென் என்னும் நால்வரையு மழைத்து ஆண்டவரவர்கள் கைபிற்பிடித்துக் கொடுத்து: ஷாதுல் ஒலியே, இந்த நால்வரும், அல்லாகுத்த ஆலா புறத்தில் ஆகிக்கான பாரவான்கள். இவர்களை உமக்கு கலீபாக்களாக நீர் நியமித்துக்கொள்ளுமென்று கட்டளை பண்ணினார்கள்.

இவ்வளவு மானபின், சற்குருவவர்கள் தங்கள் மாணாக்கராகிய ஆண்டவரவர்களை நோக்கி: ஷாதுல்ஒலியே, உம்மையும், உமது அமலையும் அல்லாகுத்த ஆலா பொருந்திக் கொண்டான். நீர் குத்பாகவும், கௌதாகவும், ஏற்றுக் கொள்ளப் பட்டீர். உமக்கு அவன் தருமத்துச் செய்வானாக வென்று சொல்லி துஆ செய்து, பின்வருமாறு சில போதனைகளைப் போதித்தார்கள்.

ஷாதுல் ஒலியே, நீர் குத்பாய் உயர்ந்த பதவியைப் பெற்ற போதிலும், சாமானிய மனிதர் நடந்துகொள்ள

* இவர், ஆண்டவரவர்கள் மாணிக்கப்பூரிலிருந்து வரும்போது வழியில் வந்து கூடி, உடனிருந்த முசய்யத்தின் என்பவரே.



வேண்டிய ஒழுக்க வழக்கங்களைக் கைவிடாதீர். பிதா மாதாக்களுக்கும், பந்துமித்திரர்களுக்கும், நன்றி செய்கிறவராயிரும். அல்லாகுத்த ஆலா வுடைய கிதாபாகிய குறுஆனைக் கொண்டும், நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களுடைய சுன்னத்தைக் கொண்டும்; குலபாஉர் றாஷிதீன்களுடைய அமல்களைக் கொண்டும், இமாம்களுடைய இஜ்திஹாதைக்கொண்டும், ஷரீஅத்தைத் தொடர்ந்து கொள்ளும். எந்த நேரமும் அல்லாகுத்த ஆலாவின் வணக்கத்திற் பராக்காயிரும். எந்த நிமிஷமும் அவனை திக்று செய்கிறவராயிரும். அந்தந்தத் தொழுகையை வேளை தவறாமல் இமாம்ஜமாஅத்தாத் தொழும். சுன்னத்தான கருமங்களில் ஒரு சிறு கருமத்தையும் விடாதீர். பகற்பொழுது முழுவதும் உபவாசமாயிரும். இராப்பொழுது முழுவதும் வணக்கத்திற் பராக்கான விழிப்புடனிரும். ஹஜ்ஜை நிறைவேற்றும். ஜகாத்தை இடைவிடாமற் கொடும். மனிதர்களுக்கு நேர்வழி காட்டி, அல்லாகுத்த ஆலா புறஞ்சேர்க்கிற காரியத்தில் முயன்று நில்லும். மார்க்கத்தைக் காக்கிறவராயிரும். ஒருவரை நேசித்தீரானால், அவருக்கு நேரிடும் எவ்வித வில்லங்கத்தையும் நீக்கி, மனங்குளிர உபகாரஞ்செய்யும். நீர் சோதிக்கப் படுவீரானால், பதறாமல் பொறுமையோடிரும். அன்றாடகம் கிடைக்கிற இரணத்தை உரிமையுடையோருக்குப் பகிர்ந்துண்ணும். உமக்குக் கிடைக்கும் நிகுமத்துகளுக்காக அல்லாகுத்த ஆலாவுக்கு எப்போதும் சுக்று செய்கிறவராயிரும். வணக்கஞ் செய்கிற வஹதானியத்தின் விரிப்பில் உள்ளச்சமுள்ளவராயிரும். எளியோர்கூட்டத்தை உவந்திரும். சையிது அப்துல் காதிரே, உமக்கு அல்லாகுத்த ஆலா கிருபை செய்வானாக. உம்முடைய காரியங்கள் உயர்வனவாக. உம்முடைய கருமங்கள் சிறப்படைவனவாக. உம்முடைய இபாதத்துகள் ஓங்கி வளர்வனவாக வென்று சொல்லி, மனங்குளிர்ந்து வாழ்த்தி ஆசீர்வதித்தார்கள்.

அதன்பின், மறுபடியும் ஞானதேசிக ரவர்கள் தங்கள் சிஷ்ராகிய ஆண்டவரவர்களை நோக்கி ஹாதுல் ஹமீதே, நீர் விவாகஞ் செய்யப் பிரியமில்லாதவரா யிருக்கின்றீர் உம்மி லிருந்து ஒரு ஆண்பிள்ளை உண்டாக வேண்டிய தாயிற்று. 'யாகுறுஜு மின்ஹுமா' என்னும் ஆயத்தில் 'முதுகந்தண் டிலிருந்தும், மார்பெலும்பி லிருந்தும், பிள்ளை வெளிப்படும் என்று அல்லாதஆலா சொல்லுகிறபடி அந்தப்பிள்ளை வெளியாகவேண்டுமே? அதற்கென்ன செய்வீர்?" என்று கேட்டார்கள். அப்போது ஆண்டவரவர்கள் ஆசிரியரை நோக்கி "திரிகால வர்த்தமானங்களையும் அறியும் தகுதியுள்ள தேவரீருக்குத் தமியேன் யாது சொல்லப் போகின்றேன்! * 'வமரியமபினத' என்னும் ஆயத்தின்படி அல்லாதஆலா அந்தப்பிள்ளையை வெளிப்படுத்துவான்" என்று வதில் சொன்னார்கள். இதைக் கேட்ட ஆசிரியரவர்கள் களிகூர்ந்து "ஹாதுல்ஹமீதே, உமக்குப் பிரியமான இடத்தில் அதனைச் சேர்ப்பியும்" என்று கட்டளை பண்ணினார்கள்.

எல்லாக் கருமங்களும் முடிந்தபின், ஆசிரியராகிய ஹலறத்து ஸையிது முஹம்மதுகௌது சாஹிபவர்கள் தங்கள் கிடைத்தற்கரிய சிஷ்ர் சிகாமணியான ஹலறத்து ஸையிது ஹாதுல்ஹமீது ஆண்டவரவர்களுக்குப் பெரும் விருந்து கொடுத்து, மேற்கூறிய நானூற்று நால்வரையும் கூடச் சேர்த்து மனமகிழ்ச்சியோடு பின்னும் ஆசீர்வதித்து, மாணிக்கப்பூருக்குப் பயண மனுப்பினார்கள். ஆசிரியரவர்களைப் பணிந்து ஸலாம் சொல்லிக்கொண்டு பிரியாவிடை பெற்ற ஆண்டவரவர்கள், தங்கள் கூட்டத்தார் நானூற்று

* இந்த ஆயத்தை ஆண்டவரவர்கள் சொன்ன கருத்தாவது:- மரியம் புருஷசம்பந்த மில்லாத கன்னியாயிருக்க எப்படி ஒரு பிள்ளையை அவர் வயிற்றில் அல்லாதஆலா அமைத்தானோ அப்படி நான் ஸ்திரீ சம்பந்த மில்லாத பிரமசாரியாயிருக்க என்னிடமுள்ள பிள்ளையையும் வெளியாக்குவான் என்பதேயாம்.



நால்வரும் புடைசூழ்ந்து வரும்படி குவாலீர் நகரத்தை விட்டு* பிரயாண மானார்கள்.

நானூற்று நால்வர் திரண்ட ஒரு கூட்டத்துடன் குவாலீரி லிருந்து புறப்பட்ட ஹலறத்து ஆண்டவரவர்கள் பாதைக ளனைத்தையும் நடந்து கடந்து, பலநாட்களுக்குப் பின் மாணிக்கப்பூரிற் போய்ச் சேர்ந்தார்கள். தங்கள் அருமைப்புத்திரர் பலவருஷங்களுக்குப்பின் பெருந் திரளான ஒரு கூட்டத்தாருடன் வந்து சேர்ந்ததனால் பிதா மாதாக்கள் இருவரும் ஆநந்தசாகரத்தில் மூழ்கி, அல்லாதஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள். ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாரை மாணிக்கப்பூருக்குள் வசதியான ஒரு தலத்தில் தங்கியிருக்கக் கட்டளை பண்ணிவிட்டு, தங்கள் மாளிகைக்குப் போய்ப் பிதா மாதாக்கள் இருவரையும் † சந்தித்தார்கள். நெடுநாட் பிரிந்திருந்த தங்கள் அருமைப் புத்திரரை இருவருந் தழுவி, இழந்ததனை எய்தினாற்போலச் சந்தோஷமுற்று அன்பு பாராட்டினார்கள்.

பிறகு ஆண்டவரவர்களின் தந்தையாராகிய ஹலறத்து ஸையிது ஹஸன்குத்தூஸவர்கள் தங்கள் மைந்தருடன் வந்த நானூற்று நால்வரும் சாகைபண்ணிக்கொண்டிருக்கத் தங்களுக்குச் சொந்தமான ஒரு தோட்டத்தைக் கொடுத்தார்கள். அந்த அழகிய பூங்காவில் அவர்கள் சாகைபண்ணி யிருந்தார்கள்.

மீட்சி முற்றிற்று.

* ஹிஜுறத்துத் தொளாயிரத்து நாற்பத்தேழாம் வருஷம், ஸவ்வால் மாதம், ஆறாந்திகதி, திங்கட்கிழமைப் பகல் பிரயாண மானார்களென்று துலாஸந்துல் கறாமாத்து என்னும் கிரந்தம் சொல்லுகின்றது.

† பிதாமாதாக்களை விட்டுப்பிரிந்து பதினெட்டு வருஷங்களுக்குப்பின் வந்து சந்தித்தார்களென்று துலாஸந்துல் கறாமாத்து என்னுங் கிரந்தம் சொல்லுகின்றது.

A7:332
N149



லேயே பாக்கு அல்லாமல், வேறு பாக்கில்லை. அவர்களுக்கு வனவாசப் பிரியமன்றி வேறு பிரியமு மில்லை. தபோதனர் என்னும் அரும்பெயர் அவர்களுக்கு ஸ்தாபகமானது. அப்பெயருக்கு அவர்கள் அருகராயிருந்தார்கள்.

தபோதனர் நியமிப்பு முற்றிற்று.

---

௨௩-ம் அத்தியாயம்.

## பந்தலையெரித்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் கலியாணத்திற் சென்று அலங்கரித்திட்ட பந்தலைப் பார்வையால் எரித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷா ஆகிய ஆண்டவரவர்கள் தங்கள் சிஷர்களாகிய தபோதனரென்னும் பக்கீர்கள் நானூற்று நால்வரும் பக்தியில் உயர்ந்தவர்களானதால் அதிக ஆனந்த மடைந்தவர்களாய், பிரதிதினமும் அவர்களிருக்கும் தோட்டத்திற் போயிருந்து, அவர்களுக்குப் போதனுப் பிரசங்கஞ்செய்து வருவார்கள்.

ஒரு நாள் ஹலறத்து ஆண்டவரவர்கள் தோட்டத்தில் பக்கீர்களுக்குப் போதனுப் பிரசங்கஞ் செய்துவிட்டு, அங்கிருந்து தங்கள் மனைக்கு வந்தார்கள். அவ்வேளை சாயங்கால வேளையா யிருந்தது. மனைக்கு வந்தபோது, மனை வாசலில் அலங்காரமான பூம்பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. அன்றியும், பந்துஜனங்களும், ஊரிலுள்ள பெரிய மனிதர்களும், திரளாய் அங்குவந்து கூடியிருந்தார்கள். மனை முழுவதும் கண்ணுக் கலங்காரமாகச் சோடிக்கப்பட்டிருந்தது. இன்னும், விருந்து கொடுப்பதற்காகச் சோறு கறிகள் சமைப்பதற்கான சர்வ எத்தனங்களும் நடந்து கொண்டிருந்தன. நினைவுப்பிரகாரம் தங்கள் வீட்டில் மிக



மும் இந்த நூதனக் காட்சியை ஆண்டவரவர்கள் கண்டு, இவை எதற்காகவென்று கவனிக்காமல் மனைக்குட்புகுந்து, முந்தித் தந்தையைத் தரிசித்துக்கொண்டு, பின் தாயாரிருக்கும் அந்தப்புரத்திற்குப் போய் அவர்களைத் தரிசித்தார்கள்.

தாயாராகிய பாத்திமா தங்கள் மைந்தரை யழைத்து அருகிலிருத்தி என் கண்மணியான மகனே, அப்துல்காதிரே, நீர் அறியவில்லையா! இன்றிரவு உமக்கு விவாகஞ் செய்வதற்காக எல்லாம் தயாராய் முடிவாய் விட்டன. நமது மனையில் நீர் காண்கிற நூதனங்களுக்கு அதுவே காரணம். அல்லாகுத்த ஆலா உமக்கு றகுமத்துச் செய்வானாக என்று சொன்னார்கள். இச் சொல்லைக்கேட்ட ஆண்டவரவர்கள் உடனே தங்கள் கைகளை ஆகாயத்தில் ஏந்தி "யாறப்பி இர்ஹம்ஹுமா கமா றப்பயானீ ஸகீறா" என்று மூன்றுதரம் ஓதிவிட்டு, தாயாரைப் பார்த்து: அம்மா! என் இயக்க வொடுக்கங்களெல்லாம் அல்லாகுத்த ஆலாவுடைய இஷ்கிலேயே முழுகிக் கிடக்கின்றன. பெண்ணாசையுள்ளவர்களே விவாகஞ் செய்யலாமன்றி, உலக வாஞ்சையை முற்றிலும், வெறுத்த எனக்கேன் விவாகம்? ஹகீகியான இஷ்கைக்கொண்டு எந்த வேளையும் அல்லாகுத்த ஆலாவுக்கு நெருக்கமா யிருப்பதைவிட்டு, மஜாஜியான இஷ்கைக் கொண்டு அவனை விலகிப் போவதில் எனக்குப் பிரியமில்லை. அது காரியமுமல்ல. அவனுடைய அழகு என் கண்களிலும், அவனுடைய வசனம் என் நாவிலும், அவனுடைய உவப்பு என் இருதயத்திலும் பதிந்துபோயின. இனி அவனை நான் எப்படிப் பிரிவேன்! என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து எழுந்து தலைவாசலுக்கு வந்[illegible]ண்டவரவர்களின் கிராசையான பார்வை [illegible] டிருக்கும் பந்தல்மேல் விழுந்தது. [illegible]னே அப்பந்தல் [illegible]ரென்று நெருப்புப்பிடித்து, பற்[illegible]

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE MADRAS
110956

கலியாணப்பந்தல் அக்கினிபற்றிச் சாம்பலானதைக் கண்ட சர்வசனங்களும் ஆச்சரியத்தினால் திகில்பிடித்து, அதைப்பற்றி யாதொன்றும் பேசாதவர்களாய், ஹலறத்து ஆண்டவரவர்களை வியந்து, இவர்கள் பிரமசாரிய நிலையிலுள்ள மகத்துவமான ஒதூர் என்று பாராட்டிப் புகழ்ந்தார்கள். பிதா மாதாக்களும் அதைப்பற்றி ஒன்றும் பேசாதவர்களானார்கள். தங்கள் மைந்தர்மீது அவர்களுக்கு அச்சமும், பக்தியும் அதிகமாயின. அன்று முதல் விவாகமென்கிற பேச்சு ஒழிந்தது.

பந்தலையெரித்தது முற்றிற்று.

---

௨௯-ம் அத்தியாயம்.

## ஜின்கள் வழிப்பட்டது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பரதேச சஞ்சாரஞ்செய்ய மாணிக்கப்பூரைவிட்டுப் புறப்பட்டதும், ஜின்கள் வழிபட்டதும், அந்த ஜின்களிடம் சிறைப்பட்டிருந்த இராச குமாரத்தி மீட்சிபெற்றதுமான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாஹுல்ஹமீது பாதுஷா ஆண்டவரவர்கள் தங்கள் சீஷர்கள் நானூற்றுநான்கு பேர்களுடன் சிலகாலம் வரையும் மாணிக்கப்பூரில் பிதா மாதாக்களிடத்தில் இருந்தார்கள். பிறகு ஒரு நாள் தந்தை தாய் இருவர் சமுகத்திலும ஆண்டவரவர்கள் போய்ப் பணிந்து நின்று, ஸலாம் சொல்லி: என்மீது அன்புள்ள பிதா மாதாக்களே, தமியேன் பரதேச சஞ்சாரஞ் செய்யவும், மக்காவுக்குப் போய் ஹஜ்ஜு செய்யவும் நாட்டமுள்ளவனாயிருக்கிறேன். தேவரீர் இருவரும் மனமுவந்து எனக்கு உத்தரவு தரவேண்டும் என்று கேட்டார்கள். அதற்குப் பிதாவும் மாதாவும் சந்தோஷப்பட்டவர்களாய், தங்கள் அருமந்தகுமாரனை



நோக்கி: எங்கள் கண்மணியான மகனே, அப்துல் காதிரே, அல்லாகுத்த ஆலா உமது நாட்டத்தை நிறைவேற்றிக் கிருபை செய்வானாக. உமது எண்ணப்படி சிறப்புடன் போய் வாரும் என்று விடை கொடுத்தார்கள்.

பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் பிரயாணத்திற்காக ஒரு தினத்தைக் குறிப்பிட்டு, அன்றைத்தினம் பிரயாணமென்பதைத் தங்கள் கூட்டத்தாராகிய சீஷர்களுக்குத் தெரிவித்து, பிரயாணத்திற்கு வேண்டியவைகளைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட பிரயாண நாள் வந்தபோது அன்று தங்கள் பிதா மாதாக்களுக்கும், பந்து மித்திரர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயணஞ் சொல்லிக் கொண்டு, சீஷர்கள் நானூற்று நால்வருடன் மாணிக்கப்பூரை விட்டுப் புறப்பட்டார்கள்.

தங்கள் சுயநகரத்தை விடுத்துப் பரதேச சஞ்சார நோக்கத்துடன் பிரயாணப்பட்ட ஆண்டவரவர்கள், பெருந்திரளான சீஷர்கள் புடைசூழ மேற்றிசைநோக்கி நடந்தார்கள். அயோத்தி மாகாணத்திலிருந்து மேற்குப்புறம் போகிறபடியால், காடடர்ந்த மலைகளும், வனாந்தரங்களும், அகன்ற நதிகளும் பல குறுக்கிட்டன. அவற்றையெல்லாம் கடந்து ஆப்கானிஸ்தானுக்குப்போய், அங்கிருந்து பெலுஜிஸ்தானுக்குப்போய், அவற்றையுங் கடந்து பாரிஸி ராச்சியம் போய்ச் சேர்ந்தார்கள்.

பாரிஸி ராச்சியம் மகா செழிப்பும், அலங்காரமுமுள்ள குராஸான் முதலிய பல பகுதிகளடங்கின வளமான ஒரு அகன்ற தேசம். அது ஷீயா மதுஹபிலுள்ள ஷாஹா என்னும் பட்டவர்த்தனர்களால் ஆளப்படுவது. அதன் இராஜதானி திஹிறான் பட்டணம். அங்குள்ள குடிகள் முஸ்லிம்களும், அக்கினி யாராதனைகாரர்களான மஜூஸிகளுமே. அந்தப் பிரதேசத்தில் கண்ணுக் கலங்காரமான

தவழ் குன்றுகளும், தருக்களடர்ந்த வனங்களும், தெள்ளி ருவிகளும் அங்கங்கே யுண்டு. அல்லாதந்த ஆலாவை நாடித் துறவுபூண்டு வனவாசிகளாய்ப் போகும் மகான்களுக்கு அங்குள்ள அடவிகள் அதிக வசதியானவை. அஜம் என்னும் இந்திராச்சியத்து ஒலியாக்கள் பலர் அந்த அடவி களில் வாசஞ் செய்வதுண்டு. இவ்விதச் சிறப்புள்ள அந்த ராச்சியத்து அடர்ந்த வனங்களில் ஒரு வனத்தில் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் புத்திரர்களாகிய சிஷர் களுடன் போய் விடுதியிட்டுத் தங்கினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தப் பெர்ஷியாவின் அடர்ந்த வனத்தில் வாசஞ் செய்துகொண்டு சிலநாள் வரை யும் இருந்தார்கள். அங்கிருக்கும்போது ஒரு நாள் ஆண்டவ ரவர்கள் தங்களுக்கு வசப்பட்டிருக்கும் ஜின்களுள் தலைமையான ஸகர் என்னும் ஜின்னை யழைத்து: இந்த வனத்தில் இன்னவிடத்தில் ஆணும் பெண்ணுமாக எழுபத் தொரு ஜின்கள் குடியிருக்கின்றன. அந்த ஜின்களிடத்தில் மனித ஜாதியிலுள்ள ஒரு இராசகுமாரத்தி சிறைப்பட் டிருக்கின்றாள். நீ அங்கே போய், அந்த ஜின்களையும், அந்த இராசகுமாரத்தியையும், இங்கே கொண்டுவாவென்று கட்டளை பண்ணினார்கள். உடனே ஸகர்ஜின் எழுந்து விரைவாய் அங்கே போய், அந்த எழுபத்தொரு ஜின்களை யும், சிறையிருக்கும் பெண்ணையும் அழைத்துக் கொணர்ந்து ஆண்டவரவர்கள் சமூகத்தில் விட்டது. அந்த ஜின்களெல் லாம் ஆண்டவரவர்கள் சமூகத்தில் தலைசாய்த்துக் கைகட்டி நின்றன. சிறைப்பட்டிருக்கும் பெண்ணும் துக்க முகத் துடன் தலைவணங்கி நின்றாள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த ஜின்களைப் பார்த்து நீங்கள் எந்தக் கூட்டத்தார்? இந்தப் பெண் யார்? இவள் உங்கள் வசம் அகப்பட்டது எப்படி? என்று கேட்டார்கள்.



உடனே அந்த ஜின்களுக்குத் தலைமையானஜின் ஆண்டவ ரவர்கள் சமூகத்தில் வந்து தாழ்ந்துநின்று: நாங்கள் யகூதி மார்க்கத்திலுள்ள ஒரே குடும்பத்தார். வெகுகாலமாக இந்த வனத்திற் குடியிருக்கிறோம். இவர்களுக் கெல்லாம் நான் தான் தலைவன். இவள் ஒரு அரசன் புத்திரி. இவள்மீது நான் இச்சைகொண்டு, விவாகம் பண்ணிக் கொள்வதற் காகத் தூக்கிக் கொணர்ந்து எழுவருஷங்க ளாயின. இன் னும் இவள் ருதுவாகவில்லை. அதுவரையும் இவளை நெருங் காமல் காப்பாற்றி வைத்திருக்கின்றேன். இவளுக்கு ஆக வேண்டிய காரியங்களில் ஒருகுறைவுமில்லாமல் பரிபாலித்து வருகிறேன் என்று உண்மையை யொளிக்காமல் சொல்லிற்று.

இதைக் கேட்டபின் ஆண்டவரவர்கள் அந்த இராச குமாரத்தியைப் பார்த்து: நீ யார்? உன் காரியம் என்ன? சொல்லென்று கேட்டார்கள், அந்தப் பெண் ஆண்டவரவர் களை நோக்கி: எஜமானே, நான் இஸ்லாமானவள். என் பெயர் உம்முலுபீபா. என் தந்தை அருமதுலுபீபு என்பவர். எங்கள் குடும்பம் ஹபீபிய்யா என்னும் இராசகுடும்பம். என்தந்தை அறபிராச்சியத்திலுள்ள பஸ்ரா நகரத்தில் அமீரா யிருக்கின்றார். அவருக்கு நான் ஒரேமகள். நான் சின்னஞ் சிறிசா யிருக்கும்போது இந்த ஜின்வந்து என்னைத் தூக்கிக் கொணர்ந்து, இந்த வனத்தில் சிறை வைத்திருக்கின்றது. என் குடும்பத்தைவிட்டு நான் பிரிந்து எழுவருஷங்களா யின. இதற்கிடையில் மனிதர் முகத்தைக் கண்டறியேன் இன்றுதான் தங்கள் முகாரவிந்தத்தைக் கண்டேன். தேவரீர் எனக்கு மனமிரங்கி, இந்த ஜின்களை விட்டு என்னை நீக்கி, என்குடும்பத்தாரிடஞ் சேர்த்துவைக்க வேண்டும். இந்தச் சிறையிருப்பிலிருந்து என்னை மீட்டி ரக்ஷிப்பது தங் கள் கடன். இந்த உற்றசமயத்தில் தாங்கள் கிருபை செய் யாது விட்டால், நான் சாகும்வரையும் இந்த ஜின்களோ

டிருந்துவருந்துவேன். அப்படி நேரிடாமல் கிருபைவைத்து என்னை ரக்ஷிப்பீர்களென்று நம்புகிறேன் என்று கண்ணீர் விட்டு அழுது முறைப்பாடு பண்ணினாள். கலாபமயில் போன்ற இளங்குமரி இவ்விதப் பரிதாபத்துடன் சொன்ன சொற்களைக்கேட்ட அங்கடவரவர்கள் பின்னும் அந்த ஜின்களைத் திரும்பிப்பார்த்து, பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்கள் :—

ஜின்களே, அநியாய காரர்களை அடக்கியாள்கிற அதிகார வல்லவனாகிய அல்லாஹுத்த ஆலா ஒருவன் உண்டென் பதை நீங்கள் அறியவும், அவனுக்கு அஞ்சவும், ஒருவரும் உங்களுக்குப்போதிக்கவில்லையா? அவன் படைத்த படைப்புகளில் மேலான படைப்பாக மனிதர்களையும் ஜின்களையும் படைத்து, அவனையறிந்து வழிபட்டு வணங்க மனவறிவையுந் தந்து, விதிவிலக்குகள் இன்னின்னவையென்று பிரித்துணர்த்தி, வழிதவறாமல் நடப்பதற்கு நபிமார்களையும், வேதங்களையு மிறக்கிக் கிருபைசெய்திருக்க, அவன் கட்டளைக்கு மாறாய் நடந்து அவனுடைய சினத்திற்கு ஆளாவது என்ன மதிகேடு? அவன் விதித்த வழியில் ஒழுகி நடந்து இருமைப்பேறும் பெற்று, எக்காலமும் அழியா தநுபவிக்கும் சுவர்க்கவாழ்வை யடையாமல், மனவறிவின்றி யிழிந்த விலங்கினம்போல மனஞ்சென்ற வழியில் நடந்து, இருமையிலும் பெறு பேறு கெட்டுச் சீரழிந்து, எக்காலமும் அழியா தநுபவிக்கும் நரகபாதனையை யடையத்தக்க மனிதரையும், ஜின்களையும், அவன் ஒருபோதும் உவக்க மாட்டான். ஆதமுடைய சந்ததிகளான மனிதர்களில் அநேகர் வழிதவறி நரகத்திற்குப் பாத்திரரானாற்போல, ஜானுடைய சந்ததிகளான உங்களிலும் அநேகர் வழிதவறி, நரகத்திற்குப் பாத்திர ராகின்றார்கள். அவர்க ளெல்லாரும் விதிவிலக்குகளைப் போதித்துத் திருத்துவாருடைய போதனைக்குச் செவி சாய்க்கா



மல், மூடத்துவத்திற் கொண்ட கொள்கையின் பிடிவாதத்தினால் அப்படிக் கெடுகின்றார்கள். அல்லாஹுத்த ஆலாவுக்கு வழிபட்டு அஞ்சி நடவாத ஒருவன் பூமிப்பரப்பு முழுவதையும் கட்டியாள்கிறவனா யிருந்தாலும், ஒருபோதும் அச்சந் தீர்ந்திரான். பின் அவன் கை சேதப்பட்டுத் தேடி யொதுங்கும் புகலிடம் நரகமேயன்றி வேறில்லை. நரகம் எதற்காகப் படைக்கப் பட்டதென்று நீங்கள் நினைக்கின் றீர்கள்? அல்லாஹுத்த ஆலாவுக்கு மாறுசெய்யும் மனிதர்களுக்கும், ஜின்களுக்கு மல்லவா படைக்கப்பட்டது? சுவர்க்கம் படைக்கப்பட்டது அவனை வழிபட்ட பாக்கியவான்களுக் கல்லவா? வரம்பு கடந்து, அதிக்கிரமித்து, துஷ்டாட்டஞ்செய்கிற பாவிகள், அல்லாஹுத்த ஆலாவுடைய தண்டனைக்குத் தப்பமாட்டார்கள். இதனை நீங்கள் நன்றாயறியுங்கள். இது தீங்கான கருமம் என்று மனதறிந்ததும், அல்லது மேலோர் தெரிவித்ததுமாகிய ஒன்றை, உள்ள பலங்கொண்டு செய்துவிட்டால், பின்னுக்கு அதைப்பற்றிக் கேட்கப் படும்போது என்ன உத்தரம் சொல்வோமென்று, அதிக்கிரமித்து நடக்கும் எவனும் எண்ணிப் பார்க்கக்கடவன். ஜீவராசிகள் முழுவதும் பின்னுக்கு அல்லாஹுத்த ஆலாவிடம்போய்ச் சேரத்தான் வேண்டும். செய்த நன்மை தீமைகளைப்பற்றி அவனுக்குக் கணக்குக் கொடுக்கத்தான் வேண்டும். அவனவன் செய்த ஒரு சிறு நன்மையும் தப்பமாட்டாது; தீமையும் தப்ப மாட்டாது. அது அதற்குத் தக்க கூலி கொடுக்கவேபடும். அதை அதை அநுபவிக்கவே வேண்டும். உங்கள் சாதியல்லாத அந்நிய சாதியிலுள்ள ஒரு கன்னிகையை நீங்கள் பலவந்தமாகத் தூக்கிக் கொணர்ந்து வைத்திருந்து, பின் அவளுடைய அநுமதியின்றி அவளைப் புணரத் துணிவது எவ்வளவு பெரிய பாதகமான செயல்! இது உங்கள் புத்தியிற் படவில்லையா? இப்

படிப்பட்ட துர்ச்செயல் செய்யத் தகுந்தது தானென்று எந்த மார்க்கந்தான் சொல்லும்! ஆகையால், ஜின்களே, இனி நீங்கள் இவ்விதக் கருமங்களைவிட்டு நீங்கி அல்லாஹுத் தஆலாவுக்கு அஞ்சி வழிபடுங்கள். அதனால் உங்களுக்கு இம்மை மறுமைகளில் வேண்டியன வெல்லாம் கிடைக்கும்" என்று இந்த நற்போதனைகளைப் போதித்து, குர்ஆன் என்னும் பரிசுத்த வேதத்தில் ஓதிக்காட்ட வேண்டிய ஆயத்துகளை ஓதிக்காட்டி, நரகத்தைக்கொண்டு அச்சமும் சுவர்க்கத்தைக் கொண்டு ஆசையு மூட்டி, நெடுநேரம் வரையும் அறிவு சொன்னார்கள். இவ் வருமையான திருவசனங்கள் அனைத்தையும் அந்தத் தலைமையான ஜின்னும் மற்ற ஜின்களும் செவிசாய்த்து, உருக்கத்துடன் கேட்டுக்கொண்டு நின்றன.

ஹலறத்து ஆண்டவரவர்களின் இந்த நற்போதனை அந்த ஜின்களின் இருதயத்திற் புகுந்து, வேரூன்றிப் பதிந்தது. அப்போதே அந்த ஜின்களின் அஞ்ஞான விருள் நீங்கி, மெய்ஞ்ஞானசோதி குடிகொண்டது. உடனே எல்லா ஜின்களும் ஆண்டவரவர்களின் திருக்கரந் தொட்டுக் கலிமா சொல்லி, இஸ்லாம் மார்க்கத்தி லாயின. ஆண்டவரவர்கள் அந்த ஜின்களுக்கு தீனுல் இஸ்லாம் உடைய விதி விலக்குகளைக் கற்பித்து, இபாதத்து முறைமைகளையும் போதித்து, நேர்வழியில் தரிபடுத்தினார்கள்.

பிற்பாடு ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த இராச கன்னிகையைப் பார்த்து: நீ உன் குடும்பத்தாரிடம் போய்ச் சேர்ந்து கொள்கிறாயா? என்று கேட்டார்கள். அதற்கவள்: ஆம்; எசமானவர்களே, அதுதான் என் கோரிக்கை என்று பதில் சொன்னாள். ஆண்டவரவர்கள் இச் சொல்லைக் கேட்டு, உடனே முன்சொன்ன ஸகர் என்னும் ஜின் கையில் அவளைப் பிடித்துக்கொடுத்து: நீ இவளைக் கொண்டுபோய் அறபி ராச்சியத்து பல்வா நகரத்து அமீர் அகுமது ஹபீபு



வசம் ஒப்படைத்துவிட்டு, அவர் கைப்பட ஒரு கடிதம் வாங்கிவா என்று கட்டளை பண்ணினார்கள்.

ஸகர்ஜின் உம்முஹபீபா என்னும் இராச புத்திரியைத் தூக்கிச் சுமந்துகொண்டு ஆகாயவழியி லுயர்ந்து மறைந்தது. அப்படி மறைந்த ஜின் பாரிஸிராச்சியத்தைக் கடந்து ஆகாய மார்க்கமாகவே அறபி ராச்சியஞ் சேர்ந்து பல்வா நகரத்திற் புகுந்து அரமனையிற்போய், அங்கிருந்த அரசருக்குமுன் அவளை விட்டு நின்றது. ஏழு வருஷம் வரையும் காணமற் போயிருந்த தம்அருமைக் குமாரத்தி திடீரென்று ஒரு அன்னியனோடுவந்து நிற்கக்கண்ட அவள் தந்தையாகிய அரசர் ஆநந்தாச்சரிய மடைந்து மகளைக் கட்டித் தழுவிக்கொண்டு, ஆதிதொட்டு அந்தம் வரையும் நடந்த வர்த்தமானங்களையும், இப்போது கூடவந்து நிற்கும் மனிதன் யாரென்பதையும் அவளிடம் கேட்டார். அப்போது அந்தப்பெண் தன்னை ஜின் தூக்கிப்போனது முதல் இப்போது அங்கேவந்து சேர்ந்தது பரியந்தமுள்ள எல்லா வரலாறுகளையும், தன்னைச் சிறைமீட்டு ரக்ஷித்தது ஒரு மகாத்துமா வென்பதையும் தந்தைக்குத் தெரிவித்தாள். பின் அவர் மானிட வடிவங்கொண்ட தம் முன் நிற்கும் ஸகர்ஜின்னைப் பார்த்து, ஆண்டவரவர்களின் விருத்தாந்தங்களை யெல்லாம் விசாரித்தார். அதற்கு ஸகர்ஜின் ஆண்டவ ரவர்களின் வரலாறு முழுவதையும் சொல்லி, இப்போது அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் ஒப்படைத்துவிட்டு, கடிதம் வாங்கிவரச் சொன்னார்களென்று சொல்லி முடித்தது. ஸகர்ஜின் சொன்ன இவ் வர்த்தமானங்கள் அனைத்தையும் கேட்டு அகுமதுஹபீபு என்னும் அரசர் சந்தோஷப்பட்டு, தம் கைப்பட ஆண்டவரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தின் வாசகம் இது:—

" பிஸ்மில்லாஹி வல்ஹம்துலில்லாஹி, வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா முஹம்மதின் றசூலில்லாஹி. அஸ்ஸலாமு அலைக்க யாசையிதீ, தாங்கள் ஸகர்ஜின்வசம் அனுப்பிய எங்கள் உம்மு ஹபீபாவை நான் ஒப்புக்கொண்டேன். இப்படிக்கு பல்கா அமீர் அஹமது ஹபீபு " என்று இவ்வாறு அறபு பாஷையில் எழுதிக் கடிதத்தை மடித்து முத்திரையிட்டு, அதனை ஸகர்ஜின் கையிற் கொடுத்து மரியாதை பண்ணி அனுப்பினார்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் சமூகத்திலிருந்து உம்மு ஹபீபாவைத் தூக்கிக்கொண்டு எழும்பின ஸகர்ஜின் ஒரு சாமப் பொழுதில் திரும்பி வந்து, அஹமது ஹபீபு கொடுத்த கடிதத்தைக் கொணர்ந்து ஆண்டவரவர்கள் முன் வைத்துப் பணிந்து நின்றது. ஆண்டவரவர்கள் அந்தக் கடிதத்தை யெடுத்து முத்திரை விடுத்துப் பிரித்து, தங்கள் சிஷர்கள் அனைவரும் கேட்க வாசித்துக் காட்டினார்கள். பின் ஆண்டவரவர்களும், பகீர்களும் அதற்காக அல்லாஹுத்த ஆலாவைப் புகழ்ந்து சுஜூது செய்து, சுக்றும் செய்தார்கள்.

ஜின்கள் வழிபட்டது முற்றிற்று.

---

## ௨௫ - ம் அத்தியாயம்.

## சிறுபெண்ணை ரக்ஷித்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஷாஹா என்னும் அரசரின் குமாரத்தியை பிணிதீர்த்து ரக்ஷித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறுன் சுல்தான் ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் ஆண்டவரவர்கள் பாரிஸி ராச்சிய வனத்தில் சில நாள் தங்கியிருந்து, பின் அங்கிருந்து புறப்பட்டு அவ் விராச்சியத்து இராசமாநகரமாகிய கிஷ்றன் பட்டணத்திற் போய், வசதியான ஒரு சாவையில் பகீர்கள் கூட்டத்துடன் தங்கியிருந்தார்கள். நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களின் பௌத்திரருள் ஒருவரும், ஔலியாக்களில் மகா சிறப்பானவரும், அதிக அற்புதங்களைச் செய்கிறவருமாகிய சையிது அப்துல் காதிறு என்கிற ஒரு மகான் இங்கே வந்திருக்கிறார்க ளென்னும் சங்கதி அவ்வூர் முழுதும் பரவிற்று. அவர்களின் கருமாத்துகளும் வெளிப்பட்டன. பிரபலமான அந்த மகிமையைக் கேட்டுக் கேட்டு அவ்வூர்ப் பிரசைகளாகிய முஸ்லிம்களும், மஜூசிகளும் திரள் திரளாய்வந்து, ஆண்டவ ரவர்களின் பாத கமலங்களுக்குத் தாழ்ச்சி பண்ணி, அவரவர் குறை நிறைகளை முறையிட்டு, நாட்டங்களை நிறை வேற்றிக் கொண்டு போகத் தலைப்பட்டார்கள்.

நாள் தவறாமல் வரும் இச்சனத் திரளால் ஆண்டவ ரவர்களின் சமூகத்தில் சந்தடி யொழியாமல் இருந்தது. இவ்வா றிருக்கையில், ஒரு நாள் அவ்வூர் முடிமன்னராகிய ஷாஹா என்பவர் தம் மந்திரி பிரதானி முதலிய பரிவாரங்கள் புடைசூழ அரமனையை விட்டுப் புறப்பட்டு, ஆண்டவ

ரவர்கள் இருக்கும் சாலைக்கு வந்தார். வந்தவர் ஆண்டவரவர்களைப் பணிந்து குறித்த தானத்தில் இருந்து, ஆண்டவரவர்களை நோக்கி: "எஜமானவர்களே, நாங்கள் தங்கள் சிஷ்யர்களாகிய சபோதனர்களுடன் தமியேனுடைய வீட்டுக்குவந்து விருந்துண்ணும்படி மிகவும் மன்றாடுகிறேன்" என்று கேட்டுக்கொண்டார். இராச்சிய பாரந் தாங்கி அரசாளும் ஒரு அதிபதி தங்களைத் தரிசிக்கவந்து விருந்துக்கழைப்பதால், ஹலறத்து ஆண்டவரவர்கள் சந்தோஷப்பட்டு, அதற்கு உடன்பாடாய் அநுமதி கொடுத்தார்கள். அப்போதே இன்றைத்தினம்விருந்து என்று நாள் குறிக்கப்பட்டது. உடனே ஷாஹறா என்பவர் ஆண்டவரவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு அரமனைக்கு வந்து, விருந்துக் காகுமானவையெல்லாம் திட்டஞ்செய்தார். குறித்த நேரத்தில் குறித்தவண்ணம் உயர்தரச் சோற்றுவகை, கறிவகை, பலகாரவகை, கனிவகை முதலிய எல்லாந் தயாராயின. ஆனபோது ஷாஹறா என்பவர் தாமே சில பரிவாரங்களுடன் புறப்பட்டு ஹலறத்து ஆண்டவரவர்களிடம்வந்து, விருந்துண்ண வரவேண்டுமென்று உபசரித்து அழைத்தார். உடனே ஆண்டவரவர்கள் நானூற்று நான்கு சபோதனர்களுடன் புறப்பட்டு ஷாஹறாவுடைய அரமனைக்கு வந்தார்கள்.

அலங்காரமான மாளிகையில் விசித்திரமான பாரிய கூடமொன்று விருந்துக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தது. அங்கே ரத்தினகசிதமான உயர்தரக் கம்பளங்களாகிய விரிப்புகள் விரிக்கப்பட்டிருந்தன. ஆண்டவரவர்களுக்கென்றுமிக உன்னதமான ரத்தினக்கம்பளம் விரித்து உயர்ந்த திண்டுகள் போட்டு, ஒரு தனியிடம் தயாராயிருந்தது. எல்லாரும் அந்தக் கூடத்திற் போய், அவரவர் தராதரப்படி பந்தியிருந்தார்கள். ஆண்டவரவர்களும் தங்கள் இருப்பில் உட்கார்ந்தார்கள். அன்றியும், அவ்வூர் உத்தியோகஸ்தர், வர்த்தகர், பிரபுகளான அநேகர் அந்த



விருந்துக்கென்று அழைக்கப்பட்டு, அங்கேவந்து கூடியிருந்தார்கள். அப்போது அந்தச் சபை இணையின்றி விளங்கிற்று.

விருந்துக்கு அழைக்கப்பட்டோர் அனைவரும் அவரவர் தரப்படி பந்தியிருந்தபின், ஆகாரங்களைக் கொணர்ந்து பரப்பும்படி ஷாஹறா கட்டளை பண்ணினார். அறுசுவைப் பதார்த்தங்களும், பழவர்க்கங்களும் பரப்பின ஒவ்வொரு தாலமாக ஒவ்வொருவருக்குங் கொண்டுவந்து வைக்கப்பட்டது. எல்லார் முன்னும் எல்லாப் பதார்த்தங்களும் கொணர்ந்து வைத்து முடிந்தபின், ஷாஹறா எழுந்து ஒரு அறைக்குட் போய், அங்கிருந்து மூடியிட்ட ஒரு பாத்திரத்தைத் தம் இரண்டு கைகளாலுந் தூக்கிக் கொண்டுவந்து ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு முன் வைத்துவிட்டு, இரு கைகளையும் மார்போடணையக் கட்டிக்கொண்டு, பக்கத்தில் விலகி ஒன்றும் பேசாமல் தலைகுனிந்து நின்றார். அப்போது அந்தச் சபையிலுள்ள எல்லார் கண்களும் அந்தப் பாத்திரத்தின்மேல் விழுந்தன. விழித்தகண் விழித்தபடி எல்லாரும் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஷாஹறா தம் கைகளால் தூக்கிக் கொணர்ந்து வைக்கப்பட்ட பாத்திரத்தின்மேல் தங்கள் பார்வை விழுந்தவுடன் ஆண்டவரவர்கள் தலையைக் குனிந்து கொண்டு சற்றுநேரம் இருந்து, பின் நிமிர்ந்து அந்தப் பாத்திரத்தைப் பார்த்து, வலது கையால் அதன் மூடியைத் திறந்து பக்கத்தில் வைத்துவிட்டு, பின்னும் அதை உற்றுப் பார்த்தார்கள். அதில், குருடும் செவிடும் ஊமையுமாய், கால்கைகள் வழங்காமல் முடம்பற்றி, உடல் முழுதும் வியாதிகொண்ட ஒரு சிறுபெண், ஊராமல் உசும்பாமல் போட்டபடியே முண்டமாய்க் கிடந்தாள்.

பலவித ரோகங்களும் பிடித்த ஒரு சிறுபெண் அப் பாத்திரத்தில் போட்டபடி மல்லாந்து கிடப்பதை ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் கருணைக் கண்களாற்

பார்த்து மனமிரங்கி, அவளை "ஏ! இராசகுமாரி, அல்லாதஆலாவுடைய உத்தரவு கொண்டு நீ சௌக்கியமாய், எழுந்திருந்து நட" என்று தேவாமிர்தஞ் சிந்தினாற்போலத் திருவாய் மலர்ந்து சொன்னார்கள். உடனே அந்தப்பெண் இச்சொல்லைக் காதாரக் கேட்டு, கண்களைத் திறந்து பார்த்து, வாயைத்திறந்து "அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாகு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துகு வறசூலகு" என்று சொல்லிக்கொண்டு எழுந்து நடந்து, தந்தையாகிய ஷாஹா அருகிற் போய் நின்று, அவருடன் பேசினாள். இந்த அதிசயத்தைச் சபையிலுள்ள எல்லாரும் கண்ணாரக்கண்டு, ஆநந்தத்தினால் ஆர்ப்பரித்தார்கள். சபை முழுதும் பிரமித்துத் திகைத்தன.

பார்க்கக் கேட்கப் பேசக்கூடாமலும், இருக்க நடக்கப் பிடிக்க ஏலாமலும், வியாதியினால் மூடிக்கிடந்த தம் புத்திரி, சரீரத்தில் எவ்விதத் தீங்கும் எவ்வளவுமின்றிச் சுகப்பட்டு, எழுந்து நடந்துவந்து தம்முடன் பேசக்கண்ட ஷாஹா என்பவர் அளவற்ற ஆச்சரியமும் ஆநந்தமு மடைந்து, அவளை அழைத்துக்கொண்டு அந்தப்புரத் திற்குப் போனார். பின்பு விருந்துண்டு சபை கலைந்தது. ஹலறத்து ஆண்டவரவர்கள் தபோதனர்களுடன் ஷாஹாவின் விடைபெற்று, அரமனையை நீங்கித் தங்கள் சாகைக்கு வந்தார்கள்.

அங்கு நடந்த இந்த ஆச்சரியமான சங்கதி எங்கும் பிரஸ்தாபமாயிற்று. இதைக்கேட்ட மஜூசிகள் அநேகம் பேர் வந்து ஹலறத்து ஆண்டவரவர்கள் கையைப்பிடித்துக் கலிமா சொல்லி, இஸ்லாமி லானார்கள்.

சிறைபெண்ணை ரக்ஷித்தது முற்றிற்று.

---

௨௯-ம் அத்தியாயம்.

## அரசங்கன்று நீர்குடித்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு அரசங் கன்றுக்கு நீரருந்தியதும், அதனால் சில மஜூசிகள் இஸ்லாமி லானதுமான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவ ரவர்கள் பாரிஸிராசதானியாகிய திஹ்றான் பட்டணத்தில் சிலநாள் தங்கியிருந்து, பின் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு, தபோதனர் குழாங்களோடு அத்தேசத்து நாடுகளில் சில நாள் வரையும் சஞ்சரித்தார்கள். நிர்மானுஷ்ய வனங்களிற் போய்த் தவஞ் செய்வதும், மனிதர் குடியிருப்புக்களில் அற்புதங்களைச் செய்வதும், சோலைகளில் விடுதியிட்டுத் தங்கியிருப்பதுமா யிருந்தார்கள். இவ்வா றிருந்துவிட்டுச் சிலநாட்களுக்குப்பின், ஆண்டவரவர்கள் அந்நாட்டிலுள்ள ஒரு அகன்ற பூங்காவனத்திற்போய் விடுதி யிட்டார்கள். அது, மதுரமான தண்ணீர்த் தடாகங்களும், ஆழ்ந்த துரவு களும், பலவிதக்கனிகளைப் பழுத்துச் சொரியும் விருக்ஷங் களும், கண்ணுக்கு அலங்காரமும் அதிக வாசனையுமுள்ள புஷ்பங்களைத் தருகிற செடி கொடிகளும் அமைந்த ஒரு பாரிய தோட்டம். அங்கே மஜூசிகளின் அக்கினி யாரா தனை செய்கிற ஆலயங்களும், ஆசாரியமடங்களும் உண்டா யிருந்தன. அங்குள்ள மடங்களுள் ஒரு சிறந்தமடத்தில் மஜூசிகளின் பிரதான ஆசாரிய னொருவன் அநேக சீஷர் களோடு வாசஞ்செய்துகொண் டிருந்தான்.

அந்தக் காவனத்தில் வாசஞ்செய்யும் ஆசாரியன் சகலகலாபண்டிதன். அவன் சொல்லுக்கு அந்தச் சாதி யார் அனைவரும் தலைசாய்ப்பார்கள். அவன் கருமத்திற்கு

அனைவரும் அஞ்சி நடு நடுங்குவார்கள். அவனிடம் மாந்தரீகபலமும் இருந்தது. அவன் கையால் ஒரு துரும்பை யெடுத்து மந்திரோச்சாரணம்பண்ணி எறிவானானால், அது பலதலைகளை யுடைய பாரிய சர்ப்பமாகும். அந்தச் சர்ப்பத்திலிருந்து பலவித விஷசெந்துக்களும் வெளிப்படும். தன்னோடு எதிர்க்கும் எந்த விரோதிகளையும் இவ்வித மந்திரப் பிரயோகத்தினாலேயே ஜயிப்பான், அவனை யெதிர்க்கும் எவரும் அந்த மந்திரபலத்தினால் மாய்ந்துபோவார்கள். இவ்விதம் செய்து செய்து அவன் எல்லாரையும் அடக்கி யொடுக்கித் தன்சொற்கீழ் ஆக்கிக் கொண்டான். தன்னை யடர்ந்து எதிர்ப்பாரின்றி இணையற இறுமாந்து மேற்சொன்ன கோட்டத்தில் வசித்துக் கொண்டிருந்தான். அவனை இராச்சியத்தார் அனைவரும் மிகக் கொண்டாடி வந்தார்கள்.

அக்காலத்தில் ஹலறத்து ஆண்டவரவர்கள் நானூற்று நான்கு தபோதனர்களுடன் மேற்படிக் கோட்டத்திற் போய் விடுதிவிட்டபோது, அந்த ஆசாரியன் கேள்விபட்டு, தன் சிஷர்கள் புடைசூழ மடத்தைவிட்டு எழுந்துவந்து ஆண்டவரவர்கள் முன் நின்றுகொண்டு, அவர்களை நோக்கி: முகம்மதிய பெரியவரே, இது எங்களுடைய பரிசுத்த ஆலயங்களிருக்கும் கோட்டமென்று நீர் அறிந்திருக்கவில்லையா? உமது பெரிய கூட்டத்தாருடன் எப்படிவந்து நீர் தங்கலாம்? இப்போது இங்கே நீங்கள்வந்து தங்கினபடியால், எங்கள் ஆலயங்களும், ஆராதனை மடங்களும், நாங்களும், அசுசிப்பட்டுப்போக நேரிட்டதே. இனி ஆலயாதிகளைப் பரிசுத்தமாக்கி, நாங்களும் பரிசுத்தமாகப் பிரதிஷ்டை பண்ணுவதற்குச் செலவு எவ்வளவு பெருந்தொகைப் பணம் பிடிக்கும். நீரே இவ்விதப் பொல்லாங்கை யுண்டுபண்ணினபடியால், இந்தச் செலவின் பணத்தைக் கொடுத்துவிட்டு, மறுத்தொன்றும் பேசாமல்



அப்புறப்பட்டுப் போய்விடவேண்டும். இதுவன்றி வேறே ஏதும் எதிர்த்துப்பேச வருவீரானால், உமக்கும், உமது கூட்டத்தாருக்கும் மானபங்கமும், வில்லங்கமும் வந்து சம்பவிக்கும் என்றுசொல்லிப் பயமுறுத்தினான். இறுமாப்புள்ள அவன் தன்னையொத்த காபிர்களில் யாரையும் அடக்கி யொடுக்கித் தன் அடிக்கீழ்ப் படுத்திக்கொள்ளும் வழக்கமுடையவனாகையால்தான் இவ்விதச் சொற்களைச் சொல்ல நேர்ந்தது. இந்தச்சொல்லை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அவனைப்பார்த்துக் கீழ்வருமாறு சொல்லுகின்றார்கள்:—

ஏ, காபிரானவனே, முஸ்லிமானவர்கள் அனைவரும் பரிசுத்தவான்கள்; அவர்கள் கருமங்களனைத்தும் பரிசுத்தமானவை. காபிரானவர்கள் அனைவரும் அசுசியானவர்கள்; அவர்கள் கருமங்களனைத்தும் அசுசியானவை. எங்களுடைய துஆ உவக்கப்பட்டது; உங்களுடைய துஆ அருவருக்கப்பட்டது. நீ நெருப்பை வணங்கும் காபிர். ஷைத்தானுடைய கருமமும், இன்ஸானுடைய கருமமும் இன்னதென்று உனக்கு விளங்காது. உன் மனம் இருளடர்ந்ததாகையால், உண்மையை யறியமாட்டாது. இனி நீ இஸ்லாமிலாய், அல்லாஹுத்தஆலாவுக்கு வழிபட்டு, அவனுடைய வணக்கத்தில் ஸ்திரப்பட்டால், அறியாத காரியங்களை யெல்லாம் அறிவாய். அப்போது, நீ யிருக்கும் வழியும், அதனால் சம்பவிக்கும் தீங்கும் நன்றாய் விளங்கும். எங்கள் மார்க்கத்து மகிமையும் தெளிவாய்த் தெரியும் என்று சொல்லி, இன்னும் அவன் மனதிற்படப் பல நல்லறிவுகளையும் போதித்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் இந்தச்சொற்கள் அவனுக்குக் கோபத்தை எழுப்பின. அதனால் அவன் தாங்கரிய சினங்கொண்டு, மறுத்து யாதொன்றும் பேசாமல் கையிலிருந்த கழியை வீசியெறிந்தான். அது உடனே எழு

கலைகளையுடைய பாரிய சர்ப்பமாயிற்று. அதன் வாயிலிருந்து கங்கிகங்கியாய் அக்கினிப் பொறிகள் சிந்தின. அந்தச் சர்ப்பம் கக்கும் அக்கினிப்பொறி ஒவ்வொன்றும் பாம்பாகிப் பலவித விஷசெந்துக்களாய்க் கிடந்து நெளிந்தன. மேற்படித் தாய்ப்பாம்பு படம்விரித்து வலமிடந் திரும்பி நின்று, ஹலறத்து ஆண்டவரவர்களைப் பார்த்து ஆடிற்று.

தங்கள்முன் கிடந்து புரண்டு நெளியும் விஷப்பிராணிகளை ஆண்டவரவர்கள் பார்த்துக் குறுநகை செய்தார்கள்; உடனே அவையனைத்தும் மறைந்து இல்லாமையாய்ப் போய், ஆசாரியன் எறிந்த கம்புமாத்திரம் அங்கே கிடந்தது.

இந்தச் சம்பவத்தைக் கண்டமாத்திரத்தில் ஆசாரியனுக்கும், அவனைச்சேர்ந்த சிஷர்களுக்கும், பின்னும் சினத்தீ மூண்டது. ஒவ்வொருவரும் அவரவருக்குத் தெரிந்த எல்லா மந்திரங்களையும் உச்சாரணம் பண்ணிப் பிரயோகித்தார்கள். அதனால் ஒரு பிரயோசனமும் உண்டாகவில்லை. அவர்கள் வாயலுக்க ஜபித்தமந்திரங்களால் ஒன்றும் பலிதமாகாததுபற்றி, எல்லாரும் வெட்கித் தலைகுனிந்து நின்றார்கள். அப்போது ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த ஆசாரியனைப்பார்த்து "மெய்யான காரியம் வெளியானவுடன், பொய்யானகாரியம் அழிந்துபோம் என்பதைப் பார்த்தாயா? நீ அல்லாஹுத்த ஆலாவின்புறம் திரும்புவதற்கு இன்னும் என்ன திருஷ்டாந்தம் உனக்குவேண்டும்; அதைச் சொல்; அவன் முடித்துத் தருவான்" என்று சொன்னார்கள்.

இச்சொல்லைக் கேட்ட ஆசாரியன் தன் சிஷர்களைப் பார்த்து: இவர் செய்த செயலையும், சொன்ன சொற்களையும் கவனித்தால், இவரிலிருந்து ஒரு நன்மைக்கு இடமாகவுங் கூடும் ஆனாலும், இவரால் ஏலாத ஒரு காரியத்தைச் செய்யும்படி நாம் இப்போது கட்டாயப்படுத்தலாம். அதனால் இவர் கர்வபங்கமடையவுங்கூடும். ஒருகால் நாம் ஏவும்



பாரதூரமான காரியத்தைச் செய்து முடிப்பாரானால், நாமெல்லாம் இவரைப் பின்பற்றி, இவர்களுடைய மார்க்கத்திற் பிரவேசிப்பது உத்தமமாகும். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என்று கேட்டான். அவன் கருத்திற்கு எல்லாரும் இணங்கி உடன்பட்டார்கள்.

பிறகு ஆசாரியன் ஹலறத்து ஆண்டவரவர்களை நோக்கிப் பெரியவரே யென்று விளித்து, அங்குள்ள ஒரு அகன்ற தண்ணீர்த் தடாகத்தையும், அதன் பக்கத்தில் நிற்கும் ஒரு அரசங்கன்றையும் சுட்டிக்காட்டி: இந்த அரசங்கன்றானது தானிருக்கும் தரைமட்டத்தில் நடந்துபோய், இந்தத்தடாகத்துத் தண்ணீரையெல்லாங் குடித்துவிட்டு, மறுபடியும் தன் தானத்தில் வந்து தரிபடவேண்டும். இப்படி நீர் செய்விப்பீரானால், நாங்கள் எல்லாரும் முகம்மதுநபியுடைய உங்கள் இஸ்லாம் மார்க்கமே உண்மை யென்று விசுவாசங் கொண்டு, கலிமா சொல்லி இஸ்லாமிலாய், உம்மை எங்கள் சற்குருவாக வைத்துப் பின்பற்றுவோம். இது செய்யத் தவறினால், நீரும், உமது கூட்டத்தாரும் எங்களுக்குக் கீழ்ப்படிந்து, தொண்டர்களாகவேண்டும். என்ன சொல்லுகிறீர் என்று கேட்டான்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் இச்சொல்லைக்கேட்டு அதற்கு உடன்பட்டு, உடனே உலு செய்து இரண்டு றக்அத்துத் தொழுது அல்லாஹுத்த ஆலா இடம் துஆ செய்து கொண்டு, அந்த அரசங்கன்றைப்பார்த்து "அரசங்கன்றே, நீ அல்லாஹுத்த ஆலாவின் உத்தரவுகொண்டு தரைமட்டில் நடந்துபோய், இந்தக் குளத்து நீர் அடங்கலையும் குடித்துவிட்டு, மறுபடி மீண்டு உன் தானத்தில் வந்து தரிபடு" என்று திருவாய்மலர்ந்து சொன்னார்கள். ஆண்டவரவர்களின் திருவாய்மொழி பிறந்த அந்தக்ஷணமே அந்த அரசங்கன்று தரைமட்டத்தில் நகர்ந்து நடந்து குளத்தருகிற்போய், தன் தலையை நீரிற் சாய்த்து வீழ்த்திக்

கிடந்து, அதன் நீர் முழுவதையும் உறிஞ்சிற்று. குளம் வற்றி வறண்டு வெறுந்தரையாயிற்று. நீர் முழுதும் குடித்து முடிந்தபின், தலையைத் தூக்கி மெல்ல நடந்து தன் தானத்தில் வந்து முன்போலத் தரிபட்டு நின்றது.

இந்த ஆச்சரியமான காரியத்தை ஆசாரியன் கண்டு விலவிலத்து, தன் சிஷர்களைப்பார்த்து: இது, உலக சிருஷ்டிகனாகிய ஒரே கடவுள்பேரில் பிரமாணிக்கமாக அவனைக்கொண்டு உண்டானதன்றி, மற்றொன்றுமல்ல. ஆனதால், முகம்மதுநபியுடைய இஸ்லாம் மார்க்கமே உண்மையானது. அந்த மார்க்கக்காரர்களே ஜயம் பெற்றவர்கள். நாம் அந்த மார்க்கத்தைத் தொடர்ந்தால், இம்மைப்பலனும், மறுமைப்பலனும், நமக்குக் கிடைக்கும். நேர்வழியும், மோக்ஷகதியும், அந்தமார்க்கத்திலேயே யுள்ளன. நாம் இன்றைக்கே அந்தப் பரிசுத்த மார்க்கத்தைப் பற்றிப் பிடிப்போமாக என்று சொன்னான். பின் ஆசாரியன் முதல் ஒவ்வொருவராக ஹலறத்து ஆண்டவரவர்களின் கையைப் பிடித்துக் கலிமா சொல்லி, இஸ்லாமிலானார்கள். அதன்பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் அவர்கள் எல்லாருக்கும் மார்க்கத்து விதிவிலக்குகளைக் கற்பித்து, உபதேசமும் சொல்லி, தீக்ஷை கொடுத்தார்கள்.

சிலநாள்வரையும் அந்தத் தோட்டத்தில் ஆண்டவரவர்கள் இருந்து, புதிதாய் இஸ்லாமான அவர்களுக்குப் போதிக்கவேண்டிய நற்போதனைகளைப் போதித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அரசங்கன்று நீர்குடித்தது முற்றிற்று.

---

௨௭-ம் அத்தியாயம்.

## இறந்தவரை யழைத்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு பெண்ணினுடைய மன்றாட்டுக்காக, இறந்துபோன அவள் புருஷனை அழைத்துக் கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து காதிறேலி கன்ஜஸவாய் ஆண்டவரவர்கள் முன்சொன்ன பாரிஸிராச்சியத்துக் கடற்கரைப் பகுதிகளில் சிலநாள் சஞ்சாரம்பண்ணி, ஒருபோது அந்தக் கடற்சார்பிலுள்ள ஒரு பட்டணத்தில், தபோதனர்களுடன் போய்ப் புகுந்தார்கள். அன்றையதினம் வெள்ளிக்கிழமையாயிருந்தது. ஜும்ஆவுக்குரிய பரிசுத்தமான அன்று ஆண்டவரவர்கள் அவ்வூர்ப்பள்ளியில் பகீர்மார்களுடன் போய் ஜும்ஆ தொழுதுவிட்டு, பின் அங்கிருந்து பைஅறு சொல்லத்தொடங்கினார்கள். அப்போது அவ்வூர் முஸ்லிமான ஜனங்கள் அதிகம்பேர் அங்கேவந்து கூடியிருந்தார்கள். பெருந்திரளான ஜனங்களுக்கு நடுவில் ஆண்டவரவர்கள் பாலசூரியனென்று உதயமானாற்போல வீற்றிருந்து, தேன்மாரி பெய்தாற்போலத் திருவாய் மலர்ந்து, இம்மை மறுமைகளைப்பற்றிய விஷயங்களைப் பிரசங்கித்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் இவ்விதம் போதனைப் பிரசங்கமென்னும் பைஅறு சொல்லிக்கொண்டிருக்கும்போது, அநேக ஆடவர்கள் மலிந்த அந்தச் சபையில் ஒரு பெண் தன் சரீரமுழுவதையும் போர்வைபோர்த்து மூடினவளாய் வந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் நின்றுகொண்டு, அதிக வருத்தத்துடன்: எஜமானவர்களே, எனது கணவர் கப்பல் யாத்திரையிற் போய்ப் பதினொரு

வருஷங்களாயின. இதுவரையும் அவருடைய காரியம் யாதொன்றும் தெரியவில்லை. இன்னதிக்கில், இன்ன தானத்தில் இருக்கிறாரென்பதையும் அறியேன். தேவரீர் தாங்கள் இந்த அடியாள்மீது இரக்கம் வைத்து, அவரை யழைத்துத் தரவேண்டும் என்றுசொல்லி, அழுது கெஞ்சி மன்றாடினாள்.

தங்கள் முகதாவில் வந்துநின்று அழுதுபுலம்பும் அந்தப்பெண்ணின் பரிதாபத்தை ஹலறத்து ஆண்டவரவர்கள் பார்த்து மனதிரங்கி, அவளை அங்கே ஒருபுறம் இருவென்று சொல்லிவிட்டு, இரண்டு கைகளையும் உயர்த்தி ஒருசா அந்த நேரம்வரையும் ஒரேபடியாய் துஆ செய்து கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று ஒரு மனிதர் அந்தச்சபையில் ஆண்டவரவர்களுக்கு முன்வந்து பணிந்து ஸலாம் சொல்லி நின்றார். உடனே அந்தப்பெண் ஓடிவந்து அந்தமனிதரைக் கட்டிக்கொண்டு அழுதாள். அவருடைய பந்துஜனங்களும் அப்போது அங்கேயிருந்தபடியால் அவர்களும் வந்து அவரைச்சூழ்ந்து கொண்டார்கள்.

பதினொருவருஷம் வரையில் காணாமற் போயிருந்தவரை அங்குள்ள ஜனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு அவரைச் சூழ்ந்துகொண்டு: நீர் இதுவரையும் எங்கே போயிருந்தீர்? நடந்தகாரியங்கள் என்ன? என்று விசாரித்தார்கள். அப்போது அவர் பின்வருமாறு சொல்லுகின்றார் :—

" நான் விவாகம்பண்ணி மூன்றுவருஷங்களுக்குப்பின் யாத்திரைசெய்ய நாடிக் கப்பலேறினேன். நான் ஏறிய கப்பல் பாய்விரித்து நாடியதுறை நோக்கி ஓடிற்று. கப்பல்துறை விட்டுப் புறப்பட்ட மூன்றாம்நாள் நடுக்கடலிற் போகும் போது, திடீறாய் எனக்கு ஒரு அபாயம் நேரிட்டது. அது, கப்பலின் பாய்மரச்சாமான்களி லொன்று என்மேல் விழுந்து உண்டான பெருகாயமே. அந்தக்காயத்தினால் நான் பிழைக்கக் கூடாமல் சிலநாள் கிடந்தேன். பின் எனக்கு மௌத்து நெருங்கி ஸக்றாத்து உண்டாயிற்று. ஸக்றாத்தில் படவேண்டிய துன்பமெல்லாம் பட்டு, மௌத்தானேன். என்னை விதிப்படி செய்யவேண்டியவைகளைச் செய்து கடலில் எறிந்துவிட்டார்கள். பின் என் ஜடம் அந்தக்கடலில் அலைந்தலைந்து, அணுவணுவாய் உருக்குலைந்து போயிற்று. நான் இன்னதானத்தில். இன்னவிதமாக. இத்தனைகால மிருந்தேனென்று அறியக்கூடவில்லை. பிறகு, எங்கேயோ ஓரிடத்தில் நான் இருக்கிறதாக அறிந்தேன். அப்போது, என்னைக் கூப்பிட்டு: நீ ஷாஹுல் ஹமீதுடைய வேண்டுதலைக் கொண்டு மறுபடியும் உண்டாக்கப்பட்டிருக்கிறாய்; அவ ரிருக்கும் சபைக்கு இப்போதே போ என்று எனக்குச் சொல்லி, என்னை ஒருமனிதர் வசம் ஒப்படைத்து அனுப்பு வதுபோலத் தோற்றரவாயிற்று. அவர் என்னை யழைத்துக் கொண்டு இந்தச் சபையிற் கொணர்ந்துவிட்டார். உடனே எனக்குத் தெளிவுபிறந்தது. என்னைக் கூட்டிக்கொண்டு வந்த அவரை யாரென்று பார்த்தேன். அவர் இந்தச் சபா நாயகராகிய ஆண்டவர்கள் தாம். இவர்கள் வசந்தான் நான் ஒப்படைக்கப்பட்டு வந்தேன். இவர்கள் தாம் ஷாஹுல் ஹமீது என்று பின் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே நான் இவர்களுக்குப் பணிந்து ஸலாம் சொன்னேன் " என்று சொல்லிக்காட்டினார்.

அந்த மனிதர்சொன்ன இந்தச் சொல்லைக்கேட்டு அங் கிருந்த ஜனங்களெல்லாரும் மகா பெரிய ஆச்சரியத்தை யடைந்து, அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்து, ஹலறத்து ஆண்டவரவர்களை வியந்து பாராட்டிக்கொண்டாடினார்கள். அப்போதே ஆண்டவரவர்கள் அவரை அருகில் அழைத்து நீர் இன்னுஞ் சிலகாலம் உமது மனைவியுடன் கூடி வாழ்கி றீரா? அல்லது, இப்போதிருந்த தானத்திற்கே போய் விடு

கின்றீரா? என்று இரகசியமாகக் கேட்டார்கள். அதற்கு அவர்: நான் இன்னுஞ் சிலகாலம் என் மனைவிமுதலானவர்களுடன் இருக்க விரும்புகிறேன் என்று விடை சொன்னார். பிறகு ஆண்டவரவர்கள் அவரை மனைவியுடன் கூட்டி, துஆ செய்து அனுப்பினார்கள்.

இறந்தவரை யழைத்தது முற்றிற்று.

---

உஅ-ம் அத்தியாயம்.

## பட்டமரந் தழைத்தது.

---

[இவ் வத்தியாயம் பட்டுப்போன ஒரு ஆலமரம் ஹலறத்து ஆண்டவரவர்களால் தழைத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாதுல் ஷம்சு பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் பின்னும் பாரிஸிராச்சியப் பல பாகங்களையும் சுற்றிக்கொண்டு, அங்குள்ள குருஸான் பகுதிக்கு வந்து, அப்பகுதியின் தலைநகரத்திற் புகுந்தார்கள். நானூற்று நான்கு பக்கீர்மார்களோடு அவ்வூரிற்புகுந்து வரும்போது, அங்குள்ள பெரியவீதியின் இருபுறத்திலும் குருடர், செவிடர், ஊமையர், முடவர், கூனர்களும் குஷ்டரோகிகள் மகோதரகாரர், காமாலைகாரர், க்ஷயரோகிகள் முதலான கொடிய வியாதிஸ்தர்களும் பந்திபந்தியாயிருந்து, போவார் வருவாரைக் கூப்பிட்டுத் தம்தம் நிலைபரத்தைச் சொல்லிப் பிச்சையிரந்துகொண் டிருந்தார்கள்.

அவர்கள் அழுதுகூப்பிடும் முறைப்பாட்டையும் சரீரங்களிலுள்ள வியாதிகளையும் ஹலறத்து ஆண்டவரவர்கள் அறிந்து மனமிளகி, தங்கள் கைகளையேந்தி: இவர்கள் வியாதிகளைத் தீர்ப்பாயாக வென்று அல்லாகுத்த ஆலா இடம்



துஆ இரந்தார்கள். ஆண்டவரவர்களின் துஆபறக்கத்தைக் கொண்டு, அப்போதில் அங்கிருந்த எழுபத்தைந்து பேர்களுடைய பலவிதமான சகல ரோகங்களுந் தீர்ந்து, சரீரங்கள் பரிசுத்தமாயின. இந்தக்காரணம் ஊரெங்கும் பிரஸ்தாபமாயிற்று. அதனால், ஜனங்கள் கூட்டங் கூட்டமாக ஆண்டவரவர்களைத் தேடிவரத் தலைப்பட்டார்கள்.

பிறகு, அவ்வூர் அமீராகிய மகுமூதுகான் பாத்துஷா என்பவர் இதைக் கேள்விப்பட்டு ஹலறத்து ஆண்டவரவர்களைத்தரிசிப்பதற்காகத் தமது பரிவாரங்களோடு புறப்பட்டு வந்தார். அவர் தங்கள் சமுகத்தில் வந்தவுடன் ஆண்டவரவர்கள் அவரைப்பார்த்து "மகுமூதே, பட்டுப்போன ஆலமரம் தழைத்ததா"? என்று கேட்டார்கள். அப்போது அவர் "ஆம், எஜமானவர்களே, தழைத்தது" என்று மறுமொழி சொல்லிவிட்டு, பின்னும் ஆண்டவரவர்களை நோக்கி: அவ்விஷயத்தில் நான்செய்த பிழையைத் தாங்கள் பொறுக்கவேண்டு மென்று பிரார்த்தித்தார். ஆண்டவரவர்கள் அதற்கு வதில் சொல்லிவிட்டு, நடந்தகாரியம் என்ன? என்று மறுபடியும் அவரிடம் கேட்டார்கள். அப்போது அவர் பின்வருமாறு சொல்லுகின்றார்:—

எஜமானவர்களே, நான் வெகுகாலமாகப் பிள்ளையில்லாமல் சஞ்சலப்பட்டவனா யிருக்கின்றேன். அதற்கென்று நான் செய்த பிரயத்தனங்களெல்லாம் விருதாவாய்ப் போயின. இனிச் செய்யாத முயற்சி ஒன்றுமில்லை. ஒரு முயற்சியாலும் எனக்குப் பலனுண்டாகவில்லை. பின்பு, நான் செய்யும் பிரயத்தனங்களைக் கைவிட்டுத் துக்கத்தில் மூழ்கியிருந்தேன். இப்போது திடீரென்று தங்கள் செய்தி என் காதில் விழுந்தது. உடனே நான் இந்த முற்றத்தில் பட்டுப்போய் நிற்கிற இந்த ஆலமரம் தழைத்து, பூத்து, காய்த்து, பழுத்துச் சொரியுமானால், அவ்வரை நாம் போய்த் தரிசிக்கலாம்; அல்லாகுத்த ஆலா அவர் பொருட்டால் நமக்

குப் பிள்ளையுண்டாகச் செய்வான் என்று சொன்னேன். நான் சொன்னவாய் மூடுமுன் என் கண்ணெதிர் நின்ற பட்டமரம் பச்சென்று தழைத்து, பூத்து, காய்த்து, பழுத்துச்சொரிந்தது. அந்த மரத்தினின்று இருகுருக ஒருவிதச் சத்தமும் என் காதில் விழுந்தது. உடனே நான் தங்களைத் தரிசித்து என் குற்றத்திற்காக மன்னிப்புக்கேட்டு, என் நாட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று புறப்பட்டு வந்தேன். தேவரீர் தமியேனை அடிமைகொள்ள வேண்டுகின்றேன் என்று சொல்லிப் பிரார்த்தித்தார். இதைக்கேட்டு ஆண்டவரவர்கள் அவர்மீது மனதிரங்கி, அவருக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண்பிள்ளைகளும் பிறக்கும்படி துஆ செய்தார்கள். உடனே அது கபூலாகி, ஆண்டவரவர்களின் துஆவின்படி அந்த அமீர் மஹ்மூது காஸ்பாத்துஷாவுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்து, க்ஷேமமாயிருந்து வாழ்ந்தன.

பட்டமரந் தழைத்தது முற்றிற்று.

---

உகூ-ம் அந்தியாயம்.

## ஜின்னிடர் தவிர்த்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு குடும்பத்தாருக்கு உண்டாயிருந்த ஜின்களின் இடரைத்தவிர்த்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து காதிறேலி கன்ஜஸவாய் கன்ஜபக்ஷ்
பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் குருஸானில் இருக்கும்
போது, அங்குள்ள ஸைதுவஹ்ஹாபுத்தீன் குரஸானீ என்பவர் ஒரு
நாள் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து ஸலாம் சொல்லிப்
பணிந்து நின்று என் எஜமானவர்களே, நானும், என்குடும்
பத்தாரும் எந்தவீட்டிற் போய்க் குடியிருந்தாலும், அந்தந்த
வீட்டிலும் ஆகாசத்திலிருந்து அசரீரியாக "ஏ, வஹ்ஹாபுத்
தீன், உன் பெண்மக்கள் எல்லாரும் எங்களுக்கே புரியர்"
என்றும், இன்னும் பல பயங்கரமானதுமாகிய சத்தம்
கேட்கின்றது. அன்றியும் கல், மண், கூழாங்கல், மல
முதலியவைகள் வாரி வீட்டிலும் போடப்படுகின்றன, நாங்
கள் உடுத்தியிருக்கும் புடவைகளில் திடீரென்று தீப்பிடித்து
எரிகின்றது. என் பெண்மக்களையெல்லாம் செய்யாத சேட்
டைகள் செய்கின்றது, என் மக்களில் ஒரு பெண்ணையும்
கொண்டுபோய் விட்டது. இந்தச் சம்பவம் இன்னதென்று
அறியக்கூடவில்லை, இதற்கு எத்தனைவிதப் பரிகாரம்
பண்ணியும் நிவிர்த்தியாகவில்லை. பரிகாரம் பண்ணப்பண்ண
மேற்சொன்ன துஷ்டாட்டம் அதிகரித்துக்கொண்டே
வருகிறது. இனி என்னால் ஆவது ஒன்றில்லை. தேவரீர்
தாங்கள் இங்கே வந்திருப்பதைத் தமியேன் கேட்டு, இனி
நம் கஷ்டம் தீருமென்று ஆதரவுடன் நம்பித் தங்கள் சந்நிதி
தேடி வந்தேன். ஆகையால் எஜமானவர்களே, மேற்
சொன்ன என் கஷ்டமான வில்லங்கத்தைத் தீர்த்து,

என்னையும், என் குடும்பத்தையும் ரக்ஷிக்கவேண்டும் என்று சொல்லி, கண்ணீர்சிந்த அழுதார்.

சைகு வஜ்ஹுத்தீனின் குருவானி என்பவர் அழுது இட்ட முறைப்பாட்டை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு மனங் கசிந்து, அவரைப்பார்த்து வஜ்ஹுத்தீனே, அஞ்சாதீர். நீர் வரும் இரவின் அர்த்தசாமத்தில் எழுந்து பரிசுத்தமாகக் குளித்து, வெள்ளுடை யணிந்து, பரிமளம் பூசி, மனித சஞ்சாரமற்ற ஒதுக்கான ஒரு மேட்டிற்போய், சதுராகாரமாக ஒரு கோடுகீறி அதற்குள் இருந்துகொண்டு, நான் தரும் இந்த ரக்ஷையை உமக்கு வலதுபுறம் வைத்துவிட்டு, இரண்டு றக்அத்துத் தொழுது முடித்து, நாயகம் ஸலவாத் தோதி, வானத்தைப்பார்த்து "ஆண்டவனே, என்னை இங்கே யனுப்பின சையிது அப்துல் காதிருடைய பொருட்டினால் ஜின்களுக்குத் தலைவரான இராசஜின்னை எனக்கு வசமாக்கித் தருவாயாக" என்று சொல்லிவிட்டு, குறாநுல் யாஸீனை ஓதிக்கொண்டிரும். அப்போது, ஜின்கள் கூட்டம் புடைசூழ இராசஜின் உமக்கு முன் வந்து நின்று, உம்மைப்பார்த்து "உம்மை இங்கே யனுப்பினவர் யார்?" என்று கேட்கும். உடனே நீர் என் பெயரைச் சொல்லும். பிறகு அந்த ஜின்னரசு உமது காரியங்களை விசாரிக்கும். அப்போது உமக்கு நிகழும் சம்பவங்களை யெல்லாம் அதனிடம் முறையிடும் என்று சொல்லி, ஒரு ரக்ஷையையும் எழுதி அவர்கையிற் கொடுத்து அனுப்பினார்கள்.

சைகு வஜ்ஹுத்தீன் குருவானி ஆண்டவரவர்களின் கட்டளைப்படி, அர்த்த சாமத்தில் எழுந்து நீராடி, வெள்ளாடை புனைந்து, வாசனை யணிந்து, ஆரவமில்லாத ஒதுக்கான மேட்டிற்போய்க் கோடுகீறி, அதற்குள்ளமர்ந்து தொழுது முடித்து துஆ இரந்துவிட்டு யாஸீனை ஓதிக் கொண்டிருந்தார்.



இவ்வாறு ஓதிக்கொண் டிருக்கும்போது, பெருந் திரளான ஜின்கள் புடைசூழ் ஒரு பல்லக்குவந்து அவருக்கு முன் அவரிருக்கும் கோட்டுக்கு வெளியில் நின்றது. அதை சைகுவஜ்ஹுத்தீன் பார்த்துக்கொண்டு, ஓதுவதிற் பராக்கா யிருந்தார். உடனே அந்தப் பல்லக்குக்குள் இருக்கும் இராசஜின் அவரைப்பார்த்து "ஏ, மனிதனே, உன்னை இங்கே யனுப்பினவர் யார்?" என்று கேட்டது. இக் கேள்விக்கு அவர் "என்னை இங்கே யனுப்பினவர், சையிது அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது" என்று விடைகொடுத்தார். இந்தத்திரு நாமத்தைக் கேட்டவுடன் அந்த ஜின்னரசு தான் ஏறியிருந்த பல்லக்கைவிட்டுத் தரையில் இறங்கி, அவரைத் தாழ்ந்து நின்று "உமக்கு ஆகவேண்டியது என்ன?" என்று கேட்டது. உடனே அவர் அந்த ஜின்னரசை நோக்கி, தமது கஷ்ட நிஷ்டூரமான சம்பவங்களை யெல்லாம் சொன்னார்.

சைகுவஜ்ஹுத்தீனுடைய பரிதாபமான முறைப் பாட்டைக் கேட்ட இராசஜின் கண்கள் ரத்தஞ் சிந்தக் கர்ன கடூரமாகத் திரும்பி, தன் பரிவார ஜின்களைப் பார்த்தது. உடனே அக்கூட்டத்திலுள்ள சில ஜின்கள் வெருண்டு ஓடிப் போய், சில நிமிஷத்திற்குள் மூன்று கொடிய ஜின்களையும், சைகுவஜ்ஹுத்தீனுடைய காணாமற்போன மகளையும் கூட்டிவந்து அங்கேவிட்டன.

பிறகு ஜின்னரசு அந்த மூன்று துஷ்ட ஜின்களையும் சினந்து பார்த்து: இவ்வித அநியாயம் நீங்கள் ஏன்செய் தீர்கள்? என்று கேட்டது. அதற்கு அவை ஒன்றும் பேசாமல், அஞ்சித் தலைகுனிந்து நின்றன. இராசஜின் அம்மூன்று ஜின்களுக்கும் கழுத்தையும், கால் கைகளையுஞ் சேர்த்து விலங்கிட்டுச் சிறைப்படுத்தி விட்டு, சைகுவஜ்ஹுத்தீனுடைய மகளை அவர்வசம் ஒப்படைத்து, அவரை நோக்கி: நீர் அஞ்சாதீர். இனி ஒருகாலும் இவ்விதச் சம்பவம்

னுடைக்கு உண்டாகாது; சந்தோஷமாய்ப் போயிரும் என்று சொல்லிப் பணிந்து போய்விட்டது.

வாருவஞசா ஞானி அவ்விருந்து தம் மகனை மனைவியை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார். அவர் வீட்டுக்கு வந்தது முதல் முன்னடந்த அஷ்டாட்டம் ஒன்றும் காணப்படவில்லை. அதனால் அவர் சந்தோஷப்பட்டு, அன்று பொழுது விடிந்த அதிகாலையில் எழுந்து இரவு நடந்த வரலாறுகளை ஹலறத்து ஆண்டவரவர்களிடம் தெரிவிக்கவேண்டிப் புறப்பட்டு வந்து, ஆண்டவரவர்களைப் பணிந்துநின்று நடந்ததைச் சொல்லிக் காட்டினார். அதைக் ஆண்டவரவர்கள் கேட்டு, அவரைப்பார்த்து: முன் உண்டான ஜின்குகளில் ஒன்றுவது இனி உமக்கு நேரிடாது. நீர் சந்தோஷமுற்று நிர்ப்பயமாயிரும் என்று சொல்லி, அவருக்காகவும், அவர் குடும்பத்திற்காகவும் ஆசிசெய்து அனுப்பினார்கள். இதுநடந்த அன்றுமுதற் கொண்டு மேற்சொன்ன துஷ்டநிமித்தியம் ஒன்றும் நேரிடாமல் வாருவஞசா ஞானி குருஸானி என்பவர் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தார்.

ஜின்னிடர் தவிர்த்தது முற்றிற்று.

---

௩௦-ம் அத்தியாயம்.

## மான்குட்டிகளை மீட்டியது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஓனாய்தின்ற இரண்டு மான்குட்டிகளை உயிருடன் மீட்டியவரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாதுல் ஹமீது கன்ஜுஸவாய் பாத்துஷா நாகிபு ஆண்டவரவர்கள் குருஸானிலிருந்து புறப்பட்டு, தங்கள் நானூற்று நான்கு தபோதனர் கூட்டத்துடன் துறுக்கிஸ்தானை நோக்கி நடந்தார்கள். மலை, வனம், நதி முதலானதுகளைக் கடந்து போகும்போது, வழியில் ஒரு அடர்ந்த வனத்தில் விடுதியிட்டுத் தங்கினார்கள்.

அன்றைத்தினம் அந்தவனத்திலுள்ள ஒரு பெண்மான் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து தாழ்ந்து நின்று: எஜமானவர்களே, நான் வெகுகாலம் மலடாயிருந்து வருந்தி, ஒரு மாதத்திற்குமுன் ஒரேசூலில் இரண்டு கன்றுகளை யீன்றேன். மலடாயிருந்து பெற்ற அவ்விரண்டு குட்டிகளையும் நான் அதிகம் உவந்து ஒரு மாதம்வரையும் அன்பாய் வளர்த்துவந்தேன். இன்று காலையில் அக்குட்டிகளுக்கு நான் பாலூட்டி ஒரு புதரில் விளையாடிக்கொண்டிருக்கும்படி வைத்துவிட்டு, என்வயிற்றுக்கு இரைத்தேடிச் சற்றுத் தூரத்திற் போனேன். நான் போனவிடத்தில் இரைமேய்ந்து, திரும்பிவந்து பார்க்கும்போது என் இரு குட்டிகளும் காணமற் போய்விட்டன. அவையிருந்த புதரிலும், அதன் பக்கத்திலும் ஓடி யோடிப் பார்த்தேன்; அவ்விடங்களிலும் இல்லை. பின் காடெங்கும் தேடியோடிப் பெருந்தொனியிட்டுக் கூப்பிட்டேன்; ஓரிடத்திலும் காணக் கிடைக்கவில்லை. அதனால் என் மனம் சஞ்சலமுற்றுப்

பதைக்கின்றது. தேவரீர் என்மீது இரக்கம் வைத்து நான் பெற்றிருந்த அருமந்த கன்றுகளை அழைத்துத் தர வேண்டும் என்று சொல்லிற்று. அந்தப் பெண்மான் இவ்வாறு சொல்லி வாய்மூடுமுன், அவ்வனத்திற் சஞ்சரிக்கும் ஓநாய் ஒன்று அங்கேவந்து, அந்த மானுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு, ஆண்டவரவர்களை நோக்கி: எஜமானவர்களே, இந்த மானின் கன்றுகளை என் பசியாற்றாமையால் நான்தான் அடித்துத் தின்றுவிட்டேன் என்று சொல்லிற்று.

கன்றிழந்த மானின் முறைப்பாட்டையும், ஓநாய் சொன்னதையும் ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டுச் சிரித்துக்கொண்டு, ஓநாயைப்பார்த்து: நீ கொன்று புசித்த மான்கன்றுகளின் உறுப்புகளில் கழித்து மிஞ்சினது ஏதும் உண்டா? இருந்தால், அதை இங்கே கொண்டுவா என்று கட்டளை பண்ணினார்கள். இச்சொல்லைக் கேட்டவுடன் ஓநாய் அங்கிருந்து ஓடிப்போய், தான் தின்ற மான் கன்றுகளின் ஒற்றைக்காற் குளம்பு ஒன்றை வாயிற் கவ்விக்கொண்டுவந்து, ஆண்டவரவர்கள் சமூகத்தில் வைத்தது. ஆண்டவரவர்கள் அந்தக் குளம்பையெடுத்துச் சமுகத் தரையில்வைத்து ஒரு கம்பளியால் மூடி, சற்றுநேரத்திற்குப் பின் அந்தக் கம்பளியை யெடுத்தார்கள். உடனே இரண்டு மான்கன்றுகள் அந்தக் கம்பளிக்குள்ளிருந்து துள்ளிக் குதித்துக் கத்திக்கொண்டு எழுந்து, அங்கே நிற்கும் தாய் மான் கிட்டப்போய் அதன்மடியிற் சுரந்து கட்டியிருக்கும் பாலை இனியதாய் நின்று குடித்தன. அப்போது அந்தப் பெண்மான் அக் குட்டிகள் தான் ஈன்றவைதாமா வென்று அடிக்கடி முகர்ந்து பார்த்து, பின் அவற்றின் அழகிய மேனியை நக்கிக்கொண்டு, ஆநந்த சந்தோஷத்துடன் பால் கொடுத்து நின்றது. பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் கன்றுகள் கிடைக்கப்பெற்ற மானையும், ஓநாயையும், வனத்



திற்கு அனுப்பி விட்டார்கள். அவைகள் ஒன்றுக்கொன்று
விரோதமில்லாமல் போய்விட்டன.

பிற்பாடு, ஒரு நாள் ஆண்டவரவர்கள் அப்பகுதியில்
ஆஷ்டாட்டஞ் செய்துவந்த மஜூஸிச் காபிர்களில் ஒருவனை
ஒரு புலியைத் தோற்றமாக்கி இரண்டாகப் பிளந்தெறியச்
செய்து, பின் அவன் உடலை ஒன்றாய்ச்சேர்த்து உயிராக்கி
விட்டு, அவர்கள் அனைவரையும் இஸ்லாமிலாக்கினார்கள்.
அதனால், அங்கேயுள்ள மஜூஸிகள் எல்லாரும் ஆண்டவ
ரவர்களுக்கு மிகவும் அஞ்சி நடந்தார்கள்.

மான்குட்டிகளை மீட்டினது முற்றிற்று.

---

## ருக-ம் அத்தியாயம்.

## இறந்தவனையெழுப்பினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் இறந்துபோன
ஒரு மஜூஸிச் சிறுவனை உயிருடன் எழுப்பின வரலாற்றைச் சொல்லு
கின்றது.]

ஹலறத்து மீரான் சுல்தான் ஷாகுல்ஹமீது பாத்துஷா
ஆண்டவரவர்கள் பின் அங்கிருந்து புறப்பட்டு பாரிஸிராச்
சிய எல்லையைக்கடந்து, தாறுக்கிஸ்தானிற் போய்ச் சேர்ந்
தார்கள். அவ்விராச்சியத்தில் தாருன்பருவதம் என்று
பிரபலமான ஒரு மலையுண்டு. ஆண்டவரவர்கள் தங்கள்
தபோதனர்களுடன் அந்த மலையின் கெபியிற்போய்,
நாற்பது நாள் வரையும் கல்வத்திலிருந்தார்கள்.

நிஷ்டையின் நாட்கள் நாற்பதுந் தீர்ந்தபின் ஹலறத்து
ஆண்டவரவர்கள் தங்கள் பாட்டனாராகிய குப்புல்லக் தாபு
சையிது முகியித்தீனப்துல்காதிறு ஜைலானி றலியல்லாகு
அன்கு அவர்கள் பேரால் கந்தூரிகொடுத்துவிட்டு, பின்பு

அந்த மலைக்குகையில் வணக்கஞ் செய்து கொண்டிருந்த ஷைகு ஷம்சுத்தீன், ஷைகு வஹ்ஹாபுத்தீன் என்னும் இரண்டு பெரியோர்களையும், அவர்கள் கூட்டத்தாரையும் சந்தித்துத் தரிசனை பண்ணிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு அத்தேசத்து காட்டுப் பகுதிகளில் சில நாள் சஞ்சரித்தார்கள்.

அக்காலத்தில் அப்பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம்களும், மஜூசிகளும், ஹலறத்து ஆண்டவரவர்களின் பிரபல மகிமையைக் கேள்விப்பட்டுவந்து, அவரவர் நாட்டங்களை முறைப்பாடு செய்து நிறைவேற்றிக்கொண்டு போவார்கள். அதனால் அந் நாடெங்கும் ஆண்டவரவர்களின் மகத்துவம் பிரஸ்தாபப்பட்டது.

கைகூடாத காரியங்களைக் கைகூடுவித்தும், தீராத நோய்களைத் தீர்த்தும், மனிதர்களைச் சந்தோஷப்படுத்தி வருவதால், ஹலறத்து ஆண்டவரவர்கள்மீது அங்குள்ள சில மஜூசிகளுக்குப் பொறாமை மூண்டது. அதனால் அப்பொறாமைகொண்ட சிலர் ஒரு கூட்டங்கூடி நாம் இந்த முகம்மதிய பெரியவரை எவ்விதத்திலும் தாழ்மைப்படுத்தி விடவேண்டும். இல்லாவிடில் நம் இனத்தார் அனைவரையும் தங்கள் இஸ்லாம் மார்க்கத்திற் சேர்த்து விடுவார். அப்படி இவரைத் தாழ்மைப்படுத்த வேண்டுமானால், சில மாதங்களுக்குமுன் இறந்து புதைக்கப்பட்ட ஏழு பிராயமுள்ள இன்ன சிறுவனை உயிருடன் எழுப்பித் தரவேண்டுமென்று இவரிடம் கேட்போம். அது இவரால் கூடாத காரியம். அப்போது இவமாப்படங்கிப் பங்கமடைந்து, நமக்குத் தாழ்ந்துபோவார். இதுதான் தக்க உபாயம் என்று ஆலோசித்துத் தீர்மானம் பண்ணிக்கொண்டு, எல்லாரும் புறப்பட்டு ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து நின்று, தங்களுள் ஒருவனைச் சுட்டிக்காட்டி: இவருடைய ஏழு வயதுள்ள ஒரு மகன் இறந்து மூன்று மாதமாயின. அவன் இன்ன தானத்தில் புதைக்கப்பட்டிருக்கிறான். இப்



போது அவனை உயிருடன் எழுப்பித் தரவேண்டும் என்று கேட்டார்கள்.

ஆண்டவரவர்கள் இச் சொல்லைக்கேட்டு உடனே யெழுந்து, அவர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு அந்தச் சிறுவனைப் புதைத்திருக்கும் சவச் சாலையிற்போய், அவன் பிரேதக்குழியருகில் நின்றுகொண்டு, அவன்பெயரையும், அவன் தாயின் பெயரையுஞ் சேர்த்துக் கூப்பிட்டு "கும்பி இதுனில்லாஹ" என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள். உடனே அந்தச் சிறுவன் உயிர்பெற்று, முன்னிருந்தபடி எழுந்துவந்து நின்றான்.

ஹலறத்து ஆண்டவரவர்கள்மீது பொறாமைகொண்ட அந்தக் கூட்டத்தார் இந்த ஆச்சரியமான மகிமையைக் கண்ணெதிரேகண்டு திடுக்கிட்டு, வேறொன்றும் பேசாமல், அனைவரும் ஒருமித்து ஆண்டவரவர்களின் திருக்கரத்தைப் பிடித்துக் கலிமாசொல்லி இஸ்லாமிலாய், நேர்வழியும், ஈடேற்றமும் பெற்றார்கள்.

பிற்பாடு ஆண்டவரவர்கள் அந்தநாட்டுப் புறங்களை விட்டு, அத்தேசத்தின் பிரதான நகரமாகிய பலகு என்னும் பட்டணத்தில் தங்கள் தபோதனர்களுடன் போய்ச்சேர்ந்து, ஒரு சாலையில் விடுதியிட்டுத் தங்கியிருந்தார்கள்.

இறந்தவனை யெழுப்பினது முற்றிற்று.

௫௨-ம் அத்தியாயம்.

## சைகுமூசனுத்தின் தாயாரைத்தரிசித்தது.

[இவ்வத்தியாயம் சைகுமூசனுத்தின் ஹலறத்து ஆண்டவரவர்களின் உத்தரவுகொண்டு, தமது இறந்துபோன தாயாரைத் தரிசித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு பாக்குஷாசாகிபு ஆண்டவரவர்கள் பகுது நகரத்தில் இருக்கும்போது, தங்கள் கலீபாக்களுள் ஒருவராகிய சைகு மூசனுத்தின் என்பவர் வந்து பணிந்து நின்று: எஜமானவர்களே, அடியேன் இந்த பகுது நகரத்திலேதான் பிறந்தேன். நான் பிறந்து ஏழு பிராயமானபோது என் தகப்பனார் மௌத்தாய்விட்டார். அப்போதே நான் என் தாயையும், குடும்பத்தாரையும் விட்டுப் பிரிந்துபோனேன். இதுவரையும் ஒருதரமாவது மீண்டுபோய் அவர்களைச் சந்திக்கவில்லை. காலம் அதிகமாய் விட்டபடியால், இப்போதுபோய் அவர்களைச் சந்திக்க நாடுகிறேன்; எனக்கு உத்தரவு தரவேண்டும் என்று கேட்டார். ஆண்டவரவர்கள், போய்வாரும் என்று அவருக்கு உத்தரவு கொடுத்தார்கள்.

சைகு மூசனுத்தின் ஆண்டவரவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டுத் தமது வீடுதேடிப்போய், குடும்பத்தாரைக் கண்டு வெகு ஆவலாய்க் கொண்டாடினார். பின்: என்தாய் எங்கேயென்று அவர்களிடம் கேட்டார். உமது தாய் மௌத்தாய் இந்து வருஷமாயினவென்று அவர்கள் சொன்னார்கள். இதைக்கேட்டு சைகுமூசனுத்தின் சஞ்சலப்பட்டு, தமது தாயாரின் கபுறை விசாரித்துப் போய், அங்கே பாத்திஹாவோதி ஸியாறத்துச் செய்து கொண்டு, அங்கிருந்து ஹலறத்து ஆண்டவரவர்களிருக்கும்



சாகைக்கு வந்து, நடந்த காரியங்களை ஆண்டவரவர்கள் சமுகத்தில் சொல்லிக்காட்டி: என் தாயை நான் உயிருடன் சந்தித்துக் கொள்ளும்படி தேவரீர் கிருபைபுரிய வேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்போது ஆண்டவரவர்கள் அவரைப்பார்த்து: மூசனுத்தினே, நீர் இப்போதே உமது தாயின் கபுறடியிற்போய், கிபுலாவை முன்னோக்கி ஸலாம் சொல்லிவிட்டு, பாத்திஹா வோதிக்கொண்டிரும்; உமது நாட்டத்தை அல்லாகுத்தஆலா நிறைவேற்றுவான் என்று உத்தரவுபண்ணி அனுப்பினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் சொன்னபடி சைகுமூசனுத்தின் மறுபடியும் தாயாரின் கபுறடியிற்போய் ஸலாம் சொல்லிவிட்டு, ஓதிக்கொண்டு நின்றார். அப்போது, அவர் தாயாரின் கபுறு திறம்பி, இரண்டாய்ப்பிளந்து விரிந்தது. அவருடைய தாயார் அதற்குள்ளிருந்து ஆடையாபரணங்கள் அணிந்து, பரிமளவாடை கமகமென்று வீசும்படி, நிலவைச் சொரியும் பூரணமதிபோன்ற முகத்துடன் வெளிப்பட்டார்.

சைகு மூசனுத்தின் தமது தாயாரைக் கண்குளிரக் கண்டு "அஸ்ஸலாமு அலைக்கும் யா உம்மீ" என்று ஸலாம் சொன்னார். உடனே அவர் தாயார் வாய்திறந்து "அலைக்குமுஸ்ஸலாம் யாபுனைய்யு" என்று பிரதிசொன்னார். பிறகு அவர் தாயை நோக்கி: அம்மா, தாங்கள் மௌத்தானபின் தங்களுக்கு நேரிட்ட சம்பவங்கள் என்ன? என்று கேட்டார். அதற்கு அவர் தாயார்: மகனே, நான் செய்திருந்த நன்மைகளைக்கொண்டு அல்லாகுத்தஆலா என் பாவங்களைப் பொறுத்து, என்னைச் சுவர்க்கத்திற் குடியிருத்தி, எனக்கு வேண்டுமான நிருமத்துகளையும் தந்தான் என்று சொல்லிவிட்டு, பின்னும் "புகழ் அடங்கலும் அல்லாவுக்கேயுரியன. அவன் எப்படிப் பட்டவனென்றால், அவனுடைய வார்த்தைப்

பாட்டை நமக்கு உண்மையாக்கினானே அப்படிப்பட்டவன். இன்னும், சுவர்க்கம் என்கிற பூமியை நமக்குக் காணியாட்சியாக்கித் தந்தானே அப்படிப்பட்டவன். அந்தச் சுவர்க்கத்தில் நாம் வேண்டிய இடத்தில் ஒதுங்குவோம். இது, நற்கருமஞ் செய்கிறவர்களுடைய பொறுமைக்குப் பிரதியாயிருக்கும்'' என்று பொருள்படுகிற நூறுங் ஆயத்தையும் ஓதிக் காட்டினார். இதைக் கேட்டவுடன் ஸைகு முஈனுத்தீனுக்கு அழுகை வந்து, கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையா யோடிற்று. பிறகு அவர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பார்த்தார்; தமக்கு எதிரே நின்ற தாயாரைக் காணவில்லை. விரிந்திருந்த கபுறு மூடிப் பொருந்தி, முன்போ லிருந்தது.

அதன்பிறகு ஸைகு முஈனுத்தீன் அங்கிருந்து ஹலறத்து ஆண்டவ ரவர்கள் சமுகத்தில் வந்து, தாம் கண்ட காட்சி முதலியவற்றைச் சொல்லிவிட்டு, அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்து நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகி வஸல்லமவர்கள் பேரில் ஸலவாத்துச் சொல்லி, பொறுமையுடன் சுக்று செய்திருந்தார்.

ஸைகுமுஈனுத்தீன் தாயாரைத்தரிசித்தது முற்றிற்று.

---

௯௯ - ம் அத்தியாயம்.

## ஜபலுல் ஒளலியாவுக்குப்போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் துருக்கிஸ்தானிலுள்ள ஜபலுல் ஒளலியா என்னும் மலைக்குப்போய், அங்கே ஒரு பெரியோரைத் தரிசித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது அப்துல்காதிறு ஷெகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவ ரவர்கள் பலகு நகரத்திலிருந்து புறப்பட்டுத் தபோதனர் கூட்டத்துடன் மஷ்ஹது என்னும் தலத்திற் போய், அங்கே அடங்கி யிருக்கும் ஹலறத்து இமாம் ஸையது அலிமூஸாறிலா றலியல்லாகு அன்கு அவர்களின் றௌலாஷரீபை ஜியாரத்துச் செய்துகொண்டு மூன்று தினம் கல்வத்திலிருந்து, பின் பாத்திஹா கத்தம் ஓதி கந்தூரி கொடுத்துவிட்டு, அங்கிருந்து ஜபலுல் ஒளலியா என்னும் மலைக்குப் போனார்கள்.

ஆண்டவ ரவர்கள் அந்தமலையில் நாற்பது தினம் கல்வத்தி லிருந்தார்கள். கல்வத்துத் தீர்ந்தபிறகு அங்குள்ள ஒளலியாக்கள் அனைவரையும் ஜியாரத்துச் செய்தார்கள். பிறகு, கஸ்தூரிக்குகை என்று பெயர் வழங்குகிற அம்மலைக் கெபிக்குப் போனார்கள். அதன் வாசல் திறக்கப்பட்டு, அங்கிருந்து கஸ்தூரி வாடை வீசிற்று, ஆண்ட வரவர்கள் அந்த வாசல் வழியாய்க் கெபிக்குள் நுழைந்து, அங்குள்ள சர்வ பாக்கியங்களையும், அதிசயங்களையும் ஒவ்வொன்றாகக் கண்டு களித்து அல்லாகுத்தஆலாவுக்கு சுக்றுசெய்து, மறுபடியும் ஒருபுறமாகப் பார்த்தார்கள். அங்கே பெரியவர் ஒருவர் ஆகாய நிஷ்டை செய்துகொண்டிருந்தார். அவர் முகமாதியுடல் முழுதும் பிரகாசம் ஜொலித்துக் கொண்டிருந்தது. அன்றியும், அவரிடத்தி லிருந்து கஸ்தூரி மணம் எழுந்து எங்கும் வியாபித்துக் கமழ்ந்துகொண்

டிருந்தது. அவர் ஆடாமல் அசையாமல் எழுதிய சித்திரம் போல இயக்கமற்றிருந்தார்.

அந்தப் பெரியவரை ஹலறத்து ஆண்டவரவர்கள் கண்டு அருகிற்போய், அவர் காதில் இஸ்முல்லாஹ் என்னும் திருமந்திரத்தை ஓதி ஊதினார்கள். அம் மந்திரம் காதில் ஏறினவுடன் அவர் தெளிவடைந்து எழுந்து ஆண்டவரவர்களின் கையைப் பிடித்து ஸலாம் சொல்லி அளவளாவிக் கொண்டாடினார். பின் அவர் அல்லாஹுத்த ஆலாவைத் துதித்து, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் ஸலவாத்துச் சொல்லி ஆநந்தத்தில் மூழ்கி, சுக்று செய்தார். அதன் பிறகும் அவர் ஹலறத்து ஆண்டவரவர்களின் திருநாமத்தைச் சொல்லிப் புகழ்ந்து பாராட்டினார்.

அப்போது ஆண்டவரவர்கள் அந்தப் பெரியவரிடம் சில உபதேசங்களைப் பெற்றுக்கொண்டு, பின் அவரை நோக்கி: தாங்கள் என் நாமத்தை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பெரியவர் ஆண்டவரவர்களை நோக்கி: ஷாஹுல்ஹமீதே, நீர் அவதாரமாகுமுன் உம்மை நான் அறிவேன்; உமது பதவியின் உயர்வும் இவ்வளவென்று எனக்குத் தெரியும். நீர் பிறக்குமுன் எழுபது பெரியோர்கள் கூடிய ஒரு சபை உமது திருநாமத்தைக் கேட்டுத் தலைசாய்த்தது. அப்போது நான்: ஆண்டவனே, நான் மரணமடையும் நேரத்தில் இந்தச் சபையில் துதிக்கப்பட்ட ஷாஹுல்ஹமீது என்பவரை ஹாஜிறாக்கு என்று அல்லாஹுத்த ஆலாவிடம் இரந்தேன். உடனே அல்லாஹுத்த ஆலா என் இரப்பை ஏற்றுக்கொண்டு: அவர் உம்மிடம் வந்தபோது நீர் தெளிவடைந்து மௌத்தாவீர் என்று எனக்கு விடைதந்தான் என்று சொல்லிவிட்டு: ஆண்டவனே! நீ என் இரப்பை ஏற்றுக்கொண்டது போல,



என் றாகையும் ஏற்றுக்கொள்வாயாக என்று ஒரு சத்த மிட்டார்; உடனே அவர் உயிர் பிரிந்தது.

மகா உன்னத பதவியில் நிஷ்டை புரிந்துகொண்டிருந்த பெரியவர் மௌத்தானபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் அவரை அடக்கஞ் செய்துவிட்டு, நாற்பது தினம் வரையில் அங்கேயே நிஷ்டையிலிருந்தார்கள்.

ஜபலுல் ஒளலியாவுக்குப்போனது முற்றிற்று.

---

ருச-ம் அத்தியாயம்.

## மாணிக்கப்பூருக்கு மீண்டது.

---

[இவ் வாத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஜபலுல் ஒளலியாவிலிருந்து தங்கள் சுயநகரமாகிய மாணிக்கப்பூருக்கு மீண்டதும், பிதா மாதாக்களின் மௌத்துக்கு ஹாஜிறாயிருந்து அவர்களை அடக்கினதுமாகிய வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையது அப்துல் காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் முன்சொன்ன ஜபலுல் ஒளலியாவில் இருந்து புரிந்த நிஷ்டையில் நாற்பது தினமுந் தீர்ந்து கந்தூம், பாத்திஹா முதலியன முடித்து, மறு நாள் இரவு இஷா தொழுதபின் தங்கள் தபோதனர்களைப் பார்த்து: இன்று காலை என் தகப்பனார் ஹலறத்து சையது ஹஸன்குத்தூஸவர்களின் மரண வேளையாயிருப்பதால், அவர்களின் மௌத்துக்கு நான் ஹாஜிறாயிருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, அவர்களெல்லாரையும் தங்களுக்குப் பின்தொடர்ந்து நடக்கும்படிக் கட்டளையிட்டு, மேற் சொன்ன மலையினின்று இறங்கி, மாணிக்கப்பூரை நோக்கி நடந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அன்றிரவே பிரயாணப் பட்டுவருகையில், அர்த்தசாம மானபோது வெளிச்சமுள்ள

முடுகின வழிகளும், தூரந் தொலைவிலுள்ள மலைகளும், வனங்களும், நதிகளும், நாடு நகரங்களும் மிகச் சமீபமாய்க் குறுக்கிட்டு, அதிக விரைவாய்ப் பின்போயின. ஆண்டவ ரவர்களின் பிரயாண விரைவுச் சென்று பூமிகளுங்குஞ் சத்தம், செக்காடுஞ் சத்தம்போல் அவர்கள் எல்லார் காதிலும் அன்றிரா முழுதும் கேட்டுக்கொண்டிருந்தது. அன்றியும், பூமியுள் புதைந்து கிடக்கும் பொருள்களெல்லாம் அடிக்கடி வெளியாய், மின் வெட்டுதற்போல மறைந்து கொண்டிருந்தன.

இவ்வாறாக ஹலறத்து ஆண்டவரவர்கள் அன்றிரா முழுதும் ஆப்கானிஸ்தானிலிருந்து அயோத்தி மாகாணத் திற்குவரும் விசாலமான நீண்ட பாதைகளையெல்லாம் அற்புதகரமாகக் கடந்து, பொழுது விடியுமுன் மாணிக்கப் பூருக்கு வந்து சேர்ந்தார்கள்.

சஹறுத்து என்னும் வைகறைப் பொழுதில் ஆண்டவரவர்கள் மாணிக்கப்பூருக்குள் பிரவேசித்து, தங்கள் மனைக்குப் போனார்கள். அப்போது, அவர்கள் தகப்பனார் ஹலறத்து சையிது ஜைனுத்தீனவர்களுக்கு மரணத் தறுவாயா யிருந்தது. உடனே ஆண்டவரவர்கள் அவர்கள் பக்கத்திலிருந்து அப்போது ஆகவேண்டிய கருமங்களை மிக மரியாதையுடன் செய்துகொண்டிருந்தார்கள். கூட வந்த தபோதனர் நானூற்று நால்வரும் பக்கத்திலுள்ள தோட்டத்தில் விடுதியிட் டிருந்தார்கள். அன்று பத்துமணியானபோது ஹலறத்து சையிது ஜைனுத்தீனவர்கள் வபாத்தானார்கள். அவர்கள் வபாத்தானது ஹிஜறத்துத் தொளாயிரத்து நாற்பத்தொன்பதாம் வருஷம், ஜமாத்துல் அவ்வல்மாதம், பிந்தாந்திகதி. தகப் பனாரவர்கள் வபாத்தானபோது, அவர்களுக்கென்று பரி தாபப்பட்டு அழும்பந்து மித்திரர்கள் அனைவரையும் ஆண்டவரவர்கள் தேற்றி, பின் தந்தையின் பிரேத



க்ஷேமச் சடங்குக்கு ஆகுமானவைகளையெல்லாம் தயார் செய்து அடக்கி, கத்தம் பாத்திஹா எல்லாம் முடித்தார்கள்.

தகப்பனா ரவர்கள் வபாத்தான, ஐந்தாம்நாள் தாயா ராகிய சையிதத்து பாத்திமாவும் வபாத்தானார்கள். ஹல றத்து ஆண்டவரவர்கள் தாயா ரவர்களுடைய மரணச் சடங்குகளையும் நிறைவேற்றி முடித்து, தங்கள் மனையிலேயே நாற்பதுதினம் வரையும் நிஷ்டையி லிருந்தார்கள். அந்த மகத்துவமான நிஷ்டையின் நாற்பது நாட்களும் தீர்ந்து தங்கள் பாட்டனார் நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவ ஸல்ல மவர்கள் பேரிலும், பாட்டனார் ஹலறத்து முகியித்தீன் அப்துல் காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்கள் பேரிலும், பிதா மாதாக்கள் பேரிலும் கத்தம், பாத்திஹா ஓதி கந்தூரி கொடுத்துவிட்டு, நானூற்று நான்கு தபோதனர்களும் புடை சூழ்ந்துவர மாணிக்கப்பூரைவிட்டுக் கடைசியாகப் * பிரயா ணப் பட்டார்கள்.

மாணிக்கப்பூருக்கு மீண்டது முற்றிற்று.

* ஹலறத்து ஆண்டவரவர்களின் இந்தப் புறப்பாடு ஹிஜறத்துத் தொளாயிரத்துநாற்பத்தொன்பதாம் வருஷம், ஜமாத்துல் ஆகிறுமாதம், இருபத்து மூன்றாந் திகதியென்று துலாசத்துல் கறமாத்து என்னும் கிரந்தஞ் சொல்லுகின்றது. ஏனைய கணக்கிற்கு இது பொருந்தா தாயினும், தகப்பனா ரவர்களின் வபாத்துக் கணக்கின்படி ஒத்திருக்கின்றது.

௩௫-ம் அத்தியாயம்.

# குஷ்டந் தீர்த்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு அரசனின் குஷ்டரோகத்தைத் தீர்த்து, அவன் மனைவியின் கருப்பத்தை வெளிப்படுத்தி ரக்ஷித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான் சுல்தான் ஷாஹுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் மக்கா ஷரீபுக்குப்போய் ஹஜ்ஜு செய்வதற்காக வேண்டி மாணிக்கப்பூரைவிட்டுப் புறப்பட்டு, தங்கள் சீஷர்களாகிய நானூற்று நான்கு தபோதனர்களுடன் காடு மலைகளையெல்லாங் கடந்து நடந்தார்கள்.

ஆண்டவரவர்கள் போகும் தங்கள் பிரயாண வழியில், கன்னூப்பூர் மாகாணத்தில் விடுதியிட்டுத் தங்கினார்கள். அப்போது அந்தமாகாணத்து அதிபதி தமது மந்திரி பிரதானிகளுடன் மனைவியையும் அழைத்துக்கொண்டு, ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து பணிந்துநின்று: தமியேன் தேவரீருடைய தரிசனையைநாடி வந்தேன் என்று சொன்னார். ஆண்டவரவர்கள் அவரைத் தங்கள் அருகில் அழைத்து: உமது காரியம் என்ன? என்று கேட்டார்கள். அப்போது அவர் ஆண்டவரவர்களை நோக்கி: என் எஜமானவர்களே, தமியேனுடைய காரியங்களைத் தாங்களே நேரிற் காணும்படி எனக்குக் கடவுள் கிருபை செய்தது பெரும் பாக்கியம். இப்போது தாங்கள் என் சரீரத்தைப் பாருங்கள் என்று சொல்லி, தாம் அணிந்திருந்த மேலங்கியையும், கைகால்களில் இட்டிருந்த மோஜா என்னும் உறைகளையும் கழற்றிவிட்டு, வெறு மேனியாய் நின்றார். அவருடலில் கேசாதி பாதம்வரையும் குஷ்டம்பற்றி அழுகிப் புண்பட்டு, துர்நாற்றம்வீசி, ஊனம் வடிந்துகொண்டிருந்தது. மனிதர்கள் காண்பதற்கு அருவருத்து அஞ்சும் கொடியரோகத்தி



னால் நொந்த தம் உடலை அவர் ஆண்டவரவர்களுக்குக் காட்டி, பின்னும் நோக்கி: எஜமானவர்களே, என் காரியம் இதுமாத்திர மன்று; இதோ நிற்கிற என் மனைவி அதிக நாள் மலடாயிருந்து, கொஞ்சகாலத்திற்குமுன் கருப்பவதியானாள். இவள் கருப்பமாய் இன்றைக்கு மூன்று வருஷங்களாயின. இதற்கிடையில் இவள் பிரதிதினமும் கருமாரிகண்டு வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதே மணியமாயிருக்கிறதன்றி, பிரசவமுண்டாகவில்லை. இதைக் குறித்து நான் அநேக பண்டிதர்களைக் கேட்டேன். அதற்குச் சிலர்: இது பிள்ளையல்ல; சதைக்கட்டி என்றும், சிலர்: பிள்ளைதான்; பிறப்பது அசாத்தியம் என்றும், சிலர்: இது ஷைத்தானுடைய சேஷ்டை என்றும் பலவாறு சொல்லுகிறார்கள். அதனால், ஒரு வழியிலும் இவளுக்குச் சுகாநுகூலமில்லாமல் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அதுவும் போதாமல், என் உடலிலுள்ள ரோகமும் இவளைப் பற்றிக்கொண்டது. எனக்கும் இவளுக்கும் இனி நான் செய்யவேண்டிய பரிகாரம் ஒன்று மில்லை. இவைகளுக்கு இனிமேல் தேவரீர் தங்களுடைய திருவருளே மருந்தாகவேண்டும். ஆகையால், எஜமானவர்களே, தாங்கள் இரக்கம் வைத்து, என் உடலிலுள்ள நோயைப் பற்றத்தீர்த்து, மனைவியின் உபாதிதீரக் கருப்பத்தை ஒரு புத்திரனாக வெளியாக்கி ரக்ஷிக்கவேண்டும் என்று சொல்லி, மன்றாடி அழுதார்.

தங்கள் முகதாவில் வந்துநின்று முறையிட்டு அழும் அதிபரின் சரீரநோயையும், அவர் பத்தினிபடும் பரிதாபயாதனையையும் ஹலறத்து ஆண்டவரவர்கள் கண்டு, அவர் முறைப்பாட்டையுங் கேட்டபோது, அவர்களின் அன்பான மனம் உருகி இளகிற்று. உடனே தங்கள் இருகரங்களையும் உயர்த்தி, அவ்விருவர் துன்பமும் தீரும்படி துஆ இரந்தார்கள். அப்போது நாலுபேர் அறிய அங்கே நின்ற அந்த அதிபதியின் கொடிய குஷ்டரோகம் முழுதுந் தீர்ந்து,

மேனியும் பொன்மயமாய் இலங்கிற்று. அவர் மனைவியும் அப்போதே குஷ்டம் தீர்ந்து, அங்கேயே ஒரு ஆண்குழந்தையை யீன்றாள். புருஷரும், மனைவியும் நோயற்ற மங்கள சுருபதேகிகளாய் நின்றார்கள். இதைக்கண்ட அவர் கூட்டத்தார் அனைவரும் ஆச்சரியப் பட்டார்கள்.

பிறகு, அந்த அதிபரும், அவர்மனைவியும், பரிவார ஜனங்களும் சந்தோஷமடைந்து, ஹலறத்து ஆண்டவரவர்களைத் துதித்து உத்தரவுபெற்றுக்கொண்டு, தங்கள் சாகை போய்ச் சேர்ந்தார்கள். பிற்பாடு ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் அங்கிருந்து புறப்பட்டு, கிழக்குத்திசையிலுள்ள சீனுத்தேசத்தை நோக்கி நடந்தார்கள்.

குஷ்டந்தீர்த்தது முற்றிற்று.

---

உசு-ம் அத்தியாயம்.

## திரவியாலயத்தை வசமாக்குவித்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் சீனுராச்சியத்தின் ஒரு பகுதியாருக்கு அவர்கள் முன்னோருடைய திரவியாலயத்தை வசமாக்குவித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஜொகுல்ஹரீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் பரிவாரங்களோடு சீனுவைச் சார்ந்த தார்த்தாரிதேசத்து ஒரு மாகாணத்திற் போய்த் தங்கினார்கள். அப்போது அங்கே வாசஞ்செய்கிற காபிர்களின் அதிபதியுடைய சேவகவீரர்கள் பெருந்திரளாய் ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து: நீங்கள் யார்? என்னகாரியத்திற்காக இங்கே வந்தீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது ஆண்டவரவர்கள்: நாங்கள் இஸ்லாமானவர்கள். எங்கள் பரிசுத்த நகராகிய மக்காவுக்குப் போகப் புறப்பட்டு, பரதேச சஞ்சாரஞ்செய்து வருகிறோம் என்று



அவர்களுக்கு வதில்சொன்னார்கள். இதைக்கேட்ட அவர்கள் ஆண்டவரவர்களை நோக்கி: இந்த ராச்சியத்தில் எவனானாலும் ஒருவன் நான் இஸ்லாமானவன் என்று சொல்லுவானாயின், அவன், விசாரணையின்றிக் கொல்லப்படுவானென்று இராசகட்டளை பிறந்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் இஸ்லாமானவர்கள் என்பது இங்கே பிரஸ்தாபப்படு முன், வேறு ராச்சியத்திற்குப் போய் விடுங்கள். இல்லாவிட்டால், அநீதமாகக் கொல்லப்பட்டுப் போவீர்கள் என்று சொல்லி, பயமுறுத்தி வெருட்டினார்கள். இதை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அவர்களைப் பார்த்து: இங்கே வாருங்கள் சேவகர்களே, நாங்கள் இந்தராச்சியத்திற்கு வந்த காரணமானது, இங்கே குடியிருக்கிற காபிர்களை எங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் அழைத்துச் சேர்ப்பது ஒன்றே யல்லாமல் வேறில்லை. அதற்காகவே, நாங்கள் ஏவப்பட்டு வந்திருக்கின்றோம். இந்தச் சங்கதியை நீங்கள் உங்கள் அரசனிடம் போய்க் கட்டாயம் அறிவியுங்கள் என்று மனோதைரியத்துடன் சொன்னார்கள்.

தங்கள் கொள்கைக்கு மாற்றமான இந்தச் சொல்லைக் கேட்ட அந்தச் சேவகவீரர்கள் ஆண்டவரவர்கள் மீது சினங்கொண்டும் யாதொரு தீங்கும் செய்யத் திராணியில்லாதவர்களாய், ஒன்றும் பேசாமல் அங்கிருந்து மீண்டுபோய் அரசனிடம் அறிவித்தார்கள். இதைக்கேட்ட அவ்விராச்சியத் தலைவன் கோபங்கொண்டு அவர்களை ஏன் கொல்லாமல் விட்டுவிட்டு வந்தீர்கள்? என்று சொல்லி, வேறு சில ரணவீரர்களைத் திரட்டி நீங்கள்போய் அவர்கள் எல்லாரையும் சங்கரித்துவிட்டு வாருங்களென்று கட்டளை பண்ணியனுப்பினான்.

அரசன் உத்தரவுபெற்ற அந்த வீரர்கள் ஆயுதபாணிகளாய் அகங்காரங்கொண்டு புறப்பட்டு, அதிக ஆரவாரத்து

டன் ஆண்டவரவர்கள் இருக்குந் தலத்தைநோக்கி வந்தார்கள். வீர நிரமுள்ள சேனைவருப்பில் ஒன்று தங்கள் மீது அடர்ந்து வருவதை ஹலறத்து ஆண்டவரவர்கள் அறிந்து, உடனே தங்கள் இருகரங்களையும் உயர்த்திவேந்தி, அல்லாகுத்த ஆலா இடம் துஆ இரந்தார்கள். அப்போதே அந்த சேனைவீரர்கள் அணிந்திருந்த ஆயுதங்கள் எல்லாம் பறிபட்டுப்போய், எல்லாரும் நிராயுதபாணிகளாய், பலங்குன்றி, சித்தப்பிரமை கொண்டு, தெறிகெட்டுப் பலவழியிலும் சிதறி, முகங்கொண்ட போக்கில் ஓடினார்கள். இவ்வித ஆபத்து அவர்களுக்கு நேரிட்ட அந்தக்ஷணமே அவர்கள் அரசனுக்கும் மனக்கலக்கமுண்டாய், வெறிபிடித்துப் புலம்பத் தொடங்கினன். இதை யறிந்த மற்ற ஜனங்கள் எல்லாரும் திகில்பிடித்துக் கலங்கினார்கள்.

அரசனுக்கும், அவன் சேனைவீரர்களுக்கும் சம்பவித்த இந்த விபத்தை நிவர்த்திசெய்வதற்காக அவ் விராச்சியத்துப் பண்டிதர் பலர் எட்டு நாள்வரையும் வெகு பிரயாசை யெடுத்துப் பார்த்தார்கள்; ஒரு வழியிலும் பலிதப்படவில்லை. அவர்கள் குருமார்களும் அதிகப் பாடுபட்டுப் பார்த்தார்கள்; பரிகரிக்குந் தோறும் அவர்களுக்குண்டான குணக்கேடு அதிகரித்துக்கொண்டே வந்தது.

அவர்களுக்கு நேரிட்ட வில்லங்கத்தின் தன்மையையும், அது எவ்விதப் பக்குவ பரிகாரங்களாலும் நீங்கிச் சுகப்படாமல் அதிகரிப்பதையும் அவ்விராசனுடைய மந்திரி எண்ணிப்பார்த்து, இது இன்ன காரியத்தா லன்றித் தீரமாட்டாது என்று தனக்குள் சிந்தனை பண்ணித் தீர்ப்பிட்டுக் கொண்டு, சித்தப்பிரமை கொண்ட அரசனையும், வெறிபிடித்துத் திரியும் அவன் வீரர்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு, ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று: எஜமானவர்களே, சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுத்தல் இயற்கையென்



பது உலகறிந்த காரியம். தாங்களோ, சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு உவப்பான மகாபெரிய நாயகர். ஆனதால் அடியேங்கள் செய்த அறியாப்பிழையை அன்புடன் பொறுத்து ரக்ஷிப்பது தங்கள் அரியலக்ஷணங்களில் ஒன்று. எஜமானே, இப்போது எங்கள் குற்றத்தை இரக்கம் வைத்து மன்னித்து, எங்களுக்கு உண்டாயிருக்கும் தீங்கை நீக்கி ஆளவேண்டும் என்று சொல்லி, கெஞ்சி மன்றாடினன். அப்போது ஆண்டவரவர்கள் அவர்கள்மீது இரக்கம் வைத்து, அவ்வரசனை அருகிலழைத்து, அவன் வாயில் தங்கள் அமிர்தம்போன்ற வாய்நீரை யுமிழ்ந்து. கைகளை யேந்தி: யா அல்லா! இவர்கள் மீதிறங்கின வில்லங்கமான பலாயை நீக்கி, இவர்களின் இருதயத்திற் குடிகொண்டிருக்கும் குபுர் என்னும் இருளையும் அகற்றி, எல்லாரும் நேர்வழியாகிய இஸ்லாமிலாகக் கிருபைசெய் என்று துஆ செய்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் இரந்த துஆ உடனே கபூலாயிற்று. அப்போதே அரசனுக்கும், அவ்வீரர்களுக்கும் பிடித்திருந்த சித்தப்பிரமை தீர்ந்து சுகமுற்று, அவர்கள் எல்லாரும் இஸ்லாமிலாக உடன்பட்டார்கள். அப்போது, மேற்படி மந்திரி ஆண்டவரவர்களைநோக்கி: எஜமானவர்களே, தங்கள் அடியேங்களுக்கு இன்னும் ஒரு காரியம் ஆகவேண்டியது உண்டு. அது:—எங்கள் மூதாட்கள் சேகரித்து க்ஷேமித்து வைத்த திரவியங்கள் அடங்கின மாளிகையொன்று இங்கே யிருக்கின்றது. அந்தத் திரவியாலயத்தைச் சூழக் கொஞ்சந்தூரம் வரையும் மனிதர் அணுகக்கூடாதபடி பூதங்கள் காத்து நிற்கின்றன. அதனால், நாங்கள் அவ்வாலயத்தை நெருங்கி, அங்குள்ள திரவியத்தைக் கைக்கொள்ளக் கூடவில்லை. இப்போது தாங்கள் அந்தத் திரவியாலயத்தைப் பூதகாவலி லிருந்து நீக்கி, எங்களுக்கு வசமாக்கித் தருவது ஒன்றுதான். அப்

படியானால், உடனே நாங்கள் எல்லாரும் இஸ்லாமிலாகிறோம் என்று சொன்னான்.

இதைக்கேட்டு ஹலறத்து ஆண்டவரவர்கள் அவ்விராசனையும், அவன் வீரர்களையும், மேற்படி மந்திரியையும் அழைத்துக்கொண்டு, அங்கிருந்து அந்தத் திரவிய மாளிகைக்கு வந்தார்கள். அம்மாளிகையானது, நூறடி அகலமும், இருநூறடி உயரமுமுள்ள சதுராகாரமான மதிலும், மேலே விரிந்தமண்டபமுமுள்ளதும், வாசல் இல்லாததும், மிகப் பலமானதுமாயிருந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தமாளிகை யருகிற் போய், தங்கள் வலதுகைச் சுட்டுவிரலால் அதன் சுவரில் கீறினார்கள். உடனே அவ்வாலயம் அதிர்ந்து இரண்டாய்ப் பிளந்து சரிந்தது. அப்போதே அதைக் காத்து நின்ற பூதகணங்கள் அனைத்தும் தெறிகெட்டுச் சிதறி வெருண்டோடி விட்டன. மாளிகைக்குள் ஒன்பதுவகை ரத்தினங்களும், பொற்பணங்களும் கணக்கின்றிக் குவிந்து கிடந்தன. அவைகள் அனைத்தையும் ஆண்டவரவர்கள் அவர்கள் வசமாக்கினார்கள். அவர்கள் அவைகளை ஒப்புக்கொண்டு சந்தோஷப்பட்டவர்களானார்கள். பிறகு மேற்படி அரசனும், அவன் மந்திரி பிரதானிகள், சேனாவீரர்கள், குடிஜனங்கள் எல்லாரும் ஒருமித்து, ஹலறத்து ஆண்டவரவர்களின் கையைப்பிடித்துக் கலிமாசொல்லி இஸ்லாமிலானார்கள். ஆண்டவரவர்கள் அந்த ஜனங்களுக்கு இஸ்லாம் மார்க்கத்து விதிவிலக்குகளைக் கற்பித்துக்கொடுத்து தங்கள் தபோதனர்களுடன் அங்கேயே சிலநாள் வரையும் தங்கியிருந்தார்கள்.

திரவியாலயத்தை வசமாக்குவித்தது முற்றிற்று.

---

ருஎ-ம் அத்தியாயம்.

## ஒட்டக மழைத்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் சந்நியாசிகள் அறுத்துத்தின்ற ஒட்டகத்தை உயிர்ப்பித்து அழைத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீருன்சுல்தான் ஷாஹுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் முன்சொன்ன தார்த்தாரி தேசத்தை விட்டு மறுபடியும் மேற்குப்புறமாக மீண்டு வந்து, இந்தியாவின் வடபாகத்து நாடுகளிற் சஞ்சரித்தார்கள். சிலநாள் அப்பகுதிகளிற் சுற்றி, பின் ஒரு அதன்றநாட்டில் விடுதியிட்டிருந்தார்கள்.

அப்போது, ஆண்டவரவர்களின் பகீர்மார்களென்னும் தபோதனர் கூட்டத்திலுள்ள சைகு இபுறாகீம் என்னும் ஒருவர், தமது ஒட்டகமொன்றைப் பக்கத்தில் மேயவிட்டிருந்தார். காலைவேளையில் மேயவிட்ட அவ்வொட்டகம் அன்று மாலைவரையும் வரவில்லை. பின் இராமுழுதும் சைகு இபுறாகீம் அதைத் தேடித்திரிந்து, அடுத்தநாள் முழுதும் பலவிடங்களில் போய்ப்பார்த்தார். இரண்டு நாளாயும் அகப்படவில்லை. மூன்றுநாட் காலையிலும் புறப்பட்டு எங்குஞ்சுற்றிப் பார்த்துக்கொண்டு அங்கே ஒரு தோட்டத்திலிருக்கும் காபிர்களின் மடத்திற்போய்: என் ஒட்டகமொன்று இங்கேவரக் கண்டீர்களா? என்று அந்த மடத்திலிருக்கும் சந்நியாசிகளிடம் கேட்டார். அதற்கு அவர்கள் சைகு இபுறாகீமைப் பார்த்து அதட்டி: நீ யாரைக் கேட்கிறாய்? உன் ஒட்டகத்தைக் கண்டது யார்? போ! போ! வென்று வைது துரத்தி வெருட்டினார்கள். அவர் அங்கிருந்து பேசாமல்வந்து தம் கூட்டத்திற் சேர்ந்து இருந்துவிட்டார்.

ஷைகு இபுறாகீமுடைய ஒட்டகம் காணாமற்போன சங்கதி பக்கீர்மார்களுள் பிரஸ்தாபமாயிற்று. அதை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேள்விப்பட்டு ஷைகு இபுறாகீமை யழைத்து: நீர்போய் அந்தச் சந்நியாசிகளின் காதிற் கேட்கும்படி சத்தமிட்டு உமது ஒட்டகத்தைக் கூப்பிடும் என்று சொல்லி யனுப்பினார்கள். உடனே அவர் புறப்பட்டு அந்த மடத்தருகிற்போய் நின்றுகொண்டு, தம் குரல் அங்கிருக்கும் சந்நியாசிகளின் காதில்விழச் சத்தமிட்டு, ஒட்டகத்தை அழைத்தார்.

ஷைகு இபுறாகீம் குரலெழுப்பிக் கூப்பிட்டமாத்திரத்தில் அந்த மடத்திலிருக்கும் சந்நியாசிகள் எல்லார் வயிற்றிலு மிருந்து அவ்வொட்டகத்தின் பிரதித்தொனி எழும்பிற்று: எஜமானுடைய கூப்பிடுதலுக்கு வயிறுகளிலிருந்து பிரதிகொடுத்த ஒட்டகச் சத்தம் எல்லார்காதிலும் கேட்டபோதே, அவர்கள் வயிறுகளெல்லாம் மகோதரமாய் வீங்கி வருத்தங்கண்டு, நிலைகுலைந்து உருண்டு புரண்டார்கள். அச் சந்நியாசிகள் அனைவரும் நோய் தாங்காமல் தரையிற் கிடந்து உருண்டு புரண்டு துன்பப் படும்போது, அவர்கள் வயிறுகளுக்குள்ளிருந்து எழும் ஒட்டகத்தின் உறுமுதல் ஓயவில்லை; அடிக்கடிக் கேட்டுக்கொண்டே யிருந்தது. உடனே அந்தச் சந்நியாசிகள் எல்லாரும் தங்களுக்கு நேரிட்ட வில்லங்கம் இன்னதுதான் என்று நன்கு அறிந்து கொண்டு, உபத்திரவந் தாங்காமல் எழுந்துவந்து ஷைகு இபுறாகீமுடைய பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்கள். அப்போது அவர் அவர்களுக்காக மனமிரங்கி பரிதபித்து அழும் அவர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு ஹலறத்து ஆண்டவரவர்கள் சமூகத்திற் கொணர்ந்து, விட்டு நடந்த வர்த்தமானத்தை சொல்லிக் காட்டினார்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தச் சந்நியாசிகளைப் பார்த்து: நீங்கள் செய்த காரியமென்ன? என்று விசாரித்



தார்கள். அப்போது அவர்கள்: எஜமானவர்களே, நாங்கள் அந்த வொட்டகத்தைக் களவிற்பிடித்து, கொன்று தின்று விட்டோம். நாங்கள்செய்த இச்செயல் தவறுதான் என்று இப்போது மனதார ஒப்புக்கொள்ளுகிறோம். அடியேங்களாகிய எங்கள் பிழையைத் தேவரீர் பொறுத்து ரக்ஷிக்கும்படி பிரார்த்திக்கிறோம். தங்களையன்றி எங்களுக்கு இனித் திக்கில்லை என்றுசொல்லி, எல்லாரும் சாஷ்டாங்கமாய் விழுந்தார்கள்.

கருணைக் கடலாகிய ஆண்டவரவர்கள் அந்தச் சந்நியாசிகள்படும் பரிதாபத்தையும், கெஞ்சிமன்றாடி அழும் அமளியையும் கண்டு மனமிரங்கி, தின்று தீர்ந்த அந்த ஒட்டகத்தின் மீந்த என்புகளையும், தோல்களையும் கொண்டுவரச் சொல்லி ஒருபக்கத்திற் குவித்து, அதன்மேல் ஒரு கம்பளியைப்போர்த்து, ஒரு கழியைநோக்கி ஓங்கி "கும்பி இனில் லாகி" என்று சொல்லி அதன்மேல் அடித்தார்கள். அடித்த மாத்திரத்தில் அறுத்துத் தின்னப்பட்ட அந்த ஒட்டகம் அந்தக் கம்பளிக்குள் முடங்கியொடுங்கியிருந்து எழுந்து, சத்த மிட்டுக்கொண்டு, ஷைகு இபுறாகீமுக்கு அருகிற்போய் நின்றது. அப்போதே அந்தச் சந்நியாசிகள் கொண்ட மகோதரங்கள் வற்றி, நோக்காடு தீர்ந்து, பழயவயிறுகளாயின.

நோய்தீர்ந்து சுகமடைந்த அச்சந்நியாசிகள் அனைவரும் இந்த அற்புதத்தினால் அச்சமும், ஆச்சரியமுங் கொண்டு, அப்போதே ஹலறத்து ஆண்டவரவர்களின் கையைப்பிடித்துக் கலிமாசொல்லி இஸ்லாமிலாய், முரீதுமாய், தீக்ஷைபெற்றார்கள்.

ஒட்டக மழைத்தது முற்றிற்று.

௧௮-ம் அத்தியாயம்.

## றாபுலிகள் வழிபட்டது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு றாபுலிகள் வழிபட்டு, சுன்னத்துல் ஜமாஅத்தில் சேர்ந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து குத்புல் அக்தாபு காதிறேலி கன்ஜுஸவாய் பாத்துஷா ஆண்டவரவர்கள் தங்கள் பகீர்மார்களாகிய தபோதனர் கூட்டத்துடன் அங்குள்ள ஜவாகிர் நகரத்து குத்பாப் பள்ளியிற் போய்த் தங்கியிருந்தார்கள். ஒரு வெள்ளிக்கிழமை யன்று அவ்வூர்த் தலைவராகிய நவாபும், அவருடைய மந்திரி பிரதானிகளும், ஊர் வர்த்தகர் முதலான சர்வஜனங்களும் பெருந்திரளாய் ஜும்ஆ தொழுவதற்காக வந்திருந்து, தொழுது தீர்ந்தது. பின்பு சிலர் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் பணிந்து நின்று: எஜமானவர்களே, அதோ நிற்கும் இவ்வூர் நவாபு சுன்னத்துல் ஜமாஅத்திற் சேர்ந்தவரல்ல. றாபுலிமதுஹபி யுள்ளவர். அவர் அந்த மதுஹபி லிருந்துகொண்டு சுன்னத்துல் ஜமாஅத்தி யுள்ளவர்களைச் சலித்து, றாபுலியாக்கி வருகிறார் என்று தெரிவித்தார்கள்.

ஆண்டவரவர்கள் இதைக்கேட்டு அந்த நவாபையும் பார்த்துக்கொண்டு, ஜும்ஆ தொழுவத்துக்கூடின ஜனங்கள் கலையுமுன் அப்பள்ளியின் மின்பறில் ஏறி நின்று, தேவாமிர்தம் சிந்தினாற்போல மனிதர்களின் மனங்கள் உருகி நேர்வழியில் தரிக்கும்படி, பின்வருமாறு பிரசங்கம் செய்யத் தொடங்கினார்கள். :—

பிரசங்க ஆரம்பத்தில் அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்து, நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரிலும், அவர்கள் அஹ்லாதுகள் பேரிலும், அஸ்ஹாபுகள் பேரி



லும் ஸலவாத்தும், ஸலாமும்சொல்லி, மனிதர்களே, அல்லாஹுத்தஆலா சுவர்க்கத்தையும், நரகத்தையும், மனிதர்களுக்கென்றும், ஜின்களுக்கென்றுமே படைத்திருக்கின்றான். அவனுக்கும், அவனுடைய றசூல் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கும் வழிபட்டு நடந்து, நன்மை செய்தவர்கள் சுவர்க்கத்திற்கும், தீமை செய்தவர்கள் நரகத்திற்கும் பாத்திரராவார்களென்பது சத்தியம். சுவர்க்கம் மகா இன்பமும், ஆநந்தமுமானது; நரகமோ தாங்கரிய கொடுமையும், யாதனையுமுள்ளது. சுவர்க்கத்தைப்பற்றி ஆதரவுவையுங்கள்; நரகத்திற்கு அஞ்சுங்கள். பல பிரிவுகளாயிருக்கும் முஸ்லிமானவர்களும், ஜின்களும், சுன்னத்துல் ஜமாஅத்திற்சேர்ந்து, அந்த மதுஹபின்படி அகீதா என்னும் நேரான நிர்ணயத்துடன் அமல்செய்து வருவது வாஜிபாயிருக்கும். அப்படியானால், அவர்களின் இபாதத்துகளும், அமல்களும் அல்லாஹுத்தஆலா இடம் கபூல் செய்யப்படும். அவர்கள் தாம் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயமும், ஜயமும் பெற்றவர்கள். சுன்னத்துல் ஜமாஅத்துக்கு விரோதமாக மூடத்தன்மையால் பித்அத்து என்னும் நூதனமான அகீதாக்களைக்கொண்டு நடக்கிற றாபுலி, காரிஜி முதலான பிரிவுடையவர்கள் அனைவரும் உண்மையாய்ப் பேறிழந்தவர்களாவார்கள். சுன்னத்துல் ஜமாஅத்துக்கு மாற்றமான மதுஹபில் இருப்பதும், அதில் மனிதர்களைச் சேர்ப்பதும், அது நன்மையுடையதென்று அதன்படி அமல்செய்வதும் ஹறுமாயிருக்கும். அவர்களின் இபாதத்துகளையும், அமல்களையும் அல்லாஹுத்தஆலா கபூல் செய்யமாட்டான். அவர்கள் அனைவரும் விருதாவாய், பின் வைசேதப் படுவார்கள். சுன்னத்துல் ஜமாஅத்தின் மதுஹபோ எப்படிப்பட்டதென்றால்,—அல்லாஹுத்தஆலாவுடைய சொல்லாகிய குர்ஆன் ஷரீபைக்கொண்டும், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய சொல்லும்.

செயலுமாகிய கள்ளத்தனத்தைக்கொண்டும். அவற்றிற்கு ஒத்ததாக மேலான இமாம்களால் தரிபடுத்தின பரிசுத்த மதுஹபு. ஆகையால், ராபுலிமதுஹபை விருந்து பேதமுறக் காமல் அதைவிட்டுத் தௌபாசெய்து மீண்டு, சுன்னத்து ஜமாஅத்திற்சேர்ந்து, சமாதனமுடையதாம், இல்லா முடையதுமான பதினொரு விஷயங்களிலும் குற்றமற்ற கொள்கையுடன் ஒழுகிநடந்து, நபி முஹம்மது ஸல்லல்லாகு அலைஹி வஸல்லமவர்களையும், அவர்கள் அஸ்ஹாபுகளையும் உவந்து கொண்டு அமல்செய்வதே மேன்மையாம். அப்படியானால், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நபி முஹம்மது ஸல்லல்லாகு அலைஹிவஸல்லமவர்களுடைய ஷபாஅத்திற்கு அருகராய், முஸ்லிமான சகோதரர்களுடன் சுவர்க்கத்தைக் கொண்டு ஜயம்பெற்று, அல்லாஹுத்த ஆலாவின் ஒப்பற்ற ரிதாவையும் பெற்றுக் கொள்வார்கள். ஜனங்களே, கேளுங்கள்; நபிமுஹம்மதுஸல்லல்லாகு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்து "என் உம்மத்துமார் இனிமேல் எழுபத்துமூன்று கூட்டங்களாய்ப் பிரிவார்கள். அவர்களில் ஒரு கூட்டத்தாரே சுவர்க்கத்திற்குப் பாத்திரர்; அவர்களுக்கு அஹ்லுஸ் சுன்னத்து வல் ஜமாஅத்து என்று பெயர். மற்ற எழுபத்திரண்டு கூட்டத்தாரும் நரகத்திற்கு பாத்திரர். அவர்களுக்கு பிதுஅத்துக்காரர் என்றுபெயர். அவர்களே ராபுலி முதலான கூட்டத்தார். அல்லாஹுத்தஆலாவின் சொற்படி அவர்கள் எல்லாரும் முனாபிகீன்கள்; வெறுக்கப்பட்டவர்கள்: வேதத்தை மறுக்கிறவர்கள். அப்படியே நபி முஹம்மது ஸல்லல்லாகு அலைஹிவஸல்லமவர்களும் திருவாய் மலர்ந்து சொல்லியிருக்கின்றார்கள். ஜனங்களே, ராபுலி முதலான கூட்டத்தார்கள் கொண்டிருக்கும் இன்ன இன்ன கொள்கைகள் இன்ன இன்ன நியாயப் பிரமாணத்தினால் தவறாகும். அவர்களின் சொல்லும், செயலும், மிகவும் பிசகாகும். ஆகையால், அவர்கள்சொல்லை நம்பி, அவர்கள் செய



லைத்தொடர்ந்து, அவர்களைச் சேர்ந்து நடக்காமல், இன்ன கொள்கைகாரர் இன்ன கூட்டத்தார் என்று தெரிந்து கொண்டு அவர்களை விட்டுவிலகி, நேர்வழியான சுன்னத்து ஜமாஅத்துமதுஹபைப் பற்றிப் பிடித்து நிற்பது உங்கள் பேரில் கடமையாயிருக்கும். மூஸா அலைஹிஸ்ஸலாம், ஈஸா அலைஹிஸ்ஸலாமைப்போன்ற நபிமார்களின் உம்மத்துமார்கள் மூடத்தனத்தினாலும், அறியாமையினாலும், பிடிவாதத்தினாலும் மனம்போனபடி நிர்ணயங்களைப் பகுத்துக் கொண்டு, பல பிரிவாய் தங்கள் வேதத்தையும், மார்க்கத்தையும் பழுதாக்கி, வழிகெட்டுப் போனதை நீங்கள் அறியவில்லையா? அப்படி யாகாமல் முஸ்லிமான அனைவரையும் அல்லாதுத்தஆலா காப்பானாக. ஜனங்களே, அல்லாதுத்த ஆலா தன்படைப்புகளில் மேலான படைப்புகளாகப் பத்து வகைப் படைப்புகளைப் படைத்திருக்கின்றான். அவற்றுள் ஒன்பது வகைகள் மலாயிக்கத்துகள். மற்ற ஒரு வகையை நூற்றிருபத்தைந்து பிரிவாக படைத்திருக்கின்றான். அவற்றுள் நூறு பிரிவு யாஜூஜு மாஜூஜு. மற்ற இருபத்து நான்குபிரிவுகள் யகூதி, நஸாறா, மஜூஸி, ததெனிய்யா முதலான காபிர்கள். மீதியான ஒருபிரிவு முஸ்லிமானவர்கள். இவர்களே எழுபத்துமூன்று கூட்டமாவார்கள். அவற்றுள்:—சுன்னத்து ஜமாஅத்தான ஒரு கூட்டந் தவிர, மற்ற எழுபத்திரண்டு கூட்டமும் பாவிகள். ஆகையால், ஜனங்களே, உங்களைத் தோஷித்தனத்தை விட்டு அல்லாதுத்த ஆலா காப்பானாக; நீங்கள் சுவர்க்கத்தைக்கொண்டு ஜயம் பெறுவீர்களாக; உங்களுக்குச் சோபனம் உண்டாவதாக. உங்கள் அமல் கபூலாவதாக என்று இம்மட்டும் பிரசங்கித்து, முடிவில் தோத்திரவகையாக அவர்களுக்கு துஆ இரந்து வாழ்த்தினார்கள். அப்போது அங்கே கூடியிருந்த சுன்னத்து ஜமாஅத்துகள் அனைவரும் "ஆமீன்" "ஆமீன்" என்று ஆர்ப்பரித்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் இவ்வாறு பிரசங்கித்து, ராபுலி முதலான கூட்டத்தாரின் கொள்கைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டி, அவற்றிற்குத் தக்கநியாயஞ் சொல்லி அவைகளை நிராகரித்ததெல்லாம், மேற்சொன்ன நவாபுக்கும், அவரைச் சேர்ந்தவர்களுக்கும், நல்லறிவுண்டாகட்டுமென்றல்லவா? அந்த அருமையான பிரசங்கத்தை வாய் மூடிக் கேட்டுக்கொண்டிருந்த மேற்படி நவாபு பிரசங்க முடிந்தவுடன் சினங்கொண்டு, கண்கள் அக்கினிசிந்தத் தமது அரையிற் சொருகியிருந்த உடைவாளை உருவி, ஆண்டவரவர்களின் சிறப்பான மார்பிற் குத்தினார்; அத்தவாள் ஆண்டவரவர்களின் மார்பிற் பாயாமல் அந்த நவாபின் மார்பிற் குத்திப் பாய்ந்தது. தமது மார்பிலேயே தாம் குத்திய வாள் சொருகுண்டபோது நவாபு கலங்கி, மல்லாந்து விழுந்து மௌத்தானார். நவாபு தம் கையாலேயே குத்துண்டு விழுந்து மாண்டவுடன், அவரைச்சேர்ந்த பரிவார ஜனங்கள் அனைவரும் ஆண்டவரவர்களை ஒரு தீங்கும் செய்யத் திராணி கெட்டு, மிகவும் அறிவு கலங்கினவர்களாய், நவாபின் பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்.

பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் மிம்பரிலிருந்து இறங்கி, பள்ளியில் தங்கள் இருப்பிற்போயிருந்தார்கள். நவாபுடைய பிரேதம் அரமனைக்குப் போனபோது, அங்கே பெரும் அமளியுண்டாயிற்று. அங்குள்ள சேனா வீரர்கள் அனைவரும் துடிதுடித்தார்கள். இவ்வாறாக நம் நவாபை மாளச்செய்த மனிதனை நாம் கொல்லவேவேண்டுமென்று பதைத்தார்கள். பின்பு அவ்வீரர்கள் பெருந்திரளாய்க்கூடி ஒரு சேனாபதியையும் அழைத்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுப் பள்ளியைநோக்கி அதிக ஆத்திரத்துடன் வந்தார்கள். அனைவரும் பள்ளியின் வாசலில்வந்து கூடின போது, பள்ளிக்குள் பிரவேசிக்க அவர்களில் ஒருவருக்



கும் திராணி யிருக்கவில்லை. அவர்கள் எவ்வளவு பிரயாசைப்பட்டும் எந்த விதத்தாலேயோ உள்ளே நுழைய ஏலாமல், மனங்கலங்கி நின்றார்கள். அப்போது, அவர்களுக்குத் தலைவராய் வந்த சேனாதிபதிக்கு, இது உள்ளேயிருக்கும் ஹலறத்து அவர்களின் கறுமாத்தினாலானதன்றி மற்றொன்றாலானதல்லவென்று நன்றாய் விளங்கிக்கொண்டது. உடனே அவர் தம் சேனாவீரர்களைப்பார்த்து "அல்லாகுத்த ஆலாவுடைய ஒளலியாக்கள் அச்சந்தீர்ந்தவர்கள்; காக்கப்பட்டவர்கள்" என்னும் அர்த்தமுள்ள குர்ஆன் ஆயத்தை ஓதிக்காட்டி: வீரர்களே, இங்கேயிருக்கும் பெரியவர் ஒலி. இவரை உலகத்தார் எல்லாரும் ஒருங்கு திரண்டு எதிர்த்தாலும், ஒரு தீங்கும் செய்ய ஏலாது. இவருக்கு நாம் வழிபட்டு இவரைத் தொடர்ந்து கொண்டால், துன்யாவிலும், ஆகிறத்திலும் நமக்கு நன்மையுண்டாகும் என்று அறிவுறுத்தி, தம் வருகையை ஆண்டவரவர்களுக்குத் தெரிவித்து, உள்ளேபுகுத அநுமதி கேட்டார். பின் அவர்களுக்கு அநுமதி கொடுக்கப் பட்டது.

சேனாவீரர்களும், தலைவரும் பள்ளிக்குள் புகுந்து ஹலறத்து ஆண்டவரவர்களின் கையைப் பிடித்துத் தௌபா செய்து; சுன்னத்து ஜமாஅத்திற்சேர்ந்து, ஹனபிமதுஹபி லானார்கள். பின்பு நவாபுடைய பிரேதம் அடக்கஞ்செய்யப்பட்டது. அவ்வூரில் ராபுலி ஒருவனு மில்லாமல், எல்லாரும் சுன்னத்து ஜமா அத்தாயிருந்தார்கள்.

ராபுலிகள் வழிபட்டது முற்றிற்று.

௫௯-ம் அத்தியாயம்.

## கொலையுண்டவர்கள் பிழைத்தது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பொருட்டிருசல் வனத்தில் திருடர்களாற் கொல்லப்பட்ட இருவர் பிழைத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாதுலிஹாரிது பாத்துஷா எசிய ஆண்டவ ரவர்கள் அங்கிருந்து புறப்பட்டு மலை, வனம், நதிகளைக் ளையுங்கடந்து, பஞ்சாபிராச்சியத்தில் வந்துசேர்ந்து, தயாழ் குன்றுகளும், அடர்ந்த தருக்களும் பரந்த ஒரு கானகத்தில் விடுதி யிட்டார்கள். ஒலிகளுயர்வான ஆண்டவரவர்கள் தங்களின் சாதாத்து நால்வர் பரிவாரங்களோடு விடுதியிட்டு அவ்வனத்தில் தங்கியிருக்கும்போது, ஒரு சிறுவன் திகிலு பட்டு வெருண்டோடித் தொய்ந்தவனாய், ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து பணிந்து நின்றுகொண்டு: எசமானவர் களே, என் பிதாவும், என் தமையனும், நானுமாக மூன்று ஒட்டகங்களில் சரக்கேற்றிக்கொண்டு, எங்கள் ஊராகிய லாகூரிலிருந்து புறப்பட்டு குஜராத்துக்குப்போய் வியா பாரஞ்செய்து, பின் அங்கிருந்து சரக்கு வாங்கி அவ் ஒட்ட கங்களில் சுமத்திக்கொண்டு மீண்டுவந்தோம். எங்களைப் போல வர்த்தகராகச் சில திருடர்கள் கூடவந்தார்கள். நாங் கள் எல்லாரும் இதனடுத்த வனத்தில் வரும்போது, அந்தத் திருடர்கள் என் பிதாவையும், தமையனையும் பதைக்கத் துடிக்கக் கொன்றுவிட்டு, என்னைப் பயமுறுத்தித் துரத்தி விட்டு, எங்கள் சரக்கும் ரொக்கமும் ஏற்றின மூன்று ஒட்ட கங்களையும் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். நான் அநாதியாய்த் தனித்தோடி வருகிறேன். தேவரீராகிய தாங்கள் திக்கற்ற என்னைக் காத்து ரக்ஷிக்கவேண்டும் என்று முறையிட்டு அழுதான்.



மனஇரக்கமுள்ள ஹலறத்து ஆண்டவரவர்கள் அந் தச் சிறுவனின் முறைப்பாட்டைக் கேட்டுக்கொண்டிரு ந்து, பின் அவனைப்பார்த்து: இங்கேவா; அஞ்சாதிரு. உன் காரியத்தில் அல்லாகுத்த ஆலா உதவி செய்வானாக என்று சொல்லிவிட்டு, ஒரு போர்வையை யெடுத்து மேனி முழு தும் போர்த்துக்கொண்டு. ஒரு ஷாஅத்து நேரம் வரையும் அல்லாகுத்த ஆலா இடம் துஆ இரந்தார்கள். இவ்விதம் துஆ இரந்து கொண்டிருக்கும்போதே அச் சிறுவனின் கொலை யுண்டிறந்த தந்தையும், தமையனும் உயிர்பெற்று, ஹல றத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் விரைவாய்வந்து பணிந்து நின்றார்கள். அவர்களுக்குப் பிறகே அவர்கள் ஒட்டகங்கள் மூன்றும் பொருட்சேத மில்லாமல் வந்து நின்றன.

இந்த ஆச்சரியமான கருமத்தைக்கண்ட சிறுவன் மிக வும் சந்தோஷமுற்று, அல்லாகுத்த ஆலாவுக்கு சுக்றுசெய்து, ஆண்டவரவர்களையும் துதித்தான். பிறகு அந்த மூவரை யும் ஐந்துநாள் மட்டும் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங் கள் கூடவே வைத்திருந்து, பின் லாகூருக்குப்போகும் காபிலாவுடன் சேர்த்து அனுப்பினார்கள். மூவரும் ஆநந்த மடைந்து, விடைபெற்றுக்கொண்டு லாகூருக்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

கொலையுண்டவர்கள் பிழைத்தது முற்றிற்று.

---

௪௦-ம் அத்தியாயம்.

# ஹலறத்து சையிது முகம்மது யூசுபுசாகிபு அவதரித்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்துக்கவை சையிது முகம்மது யூசுபுசாகிபு துறைப் பிள்ளாதியவர்கள் அவதாரமான வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது கஞ்ஜஸவாய் ஆண்டவரவர்கள் முன்சொன்ன வனத்திலிருந்து புறப்பட்டு, நாலாயிரம் நான்கு தபோதனர்களுடன் அந்தப் பஞ்சாபின் தலைநகரமாகிய லாகூர் என்னும் பேர்சேர்ந்த, அவ்வூர்ப் பெரிய குத்பாப்பள்ளியில் சகலை பண்ணிக்கொண்டு அங்கே தங்கினார்கள். அப்போதே, ரசூல் முகம்மது ஸல்லல்லாகு அலைஹிவ ஸல்லமவர்களுக்கும், குத்புல் அக்தாபு சையிது முகியித்தீன் அப்துல்காதிறு றலியல்லாகு அன்கு அவர்களுக்கும் பௌத்திரராகிய சையிது அப்துல்காதிறு நாயகமவர்கள் மாணிக்கபூரிலிருந்து புறப்பட்டு, அளவற்ற அற்புதங்களை வெளிப்படுத்தி அநந்த தேசங்களைச் சுற்றிக்கொண்டு, இங்கே வந்திருக்கின்றார்களென்று அவ்வூர் முழுதும் பிரஸ்தாபமாயிற்று.

ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவங்களை முந்தியே கேள்விப்பட்டு அறிந்திருக்கின்ற அவ்வூர் முஸ்லிம்களனைவரும் இப் பிரஸ்தாபத்தைக் கேட்டு ஆநந்தக்கடலில் அமிழ்ந்து, ஆண்டவரவர்களின் திருவடித் தரிசனைக்கு ஆவல் கொண்டார்கள். ஆண்டவரவர்கள் அங்குப்போய்த் தங்கின அன்று முதல் அவ்வூரிலுள்ள அரிமுதல் பரி வரையும் தனித்தும், சிலர் கூடியும், பலர் திரண்டும் வந்து தரிசித்துப்போகத் தொடங்கினார்கள். அவரவர் நாடிவருகிற கருமம் ஒவ்வொன்றும் நிறைவேறி வந்தது. ஆண்டவரவர்களின் சந்நிதியில் ஜனத்திரள் ஓயாமலிருந்தது. ஊர்ப்



பெரிய மனிதர்களுள் பலர் ஆண்டவரவர்களுக்குப் பணிவிடைபுரிய ஒருவருக் கொருவர் முந்தினவர்களாய், அங்கிருந்து அகலாமல் காத்திருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் ஊழியத்திற்குக் காத்திருக்கும் பெரிய மனிதர்களுள், இஸ்லாம் மார்க்கத்துச் சட்டப் பிரகாரம் ஆளுகை செய்கிற காலியும், நான்கு மதுஹபுகளின் நிபந்தனைகள் அனைத்தையும் ஐயந்திரிபற அறிந்து தீர்ப்பிடும் முப்தி யுமாகிய மகத்துவமுள்ள சைநுறுத்தீன் என்போரும் ஒருவர். ஆண்டவரவர்களுக்கு மற்றவர்கள் செய்யும் வந்தனை வழிபாடுகளைப் பார்க்கிலும் இந்த காலி நாறுத்தீன் முப்தியவர்கள் செய்வது அதிகரித்திருந்தது. இவர்கள் பிரதிதினமும் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து ஒரு தொண்டருக் கொப்பாயிருந்து, எல்லாப் பணிவிடைகளையும் செய்வார்கள். இவர்கள் செய்யும் ஊழியம் பிறர் செய்வதிலும் அதிகமாயிருந்தபடியால், அவ் வூராரில் இவர்களே ஆண்டவரவர்கள் சமுகத்தில் விசேஷித்திருந்தார்கள். ஆண்டவரவர்களின் அன்பும் இவர்கள்மேல் அதிகரித்திருந்தது. அவ் வன்பு இவர்கள்மேல் அதிகரித்தற்குத் தக்க காரணமும் ஒன்றுண்டு. அது :—இனி வரப்போகிற ரகசியாற்புதம் வெளியாவதே.

இது இப்படி நிகழும் நாட்களில் காலிநாறுத்தீன் முப்தியவர்கள் தங்கள் மீது ஹலறத்து ஆண்டவரவர்களின் அன்பு மிகுந் திருப்பதை யறிந்து களிகூர்ந்து, ஒரு நாள் ஆண்டவரவர்கள் தனித்திருக்குஞ் சமயத்தில் அவர்கள் சமுகத்திற் போய் ஸலாம்சொல்லித் தாழ்ந்துநின்று, பின் வருமாறு முறைப்பாடு செய்தார்கள் ;

நாயகமே. அடியேன் இவ்வூருக்கு காலியும், முப்தியுமாயிருக்கிறேன். எனக்கு இம்மையில் வேண்டிய எல்லாப் பாக்கியங்களும் உண்டாயிருந்தும், ஒரு குறைவு மாத்திரமிருக்கின்றது. அது புத்திரபாக்கிய மில்லாக் குறைவே

யன்றி, வேறொரு குறைவுமல்ல. இல்லற வாசிகளான யாருக்கு புத்திரவாஞ்சை இல்லாமலிராது. இம்மையில் யார் யார் என்னென்ன பேறுகளைப் பெற்றிருந்தாலும், மகப்பேறில்லாதிருந்து வாழும் வாழ்க்கை மனப்பாக்கியமுள்ள வாழ்க்கையல்லவே. ஒருவனுக்கு மலடனென்னும் பெயர் ஏற்படுமானால், அது, அவன் மனோரம்மியத்தைக் குறைக்கத்தக்க ஒரு கருவியல்லவா? எனக்கு எல்லாச் சுகாநுபவங்களு முண்டாயிருந்தும், ஒரு மைந்தனில்லாமையே என் மனதைப் புண்படுத்தி விட்டது. இம்மனப் புண்ணாற மருந்துதேடி அநேக மகான்களையடுத்து எனக்கொரு மைந்தனுண்டாக அநுக்கிரகிக்க வேண்டுமென்று மன்றாடினேன், சிலர்: உமக்கு மகப்பேறில்லையென்றும், சிலர்; அல்லாகுத்தஆலா நாடினால் உண்டாகுமென்றும், உறுதிப்பாடின்றிச் சொல்லிவிட்டார்கள். அவற்றைக் கேட்ட பின் என் மனப்புண்ணாற வழியில்லையென்று நான் கவலை கொண்டு, அநுபவிக்கும் சுகங்களனைத்தையும் துக்கமாகவே காண்கின்றேன். என் எஜமானவர்களே, ஒருவன் சந்ததியற்றுப்போனால், பிறர் அவனைச் சுட்டி: இவன் கருமசண்டாளனாதலால் தான் சந்ததியற்றுப் போனான் என்று நிந்தித்துப் பேசவும் இடமுண்டாகுமே. அவ்விதப் பேச்சுக்கு இடம் படாமல் நான் ஒரு பிள்ளையைப் பெற வேண்டுமென்றும், இல்லாவிடில், சீக்கிரம் இறந்துபோக வேண்டுமென்றும், ஓய்வொழிவில்லாமல் சிந்தனை பண்ணிக் கொண்டு, துயரக்கடலில் முழுகிக் கிடக்கின்றேன். நான் மனத்துயரில் மடிந்து கிடக்கும் இக்காலத்தில் தேவரீருடைய திருவடிகள் இங்கெழுந்தருளியது, பாவியாகிய எனக்குப் புத்திரபாக்கியத்தை உண்டாக்குவதற்கு என்றே நினைக்கின்றேன். இதுவரையும் ஆறாதிருந்த என் மனப்புண் இனி எளிதில் ஆறுமென்று நம்பி தங்கள் திருவடித் தொண்டனாய் அடைக்கலம் புகுந்தேன். இப்போது அடி



யேன் எனக்குப் புத்திர பாக்கியந் தரவேண்டுமென்று தங்கள் மகிமையுள்ள சந்நிதியில் மன்றாடுகின்றேன் என்று இவ்வாறு முறையிட்டார்கள்.

காளி நாறுந்தீன் முப்தி யவர்களின் முறைப்பாடு முழுவதையும் ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அவர்களை நோக்கி "தங்கள் யாருடைய வமிசம்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் "எஜமானே, அடியேன் அமீறுல் மூமினீன் அபூபக்கர் ஸித்தீக்கு றலியல்லாகு அன்கு அவர்களின் வமிசத்திலுள்ளவன். என் தந்தை பெயர் முஈனுந்தீன். என் மனைவியும் என்னோடொத்த வமிசத்திலுள்ளவள் தான்" என்று மறுமொழி சொன்னார்கள். ஆண்டவரவர்கள் இதைக்கேட்டு, ஞானதேசிகர் "உமக்குப் பிரியமான இடத்தில் அதனைச் சேர்ப்பியும்" என்று கட்டளையிட்டபடி, நமது சந்ததியைச் சேர்ப்பிக்கத்தக்க பிரியமான இடம் இதுதானென்று சிந்தித்துக் களிகூர்ந்து, பின்னும் அவர்களை நோக்கி: நாறுந்தீனே, தாங்கள் போய்த் தங்கள் மனைவியை யழைத்துக்கொண்டு, கொஞ்சம் தாம்பூலமு மெடுத்துக்கொண்டு வாருங்கள் என்று உத்தரவு செய்தார்கள். காளி நாறுந்தீன் முப்தியவர்கள் சந்தோஷத்தில் மூழ்கி, உடனே அங்கிருந்து புறப்பட்டு மாளிகைக்குப் போய், ஆண்டவரவர்கள் சமுகத்தில் நடந்த வர்த்தமானங்கள் அனைத்தையும் தங்கள் மனைவியிடம் சொன்னார்கள். அதைக் கேட்டு அவர்கள் மனைவி அதிக ஆநந்தமடைந்தார்கள்.

பின்பு பொழுதுபட்டு இரவாயிற்று. அது திங்கட்கிழமை யிரவு, ஆகவே, காளி நாறுந்தீன் முப்தி யவர்கள் தங்கள் மாளிகைக்கும், ஆண்டவரவர்களிருக்கும் பள்ளிக்கும் இடை வழியில் ஒரே படியாக மூடுதிரையிடுவித்து, அருமை மனைவியாகிய மாதுசிரோமணி உம்முல்ஹைறுபீவி யவர்களையும், அவர்கள் சகோதரியையும் அழைத்துக்கொண்டு, கொஞ்சம் தாம்பூலமு மெடுத்துக்கொண்டு, அவ்விரு பெண்களையும்

அந்தத்திரைக்குள் நடந்துவரச் செய்து பள்ளிக்குவந்து, ஆண்டவரவர்களின் பக்கத்தில் ஒரு விரிதிரையிட்டிருந்து அத்திரைக்குள் தங்கள் மனைவியையும், அவர்கள் சகோதரியையும் இருக்கச் செய்துவிட்டு, தாங்கள் கொணர்ந்த தாம்பூலத்தை ஆண்டவரவர்கள் சமூகத்தில் வைத்துப் பணிந்து நின்றார்கள்.

இஷா தொழுதுவிட்டு ஓராதுகள் ஓதிக்கொண்டிருந்த ஹலறத்து ஆண்டவரவர்கள் ஓதி முடிந்தபின், தங்கள் சமுகத்திலிருக்கும் தாம்பூலத்தை யெடுத்து, சிறப்பான திருவாயிலிட்டு * மென்றார்கள். சற்றுநேரம் மென்றபின் அத்தம்பலத்தைக் கையிலெடுத்து, காலி நாறுத்தீன் முப்தியவர்கள் கையில் தின்னும்படி † கொடுத்தார்கள்.

---

*மென்றபோது ஆண்டவரவர்களின் திருமேனி வியர்த்ததென்றும், சற்றுநேரம் கண்களை திறவாதிருந்தார்களென்றும், அவற்றிற்குக் காரணம்.—முன்னொருபோதும் தாம்பூலம் தின்றறியாததும், தின்னும் அப்பியாசக்களுக்கும் பித்தத்தைக் கலக்கிவிடுவதும், அதன்காரணமே யென்றும், [illegible] சொல்லுகின்றது.

†காலி நாறுத்தீன் முப்தியவர்களுக்கு மாத்திரம் கொடுத்தார்களென்றும், [illegible] மாத்திரம் கொடுத்தார்களென்றும், இருவருக்கும் பகிர்ந்து கொடுத்தார்களென்றும், சில கிரந்தங்கள் ஒன்றுக்கொன்று பேதப்படச் சொல்லுகின்றன. மஹ்லூது என்னும் பிரதானகிரந்தம் காலி நாறுத்தீன் முப்தியவர்களுக்கு மாத்திரம் கொடுத்ததாகக் கட்டுரைப்பதால், அத்தம்பலத்தை [illegible]க்கே கொடுக்கும்படி காலிநாறுத்தீன் முப்தியவர்கள் கையில் கொடுத்ததாகச் சித்தாந்தப் படுகின்றது. அன்றியும் [illegible] லாகூர்ப்புக்கபடலம், [illegible]-ம் செய்யுளில், "——தொகுல் ஞானீது நாதர் அயமிழ்த் தெடுத்தமுந்த மவ்வயின் சேர்த்தார்——" சொல்லுகிறபடி, தங்கள் சத்தினை அவர்களிடம் ஒப்படைத்திட்டார்களென்றும் புலப்படுகின்றது.



பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் காலிநாறுத்தீன் முப்தியவர்களைத் தங்கள் சமூகத்திலிருத்தி, வலது கையினால் அவர்கள் முகத்தில் மூன்றுதரம் தடவி "அல்லாஹும்ம [illegible] அறுபமத்தன் மௌறுத்து" என்று மூன்றுதரமோதி துஆ செய்துவிட்டு, அவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொல்லுகின்றார்கள் :—

நாறுத்தீனே, அல்லாகுத்தஆலா தங்களுக்கு நான்கு ஆண் மக்களையும், சில பெண் மக்களையும் தந்தருள்வான். அந்த ஆண்மக்கள் நால்வருள் மூந்தின பிள்ளை என்னுடையது. அந்தப் பிள்ளைக்கு என் தலைமயனாருடைய திருநாமமாகிய சையிது முகம்மதுயூசுபு என்கிற நாமத்தை யிடுங்கள். அந்தப் பிள்ளை இனி என் சுதந்திரராவார். அந்தப் பிள்ளையின் சந்ததியார்களே எனக்கு உரிமைகாரர்கள். இன்னும் அந்தப்பிள்ளை என் கண்ணுக்குக் கண்ணான மனங்குளிர்ந்த மகன். அல்லாகுத்தஆலா எனக்குக் கொடுக்கும் நன்கொடையனைத்தையும் அநுபவிக்கும் பாத்திரர் அவரே என்னுடைய நிலையில் நிற்பவரும், எனக்குப்பின் என்னுடைய தானத்தில் தரிப்பட்டிருப்பவரும் அவரே. அவர் பிறந்து ஏழுவயதாகு முன் குறுஆன் ஓதிமுடித்து, மற்ற இல்முகளனைத்தையும் கசடறக் கற்றுத்தேறி, இபாதத்தாகிய வணக்கத்தில் பராக்காவார். சகல வொழுக்கங்களும் அவருக்குண்டாய் விடும். சரிவர ஏழுவயதானவுடன் உங்களைப் பார்த்து: "என் தந்தை யார்? அவர்கள் எங்கே யிருக்கின்றார்கள்? எனக்காக அவர்கள் ஏதும் தந்ததுண்டா? நான் அவர்களைத் தேடிப்போக வேண்டும்" என்று விசாரிப்பார். அக்காலத்தில் நான் மக்கா விலிருப்பேன். உமது தந்தை மக்கா விலிருக்கிறாரென்று நீங்கள் அவருக்குத் தெரிவித்து, உமக்கு அவர்கள் கொடுத்த அடையாளம் இந்தப் பற்கொம்பு தானென்று இதை அவர்கையிற் கொடுத்து, அவர் நாட்டத்திற்கு அநுமதி கொடுங்கள். அவர் இதைவாங்கிக் கொண்டு என்னைத்

தேடிப் பயணப்படுவார். நீங்கள் அவரைத் தடுக்காதீர்கள். சந்தோஷத்துடன் அனுப்புங்கள். அல்லாஹுத்தஆலா வின் உதவிகொண்டு அவர் என்னை மக்கா வில் வந்து சந்திப்பார். நான்சொன்ன இவை யனைத்தையும் மறந்துவிடாதீர்கள். ஞாபகத்திலிருக்கட்டும் என்று இம்மட்டுஞ் சொல்லி, ஓர் பற்கொம்பை யெடுத்து அவர்கள் கையிற் கொடுத்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் சொன்ன திருவாய் மொழி ஒவ்வொன்றையும் காலி நூறுத்தீன் முப்தியவர்கள் தலைசாய்த்துக் காதுதாழ்த்திக்கேட்டு, அவற்றை இதய பூர்வமாக வொப்புக்கொண்டு, பற்கொம்பையும் வாங்கிக் கொண்டார்கள். பின் ஆண்டவரவர்கள் காலி நூறுத்தீன் முப்தியவர்களின் மனைவியாகிய ஜௌஹறாபீவியை அவர்கள் மனைக்குப்போக உத்தரவு கொடுத்துவிட்டு, காலி நூறுத்தீன் முப்தியவர்களை அப்போதே தங்கள் சாலையில் தனித் திருந்து ஓதும்படி ஒரு குறுஆன் ஆயத்தையும், ஒரு அஸ்மாவையும் சொல்லிக் கொடுத்து, நாற்பதுதினம் வரையும் ஒரேயிருப்பா யிருக்கும்படி கட்டளை பண்ணினார்கள். அப்படியே அவர்கள் அவற்றை யோதிக்கொண்டு, குறிப்பிட்டநாள் முடியுமட்டும் அங்கேயே தங்கியிருந்தார்கள்.

காலி நூறுத்தீன் முப்தியவர்கள் சந்தானவிரதங்காத்த நாற்பதுதினங்களுந் தீர்ந்த மற்றுநாள், அறுசுவைக் கறிகளுடன் புலவுச்சோறாக்கி, நபி முகம்மது ஸல்லல்லாஹு அலைகிவஸல்லமவர்கள் பேரிலும், ஹலறத்து முஹியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரிலும் கத்தம் பாத்திஹாவோதி, அவ்வூர் ஜனங்களனைவருக்கும் விருந்து கொடுத்தார்கள். அதன்பின் காலி நூறுத்தீன் முப்தியவர்கள் தங்கள் வீட்டுக்குப் போகவேண்டி ஆண்டவரவர்களிடம் விடைப் பெற்றுக்கொண்டு, பள்ளியிலிருந்து வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் வீட்டுத்



போனபோது, தங்கள் மனைவியாகிய ஜௌஹறாபீவிக்கு உண்டாயிருந்த நூதனக்குறிகளைக் கண்டு, நமது நாட்டம் நிறைவேறும் அடையாளமிதுவென்று சந்தோஷக்கடலில் மூழ்கினார்கள்.

அதன்பின் காலி நூறுத்தீன் முப்தியவர்கள் வழக்கம் போல ஹலறத்து ஆண்டவரவர்களின், பணிவிடையிலேயே யிருந்துகொண்டு வந்தார்கள். சிலநாட்களுக்குப்பின் ஆண்டவரவர்கள் லாகூரிலிருந்து பிரயாணப்பட எத்தனித்தார்கள். அதையறிந்த காலி நூறுத்தீன் முப்தியவர்களும், மற்றப் பெரியமனிதர்களும், சாமானிய ஜனங்களும் பெருந்திரளாய்த்திரண்டு ஆண்டவரவர்களுக்கு வந்தனை வழிபாடுகள்செய்து, பயணமனுப்பினார்கள். ஆண்டவரவர்கள் தங்கள் நானூற்று நான்கு தபோதனர்களுடன் லாகூரை விட்டுப் புறப்பட்டார்கள்.

லாகூரில் காலி நூறுத்தீன் முப்தியவர்களும், அவர்களின் பிராணநாயகியான ஜௌஹறாபீவியும் சந்தோஷகரமாய் வாழ்ந்திருந்தார்கள். பின்பு, ஜௌஹறாபீவி கர்ப்பமாயிருக்கின்றார்களென்று வெளிப்பட்டது. அதை இரு குடும்பத்தாரும் அறிந்து, அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள். நாயகராகிய காலி நூறுத்தீன் முப்தியவர்களுக்கு உண்டான ஆநந்தம் கொஞ்சமல்ல. இவ்விதச் சந்தோஷத்துடன் ஜௌஹறாபீவியின் கருப்பம் நாட்குநாள் வளர்ந்து, வரவரக் கருமுதிர்ந்து நிரப்பமாயின.

ஹிஜறத்துத் தொளாயிரத்து ஐம்பத்தொன்பதாம் வருஷம், றஜபு மாதம், பனிரண்டாந் திகதியன்று காலி நூறுத்தீன் முப்தியவர்களின் மனைவியாகிய ஜௌஹறாபீவி ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் பொருட்டால், அல்லாஹுத்தஆலாவின் உதவிகொண்டு, முதலாவதாக ஒரு ஆண் குழந்தையை யீன்றார்கள். பிள்ளை பிறந்தபோது காலி

நாறுத்தீன் முப்தியவர்கள் ஆநந்தத்தில் மூழ்கி, தங்கள் குடும்பத்தாருடன் வந்து பிள்ளையைத்தூக்கி முகர்ந்து, மார்க்கப்படி அதற்குச் செய்யவேண்டிய சடங்குகளனைத்தையுஞ் செய்து, சையிது முகம்மதுயூசுபு என்று பெயரிட்டார்கள். வெகுகாலம் வரையும் மகப்பேறிழந்திருந்த காலி நாறுத்தீன் முப்தியவர்களுக்கு ஆண்பிள்ளையுண்டானதென்று லாகூர் முழுதும் சந்தோஷம் பரவியிருந்தது.

ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் பிதா மாதாக்களின் இருபெருமரபாராலும் கொண்டாடிப் போற்றி வளர்க்கப் பட்டு, நாளொருவண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவந்தார்கள். குடும்பமுழுதும் அவர்களை அருமந்தபிள்ளையென்றும், செல்வக்குழந்தையென்றும் பாராட்டி வந்தனர். பிள்ளையின் சிறுபருவத்திலேயே அதன் மகத்துவம் விளங்கித் துலங்கிற்று.

காலி நாறுத்தீன் முப்தியவர்களுக்கு முதலாவதாக சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் பிறந்தபின், இரண்டாங்குமாரராக முயீநுத்தீன் என்றும், மூன்றாங் குமாரராக ஹஸன் என்றும், நான்காங் குமாரராக பதுறுத்தீன் என்றும் மூன்று ஆண்மக்கள் பிறந்தார்கள். அதன்பின் சில பெண் மக்களும் பிறந்தார்கள். இம்மக்கள் அனைவருள்ளும் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களே அதிக பக்ஷத்துடன் வளர்க்கப்பட்டு வந்தார்கள். பிள்ளையில்லாத பெருங்குறை கொண்டிருந்த காலி நாறுத்தீன் முப்தியவர்கள் ஹலறத்து ஆண்டவரவர்களின் பொருட்டால் இத்தனை புத்திரபாக்கியத்துடன் லாகூரில் வாழ்ந்திருந்தார்கள்.

சையிது முகம்மது யூசுபுசாகிபு அவதரித்தது முற்றிற்று.

---

## ௪௧-ம் அத்தியாயம்.

## விக்கிரக நாசஞ் செய்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு பிரதான ஆலயத்திலுள்ள விக்கிரகங்களை நாசஞ்செய்தவரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்சுல்தான் ஷாகுல்ஹமீது பாதுஷா சாகிபு ஆண்டவரவர்கள் லாகூரைவிட்டுப் புறப்பட்டுப் பஞ்சாபிராச்சியத்தைக் கடந்து, சிந்தியா நாட்டுக்கு வந்து, அங்குப் பிரவாகித்து ஓடும் சிந்துநதிக் கரையில் தங்கள் தபோதனர் கூட்டத்துடன் விடுதியிட்டுத் தங்கினார்கள். அந்த நதிக்கரையில் காபிர்களின் பேர்போன ஆலயமொன்றிருந்தது. அவ்வாலயத்தில் பசும் பொன்னாற்செய்த ஒரு பாரிய விக்கிரகமும், அதைசூழ அறுபது பொற்சிலைகளும் வைக்கப்பட்டு இருந்தன. அவ்விக்கிரகங்களுக்குப் பூசைமுதலியன செய்ய ஆயிரம் ஆசாரியர்களும், அவர்களுக்குத் தலைமையாய் ஒரு மூப்பனும், அநேக தொண்டர்களும் அங்கிருந்தார்கள். அந்நாட்டு ஜனங்கள் அந்த விக்கிரகங்களைத் தெய்வமென்றும், அவ்வாசாரிமார்களை அத் தெய்வங்களின் புத்திரர்களென்றும் வழிபட்டு, ஆராதனைசெய்து வந்தார்கள். அந்த ஆலயத்திற்கு உள்ளேயாவது, பக்கத்திலாவது அந்நிய மதஸ்தர் ஒருவரோ, சிலரோ, பலரோ, பிரவேசிப்பதானால், அங்கிருக்கும்பைசாசங்களின் பலத்தினால் அவர்கள் அக்கினிபற்றி எரிந்து கருகிச் சாம்பலாய் அழிந்துபோவது வழக்கம். இது பிரத்தியக்ஷமாக நடந்து வருவதால், காபிர்களுக்கு அவ்வாலயத்தின்மேல் மனவுறுதி பதிந்திருந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த ஆலயத்தின் தன்மையையும், அங்குள்ள விக்கிரகங்கள் ஆசாரிமார் முதலி

யோரின் விவரங்களையும் பிறமதஸ்தர் அங்கே பிரவேசித்தால், அவர்கள் தீப்பற்றி எரிந்து சாம்பலாவதே அதன் தீட்டுக்கழி வென்பதையும் கேள்விப்பட்டு, அங்கே நாம் போய் அறிவோமென்று எண்ணி, தங்கள் சாலையிலிருந்து எழுந்து நானூற்று நான்கு தபோதனர்களையும் அழைத்துக் கொண்டு அந்த ஆலயத்திற்குட் பிரவேசித்து, அதன் முகலாம் பிரகார மண்டபத்தில் தங்கினார்கள். அன்று சாயரக்ஷையா யிருந்தது.

அப்போது ஹலறத்து ஆண்டவரவர்கள், அங்கே பலவிடத்திலும் அடுப்புகள் மூட்டி, சோறு கறி சமையுங்கள் என்று தங்கள் சிஷர்களாகிய பகீர்மார்களுக்குக் கட்டளையிட்டார்கள். அவ்வாறே அன்றுபொழுது படுமுன் அங்கங்கே பல அடுப்புகள் மூட்டிச் சோறுகறியாக்கி எல்லாரும் புசித்தார்கள்.

பின் அஸ்தமித்தபோது, பெருந் தொனியிட்டு பாங்கு சொல்லும்படி உத்தரவு கொடுத்தார்கள்; அப்படியே பாங்கு சொல்லப்பட்டது. அதன் பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் இமாமாய், தபோதனர்கள் மௌமூமாய் நின்று மகுறிபு தொழுது இஷாவரையும் ஓதிக்கொண்டிருந்து இஷாவானபோது தொழுது முடித்து, வழமைப்படி நெடுநேரம் ஓதிக் கொண்டிருந்தார்கள்.

அர்த்தசாம மானவுடன் அந்த ஆலயத்திற்குள்ளிருந்து அறுபது துஷ்டப் பிசாசுகளும், ஒரு தலைமைப் பிசாசும் புறப்பட்டு, கைகளில் பலவித ஆயுதங்களையும், எரி கொள்ளிகளையும் பிடித்துக்கொண்டு, அதிக ஆரவாரத்துடன் அக்கினிமயமாய், பெரும் அமளியுடன் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு நேரே வந்தன. பலவித விகார ரூபங்களையுடைய அப் பிசாசுகள் பயங்கரமான காட்சியுடன் தங்களுக்கு எதிரே வருவதை ஆண்டவரவர்கள் கண்டார்கள்.



அங்கே பிரவேசிக்கும் அந்நிய மதஸ்தரை எரித்துச் சாம்ப லாகும்படி வழக்கம்போலக் கர்னகடூரமாம் வரும் அந்தப் பிசாசுகளை ஆண்டவரவர்கள் கண்டு அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து, நபிமுகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் பேரில் ஸலவாத்தும் ஸலாமும் சொல்லி, பின் அந்தப்பிசாசுகளைப் பார்த்து, சூறத்து யாஸீனையும், சூறத்து முல்கையும் ஓதிக்கொண் டிருந்தார்கள். பகீர்மார்களும் குறுஆனிலுள்ள பலபல சூறத்துகளையும் ஓதினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஓதிக்கொண்டிருக்க அவர்களை எதிர்த்துவரும் மேற்படிப் பிசாசுகளின் ஆரவாரமும், அமளியும் வரவரக் குன்றிப்போய் அடங்கின: அவற்றின் கைகளிலிருந்த ஆயுதங்கள் எல்லாம் தாமாக நழுவி விழுந்தன; எரிகொள்ளிகள் அவிந்தன. பின் அப் பிசாசுகள் எல்லாம் பலங்குன்றி, ஜின்களால் சிறையாக்கப்பட்டு, பரக்க விழிக்கத் தொடங்கின. கொடுமையான ஆரவாரமும், அமளியும் ஒழிந்து, அடங்கி யொடுங்கிச் சிறைப்பட்ட பிசாசுகள் அனைத்தும் ஹலறத்து ஆண்டவர்களை மன்றாடி, அடைக்கலந்தேடி முறையிட்டு அழுதன.

பிறகு ஆண்டவரவர்கள் அடைக்கலம்தேடியழும் அப் பிசாசுகளைப் பார்த்து, சூறத்து றகுமானையும், சூறத்து முஜம்மிலையும் ஓதினார்கள். அவை ஓதிமுடியும் வரையும் சாய்த்துக் காதுதாழ்த்திக் கேட்டுக்கொண்டிருந்தன. ஓதிமுடிந்தபின், மறுத்தொன்றும் பேசாமல் எல்லாப் பிசாசுகளும் ஒருமித்து ஆண்டவரவர்களுக்கு வழிபட்டன. பிறகு ஆண்டவரவர்கள் அந்தப் பிசாசுகளைச் சிறைவிடுத்து அனுப்பிவிட்டார்கள். பலங்குன்றி வழிபட்ட பிசாசுகள் அனைத்தும் ஹலறத்து ஆண்டவரவர்களைப் பணிந்து போனபின், ஆண்டவரவர்கள் மனமகிழ்ந்து அல்லாகுத்த ஆலாவுக்கு சுக்று செய்துவிட்டு, விடியும் வரையும் ஓதிக்கொண்டிருந்தார்கள்.

பொழுது விடிந்தபோது ஆண்டவரவர்களும், பகீர்மார்களும் பஜ்று தொழுது, மறுபடியும் ஓதிக்கொண்டிருந்தார்கள். சூரியோதயமானவுடன் அந்த ஆலயத்து ஆசாரிமார் ஆயிரம் பேர்களும், அவர்கள் தலைவனும், அடியார்களும் பெருங்கூட்டமாய்க் கூடி, ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து கைகட்டி நின்றார்கள். அப்போது ஆசாரிமார்களின் தலைவன் ஆண்டவரவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொல்லுகிறான் :—

எஜமானவர்களே, இந்த ஆலயம் தொன்று தொட்டுள்ளது. இதிலுள்ள அறுபத்தொரு விக்கிரகங்களும் எங்களுக்குப் பராபரனாகப் பூர்வத்திலேயே ஏற்பட்டவை. நாங்கள் எங்களை இச் சிலாரூபங்களுக்கும் புத்திரர்களென்று பாவித்து வருகிறோம். இத் தெய்வங்களைத் தொழாத அந்நியர் இதற்குள் நுழைந்தால், அவர்கள் எரிந்து சாம்பலாய்ப்போவதே இதற்கு உண்டான திட்டு நீங்குவதாம். இச்சங்கதி எல்லாருக்கும் தெரிந்தது. தாங்களும், தங்கள் தபோதனர்களும், இந்த ஆலயத்திற் பிரவேசித்தபோது, உங்களை எரித்துச் சாம்பலாக்கச் சினங்கொண்டு ஆயுதங்களும், எரி கொள்ளிகளும் கைகளில் ஏந்தி, ஆரவாரத்துடன் புறப்பட்டுவந்த அந்த தேவதைகள், சினந்தணிந்து எங்களிடம் சந்தோஷமாகவந்து, எங்களை நோக்கி: என் மக்களே, இன்றுதான் நமக்கு நற்காலம் பிறந்தது. எல்லாவுலகங்களையும், அவ்வுலகங்களிலுள்ள எல்லாப் பொருள்களையும் சிருஷ்டித்த ஏக பராபரன் ஒருவன் இருக்கின்றான். அவனுக்கு நாம் வழிப்பட்டு அவனுடைய திருவாக்காகிய குர்ஆன் என்னும் சத்தியவேதத்தை யோதி, இஸ்லாமாவதே காரியம். இனி நீங்கள் மேற்சொன்ன ஏகபரனாகிய கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட எங்களைத் தெய்வமென்று ஆராதனை செய்வதை விட்டொழிந்து, இன்று முதல் நேர்வழி பெறுங்கள். இல்லையானால், நீங்களும், உங்



களாற் பூசிக்கப்படுகிற நாங்களும் அக்கினிநகரமாகிய நரகத்திற்குப் பாத்திரர்களாவதில் சந்தேகமில்லை. நமக்கு மன்னிப்புங் கிடைக்கமாட்டாது. ஆகையால், இனி நீங்கள் உங்கள் கொள்கைகளை விட்டு இங்கே வந்திருக்கும் ஷாதுல் ஹமீது என்னும் பெரியவரிடம் போய், அவருக்கு வழிபட்டு இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் நேர்வழி பெறுவீர்கள். இப்போதே புறப்படுங்கள் என்று எங்களுக்குக் கட்டளை பண்ணி அனுப்பின. ஆகையால், தேவரீர் எங்களை ரக்ஷித்து நேர்வழிகாட்டுங்கள் என்று சொன்னார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் இச் சொல்லைக்கேட்டு மனமகிழ்ந்து, அல்லாகுத்த ஆலாவுக்கு சுக்று செய்து, சுஜூதும் செய்து, அவர்கள் எல்லாரையும் இஸ்லாமாக்கி, அவர்களுக்குத் தீக்ஷை கொடுத்து, அவர்கள் தலைவராகிய மூப்பருக்கு கிலாபத்துங்கொடுத்து, மார்க்கத்தின் நியமங்களையும், இப்பாதத்தின் வகை விவரங்களையும் கற்பித்து, அவர்கள் அனைவரையும் பாரம் பரியமாய் அங்கேயே வசிக்கும்படி ஸ்தாபித்தார்கள். பின்பு அவர்களுக்கு ஆகவேண்டியவை யனைத்தையும் செய்தார்கள்.

அதன்பின், ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் அறுபத்தொன்றையும், அவைகளிருக்கும் தானத்திலிருந்து எழுந்து வலிய நடந்து வரும்படி அழைத்தார்கள். அழைத்தவுடன் அந்த விக்கிரகங்களெல்லாம் இருப்பைவிட்டுப் பெயர்ந்து நடந்து, ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து வரிசையாய் நின்றன. உடனே ஆண்டவரவர்கள் அவைகளைப்பார்த்து: ஏ, சிலைகளே, நீங்கள் எல்லாரும் அதோ இருக்கும் சிந்து நதியிற்போய் விழுந்து, ஆழ்ந்து விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். ஆண்டவரவர்களின் திருவாக்குப் பிறந்த மாத்திரத்தில் அந்த அறுபத்தொரு விக்கிரகங்களும் தடை

யின்றி விரைவாய் நடந்துபோய், நதியில் விழுந்து ஆழ்ந்தன.

பிறகு, அந்த ஆலயத்தை மஸ்ஜிது என்னும் தேவாலயமாக்கி, அதில் ஒவ்வொரு தினத்து ஐந்து நேரங்களிலும் பாங்கு இகாமத்துச் சொல்லி ஜமாய் ஜமாஅத்துடன் தொழுது வரும்படிக்கும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் குத்பா ஓதும்படிக்கும் நியமித்துவிட்டு, அந்த ஆலயத்தின் பக்கத்தில் மதரஸா என்னும் கல்விச்சாலை யொன்றும் கட்டி, அதற்குத்தக்க ஏற்பாடுகளும் செய்வித்து. அங்குள்ள எல்லாரையும் நேர்வழியில் தரிபடுத்தினார்கள்.

விக்கிரக நாசஞ்செய்தது முற்றிற்று.

---

சஉ-ம் அத்தியாயம்.

## முனிவர்கள் வழிபட்டது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு மலையில் வசிக்கும் இருஷிகள் வழிபட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாதல்ஹமீது காதிறொலி கன்ஜஸவாய் பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் சிந்து நதிக் கரையை விட்டுப் புறப்பட்டு, தங்கள் தபோதனர் புடைசூழக் கௌன் என்னும் மலைச்சாரலிற் போனார்கள். போனபோது, அம் மலையில் முற்றத் துறந்த முனிவர் பலரும், அவர்களுக்குத் தலைமையான இருஷிகள் மூவரும் வாசஞ்செய்கிறார்கள் என்னும் செய்தி, ஆண்டவரவர்களுக்குத் தெரிந்தது. இந்தச் செய்திகேட்ட ஆண்டவரவர்கள் அவர்களைச் சற்றும் மதிக்காமல் தங்கள் பகீர்மார் நானூற்று நால்வரும் புடைசூழ அந்த மலைமேல் ஏறினார்கள், பெருந்திரளான தபோதனர்களுடன் ஹலறத்து ஆண்டவரவர்கள் வருவதை அந்த இருஷிகள்



கண்டு : இவன் யார்? இங்கே நாம் இருக்கிறோம் என்பதைப் பற்றிக் கொஞ்சமும் மதிக்காமல், ஒழுங்கீனமாகக் காலிற் பூண்ட மிதியடியுடன் இறுமாப்பாய் வருகிறான். இவ்விதம் வருவது இவனுடைய வாலிபப் பருவத்தின் செருக்கா! அல்லது, கற்ற கல்வியின் செருக்கா! என்னதான் என்று நாம் அறிவோம்! இவனை இன்று இலகுவில் விடக்கூடாது என்று சொல்லிச் சினங்கொண்டு, அந்தமலைப் பொதும்புகளில் திரள் திரளாய்கூடிக் குடியிருக்கின்ற கருங் குளவிகளை விட்டு ஹலறத்து ஆண்டவரவர்களையும், பகீர்மார்களையும் கொட்டும்படி ஏவினார்கள்.

சித்தில்வல்ல இருஷிகளின் ஏவலுக்குக் கீழ்ப்படிந்த அந்தக் கொடியவிஷமுள்ள குளவிகளனைத்தும் ஆகாயம் நிறைய நெருங்கிப் புறப்பட்டு; திரள் திரளாய்ப் பறந்து; ஆண்டவரவர்களை அடுத்துக் கொட்டவந்தன. கருங் குளவிகள் பேரிரைச்சலுடன் கூடி முன்னோக்கி வருவதை ஆண்டவரவர்கள் கண்டு, அவற்றைப் பார்த்து; நீங்கள் எதற்காக இப்படித்திரண்டு வருகிறீர்கள்? என்று கேட்டார்கள். அற்புதநாயகராகிய ஹலறத்து ஆண்டவரவர்கள் இவ்வாறு கேட்டபோது, அக்குளவிகள் வாய் திறந்து: இந்தமலையில் வசிக்கும் இருஷிகளுடைய ஏவற் பிரகாரம் உங்களைக் கொட்டி வருத்தவந்தோம் என்று பிரதி சொல்லின. அவைகள் சொன்ன இச்சொல்லை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, மறுத்தும் அக்குளவிகளைப் பார்த்து: குளவிகாள், எங்களைக் கொட்டும்படி ஏவின அந்தத் துஷ்டர்களையே நீங்கள் திரும்பிப்போய்க் கொட்டுங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். சர்வ சிருஷ்டிகளும் வழிபட்டு ஒழுகிநடக்கும் காரண நாயகர் ஏவினவுடன் அற்பஜெந்துவாகிய அக்குளவிகள் கீழ்ப் படிந்து, அந்த முனிவர்களை நோக்கித் திரும்பின.

அல்லாத்தஆலாவின் ஒலியாக்களிற் சிறந்த நாயகரவர்களையும், அவர்கள் கூட்டத்தாரையும் சற்றும் மதிக்காமல் அந்தப் பாதகர்கள் ஏவ நாம் அறியாத் தன்மையரல்லவா அவர்களைக் கொட்டவந்தோம்? இனி அந்தப் பாதகர்களையே கொட்டிவருத்த வேண்டும் என்று அதிக ஆத்திரத்துடன் மீண்ட அந்தக்குளவிகள் தங்களை ஏவின இருஷிகள்மீது போய்விழுந்து கொட்டத் தொடங்கின.

பிறரைக்கொட்டும்படி தங்களால் ஏவப்பட்ட குளவிகள் திரும்பிவந்து தங்களையே கொட்டக்கண்ட அந்த இருஷிகள் அஞ்சி, கடுப்புப்பொறுக்க ஏலாமல் அலறி, பல்வழியும் சிதறியோடினார்கள். அவர்கள் எந்தவழியோடினாலும் அந்தவழியெங்கும் குளவிகள் தொடர்ந்து போய், அவர்களை ஓடவொளிக்க விடாமல், பதைக்கத் துடிக்கக் கொட்டின. குளவிக்கொட்டுக்குத் தப்பியோட வழிபார்த்தும் அவர்களாற் கூடவில்லை. பின்பு எல்லாரும் குளிசங்களை வாயிலிட்டுக்கொண்டு, ஆகாயத்திற் பறக்கத் தலைப்பட்டார்கள்.

இருஷிகள் குளவிகளுக்கு அஞ்சிவெருண்டு ஆகாயத்தில் பறப்பதை ஹலறத்து ஆண்டவரவர்கள் கண்டு, தங்கள் திருவடிகளிற் பூண்டிருக்கும் சிறந்த பாதுகைகள் இரண்டையும் பார்த்து: ஆகாயத்திற் பறக்கும் அந்தத் துஷ்டர்களைப் போய்த்தாக்கி, இங்கே கொண்டுவாருங்கள் என்று சொல்லி, ஆகாயத்தில் எறிந்தார்கள். உடனே அவ்விரு பாதகுறடுகளும் ஆகாயத்திற்போய், அங்கே பறந்து திரியும் இருஷி ஒவ்வொருவரையும் தலையில்தாக்கித் தரையில் இறங்கச்செய்து, ஆண்டவரவர்கள் சமுகத்தில் கொணர்ந்து வரிசையாக நிறுத்தின.

விஷக்குளவிகளின் கொட்டுதலாலுண்டான கடுப்பினாலும், மிதியடி புடைத்த புடைப்பினாலும் உடல் சோர்ந்து,



உள்ளம் ஒடுங்கி, பலங்குன்றி, வீரமற்று வந்துநிற்கும் அந்தச்சண்டாள முனிவர்கள் ஹலறத்து ஆண்டவரவர்களை நோக்கிக் கண்ணீர்விட்டு அழுது: எஜமானவர்களே, அறிவுகெட்ட நாங்கள் தங்களை இன்னாரென்று தெரியாமல் குளவிகளை ஏவினோம். பின் தங்கள் மகத்துவம் இன்னதென்று எங்களுக்கு நன்றாய் விளங்கிற்று. இனித் தங்களையன்றி எங்களுக்கு வேறு துணையில்லை. இப்போதே தேவரீர் எங்களுக்கு நேர்வழிகாட்டி, எங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று கெஞ்சி மன்றாடினார்கள்.

யார்யார் என்னென்ன தீமை செய்யினும் அவற்றைக் கொஞ்சமும் பாராட்டாமல், அவர்களுக்கு நன்மையே செய்யும் கருணாநிதியாகிய ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த இருஷிகள் கெஞ்சி மன்றாடினபோது மனங்கரைந்து, இஸ்லாம் மார்க்கத்தின் மகிமையை அவர்களுக்குப் போதித்தார்கள். உடனே அந்த இருஷிகள் எல்லாரும் மனந்திரும்பி, ஆண்டவரவர்களின் கையைப் பிடித்துக் கலிமா சொல்லி இஸ்லாமிலானார்கள்.

இருஷிகளெல்லாரும் ஈமான்கொண்டு முஸ்லிம்களான பின், அவர்களிற்சிலர் ஆண்டவரவர்களை நோக்கி: எஜமானவர்களே, இந்த மலைச் சிகரத்தில் எங்களுக்குத் தலைவனும், இணையில்லாத வீரதீர முள்ளவனும், சித்தர்களில் சிறந்தவனுமாகிய ஒரு முனிவன் இருக்கிறான் என்று தெரிவித்தார்கள். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் தங்கள் ஜின்களில் ஒன்றையழைத்து: நீபோய், அவனை இங்கே கொண்டுவா என்று கட்டளையிட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் கட்டளைபெற்ற ஜின் அங்கிருந்து விரைவாயெழுந்து மலையுச்சத்திற்போய், அந்த முனிவனை அழைத்தது. அப்போது அந்தமுனிவன் வர உடன்படாமல் மறுத்து, ஜின்னோடு எதிர்த்துப் போராடினான். ஜின் அவனுடன் நெடுநேரம் மல்லாடி

அவனைக்கீழே தள்ளி மிதித்துச் சிறைப்படுத்தி, தூக்கிக் கொணர்ந்து ஆண்டவரவர்கள் சமூகத்திலிட்டது.

ஜின்னால் உதைபட்டுத் திகில்பிடித்துக் கலங்கிச் சிறையாக்கப்பட்ட அவன் ஆண்டவரவர்களைக் கண்டமாத்திரத்தில் பின்னும் மனந்தடுமாறி, ஆண்டவரவர்களை நோக்கி: எஜமானவர்களே, அடியேனுக்கு அடைக்கலந்தந்து ரக்ஷிக்க வேண்டும் என்று கூக்குரலிட்டு அழுதான். அப்போது ஆண்டவரவர்கள் அவனுக்கும் கலிமாவைப் போதித்துப் இஸ்லாமி லாக்கினார்கள்.

பிற்பாடு ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் தபோதனர்களாகிய பகீர்களை நோக்கி: இப்போது இஸ்லாமிலான சித்தர்கள் அனைவருக்கும் தீனுல்லிஸ்லாமுடைய விதி விலக்குகளைக் கற்பியுங்களென்று கட்டளை பண்ணிவிட்டு, அந்த மலையின் ஒருபக்கத்திலுள்ள கெபிக்குள்ளேபோய் கல்வத்திலிருந்து விட்டார்கள். அப்போது அல்லா தஆலா அவர்களுக்கு அளவிறந்த மகிமைகளையுண்டாக்கினான்.

ஆண்டவரவர்கள் அலங்காரமான அந்த கெபிக்குள் நாற்பது நாள் கல்வத்திருந்து, பின் அங்கிருந்து வெளியானார்கள். பிறகு, அங்கே முஸ்லிம்களான இருஷிகள் சிலர் ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து தாழ்ந்துநின்று: எஜமானவர்களே, எங்களுக்குக் கீமியா என்கிற இரசவாதமும், ஷீமியா என்கிற உருவழிதலும், லீமியா என்கிற மறையுணர்வும், றீமியா என்கிற பரகாயப்பிரவேசமும் தெரியும். தாங்கள் உத்தரந்தருவீர்களாயின் இந்த பகீர்மார்களுக்கு அவற்றைக் கற்பிக்கிறோம் என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவரவர்கள்: அவற்றை இவர்களில் விரும்பினவர்களுக்குக் கற்பியுங்கள் என்று உத்தரவு கொடுத்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் உத்தரவின்படி கீமியா, ஷீமியா, லீமியா, றீமியா என்னும் நான்கு வித்தைகளையும் அவற்றை விரும்பின பகீர்களுக்கு அந்தச் சித்தர்கள் கற்



பித்தார்கள். அதன்பிறகு, அங்கே இஸ்லாமிலான சித்தர்கள் எல்லாரும் அல்லாதஆலாவை வணங்கும் வணக்கத்தின் வகைவிவரங்கள் முழுவதையும் நன்றாய்க் கேட்டுத் தெளிந்து கொண்டு, மலையிலும், காட்டிலுமிருந்து வணங்கக் கட்டளை பெற்றுக்கொண்டு போனார்கள். அவர்களை யனுப்பின பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் நானூற்று நான்கு தபோதனர்களுடன் அந்த மலையை விட்டிறங்கி, தாங்கள் நாடிச் செல்லும் திசையை நோக்கி நடந்தார்கள்.

முனிவர்கள் வழிபட்டது முற்றிற்று.

---

௬௯-ம் அத்தியாயம்.

## குடித்தபாலை மீட்டினது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் காந்தமலை கவர்ந்த இரும்பாயுதங்களையும், பகீர்மார்கள் கவர்ந்து குடித்த பாலையும், மறுபடி மீட்டிக்கொடுத்த வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாதுல் ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் தபோதனர்களென்னும் பகீர்மார் கிரளுடன் வழிநடந்து, உயர்ந்த மலைகளையும், பரந்த காடுகளையும், அகன்ற மைதானங்களையும், நீண்ட நதிகளையும் கடந்து வரும்போது, பார்ப்பவர் கண்களைக் கவரும் பிரகாச மிக்க காந்தமலையொன்று எதிர்ப்பட்டது. ஆண்டவரவர்களும், தபோதனர்களும் அந்தக் காந்த மலைக்குப் பக்கத்தில் ஆனவுடன், தபோதனர்களாகிய பகீர்மார்கள் வசத்திலிருக்கும் இரும்பு ஆயுதங்கள் அனைத்தும் திடீரென்று பறிபட்டுக் காணாமற் போயின.

கைகளிலும், தோட்களிலும், இடைகளிலும், பூண்டிருந்த எல்லா இரும்பாயுதங்களும் காணாமற்போனபோது

எங்கள் ஆண்டவரே, இந்நாள்வரையும் இடைவழியில் யாதொரு ஆபத்துமின்றி நாங்கள், தங்கள் சந்நிதிக்குப் பூசைப்பால் கொணர்ந்து கொடுத்துவந்தோம். வழமைப்படி இன்றையதினம் பால் கொண்டுவரும்போது எங்களுக்கு நேரிட்ட ஆபத்தை என்னென்று சொல்வோம்! அதோ இருக்கும் தோப்புக்குப் பக்கத்தில் நாங்கள் கொணர்ந்த பாற்குடங்களை இறக்கி வைத்துவிட்டு, இளைப்பாறிக்கொண்டிருந்தோம். தவவேடம் பூண்ட சிலர் வந்து, அப்பாற் குடங்களைத்தூக்கி வாயில்வைத்துக் குடித்து எச்சிலாக்கி விட்டார்கள். இவ்வித அதிக்கிரமம் நீங்கள் செய்யலாமா? என்று நாங்கள் கேட்டதற்கு, அவர்கள் எங்களை உதைத்து துரத்திவிட்டார்கள். அவர்கள் செய்த வலோற்காரமான இந்தக் கருமத்தைத் தேவரீர் விசாரித்து, அவர்களுக்குப் பிரதிசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம் என்று இப்படி முறையிட்டவுடன், இதைக்கேட்ட தேசிகன் தாங்கரிய சினங்கொண்டு தன் ஆட்களில் ஆயிரம் பேரை ஒருங்கு சேர்த்து: நீங்கள் போய், அந்தத்துஷ்டர்களின் வீரங்குன்ற அடித்துப் பிடித்துத் தண்டனை பண்ணுங்கள் என்று கட்டளைபண்ணினான். மடத்தின் தேசிகன் இவ்வாறு ஏவினவுடன் அந்த ஆயிரம் காபிர்களும் ஒன்று கூடி, பலவிதம் சபதம் பேசினவர்களாய் பகீர்மார்கள்மேல் விழுந்து தாக்கும்படி வந்தார்கள்.

இதற்கிடையில் பால்குடித்த பகீர்மார் தங்கள் சாலையிற் போய்த் தங்கியிருந்தார்கள். அவர்களைத் தண்டிப்பதற்காக அகோரத்துடன் வரும் அக்காபிர்கள் ஆயிரம்பேர்களும் ஹலறத்து ஆண்டவரவர்களின் சாலையை நோக்கி வந்தார்கள். காபிர்கள் திரண்டு அதிக ஆத்திரத்துடன் வருவதை ஆண்டவரவர்கள் கண்ணுற்கண்டு, இவர்கள் என்னவோ ஒரு தீங்கை நாடிவருகிறார்களென்று தெரிந்துகொண்டு, தங்கள் திருவாய்மலர்ந்து "ஏ, பூமி, தீங்கை நாடிவரும் இந்தக் காபிர்கள் எங்களிடம் நெருங்கி வரவிடாமல்; அவர்கள் கால்களை இறுகப்பிடித்துக்கொள்" என்று பூமியைப் பார்த்துச் சொன்னார்கள். ஆண்டவரவர்களின் திருவாய்மொழி பிறந்தமாத்திரத்தில் அக்காபிர்கள் நடந்துவரும் தரை சேறுபோல் இளகி, அவர்கள் முழந்தாள்வரையும், பதிய இழுத்துக்கொண்டு, பின்பு கட்டியாயிறுகி, இரும்புப்பூண் இட்டாற்போலப் பிடித்துக்கொண்டது.



திடீரென்று தங்கள் கால்கள் முழந்தாள் அளவி பூமியிற்புதைந்து பிடிக்கப்பட்டபோது, அக்காபிர்கள் கால்களைப் பெயர்க்கக் கூடாமல் திகைத்துக் கலங்கி, கண்கள் மருண்டு, உடல்சோர்ந்து, தம்பங்களை நாட்டினாற்போல ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டார்கள். அப்போது அவர்கள் மனம் பட்டபாடு கொஞ்சமல்ல.

தன் ஏவலாட்கள் அத்தனைபேர்களும் தம்பம் ஸ்தாபித்தாற்போல நின்றுபோனதைத் தூரத்தில் நின்ற தேசிகன் கண்டு கடுஞ்சினங்கொண்டு, விரைந்தோடி ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து நின்றுக்கொண்டு: ஏ, மனிதனே, உன் ஆட்கள் என் பூசைக்காகக் கொண்டுவந்த பாலை வலோற்கரமாகப் பறித்துக் குடித்து, அந்தபாலைச் சுமந்துவந்த என் ஆட்களைமடித்துத் துரத்தும்படி ஏவினவன் நீயல்லவா? இவ்வித அதிக்கிரமம் செய்ய உனக்கு என்ன துணிகரம்! என்று படபடத்துக் கேட்டான். இச்சொல்லைக் கேட்ட ஆண்டவரவர்கள் ஆற அமற அவனைப் பார்த்து: ஏ, மௌட்டிகனே, இப்படிச் செய்யுங்கள் என்று என் ஆட்களை நான் ஏவினவன் அல்ல. அவர்கள் செய்தது இன்னது என்று எனக்குத் தெரியாது. நீ உன் கோபத்தை அடக்கு. இக்கருமம் என்னாலானது என்பதை விட்டு விடு. ஆனாலும் குற்றமில்லை. உன் பால் இல்லாமற் போகவில்லை. அதோ குடங்களைப்பார்; பால்

இருக்கின்றது. எடுத்துக் குடித்து உன் கிரியைச் செய்து கொள் என்று மதுரமான சொற்களாகச் சொன்னார்கள்.

இதைக்கேட்ட தேசிகன் கோபத்தால் விறைத்துக் கொண்டு; கண்கள் சிவக்கத் திரும்பி, அங்கேயுருண்டு கிடக்கும் பாற்குடங்களைப் பார்த்தான். அப்போது, புரண்டுருண்ட குடங்கள் பத்தும் தனித்தனி நிமிர்ந்து, அவற்றில் பால் நிரம்பி நுரைந்து வழிந்துகொண்டு இருந்தன. குடங்கள் நிறையப் பால் நிரம்பி வரிசையாக வைத்திருப்பதைத் தேசிகன் பார்த்து, பாலைக் குடித்து விட்டதாகச் சொன்னார்களே, இப்போது குடம் நிறைய இருக்கின்றதே. இது என்னவோ அற்புதமாயிருக்கும் என்று ஆண்டவரவர்களின் மகிமையைப்பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பாராமல், தன் மூடத்தன்மையால் பின்னும் ஆண்டவரவர்களைப்பார்த்து: உன் கூட்டத்தார் குடித்து மிஞ்சின எச்சிற்பாலையா என்னைக் குடிக்கச் சொல்லுகிறாய்? என்று கோபமாகச் சொன்னான். அறிவு சிறிதுமில்லாதவனான மௌட்டிகதேசிகன் குடம் நிரம்பப் பாலிருக்கக் கண்டு, பின்னும் இப்படிச் சொன்னபோதுதான் ஆண்டவரவர்களுக்குக் கொஞ்சம் சினம்பிறந்தது. பிறந்தபோது அவனைப்பார்த்து சர்வவல்லவனாகிய கடவுளின் சினத்திற்குப் பாத்திரனான எடா, முட்டாள், இனி நீ ஒருபொழுதும் என் முகதாவில் நிற்காதே. போய்விடு என்று கோபமாகச் சொன்னார்கள்.

ஆண்டவரவர்களின் கடுமையான இச்சொற்களை அந்தத் தேசிகன் கேட்டுச் சிறிதும் அஞ்சாமல், மறுத்தும் ஆண்டவரவர்களை நோக்கி: என்னை நீ யாரென்று அறிவாயா? இன்னான் என்று அறியமாட்டாய் போலும்! அறிந்தால், இப்படி மதிப்பின்றிப் போவென்று சொல்லமாட்டாய்! இப்போது நீ சொல்லுவது விந்தையாயிருக்கின்றது.



உனக்கு இவ்வளவு தீரம் எதனாலுண்டாயிற்று? நீ என்னோடொத்த வீரியசித்தனானால், எங்கே, என்னுடன் எழுந்து ஆகாயத்திற் பறந்துவா. உன் மகிமையையும், என் மகிமையையும் பிரித்தறியலாம் என்று சொன்னான்,

மதிகேடுள்ள அவன் சொன்ன சொல்லை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அவனைப் பார்த்து: நல்லது, பார்ப்போம். நீயே முந்தியெழுந்து ஆகாயத்திற் பற என்று சொன்னார்கள். இச்சொல்லைக் கேட்டவுடன் அந்தத் தேசிகன் கர்வத்துடன் வாயுவை ஸ்தம்பிக்கப்பண்ணிக் கொண்டு, குபீரென்று எழுந்து ஆகாயத்தில் உயர்ந்து பறக்கத் தொடங்கினான்.

உன்னியெழுந்த தேசிகன் ஒரு சவளத்தின் அளவு ஆகாயத்தில் உயர்ந்தபோது ஆண்டவரவர்கள் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு, அவனை அங்கிருந்து உயரப் போகாமலும், தாழ இறங்காமலும், வலம் இடம் ஆடியசைந்து ஒதுங்காமலும் பண்ணி நிறுத்தி, சூரியனை விளித்து: இந்தத் துஷ்டனை உடல்கருகி ஊனம் உருகி வடியும் வரையும் சுடுவாயாக என்று கட்டளையிட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் கட்டளை உண்டானவுடன் சூரியன் தன் முழுவெப்பத்தையும் அந்தத் தேசிகன் மீது தாக்கத் தொடங்கிற்று. சூரியவெப்பம் சுட்டபோது ஒரு சிலாரூபத்தை, அல்லது ஒரு சித்திரப் படத்தை அந்தரத்தில் தூக்கிநிறுத்தினாற் போல நிற்கும் அவன் உடலின் யாதனையையும், மனம்படும் பாட்டையும் யார்தான் சொல்லவல்லவர்! அவன் உடல் முந்தி வியர்வை மாரி பொழிந்து, பின் நெருப்பிலிட்ட தளிர்போல வாடிக் கருகி, புழுப்போல் துடித்து, ஊனத்தை உகுத்தது. அதனால், அவன் வீர தீரங்குன்றி இளைத்து வருந்தினான். இது வன்றி, அங்கே பட்டாளம் அணிவகுத்த சித்திரப்

படத்தைப் பார்த்தாற் போலத் தரையாற் பிடிப்புண்ட கால்களுடன் ஒரேபடியாய் நிற்கும் ஆயிரம் வீரர்களையும் சூரியோஷ்ணம் சும்மா விடவில்லை. அவர்களையும் கொளுத்தத் தொடங்கிற்று. அவர்களும் ஆடாமல் அசையாமல் நின்று வெகுபாடு பட்டார்கள்.

நெடுநேரம் இப்படித் தாக்குண்டபோது மேற்படித் தேசிகனும், அவன் ஆட்களும் தாங்கரிய யாதனையால் பதை பதைத்து, ஏன் நாம் இந்தப் பெரியவரைப் பேணுமல் எதிர்த்து நிற்கவந்து மாட்டிக் கொண்டோம்? இது நம் ஊழ்வினையா? என்று சிந்தனை பண்ணி, இனி இவரை இரந்தாலன்றி இந்த வில்லங்கத்தி லிருந்து மீக்ஷிபெற மாட்டோமென்று நிர்மானித்து, அந்தரத்தில் ஆணியறைந் தாற்போல நிற்கும் அந்தத் தேசிகமடையனும், அவன் ஆட்களும் வாய்திறந்து: எஜமானவர்களே, தங்கள் மகத்துவம் இப்படிப்பட்டதென்று நாங்கள் இப்போது அறிந்தோமன்றி, முந்தி அறியவில்லை. அப்படி அறிந்திருந்தால், தங்களை எதிர்த்து இந்த மானபத்தில் சிக்கிக்கொள்ளமாட்டோம். அப்போதே தங்கள் திருவடிக்குத் தொண்டர்களா யிருப்போம். ஆகையால், அறியாமற்செய்த எங்கள் குற்றத்தை மன்னித்து, இப்போது நாங்கள் படும் துன்பத்தை நீக்கி, எங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று சத்தமிட்டு அலறி அழுதார்கள். தீமை செய்தவருக்கு நன்மை செய்யும் வழக்கம்போல ஹலறத்து ஆண்டவரவர்கள் மனதில் இரக்கம் உண்டாயிற்று. உடனே மனதிரங்கி, அந்தரத்தில் நிற்கும் தேசிகனைப் பார்த்து: நீ கீழேயிறங்கு என்றும், பூமியால் பிடிக்கப்பட்ட ஆயிரம் பேர்களையும் பார்த்து: நீங்கள் நடந்து வாருங்கள் என்றும் உத்தரவு செய்தார்கள். உடனே தேசிகன் இறக்கி விட்டாற்போலத் தரையில் இறங்கி



ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்தான்; அவன் ஆட்களும் கால்களைப் பெயர்த்து முன்போல நடந்துவந்தார்கள்.

தேசிகனும், அவன் ஆட்களும், ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து சாஷ்டாங்கமாய் விழுந்து கிடந்து: இனி எங்களை ரக்ஷித்து ஈடேற்றுபவர் தாங்களே எங்களுக்கு வேறுகதியில்லை என்று கூக்குரலிட்டு, குடங்களில் இருக்கும் பால்களை எங்களுக்குத் தந்தருள வேண்டும் என்றும் கெஞ்சிக்கேட்டார்கள். உடனே ஆண்டவரவர்கள் பகீர்மார்களை நோக்கி: அந்தப் பாற் குடங்களை இவர்கள் வசம் ஒப்படையுங்களென்று உத்தரவு செய்தார்கள். அப்படியே பகீர்கள் அக்குடங்களைக் கொடுத்தார்கள். அவர்கள் அவற்றைவாங்கி: இந்தப்பாலினுல் நாங்கள் முத்தியும் புத்தியும் பெற்றோம் என்றுகூறி, எல்லாப்பாலையும் குடித்துப் பூரித்தார்கள். அப்போதே அவர்களுக்குப் பரமாநந்தம் உண்டாயிற்று.

பின்பு தேசிகனுதியோர் எல்லாரும் ஹலறத்து ஆண்டவரவர்களைப் புகழ்ந்து; எஜமானவர்களே, தாங்கள் எங்களுக்கு நேர்வழிகாட்டுங்கள் என்று மன்றுடிக் கேட்டார்கள். உடனே ஆண்டவரவர்கள் அவர்களுக்குக் கலிமாவைப் புகட்டி, எல்லாரையும் இஸ்லாமாக்கினுர்கள்.

தேசிகரும், அவர் ஆட்களும் ஈமான்கொண்டு இஸ்லாமானபின், ஆண்டவரவர்கள் அவர்களுக்கு மார்க்கத்து விதிவிலக்குகளையும், வணக்க நியமிப்புகளையும் கற்பித்து, இனி நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளையும் சரிவரப் போதித்து, அவர்களை அங்கேயேயிருக்கச் செய்துவிட்டு, தங்கள் பகீர்மார்புடைசூழ அங்கிருந்து கவுரவத்துடன் பிரயாணப்பட்டார்கள்.

குடித்தபாலை மீட்டினது முற்றிற்று.

---

௬௮-ம் அத்தியாயம்.

# முடந்தீர்த்தது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு பெண்ணின் முடமுதலிய பிணிகளைத் தீர்த்தவரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாதுல் ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் கன்னூமாகாணத்தில் ஒரு சிற்றூரிற் போய்த் தங்கியிருந்தார்கள். அப்போது அவ்வூரில் வாசஞ்செய்கிற ஒரு இஸ்லாமான பாலியன் தன் மனைவியைத் தூக்கி முதுகிற் சுமந்துகொண்டு ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து அவளை இறக்கிவைத்துவிட்டு, வாய்திறந்து யாதொன்றும் பேசாமல் கைகளைக் கட்டிக்கொண்டு தலைசாய்ந்து நின்றான்.

அப்போது, புருஷன் முதுகில் சுமந்து வந்து இறக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்தப்பெண் ஹலறத்து ஆண்டவரவர்களை நோக்கி, கண்ணீர் தாரைதாரையாயோடப் பரிதாப அழுகையாக அழுது: என் எஜமானவர்களே, அடியாளாகிய நான் பாலிகு என்னும் ருதுவையடைந்து இற்றைக்கு மூன்றுவருஷங்களாயின. ருதுவான அன்று முதற்கொண்டு இதுபரியந்தம் ஒரு க்ஷணப்பொழுதும் இடைவிடாமல் என் அந்தரங்கஸ்தானத்தில் தாங்கரிய எரிவும், குத்தலுமுண்டாய் வருத்துகின்றன. அன்றியும், பெரும்பாடு என்னும் உதிரப்பெருக்கும் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. அன்றுதொட்டு என் கைகால்கள் நீட்டமுடக்கக் கூடாமல் முடம்பற்றிப்போயின. அதனால், எனக்குண்டாயிருக்கும் வேதனை மெத்த. எனக்காகப் பண்ணின பலவித பரிகாரங்கள் கொஞ்சமல்ல, ஒன்றிலும் சுகமாகவில்லை. ஊணுறக்கமற்றுத் தவிக்கிறேன். அடியாள்



சுகப்பட்டிருந்து அல்லாஹுத்தஆலாவுக்குச் செய்யவேண்டிய கடமையாகிய வணக்கமுதலான கிரியைகளைச் செய்து முடிக்கவும், நாலுபேரைப்போல நாயகனோடு கூடிவாழ்ந்து சுகத்தை யநுபவித்துப் பிள்ளைகளைப் பெறவும், எனக்கு அதிக ஆசையுண்டு, என் ஊழ்விதி இவ்வாறாக்கிற்று. இதனால் என்மனம் புண்பாடடைந்து சஞ்சலக்கடலில் தத்தளித்துத் திரிகின்றது. தேவரீர் தாங்கள் இந்தச்சிற்றடியாளுக்கு இரங்கி, என் முடமாதி நோய்கள் முழுதும் என்னைவிட்டு நீங்கி, என்னாட்டங்களும் நிறைவேறும்படி செய்யவேண்டும் என்றுசொல்லி, மிகப் பரிதாபத்துடன் பிரார்த்தித்தாள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் இந்த முறைப்பட்டைக் கேட்டு அந்தப் பெண்மீது இரக்கங்கொண்டு, அவளை நோக்கி: அஞ்சாதே; உனக்குண்டான எல்லாவியாதிகளும் இப்போதே உன்னைவிட்டு நீங்கின. நீ இன்றுமுதல் சுகதேகியாய், உன் நாயகனோடுகூடிச் சகல சுகங்களையுமநுபவித்து, பிள்ளைகளைப்பெற்றுப் பெரியகுடியாய்த் தழைத்திரு என்று திருவாய்மலர்ந்து சொன்னார்கள். ஆண்டவரவர்கள் சொன்ன இந்த மந்திரமொத்தசொல் அவளுக்கு உடனே பலித்தது. இச்சொல்லைக் கேட்டவுடன் அவள் நெடுநாள் முடம்பட்டிருந்த தன் கைகால்களை உதறி நீட்டி, பூரணசவுக்கியத்துடன் நல்ல மனுஷியைப்போல எழுந்து நிமிர்ந்து நின்றாள். அப்போது அவள் அந்தரங்கஸ்தானத்திலிருந்து இரத்தப்பையொன்று விழுந்தது. அது விழுந்தவுடன் அங்குண்டாயிருந்த எரிவு, குத்தல் முதலான எல்லா நோவும் பற்றறத் தொலைந்துபோயின.

இது நடந்தபின், சஞ்சலக்கடலில் தவித்த அந்தப் பெண் சந்தோஷக்கடலில் முக்குளித்தவளாய், ஹலறத்து ஆண்டவரவர்களைப் பலவாறுதுதித்து உத்தரவுபெற்றுக்

கொண்டு, தன் ஆசை நாயகனோடு நடந்து விடுபோய்ச் சேர்ந்தாள்.

முடம் முதலான வியாதிகளனைத்தும் கையுமெய்யு மாகத் தீர்ந்து நடந்துபோய்ச் சேர்ந்த அந்தப் பெண் ஆண்டவரவர்கள் இட்ட திருவாக்கின்படி நாயகனோடுகூடிச் சுகமனுபவித்து, பலபிள்ளைகளையும்பெற்று, பெருங்குமயாய்த் தழைத்து வாழ்ந்திருந்தாள்.

முடந்தீர்த்தது முற்றிற்று.

---

௬௩-ம் அத்தியாயம்.

## சர்ப்பத்தை நீக்கினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு மனித ருடைய சிரசிற் குடியிருந்த சர்ப்பத்தை நாசிவழியாக நீக்கின வரலாற்றைச் செல்லுகின்றது.]

ஹலறத்து மீறான் கல்தான் ஒாதுல்லமிது பாத்துஷா ஆண்டவரவர்கள் கன்ஜூ மாகானத்து மற்றோர் ஊரிற் போய், அவ்வூர்ப்பள்ளியில் ஜும்ஆதொழுதபின் விதிவிலக்கு களைப்பற்றிப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

நெடுநேரம் பிரசங்கஞ்செய்து முடிந்தவுடன், ஒருவர் ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து கைகட்டிநின்று: எஜமா னவர்களே, தமியேன் நித்திரைசெய்யுந்தோறெல்லாம் என்னைத் துண்டந்துண்டமாக வெட்டிக் குவிப்பதுபோலப் பயங்கரமான சொப்பனங் காண்கிறேன். அப்படிக்காணும் போது எனக்கு உண்டாகும் திகிலைச் சொல்லக்கூடிய தல்ல. வெட்டிக் குவிக்கையில் தட்டிவிலக்கும் பிரயத்தனம் எதுவும் செய்ய எனக்குத்திராணியில்லாமற் போகிறது. அதனால், அஞ்சி, வெருண்டு, பதறிவிழிக்கிறேன்.



விழிக்கும்போது என் உடலில் இருக்கும் வருத்தம் கொஞ்ச மல்ல. கைகால்களைத்தூக்க எடுக்க ஏலவில்லை. பின் வர வர அந்த வருத்தந்தீர்ந்து சுகமாகின்றது. இது என் நித்திரை தோறும் தவறாமல் நடக்கின்றது. இவ்விதம் இன்று நேற்றல்ல; ஆறுவருஷங்களாகப் பாடுபடுகிறேன். இடையில் இதற்கென்றுசெய்த பரிகாரம் அற்பசொற்பமல்ல. அவைகளால் ஒருபலனு முண்டாகவில்லை. தேவரீர் இரக்கம் வைத்து இந்த வேதனையைத் தீர்த்து ஏழையை ரக்ஷிக்க வேண்டும் என்று முறையிட்டார்.

இந்த முறைப் பாட்டை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அவரை அருகில் அழைத்து, வலதுகையை அவர் தலைமேல் வைத்தார்கள். சிரசில் வைத்த கையை மறுபடி எடுத்தவுடன் அந்தச்சிரசில் இருந்து நாசித்துவாரவழியாய் ஒரு பாம்பு புறப்பட்டு, நெளிந்து வளைந்து நிலத்தில் விழுந்தது. விழும்போது சின்னஞ்சிறிதாய்க் காணப்பட்ட அந்தப்பாம்பு விழுந்தபின் பெரிதாய் நீண்டுபருத்து, படம் விரித்து நின்று ஆடிற்று.

அப்போது ஆண்டவரவர்கள் அந்தச் சர்ப்பத்தைப் பார்த்து "நீ எதற்காக இவருடைய தலையில் புகுந்திருந்து வேதனை செய்தாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த நாகம் ஆண்டவரவர்களை நோக்கி "எஜமானே, இவர் ஒரு பெண்ணைக் கொலை செய்துவிட்டார். அதற்காக நான் இவர் மீது ஏவப்பட்டு வேதனை செய்துகொண்டிருந்தேன்" என்று பிரதிகூறிற்று. இவை ஆண்டவரவர்கள் கேட்டு அந்த மனிதரைப்பார்த்து "அது மெய்தானா?" என்று வினவினார்கள். அவர் "ஆம்; எஜமானே, மெய்தான்" என்று சொல்லிவிட்டு, தாம் செய்த அந்தக் கொலைக் குற்றத்திற்காக ஆண்டவரவர்கள் சமுகத்திலேயே தௌபா செய்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டார்.

பிறகு ஆண்டவரவர்கள் அந்தநாகத்தைக் கொல்லாமல் தடுத்து: நீ இனிமேல் இவரை நினைத்தும் பாராதே; உன் பழைய தானத்திற் போய்ச்சேர். என்று கட்டளைபண்ணி அநுப்புவிட்டார்கள். அன்று முதல் அவர் முன்சொன்ன படி சொப்பனங்காணுதல் ஒழிந்து சுகமாயிருந்தார்.

சர்ப்பத்தை நீக்கினது முற்றிற்று.

---

உகூ-ம் அத்தியாயம்.

## நதி கடந்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் குடகிராச்சியத்து நதியை அற்புதகாமாகக் கடந்து போன வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஜீலான்சாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் சிஷர்கூட்டமாகிய பகீர்மார் நானூற்று நால்வரும் புடைசூழ்ந்து வரும்படி முன்சொன்ன ஊரிலிருந்து புறப்பட்டு, வனம், வனாந்திரம், மலை, நதி அனைத்தையுங் கடந்து நடந்து, குடகிராச்சியத்தில் வந்து சேர்ந்தார்கள். அவ்விராச்சியத்து இராஜதானி நகரத்திற்குப் புறத்தில் அகன்ற நதியொன்று ஓடுகின்றது. அந்த நதிக்கு இக்கரையில் ஆண்டவரவர்கள் வந்து, அங்குள்ள அலங்காரமான ஒரு சோலையில் விடுதியிட்டுத் தங்கினார்கள். அந்த நதியின் போக்குவரத்திற்குப் பாலம் இல்லாமையால், படகுகள் அநந்தம் இருகரையிலும் ஆயத்தமாயிருப்பது வழக்கம். அந்தப்படகுகளில் ஜனங்கள் ஏறிப் போக்குவரத்துச் செய்வார்கள்.

அந்த ஆற்றருகில் உள்ள தோட்டத்தில் பெருங்கூட்டத்துடன் ஹலறத்து ஆண்டவரவர்கள் போய்த் தங்கின



அன்றைத்தினமே அங்குள்ள காபிர்கள் அஞ்சி, அவ்வூரையாளும் அரசனிடம்போய்: எங்கள் இறைவரே, நமக்கு அந்நியசாதியார் பெருந்திரளாக அக்கரையில்வந்து தாணையமிட் டிருக்கிறார்கள் என்று முறையிட்டார்கள்.

இச்சொல்லைக்கேட்ட அரசன்: இது, நம்மோடெதிர்த்து யுத்தஞ்செய்து, நமது ஊரைப் பிடிக்கவந்த மாற்றார்சேனையா யிருக்குமென்று எண்ணி மனங்கலங்கி, தன் ஆட்களுக்கு ஆற்றில் நடக்கும் படகின் போக்குவரத்தை நிறுத்திவிடுங்கள்; எல்லாப் படகுகளையும் இழுத்துக் கொணர்ந்து இக்கரையிற் கட்டிவிடுங்கள்; என்ன அவசியமானாலும் ஒரு படகாவது இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போக விடாதீர்கள்; அக்கரையில் ஒரு சிறு வள்ளத்தையாவது போட்டு வையாதீர்கள்: அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எச்சரிப்புடன் பார்த்திருங்கள்; ஏதும் ஒரு காரியம் நடக்குமானால், உடனே வந்து எனக்குத் தெரிவியுங்கள் என்று கட்டளைபண்ணினான். அப்படியே அவர்கள் ஒரு சிறு வள்ளத்தையும் இக்கரையில் வைக்காமல், ஏல்லாப்படகுகளையும் அக்கரையிற் கொண்டுபோய்க் கட்டிவிட்டார்கள். படகின் போக்குவரவு நின்று போயிற்று. ஆற்றைக்கடக்கும் ஜனங்களின் கருமம் தடைபட்டது. காபிர்கள் மகாஜாக்கிரதையுடன் இனி நடப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சோலையில் விடுதியிட்டிருக்கும் ஹலறத்து ஆண்டவரவர்கள் படகுவரும்; ஆற்றைக்கடந்து ஊருக்குள் போகலாம் என்று காத்திருந்தார்கள்; மூன்று நாளாயும் ஒரு படகாவது ஆற்றில் ஓடித்திரியவில்லை, இந்த மூன்று நாளாக பகீர்மார்கள் அன்ன ஆகாரமின்றிப் பட்டினியாய், படகை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் படகும் வரவில்லை; பசிக்கு ஆகாரமும் அகப்படவில்லை.

மூன்று நாட்களுக்குப்பின் பகீர்மார்கள் ஒருங்குகூடி ஹலறத்து ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து: எஜமானவர்களே, எங்களுக்குப் பசிதாங்கக் கூடவில்லை. இங்கே ஆகாரம் கிடைப்பது அரிதாயிருக்கின்றது. ஊருக்குள் போகலாமென்றாலும் படகு வரவில்லை. இதற்கு என்ன செய்வோம்? என்று முறையிட்டார்கள். ஆண்டவரவர்கள் இதைக்கேட்டு பகீர்மார்களைப் பார்த்து: உங்களுக்குப் பசி தாங்கக்கூடவில்லையானால், மரங்களிலுள்ள தழைகளைப் பறித்துப் பாத்திரங்களில் நிறைத்து, அடுப்பில் வைத்து எரித்து வேகுவித்து இறக்கி, உங்களில் யார் யாருக்கு என்னென்ன உணவுகள் வேண்டுமோ அவ்வவ்வுணவுகளை நாடி அந்தப்பாத்திரத்திற் கையிட்டு எடுங்கள். அல்லாகுத்தஆலா நீங்கள் நாடினவஸ்துவைத் தருவான் என்று கட்டளை பண்ணினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் சொன்னபிரகாரம் அவர்கள் மரத்தின் தழைகுழைகளைப் பிடுங்கிப் பாத்திரங்களில் இட்டு அடுப்பேற்றி எரித்திறக்கி, அவரவர் விரும்பின ஆகாரங்களை நினைத்துக்கொண்டு எடுத்தார்கள். பாத்திரங்களில் வெந்த இலைகள் உயர்தரச் சோறுகறிகளாகவும், ரொட்டிகளாகவும், ஆக்கின, பொரித்த, சுட்ட இறைச்சிகளாகவும் மாறி அவரவர் விருப்பத்தின்படி உண்டாய் வந்தன. அவற்றை எடுத்தெடுத்து பகீர்மார் அனைவரும் பசிதீரப்புசித்து, அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்து, ஆண்டவரவர்களையும் வாழ்த்திப் போற்றினார்கள்.

பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு துண்டுக் காகிதத்தை யெடுத்து, அதில் பிஸ்மில்லாஹி என்பது முதலான சில அக்ஷரங்களையெழுதி மடித்து, தங்கள் கலீபாக்களுள் ஒருவராகிய ஷைகுஹஸன் என்பவரை யழைத்து அதை அவர் கையிற்கொடுத்து: இதை நீர் கொண்டுபோய் அந்த



ஆற்றிற்போடும்; இது ஒரு படகாகும். அந்தப்படகில் நீர் ஏறிக்கொண்டு அக்கரையிற் போயிறங்கி, இவ்வூர் அரசனிடஞ்சென்று: நீ ஆற்றில் படகுவிடாமல் வீணாக மறித்துக்கொண்டாயே? நாங்கள் இங்கே வரவேண்டியதுண்டு. இப்போது முன்போலப் படகுவிட உத்தரவுசெய்கிறாயா? அல்லது இன்று நான் வந்ததுபோல மற்ற எங்கள் கூட்டத்தார் எல்லாரும் இங்குவர விரும்புகிறாயா? சொல் என்று கேளும். இதற்கு அவன் என்ன சொல்லுகிறான் என்பதை அறிந்துகொண்டுவாரும் என்று சொல்லி அனுப்பினார்கள்.

ஷைகுஹஸன் ஆண்டவரவர்கள் இட்ட கட்டளைப்படி அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்து அதை ஆற்றோரத்திற் போட்டார். அது உடனே ஒரு படகாயிற்று. அந்த அற்புதப்படகில் அவர் ஏறி உட்கார்ந்தார். அது அதிதீவிரமாய் அக்கரைபிடித்து ஓடிப்போய், கரையில் சேர்ந்தது.

படகு கரைசேருமுன் அங்கே காவலாயிருந்த வீரர்களின் கண்களுக்குக் குதிரைச்சேனையும், யானைப்படையும், காலாட்படையும் திரண்டு, நதியைக்கடந்து வருவது போலத் தோற்றிற்று. அதனால் அவர்கள் வெருண்டோடி, அரசனிடம் போய்த் தாங்கள் கண்டபடி சொன்னார்கள். அதை அரசன்கேட்டுக் கெடிகலங்கி, வாசலைப்பார்த்து மனம்பதறிக்கொண் டிருந்தான்.

படகு கரைசேர்ந்தபின் ஷைகுஹஸன் கீழிறங்கி, நேரே அரசன் அரமனைக்குப் போனார். அப்போது அரசன் இவர் வருவதைக்கண்டு எதிர்வந்து: பெரியவரே, நீர் இங்கே வந்தகாரணம் என்ன என்று பதறிக்கொண்டு கேட்டான். கேட்டபோது ஷைகுஹஸன் அவனைப்பார்த்து, ஹலறத்து ஆண்டவரவர்கள் சொல்லியனுப்பின பிரகாரம் சொல்லி.

இதற்கு என்ன சொல்லுகிறாய்? என்று அஞ்சா நெஞ்சையுடையவராய்க் கேட்டார்.

அப்போது அரசன், இவர்கள் தபோதனர்களாயிருப்பார்கள். இவர்களுக்குத் தலைவரானவரும் மகாதவசியாயிருப்பார். அதனால்தான் ஆச்சரியகரமாக ஆற்றைக்கடந்து வந்து நமக்கெதிர் நின்று, இவ்விதம் நிர்ப்பயமாகப் பேசுகிறார். இனி இவர்கள் இங்குவருவதைத் தடுப்போமானால், நமக்கு ஏதும் பாரதூரமான வில்லங்கம் வரும். ஆகையால், நாம் இவர்கள் என்னப்படி உடன்படுவதே காரியம் என்று சிந்தனை பண்ணிக்கொண்டு, சைதுலஸருக்கு மறுமொழி சொல்லாமல், பக்கத்தில் நிற்கும் சேவகர்களைப் பார்த்து: நீங்கள் இவரை அழைத்துக்கொண்டு ஆற்றங் கரைக்குப் போய், படகுகாரர்களைக் கூப்பிட்டு எல்லாப் படகுகளையும் அவிழ்த்துவிட்டு அக்கரையிற் போய், அங்கிருக்கும் இவர் கூட்டத்தார் எல்லாரையும், இவர்கள் தலைவரையும் ஏற்றி இக்கரையிற் கொண்டுவந்து, நமக்குச் சொந்தமான பூங்காவனத்தில் விடுதியிட்டிருக்கும்படி உடனே செய்யுங்கள் என்று கட்டளைபண்ணினன்.

அரசன் கட்டளைபிறந்தவுடன் சேவகர்கள் சைதுலஸரை அழைத்துக்கொண்டு ஆற்றங் கரைக்குப் போய் எல்லாப் படகுகளையும் விட்டு அக்கரைசேர்ந்து, அங்கிருக்கும் ஹலறத்து ஆண்டவரவர்களையும், அவர்கள் பகீர்மார் அனைவரையும் அப்படகுகளில் ஏற்றி, இக்கரையிற் கொணர்ந்து இறக்கி, அரசனுடைய பூங்காவனத்திற் சாகை பண்ணுவித்து இருக்கச்செய்தார்கள். அப்படியே ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தப் பூஞ்சோலையில் நானூற்று நான்கு சிஷர்களுடன் தங்கியிருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவடிபட்ட தன்மையால், அந்தச்சோலையில் முன் உலர்ந்துநின்ற பூமரங்களும், கனிதரும் விருக்ஷங்களும், செடிகொடிகளும் தழைத்துச் செழித்தன. பூக்காதவை பூக்கவும், காய்க்காதவை காய்க்கவும், பழுக்காதவை பழுக்கவும் தொடங்கின. பூக்கள்தோறும் மொய்த்துத் தேனுண்ணும் வண்டுகள் காதுக்கினிய கீதநாதஞ்செய்ய, மரக்கிளைகள் தோறும் இருந்து குயில்கள்கூவ, கண்ணுக்கினிய மயில்கள் சிறகு விரித்துநின்று நடனமாடின. பலவர்ணப் பூக்களும் இதழ் விரித்துத் தேனைச்சிந்தி, எங்கும் பரிமளிக்க நறுமணம் வீசின. அப்போது அந்தப்பூஞ்சோலை முன்னிலும் பல மடங்கு விசேஷித்தது. இதை அவ்வூர் அரசன் கேட்டுச் சந்தோஷ முற்றிருந்தான்.



நதிகடந்தது முற்றிற்று.

---

சஎ-ம் அத்தியாயம்.

## விக்கிரகம் தண்ணீர் குடித்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களால் விக்கிரகம் தண்ணீர்குடித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் முன்சொன்ன பூஞ்சோலையில் விடுதியிட்டபோது, பகீர்மார்களில் ஒவ்வொருவரும் அங்கங்கே ஒவ்வொரு மரநிழலில் இருப்பிடம் பண்ணிக்கொண் டிருந்தார்கள். ஆண்டவரவர்களுக்கு அந்தத் தோட்டத்து மத்தியிலுள்ள குளக்கரையில் ஓங்கிவளர்ந்திருக்கும் ஆலமரத்தடியில் ஸ்தாபித்திருந்த கருங்கல்லாற் செய்த பிள்ளையார் என்னும் விக்கிரகத்தின்முன் இருப்பிடம் தயார்பண்ணி யிருந்தது. ஆண்டவரவர்கள் அங்கிட்ட விரிப்பில் உட்கார்ந்து, அந்த விக்கிரகத்திற் சாய்ந்து கொண் டிருந்தார்கள்.

ஒருநாள் அவ்வூர் அரசனும், அவன் குருவாகிய ஜாபா என்னும் யோகியும், சில பண்டிதர்களும், மந்திரி பிரதானிகளுமாகப் புறப்பட்டு, ஹலறத்து ஆண்டவரவர்களின் தரிசனைக்காகத் தோட்டத்திற்கு வந்தார்கள். தங்களைக் காணவந்த அரசன் முதலானவர்களை ஆண்டவரவர்கள் அழைத்து, ஒருபுறம் இருக்கச் செய்தார்கள். அவர்கள் வரும்போதே, ஆண்டவரவர்கள் விநாயகர்மீது பாய்ந்து கொண்டிருப்பது அவர்களுக்கு மனஸ்தாபத்தை யுண்டாக்கிற்று. சிலருக்குச் சினமும் மூண்டது.

எவ்வித மனஸ்தாபமும் கோபமும் உண்டானாலும் ஆவதென்ன! மனதில் வைத்துக்கொண்டு வெளிக்கிடாமல் முறுமுறுக்கலாமே யன்றி, வேறொன்றும் செய்யத்தான் திராணி யில்லையே. ஆகலால், அவர்கள் எல்லாரும் அப்படியே முறுமுறுத்தார்கள். அவர்களில் அரசனுடைய குருவாகிய ஜாபாயோகிக்குத்தான் அதிகக் கோபமும், முறுமுறுப்பும் உண்டாயிருந்தன. அவனுக்கு ஆண்டவரவர்களை அதில் சாய்ந்திராமல் தடுத்து விலக்கவேண்டு மென்கிற எண்ணம் அதிகரித்தது. அதனால் அவன் அப்படி விலக்கும்படி அரசனைத் தூண்டினான்.

குருவின் சொல்லுக்கு இணங்கின அரசன் ஹலறத்து ஆண்டவரவர்களைப்பணிந்து: எஜமானவர்களே, அதோ இருக்கும் தெய்வம் எங்களை ரக்ஷித்துக் காப்பது என்றும், அதையே நாங்கள் ஆராதனை செய்து வணங்குகிறோம் என்றும் தாங்கள் அறிவீர்களே. அப்படியிருக்க, தாங்கள் எங்கள் தெய்வத்தின்மீது சாய்ந்திருப்பது எங்களுக்குப் பிரியவீனமா யிருக்குமல்லவா? இத்தோட்டத்தில் எவ்வளவோ விஸ்தீரணமான இடம் இருக்கின்றது. தாங்கள் தயவுசெய்து கொஞ்சம் விலகியிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம் என்று சொன்னான். இப்படிச்சொல்லவே ஆண்டவரவர்கள் அரசன் சொன்ன சொல்லைக்கேட்டுப்



புன்னகைசெய்து, பின் அவனைப்பார்த்து "சிற்பனுற் செய்த இந்தச் சிலா ரூபத்தினால், உங்களுக்கு என்ன பிரயோசனம்?" என்று கேட்டார்கள். இக்கேள்விக்கு அரசன் "இது எங்கள் தெய்வம்; நாங்கள் கேட்கும் எந்தக் கருமத்திற்கும் அநுக்கிரகம் செய்யும்; சர்வ வல்லமையும் இதற்கு உண்டு" என்று மறுமொழி சொன்னான். அப்போது ஆண்டவரவர்கள் அரசனைப்பார்த்து "அப்படியா! சர்வ வல்லமையும் இதற்கு உண்டா! இப்போது இந்தக்குளத்து நீரையெல்லாம் குடிக்கவேண்டுமென்று நீங்கள் வேண்டிக்கொண்டால், இது குடிக்குமா?" என்று கேட்டார்கள், அரசன் "ஆம்; குடிக்குந்தான்" என்று பிரதிசொன்னான். உடனே ஆண்டவரவர்கள் எங்கே, குடிக்கும்படி வேண்டிக்கொள்ளுங்கள்; குடிப்பதைப் பார்க்கட்டும் என்று சொல்லிவிட்டு, தங்கள் விரிப்பை யெடுத்துப் பக்கத்தில் விலகப்போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அதைவிட்டு விலகி உட்கார்ந்தவுடன் மதிகேடுள்ள அரசன் முதலான அனைவரும் எழுந்து, அதிக பக்தியுடன் அந்தக் கருங்கற் பிள்ளையாருக்கு எதிர் நின்று தீபதூபங்கள் இட்டு, பூவால் அர்ச்சித்து, ஹரஹர வென்று கைகுவித்துச் சாஷ்டாங்கமாய் விழுந்து கும்பிட்டு: தெய்வமே, இந்தக் குளத்து நீரையெல்லாம் குடித்தருளுங்கள் என்று இரந்து வேண்டிக்கொண்டார்கள். ஓ! எங்கள் தெய்வமே! தெய்வமே!! என்று பலதரம் அழைத்தார்கள்; தண்ணீரைக் குடிக்கவேண்டும் என்று வாயலுக்கக் கெஞ்சினார்கள்; குவித்த கை குவித்தாற்போல விழுந்து விழுந்து எழுந்தார்கள்; ஒன்றிலும் காரியம் பலிக்கவில்லை. மனிதன் செய்துவைத்த சிலைக்கு அவ்விதத் தத்துவ மூட்ட அவர்களுக்குத் திராணியேது! அல்லது, அந்தச் சிலைக்குத்தான் தத்துவமுண்டா! இருந்த விக்கிரகம் இருந்த

படியே யிருந்தது. உடல்சோரக் கும்பிட்டு, வாய்சோரக் கெஞ்சி, உள்ளமுஞ் சோர்ந்துபோனார்களே யன்றி, அவர்கள் எண்ணம் வாய்க்கவில்லை. தங்கள் ஜெபம் சாயாமையால் அந்தக் காபிர்கள் நாணமடைந்து, தலைகுனிந்து வாய்மூடி நின்றுவிட்டார்கள்.

பின் ஹலரத்து ஆண்டவரவர்கள் அரசனைப்பார்த்து: உங்கள் தெய்வம் உங்களுக்கு முகங்கொடுக்கவில்லை பார்த்தாயா? நல்லது இருக்கட்டும். அந்தத்தண்ணீரைக் குடிக்கும்படி நான் அதை ஏவட்டுமா? என்று கேட்டார்கள். இக்கேள்விக்கு அரசன் ஆண்டவரவர்களை நோக்கி: அநுதினமும் ஆராதித்து வணங்கும் எங்கள் சொல்லுக்கு இணங்கி நில்லாத இந்தத்தெய்வம், வெறுத்து இகழும் உங்கள் சொல்லுக்கு இணங்கி நடக்குமானால், அது ஆச்சரியந்தான். குடிக்கச்சொல்லுங்கள்; பார்ப்போம் என்று சொன்னான்.

அரசன் இச்சொல் சொன்னபோது ஆண்டவரவர்கள் அந்த விநாயக விக்கிரகத்தைப் பார்த்து "ஏ, கல்லுருவே, நீ பெயர்ந்து நடந்துபோய், அக்குளத்து நீரையெல்லாம் குடி" என்று திருவாய்மலர்ந்து கட்டளை யிட்டார்கள். ஆண்டவரவர்களின் அருமைத் திருவாய்மொழி பிறந்தமாத்திரத்தில் அந்தச் சிலாரூபம் தவளை பாய்வதுபோலத் தத்தித் தத்திப்போய் அந்தக் குளத்தில் விழுந்து, தன் துதிக்கைகொண்டு நீர் முழுவதையும் உறிஞ்சிக் குடித்தது. ஒரு சிறங்கைநீரும் மீந்திராதபடி குடித்துவிட்டபோது, குளம் வெறிதாயிற்று. இந்த அற்புதத்தை எல்லாரும் பார்த்து நின்றார்கள்.

என்றைக்கும் கண்டுகேட் டறியாத இந்த அதிசயத்தைக் கண்ணாரக் கண்டவுடன் அரசன்முதலான காபிர்களனைவரும் தட்டுக்கெட்டுத்தடுமாறினார்கள். அவர்கள் உடல் சோர்ந்து, உறுப்புகள் விலவிலத்தன. இது செய்த மகான்



இனி என்னதான் செய்ய மாட்டார்களென்று அஞ்சினார்கள். தாங்கள் பூசிக்கும் தெய்வம் தங்களுக்கு மாறுசெய்து, பிறருடைய சொல்லுக்கு வழிபட்டதே என்று வெட்கித் தலைகுனிந்தார்கள். அப்போது அவர்களுக்கு உண்டாயிருந்த மனவருத்தத்திற்கும், வெட்கத்திற்கும் அளவில்லை. அதனால், அவர்கள் விரோதங் கொண்டு எதிர்த்து நின்று எதையும் செய்ய நினைப்பார்கள்; அச்சம் ஒன்று குறுக்கே கிடந்து மறித்துக்கொண்டது.

பின்பு, முகங்குறுகித் தலைமடங்கிநின்ற அரசன் ஹலரத்து ஆண்டவரவர்களை நோக்கி: எஜமானவர்களே, பல்லுருக்கும் பிரயோசனமாயிருந்த இந்தக்குளத்து நீர்முழுவதும் குடிக்கப்பட்டபடியால், இனி ஜனங்களுக்குக் கஷ்டமுண்டாகும். ஆதலால், தாங்கள் அந்த நீர்முழுவதையும் மீள உமிழும்படி எங்கள் தெய்வத்திற்குக் கட்டளை செய்யவேண்டும் என்று மன்றாடினான். அப்போது ஹலரத்து ஆண்டவரவர்கள் அரசன் சொல்லுக்கு இசைந்து அந்த விக்கிரகத்தைப் பார்த்து "ஏ, சிலையே, நீ குடித்த நீரையெல்லாம் மீளக் கக்குவாயாக" என்று ஏவினார்கள். உடனே அது குளத்து நீர் அத்தனையையும் குளநிரம்ப உமிழ்ந்து விட்டு, மறுபடியும் அங்கிருந்து துள்ளித்துள்ளித் தான் இருந்த மரத்தடியில் வந்து முன்போல இருந்து விட்டது.

விக்கிரகம் தண்ணீர் குடித்தது முற்றிற்று.

௪௮-ம் அத்தியாயம்.

# ஜாபாயோகி மாண்டது.

---

[இவ்வத்தியாயம் அரசன் குருவாகிய ஜாபா என்னும் யோகி ஆகாயத்திற் பறந்ததும், குளத்தில் சோறுசமைக்கப்போய் மாண்டது மான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் கன்ஜபக்ஷ் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் விக்கிரகத்தை நீரருந்தச் செய்து, பின் அந்தநீரை உமிழச்செய்த ஆச்சரியமான கருமத்தைப் பார்த்த அரசன்முதலான காபிர்கள் அனைவரும் அஞ்சி நடுநடுங்கி நின்றார்கள். நின்றாலும், அரசனுடைய ஆசானாகிய ஜாபா என்னும் யோகிக்கு மாத்திரம் மனக்கொதிப்பு அதிகமாயிருந்தது. அவன் அஷ்டாங்க யோகத்திலும் பழகி மகாயோகியாகவும், அநந்த சித்துகளைச் செய்ய வல்ல மகாசித்தனாகவும் இருந்தபடியால், எவ்விதவழியிலாவது ஆண்டவரவர்களை வென்று மிகைக்க வேண்டுமென்கிற எண்ணம் அப்போது அவன் உள்ளத்திற்பிறந்தது. விக்கிரகத்தை நீருண்ணச்செய்து விட்டன அற்புதம், தான்செய்கிற சித்துகளைப்போன்ற ஒன்று தானென்று மதித்தானேயன்றி, கடவுட்கு உவப்பான மகான்களுக்கு உண்டாகும் தத்துவம் என்று அவன் புத்தியிற்படவில்லை.

ஆதலால், மேற்படி யோகியாகிய ஜாபா என்பவன் சற்றுநேரம் வரையும் வாய்மூடி முறுமுறுத்திருந்து, பின் எழுந்து நின்று ஆண்டவரவர்களை நோக்கி: பெரியவரே. நீர் எங்கள் தெய்வத்தை நீருண்ணச்செய்து விட்டீர். நானோ, மனிதர் பிரமிக்கும் வண்ணம் புட்போல விசைத்தெழுந்து ஆகாயத்திற்பறக்க வல்லவன். உமக்கு அவ்விதத்



தத்துவம் உண்டாயிருந்தால், நீரும் என்னோடு உயர்ந்து பறப்பீரா? என்று கர்வமாகக் கேட்டான். அப்போது ஆண்டவரவர்கள் அவனைப் பார்த்து: நீதான் முந்தியெழுந்து பற; பார்ப்போம் என்றார்கள். இப்படி ஆண்டவரவர்கள் சொல்லி வாய்மூடுமுன் அவன் நின்றது நின்றாற்போல மேலே உயர்ந்து, அதிகவிசையாய்ப் பறவை போலப் பறந்து போனான்.

ஜாபாயோகி ஆகாயத்தில் உயர்ந்து பறந்தபோது, ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்களின் சிறந்த பாத தாமரைகளிற் பூண்டு நடக்கும் மிதியடிகள் இரண்டையும் பார்த்து: நீங்கள்போய் அவனைக் கீழேகொண்டு வாருங்கள் என்று ஏவினார்கள். ஆண்டவரவர்களின் ஏவல் உண்டானவுடன் அந்த மிதியடிகள் இரண்டும் அதிதீவிரமாய் இரண்டு பக்ஷிகள் பறந்தாற்போல ஆகாயத்திற் பறந்துபோய், அந்த ஜாபாயோகியின் தலையருகில் நின்றுகொண்டு, வலது புற மொன்றும் இடது புறமொன்று மாகப் புடைத்து, அவனைப் பின்னும் மேலே பறக்கவிடாமல் தரையில் இறக்கிக்கொண்டே வந்தன. நிமிஷத்திற்கு ஒருதரமாக அவன் தலையில் வலமும் இடமுமாகக் குட்டிக்கொணர்ந்து தரைக்குமேல் ஒரு சவளவுயரத்தில் நிறுத்தி கொண்டு, ஓயாமல் புடைத்துநின்றன. அப்போது அவனுடைய வீர தீரங்கள் முழுவதுங்குன்றி, பட்டமரம் போலானான். அவன் படும்பாடு பார்ப்பவருக்கு மிகப் பரிதாபமாயிருந்தது.

தன்குரு இவ்வாறாக ஆகாயத்தில் நின்று மிதியடிகளால் குட்டுண்டு படும் பரிதாபத்தை அரசன் கண்டு மனம் வருந்தி, ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு முன் சாஷ்டாங்கமாய் விழுந்து: எஜமானவர்களே, என் ஆசானாகிய அவர் தங்கள் மகிமையை அறியாமல் வாதாடி விட்டார். அதைத் தாங்கள் மன்னித்து, இப்போது அவர்படும் துயர்

மிக்கப்பரிதாபமாயிருப்பதால், தாங்கள் அவரை ரக்ஷிக்க வேண்டும் என்று அழாதது குறையாய்க் கெஞ்சிமன்றாடினான். தயாளசிந்தையுள்ள ஆண்டவரவர்கள் அரசன் கெஞ்சுதலுக்கு இரங்கி, அவனைக் கீழிறங்கும்படி செய்தார்கள். உடனே மகத்துவமுள்ள மிதியடிகளிரண்டும் அவனைத் தரையில் கொணர்ந்து விட்டன.

மிதியடிகளால் அடிபட்ட அவனுடலில் உள்ள வருத்தம் இம்மட்டென்று சொல்லுதற்கு யாராலாகும்! பட்ட அவனுக்கும், பார்த்த அவர்களுக்குந்தான் தெரியும். கையுமெய்யுமாய் நிகழ்ந்த கருமத்தை அவன் கொஞ்சமும் எண்ணிப்பார்க்கவில்லை. "பட்டாலறிவன் சண்டாளன்" என்பார்கள் உலகத்தார்கள். அவன் பட்டு மறியாத மௌட்டிகன் ஆகையால். அவனுக்கு உவமையாவது என்ன? "கண்கூடாப்பட்டது கேடெனினுங் கீழ்மக்கட் குண்டோவுணர்ச்சிமற் றில்லாகும்—" என்றாற்போல, ஹலறத்து ஆண்டவரவர்களால் முன்னமே அவன் எச்சரிக்கப்பட்டுக் கண்டறிந்திருந்தும், உணர்ச்சி பிறக்கவில்லை. "பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால், பேரா விடும்பை தரும்" என்னும் முதுமொழியை அவன் சிறிதும் கருதாதவனாய், மறுத்தும் ஆண்டவரவர்களை நோக்கி: நல்லது, பெரியவரே, நான் ஒன்று செய்தால், நீர் ஒன்று செய்கிறீர். இருக்கட்டும். இப்போது நான் இந்தக்குளத்திற்குள் அரிசி; விறகு, நெருப்பு, பாத்திரம் ஒன்றுமில்லாமல் வெறுங்கையுடன் போய், சோறு சமைத்துக்கொண்டு வருகிறேன். நீர் அப்படிச்செய்ய வல்லவரா? என்றான். ஆண்டவரவர்கள் அவனைப்பார்த்து: உன்னாலேதான் அது ஆகும்; நீயே செய்; பார்ப்போம் என்று பிரதிசொன்னார்கள்.

மானங்கெட்ட ஜாபாயோகி தன் விதிப்பலனால் மமதைகொண்டு, உடனே அந்தக்குளத்திற் பாய்ந்து, சோறு



சமைப்பதற்காக முக்குளித்தான். அவன் நீருக்குள் முக்குளித்தவுடன் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் ஊழியஞ்செய்யக் காத்துநிற்கும் ஜின்களில் இரண்டையழைத்து: நீங்கள் இருவரும் அவனுக்குப் பின்னேபோய், அவனைச் சேற்றுட்புதைய அமுக்கிக் கொல்லுங்கள் என்று ஏவினார்கள். ஆண்டவரவர்களின் ஏவல் பிறந்தவுடனே அந்த ஜின்களிரண்டும் விரைந்து எழுந்து குளத்திற் குதித்து முக்குளித்து, ஜாபாயோகியின் பிடரியைப்பிடித்துக் கொண்டு போய்ச் சேற்றுள் திணித்து அமுக்கின.

சேற்றுள் திணிக்கப்பட்டபோது ஜாபாயோகிபட்டபாடு யார்படுவர்! மூச்சுமுட்டித் திக்குமுக்காடி, பட்டபடத்துத் துடித்து, கொஞ்சநேரத்தில் மாண்டான். அவன் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தமாத்திரத்தில் "எரியாற் சுடப்படினுமுய்வுண்டாமுய்யார், பெரியார்ப் பிழைத்தொழுகுவார்" என்பதை உலகத்தில் மெய்ப்பிக்கும்படி பிரேதமாய் மிதந்தான். சோறாக்கிக்கொண்டு வருவேனென்று கர்வம் பேசிப்போன குரு பிணமாய் மிதப்பதை அரசன் முதலான அனைவருங்கண்டு அஞ்சி நின்றார்கள்.

ஜாபாயோகி மாண்டது முற்றிற்று.

௪௧-ம் அத்தியாயம்.

## அரசன் இறந்துயிர்த்தது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு நஞ்சூட்டின அரசன் விஷமேறியிறந்து, பின் உயிர்பெற்ற வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்சுல்தான் காதிறொலி கஞ்சுலவாய் பாத்துஷா ஆண்டவரவர்கள் குளத்திற்குள் சோறுசமைக்கப்போன ஜாபாயோகியை ஜின்களைக்கொண்டு சாவடிக்க, அவன் பிணமாய் மிதந்தபோது அரசனைப்பார்த்து: அரசனே, உன்குரு பிணமானான் பார்த்தாயா? என்று குறுநகைதோன்றச் சொன்னார்கள். இச்சொல்லை மானபங்கமடைந்த அரசன்கேட்டு உள்ளம் புழுங்கினான். புழுங்கி ஆவதென்ன? தன் இராஜபலம் முதலான எதையும் செய்து ஆண்டவரவர்களை மடக்கத் திராணியில்லாமையால், மறுமொழி சொல்லாமல் சற்றுநேரம் வாய்மூடி யிருந்தான். அப்போது அவனுக்கு விபரீதமான ஒரு எண்ணம் பிறந்தது. அது :—

இந்தப் பெரியவர் நாமும் நம்ஜாதியாரும் மானபங்கமடையும்படி, நமது குருபரனை வீணாகக்கொன்று மிதக்கப் பண்ணிவிட்டார். இவ்வளவில் நாம் சும்மா விடுவோமானால், இனி யுகம் முடிகிறபரியந்தம் நமக்கு இழிவுதீராது. இவர் செய்ததற்குப் பிரதியாக எந்தவகையிலாவது இவரை நாம்கொன்றுவிட்டால், இப்போது நம்மீது சுமத்தப்பட்ட இழிவுதீர்வதோடு, பழிக்குப்பழி வாங்கினோம் என்கிற கீர்த்திப்பிரதாபமும் உண்டாகும். ஆகையால், எவ்விதத்திலும் இவரை நாம் வஞ்சித்துக் கொல்வதே காரியம். இப்படிச் செய்தால், இவர் ஜாதியார் சர்வபங்கமடைந்து, இனி என்றைக்கும் இழிவுக்கு ஆளாவார்கள் என்பதே.

இந்தவிபரீதவெண்ணம் அரசனுக்கு உண்டானபோது, இதை யவன் வெளிக்குக் காட்டவில்லை. ஆண்டவரவர்களை வஞ்சனையாக அரமனைக்கு அழைத்துப்போய், நஞ்சூட்டிக் கொல்லவேண்டு மென்று மனதில் தீர்மானித்துக் கொண்டான். கபடசித்தமாக இவ்விதம் தீர்மானித்துக் கொண்ட அரசன், ஆண்டவரவர்களை நோக்கி முகமலர்ந்தவனாய்ச் சில சொற்களைச் சொல்லுகின்றான் :—

எஜமானவர்களே, தங்களின் மகத்துவமான அற்புதாதிகளைக் கண்கூடாக்கண்டும் எங்கள் குரு கொஞ்சமும் மதிக்கவில்லை. அந்த மதிகேட்டினாலேதான் அவருக்கு இக்கதி நேரிட்டது. தங்களின் மகிமைக்குமுன் பஞ்சாய்ப் பறந்துபோன எங்கள்குரு, இனி இருந்தும் பலனில்லை; அவர் இறந்துபோனாரே என்கிற துக்கமும் எனக்கில்லை. அவரிலும் அதிகமேலான பதவியையுடைய தாங்களே எனக்கு இன்றுமுதல் பரமகுரு. தங்களைப்பார்க்கிலும் ஒருவரைக் குருவென்று கொண்டாட நான் இனி உடன்படேன். ஆனதால், தாங்கள் திருவடிபெயர்த்துத் தங்கள் சீஷர்களுடன் தமியேனுடைய சிற்றில்வந்து ஒருவேளை பசியாறி, தமியேனைத் தங்கள் அடிமைகளில் ஒரு சிற்றடிமையாக்கி ரக்ஷிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தேவரீர் அடியேன்மீது சித்தமிரங்கவேண்டும் என்று கபடமாக அரசன் சொன்னபோது, இந்தச்சொல் இப்படிப் பட்டதென்று ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு விளங்காமற் போகவில்லை. அவன் என்னசெய்தாலும் செய்யட்டும்; அவனுக்கும் உணர்ச்சியுண்டாக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு, அவன் வேண்டுதலுக்கு உடன்பட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் தன் விருப்பத்திற்கு உடன்பட்டபோது அரசன் மகிழ்ந்து, காரியம்பலித்தது, என்றே நினைத்துக்கொண்டு புறப்பட்டான். ஆண்டவரவர்க

ளும் பகீர்கள் புடைசூழத் தோட்டத்தைவிட்டு எழுந்தார்கள். அரசன் ஆண்டவரவர்களை அழைத்துக்கொண்டு அரமனைக்குப்போய், அங்கே, அலங்காரமான ஒரு கூடத்தில் விசித்திரமான விரிப்புகள் விரித்து, சிறந்ததிண்டுகள் போட்டு, அதிகமாக உபசரித்து இருக்கச்செய்தான். ஆண்டவரவர்கள் உல்லாசமாக பகீர்மார்களுடன் அரமனையில் வீற்றிருந்தார்கள்.

பின்பு, ஆண்டவரவர்களின் விருந்துக்காக ஆகாரங்கள் தயாராயின. அரசன் தன் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகச் சமையற்காரர்களை அழைத்து, ஆண்டவரவர்களுக்கு வைக்கும் பதார்த்தங்களில் நஞ்சைக்கலந்து வைக்கும்படி கட்டளை பண்ணினான். அவன் கட்டளைப்படி அவர்கள் ஆண்டவரவர்கள் புசிக்கும் ஆகாரத்தில் நஞ்சைக் கலந்து வைத்து விட்டார்கள்.

ஆகாரங்க ளனைத்தும் தயாராய் விட்டனவென்று அறிவிக்கப்பட்டபோது அரசன் அகம்பூரித்து எழுந்து, அவற்றைக் கொணர்ந்து அனைவருக்கும் பரிமாறும்படி உத்தரவு செய்தான். உடனே போசனவிரிப்புகள் விரித்து, வகைவகையான அறுசுவைப் பதார்த்தங்களையுங் கொண்டுவந்து பரப்பினார்கள். நஞ்சுகலந்த பதார்த்தம் ஆண்டவரவர்களுக்குமுன் கொணர்ந்து வைக்கப்பட்டது.

எல்லாம் அறியும் வல்ல பெருமானாகிய ஹலறத்து ஆண்டவரவர்களுக்குத் தங்கள் உணவில் நஞ்சுகலந்திருப்பது தெரியாதிருக்கவில்லையே! தெரிந்திருந்தும் தெரியாதபாவனையாகத் தங்கள் வலது கைகொண்டு பிஸ்மில்லாஹி என்று ஒருகையள்ளிப் புசித்தார்கள். அவ்வளவில், அதிற் கலந்திருந்த நஞ்சில் மூன்றில் ஒருபங்கு எதிரில் நிற்கும் அவ் வரசனுடைய உள்ளங்காலிலிருந்து இடுப்புவரையும் ஏறிற்று. பின் இரண்டாந்தரம் ஒருகை யள்ளிப் புசித்



தார்கள்; இன்னொருபங்கு நஞ்சு இடுப்பிலிருந்து கழுத்துவரையும் ஏறிற்று, பிறகு மூன்றாந்தரம் ஒருகை யள்ளிப் புசித்தார்கள்; மற்றொருபங்கு நஞ்சு கழுத்திலிருந்து உச்சிவரையும் ஏறி மண்டைகொண்டது. இவ்விதம் விஷம் மண்டைகொண்ட அரசன் அப்படியே விறைத்து நின்றான். இவ்வாறு மூன்றுகை புசித்தபின் ஹலறத்து ஆண்டவரவர்கள் கை கழுவி விட்டார்கள் பகீர்மார்களும் புசித்து முடிந்தது. பிறகு ஆண்டவரவர்கள் தாங்கள் சாகைக்கு வருவதற்காக பிஸ்மில்லாஹி என்று எழுந்தார்கள். எழுந்த மாத்திரத்தில் முகதாவில் நஞ்சேறி விறைத்து நின்ற அரசன், திடீரென்று நெடுமரஞ் சாய்ந்தார்போலத் தரையில் சாய்ந்து விழுந்து மாண்டான்.

அரசன் திடுகூறுய் விழுந்து மாண்டவுடன் அங்கேயொரு கூக்குரல் கிளம்பிற்று. அவன் மனைவியும், குடும்பத்தார்களும் திரண்டு கூடினார்கள். அரமனை முழுதும் அழுகுரலும் அமளியு முண்டாயின. இவனுக்குண்டான சடுதிமரணத்திற்குக் காரண மென்ன வென்று கலங்கினார்கள். ஆண்டவரவர்கள் புசிக்கும்படி வைத்த பதார்த்தத்தில் அரசன் நஞ்சு கலந்தான் என்னும் இரகசியம் ஒருவரொருவராய் வெளிக்குவந்தது. பின் அரசன் செய்தது தவறுதானென்று எல்லாரும் அறிந்து: ஆண்டவரவர்களைக் கெஞ்சத் தொடங்கினார்கள்.

அரசன் மனைவி மனம்பதறித் தடுமாறி "ஓ!" என்று அலறிக்கொண்டு, ஆண்டவரவர்களின் பாதாரவிந்தங்களில் வந்து அடித்து விழுந்து: எஜமானவர்களே, என் நாயகர் அரசராயிருந்தும் சிறியவர்: தாங்கள் பெரியவர். அவர் செய்த பிழையைப் பொறுப்பது தங்களுக்கே கடன். "திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந், தறனல்ல செய்யாமை நன்று என்பது" தாங்கள் அறியாத தல்ல.

"அல்லலரு ளாள்வார்க் கில்லை வளிவழங்கு, மல்லன்மா ஞாலங் கரி" என்பதற்கு ஏற்கத் தாங்கள் அப்பிழையைப் பொறுத்து, தமியாளுக்குத்தாலிப்பிச்சைதாருங்கள் என்று சொல்லிப்புலம்பி அழுதாள்.

கணவனை மாளக்கொடுத்த அவள் படும் பரிதாபத்தினால் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு மனம் இரங்கிற்று. உடனே இறந்து கிடக்கும் அரசனை ஆண்டவரவர்கள் கடைக்கண்ணால் பார்த்து "உயிருள்ளதை இறந்ததாக்கவும், இறந்ததை உயிருள்ள தாக்கவும் வல்லமையுடைய கர்த்தன் உத்தரவு கொண்டு எழுந்திரு" என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள். இச் சொல்லைச் சொன்னவுடன் மாண்டு கிடந்த அரசன் விழித்தெழுந்தாற்போல எழுந்து, கை கட்டி நின்றான்.

"செய்த தீவினை செய்தவர்க் கெய்திடும்" என்று உலகம் சொல்லுவதை மெய்ப்பிக்கும்படி ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு நஞ்சிட்டுத் தானே செத்த அரசன் எழுந்து கைகட்டி, தான் செய்த குற்றத்தை நினைத்துத் தலைமடங்கி நின்றபோது, ஆண்டவரவர்கள் அவனுக்கு நன்மதிகளைப் போதித்துவிட்டு, அரமனையிலிருந்து புறப்பட்டு முன் போலத் தோட்டத்திற்போய் இரண்டொரு நாள் இருந்து, பின் அவ்வூரைவிட்டுப் பிரயாணப் பட்டார்கள்.

அரசன் இறந்துயிர்த்தது முற்றிற்று

---

## ௫௦-ம் அத்தியாயம்.

## தச்சன் பிணி தீர்த்தது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தச்சனுடைய குன்மம் முதலான பிணிகளைத் தீர்த்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் முன் சொன்ன நகரத்தைவிடுத்துப் புறப்பட்டு, பக்கத்திலுள்ள ஒரு சிற்றூரிற்போய்த் தங்கினார்கள்.

அவ்வூரில் ஒரு தச்சன் இருந்தான். அவனுக்குக் குன்ம ரோகமும், சரீரமெங்கும் சொறியும் பற்றி, மிக வருத்தப் பட்டுக்கொண் டிருந்தான். தன் நோய் தீரும் பொருட்டுப் பண்ணுத பக்குவம் ஒன்றில்லை. எவ்விதப் பரிகாரத்திலும் அவன் பிணி தீராமல், தாங்கரிய யாதனையால் அகப்பட்டுச் சகிக்கக் கூடாதவனா யிருந்தான். இவ்வா றிருக்கும்போது, ஆண்டவரவர்கள் அங்கு வந்திருக்கும் சமாசாரமும், அவர்களின் மகிமையும் இன்னபடியென்று அவன் காதில் விழுந்தன.

ஹலறத்து ஆண்டவரவர்களின் கீர்த்திப் பிரதாபங்களைக் கேட்ட மாத்திரத்தில், இந்த மகாத்துமாவினால் நாம் படும் யாதனை தீராதாவென்று அதிக ஆவலா யெண்ணினான். அவ்வெண்ணப்படி தன்நோய் தீர்ந்துபோம் என்கிற தைரியமான நம்பிக்கை அவன் சித்தத்திற் பிறந்தது. உடனே அந்தத் தச்சன் சகிக்கக்கூடாத தன் குன்மாதி நோய்களாற் படும் வருத்தத்தைப் பாராட்டாமல் எழுந்து மெல்லமெல்லத் தளர்ந்து நடந்து, ஆண்டவரவர்கள் சாகை பண்ணியிருக்கும் தானந்தேடிவந்து, அவர்கள் சமுகத்தில்

நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து கும்பிட்டு, கிடந்தபடியே தன் துயரத்தை அழுத கண்ணுடன் சொல்லுகின்றான் :—

எஜமானவர்களே, தமியேன் தச்சர் குலத்திலுள்ளவன். தகப்பனுக்கும், தாய்க்கும் நான் ஒரே மகனாய், அவ்விருவர் ஆவியும் ஒன்றால் வந்தாற்போல அவதரித்து, சிறு பிராயத்திலேயே கல்வியிற்பழகி, தச்சுத் தொழிலிலும் கைதேர்ந்து, பின் பாலியனாயினேன். எனக்குப் பருவம் எய்திச் சில காலத்திற்குப்பின், என் பிதா மாதாக்கள் செய்த தவக்குறைவி னாலேயோ! அன்றி, மூதாட்கள் செய்த தீங்கினாலேயோ! அன்றி, நான் செய்த அதிக்கிரமத்தினாலேயோ! கடவுள் எனக்குத் தாங்கரிய நோயை விடுத்தார். ஒவ்வொரு நிமிஷத்திலும் குடல் புரண்டு நொந்து நெஞ்சிலேறி, குமட்டலும் வாந்தியுமுண்டாய், உண்ட உணவு ஜீரணிக்காமல் வயிறு முட்டி, ஏப்பமும் எரிவுங் கண்டு, அவற்றைத் தாங்கக்கூடாமல் தரையிற் கிடந்து உருள்வேன். இவ்வித நோய்மாத்திரமல்ல; வரவர மேனி இளைந்து சீழ்வடியத்தக்க சொறிபற்றி விட்டது. மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போல முந்தின குன்மத்தோடு பிந்தின குஷ்டமுங் கொண்டதால், என் கதியைச் சொல்லவும் வேண்டுமா! உள்ளதை யுரியதைச் செலவிட்டுப் பண்ணாத பக்குவமெல்லாம் பண்ணினேன்; ஒன்றிலும் சுகப்படவில்லை. செய்யாத மாந்திரீகங்களெல்லாம் செய்தேன்; ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் பரிகாரம் பண்ணும் பண்டிதரெல்லாரும் கைவிட்டார்கள். மந்திரவாதிகளும் அலுத்துப் போனார்கள். தெய்வங்களுக்கு நான் பண்ணிக் கொள்ளாத பிரார்த்தனை இனி ஒன்றுமில்லை. நான் பலதரம் அடுத் தடுத்துச் செய்த மணிமந்திரௌஷதங்களுக்குப் பின் என் நோய்கள் அதிகப்படக் காண்கின்றேனேயன்றி, இருந்த அளவிலு மிருக்கவில்லை. இனி என் தலையோடுதான் முடியுமென்று எண்ணி, எல்லாப்



பிரயத்தனங்களையும் கைவிட்டு, மரணம் என்றைக்கு வருமோ வென்று வழிபார்த்துக்கொண்டு, இடையிற்படும் வருத்தமும் பொறுக்கக் கூடாமல் இராப்பகலாய்க் கிடந்து உழன்றேன். எனக்கு ஊணும், உறக்கமும் உண்டாயெத்தனை ஆண்டுகளோ. ஆயின். இவ்விதம் நான் பாடுபடுங் காலத்தில், ஆழ்ந்த சமுத்திரத்திற் கிடந்து தத்தளிக்கும் ஒருவனுக்கு ஒரு மரக்கலம் கிட்டினாற்போல, தீராப் பிணிகளையெல்லாந் தீர்த்து ரக்ஷிக்கும் மகாத்துமாவாகிய தேவரீர் தாங்கள் இங்கே எழுந்தருளினீர்கள் என்னும் சுபசங்கதி திடீரென்று எனக்கு எட்டிற்று. எத்தனையோ அற்புதங்களைச் செய்த பெருமானார் என் பிணிகளையும் தீர்ப்பார்கள் என்னும் நம்பிக்கை அப்போதே என் உள்ளத்திற் பிறந்தது. இனி நம் பெருமானாரவர்களைப்போய்த் தரிசிப்பது ஒன்றே நமக்குக்குறை; எப்போது தரிசிப்போமோ அப்போதே நம் பிணிகள் தீருமென்று ஆவல்கொண்டு, தமியேன் தங்கள் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தேன். தேவரீர் சித்தமிரங்கி, கருணைக் கண்ணால் என்னைப்பார்த்து, என் பிணிகளைத் தீர்த்து, காத்து ரக்ஷிக்கவேண்டும்.

என்று இவ்வாறு சொல்லிப் புலம்பி அழுதான். அந்தத் தச்சன்படும் பரிதாபம் எந்தக் கன்மனசையும் கரையச்செய்யும் என்றால், கருணையே மனசுருக்கொண்ட ஹலறத்து ஆண்டவரவர்களின் இருதயம் இளகாமலிருக்குமா! உடனே ஆண்டவரவர்களுக்கு அவன்மீது இரக்கமுண்டாயிற்று. அப்போது அவனைப்பார்த்து "தச்ச, உன் பிணிகள் நீங்கிப் போயின; சுகப் பட்டாய்; எழுந்திரு" என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள். இச்சொல் அவன் செவியில் தேவாமிர்தத்தை வார்த்தாற்போலிருந்தது.

சரீர மெங்கும் சீழ்வழியச் சொறிபற்றி, வயிற்றிற் குன்மரோகமுங்கொண்டு, வந்து கும்பிட்டு விழுந்த

தச்சன், ஆண்டவரவர்களின் கருணைக்கண் பார்வையும் சஞ்சீவி போன்ற திருவாய் மொழியும் கிடைக்கப்பெற்ற மாத்திரத்தில், மேனி முழுதும் சொறிமாறிப் பொன் மயமாய், குன்மமும் அறவே தீர்ந்து, வேற்றுருக் கொண்டவன் போல எழுந்து நின்றான். அப்போது அவனுக்கு உண்டாயிருந்த மன ஆநந்தத்தை அளவிட்டுச் சொல்ல யார் வல்லவர்! அழுது கும்பிட்டு விழும்போதிருந்த உடல் அற்ப நேரத்திற்குள் மாறி, அழகும், திடகாத்திரமும் பெற்று, பண்டையினும் பலமடங்கு வடிவு கொண்டிருக்கக் கண்டு, அவன் ஆச்சரியக் கடலிற்படிந்தான்; ஆநந்த நடனமாடினான்; அருமைக்கண்ணீர் சொரிந்தான்; அடிக்கடி விழுந்து கும்பிட்டான்; அளவற்ற புகழாகப் புகழ்ந்தான்; அடங்காத துதியாகத் துதித்தான்.

பிறகு ஆண்டவரவர்கள் அவனைப் பார்த்து "நீ சுகமாகப்போய், உன் மனைவி மக்களோடு வாழ்ந்திரு" என்று விடை கொடுத்தார்கள். அப்போது அவன் ஆண்டவரவர்களின் திருவடிகளைத் தொட்டுக் கண்களில் வைத்துக் கொண்டு, சந்தோஷத்துடன் வீட்டுக்குத் திரும்பினான். திரும்பும்போது அவன் மனதில்: இந்த எஜமானுக்கு இதற்குப் பிரதியாக நாம் எதைச் சமர்ப்பிக்கப் போகின்றோம். இவர்களுக்கு என்னதான் குறையுண்டு! ஒன்றுமில்லையே. ஆனால், இவர்களின் திருவடிகளிற் பூணும்படி நமது தச்சுத் தொழிலின் வல்லமைதோன்ற ஒரு சோடி மிதியடிசெய்து அவ் வடிகளுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

இவன் இன்ன தச்சன்தானா! என்று பார்ப்பவர் சந்தேகிக்கும்படி மேனியழகுகொண்டு சுகத்துடன் வீடு சேர்ந்த அவன், அன்றைத்தினமே தன் நாட்டப்படி மிதியடி செய்யத் தொடங்கினான். எவ்விதக் குறைவுமில்லாமல்



முதிர்ந்து வயிரம்பற்றின சந்தனமரத் துணியொன்றைத் தேடியெடுத்து, அதை இரண்டு துண்டுகளாகத் தறித்து இரண்டு திருவடிகளுக்கும் இரண்டு மிதியடிகள் செய்தான். ஆண்டவரவர்களுக்காக அவன் மிதியடிசெய்யும்போதிருந்த பரிசுத்தமும், அச்சமும், பக்தியும் கொஞ்சமல்ல. காலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து ஈரத்துகிலோடிருந்து, வெகுநேரம் பிறருடன் வார்த்தையாடாது வேலை செய்வான். அவ்வேலை செய்வதற் கென்று பிரத்தியேகமாக ஒரு தனியிடம் ஏற்படுத்திக்கொண்டு அவ்விடத்தில் இருந்து செய்துவந்தான்.

இவ்வாறாகப் பலநாளிருந்து வெகு பிரயாசையுடன், தச்சுவேலையிற் கைதேர்ந்த எந்தத் தச்சனும் பார்த்துப் பிரமிக்கத் தக்க அத்தனை வேலைபாட்டுடன். வெகுசித்திரமாகச் சீவிச்செதுக்கி, கண்டவர் கண்களைக் கவரும்படி இரண்டு மிதியடிகள் செய்து முடித்தான். பெருவிரலிடுக்கிற் கொளுவிநடக்கும் குமிழ் ஒன்று மாத்திரமே மீதியாக, மற்ற வேலைகளனைத்தும் பணிக்காகச் செய்து தீர்ந்தன. நாளைக்குக் குமிழ்கள் செய்து முடிக்கலாமென்று அன்றைக்கு அம்மட்டில் வைத்திருந்தான்.

மறுநாட் காலையில் வழக்கப்படி வேலை செய்வதற்காகத் தச்சன் எழுந்தபோது, இன்றைத்தினம் ஹலறத்து ஆண்டவரவர்கள் இவ்வூரை விட்டுப் பிரயாணப் படுகின்றார்கள் என்னுஞ்செய்தி அவன் காதில் விழுந்தது. இந்தச் சங்கதி காதிற்கேட்ட மாத்திரத்தில் அவன் கால் பதறக் கைபதற எழுந்து, மிதியடிகளுக்குக் குமிழ்வேலை தீரவில்லையே. எஜமானவர்களும் புறப்பட்டு விட்டார்களே. இதற்கு என்ன செய்வோமென்று ஏக்கம்பிடித்து, அம் மிதியடிகளிரண்டையும் எடுத்துத் தலையிற் சுமந்து கொண்டு, தன் மனைவி மக்களுடன் வீட்டைவிட்டு அதிக

விரைவாக ஓடிவந்தான். அப்போது ஆண்டவரவர்கள் தபோதனர் கூட்டத்துடன் தங்கள் சாலையில் பிரயாண எத்தனத்துடன் இருந்தார்கள்.

அதிக ஆவலுடன் ஓடிவந்த தச்சன் ஆண்டவரவர்களின் பிரயாண முஸ்திபைக்கண்டு, மிதியடிவேலை தீரவில்லையேயென்னுஞ் சஞ்சலத்துடன் வெகுநேரம் கைகட்டி நின்றான். ஆண்டவரவர்கள் பிரயாண விஷயங்கள் அனைத்தும் ஒழுங்கானபின் அவனைப்பார்த்து: உன்காரியம் என்ன? என்று கேட்டார்கள். அப்போது அவன், எஜமானவர்களே, தங்கள் பாதார விந்தங்களிற் பூண்டு நடப்பதற்காக வேண்டி ஒருசோடி மிதியடி செய்தேன். அதன் எல்லா வேலைகளும் தீர்ந்தன. குமிழ்கள் மாத்திரம் மீதியாயிருக்கின்றன. இன்றைத் தினம் அக்குமிழ்களைச் செய்து முடித்துக் கொணர்ந்து சமர்ப்பிக்கலாமென்று நாடியிருந்தேன். இப்போது தாங்கள் புறப்பட்டு விட்டீர்கள் என்று கேள்விப்பட்டேன். உடனே அக்குமிழ்வேலை மீதியான மிதியடிகளை எடுத்துக்கொண்டு தங்கள் திவ்விய சந்நிதிக்கு விரைந்து வந்தேன். என் எண்ணம் நிறைவேற வேண்டுமென்று தாழ்மையுடன் சொன்னான்.

தச்சன் சொன்ன இந்தச் சொல்லை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அவனைப் பார்த்து: நல்லது; நீ கொணர்ந்த மிதியடிகளை நிலத்தில்வை என்றார்கள். உடனே அவன் அதை ஆண்டவரவர்களுக்கு முன் வைத்துவிட்டு விலகி நின்றான். அப்போது, முகதாவில் வைக்கப்பட்ட மிதியடிகளை ஆண்டவரவர்கள் கருணைக் கண்களால் நோக்கி, தங்கள் இரண்டு பாதகமலங்களையும் பிஸ்மி சொல்லி அவற்றின்மீது வைத்து நடந்தார்கள். அப்போது அங்கே கூடியிருந்த ஜனங்களுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை.



வாரும், குமிழுமில்லாமல், வெறுமையாயிருந்த மிதியடிகளை ஹலறத்து ஆண்டவரவர்கள் பாதங்களிற் பூண்டுகொண்டு நடந்தபோது, ஆண்டவரவர்களைப் பயணமநுப்ப வந்திருந்த எல்லாரும் அதிசயக்கடலில் மூழ்கினவர்களாய், பின் தொடர்ந்து நடந்தார்கள். தச்சனும் மனைவி மக்களுடன் ஆநந்தங்கொண்டு கூடவே நடந்து போனான்.

ஊர்ப்புறம் கொஞ்சந்தூரஞ் சென்றபின் ஆண்டவரவர்கள் தங்களைத் தொடர்ந்துவரும் ஊர் ஜனங்களைத் திரும்பிப் போகும்படி சொல்லி அநுப்பிவிட்டு, தச்சனைப் பார்த்து: நீயும் உன் மனைவிமக்களுடன்போய் க்ஷேமமாயிரு என்று விடைகொடுத்து அநுப்பினார்கள். தச்சன் ஆண்டவரவர்களின் விடைபெற்றுப் பணிந்து வீடு சேர்ந்தான்.

[ஹலறத்து ஆண்டவரவர்கள் அன்று முதற்கொண்டு உபாத்தாகும் வரையும் அந்த மிதியடியையே வாரும், குமிழுமில்லாமல் பாதங்களிற்பூண்டு நடந்துகொண் டிருந்தார்கள். அந்த மிதியடிகள் அவர்கள் உபாத்துக்குப்பின் உயர்ந்த ஒரு பொற்பெட்டிக்குள் வைத்து, இவ் வுலகத்திலிருக்கும் அரசராதி எளியர் வரையு முள்ள எல்லாச் சாதியாரும் தங்கள் தங்கள் எவ்விதத் துன்பங்களுந் தீர்ந்து, எவ்வித நாட்டங்களும் நிறைவேறிப் பலன்பெறும் பொருட்டுத் தரிசித்துச் சிரசிற் கொள்ளும்படி, அவர்கள் அடங்கி விளங்கும் அலங்காரமாளிகை . யாகிய நாகூர்-தர்காவில் வைக்கப்பட் டிருக்கின்றது. அந்தப் பாதுகப்பெட்டியே தரிசனைக்கு வருபவர் சிரசில் வைத்தெடுக்கப்படுகின்ற பொற்பெட்டி.]

தச்சன்பிணி தீர்த்தது முற்றிற்று.

## ருக-ம் அத்தியாயம்.

# சத்துருக்கள் சங்காரமானது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் சத்துருக்களாகிய குடகாசன் சேனைவீரர்கள் தமக்குட்போராடிச் சங்காரமான வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது சுல்தான் ஷாகுல் ஹமீது அப்துல் காதிறு ஆண்டவரவர்கள் முன் பிணிதீர்ந்த தச்சன் வாழும் சிற்றூரைவிட்டுப் புறப்பட்டு, தங்கள் தபோதனர் கூட்டத்துடன் மதயானைகள் சஞ்சரிக்கும் அடர்ந்தகாடுகளையும், கரடியும் புலியும் கர்ச்சித்துலாவும் மலைச்சாரல்களையும், அகன்று நீண்ட நதிகளையும் கடந்து நடந்து, கடற்கரையருகில் ஆனார்கள்.

அங்கங்கே குவிந்து தோற்றும் மணல் மேடுகளாலும், அடுத் தடுத்துவரும் பரதர் சேரிகளாலும் கண்ணுக்கு அலங்காரமாகத் தோற்றும் கடற் சார்பில் ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் போகும்போது, பின்புறத்தில் ரணபேரிகையின் ஆரவாரமே ஆரவாரமாகவும், வீரர்கள் ஏறி வரும் குதிரைகளே அலைகளாகவும், பதாதி வீரர்களே சுறவின் கூட்டமாகவும், அடியிலிருந்து எழும் புழுதிகளே மேலெழுந்த மேகசாலங்களாகவும், மற்றொரு கடல்வருவதுபோல அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. கொடிகள், குடைகள், ஆலவட்டங்கள், சாமரங்கள் அனைத்தும் காடாய்த் தோற்ற, வீரர்கள் கைகளிற் பிடித்திருக்கும் வாளாதி ஆயுதங்கள் பளீர் பளீரென்று பிரகாசிக்க, முன் கடல்போலத் தெரிந்து வரவர ஒரு பட்டாளமாய்த் தோற்றப்பட்டது. அந்தப் பட்டாளத்து ஒவ்வொரு வீரரும் கண்களில் அக்கினிப்பொறி கங்கி



கங்கியாய்ச் சிந்த, வாய்களில் சபதவார்த்தைகள் பலவற்றைப் பலவாறெழுப்ப, வாத்தியங்களை அதிக மும்முரமாக முழக்கிக்கொண்டு விரைவாய் வந்தார்கள்.

தங்களுக்குப் பின்பக்கத்தில் மிக்க ஆரவாரத்துடன் ஒரு பட்டாளம் திரண்டுவருவதை ஹலறத்து ஆண்டவரவர்களும், தபோதனர்களும் கண்டு, இது யார்படை! என்ன காரியம்பற்றி வருகின்றது! என்று ஆலோசனை பண்ணிக்கொண்டு நின்றார்கள். அப்போது, பின்தொடர்ந்துவரும் அந்தச் சேனைவீரர்கள் பெருந்தொனியிட்டு: மனிதர்கள் மருளத்தக்க மாயாஜாலஞ் செய்கின்ற கூட்டத்தார்களே, போகாதீர்கள்; நில்லுங்கள்; நில்லுங்கள் என்று சொல்லிக்கொண்டு, வெகுதைரியமாகவும், விரைவாகவும் நெருங்கி வந்தார்கள்.

உதிரதாகமிக்க போர்வீரர்களனைவரும் மேற்குறித்த வண்ணஞ் சொல்லிக்கொண்டு, கைகளிற்பிடித்த வாள்முதலான ஆயுதங்களை ஓங்கினவர்களாய், ஆண்டவரவர்களையும், நானூற்றுநான்கு தபோதனர்களையும் நடுவிலிட்டுச் சூழ வளைந்து சுற்றிக்கொண்டார்கள். அப்படிச் சுற்றி வளைந்துகொண்ட சத்துருக்கள் பின் ஒன்றும் பேசாமல் தங்கள் ஆயுதங்களை ஹலறத்து ஆண்டவரவர்கள் மீதும், தபோதனர்கள் மீதும் பிரயோகிக்க எத்தனப்பட்டார்கள்.

சத்துருக்கள் கோபத்தீமூளக் கொதித்து நெருங்கி ஹலறத்து ஆண்டவரவர்கள் முதலான அனைவரையும் கொல்லத்தலைப்பட்டு ஆயுதங்களை ஓங்கி நெருங்கினபோது, ஆண்டவரவர்கள் அவர்களைப்பார்த்து: வாள்முதலான ஆயுதங்கள் தாங்கி, விருதினம் நெருங்கப்பிடித்து, வாத்திய முழக்கத்துடன் வந்து எங்களை வளைந்துநிற்கும் வீரர்களே, நீங்கள் யார்? எங்கள்மீது இவ்வாறு சினந்துவந்து தீங்கு விளைப்பதற்குக் காரணம் என்ன? எங்களால் உங்களுக்கு

ஏதும் ஒருதீங்கு நேரிட்டது உண்டா? உங்களை இவ்வாறாக எங்கள்மீது ஏவிவிட்ட உங்கள் அதிபன் எவன்? சொல்லுங்கள் என்று கேட்டார்கள்.

இவ்வாறு கேட்டபோது அந்தக் காபிர்களாகிய ரண வீரர்கள் ஆண்டவரவர்களை நோக்கி: நாங்கள் ஆராதனை செய்து வழிபட்டுவணங்கும் தெய்வத்தை மானபங்கப் படுத்தி, எங்கள் ஆசானைக் கர்வபங்கமாக்கி மனங்கலங்கக் குளத்திலமிழ்த்திக் கொன்று, எங்களையாளும் அரசனைக் கொலைசெய்து பின் உயிர்கொடுத்து, மனிதர்கள் பிரமிக்கத் தக்க மாயவித்தைகளைக் காட்டினவன் நீயல்லவா? நாங்கள், உன்னாற் கொல்லப்பட்டுப் பிழைத்த எங்கள் அரசன் அனுப்பின ரண சூரர்கள். மனிதர்யாரும் திடுக்கிட்டுக் கலங்கி அஞ்சும்படி ஜாலம் பண்ணுகின்ற உன்னையும், உன் கூட்டத்தாரையும் வழிமறித்து, நீ செய்யும் அந்த மாயா ஜாலங்களை யெல்லாம் பஞ்சாய்ப் பறக்கடித்து, உங்களில் எதிர்த்து நிற்போரை வெட்டிச் சாய்த்து, மற்றவரைச் சிறை பிடித்துக் கொண்டுபோக வந்தோம் என்று நிர்ப்பயமாகச் சொன்னார்கள்.

பகைவர் சொன்ன இந்தச்சொல் ஹலறத்து ஆண்டவரவர்களுக்குக் கோபத்தை எழப் பண்ணிற்று. இச் சொல்லைக்கேட்ட மாத்திரத்தில் ஒருபோதும் கொள்ளாத விதமாக ஆண்டவரவர்களின் இருதயம் சினங்கொண்டு கொதித்தது; கருணை சிந்தும் கண்கள் ரத்தமயமாய்ச் சிவந்தன; முகம் சிவந்த சந்திரன் உதயமானாற்போலத் தோற்றிற்று. இவ்விதக் கோபத்துடன் ஆண்டவரவர்கள் அந்தப் பகைவரைப் பார்த்து "நாங்கள் செய்தது நியாயவிரோத மென்று கருதி எங்களைப் பின் தொடர்ந்துவந்து தீங்கு செய்யத் திரண்டு வளைந்து நிற்கும் போர்வீரர்களே, உங்கள் கூட்டத்தில் நீங்கள் ஒருவரை யொருவர் எதிர்த்து, நின்று வெட்டிக் கொள்ளுங்கள்" என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள்.



ஆண்டவரவர்கள் சாபமிட்டாற்போலச் சொன்ன சொல் உடனே அவர்களுக்குப் பலித்தது. பகைவர் அனைவரும் சித்தப்பிரமை கொண்டாற்போல மருள்பிடித்து, தங்களுக்குள்ளேயே முறுமுறுக்கவும், குறுகுறுக்கவும் ஆரம்பித்தார்கள்; ஒருவரைப்பார்த்து ஒருவர் சீறவும், சினக்கவும் தொடங்கினார்கள். சமாதானத்துடன் ஒன்றாய்க் கூடிவந்த ஒரு நாய்க்கூட்டம் பின் ஒன்றோடொன்று சினந்து வள்ளென்று விழுந்து கடித்துக் கொள்ளுவதுபோல, ஒருவரோடொருவர் சினந்து விழுந்து தாக்கினார்கள். ஒருவரைப்பார்க்கும் ஒருவருக்கும் பகைவராகவே தோற்றிற்று. அதனால், ஒவ்வொருவரும் கையிற் பிடித்திருக்கும் ஆயுதங்களைப் பிரயோகித்துக் கொண்டார்கள்.

மாற்றாரோடு எதிர்த்துச் சண்டைதொடங்கிக் கொண்டார்கள் என்று வாத்தியகாரர்கள் வாத்தியங்களை அடித்து முழக்கினார்கள். எக்காளங்கள் அவர்களுக்கு வந்த கேட்டை எவர்களுக்கும் தெரிவிப்பது போல வாய்திறந்து அதிர்ந்தன. ஒருவரோ டொருவர் எதிர்த்து வெட்டிக் கொள்வார்கள்; ஆயுதங்களை எறிந்து கொள்வார்கள்; பதுங்கி நின்று இலக்குப்பார்ப்பார்கள்; துள்ளிக் குதிப்பார்கள்; தட்டிக் கொள்வார்கள்; தாக்கி மோதிக் கொள்வார்கள். ஒருவரைப் பார்த்து ஒருவர் அம்புமாரி பொழிவார்கள்; வாளாயுதங்களை வீசுவார்கள்; வேலாலும், சூலத்தாலும் குத்துவார்கள்; தண்டங்களால் ஓங்கி அடிப்பார்கள்; கேடயங்களை ஏந்துவார்கள்; வலமிடஞ் சுழல்வார்கள்; முன்னேறுவார்கள். இவ்வாறாக மன மருட்சிகொண்டு தங்களுக்குள் போர் தொடங்கிக்கொண்ட பகைவர், நெடுநேரமாகப் பொருது நின்று, கைகள் அற்றும், கண்கள் பிதுங்கியும், மண்டைகள் பிளந்தும்,

மார்புகள் சிதைந்தும், புஜங்கள் துண்டுபட்டும், வயிறுகள் கிழிந்தும், குடல்கள் சரிந்தும், துடைகள் தறிபட்டும், கால்கள் ஒடிந்தும் பலவாறாகப் படுகளத்தில் விழுந்தார்கள். ரணகளத்தில் அநேகர் விழுந்து மடிந்ததுமன்றி, அநேகர் குற்றுயிராய்க் கிடந்து பரிதபித்துத் துடித்தார்கள். படை முரசுகளின் சத்தம் ஓய்ந்தது; குடை, கொடி, ஆலவட்டம், சாமரம் என்னும் விருதுகள் சாய்ந்து விழுந்தன; உதிரம் பிரவாகித்து ஓடிற்று. அவ்வுதிரவெள்ளத்தில் வெட்டுண்ட உறுப்புகள் அநந்தம் மிதந்தன.

பகைவர்சேனை இவ்வாறாகத் தங்களாலேயே சின்னபின்னப்பட்டுச் சிதைந்து போயும், அமர்களத்தில் அடித்து விழுந்து மாளாமல் வீரதீரத்துடன் மீந்து நிற்கும் பகைவரும் கொண்டமருள் கொண்டபடியே பின்னும் ஒருவரை மீந்திருக்கவிடாமல் எதிர்த்துப் போராடிக் கொண்டே நின்றார்கள். நன்மையைக் கடைப்பிடித்து நிற்கும் நல்லோருக்குத் தீங்குவருத்த நாடித் தீயோர் செய்யும் புன்மை, அந்தத் தீயோருக்கே வந்து லபிக்கும் என்பதற்கு இலக்கியமாகவந்த அந்த அரசன் சேனையில் அதிகபாகம் அழிந்து, மீதியுள்ளோர் பின்னும் வேகம் மீறி எதிர்த்து நிற்பதை ஆண்டவரவர்கள் கண்டு, அவர்கள்மீது கொண்டிருந்த சினந்தணிந்து அவர்களுக்கு உண்டான மருள்நீங்கி உணர்வுண்டாகும்படி கிருபை செய்தார்கள். உடனே அந்தப் பகைவர்களுக்குத் திடீரென்று மனத் தெளிவு பிறந்தது.

அவர்களுக்குச் சித்தமருள் நீங்கின மாத்திரத்தில் தங்களுக்குள் தாங்களே வெட்டிக்கொள்வது தெளிவாய் விளங்கிற்று. அப்போது, நாம் ஏன் இவ்வாறாக வெறிபிடித்து நமக்குள்ளேயே போராடி வெட்டிக் கொண்டு மாள்கிறோம்! என்று நினைத்து ஒருவரை யொருவர்



உசாவினார்கள். பின், நாம் அடர்ந்து தாக்கக் கருதிவந்த இந்தப் பெரியவருடைய சாபத்தினால் தான் நமக்கு இக்கதி நேரிட்டது என்று அவர்களுக்குள் ஒரு தீர்மானம் பண்ணிக் கொண்டார்கள்.

வெட்டுண்டு மடிந்தோர்போக மீந்த பகைவர் அனைவரும் இப்படித் தீர்மானித்துக்கொண்டு, இனி இந்தப் பெரியவரை அடைக்கலம் புகுந்தாலன்றி நமக்கு மீட்சியில்லையென்று சொல்லி, ஒவ்வொருவராக ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவடிகளில் வந்து கும்பிட்டு விழுந்து: எஜமானவர்களே, எங்கள் அறியாத்தன்மையினால் நாங்கள் இப்படிச் செய்து அநேகர் உயிரிழந்ததுமன்றி, மானபங்கமுமடைந்தோம். இனித் தங்களை யன்றி எங்களுக்கு வேறு கதியில்லை. இப்போதே நாங்கள் எல்லாரும் தங்கள் திருவடிகளில் அடைக்கலமானோம். தாங்கள் கருணை வைத்து எங்கள் குற்றத்தை மன்னித்து ரக்ஷிக்கவேண்டும் என்று கெஞ்சி மன்றாடி, சத்தமிட்டு அழுதார்கள்.

எதிர்த்து நின்று போராடவந்தவீரர் முடிவில் இக்கதியாய்க் கும்பிட்டுக் கிடந்து அழும் அழுகுரல், ஹலறத்து ஆண்டவரவர்களின் மேலானகிருபையைப் பின்னும் கிளப்பிற்று. அதனால், ஆண்டவரவர்கள் அந்தப் பகைவருக்கு உண்டாயிருக்கும் காயங்களின் வேதனைதீர அல்லாகுத்த ஆலா இடம் துஆ இரந்து, இனி நீங்கள் இருப்பது எச்சரிக்கையா யிருக்கட்டும் என்று கண்டித்து அனுப்பிவிட்டார்கள்.

மேற்படிவீரர்கள் அனைவரும் நாம் தப்பிப் பிழைத்ததே தனாதபாக்கியம் என்று மன அச்சத்துடன் அங்கிருந்து சுயநகரம் போய், தங்கள் அரசனிடம் நடந்த காரியங்களைச் சொல்லிக் காட்டினார்கள். பெருஞ்

சேனையாய்த் திரண்டு போருக்குப் போனவீரர் பலர்மாளக் கொஞ்சம்பேர் திரும்பிவந்து ஆச்சரியமான சங்கதியைச் சொல்ல அரசன் கேட்டு உடல்பதறி, அச்சத்தால் மனங்கலங்கி வெருக்கொண்டிருந்தான்.

சத்துருக்கள் சங்காரமானது முற்றிற்று.

---

௩௨-ம் அத்தியாயம்.

## காபிர்கள் வெருண்டோடினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தபோதனர் மீது அடர்ந்த சில காபிர்கள் வெருண்டோடின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது கன்சுலவாய் பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் அங்கிருந்து தங்கள் தபோதனர் கூட்டத்துடன் சிக்குப் பட்டணத்திற்போய்ச் சேர்ந்து, அப்பட்டணத்துப் பெரியவீதியிலுள்ள ஒரு குளக்கரையி லிறங்கி, அன்றை அஸ்று தொழுதுகொண் டிருந்தார்கள். ஆண்டவரவர்கள் முதலான அனைவரும் தொழுகையிற் பராக்காயிருக்கும் போது, அவ்வூரிலுள்ள காபிர்கள் சிலர் திரளாய்க்கூடி, விக்கிரகாதனமாகிய சப்பரம் ஒன்றை அலங்கரித்துச் சுமந்துகொண்டு பலவகை வாத்தியங்கள் முழங்க, கொடி, குடையாதிகள் ஓங்க அதிக அமளியுடன் அந்தவழியில் வந்தார்கள்.

காபிர்கள் இவ்வித ஆரவாரத்துடன் வரும்போது, ஆண்டவரவர்கள் முதலான அனைவரும் தொழுதுகொண் டிருப்பதை அவர்கள் கண்டு நகைத்துப்பரிகாசம் பண்ணி, பகீர்கள்மேல்விழுந்து அதிக்கிரமமாக அடித்து வெருட்டிக் கலகஞ்செய்தார்கள். வேறு பராக்கின்றித் தொழுது கொண்டிருக்கும் பகீர்கள்மீது காபிர்கள் வலியவந்து விழுந்து



கலக்கடி பண்ணுவதை ஹலறத்து ஆண்டவரவர்கள் கண்டு மனம்வருந்தி, அந்தத்துஷ்டர்களைப் பார்த்துச் சபித்தார்கள். ஆண்டவரவர்கள் மனம்நொந்து சபித்த சபிப்பு உடனே அவர்களுக்குப் பலித்து விட்டது.

ஹலறத்து ஆண்டவரவர்களின் சாபத்திற்கு இலக்கான அந்தக் காபிர்களனைவரும் அப்போதே மனமருள்பிடித்து, கண்களும் குருடாய், சுமந்துவந்த சப்பரத்தையும், வாத்திய முதலான விருதுகளையும் தரையில் எறிந்துவிட்டு, திக்குத் தெரியாமல் முகங்கொண்ட திசையில் ஓடி, விழுந்து புரண்டு, சத்தமிட்டு அலறத்தொடங்கினார்கள். ஒருவரை யொருவர் எதிர்த்தும், மோதியும், முட்டியும் விழுந்து கிடந்து வாய்விட்டுப் பெருந்தொனியிட்டபோது, அந்த இடம் ஒரு ரணகளத்திற்கு ஒப்பாயிற்று. சப்பரங் கொண்டு போனவர்களுக்குத் திடீரென்று இக்கதி நேரிட்டது என்னும் சமாசாரம் ஊரெங்கும் பரந்தது. இதைக் கேட்ட ஊர்ஜனங்கள் சிறியோர் பெரியோர் எல்லாரும் கூட்டங் கூட்டமாய் அங்கேவந்து கூடினார்கள்.

ஊர்ப்பிரசைகள் பெருந்திரளாகவந்து கூடிநின்று பார்த்தபோது, அந்தத் துஷ்டர்கள் படும்பாடு மிகப் பரிதாபமாயிருந்தது. ஒருவரும் இவர்களை எதிர்த்து ஒன்றுஞ் செய்யாதிருக்க, இவர்கள் தாமாகவே குத்துண்டு வெட்டுண்டு பொறிகலங்கிக்கிடந்து உழல்வதுபோல உழலுங்காரணம் என்னவென்று வந்த ஒவ்வொருவரும் விசாரித்தார்கள். இவர்கள் இந்தக் குளக்கரையில் வணங்கிக் கொண்டிருந்த இந்தத் தபோதிமார்மீது அதிக்கிரமித்து விழுந்து தாக்கினதுதான் தவறு என்பது அங்கே வெளிவந்தது.

பிறகு ஊர்ப் பெரியமனிதர் எல்லாரும் ஒருங்கொத்து, இவர்கள் செய்தவேலை தப்பிதமென்று தீர்மானித்து,

த்தரையில் சிதறுண்டு விழுந்துகிடந்து பதறித் துடித்துப் புரளும் அந்தச் சண்டாளர் அனைவரையும் ஒன்றுத் திரட்டிக்கொண்டு ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கும்பிட்டு விழுந்து: எஜமானவர்களே, இந்த மடையர்கள் செய்த காரியம் மகாபிசகு. அறியாமையாலேயே இப்படிச் செய்துவிட்டு, அதற்குத்தக்க தண்டனையும் அடைந்தார்கள். இனி எங்களுக்காகத் தாங்கள் அதை மன்னித்து மனதிரங்கி, இவர்களின் கண்களை முன்போல விளக்கி, மன மருளையும் நீக்கி, ரக்ஷிக்க வேண்டும் என்று மன்றாடினார்கள்.

சிக்ஷித்தாரை ரக்ஷிக்கும் திருவருள் வள்ளலாகிய ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தக் காபிர்களின் மன்றாட்டத்திற்காக மனதிரங்கி, அந்தத் துஷ்டர்களைக் கருணைக் கண்களாற் பார்த்து, அவர்களுக்கு நேரிட்டிருக்கும் வில்லங்கந்தீரக் கைகளை ஏந்தி துஆ செய்தார்கள். உடனே அந்தத் துஷ்டர்களின் மனமருள்நீங்கி, கண்களும் தெளிவாய் விளங்கின.

பின்பு, அவர்களும் தாங்கள்செய்த தப்பிதத்திற்காக ஆண்டவரவர்களின் பாதகமலங்களில் விழுந்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டார்கள். பின் அனைவரும் ஆண்டவரவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு போனார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் சிலநாள்வரையும் அவ்வூரில் தங்கியிருந்தார்கள். அப்போது காபிர்கள் சிலர் ஆண்டவரவர்களின் கையைப்பிடித்துக் கலிமாசொல்லி, இஸ்லாமிலானார்கள்.

[அந்த இஸ்லாமானவர்கள் ஆண்டவரவர்கள் கூடவேயிருந்து ஹஜ்ஜுக்குப் போனார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.]

காபிர்கள் வெருண்டோடினது முற்றிற்று.

---

ருரு-ம் அத்தியாயம்.

## பறவைகள் அடைக்கலம் பெற்றது.

[இவ் வத்தியாயம் வனத்திற் சஞ்சரிக்கும் பறவைக் கூட்டங்கள் மனிதர் தங்களைக்கொன்று பக்ஷிக்காதபடி ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து அடைக்கலம்பெற்ற வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறுன் சுல்தான் சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் சிக்குப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு, மத்திய இந்துஸ்தான வனத்தின் ஒரு ஓடைக்கரையிற்போய்த் தங்கள் கூட்டத்தாருடன் தங்கியிருந்தார்கள்.

ஆண்டவரவர்கள் அந்த ஓடைக்கரையில் தங்கின போது, அங்குள்ள தோட்டங்களிலிருக்கும் பழந்தரும் விருக்ஷங்களனைத்தும் உடனே பூத்துக் காய்த்துப் பழுத்துச் சொரிந்தன. வெகுநாள் பூத்துக் காய்க்காதிருந்த மரங்கள் திடீரென்று பூத்தும், காய்த்தும், பழுத்தும் சொரிவதை அங்கே வாசஞ்செய்கிற ஜனங்கள் பார்த்து, இது இப்போது இங்கே புதிதாய் வந்திருக்கும் இந்த ஆண்டவரவர்களின் மகிமைதானென்று ஆச்சரியப்பட்டு, ஆண்டவரவர்களைத் தரிசிப்பதற்காக எல்லாரும் புறப்பட்டுவந்து பணிந்து நின்றார்கள். ஆண்டவரவர்கள் அவர்கள் எல்லாரையும் இருக்கச்செய்து, அவர்களுடன் மனப்பூர்வமாகச் சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த ஜனங்களுடன் சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது, அந்த ஓடைக் கரையின் வனத்திலும், தோப்புகளிலும் சஞ்சரிக்கின்ற

எல்லாச்சாதிப் பறவைகளும் இனம் இனமாகக்கூடிப் பல கூட்டமாய்த்திரண்டு, ஆண்டவரவர்கள் சமுகத்தில் பறந்து வந்து தரையிலிறங்கிப் பந்திபந்தியாயிருந்து, தலைகளைக் கவிழ்த்துக்கொண்டு, நெடுநேரம்வரையும் சத்தமிட்டுக் கத்திக்கொண்டிருந்தன. அப்போது ஆண்டவரவர்கள் சம்பாஷணையை நிறுத்தி, அப்பறவைகளின் தொனியில் காது தாழ்த்திக் கேட்டுக்கொண் டிருந்தார்கள்.

பறவைகளின் சத்தம் அமர்ந்தபின் ஆண்டவரவர்கள் தங்களோடு பேசிக்கொண்டிருக்கும் அந்த ஜனங்களைப் பார்த்து: கேட்டீர்களா? இந்தப் பறவைகள் இப்போது என்னிடம் ஒரு முறைப்பாடு செய்கின்றன. நீங்கள் இந்தப் பறவைகளை அநியாயமாகக் கொன்று பக்ஷிக்கிறீர்களென்றும், அதனால், அவற்றின் குலம் வரவர அருகிப் போகிறதென்றும், ஆதலால், அவைகள் இங்கே அச்சமற்றிருக்கக் கூடவில்லையென்றும், இனி, அப்படித் தங்களில் ஒரு பறவைக்காவது யாதொரு தீங்கும் வரக்கூடா தென்றும், அவைகள் இன்றுமுதல் நிர்[illegible] யிருக்க வேண்டுமென்[illegible] மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றன. இவ்விஷயத்திற்காக உங்களுக்கு உண்டாகும் அபிப்பிராயம் என்ன? ஆக்ஷேபனை யேதுமிருந்தால் சொல்லுங்கள் என்று சொல்லிக்காட்டிக் கேட்டார்கள்.

இதைக்கேட்ட அந்த ஜனங்கள் சற்றுநேரம் வரையும் ஒன்றும் பேசாமலிருந்து, பிறகு அவர்களுக்குள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, அதன் பிற்பாடு ஒறல றத்து ஆண்டவரவர்களை நோக்கி: எஜமானவர்களே, இந்தப் பக்ஷிகள் சொல்லுவதெல்லாம் உண்மைதான். இனி நாங்கள் இதுகளைக்கொன்று பக்ஷிக்கமாட்டோம். இது களில் ஒன்றையாவது அடித்து வெருட்டுகிறதுமில்லை. இவை களுக்கு ஒரு தீங்குசெய்ய நாங்கள் இன்றுமுதல் நினைக்



கிறது மில்லையென்று சத்தியம் பண்ணுகிறோம். இவைகள் இனி இங்கேயே பயமற்று க்ஷேமமா யிருக்கட்டும் என்று சொல்லி, பிரமாணிக்கம் பண்ணினார்கள்.

பிறகு ஆண்டவரவர்கள் அந்த ஜனங்கள்மீது அன்பு வைத்து ஆசீர்வதித்து, பின்னும் அவர்களைப்பார்த்து: இங்கே குடியிருக்கின்ற எல்லா மனிதர்களும் இங்கே வாசஞ் செய்கின்ற எல்லாப் பறவைகள்மீதும் கிருபையா யிருக்க வேண்டும். ஒருவராவது ஒன்றையும் வெருட்டாமலும், கொல்லாமலும், பக்ஷிக்காமலும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். ஒரு பறவைக்காவது எவ்விதத் தீங்கும் செய்ய நாடுகின்ற யாரும் அறுபட்டுப் போவாராக என்று வாக்கிட்டு, அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, பறவைகளைப்பார்த்து: இனி உங்களுக்கு யாதொரு தீங்கும் வராது; அச்சமற்றுச் சுகமாயிருங்கள் என்று சொல்லி அனுப்பினார்கள். இது நடந்த அன்றுதொட்டு அந்த ஓடைக் கரையிலுள்ள பறவைகளுக்கு ஆண்டவரவர்களின் திரு வாக்கின்படியே நாளிது பரியந்தம் நடந்து வருகின்றது.

பறவைகள் அடைக்கலம்பெற்றது முற்றிற்று.

---

௫௪-ம் அத்தியாயம்.

## அஜ்மீருக்குப் போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் அஜ்மீர் பட்டணம் போய், ஹலறத்து க்வாஜா முஈனுத்தீன்சிஸ்தி ஸன்ஜரீ அதாயிறசூல் றலியல்லாகு அன்கு அவர்களின் கபுறை ஜியாறத்துச் செய்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது சுல்தான்ஷாகுல் ஹமீது காதிறேலி கன்ஜஸவாய் பாத்துஷா ஆண்டவரவர்கள் தங்கள் தபோதனர் கூட்டத்துடன் மத்திய இந்தியா வனத்தை விட்டுப் புறப்பட்டு, நேரே அஜ்மீர் நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

அஜ்மீர் என்னும் பட்டணம் வடதேசத்து மாட்சிமை தங்கின பிரதான நகரங்களுள் ஒன்று. அந்நகரத்தில் ஒளலியாக்களில் சிறப்பும், மகிமையும் பெற்ற ஹலறத்து க்வாஜா முஈனுத்தீன் சிஸ்தி ஸன்ஜரீ ஒலி அதாயிறசூல் றலியல்லாகு அன்கு ஆண்டவரவர்கள் அடங்கி விளங்கும் றௌலாஷரீப் மிக மகிமையானதா யிருக்கின்றது. பெரியகாலத்து ஒளலியாக்கள் நாள்தோறும் அவர்களின் தரிசனைக்காக அங்கே போவது வழக்கம்.

அப்படியே ஹலறத்து ஆண்டவரவர்களும் அந்தப் பட்டணத்திற்குப் போய், ஹலறத்து க்வாஜா முஈனுத்தீன் சிஸ்தி றலியல்லாகு அன்கு ஆண்டவரவர்களின் தர்காவைத் தரிசித்து, றௌலாவுக்குள் புகுந்து, மகத்துவம் பெற்ற கபுறடியில் நின்று அவர்களுக்கு ஸலாம் சொன்னார்கள். அப்போது, ஹலறத்து க்வாஜா முஈனுத்தீன்சிஸ்தி றலியல்லாகு அன்கு ஆண்டவரவர்கள், ஆண்டவரவர்கள் சொன்ன ஸலாமுக்கு கபுறிலிருந்து பிறதி சொன்னார்கள். அந்த ஆச்சரியமான சத்தம் வெளியில் நிற்கும் எல்லார் காதிலும் விழுந்தது.



ஹலறத்து க்வாஜா முஈனுத்தீன் சிஸ்தி றலியல்லாகு அன்கு ஆண்டவரவர்கள் பிறதிஸலாம் சொல்லி உபசரித்தபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் ஆநந்தமடைந்து பின் அந்த தர்காவிலேயே பகீர்மார்களுடன் மூன்று நாள் கல்வத்திருந்தார்கள். அந்த மகத்துவமுள்ள தானத்தில் கல்வத்துத் தீர்ந்தபிற்பாடு ஆண்டவரவர்கள் கந்தம் பாத்திஹா ஓதிச் சோறாக்கி விருந்து கொடுத்து ஜியாறத்தின் ஒழுங்கை முடித்துக் கொண்டு, பிற்பாடு தங்கள் கூட்டத்தாருடன் மாட்சிமை தங்கின அஜ்மீர் நகரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள்.

அஜ்மீருக்குப் போனது முற்றிற்று.

---

௫௫-ம் அத்தியாயம்.

## மக்கா யாத்திரை.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் அஜ்மீரிலிருந்து குவாலீர் நகரத்திற்குப் போய், தங்கள் தீக்ஷாகுருவாகிய ஹலறத்து சையிது முகம்மது கௌது றலியல்லாகு அன்கு அவர்கள் தரிசனையும், உத்தரவும் பெற்றுக்கொண்டு, மக்காவுக்குப் புறப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் அஜ்மீர் நகரத்திலிருந்து புறப்பட்டு, நானூற்று நான்கு தபோதனர்களுடன் தங்கள் ஆசிரியரவர்களிருக்கும் குவாலீர் நகரம் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது, ஆசிரியராகிய ஷைகுல் இஸ்லாம் வல்முஸ்லிமீன் ஹலறத்து சையிது முகம்மதுகௌது சுத்தாறி றலியல்லாகு அன்கு ஆண்டவரவர்கள் தங்கள் அருமைமாணக்கர் வந்த செய்தி கேட்டு எதிர்வந்து உபசரித்து அழைத்து, கட்டித் தழுவி நெற்றியில் முத்தமிட்டுக்கொண்டு "என் அருமை

மகனே, உரிமைகலீபாவே, அல்லாகுத்தஆலா உமக்கு றகுமத்துச் செய்து, உம்மைப் பொருந்திக் கொண்டான்" என்று மங்களமொழி கூறி, பின்னும் வாழ்த்தினார்கள். ஆண்டவரவர்களும் தங்கள் தேசிகருக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளைச் செய்து ஆசரித்தார்கள்.

பிறகு, ஹைலறத்து ஆசிரியரவர்கள் தங்கள் அருமை மாணாக்கர்கூட விருக்கும் நானூற்று நால்வருக்கும் இருப்பிடம் தயார்பண்ணி, அவர்களை அங்கே இருக்கச்செய்து, ஆண்டவரவர்களாகிய கலீபாவைத் தங்கள் தானத்தில் தங்களின் பிரதிநிதியாக இருத்தாட்டினார்கள். ஆண்டவரவர்கள் தங்கள் ஆசிரியரவர்கள் நடத்தும் சகல கருமங்களையும் தாங்களே அந்தத்தானத்திலிருந்து நடத்தி வந்தார்கள்.

இவ்வாறாகச் சிலநாள் சென்றபின் ஒருநாள் ஆசிரியரவர்கள் தங்கள் சிஷியர் சிகாமணியாகிய ஹைலறத்து ஆண்டவரவர்களைப்பார்த்து: என்மகனே, நீர் இனி இங்கிருந்து மக்காவுக்குப்போய், ஹஜ்ஜு செய்யவேண்டும். ஆகையால், இன்னதினத்தில் இங்கிருந்து மக்காவுக்கு யாத்திரை புறப்படுவீராக என்று உத்தரவு பண்ணினார்கள். ஆசிரியர் கட்டளையை ஆண்டவரவர்கள் உவப்புடன் ஏற்றுக்கொண்டார்கள்.

பிரயாணத்திற்கென்று குறித்தநாள் வந்தபோது ஆசிரியரவர்கள் தங்கள் மாணாக்கராகிய ஆண்டவரவர்களுக்கும், அவர்கள் கூடவிருக்கும் நானூற்றுநான்கு சிஷர்களுக்கும் பெரிய விருந்துகொடுத்தார்கள். பிரயாணவிருந்தாகக்கொடுத்த அன்றைத்தினம் அனைவரும் விருந்துண்டு முடிந்தபின், ஆசிரியரவர்கள் தங்கள் கலீபாவாகிய ஆண்டவரவர்களுக்குச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி மங்களகரமுண்டாவதாக என்று ஆசீர்வதித்து, பின்பு நானூற்று நால்வரையும் அருமை பாராட்டி ஆசீர்வதித்துப்



* பிரயாண மநுப்பினார்கள். குருவிடமிருந்து இரண்டாவதாகப் புறப்படும் ஹைலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் ஆசிரியரவர்களின் விடைபெற்றுக்கொண்டு, தங்களைப் புடை சூழ்ந்துவரும் நானூற்று நான்கு தபோதனர்களுடன் மக்காவுக்குப் போவதற்காகக் குவாலீர் நகரத்தை விட்டுப் பயணப்பட்டார்கள்.

குவாலீரிலிருந்து புறப்பட்ட ஆண்டவரவர்கள் மலைகள், அடவிகள், நதிகள் முதலான பாதைகளையெல்லாங் கடந்து, மத்திய இந்தியாவின் மேல்கடற் கரையிலுள்ள ஒரு துறைமுகப் பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது அந்நகரத்தில் ஜித்தாவுக்குப் போகிற மரக்கலமொன்று தயாராயிருந்தது. பாரிய ஒருமரக்கலம் ஜித்தாவுக்குப் பிரயாணமா யிருக்கிறதென்னும் செய்தியை ஆண்டவரவர்கள் கேள்விப்பட்டு, அம்மரக்கலத் தலைவனிடம் ஒரு ஆளையநுப்பி, தாங்களும், தங்கள் கூட்டத்தாரும் அம்மரக்கலத்தில் ஏறிப் பிரயாணப் படவேண்டுமென்று பேசி முடிவுகட்டிக்கொண்டு, குறித்த தினத்தில் போய்க் கப்பலில் ஏறினார்கள்.

ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் கப்பலேறினவுடன், கப்பல் தலைவன் நங்கூரந்தூக்கிப் பாய் விரித்து. தான்கிடந்த துறையை விடுத்து ஜித்தாவை நோக்கிக் கப்பலைச் செலுத்தினான். கப்பல் யாதொரு தீங்குமின்றி, ஜித்தாவை நோக்கி ஓடிற்று.

மக்கா யாத்திரை முற்றிற்று.

---

* இந்தப் பிரயாணகாலம் ஹிஜறத்துத் தொளாயிரத்து ஐம்பத்தொன்பதாம் வருஷம், றஜபுமாதம் முதல்திகதி யென்றும், அப்போது ஆண்டவரவர்களுக்கு வயது நாற்பத்தெட்டென்றும், இந்தத் தட்வையில்தான் ஜவாஹிறுல்கம்ஸா என்னும் கிதாபு கொடுக்கப்பட்டதென்றும், குலாஸத்துல் கறுமாத்து என்னுங்கிரந்தம் சொல்லுகின்றது.

௫௬-ம் அத்தியாயம்.

## மக்காவுக்குப் போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஜித்தாவில் கப்பல்விட் டிறங்கி ஆதிமாதாவாகிய ஹவ்வா அலைஹிஸ்ஸலாமவர்கள் கபுறை ஸியாறத்துச் செய்துகொண்டு, அங்கிருந்து மக்கா நகரம் போய்ச்சேர்ந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு கஞ்ஜஸவாய் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் ஏறிப்போகும் மரக்கலம் ஜித்தாவைநோக்கி யாதொரு தீங்குமின்றி ஓடிப்போகும் போது, ஒருநாள் காலைவேளையில் ஆண்டவரவர்கள் அந்த மரக்கலத்தலைவனையழைத்து: இன்று சாயங்காலம் கள்ளக் கப்பற்காரர் வந்து இந்தக் கப்பலைப் பிடித்துக் கொள்ளை யடிக்கப் பார்ப்பார்கள். ஆகையால், நாம் அதற்கு ஒரு உபாயஞ் செய்யவேண்டும். அதாவது:— நம் மரக்கலத்தின் பாய்மரம் முதலான கருவிகளனைத்தையும் கோர்வை குலையப் பிரித்துத் தாறுமாறுக்கி, பழுதுபட்டபாவனையாக வைத்துவிட்டு, எல்லாரும் கவலைப்பட்டவர்கள்போல் இருக்கலாம். அதுகொண்டு அல்லாகுத்த ஆலா நம்மைக் காத்துக் கொள்வான் என்று சொன்னார்கள். இப்படிச் சொன்ன போது அந்த மரக்கலத் தலைவனும், மற்ற மாலுமிமுதலான கடலோடிகளும் முஸ்லிம்களானபடியால், ஆண்டவரவர்கள் சொன்ன இந்தச்சொல்லுக்கு இணங்கி, அவ்வாறே கப்பல் பாய்மரம் முதலானவைகளைச் சின்னபின்ன மாக்கினார்கள்.

மேல் மரங்களையும், குறுக்குமரங்களையும் இறக்கி, அங்கங்கே கொளுவியிருந்த பாய்களையும் கயிறுகளையும் பிரித்து, முறைகேடாகப் போட்டுவிட்டு, கப்பலின் இரண்டு பக்கத்து மேற்புற அருகிலும் கொஞ்சம் பழுதாக்கி, விலை



பெறும் சாமான்களையெல்லாம் ஒரு ஒதுக்கிற்கொண்டு போய்ப் பதுக்கி, அவற்றின் மீதும் வெளியிலும் வீண் சாமான்களைப்போட்டு மறைத்து, கப்பல் முழுவதையும் அலங்கோலமாக்கி, எல்லாரும் வெவ்வேறாய்த் துக்கப்பட்ட பாவனையாய் உட்கார்ந்திருந்தார்கள். கப்பலும் ஓட்டமின்றி, ஒரு மிதவைபோல மிதந்துகொண் டிருந்தது.

அன்று மதியந்திரும்பிச் சாய்ந்தரமானபோது, ஹலறத்து ஆண்டவரவர்க்ள் சொன்னபிரகாரம் கள்ளக்கப்பல் ஒன்று அதிவேகமாய் ஓடிவந்தது. ஆண்டவரவர்கள் ஏறியிருக்கும் கப்பல் ஓட்டொழிந்து மிதந்துகொண் டிருந்ததால், அந்தக் கள்ளர்கள் இலகுவில் வந்துபிடிக்க இடம் வாய்த்தது. தேடித் தொடர்ந்து அதிவேகமா யோடிவந்த அந்தக் கள்ளக்கப்பற்காரர் ஆண்டவரவர்கள் ஏறியிருக்கும் கப்பற்பக்கத்தில் நெருங்கி, அதிலிருக்கும் திருடர்கள் எல்லாரும் ஆயுதபாணிகளாய் இந்தக் கப்பலில் பாய்ந்து ஏறினார்கள்.

சோரர் எல்லாரும் ஹலறத்து ஆண்டவரவர்கள் இருக்கும் மரக்கலத்தில் ஏறிப் பார்த்தபோது, அது அவர்கள் கண்களுக்கு, திருடர்வசப்பட்டுக்கொள்ளை கொடுத்துக் கலக்கடிபட்ட கப்பலாகவே தோற்றிற்று. அதனால் அவர்கள், இது நம்மையன்றி வேறொருவர் கையில் அகப்பட்டுப் பறிகொடுத்த கப்பலாயிருக்கின்றது. இப்படிச் சீர்குலைந்திருப்பதற்குக் காரணம் அதுதான். அதனால்தான் இதில் இருக்கிறவர்களும் இவ்விதம் அச்சங்கொண்டு மனந்தளர்ந்து தடுமாறிப்போயிருக்கிறார்கள். நாம் இக்கப்பலை இப்போது பரிசோதனை செய்வது வியர்த்தம். அது வீண்பிரயாசையாய் முடியுமன்றி, யாதொருபொருளும் இதில் அகப்படமாட்டாது என்று அவர்களுக்குள் பேசிக்கொண்டு, தங்கள் திருட்டுக்கப்பலில் மீண்டு ஏறிக்கொண்டு போய் விட்டார்

கள். அந்தத் திருட்டுமரக்கலத்தார் போனபின் அன்று முழுதும் ஆண்டவரவர்கள் இருக்கும் கப்பல் மனிதர்கள் அல்லாகுத்த ஆலாவுக்கு சுக்றுசெய்து, நபிநாயக மவர்கள் பேரில் ஸலவாத்துச்சொல்லி, ஆண்டவ்ரவர்களையும் புகழ்ந்து கொண் டிருந்தார்கள்.

மறுநாட்காலையில் முன் இறக்கின மரங்களையெல்லாம் ஏற்றி, பாய்களையும், கயிறுகளையும் அங்கங்கே கொளுவிப் பழையபடி நோக்கி, மரக்கலத்தை ஓட்டினார்கள். மரக்கலம் தங்கடமின்றி ஓடி ஜித்தாநகரம் போய்ச்சேர்ந்தது.

மரக்கலம் ஜித்தாநகரத்துறையிற் போய் நங்கூரம் போட்டவுடன் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் நானூற்றுநான்கு தபோதனர்களுடன் கப்பலைவிட்டிறங்கி ஊருக்குட்புகுந்து, ஆதிமாதாவாகிய ஹவ்வா அலைகிஸ்ஸலா மவர்களின் மகத்துவமான கபுறை ஜியாறத்துச் செய்து கொண்டு, அங்கே ஓதவேண்டியவைகளையும் ஓதி முடித்து, பின் அங்கிருந்து மக்காவுக்குப் புறப்பட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஜித்தாநகரத்தை விட்டு மக்கா நகரத்தை நோக்கி மூன்றுநாள் நடந்தார்கள். நாலா நாள் அதிகாலையில் மகாமாட்சிமை தங்கிய பரிசுத்த நகரமாகிய மக்காவின் எல்லைக் கோபுரங்கள் அவர்கள் கண்களுக்கு வெகு அலங்காரமாகத் தோற்றின. சிறப்பான மக்காநகரத்து எல்லைக் கோபுரங்கள் காணப்பட்டவுடன் ஹலறத்து ஆண்டவரவர்கள் தபோதனர் கூட்டத்துடன் ஆநந்தமடைந்து, நியமகப்படி நீராடி, புத்துடையுடுத்தி, பரிமளம்பூசி, தொழுது இஃறாம் கட்டிக்கொண்டு, தக்பீறு தஃலீல் முழக்கத்தோடு மக்காவுக்குள் பிரவேசித்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்கா நகரத்திற்குள் புகுந்து நேரே பைத்துல்லா என்னும் பரிசுத்தமான தேவாலயத்தைத் தரிசித்து ஸலாம்சொல்லி, ஏழுதரம் பிரதக்ஷணம் செய்து, பிரவேசாரம்பத்தில் அல்லாகுத்த ஆலாவை



வணங்கவேண்டிய எல்லாவணக்கங்களையும் வணங்கி, ஓத வேண்டியவைகளையும் ஓதி, ஸபா, மறுவா முதலான தானங்களையும் சந்தித்து, பின் ஹிஜ்ஜின்காலமாகிய துல்ஹஜ்ஜு மாதம் வரும்வரையும் ஒரு இடத்தில் சாகைபண்ணிக் கொண்டு தங்கியிருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்காவிற்போ யிருக்கும் போது, நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களின் பௌத்திரராகிய சையிது அப்துல்காதிறு வந்திருக்கிறார்கள் என்னும் சமாசாரம் அந்த எல்லைமுழுதும் பிரஸ்தாபமாயிருந்தது. இவ்வித மகிமையுடன் ஆண்டவரவர்கள் துல்ஹஜ்ஜு மாதத்தை எதிர்பார்த்துக்கொண்டு மக்காவிலிருந்தார்கள்.

மக்காவுக்குப் போனது முற்றிற்று.

---

௫௭-ம் அத்தியாயம்.

## ஹஜ்ஜு செய்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்காவில் ஹஜ்ஜுசெய்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு மீறான் சுல்தான் ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் மக்கா நகரத்தில் தங்கள் பாட்டனாராகிய குத்புல் அக்தாபு முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்கள் கல்வத்திலிருந்த தானத்திலேயே சாகைபண்ணி யிருந்தார்கள். ஆண்டவரவர்கள் அங்கேபோய்த் தங்கின நாள்முதல் உள்ளூரிலும், புறவூர்களிலுமுள்ள பெரியோர்கள் அனைவரும் வந்து வந்து தரிசனை பண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆபிதீன்கள், ஜாஹிதீன்கள், ஆஷிகீன்கள், ஆரிபீன்கள், வாஸிலீன்கள், நுஜபாக்கள், நுகபாக்கள், புதலாக்கள், உமறாக்கள்

புகறுக்கள், எல்லாரும் பிரதிதினமும் ஆண்டவரவர்கள் திருச்சபையில்வந்து கூடியிருப்பார்கள். இவ்வித மகிமையுடன் நாலாற்றுநான்கு பயீர்மார்களும் பக்கத்திலிருந்து பணிவிடைசெய்யும்படி ஆண்டவரவர்கள் மக்காவிலிருக்கும்போது, மகிமைதங்கின துல்ஹஜ்ஜு மாதம் பிறந்தது.

ஹஜ்ஜுப்பிறை பிறந்தபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்து சுக்றுசெய்துகொண்டு, சந்தோஷமாயிருந்தார்கள். மக்காவில் ஹஜ்ஜுக்குரிய சர்வபிரயத்தனங்களும் செய்யப்பட்டன. பல தேசத்து முஸ்லிம்களும் திரள்திரளாய் அங்கே வந்து கூடினார்கள்.

ஹஜ்ஜுமாதம் எழாந்திகதி அதிகாலையில் ஹஜ்ஜுக்காக மக்காவில்வந்து கூடியிருக்கும் முஸ்லிமான எல்லாச் சனங்களும் கூட்டங் கூட்டமாக ஹஜ்ஜின் கிரியைகளை நடத்துவதற்காகப் புறப்பட்டார்கள். அப்போது, ஹலறத்து ஆண்டவரவர்களும் தங்கள் நாலாற்று நான்கு தபோதனர்களுடன் புறப்பட்டு, மக்காவுக்கு வெளிப்புறமுள்ள ஜிறில்லா என்னும் தலத்திற்போய் உலுசெய்து குளித்து, பருத்திநூலால் நெய்து தைக்கப்படாத பரிசுத்தமான இரண்டு வெள்ளைப்புடவைகளில் ஒன்றை உடுத்தி, ஒன்றைப் போர்த்துக்கொண்டு, அல்லாகுத்தஆலா அளவில் முகநோக்கி "அல்லாகும்மதபீர்லி" என்று குரலெழுப்பிச் சத்தமிட்டுப் பிழைபொறுக்கக் கேட்டு, தௌபாசெய்து தொழுது துஆ இரந்து, இஹ்றாம் கட்டிக்கொண்டார்கள்.

பின் அன்றுமுழுதும் அங்கிருந்து எட்டாந்திகதிக் காலையில் புறப்பட்டு, தலை, முகம், கால் இவைகளைத் திறந்தவர்களாய் நடந்து, தஸ்பீகு, தஹ்மீது, தஹ்லீலு, தக்பீறு முழக்கத்துடன் மக்காவின் கோட்டைவாசல் வழியாய்ப்புகுந்து கஃபத்துல்லா என்னும் பரிசுத்த தேவா



லயத்து வாசலுக்குநேரே ஹறம் என்னும் புறமதிலுக்குள் புகுந்து நின்றுகொண்டு, அல்லாகுத்தஆலாவை நாடி கஃபத்துல்லாவை நோக்கி "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று ஸலாம் சொல்லித் தலைகுனிந்து "அல்லாகும்ம இன்னீ உரீதுல்ஹஜ்ஜ பயஸ்ஸிர்ஹுலீ வதகப்பல்கு மின்னீ" என்று துஆ இரந்து, பின் கஃபத்துல்லாவை நெருங்கி, அங்கிருக்கும் ஹஜ்றுல் அஸ்வது என்னும் கருங்கல்லை அடுத்துநின்று தக்பீறுடன் அந்தக் கல்லைத் தொட்டு முத்தமிட்டுக்கொண்டு, பின்பு கஃபத்துல்லாவை எழுதரம் பிரதக்கணஞ்செய்து, மகாமுல் இபுறாகீம் என்னும் இடத்திற்போய்த் தொழவேண்டிய எல்லாத் தொழுகைகளையும் தொழுது, அங்கிருந்து வெளிப்பட்டு ஸபா, மறுவா என்னும் இரு மலைகளுக்குமிடையில் விரைந்தோடி, அங்கே தங்குந்தானத்தில் தங்கி, தொழுந் தொழுகைகளைத் தொழுது, செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் செய்து, துஆ இரந்து, பிழைபொறுக்க மன்றாடி, நபிநாயகமவர்கள்பேரில் ஸலவாத்தும் ஸலாமும் சொல்லி, பின் ஓதவேண்டியவெல்லாம் ஓதி, அங்கிருந்து மீண்டு கஃபாவுக்கு வந்து முன்போல எழுதரம் பிரதக்கணஞ்செய்து, பாபுந்நுமான் என்னும் வாசல் வழியாய்ப் புறப்பட்டு மினா என்னும் தானத்திற்போய் ஐந்துவேளைத் தொழுகைகளையும் அங்கேதரித்திருந்து தொழுது, ஓதவேண்டியவைகளை ஓதிக்கொண்டிருந்தார்கள்.

ஒன்பதாந்திகதி பத்நுந்நமிறா என்னும் தானத்திற்போய்த் தங்கியிருந்து, அங்கிருந்து பதுறுல்வாதி என்னும் தானத்திற்போய் ளுகறு வேளையில் அஸறையுஞ்சேர்த்துத் தொழுது, அங்கிருந்து அறபா மலைமேலேறிக் குறித்த எல்லைக்குள் ஒரு சாமம் வரையும் தரித்து ஷுறூஉதில் இருந்து, அல்லாகுத்தஆலாவினால் பெறவேண்டிய நன்மைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு, அஸறு வேளையில் அந்த மலையிலிருந்து இறங்கி முஸ்தலிபா என்னும் தானத்திற்போய்

இராத்தங்கி, அங்கே தொழவேண்டிய ஓதவேண்டிய எல்லாக்கிரியைகளையும் செய்துகொண்டிருந்தார்கள்.

பத்தாந்திகதிக் காலையில் அங்கிருந்து புறப்பட்டு மறு படியும் மினா என்னும் தானத்திற்போய்த் தொழுது துஆ இரந்து, பெருநாள், கொண்டாடி, [illegible] தொழுது, பின் கஃபாவுக்கு வந்து பழயபடி ஏழுதரம் பிரதக்கனஞ் செய்து தொழுது, மறுபடியும் ஸபா, மர்வா என்னும் மலைகளிற் போய்த் தொழுது, ஓதிக்கொண்டிருந்தார்கள்.

பதினோராந்திகதி அங்கிருந்து பின்னும் மினாவுக்கு வந்து மூன்றுநாள் தரித்திருந்து, அங்கே செய்யவேண்டிய கிரியைகளையெல்லாஞ்செய்து, அங்கிருந்து மஷ்அறுல்ஹறாம் என்னு மிடத்திற்போய் துஆ இரந்து, அங்கிருந்து ஜம்றத் துல் அகபா என்னும் தானத்திற்போய் ஏழுகல் எறிந்து, ஒட்டகம், ஆடு இவைகளை அறுத்து குர்பான் கொடுத்து, முடி களைந்தார்கள்.

பதினான்காந்திகதிக் காலையில் அங்கிருந்து பின்னும் கஃபாவுக்கு வந்து ஏழுதரம் பிரதக்கனஞ் செய்து, பின் ஜம்ஜம் என்னும் திவ்விய நீரூற்றில் ஸ்நானபானங்கள் செய்து, பின் கஃபாவின் திரையைப் பிடித்து நின்று பிழை பொறுப்புக்காக அல்லாஹுத்தஆலா இடம் துஆ கேட்டு மன் றாடி நின்றார்கள்.

பதினைந்தாந்திகதிக் காலையில் பின்னும் கஃபாவைப் பிரதக்கனஞ்செய்து, விதாஇன் தொழுது ஸலாம்சொல்லி, ஹஜ்ஜினுடைய பறுலு, வாஜிபு, சுன்னத்து, முஸ்தஹப்பு முத லான எல்லா அறுக்கான்களையும் குறைவற நிறைவேற்றி, வேத கட்டளைப்படி ஹஜ்ஜை முடித்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஹஜ்ஜின் கடமைகளனைத் தையும் சரிவர முடித்தபின், மக்காவில் ஸியாறத்துச் செய்ய



வேண்டிய தலங்களையெல்லாம் போய்த் தரிசிக்க ஆரம் பித்து, ஓரிரவு அர்த்தசாமத்தில் எழுந்து, தங்கள் பாட்ட னார் குத்புல் அக்தாபு சையிது முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்கள் கல்வத்திருந்த இடத்தில் பாத்திஹாவோதிச் சற்றுநேரம் தரித்திருந்து, பின் ஹலறத்து உதுமான்ஹாறூனி யவர்களின் றௌலாவிற் போய் ஸியாறத்துச்செய்து அங்கிருந்து ஜன்னத்துல் முஅல்லா என்னும் கட்டிடத்திற்குப்போய், அதன் வாசலில் அடங்கி விளங்கும் ஹலறத்து * ஹாஜிஷரீபு ஜிந்தனி றலியல்லாகு அன்கு அவர்களை ஸியாறத்துச் செய்துகொண்டு, உள்ளே புகுந்து, அங்கிருக்கும் உலகமாதாவாகிய கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்கள் கபுறை ஸியாறத்துச் செய்துகொண்டு, மற்ற கபுறுகளையும் ஸியாறத்துச் செய்துவிட்டு, தங்கள் இருப்பிடம் வந்து இருந்தார்கள்.

அன்று பொழுதுவிடிந்து ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் பகீர்மார்களுடன் ஜன்னத்துல்முஅல்லாவில் விருந்து கொடுத்தார்கள். அவ்விருந்து கொடுத்து முடிந்தபின் ஆண்டவரவர்கள் தங்கள் பாட்டனாராகிய நபிகணாயகம் முகம்மது முஸ்தபா ஸல்லல்லாகு அலைகிவ ஸல்லமவர்கள் அவதரித்த பந்கா என்னும் மாளிகையிற்போய் இஃதிகாபு இருந்தார்கள்.

ஹஜ்ஜு செய்தது முற்றிற்று.

---

* இவர்கள் மதீனாவில் அடங்கியிருக்கின்றார்களென்றும், அங்கே ஸியாறத்துச்செய்யப்பட்டதென்றும், சில கிரந்தங்கள் சொல்லுகின்றன.

ருஅ-ம் அத்தியாயம்.

## மதீனாவுக்குப் போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மதீனா நகரத்திற்குப்போய், நபிநாயகமவர்களை ஸியாறத்துச்செய்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து காதிறேலி கன்ஜுஸவாய் கன்ஜுபக்ஷ் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் மக்கா நகரத்திலிருந்து மதீனா நகரம்போய்த் தங்கள் பாட்டனாராகிய நபிநாயகமவர்களை ஸியாறத்துச் செய்வதற்காக பகீர்மார்களுடன் புறப்பட்டார்கள். தவவேடம் பூண்டு விளங்கும் நானூற்று நால்வரோடு மக்காவை விட்டுப் புறப்பட்டு, வழியில் அநேக காட்சிகளையெல்லாங் கண்டு பனிரண்டுநாள் நடந்து மதீனா நகரம்போய்ச் சேர்ந்தார்கள்.

மகிமைபொருந்தின அலங்காரமான மதீனா நகரம் போய்ச் சேர்ந்தபோது, ஆண்டவரவர்கள் தபோதனர் நானூற்றுநால்வருடன் தங்கள் பாட்டனாராகிய சுல்தானுல் அன்பியாஇ, தாஜுல் அஸ்பியாஇ, இமாமுல் ஔலியாஇ, சையிதுல் முறுஸலீன், ஷபீஉல் முதுனபீன், இமாமுல் முத்தகீன், காத்திமுல் நபிய்யீன், ஹபீபுறப்பல் ஆலமீன், அகுமது முஜ்தபா, மகுமூதுமுறுதலா, முகம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் அடங்கியிருக்கும் மகத்துவம் பெற்ற அலங்காரமான ஆலயத்திற் பிரவேசித்து, முந்தி அவர்களின் சிறப்பானகபுறை ஷறுத்தின்படி ஸியாறத்துச் செய்தார்கள்.

பின் அவர்களின் கலீபாக்களாகிய அமீறுல் மூமினீன் அபூபக்கர் ஸித்தீக்கு, அமீறுல் மூமினீன் உமறுல் பாறூக்கு றலியல்லாகு அன்குமா இவர்கள் இருவர் சமூகத்திலும் போய்



ஸலாம் சொல்லிநின்று, இரண்டு கபுறுகளையும் ஒழுங்கின்படி ஸியாறத்துச் செய்தார்கள். அதன்பின் தங்கள் பாட்டியாராகிய கைறுன்னிஸா பாத்திமத்துஸ்ஸுஹுறா றலியல்லாகு அன்கா அவர்கள் கபுறடியிற்போய் ஒழுக்கத்துடன் ஸியாறத்துச் செய்தார்கள்.

பிறகு அந்தத் திவ்வியாலயத்திற்குள் மூன்றுநாள் இருத்திக்காயிருந்து, ஓதவேண்டியவையெல்லாம் ஓதி துஆ இரந்து, செய்யவேண்டிய கிரியைகளையுஞ் செய்தார்கள். அங்கே ஆண்டவரவர்களுக்குப் பெறுதற்கரிய பெரும் பேறுகளெல்லாம் பெறக்கிடைத்தன.

பின்பு ஆண்டவரவர்கள் அங்கிருந்து புறப்பட்டு ஜன்னத்துல்பகீது என்னும் தலத்திற்குப்போய், அமீறுல் மூமினீன் உதுமான் திந்நூறைன் றலியல்லாகு அன்கு அவர்களையும், அப்பாசு றலியல்லாகு அன்கு, இமாம் ஹஸன் றலியல்லாகு அன்கு இவர்களையும், இன்னும் அங்கே அடங்கியிருக்கும் அஸ்ஹாபுகள், தாபிஈன்கள், இமாம்கள், ஔலியாக்கள், உலமாக்கள் அனைவரையும் ஒழுங்கின்படி ஸியாறத்துச் செய்து முடித்து, பின்பு மதீனா நகரத்தைவிட்டுப் புறப்பட்டு, மக்கா நகரம்வந்து சேர்ந்தார்கள்.

மதீனாவுக்குப் போனது முற்றிற்று.

### ௫௯-ம் அத்தியாயம்.

## திருவாக்குப் பெற்றது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் கருபத்துல்லாவில் அல்லாகுத்தஆலாவின் திருவாக்குப் பெற்ற வறலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் முதல்தடவை ஹஜ்ஜுசெய்தபின் மதீனாவிற்போய் ஜியாறத்துச்செய்து திரும்பிவந்து, சிலவருஷம் வரையும் மக்காவிலேயே குடியிருந்தார்கள். ஒவ்வொரு ஹஜ்ஜு செய்து முடியும் ஒவ்வொரு தடவையிலும் மதீனாவுக்குப் போய், தங்கள் பாட்டனார் நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களை ஜியாறத்துச் செய்துகொண்டு மக்காவுக்கு வருவார்கள். ஒவ்வொரு ஜியாறத்திலும் நபிநாயகமவர்கள் பேரில் கந்தூரி கொடுக்காமல் திரும்புகிறதில்லை.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்கா நகரத்திற் குடியிருந்த காலமுழுதும் தங்கள் தலைக்குப் பாகை, தொப்பி ஒன்றும் அணியாமல் தலைதிறந்தவர்களாய், கால்களுக்கு மிதியடி, செருப்பு ஒன்றும் பூணாமல் வெறுங்காலோடுதான் இருந்தார்கள். அன்றியும், தைக்கப்படாத இரண்டு வெள்ளைப்புடைவைகளை அணிந்துகொண்டு, கட்டின இஃறமுடனேயே யிருந்தார்கள். இன்னும் அவர்கள் ஒருநாளிலும் அட்டணைக்கால் போட்டதில்லை; கால்கள் நீட்டிப் படுத்ததில்லை; வாகனங்களில் ஏறினதில்லை. வருஷத்திற்கு ஐந்துநாள் தவிர மற்றப் பகற்காலமெல்லாம் உபவாசமாகவே யிருப்பார்கள். இராக்காலமெல்லாம் கருபர்விற்போய்ப் பிரதக்கணஞ் செய்து, குறுஆன் முழுவதையும் ஓதித்தொழுவார்கள். ஒருதினமாவது அவர்கள் உளுவில்லாமலிருந்ததில்லை.

இவ்வா றிருக்குங்காலத்தில் ஒருநாள் இரவு ஹலறத்து ஆண்டவரவர்கள் கருபாவிற்போய், பரிசுத்தமான அந்தத் தேவாலயத்தைத் தங்கள் சிறப்பான தாடியாற் சீய்த்துப் பெருக்கி முத்தமிட்டுக்கொண்டு, வாசலுக்குமுன் தலைகுனிந்து ஸலாம்சொல்லி நின்று தக்பீறுகட்டி, குறுஆன் முப்பது ஜுஜுக்களையும் இரண்டு றக்அத்தில் ஓதித் தொழுது முடித்து, இருகைகளையும் ஏந்தி "என் கர்த்தாவாகிய எஜமானே, உன் சிற்றடிமையாகிய இந்த அப்துல்காதிறு உன்னைத் தீர்ப்பாயறிந்து, பரிசுத்தமாக வணங்கினவனல்ல. உன் மகத்துவம் இப்படிப்பட்டதென்று திடனாக அறியவில்லை. ஆனாலும், கர்த்தாவாகிய நீ உன் அடியானாகிய என் பிழைகளையும், என்னைப் பின்தொடர்ந்தவர்களின் பிழைகளையும் பொறுத்து, என்னை ஒப்புக்கொண்டு கிருபைசெய்து, உனது திருகாட்சியைத் தந்தருள்" என்று துஆ இரந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அர்த்தசாம வேளையில் இப்படி துஆ கேட்டபோது, கருபாவுக்குமேலே ஆகாயத்திலிருந்து "ஷாகுல்ஹமீதே, நீர் என்னைத் தீர்ப்பாயறிந்து, பரிசுத்தமாகவே வணங்குகிறீர். உம்மையும், உம் வணக்கங்களையும் நான் பொருந்திக் கொண்டேன். உமது பிழைகளையும், உம்மைத் தொடர்ந்தோர் பிழைகளையும் பொறுத்துக் கிருபைசெய்தேன்" என்று ஒரு சத்தம் கேட்டது. அல்லாகுத்த ஆலாவின் புறத்திலிருந்துவந்த இந்தச் சொல்லைக் கேட்டமாத்திரத்தில் ஆண்டவரவர்கள் அப்படியே சுஜூதில் விழுந்து ஆநந்த பரவசமடைந்து, முஷாஹதாவிலிருந்தார்கள். அப்படி பஜறுவருமளவும் சுஜூதிற்கிடந்த ஆண்டவரவர்கள் பஜறானவுடன் எழுந்து தொழுது முடித்து, அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து சுக்றுடன் சாகைக்கு வந்தார்கள்.

திருவாக்குப் பெற்றது முற்றிற்று.

௯௦ - ம் அத்தியாயம்.

## கொழிஞ்சிக்கனி பெற்றது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மதீனாவிற் போய்த் தங்கள் பாட்டனாராகிய நபிநாயக மவர்களிடத்திலிருந்து கொழிஞ்சிக்கனி பெற்ற வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது மீறான் சுல்தான் அப்துல்காதிறு ஆண்டவரவர்கள் மக்காவிலிருந்த காலத்தில் ஒவ்வொரு ஹஜ்ஜின் முடிவில் மதீனாவுக்குப்போய்ப் பாட்டனாரவர்களை ஜியாறத்துச் செய்வது வழக்கமல்லவா? அப்படியே ஒரு வருஷத்து ஹஜ்ஜை முடிந்தவுடன் மதீனாவுக்குப் போனார்கள். ஆண்டவரவர்கள் மதீனாவுக்குப்போனால், அங்கிருக்கும் நாளெல்லாம் பகல்முழுதும் உபவாசமாகவும், இரா முழுதும் நின்று வணங்குகிறவர்களாகவும், ஒவ்வொரு வேளைத் தொழுகையிலும் நபி நாயகமவர்கள் சமுகத்திற் போய் குறுஆன், ஸலவாத்து, தறூது இவைகளையோதி ஹதியாசெய்து தங்களுக்காக துஆ செய்கிறவர்களாகவுமே யிருப்பார்கள்.

ஒரு நாள் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் பாட்டனாராகிய நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவ ஸல்லமவர்களின் சிறப்பான றௌலாவிற் புகுந்து, அங்கே யிட்டிருக்கும் திரையைப்பிடித்து முத்தமிட்டு நின்று கொண்டு "அஸ்ஸலாமு அலைக்கும் யாஜத்தீ, யாறசூலல்லா" என்று ஸலாம் சொல்லி, முனாஜாத்துச் செய்தார்கள். றௌலாவுக் குள்ளிருந்து "வஅலைக்குமுஸ்ஸலாம் யாபுனையீ, யாநாயிபீ" என்று பிரதி வந்தது. வந்தவுடன் நபி நாயக மவர்களின் சந்திப்புங்கிடைத்தது. அங்கே பல வரிசைகளையும் ஆண்டவரவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் பாட்டனாரவர்களின் றௌலா விலிருந்து ஆநந்தத்துடன் வெளிப்பட்டார்கள். அப்போது அவர்களின் இருகைநிறையக் கொழிஞ்சிக்கனிகள் இருந்தன. அக்கனிகளைத் தங்கள் பகீர்மார்கண்டு : எஜமானவர்களே, இவை நபிநாயக மவர்களின் றௌலாவுக்குள்ளிருந்து எப்படித் தங்களுக்குக் கிடைத்தன? என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவரவர்கள் : இவை என்பாட்டனார் எனக்குக் கொடுத்த வெகுமதி என்று சொல்லி, அக்கனிகளை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். அந்த மகத்துவமுள்ள கனிகளை அவர்கள் தின்றபோது, அவை இவ்வுலகத்துக் கனிகளைப்பார்க்கிலும் அதிக மதுரமும், வாசனையு முள்ளனவாயிருந்தன. அவைகளை எல்லாரும் தின்று, அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள்.

கொழிஞ்சிக்கனி பெற்றது முற்றிற்று.

௯௧ - ம் அத்தியாயம்.

## மரக்கலத்தானஞ் செய்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்கா நகரத்தில் ஆலயமொன்று கட்டினதும், மரக்கலமொன்றை ஒருவருக்குத் தானமாக்கொடுத்ததுமான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல் காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் தங்கள் பாட்டனாராகிய நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவ ஸல்லமவர்களின் றௌலாவுக்குள் பெற்ற கொழிஞ்சிக்கனியைத்தின்று ஆநந்தமானபின், தங்கள் பகீர்களுடன் மதீனாவை விட்டுப்புறப்பட்டு, மறுபடியும் மக்காவில் வந்து தங்கினார்கள். ஆண்டவரவர்கள் மக்காவில் இருந்தாலும் ஒரேயிருப்பாக அங்கே யிருந்திடவில்லை. அடிக்

கடிச் சுற்றுப் பிரயாணஞ்செய்து பல நாடு நகரங்களைத் தரிசித்து வந்தார்கள். எங்கெந்தவூர்களுக்குப் போனார்களோ அந்தந்தவூர்களில் இல்முகளைக் கற்பிக்கும் கல்விச்சாலையாகிய மதறஸாக்களை ஏற்படுத்தி, குறுஆன், நகுவு, ஸறுபு, பிக்ஹு அகாயிது, தஸவ்வுபு முதலான இல்முகளைப் பலர்க்குங் கற்பிக்கும்படி ஆசிரியர்களை நியமித்து, அதற்குப் பிடிக்கும் செலவுக்கும் தக்கபடி ஒரு வருவாயுண்டுபண்ணிப் பெரும் நன்மைகளைச் செய்வார்கள். அன்றியும், அங்கங்கே தங்கள் சமுகத்தைத் தேடிவரும் வியாதிகாரர்களுக்கு வியாதிகளைத்தீர்த்து, உண்ண உடுத்த வகையற்ற ஏழைகளுக்கு உணவும், ஆடையுங் கொடுத்து ஆதரிப்பார்கள். அவரவர் எண்ணிவரும் நாட்டங்களையும் நிறைவேற்றுவார்கள். அநேகரை முரீதுகளாக்கி நேர்வழிகாட்டுவார்கள். இதனால், ஆண்டவரவர்கள் சென்ற இடமெங்கும் சிறப்பும், ஜனசந்தடிப் பெருக்கமுமாகவே யிருக்கும்.

பலவழியிலும் வரையறையின்றிப் பொருட் செலவு செய்வதற்கும் ஹலறத்து ஆண்டவரவர்களிடத்தில் ஏதும் ஒரு பொக்கிஷம் உண்டா? இல்லை! இல்லை!! அவர்கள் போய்த் தங்கியிருக்கும் எந்தத்தானத்திலுஞ்சரியே, ஒவ்வொரு நாளிலும் பஜறுவேளைகளில் தொழுதுவிட்டு ஒஜீபா ஓதிக்கொண்டிருப்பார்கள். அப்போது, தங்கள் கலீபாக்களுள் ஒருவராகிய சைகு முகம்மதுஹுஸன் என்பவர் போய், சமுகத்தில் ஸலாம் சொல்லி, அடிபணிந்து நிற்பார். உடனே ஆண்டவரவர்கள் தங்கள் வலக்கரத்தை முஸல்லா என்னும் தொழுகை விரிப்பின் கீழ் பிஸ்மி சொல்லி இட்டு எடுத்து, அவர் இருகைநிறையப் போடுவார்கள். அப்போது, அக்கைகள் நிரம்ப அந்தந்தத் தேசத்து வெள்ளி, பொன் நாணயங்களா யிருக்கும். அவற்றைக் கொண்டு போய், அவர் அன்றைக்கு உண்டாகும் எல்லாச் செலவுகளுக்கும் தாராளமாகச் செலவு செய்வார். அன்றிரவோடு



ஒரு செம்புச் சல்லியும் மீந்திராது. மற்றநாளும் அப்படியே நடக்கும். இந்த அற்புதப்பொக்கிஷம் ஒன்றைக்கொண்டே இவ்விதமாக ஒவ்வொரு நாளும் செலவிட்டு, பரோபகாரங்களைத் தரிபாடாக்கிவந்தார்கள். அன்றியும், யாராவது தங்களுக்குப் பாதகாணிக்கையாகக் கொணர்ந்து சமர்ப்பிக்கும் எவ்விதப் பொருளையும் உடனே வந்துகூடும் எளியோர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள்.

இவ்வாறாக ஹலறத்து, ஆண்டவரவர்கள் நடத்திக்கொண்டு, சுற்றுப்பிரயாணமுஞ் செய்துகொண்டு, மக்காவில் இருந்தார்கள். ஆண்டவரவர்கள் மக்காவி லிருக்கும்போது, ஒருநாள் தங்கள் சமுகத்தில் பிரதிதினமும் வந்து பணிவிடை செய்துகொண்டிருக்கும் ஒரு அறபியைக் கூப்பிட்டு: நீர் நல்லவூழியர். என்பேரால் இவ்வூரில் குத்பாப்பள்ளியொன்றுகட்டும் என்றும் கட்டளை யிட்டார்கள். அவ்வறபி ஆலயங்கட்டத்தக்க அத்தனை திரவியமுள்ளவரல்ல; மிகவும் எளியவர். அப்படி யிருந்தும் ஆண்டவரவர்கள் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு, ஆலயங்கட்டத் தொடங்கினர்.

அறபி ஆலயங்கட்டத்தொடங்கிக் கல்முதலிய சாமான்களைச் சேர்த்துத் தயார் பண்ணிக்கொண்டு, கூலியாட்களை யழைத்து வேலை யாரம்பித்தார். அப்போது ஆண்டவரவர்கள்: வேலைநடக்கும் ஒவ்வொரு நாளிலும் கூலியாட்களுக்கு நீர் பணங் கொடுக்கவேண்டாம்; அவர்களை இங்கே என்னிடம் கூட்டிக்கொண்டு வாரும் என்று அவ்வறபிக்குச் சொல்லி யனுப்பினார்கள். அவர் அப்படியே ஒவ்வொரு தினத்திலும் வேலைசெய்த கூலியாட்களை அழைத்துக் கொண்டு ஆண்டவரவர்கள் சமுகத்தில் வருவார் அப்போது ஆண்டவரவர்கள் அறபியைப் பார்த்து: உமது கையை நான் இருக்கும் விரிப்பின் கீழிட்டு, செய்த வேலைக்குத் தக்க கூலித் தொகையையெடுத்து அவரவருக்குக்

கொடும் என்பார்கள். அவர் அவ்வாறே விரிப்பின் கீழ் கையிட்டு எடுக்கும்போது, அன்றைக்கூலிக்குத் தக்க தொகை கிடைக்கும். அத்தொகையை அன்றைய வேலைக்குக் கூலியாகக் கொடுப்பார். இப்படியே பிரதிதினமும் நடந்துவந்தது.

இவ்வாறு அற்புதப் பொருளைக்கொண்டு சில நாட்களில், ஆலயங்கட்டி முடிந்தது. தேவாலயங்கட்டித் தீர்த்தபின், ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் ச்போதனராதியோருடன் அவ்வாலயப் பிரவேசஞ்செய்து, வணக்கத்திற்குரிய அல்லாதுந்தஆலாவை ஜமா அத்தோடு தொழுது துஆ இரந்து, ஏழைகளுக்குத் தானங்களும் வழங்கினார்கள். ஆண்டவரவர்கள் மக்காவிற் கட்டுவித்த அந்த ஆலயம் அன்றுதொட்டு அநேகர் கூடித்தொழத் தக்கதாய்ச் சிறந்து விளங்கிற்று.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்காவில் இருக்கும் போது அங்குள்ள அறபிகளில் சைகு அப்துல்லா என்பவர் வந்து அடிபணிந்து நின்று: எஜமானவர்களே, எனக்கொரு மரக்கலமுண்டு. அம் மரக்கலத்திற்குத் தலைவனாக என் மகன் அப்துல் அஜீஜ் என்பவனை நியமித்து, ஜித்தாவிலிருந்து பாய் விரித்து ஸ்கந்தரிய்யாவுக்குப் போகும்படி அநுப்பினேன். அம்மரக்கலம் அங்கேபோய்ச் சேர்ந்து, சரக்குகளை இறக்குமதி ஏற்றுமதி செய்துகொண்டு, அங்கிருந்து ஜித்தாவுக்குப் பிரயாணப்பட்டது. அப்படிப் பிரயாணமாய் அதிக நாளாயும் இன்னும் அக்கப்பல் ஜித்தாவுக்கு வந்து சேரவில்லை. அவ்வுருவுடன் பாய்விரித்த சிலவுருக்கள் ஜித்தா வந்து சேர்ந்துவிட்டன. அதின் சங்கதி ஒன்றும் தெரியவில்லை. அதில் ஏறியிருக்கும் என் மகனோ, நான் வரங்கிடந்து பெற்ற ஒரேமகன். இப்போது நான் அவனைப்பற்றிக் கவலைப்படுகிறேனே யன்றி, கப்பலைப் பற்றிக் கவலைப்படவில்லை. தேவரீர் தாங்கள் என்மகனையும், கப்பலையும் ஆபத்தின்றி வந்துசேரும்படி துஆ செய்ய வேண்டித் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று வாடின முகத்துடன் முறையிட்டார். இம்முறைப்பாட்டைக் கேட்ட ஆண்டவரவர்கள் அவரைப்பார்த்து: நீர் கவலைப் படாதீர் அல்லாதுந்தஆலா உமது நாட்டப்படி நிறைவேற்றித் தருவான் என்றுசொல்லி அநுப்பிவிட்டார்கள்.



அந்த சைகு அப்துல்லா இவ்வாறு முறையிட்டு நன்மாராயம் பெற்றுக்கொண்டு போன எட்டாம்நாள் வியாழக் கிழமைப் பகல் ஒரு அழகிய்பாலியனை அழைத்துக்கொண்டு வந்து ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவடிக்கீழ்க் கிடத்தி: எஜமானவர்களே, இவன்தான் என்மகன் அப்துல் அஜீஜ். இவன் ஏறிப்போன என்மரக்கலம் ஸ்கந்தரிய்யாத் துறையிலிருந்து பாய்விரித்து ஓடிவரும்போது, நடுக்கடலில் மும்முரமாய்மோதின புயலில் அகப்பட்டு வில்லங்க முற்றதாம். பின் தேவரீரிட்ட திருவாக்கின்படி யாதொரு தீங்குமின்றி ஜித்தாத்துறையில் வந்து சேர்ந்துவிட்டது. இது தங்கள்பொருட்டே யென்று சொல்லிவிட்டு, அந்தப் பாலியன் தலையில் சுமந்துவந்த ஒருபொற்பணப் பையையும், முத்திரைபோட்டு எழுதின ஒரு பத்திரத்தையும், ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் காணிக்கையாக வைத்து: இவற்றைத் தாங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்போது ஆண்டவரவர்கள் அந்தப் பொற்பணப்பையை யெடுத்து அங்கே கூடியிருந்த ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, பத்திரத்தை வாங்கி வாசித்தார்கள். அதில் எழுதியிருந்தது இது:—

"எனக்குச் சொந்தமான இன்னகப்பலையும், அதில் ஏற்றியிருக்கும் சரக்குகளையும், ஹலறத்து சையிது அப்துல் காதிறு அவர்களுக்குப் பாதகாணிக்கையாக நான்கொடுத்து விட்டேன். அவர்கள் அவற்றை ஒப்புக்கொண்டு, தங்கள்

பிரியப்படி அநுபவித்துக்கொள்ளுவார்களாக. இப்படிக்கு, சைகு அப்துல்லா மக்கி ''

என்று எழுதி, வருஷம், மாதம், திகதி, சாக்ஷிகள் எல்லாம் போடப்பட்டிருந்தன. ஆண்டவரவர்கள் அதைப் பார்த்து, ஒன்றும் பேசாமல் தலையைக் கவிழ்ந்துகொண்டிருந்தார்கள். பின் அந்தப்பத்திரம் அவர்கள் உட்கார்ந்திருக்கும் விரிப்பின்கீழ் வைக்கப்பட்டிருந்தது. மனிதர் பலர் கூடியிருந்தார்கள். அந்த நேரத்தில், மக்காவில் பெருந்தொழில் செய்து, பின் ஏழையாய்விட்ட ஒரு எளியவர் ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து ஸலாம் சொல்லி ''அல்லாவுக்காகத் தானங்கொடுங்கள்'' என்று கேட்டார். உடனே ஆண்டவரவர்கள் ஒரு பொற்காசையெடுத்து அவர் கையிற் கொடுத்தார்கள். அவர் அதை மறுத்து ''நான் இதற்காக வரவில்லை'' என்றார். பின் ஆண்டவரவர்கள் இரண்டு பொற்காசுகளையெடுத்துக் கொடுத்தார்கள். அப்போதும் அவர் ''நான் இவைகளுக்காகவும் வரவில்லை; தங்கள் விரிப்பின்கீழிருக்கின்றதே, அதற்காக வந்தேன். அதைத் தாருங்கள்'' என்றார். உடனே ஆண்டவரவர்கள் சிரித்துக்கொண்டு, விரிப்பின் கீழிருக்கிற கப்பற்சாசனத்தை யெடுத்து அவர்கையிற் கொடுத்து: இந்தப்பத்திரத்திற் கண்ட மரக்கலத்தை அதில் ஏற்றியிருக்கும் சரக்குகள் உள்பட நான் ஒப்புக்கொண்டு, அவற்றை உமக்கு வெகுமதியாகத் தந்துவிட்டேன். இப்போது அவற்றை நீர் ஒப்புக்கொண்டு, உமது சித்தத்தின்படி அநுபவிப்பீராக என்று சொல்லிவிட்டு, தங்கள் கலீபா சைகு முகம்மதுஹஸனையும், சைகு அப்துல்லாமக்கியையும் அந்த எளியவருடன் கூட்டி, ஜித்தாவுக்குப்போய் மரக்கலத்தை அந்த எளியவர்வசம் ஒப்படைக்கும்படி கட்டளைபண்ணி அனுப்பினார்கள். அப்படியே அவ்விருவரும் ஜித்தாவுக்குப்போய், கப்பலையும்.



சரக்குகளையும் அந்த எளியவர்வச மாக்கிவிட்டு, திரும்பி வந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் தெரிவித்தார்கள். பின்பு ஆண்டவரவர்கள் அதற்காகச் சந்தோஷமடைந்து, அல்லாதஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்துவிட்டு, மேற்படி சைகு அப்துல்லாமக்கிக்கும், அவர்குமாரர் அப்துல் அஜீஜுக்கும் துஆசெய்து, அவ்விருவரையும் அனுப்பினார்கள்.

மரக்கலத்தானஞ் செய்தது முற்றிற்று.

---

௩௨-ம் அத்தியாயம்.

## புத்திரர்வந்து சேர்ந்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் புத்திரராகிய ஹலறத்து, சையிது முகம்மது யூசுபு சாகிபவர்கள் லாகூரை விட்டுப் புறப்பட்டு, மக்காவில் தந்தையுடன் வந்துசேர்ந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது சுல்தான் ஷாகுல் ஹமீது ஆண்டவரவர்கள் பொருட்டால், லாகூர் காலி சைகு நூறுத்தீன் முப்தியவர்கள் குமாரராக அவதரித்த ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹி யவர்கள், லாகூரில் பிதா மாதாக்களின் ஆதரவில் சுற்றத்தார் உயிரென்று பேணும்படி வளர்க்கப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு நான்கு பிராயமானபோது, தந்தையவர்கள் குறுஆன் ஓதும்படி செய்தார்கள். அவர்கள் ஓதும் பிராயமாயிருந்து கல்விச்சாலைக்குப் போய்வந்துகொண் டிருக்குங்காலத்தில், பிதாமாதாக்களுக்கு உண்டாயிருக்கும் கிருபைக்கு அளவில்லை. அவர்கள் தகப்பனார் காலி நூறுத்தீன் முப்தியவர்கள் மைந்தரைச் சந்திக்கும் போதெல்லாம் ''என் அருமைக் கண்மணியான சிரேஷ்டமகனே, உம்மைப் பெற்றதால், நான் என்றும் பெறாத நன்மைகளைப் பெற்றேன்'' என்று ஆனந்தத்துடன்

சொல்லி, மனங்குளிர்ந்து அணைத்துக்கொண்டுதான் சம்பாஷிப்பார்கள். அவர்களுக்குப் பின்னும் ஆண்மக்கள் பெண்மக்கள் உண்டாயிருந்தும், பிதாமாதாக்களின் கிருபை முழுதும் மூத்தமகனாகிய சையிது முகம்மது புகாரி சாகிபு அவர்கள்மீதே யிருந்தன.

இவ்வாறாக ஹலறத்து சையிது முகம்மது புகாரி சாகிபவர்கள் பிதாமாதாக்கள், சுற்றத்தார் இவர்களின் முழுக் கிருபையையும் பெற்று, அவர்கள் எல்லார் மீதும் கிருபையுள்ளவர்களாய், அல்லாகுத்தஆலாவின் காவலைக் கொண்டு, குறுஆன் ஓதிவரும் காலத்தில், ஓரிரா அவர்களின் சொப்பனத்தில் சையிது ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள்போல ஒருவர் வந்துநின்று: மகனே, வாயைப்பிள என்று சொல்லி, பிளந்தபின் வாயில் உமிழ்ந்து, நீ இல்மில் சிறப்படைவாய் என்று சொல்லிவிட்டு மறைந்து போனார்கள். அன்றுமுதல் அவர்களுக்கு குறுஆன் முழுதும் மனனமாய், நகுவு சறுபாதி நூல்களும், பிக்ஹு, அகாயிது, தவ்ஸவ்வுபு முதலான இல்முகளும் மனதிற் குடியாயின. எந்தக்கிதாபை யெடுத்து வாசித்தாலும் அதிலடங்கின அகப்பொருள் புறப்பொருள் அடங்கலும் தெளிவாய்ப் புலப்பட்டு வந்தன. ஏழுபிராயத்தை யடையுமுன் பதினன்கு இல்முகளிலுந் தேறினார்கள்.

பின்பு, சையிது முகம்மதுபுகாரி சாகிபவர்களுக்கு எழு வயதாயிற்று. ஒருநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து குத்பாப்பள்ளியிற் போய் இமாம் ஜமாஅத்துடன் பஜுறு தொழுது முடித்து, குறுஆன் ஓதிக்கொண்டிருந்தார்கள். ஓதி முடிந்தவுடன் "சையிது முகம்மதுபுகாரியே, உமது தந்தை சையிது அப்துல்காதிறு மக்காவில் கஃபாவின் ஹறத்துக்குள்ளிருந்து கொண்டு, உமது வருகையை அதிகவிருப்பத்துடன் எதிர்பார்க்கின்றார். அவரிடம் நீர்போய்ச் சேர்ந்து கொள்வதுகொண்டு உமக்கு துன்யாவிலும்,



ஆகிறத்திலும் ஜயம் பெறுத லுண்டாகும்" என்று அசரீரியான ஒரு சத்தம் காதிற் கேட்டது. இச்சத்தத்தைக் கேட்டு திகைத்து மனதில் ஆராய்ந்து, உடனே யெழுந்து வீட்டுக்கு வந்து, தகப்பனாராகிய காலி நாறுத்தீன் முப்தியவர்களின் முன்போய்ப் பணிந்து நின்று, [மன் அபீ லித்தன்] "என் உண்மையான தக்ப்பன் யார்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனு அபூக்க லைக்கன்]". திடனாக நான்தான் உமது தகப்பன்" என்று மறுமொழி சொன்னார்கள், இதைக்கேட்ட சையிது முகம்மதுபுகாரி சாகிபவர்கள் பின்னும் தகப்பனாரை நோக்கி [அந்த அபூ பதனி, வஜிஸ்மீ மைன் அபூ றூஹி, வறஸ்மீ.] "மெய்தான்: தாங்கள் என் உடலுக்குத் தகப்பன் தான். என் றூஹுக்குத் தகப்பன் யார்?" என்று மறுத்துங் கேட்டுவிட்டு, "அல்லாவினாலே என் தந்தை சையிது அப்துல்காதிறு இடத்தில் நான் போய்ச் சேர்ந்துகொள்வேன்: இன்ஷா அல்லா" என்று சொன்னார்கள்.

இச்சொல்லைக் கேட்ட தகப்பனாராகிய காலி நாறுத்தீன் முப்தியவர்கள் ஆச்சரியப்பட்டு ஆலோசித்து, [மன் அன்பா அக்க ஹாதல் கபறல் கபிய்ய] "மகனே, இந்த ரகசியத்தை உமக்கு அறிவித்தவர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் [நப்பானி அல்லாதுல் அல்லாமுல் கபிய்யி] "ரகசியங்களை யெல்லாம் அறிந்திருக்கும் அல்லாகுத்தஆலா இதை எனக்கு அறிவித்தான்" என்று சொல்லிவிட்டு: என் தந்தை கொடுத்த அடையாளம் ஏதாவதுண்டா? கொடுங்கள் என்று கேட்டார்கள். அப்போது தாயாராகிய ஜுஹுறாபீவி: மகனே, அப்படி ஒன்றிருந்தால், நீரே யெடுத்துக்கொள்ளும் என்றார்கள்.

இச்சொல்லைக்கேட்டு ஹலறத்து சையிது முகம்மது புகாரி சாகிபவர்கள் பெட்டியைப் போய்த் திறந்து, முன் ஹலறத்து ஆண்டவரவர்கள் கொடுத்த பற்கொம்பைத்

தாங்களே கொண்டுபோய் வைத்ததுபோலவே எடுத்துக்கொண்டு, தந்தையவர்களை நாடிப் பிரயாணப்பட்டார்கள். அப்போது பிதாமாதாக்கள் கண்ணீர் சொரிந்து அழுது: மகனே, நாங்கள் விரும்பியிருந்து பெற்றநீர் எங்களைவிட்டுப் போகாதீர். அப்படிப் போய்விட்டால் உம்மோடே எங்கள் எல்லாச் சுகங்களுந் தொலைந்துபோம். போகாதீர் மகனே என்று பலவாறு சொல்லித்தடுத்தார்கள்.

எவ்வளவு சொல்லித் தடுத்தும் கேளாமல்: நான் என் தந்தையவர்களைக் கண்ணாரக் கண்டாலல்லாமல் தரித்திருக்க மாட்டேன் என்று சொல்லி, ஒரேபிடியாய்ப் புறப்பட ஒருப்பட்டார்கள். அப்போது, தகப்பனார்: மகனே, உமது தந்தை சையிது அப்துல்காதிறு இப்போது மக்காவிலிருக்கிறார்கள். நீர் தன்னந்தனியே அவர்களைத் தேடிப்போவது கூடாது. சில துணைவர்களையாவது சேர்த்துக் கொண்டு போவீராக என்று சொல்லி, தங்கள் ஆட்களில் நாலு பேரைச் சேர்த்து, வழிச்செலவுக்குப் பணமும், ஏறிப் போக ஒரு குதிரையும் கொடுத்து, பிரயாணப் படுத்தினார்கள். அப்போது ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் தந்தையை நோக்கி: எனது தந்தையே, தாங்கள் எனக்கு வழித்துணைக்காக இந்த நான்கு பேர்களையும் என்னுடன் கூட்டி யனுப்புகிறீர்களே. நல்லது, வழியில் இவர்கள் சொல்வதை நான் கேட்டு நடக்கிறதா? நான் சொல்வதை இவர்கள் கேட்டு நடக்கிறதா? இதன்வகை எப்படி? என்று கேட்டார்கள். அப்போது தந்தை: மகனே, நீர்சொல்வதை இவர்களே கேட்டு நடப்பார்கள்என்று சொன்னார்கள். இதை ஹலறத்து அவர்கள் கேட்டு: அப்படியானால், வழியில் நான் சொல்லும் எதையும் இவர்கள் தட்டாமல் கேட்டு நடக்கிறதாக இவர்கள் கைப்பட ஒரு எழுத்து வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். தமக்குக் கீழ்ப்படி-



யாமல் நடப்பார்களோ என்ற அச்சத்திற்காக உறுதிப்பட வேண்டியே இப்படி யெழுதிக் கேட்கின்றா ரென்று தகப்பனார் எண்ணி, அவர்கள் சொன்னபடி அந்நால்வர் கைப்பட ஒரு உறுதிமொழி யெழுதி வாங்கி மகனார் கையில் கொடுத்தார்கள். ஹலறத்து அவர்கள் அதை வாங்கிக் கொண்டு அந்நாலுபேரும் தங்கள் பின்வர, பிதாமாதாக்களின் உத்தரவு பெற்று, அவர்களைப் பணிந்து ஸலாம் சொல்லி வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள். அப்போது அவர்கள் பிதாமாதாக்கள், சுற்றத்தார் எல்லாரும் உயிரைப் பிரிந்த வெற்றுடல் போலானார்கள்.

ஹலறத்து சையது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் தங்கள் தகப்பனாராகிய ஹலறத்து ஆண்டவரவர்களை நாடி, லாகூரை விட்டு வெளிப்பட்டு நடந்தார்கள். துணைவர் நால்வரும் கூடவே தொடர்ந்து போனார்கள். அப்போது ஹலறத்து அவர்களுக்கு வயது ஏழு.

லாகூருக்கு வெளியில் கொஞ்சந்தூரம் போன பின், ஹலறத்து அவர்கள் தங்களுக்கு வழித்துணையாய் வரும் நால்வரையும் பார்த்து: நீங்கள் எழுதிக்கொடுத்த பத்திரம் இதோ பார்த்தீர்களா? இதற்கு என்ன சொல்லுகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அந்நால்வரும், ஆம் எஜமானே, தாங்கள் ஏவினபடி நடக்கக் காத்திருக்கிறோம் என்று மறுமொழி சொன்னார்கள்.

இச் சொல்லைக்கேட்ட ஹலறத்து அவர்கள் அந் நால்வரையும் பார்த்து: நான் கால் நடையாகத் தன்னந்தனியே போய் என் தகப்பனாரவர்களைத் தரிசிக்கவேண்டும். அதற்கு அல்லாகுத்தஆலா துணையிருக்கின்றான். ஆகையால், நீங்கள் என்னோடு வரவேண்டாம்; திரும்பிப் போய் விடுங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். இதைக்கேட்ட நால்வரும் திடுக்கிட்டு, மறுத்துப்பேச வாயில்லாமல் அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உடன் பட்டார்கள். உடனே ஹல

றத்து அவர்கள் தங்கள்பிதா வழிச் செலவுக் கென்று கொடுத்த பணத்தையும், ஏறிப்போகக்கொடுத்த குதிரையையும் அந்நால்வரிடம் கொடுத்து, அவர்களை லாகூருக்குத் திருப்பியநுப்பி விட்டார்கள்.

ஹலறத்து அவர்கள் தங்களுக்குத் துணையாட்களாய் வந்த நால்வரையும் அநுப்பிவிட்டு ஒன்றியாய், ஏறி நடக்க வாகனமும், உண்ண ஆகாரமும் இல்லாமல், தகப்பனராகிய ஹலறத்து ஆண்டவரவர்கள் மேல் ஒரே நாட்டமாய், அல்லாஹுத்தஆலாவின் புறத்தில் தவக்கல் வைத்துக் கொண்டு நடந்தார்கள். ஹலறத்து அவர்களுக்காக அல்லாஹுத்தஆலா அவர்கள் நடக்கும் பாதையைச் சுருக்கினான். அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், அகன்ற நதிகள், பரந்த வனாந்தரங்கள் எல்லாவற்றையும் வெகு விரைவாகக்கடந்து, ஆப்கானிஸ்தான். பெலுஜிஸ்தான், குருஸான், பெர்ஷியா, இருக்கு என்னும் இந்த இராச்சியங்களையும் நீக்கி, அறபிராச்சியத்துக் கடலருகிலிருக்கும் ஸன் ஆன் பட்டணம் போய்ச் * சேர்ந்தார்கள்.

ஹலறத்து அவர்கள் அந்தப் பட்டணத்துக் கடற்கரையிற்போய், தகப்பனருடைய நாட்டத்துடன் அங்குள்ள ஒரு மரநிழலில் உட்கார்ந்துகொண்டு; ஆழ்ந்த சிந்தனையுள்ளவர்களாக இருந்தார்கள்.

இது இவ்வாறாக, ஹலறத்து சையிது ஷாஹுல்ஹமீது பாத்துஷா ஆண்டவரவர்கள் மக்காவில் ஹிஜறத்துத் தொளாயிரத்து அறுபத்தாறும் வருஷம், றஜபுமாதம், பத்தாந்திகதி அதிகாலையில் எழுந்து கஃபாவிற் போய், தங்கள் பகீர்மார்களுடன் இமாம் ஜமா அத்தாய் பஜ்று தொழுது

* ஹலறத்து அவர்கள் தங்கள் துணையாட்களைத் திருப்பியநுப்பி விட்டு மூன்றடிவைத்து நடந்தவுடன் ஸன் ஆன் பட்டணஞ் சேர்ந்து விட்டார்களென்றும் சொல்லப்படுகின்றது.



விட்டு கொஞ்சநேரம் வரையும் ஒஜீபா ஓதிக்கொண்டிருந்து, பின் தங்கள் கலீபாக்களில் ஷைகு முஈனுத்தீனையும், ஷைகு இபுறாகீமையும், சில பகீர்களையும் கூப்பிட்டு: அல்லாஹுத்தஆலா லாகூர் காழி நூறுத்தீன் முப்தியினின்று எனக்கு உண்டாக்கித் தந்த என்மகன் சையிது முஹம்மதுயூசுபு, என்னைத் தேடிக்கொண்டு பிதா மாதாக்களாகியோர் எல்லாரையும் விட்டுத் தனியே புறப்பட்டு, அல்லாஹுத்தஆலா புறம் தவக்கல் வைத்து நடந்து, ஸன் ஆன் பட்டணத்துக் கடலருகில் வந்திருக்கின்றார். நான் அவரை மேன்மைப்படுத்தின குறியாக நீங்கள் அங்கேபோய், அவருக்கு என் ஸலாம் சொல்லி இங்கே அழைத்து வாருங்கள் என்று சொல்லி, அவர்களை யநுப்பினார்கள்.

உடனே அந்த இரண்டு கலீபாக்களும், பகீர்களும் புறப்பட்டு ஸன்ஆன் கடற்கரைக்குப்போய் அங்கே தனித்து உட்கார்ந்திருக்கும் ஹலறத்து சையிது முஹம்மது யூசுபு சாகிபவர்களைக்கொண்டு ஸலாம் சொல்லி, ஹலறத்து ஆண்டவரவர்களின் ஸலாத்தையும், அவர்கள் சொன்ன செய்திகளையும் சொல்லி அழைத்தார்கள். இதைக்கேட்ட ஹலறத்து அவர்கள் சந்தோஷங்கொண்டு, தந்தையவர்களிடம் வருவதற்காக அவர்களோடு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

ஹலறத்து அவர்கள் தங்களை யழைக்க வந்தவர்களுடன் நடந்து மக்காவுக்கு அருகில் வந்தபோது, அழைத்து வரும் ஷைகு முஈனுத்தீன் முதலானவர்கள் ஹலறத்து அவர்களை இஹ்றாம் கட்டுவித்து தங்கள் தோள் மேல் ஏற்றிச் சுமந்துகொண்டு, தக்பீறு, தஹ்லீலு முழக்கத்துடன் மக்காவுக்குள் புகுந்தார்கள். அப்போது ஹலறத்து ஆண்டவரவர்கள் கஃபாவின் ஹறத்துக்குள் இருந்தார்கள். இவர்கள் இவ்விதம் தக்பீறு, தஹ்லீலு முழக்கத்துடன் வருவதை அறிந்து, தாங்கள் பகீர்மார்களுடன் ஹறத்தை விட்டு

எழுந்து தங்கள் புத்திரருக்கு எதிர்கொண்டு வந்து சந்தித்து, கட்டித்தழுவி, நன்மாராயஞ் சொல்லி, எல்லாரும் திரண்டு சூழ அழைத்துக்கொண்டு போய், கஃபாவைப் பிரதக்கணஞ்செய்து, இமாம் ஜமா அத்துடன் லுகறு தொழுது முடித்து, இரு கைகளையும் உயர்த்தியேந்தி "யா அல்லா, உன் கொடையினின்று ஒன்றாக இந்தப் பிள்ளையை எனக்கு நீ கொடுத்தருளினாய்; இவரை ஸாலிஹாக்கியருள்" என்று அல்லாகுத்த ஆலா இடம் துஆ இரந்து, பின் அங்கிருந்து தங்கள் இருப்பிடம் வந்து, புத்திரர் வந்து சேர்ந்ததற்காகச் சந்தோஷங் கொண்டாடினார்கள்.

பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் புத்திரராகிய சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களை நோக்கி "மகனே, முகம்மதுயூசுபே நீர் என் கண்கள் குளிர்ந்த குமாரர். இனி எனக்குப் பிரதியாகவும், என் உடைமைக்கு உரிமைகார வாரிதாகவும், வலிகாரராகவும் இருப்பீர். உம்மை உவந்தவன் எவனோ, அவன் என்னை உவந்தவன். உம்மை வெறுத்தவன் எவனோ அவன் என்னை வெறுத்தவன். உமக்கும், உம்மை உவந்தவர்களுக்கும் அல்லாகுத்த ஆலா றகுமத்துச் செய்வானாக. நீர் ஆபிதாயும், முஜ்தஹிதான ஆலிமாயும், காமிலான ஷைகாயும், ஸாலிஹான ஒலியாயும் முத்தவக்கிலான பகீராயும், ஆரிபாயும், ஹாஜியாயும் இருப்பீர்" என்று மனங்கனிந்து சொன்னார்கள். அப்போது பகீர்கள் எல்லாரும் "ஆமீன்" என்று குரலுயர்த்தி ஆர்ப்பரித்தார்கள்.

அதன் பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் புத்திரரை அருகில் இருத்தி, அன்று பகல் முழுதும் அநந்த உபதேசங்களையும், ரகசியங்களையும் போதித்துக்கொண்டிருந்தார்கள். இரவான பின், இஷா தொழுதுவிட்டு அந்த உளுவுடனிருந்து பஜ்ருக்கு முன் † குறுஆன் முப்பது அத்தியாயங்களையும் தங்கள் கையால் எழுதி முடித்து வைத்திருந்து, பொழுது விடிந்தபின் மகனாரையழைத்து அந்த குறுஆனைக் கொடுத்து ஓதச்சொன்னார்கள். ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் அந்த குறுஆனை வாங்கி, காறிகளும் நாணத்தக்கதாக கறுஅத்தின் எழுவித நிபந்தனைப் பிரகாரம் ஓதினார்கள். அதை ஹலறத்து ஆண்டவரவர்கள் செவி குளிரக் கேட்டு மனம்பூரித்து, அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள்.

† இந்த குறுஆன் இன்னும் நாகூரில் இருக்கின்றது.



பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் அருமைப் புத்திரர் சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களுக்குப் பதினான்கு இல்முகளையும் பரிபூரணமாக கற்பித்து, வணக்கத்தின் வகைகளையுந் தெரிவித்து தலைமுழுகாட்டி, புத்துடை புனைவித்து, அல்லாகுத்த ஆலாவை அறியும் ரகசியமாகிய உபதேசத்தைப் போதித்து முரீதாக்கி கிலாபத்தும் இஜாஜத்தும், கிறுக்கத்தும், கில் அத்தும் கொடுத்து, தங்களுக்கு முதலாம் கலீபாவாக்கி, தங்கள் மற்ற கலீபாக்களுக்கும், பகீர்மார்களுக்கும் தலைவராக நியமித்தார்கள். உடனே பகீர்கள் எல்லாரும் அவர்களைத் தங்களுக்குத் தலைவராக ஒப்புக்கொண்டு பைஅத்துக்கொடுத்து, அடி பணிந்தார்கள்.

பிறகு, ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் புத்திரருக்கு முஸாஹதா, முஜாஹதா, முகாறபா முஷாஹதா, முறாகபா முகாஷபா, முஆஇனா என்னும் எழுவகையிலும் நாட்குநாள் பழக்கமாகச் செய்து தேற்றி, எல்லா இல்முகளிலும் காமிலாக்கி எந்நாளும் தங்கள் பக்கத்தில் வைத்துப் பக்குவப்படுத்திவந்தார்கள். சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் அன்று முதல் ஹலறத்து ஆண்டவரவர்களுக்குப் புத்திரராயும் வாரிதாயும், கலீபாவாயும், பகீர்களுக்குச் சற்குருவாயும் இருந்தார்கள்.

புத்திரர்வந்து சேர்ந்தது முற்றிற்று.

சூ௬ - ம் அத்தியாயம்.

# திவ்யஸ்தலங்களைத் தரிசித்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்காவி லிருந்து புறப்பட்டுப் பலராச்சியங்களையும் சுற்றி, அங்குள்ள திவ்வியஸ்தலங்களைத் தரிசித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் அறபு, எமன், ஷாம், இருக்கு முதலான ராச்சியங்களை யெல்லாம்போய்க் காண வேண்டுமென்று நாட்டங்கொண்டு, தங்கள் மகனார் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களும், மற்றும் கலீபாக்களும், பகீர்களும் புடைசூழ்ந்து வரும்படி மக்காவிலிருந்து பிரயாணப்பட்டு, அங்குள்ள ஷரீபு முதலான தலைவர்களுக்கும், பெரிய மனிதர்களுக்கும் சொல்லிக் கொண்டு நபிமுகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் அவதாரஞ் செய்த இடம் முதலான தானங்களையும் தரிசித்து மகனாருக்குந் தெரிவித்துக்கொண்டு, ஜன்னாத்துல்மாலா முதலான மகுபுறுக்களி லெல்லாம் போய் ஜியாறத்துச் செய்துவிட்டு, மக்காவை விட்டு வெளிப்பட்டுப் பக்கத்திலுள்ள மஸ்ஜிதுகளிலெல்லாம் போய் இமாம் ஜமா அத்துடன் தொழுது தக்பீறு தஹ்லீலு முழக்கத்துடன் மதீனா நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆண்டவரவர்கள் மதீனாவிற் போய்த் தங்கள் பாட்டனார் நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களின் சிறப்பான ஆலயத்திற்குள் தங்கள் புத்திரருடன் ஒரே நோன்பாக நாற்பதுநாள் உபவாசத்துடன் இத்திக்காபிருந்து, பின்பு, நபிநாயகமவர்களினதும், அவர்கள் கலீபாக்களுள் அமீறுல்மூமினீன் அபூபக்கர் சித்தீக்கு அமீறுல்மூமினீன் உமறுல்பாறூகது றலியல்லாகு அன்குமா இவர்களினதும்,



தங்கள் பாட்டியார் பாத்திமா றலியல்லாகு அன்கா அவர்களினதுமான கபுறுகளை ஜியாறத்துச் செய்து மகனாருக்குங் காட்டிக்கொண்டு, அங்குள்ள ஷரீபு முதலான பெரியோர்களையும் சந்தித்துவிட்டு, ஜன்னாத்துல் பகீஉ விற்போய் அமீறுல்மூமினீன் உதுமான் றலியல்லாகு அன்கு அவர்கள் முதலான சிலபல அஸ்ஹாபுகளின் கபுறுகளையும் ஜியாறத்துச் செய்துகொண்டு, மதீனாவை விட்டுப் புறப்பட்டு பதுறு மலைக்குப் போனார்கள்.

முன் ஒருதரம் பாரிய யுத்தஸ்தானமாயிருந்த அந்த பதுறுமலையிற்போய், அங்கே ஷஹீதான அஸ்ஹாபுமார்களையும் ஜியாறத்துச் செய்துகொண்டு பின் அங்கிருந்து உகுதுமலைக்குப் போனார்கள். அங்கே ஷஹீதான ஹம்ஸா றலியல்லாகு அன்கு அவர்கள் முதலான அஸ்ஹாபுகளை யெல்லாம் ஜியாறத்துச் செய்துகொண்டு அங்கிருந்து நஜபு என்னும் நகரத்திற்குப் போனார்கள்.

அந்த நஜபு நகரத்தில் விளங்கும் நபி நூகு அலைகிஸ்ஸலாமவர்கள் முதலான சில நபிமார்களின் கபுறுகளையும், அமீறுல் மூமினீன் அலி றலியல்லாகு அன்கு அவர்கள் கபுறையும், இன்னுஞ் சிலருடைய மகுபுறுவையும் ஜியாறத்துச் செய்துவிட்டு, அங்கொரு தானத்தில் சிலநாள் இத்திக்காபிருந்து, பின் அங்கிருந்து புறப்பட்டு தூறுசீனா என்னும் மகாபர்வதத்திற்குப் பிரயாணமாய், தங்கள் குமாரர் முதலான் எல்லாருடன் அந்தமலையிற்போய்ச் சேர்ந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மகத்துவமுள்ள தூறுசீனா மலைச்சிகரத்தில் ஏறி நாற்பதுநாள் ஒரே உபவாசத்துடன் இத்திக்காபிருந்து, பின் தொழுது அல்லாகுத்த ஆலா இடம் பிழைபொறுக்க துஆ இரந்து, அங்கிருந்து ஷாமிராச்சியத்திற்குப் பிரயாண மானார்கள்.

ஆண்டவரவர்கள் ஷாமிற்சேர்ந்து அங்குள்ள கன்ஆன் தேச முதலான பல பகுதிகளிலுமுள்ள பிரதான நகரங்களுக்கெல்லாம் போய், அங்கங்கேயுள்ள நபி இப்றாகீம் அலைகிஸ்ஸலாம், நபி இசுமாயில் அலைகிஸ்ஸலாம், நபி இசுஹாக்கு அலைகிஸ்ஸலாம் நபி யாஃகூபு அலைகிஸ்ஸலாம், நபி யூசுபு அலைகிஸ்ஸலாம், முதலான நபிமார், றசூல்மார்களின் மகுபுருக்களையெல்லா ஜியாறத்துச் செய்துகொண்டு பரிசுத்த ஸ்தலமாகிய பைத்துல்முகத்திசு நகரத்திற்போய், அங்குள்ள திவ்வியாலயத்திற் பிரவேசித்து உபவாசத்துடன் இத்திக்காபிருந்து, பின்தொழுது துஆ இரந்து, நபி தாவூது அலைகிஸ்ஸலாம், நபி சுலைமான் அலைகிஸ்ஸலாம், நபி ஜகரிய்யா அலைகிஸ்ஸலாம், நபி யஃயியா அலைகிஸ்ஸலாம், மரியம் அலைகிஸ்ஸலாம் இவர்களின் மகுபுருக்களையும் ஜியாறத்துச் செய்துகொண்டு, நபி ஈஸா அலைகிஸ்ஸலாமவர்கள் இருந்துவணங்கி வானத்திற்குப்போன தலத்தையும் தரிசித்துக்கொண்டு, அங்கிருந்து தீனவாநகரம்போய் நபி யூனுசு அலைகிஸ்ஸலாமவர்களை ஜியாறத்துச் செய்துகொண்டு, தூரியா மலைமேல் ஏறி, அங்கே அமீறுல்மூமினீன் உமறு றலியல்லாகு அன்கு அவர்கள் கட்டின தேவாலயத்திற் போய்த்தொழுது துஆ இரந்து, இத்திக்காபிருந்து, தக்பீறு, தஹ்லீல் முழக்கத்துடன் ஷாமிராச்சியத்து எல்லையைக்கடந்து, ஹலபு, அந்தாக்கிய்யா மார்க்கமாக றூமிராச்சியம்போய்ச் சேர்ந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் *றூமிராச்சியம் போய்ச் சேர்ந்து அங்குள்ள பிரதான நகரங்களையெல்லாங்கண்டு அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து கொண்டு, முஸ்லிமான அதிபதியாகிய சுல்தானவர்கள் அரசுசெய்யும் ராஜதானியா

*றூம் என்றது ஷாமுக்கு வடக்கிலுள்ள, கருங்கடலுக்குத்தெற்கிலும், அறுமனிய்யாவுக்கு மேற்கிலும், மத்தியதரைக் கடலுக்குக் கிழக்கிலுமுள்ள பூமி, அதை சின்ன ஆசியா என்பார்கள்.



கிய ஸ்தம்பூல் என்னும்* கிஸ்துந்தீனிய்யா (கான்ஸ்டான்டிநோபில்) நகரம்போய், அந்நகரத்து அலங்காரங்களைக் கண்டுமகிழ்ந்து: எல்லா ராசாங்கங்களிலும் இந்த ராசாங்கத்தை மேன்மையாக்கிவைத்த அல்லாகுத்த ஆலாவுக்கே எல்லாப் புகழு முரியனவென்று புகழ்ந்து சுக்றுசெய்து, அந்நகரத்துப் பிரதான ஆலயமாகிய ஆயாசூபியா என்னும் பள்ளியிற்போய் விடுதியிட்டார்கள். அக்காலத்தில் அங்கிருந்து அரசாளும் சக்கரவர்த்தியாகிய சுல்தான் முகம்மது உதுமானியல்காஜீயவர்கள் கேள்விப்பட்டு, தங்கள் பிரதானமான சைகுல்லிஸ்லாமும், மற்ற இமாம்களும், உலமாக்களும்; மந்திரிமார்களும், பாத்துஷாக்களும், சேனாபதிகளும், ராசகுமாரர்களும் பெருந்திரளாய்வரப் புறப்பட்டு அந்தப் பள்ளியில்வந்து ஹலறத்து ஆண்டவரவர்களைச் சந்தித்துக் கனப்படுத்தி, அடுத்த வெள்ளிக்கிழமையில் தாங்களே குத்பாவோதி இமாமாய்நின்று தொழுவித்து, வஅலும் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஹலறத்து ஆண்டவரவர்கள் அவர்கள் வேண்டுகோட்படி அந்த வெள்ளிக்கிழமை அங்கிருந்து தொழுது பிரசங்கமுஞ் செய்து, சுல்தானவர்களும், அவர்கள் குடிகளுக்கும் ராசாங்கத்திற்கும் துஆசெய்து ஆசீர்வதித்து, பின் ராசமாளிகையில் விருந்துண்டு, பிரயாணஞ் சொல்லிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அங்கிருந்து புறப்பட்டுப் பின்னும் றூம்வழியே இறாக்குத்தேசத்திற்கு வந்து, அத்தேசத்து இராசமா நகரமாகிய பகுதாது பட்டணஞ்சேர்ந்தார்கள். அந்தப்பட்டணத்திற் புகுந்தபோதே, அங்கே அடங்கி விளங்கும் இமாமுல்லகுலம் அபூஹனிபா றலியல்

* றூமிலிருந்து கிஸ்தந்தீனிய்யாவுக்குப் போகவேண்டுமானல், மரக்கலமேறியன்றிப் போகவரக்கூடாது. மரக்கலமேறிப் போனதாகச் சொல்லப்படவில்லை,

லாகு அன்கு அவர்களின் ஆலயத்திற்போய் அவர்களை ஜியாறத்துச் செய்துகொண்டு, அங்கிருந்து தங்கள் பாட்டனார் சுல்தானுல்லௌலியா, சையிது முகியித்தீன் அப்துல்காதிறு றலியல்லாகு அன்கு அவர்களின் பள்ளியிற்புகுந்து கைகட்டிநின்று "அஸ்ஸலாமு அலைக்கும் யாஜந்தீ" என்று ஸலாம் சொன்னார்கள். உடனே கபுறிலிருந்து "வஅலைக்குமுஸ்ஸலாம் யாபுனையா" என்று பிரதிவந்தது. ஹலறத்து ஆண்டவரவர்கள் அதைக்கேட்டுச் சந்தோஷங்கொண்டு, பதினொரு தினம் அந்தப் பள்ளியில் கல்வத்திருந்து, பின்கத்தம் பாத்திஹா வோதி ஹதியா செய்துவிட்டு, கந்தூரியும் கொடுத்து, அங்குள்ள பெரியோர்களையெல்லாம் ஜியாறத்துச் செய்துகொண்டு, அங்குள்ள ஜாமிஉல்மஸ்ஜிது, ஜாமிஉற்றிலா என்னும் ஆலயங்களிற் போய்த்தொழுது இத்திக்காபிருந்து, பின்பு அங்கிருந்து தங்கள் கூட்டத்தாருடன் புறப்பட்டு, கர்பலா என்னுந் தலத்திற்குப் போனார்கள்,

ஆண்டவரவர்கள் கர்பலாவிற்போய் அங்கே ஷஹீதான சுல்தானுஷ்ஷுஹதாஇ, சையிதினா இமாம் ஹுஸைன் றலியல்லாகு அன்கு அவர்களையும், மற்றும் அஸ்ஹாபுகளையும் ஜியாறத்துச் செய்துகொண்டு, அங்கே மூன்று நாள் கல்வத்திருந்து, கத்தம் பாத்திஹா வோதிக் கந்தூரி கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு குதைதா நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

* குதைதாவிற்போய் அங்கே அடங்கியிருக்கும் எல்லாப் பெரியோர்களையும் ஜியாறத்துச் செய்துகொண்டு, பின் அங்கிருந்து பல நாடுநகரங்களையுங் கண்டு களித்து அல்லாத்தூலா வைப்புகழ்ந்து கொண்டு, முஃகா என்னும் ஊர் போய்ச்சேர்ந்தார்கள்.

* நபி பூறூகு அலைகிஸ்ஸலாமவர்களின் கபுறு குதைதாவில் இருக்கிறதென்று சிலர் எழுதி யிருக்கின்றார்கள்.



அந்த முஃகா நகரத்தில் ஹலறத்து ஆண்டவரவர்கள் போனவுடன், அங்குவிளங்கும் ஷைகுல் மஷாயிகு இமாம் உமறிபுனுஷாதலி றகுமகுல்லா, இமாம் ஸந்தலி றகுமகுல்லா இவர்களின் ஆலயங்களிற்போய், இவர்களின் கபுறுகளுக்கு முன்னின்று ஸலாம் சொன்னார்கள். உடனே அவ்விருவருடைய கபுறுகளிலுமிருந்து பிரதிஸலாம் வந்தது, ஆண்டவரவர்கள் சந்தோஷமடைந்து அவ்விருவரின் ஜியாறத்துகளையும் முடித்துக்கொண்டு, பின் அவ்வூரிலுள்ள ஒரு பூங்காவனத்தில் தங்கள் கூட்டத்தாருடன் விடுதியிட்டுத் தங்கினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் குதைதாவின் தோட்டத்தில் தங்கியிருக்கும் போது, ஒருநாள் தங்கள் புத்திரர் சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களை அருகில் அழைத்து: என் அருமைமகனே உம்மிடம் இருக்கிற என் பற்கொம்பையெடுத்து இந்தத் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் நட்டிவிட்டு, நீர் வஹுதானிய்யத்து என்னும் விரிப்பில் ஒழுக்கத்தோடும் உபவாசத்தோடுமிருந்து, அல்லாத்தூலாவை வணங்கிக்கொண்டு கல்வத்திரும். அவன் உம்மையும், உமது வணக்கத்தையும் ஏற்று, உமக்கு நேர்வழி காட்டத்தக்கவன் அப்படி அவன் ஏச்றுக்கொள்வானானால், நீர் நட்டின பற்கொம்பு தளிர்த்து, மூன்றுகிளையிட்டு வளர்ந்திருக்கும். என்று கட்டளை பண்ணினார்கள். அவ்வாறே ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் பற்கொம்பைக் கொண்டுபோய் ஓரிடத்தில் நட்டிவைத்துவிட்டு, அதின் பக்கத்தில் கல்வத்திருந்தார்கள். அவர்களைச் சூழ பகீர்களில் பலரை கல்வத்தில் இருத்திவிட்டு, ஆண்டவரவர்களும் ஒருபுறம் கல்வத்திலிருந்தார்கள், அந்த கல்வத்தின் இருப்பு நாற்பது நாட்களுக்கென்று குறிப்பிட்டிருந்தது.

நாற்பது தினங்களுந் தீர்ந்து ஹலறத்து ஆண்டவர்வர்கள் எழுந்து, தங்கள்மகனார் சையிது முகம்மது யூசுபு சாகிபவர்களைப்போய்ப் பார்த்தார்கள். அப்போது அவர்கள் கல்வத்தின் இருப்பிலேயே சுஜூதில் விழுந்து கிடைப்பதையும், நட்டின பற்கொம்பு தளிர்த்து மூன்று பணரிட்டிருப்பதையும் கண்டு ஆநந்தங்கொண்டு, அல்லாகுத்தஆலாவை புகழ்ந்து சுக்றுசெய்து: மகனே, எழுந்திரும். உம்மையும், உமது வணக்கத்தையும், அல்லாகுத்தஆலா பொருந்திக் கொண்டான் என்று சொல்லி, அவர்களைக் கையைபிடித்து அழைத்துக் கொண்டுபோய், அருகில்வைத்து, மீதியாயிருந்த ரகசியமான இல்முகள் எல்லாவற்றையும் புகட்டி, மற்றைய தறீக்குகளிலும் கிலாபத்தும், இஜாஜத்தும், கிறுக்கத்தும், கில்அத்தும் கொடுத்து நிரப்ப மாக்கினார்கள்.

பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் துதைதா நகரத்திலிருந்து பிரயாணப்பட்டு, உலகமுழுதாண்ட முடிமன்னருள் ஒருவனான ஸத்தாதி ராசன் இருந்து ராச்சியபரிபாலனஞ் செய்த அதன் என்னும் பட்டணம் போய், அங்கே அடங்கியிருக்கும் சைகு ஹைதருஸ் றகுமகுல்லா, சைகு ஸஊது றகுமகுல்லா, சைகு ஜௌஹர் றகுமகுல்லா முதலான பெரியோர்களையெல்லாம் ஜியாறத்துச் செய்து கொண்டு, ஹயாத்துடனிருக்கும் பெரியோர்களையும் சந்தித்து எல்லா மகிமைகளும் பெற்றுக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுத் தங்கள் கூட்டத்தாருடன் மறுபடியும் மக்கா நகரம்போய்ச் சேர்ந்தார்கள்.

திவ்வியஸ்தலங்களைத் தரிசித்தது முற்றிற்று.

---

கூச-ம் அத்தியாயம்.

## பொன்னுணிக்கு வந்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவர்வர்கள் மக்காவிலிருந்து இந்தியாவுக்குப் பிரயாணமாய்ப் பொன்னுணியென்னும் ஊருக்குவரக் கப்பலேறினதும், கடலில்விழுந்த நஸீபீரை மறுநாள் எடுத்ததும், திருட்டுக்கப்பலை மெழுகினாற் பீரங்கிசெய்து அழித்ததும், பின் அவ்வூருக்கு வந்து சேர்ந்ததுமான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சுல்தான் அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் மக்கா நகரத்தில் ஒன்பது வருஷம் வாசஞ்செய்துகொண்டிருந்தார்கள். இதற்கிடையில்தான் திவ்வியஸ்தலங்களைத் தரிசித்துச் சுற்றுப் பிரயாணஞ் செய்தார்கள். இவ்வொன்பது வருஷங்களில் ஏழு ஹஜ்ஜும், சில உம்றுக்களும் செய்து முடித்தார்கள். மகனார் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களுக்கு இரண்டு ஹஜ்ஜும், சில உம்றுக்களும் கிடைத்தன. இம்மட்டோடு மகனாரவர்களுக்கு வயது ஒன்பது நிரப்பமாயிற்று.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மக்காவுக்குப் போன ஒன்பது வருஷத்திற்குப்பின் இந்தியாவுக்கு வரவேண்டுமென்று நாடி, மக்காவிலுள்ள ஷரீபுகள், இமாம்கள், மற்றும் பெரியோர்கள் எல்லாருக்கும் பிரயாணஞ் சொல்லிக் கொண்டு, தங்கள் அருமைமகனாரவர்களும், பகீர்மார்களும் புடைசூழ யாத்திரையாய், ஜித்தா நகரம்வந்து சேர்ந்தார்கள்.

ஜித்தாவுக்கு வந்தபோது, அங்குள்ள பெரியோர்கள் அனைவரும் எதிர்கொண்டழைத்து உபசரித்தார்கள். பின்

மகனாரவர்களுக்கு அங்கே காட்டவேண்டிய இடங்களை
யெல்லாங் காட்டித் தீர்ந்தது. அதன்பிறகு, ஜித்தாவி
லிருந்து மலையாளக்கரைக்கு யாத்திரையாயிருந்த ஒரு கப்ப
லில் ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் பயண
மேறினார்கள். ஜித்தாவின் முஸ்லிமான ஜனங்கள் எல்லாருந்
திரண்டு ஆண்டவரவர்களை மிக மரியாதியுடன் பயண
மநுப்பினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஏறியிருக்கும் கப்பல்
ஜித்தாத்துறையிலிருந்து பாய்தூக்கி நடுச்சமுத்திரத்தில்
ஓடிவரும்போது, ஓரிரா தங்கள் மகனார் சையிது முகம்மது
யூசுபு சாகிபவர்களைக் கூப்பிட்டு: தஸ்பீஹு என்னும்
செபமாலையைக் கொண்டுவாரும் என்று கட்டளை பண்ணி
னார்கள். அப்போது மகனார் மனங்கலங்கி முகம்வாடி
நின்று: நேற்று நான் அந்தச் செபமாலையைக் கையிற்
பிடித்துக்கொண்டு, கப்பலருகிற் கடலைப்பார்த்துநின்றேன்;
அது, கைநழுவிக் கடலில் விழுந்துவிட்டது என்று சொன்
னார்கள். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் மகனாரை
நோக்கி: மகனே, அதற்காகவேண்டி முகங்குறுவாதீர்.
நேற்று நீர் கப்பலோரத்தில் எந்த இடத்தில் நின்றீரோ,
அந்த இடத்திற்போய் நின்றுகொண்டு, கமண்டலம் என்கிற
கிஸ்தியையெடுத்துக் கடலிலிட்டு நீரை மொள்ளுவீராக.
அந்நீருடன் செபமாலை வந்திடும் என்று உத்தரவு செய்
தார்கள். சையிது முகம்மது யூசுபு சாகிபவர்கள் அவ்விதம்
செய்தார்கள்; கிஸ்தியில் நீருடன் செபமாலை வந்தது.
ஆண்டவரவர்கள் அதைவாங்கி ஓதினார்கள்.

ஆண்டவரவர்கள் இருக்கும் மரக்கலம் அதிக விரை
வுடன் ஓடிவரும்போது, ஒருநாள் நடுப்பகலில், கப்பலி
லுள்ள மாலுமி முதலான கலாசுக்காரர் எல்லாரும் மனந்
தடுமாறிக் கூக்குரலிட்டுப் பதறிக் கலங்கினார்கள். ஆண்டவ



ரவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் இப்படிக் கலங்கிப்
பதறுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது
அவர்கள், மிகவிரைவாய் நெருங்கி யோடிவருகிற மற்றொரு
மரக்கலத்தை ஆண்டவரவர்களுக்குச் சுட்டிக்காட்டி:
இதோவருகிற கப்பல் திருட்டுக்கப்பல். அதிலுள்ள
எல்லாரும் கொடிய திருடர்கள். இன்னும் சற்றுவேளையில்
அவர்கள் நமது கப்பலையமர்த்தி, நம்மைக்கொன்று, நமது
கப்பலின் பொருட்களையெல்லாம் கொள்ளையடிப்பார்கள்.
இவர்கள் கைக்குத்தப்ப நம்மால் ஏலாது. நாமெல்லாம்
இன்றைக்கு மடிவோம். இதற்காகவே கலங்கித் தவிக்
கிறோம் என்று அழுது சொன்னார்கள். இதைக்கேட்ட
ஆண்டவரவர்கள்: அத்திருடர்கள் நமது கப்பலை எவ்வாறு
அமர்த்தி, நம்மை எவ்விதம் கொல்வார்கள்? என்று
கேட்டார்கள். அதற்கு அவர்கள் அத்திருட்டுக்கப்பலில்
பீரங்கி என்னும் வெடிற்கருவியிருக்கும். அதில் மருந்தும்
குண்டும்போட்டுக் கெட்டித்து நம்மைச் சுடுவார்கள்.
அதனால், நமது கப்பலுக்கும் நமக்கும், வில்லங்க முண்டா
கும் என்று பதில் சொன்னார்கள். அப்போது ஆண்டவ
ரவர்கள்: இந்தக் கப்பலில் அவ்விதக் கருவியாகிய பீரங்கி
யில்லையோ? என்று கேட்டார்கள். பீரங்கியும் இல்லை;
மருந்து குண்டுகளும் இல்லை என்று அதற்கு அவர்கள்
விடைகொடுத்தார்கள்.

இச்சொல்லைக் கேட்டபோது ஹலறத்து ஆண்டவ
ரவர்கள் மாலுமி முதலானவர்களைப்பார்த்து: பீரங்கி
யில்லையா? குண்டுமருந்துகளுமில்லையா? நல்லதிருக்கட்டும்.
உங்கள்வசம் மெழுகு இருக்குமானால் எடுத்துவந்து பீரங்கி
வடிவாகச் செய்து, எரிந்த சாம்பலை மருந்தென்றும்,
கற்களைக் குண்டென்றும் அதிற் போட்டு, வெடி தீருங்கள்
என்று கட்டளை பண்ணினார்கள்.

மகனாரவர்களுக்கு அங்கே காட்டவேண்டிய இடங்களையெல்லாங் காட்டித் தீர்ந்தது. அதன்பிறகு, ஜித்தாவிலிருந்து மலையாளக்கரைக்கு யாத்திரையாயிருந்த ஒரு கப்பலில் ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் பயணமேறினார்கள். ஜித்தாவின் முஸ்லிமான ஜனங்கள் எல்லாருந்திரண்டு ஆண்டவரவர்களை மிக மரியாதியுடன் பயணமனுப்பினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஏறியிருக்கும் கப்பல் ஜித்தாத்துறையிலிருந்து பாய்தூக்கி நடுச்சமுத்திரத்தில் ஓடிவரும்போது, ஓரிரா தங்கள் மகனார் சையிது முகம்மது ரூகுபு சாகிபவர்களைக் கூப்பிட்டு: தஸ்பீஹு என்னும் செபமாலையைக் கொண்டுவாரும் என்று கட்டளை பண்ணினார்கள். அப்போது மகனார் மனங்கலங்கி முகம்வாடி நின்று: நேற்று நான் அந்தச் செபமாலையைக் கையிற் பிடித்துக்கொண்டு, கப்பலருகிற் கடலைப்பார்த்துநின்றேன்; அது, கைநழுவிக் கடலில் விழுந்துவிட்டது என்று சொன்னார்கள். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் மகனாரை நோக்கி: மகனே, அதற்காகவேண்டி முகங்குருவாதீர். நேற்று நீர் கப்பலோரத்தில் எந்த இடத்தில் நின்றீரோ, அந்த இடத்திற்போய் நின்றுகொண்டு, கமண்டலம் என்கிற கிஸ்தியையெடுத்துக் கடலிலிட்டு நீரை மொள்ளுவீராக. அந்நீருடன் செபமாலை வந்திடும் என்று உத்தரவு செய்தார்கள். சையிது முகம்மது ரூகுபு சாகிபவர்கள் அவ்விதம் செய்தார்கள்; கிஸ்தியில் நீருடன் செபமாலை வந்தது. ஆண்டவரவர்கள் அதைவாங்கி ஓதினார்கள்.

ஆண்டவரவர்கள் இருக்கும் மரக்கலம் அதிக விரைவுடன் ஓடிவரும்போது, ஒருநாள் நடுப்பகலில், கப்பலிலுள்ள மாலுமி முதலான கலாசுக்காரர் எல்லாரும் மனந்தடுமாறிக் கூக்குரலிட்டுப் பதறிக் கலங்கினார்கள். ஆண்டவ



ரவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் என் இப்படிக் கலங்கிப் பதறுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது அவர்கள், மிகவிரைவாய் நெருங்கி யோடிவருகிற மற்றொரு மரக்கலத்தை ஆண்டவரவர்களுக்குச் சுட்டிக்காட்டி: இதோவருகிற கப்பல் திருட்டுக்கப்பல். அதிலுள்ள எல்லாரும் கொடிய திருடர்கள். இன்னும் சற்றுவேளையில் அவர்கள் நமது கப்பலையமர்த்தி, நம்மைக்கொன்று, நமது கப்பலின் பொருட்களையெல்லாம் கொள்ளையடிப்பார்கள். இவர்கள் கைக்குத்தப்ப நம்மால் ஏலாது. நாமெல்லாம் இன்றைக்கு மடிவோம். இதற்காகவே கலங்கித் தவிக்கிறோம் என்று அழுது சொன்னார்கள். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள்: அத்திருடர்கள் நமது கப்பலை எவ்வாறு அமர்த்தி, நம்மை எவ்விதம் கொல்வார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அத்திருட்டுக்கப்பலில் பீரங்கி என்னும் வெடிற்கருவியிருக்கும். அதில் மருந்தும் குண்டும்போட்டுக் கெட்டித்து நம்மைச் சுடுவார்கள். அதனால், நமது கப்பலுக்கும் நமக்கும், வில்லங்க முண்டாகும் என்று பதில் சொன்னார்கள். அப்போது ஆண்டவரவர்கள்: இந்தக் கப்பலில் அவ்விதக் கருவியாகிய பீரங்கியில்லையோ? என்று கேட்டார்கள். பீரங்கியும் இல்லை; மருந்து குண்டுகளும் இல்லை என்று அதற்கு அவர்கள் விடைகொடுத்தார்கள்.

இச்சொல்லைக் கேட்டபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் மாலுமி முதலானவர்களைப்பார்த்து: பீரங்கியில்லையா? குண்டுமருந்துகளுமில்லையா? நல்லதிருக்கட்டும். உங்கள்வசம் மெழுகு இருக்குமானால் எடுத்துவந்து பீரங்கி வடிவாகச் செய்து, எரிந்த சாம்பலை மருந்தென்றும், கற்களைக் குண்டென்றும் அதிற் போட்டு, வெடி தீருங்கள் என்று கட்டளை பண்ணினார்கள்.

மகனாரவர்களுக்கு அங்கே காட்டவேண்டிய இடங்களையெல்லாங் காட்டித் தீர்ந்தது. அதன்பிறகு, ஜித்தாவிலிருந்து மலையாளக்கரைக்கு யாத்திரையாயிருந்த ஒரு கப்பலில் ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் பயணமேறினார்கள். ஜித்தாவின் முஸ்லிமான ஜனங்கள் எல்லாருந் திரண்டு ஆண்டவரவர்களை மிக மரியாதியுடன் பயணமநுப்பினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஏறியிருக்கும் கப்பல் ஜித்தாத்துறையிலிருந்து பாய்தூக்கி நடுச்சமுத்திரத்தில் ஓடிவரும்போது, ஓரிரா தங்கள் மகனார் சையிது முகம்மது யூசுபு சாகிபவர்களைக் கூப்பிட்டு: தஸ்பீஹு என்னும் செபமாலையைக் கொண்டுவாரும் என்று கட்டளை பண்ணினார்கள். அப்போது மகனார் மனங்கலங்கி முகம்வாடி நின்று: நேற்று நான் அந்தச் செபமாலையைக் கையிற் பிடித்துக்கொண்டு, கப்பலருகிற் கடலைப்பார்த்துநின்றேன்; அது, கைநழுவிக் கடலில் விழுந்துவிட்டது என்று சொன்னார்கள். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் மகனாரை நோக்கி: மகனே, அதற்காகவேண்டி முகங்குறுவாதீர். நேற்று நீர் கப்பலோரத்தில் எந்த இடத்தில் நின்றீரோ, அந்த இடத்திற்போய் நின்றுகொண்டு, கமண்டலம் என்கிற கிஸ்தியையெடுத்துக் கடலிலிட்டு நீரை மொள்ளுவீராக. அந்நீருடன் செபமாலை வந்திடும் என்று உத்தரவு செய்தார்கள். சையிது முகம்மது யூசுபு சாகிபவர்கள் அவ்விதம் செய்தார்கள்; கிஸ்தியில் நீருடன் செபமாலை வந்தது. ஆண்டவரவர்கள் அதைவாங்கி ஓதினார்கள்.

ஆண்டவரவர்கள் இருக்கும் மரக்கலம் அதிக விரைவுடன் ஓடிவரும்போது, ஒருநாள் நடுப்பகலில், கப்பலிலுள்ள மாலுமி முதலான கலாசுகாரர் எல்லாரும் மனந்தடுமாறிக் கூக்குரலிட்டுப் பதறிக் கலங்கினார்கள். ஆண்டவ



ரவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் என் இப்படிக் கலங்கிப் பதறுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது அவர்கள், மிகவிரைவாய் நெருங்கி யோடிவருகிற மற்றொரு மரக்கலத்தை ஆண்டவரவர்களுக்குச் சுட்டிக்காட்டி: இதோவருகிற கப்பல் திருட்டுக்கப்பல். அதிலுள்ள எல்லாரும் கொடிய திருடர்கள். இன்னும் சற்றுவேளையில் அவர்கள் நமது கப்பலையமர்த்தி, நம்மைக்கொன்று, நமது கப்பலின் பொருட்களையெல்லாம் கொள்ளையடிப்பார்கள். இவர்கள் கைக்குத்தப்ப நம்மால் ஏலாது. நாமெல்லாம் இன்றைக்கு மடிவோம். இதற்காகவே கலங்கித் தவிக்கிறோம் என்று அழுது சொன்னார்கள். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள்: அத்திருடர்கள் நமது கப்பலை எவ்வாறு அமர்த்தி, நம்மை எவ்விதம் கொல்வார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அத்திருட்டுக்கப்பலில் பீரங்கி என்னும் வெடிற்கருவியிருக்கும். அதில் மருந்தும் குண்டும்போட்டுக் கெட்டித்து நம்மைச் சுடுவார்கள். அதனால், நமது கப்பலுக்கும் நமக்கும், வில்லங்க முண்டாகும் என்று பதில் சொன்னார்கள். அப்போது ஆண்டவரவர்கள்: இந்தக் கப்பலில் அவ்விதக் கருவியாகிய பீரங்கியில்லையோ? என்று கேட்டார்கள். பீரங்கியும் இல்லை; மருந்து குண்டுகளும் இல்லை என்று அதற்கு அவர்கள் விடைகொடுத்தார்கள்.

இச்சொல்லைக் கேட்டபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் மாலுமி முதலானவர்களைப்பார்த்து: பீரங்கியில்லையா? குண்டுமருந்துகளுமில்லையா? நல்லதிருக்கட்டும். உங்கள்வசம் மெழுகு இருக்குமானால் எடுத்துவந்து பீரங்கி வடிவாகச் செய்து, எரிந்த சாம்பலை மருந்தென்றும், கற்களைக் குண்டென்றும் அதிற் போட்டு, வெடி தீருங்கள் என்று கட்டளை பண்ணினார்கள்.

ஆண்டவரவர்கள் இட்ட கட்டளைப்பிரகாரம் கலாசுகாரர்கள் கூடிநின்று மெழுகையெடுத்துப் பீரங்கி யுருவத்திற்செய்து, சாம்பலையுங் கல்லையும் வாரித் திணித்துக் கெட்டித்து, மிக விரைந்து ஓடிவரும் திருட்டுக் கப்பலைப்பார்த்து இலக்குவைத்து வெடி தீர்த்தார்கள்.

மெழுகினாலான அற்புதப் பீரங்கியால் வெடிதீர்த்த மாத்திரத்திற், அதிலிருந்து கோடையிடி முழுமினாற் போன்ற பெருந்தொனியுடன் அக்கினிமயமான குண்டுகள் புறப்பட்டு, மேற்படித் திருட்டு மரக்கலத்திற்போய் விழுந்தன. க்ஷணத்திற்கொரு குண்டாகச் சற்றுநேரத்தில் அநந்தங் குண்டுகளை அந்த மெழுகுபீரங்கி கக்கின. குண்டு ஒவ்வொன்றும் போய்விழுந்து திருட்டுக்கப்பலைச் சின்னாபின்னமாகத் தகர்த்தது. எழுந்து பொழியும் குண்டு மாரியினால், திருடர்கப்பல் சிதைந்து நீரைமுகந்து, சமுத்திரத்தில் அமிழ்ந்திற்று. அக்கப்பலி லிருந்தவர்களில் குண்டுபட்டு மடிந்தோர்போக மீந்தவர்கள் சமுத்திரத்தில் விழுந்துகிடந்து, நீந்தவலியின்றி, நீரைக் குடித்துத் திக்குமுக்காடி, ஓவென்று அலறி மாண்டார்கள். ஒருவராவது தப்பிப் பிழைக்கவில்லை. பக்கத்தில் ஓடிவந்த திருட்டுரு பெயருமில்லாமல் அழிந்து சூனியமாயிற்று.

தங்களைக் கொன்று கொள்ளையிட வந்த திருட்டுக்கப்பலை இவ்வாறு ஆச்சரியமாக அழியச்செய்த ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு எல்லாரும் தாழ்ந்துநின்று, துதித்துக் கொண்டாடினார்கள். பின் ஆண்டவரவர்கள் ஏறின கப்பல் சிலதினத்தில் மலையாளக்கரையின் ஒரு துறைமுகமாகிய பொன்னாணியில்வந்து சேர்ந்தது.

சைது அலி என்னும் அரசரால் ஆளப்பட்ட அந்தப் பொன்னாணியில் கப்பல் நங்கூரமிட்டபோது, ஹலறத் ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் கரையிலிறங்கி,



அவ்வூர்ப் பிரபுக்களுள் ஒருவராகிய சையிது ஜைனுத்தீன் மதுநாம் என்பவருடைய தோட்டத்திற் போய் விடுதியிட்டுத் தங்கினார்கள்.

பொன்னாணிக்குவந்தது முற்றிற்று.

---

௯௫ - ம் அத்தியாயம்.

## பட்டமரந் தழைத்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள், பட்டுப்போன பலா மரமொன்றைத் தழைக்கச்செய்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாதுஷாசாகிபு ஆண்டவரவர்கள் பொன்னாணிப் பட்டணத்தில், சையிது ஜைனுத்தீன் மதுநா முடைய தோட்டத்தில், தங்கள் கூட்டத்துடன் இறங்கியிருக்கும்போது, அந்தத் தோட்டத்துக் காவற்காரன் ஆண்டவரவர்களின் வரலாறுகள் எல்லாவற்றையும் கேட்டறிந்துகொண்டு, தன் எஜமானாகிய சையிது ஜைனுத்தீன் மதுநா மிடம்போய், எஜமானே ஒரு பெரியோர் பெருங்கூட்டத்துடன் நமதுதோட்டத்தில்வந்து இறங்கி இருக்கின்றார்கள். அவர்கள் ஹலறத்து முகியித்தீன் அப்துல் காதிறு ஜைலானி ஆண்டவரவர்களின் பௌத்திராம். அவர்களைப்பற்றி எல்லாரும் அதிக மேன்மையாகப் பேசுகின்றார்கள் என்று சொன்னான். இதைக்கேட்ட அவர் அவனைப்பார்த்து: சரியே. நீ சொன்னபடி அவர் பெரியோராயிருந்தால், நமது தோட்டத்தில் பட்டுப்போய்கிற பலாமரம் தழைக்கவேண்டும். அப்படி அது தழைத்ததானால், அவரைப் பெரியவரென்று சொல்லத் தடை

யிராது என்றார். இதைக் கேட்டுக்கொண்டு மேற்படிக் காவலாளன் அங்கிருந்து தோட்டத்திற்கு வந்தான்.

இவன் வரும்போது ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு கரகத்தில் தண்ணீரெடுத்துப்போய், அங்கே பட்டுப்போய் நிற்கும் பலாமரத்து அடியில் வைத்து உலு செய்து கொண்டிருந்தார்கள். அந்தத் தண்ணீர் அந்தமரத்துக் காய்ந்த வேர்களில் ஓடிக்கொண்டிருந்தது. இதை அவன்கண்டு, இதென்ன! புதுமைக்கு இடமாகக் காணப்படுகின்றதே யென்று எண்ணி, இனி நடப்பதை அறியலாமென்று அங்கேயே பார்த்துக்கொண்டு நின்றான்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் உலுவை முடித்துக் கொண்டெழுந்து, பக்கத்திற்போய் இரண்டு றக்அத்து அல்லாதுத்த ஆலாவைத்தொழுது ஸலாம்சொல்லித் திரும்பினார்கள். இவர்கள் திரும்புமுன் உலுநீர்பட்ட காய்ந்த பலாமரம் பச்சென்று இலைகள் நெருங்கத் தழைத்து, பூவும், பிஞ்சும், காயுமாய்ச் செழிப்புற்று நின்றது. இதைக் கண்ட தோட்டக்காரன் பிரமித்து, ஜைனுத்தீன் மதுநா மிடம் ஓடிப்போய்: எஜமானே, தாங்கள் சொன்னபிரகாரம் முடிந்து விட்டது; வந்துபாருங்கள் என்றான். இதைக்கேட்ட அவர் "ஆ! அப்படியா!! பட்டமரம் தழைத்ததா!!" என்று சொல்லிக் கொண்டு, கால்பதறக் கைபதறவெழுந்து தமது தோட்டத்தில் வந்து பார்த்தார்; பலாமரம் அவர் கண்ணை மருட்டிக் கருத்தைக் கவர்ந்தது. உடனே அவர் ஆண்டவரவர்கள் சமுகத்திற்போய் ஸலாம் சொல்லி, அடிபணிந்து நின்றார்.

ஹலறத்து ஆண்டவரவர்களும் அவரை உபசாரணையுடன் அழைத்து அருகில் இருக்கச்செய்து, அவருடன் ஆதரவாகப் பேசினார்கள். பின்பு, சையிது ஜைனுத்தீன்



மதுநாம் ஆண்டவரவர்களைத் தமது மாளிகையில் வந்து விருந்துண்ண வேண்டுமென்று மன்றாடினார். அதற்கு ஆண்டவரவர்கள் சம்மதித்தார்கள்.

சையிது ஜைனுத்தீன்மதுநாம் விருந்துக்காக ஒரு நாளைக் குறிப்பிட்டுக்கொண்டு, அந்தநாளில் அறுசுவைப் பதார்த்தங்களும், சோறுகறிகளும், கனிவர்க்கங்களும், தீம் பானங்களும் தயார்பண்ணி வைத்து, ஆண்டவரவர்களையும், மகனாரவர்கள் முதலானவர்களையும் ஒழுக்கத்துடன் அழைத்துக் கொண்டுபோய், தமது மாளிகையில் உல்லாசத்துடன் வீற்றிருக்கச் செய்து, அதிக உபசாரத்துடன் சம்பிரமமாக விருந்து உண்பித்தார். ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் குமாரர் முதலானவர்களுடன் சந்தோஷமாக வுண்டு, அல்லாதுத்தஆலாவைப் புகழ்ந்து சுக்றுசெய்து, அவருக்காக துஆ செய்தார்கள்.

விருந்துண்டு முடிந்தபின், சையிது ஜைனுத்தீன்மதுநாம் ஆண்டவரவர்களின் பக்கத்தில் இருந்து, ரகசியமாகப் பல விஷயங்களையும் பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். சற்று நேரம் சம்பாஷித்த பின்பு, அவர் ஆண்டவரவர்களை நோக்கி "நான் வெகுநாள் நாடியிருந்த நாட்டம் இன்று நிறைவேறப் போகிறதாக நினைக்கின்றேன். அதென்னவென்றால்;—எனக்கொரு மகள் இருக்கின்றாள். அவளை விவாகம்பண்ணிக் கொள்ளத்தக்க மணமகன் அகப்படவில்லை. நானோ, சையிது முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்களின் வமிசத்திலுள்ளவன், தாங்களும் அவர்கள் பௌத்திரராகையால், தங்களுக்கே என் மகளைக் கொடுக்க ஆசைப்படுகிறேன். தாங்கள் பொருந்திக்கொள்ள வேண்டும்" என்று சொன்னார். விவாகஞ் செய்யுஞ் சொல்லாகிய இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் அவரைப் பார்த்து "விவாக காரியத்தில் எனக்கு

இச்சையில்லை என்பது உமக்குத் தெரியாததா? என்றார்கள். இதைக்கேட்ட அவர் மறுத்துப் பேசாமல் வாயைமூடினார். பின் அங்கிருந்து தோட்டத்திற்கு வந்தார்கள்.

பட்டமரந் தழைத்தது முற்றிற்று.

---

௩௩-ம் அத்தியாயம்.

## முகல்லதீவுக்குப் போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பொன்னுணியிலிருந்து அற்புதகரமாகக் கடலைக்கடந்து முகல்லதீவுக்குப் போனதும், அங்குள்ளோர் கொடுத்த நஞ்சூட்டின கனிவர்க்கங்களைத் தின்றதுமான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹல்றத்து மீறான்சுல்தான் ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் ஆண்டவரவர்கள் சிலநாள் பொன்னுணியில் தங்கியிருந்து, பின் முகல்லதீவுக்குப் போகநாடி, அங்குள்ள சையிது ஜைனுத்தீன் மதூம் முதலானவர்களுக் கெல்லாம் பயணஞ் சொல்லிக்கொண்டு புறப்பட்டார்கள். அப்போது, அங்கிருந்து முகல்லதீவுக்குப் போகும் உருக்கள் இல்லை. ஆகையால், ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் கடற்கரையில் வந்து பார்த்தார்கள்; கடல் கொந்தளிப்பின்றிச் சாந்தமாயிருந்தது. அவ்விதம் கடல் அமர்ந்திருப்பதை ஆண்டவரவர்கள் கண்டு, தங்கள் குமாராதி பசீர்கள் எல்லாரையும் பார்த்து "நீங்கள் எல்லாரும் கண்களை மூடிக்கொண்டு, எனக்குப் பிறகே கடலில் இறங்கி, என்னைத் தொடர்ந்து நடந்துவாருங்கள்," என்று கட்டளை பண்ணிவிட்டு முந்தித் தாங்கள் பிஸ்மி சொல்லிக் கடலி லிறங்கி நடந்தார்கள். அப்போது அவர்கள் கூட்டத்தார்களும் அவர்களுக்குப்பின்னே கண்களை மூடிக்கொண்டு கடலில் இறங்கி, அவர்களைத் தொடர்ந்து நடந்தார்கள்.



இவ்விதம் எல்லாரும் கடலில் இறங்கி க்ஷணப்பொழுதாகவே ஹலறத்து ஆண்டவரவர்கள் அவர்களைக் கூப்பிட்டு "உங்கள் கண்களைத்திறந்து பாருங்கள்" என்றார்கள். அவ்வாறே அவர்கள் கண்களைத் திறந்து பார்த்தபோது, தாங்கள் எல்லாரும் ஆண்டவரவர்களுடன் முகல்லதீவின் கடற்கரையில் நிற்கக்கண்டு, ஆநந்தமுற்றார்கள்.

ஆச்சரியகரமாக முகல்லதீவிற்போய்ச்சேர்ந்த ஆண்டவரவர்கள், பின் அக்கடற்கரையிலிருந்து தங்கள் கூட்டத்தோடு ஊருக்குள் பிரவேசித்தார்கள். அக்காலம் அந்தத் தீவையாளும் அரசன் காபிர். அவன் ஆண்டவரவர்கள் பெருந்திரளான ஜனத்துடன் ஊருக்குள் வருவதை அறிந்து; இக்கூட்டத்தார் நம்மூரைப் பிடித்து ஆளவோ, அல்லது நம்மைச் சிறைப்படுத்திக்கொண்டு போகவோ, அல்லது, நம்மெல்லாரையும் படுகொலை செய்யவோ, எதற்காகவோ இத்தனை திரளாய் வருகின்றார்கள். அவர்கள் கருதிவருங் கருமத்தை நம்மீது முந்தவிடாமல், நாம் ஏதும் ஒரு உபாயஞ் செய்து அவர்களை மடக்கவேண்டும் என்று தன்னைச்சூழ்ந்து நிற்கும் மந்திரிபிரதானிகளோடு ஆலோசனை பண்ணி, எல்லாருங்கூடி இவ்விதம் தீர்மானித்தார்கள்:—

நாம் சீக்கிரமாகத் தின்னுகின்ற கனிவர்க்கங்களையும், தின்பண்டங்களையும் தயார்செய்து, அவற்றில் நஞ்சூட்டி வைத்து, அவர்களை எதிர்கொண்டழைத்து உபசரித்து வெகுமதி கொடுப்பதுபோலப் பாசாங்குபண்ணி, மேற்படி நஞ்சேறின பதார்த்தங்களைக் கொடுக்கலாம். அவர்கள் அதை மெய்யென்று நம்பி வாங்கித்தின்று, எல்லாரும்

மடிந்து போவார்கள்.. அதன்பின் நம் இஷ்டப்படி நடத்தலாம் என்பதே.

இவ்வாறு தீர்மானித்தபோது, உடனே கனிவர்க்கம் முதலான தின்பதார்த்தங்கள் தயாராய், அவற்றில் நஞ்சேற்றிப் பாத்திரங்களில் வைக்கப்பட்டன. அரசன் முதலான பெரியதனக்காரர் எல்லாரும் திரண்டெழுந்து, நஞ்சுப் பதார்த்தங்களையும் எடுப்பித்துக்கொண்டு ஹலறத்து ஆண்டவரவர்களை உபசரித்து அழைக்கும் பாவனையாக வந்து, எல்லாரும் கைகட்டித் தாழ்ந்து, அக் கனிவர்க்காதிகளை முன்வைத்து நின்றார்கள்.

எவ்விதமான மறைந்த கருமங்களையும் இருதயக் கண்ணாடிக்குள் மிகத் தெளிவா யுணர்ந்துகொள்ளும் சக்தியுள்ள ஆண்டவரவர்கள், அந்தப் படுபாதகர்செய்த வஞ்சனையை அறியாதிருக்கவில்லை! அறிந்திருந்தும் அறியாத பாவனையாக அவர்களுக்கு இனியமொழிகூறி, தங்கள் வலது கையால் அந்த நஞ்சேற்றின கனிகளில் இரண்டொன்றையெடுத்து பிஸ்மி சொல்லித் தின்றுவிட்டு, மற்றவைகளையும் எடுத்தெடுத்து மகனூர் முதலான பகீர்மார் எல்லாருக்குங் கொடுத்தார்கள். அவர்களும் அவற்றைவாங்கி பிஸ்மி சொல்லித் தின்றார்கள். அதனால் அவர்களுக்கும் யாதொரு தீங்கும் உண்டாகவில்லை. வெகுநேரம் வரையும் அக்காபிர்கள் ஆண்டவரவர்கள் சமூகத்தில் நின்றார்கள்.

நஞ்சூட்டின கனியாதிகளைத்தின்று நெடுநேரமாயும் இவர்களுக்கு யாதொரு அபாயமும் உண்டாகவில்லை. இவர்கள் நாம் செய்த வஞ்சனையை அறிந்துதான் தின்றிருக்கின்றார்கள், அதைப்பற்றி நம்மைக்கேட்காமலும், நமக்குப் பிரதி தீங்குசெய்யாமலும் இருப்பதைக் கவனித்தால், இவர்கள் மகாபெரியோர்கள் என்பது தெளிவாய் விளங்குகின்றது. நாமே நமக்குத் தீங்கை வலியவருவித்துக்கொள்ளப் பார்க்கின்றோம். இம்மட்டோடே நாம் தப்புவது காரியம்



என்று அக்காபிர்கள் எண்ணிக்கொண்டு, மௌனமாய் அங்கிருந்து போய்விட்டார்கள்.

பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் முகல்லதீவுக்குள் ஒரு சாகையில் விடுதியிட்டிருந்தார்கள்.

முகல்லதீவுக்குப் போனது முற்றிற்று.

---

௯௭ - ம் அத்தியாயம்.

## ஜின்னைக் கடலிலாழ்த்தினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் முகல்லதீவில் தீங்குசெய்யவரும் ஜின்னைக் கரகத்திலடைத்துக் கடலிலாழ்த்தினதும், அதனால், அத்தீவார் முஸ்லிமானதுமான வரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து காதிறேலி கன்ஜஸவாய் கன்ஜபக்ஷ் பாத்து ஷாசாகிபு ஆண்டவரவர்கள் முகல்லதீவில் இருக்கும்போது, ஒருநாள் சாயரக்ஷை சில பகீர்களுடன் எழுந்து, ஊரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். வரும்போது, ஒருவீதியில், ஒரு வீட்டில், ஓவென்ற அழுகுரலும், ஜனத்திரளுமாயிருந்தன. அதை ஆண்டவரவர்கள் கண்டு அங்கே நெருங்கிநின்று பார்த்தார்கள். அப்போது, அரசன் சேவகர்கள் கூடிநின்று, அவ்வீட்டிலுள்ள ஒரு கன்னிகையை ஆடையாபரணங்கலாலலங்கரித்து, பரிமளம்பூசி, கயிறுகொண்டு கட்டுகிறதும், அவளைப் பெற்றதாயும், பந்துக்களும் சூழநின்று பிரலாபித்து அழுகிறதுமாயிருந்தது.

இந்தப் பரிதாபக்காட்சியை ஆண்டவரவர்கள் கண்டு, அங்கே கூடிநிற்கும் ஜனங்களைப்பார்த்து : இதென்னவிஷயம்? இவளை ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்றுகேட்

டார்கள். இக்கேள்விக்கு அந்த ஜனங்கள் ஆண்டவரவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொல்லுகின்றார்கள்:—

கேளுங்கள் சாகிபவர்களே, இவ்வூருக்குப் புறத்தில் ஒரு கோயிலிருக்கின்றது. துஷ்டதேவதையாகிய ஜின் ஒன்று வருஷத்திற்கு ஒருதரம் அந்தக் கோயிலுக்குவரும். அது அங்கேவரும் காலமும், நேரமும், எங்களுக்குத் தெரியும். அப்படி அதுவரும் இரவுக்கு முந்தின சாய்ந்தரமே நாங்கள் இவ்வூரிலுள்ள கன்னிகாப்பெண் ஒருத்தியை அலங்கரித்து, அக்கோயிலிற் கொண்டுபோய் அதற்குப் பலியாக வைத்து விடுவோம். அந்தஜின் அன்றிரவில் அங்கேவந்து அந்தப்பெண்ணைத் தன் இஷ்டப்படி நடத்திப் பிரேதமாக்கிப் போட்டுவிட்டு போய்விடும். அதிகாலையில் நாங்கள் அந்தப் பிரேதத்தை யெடுத்துத் தகனம் பண்ணுவோம். இது, வருஷந்தோறும் நடந்துவருகின்றது. இவ்விதம் நாங்கள் அந்த தேவதைக்கு நரபலி கொடாவிட்டால், அது இவ்வூருக்குள் பிரவேசித்து, எங்களை நாசமாக்கிவிடும். அதனால், நாங்கள் வருஷத்திற்கு ஒரு முறை வீட்டுக்கு ஒரு பெண்ணாக நியமித்துத் பலிகொடுத்து வருகிறோம். இந்த முறை பலியிட நியமிக்கப்பட்டவள் இவள். இன்றிரவு அந்தத் தேவதைவருகிற காலமாகையால், இவளைப் பலி கொடுக்கவேண்டியே இப்படிச் செய்கின்றோம் என்று இப்படிச் சொன்னபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் அவர்களைப்பார்த்து: இந்தப் பரிதாபமான கருமத்தை நீங்கள் செய்யாதீர்கள்; இந்தப்பெண்ணை அந்தக் கோயிலுக்குக் கொண்டுபோகாமல், இந்த அலங்காரத்துடன் ஒரு புருஷனைத்தேடிக் கலியாணம் பண்ணிக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு, தங்கள் சாகைக்கு வந்துவிட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் சொன்ன இந்தச் சொல்லை அந்தக் காபிர்கள் சிந்திக்கவில்லை. இவளை கலியா



ணம் பண்ணிக் கொடுத்துவிட்டால், தேவதைக்கு இலக்காவது யார் என்று தங்கள் கோரிக்கைப்படி அவளைச் சிவிகையில் ஏற்றி, தாயாதியோர் பரிதபித்து அழ ஊர் வலஞ் செய்து, மாலையானபோது அந்தக்கோயிலில் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்துவிட்டார்கள்.

தங்கள் சொல்லைக் கவனிக்காமல் அந்தக் காபிர்கள் இப்படிச் செய்தது ஹலறத்து ஆண்டவரவர்களுக்குத் தெரிந்து, நடுசாமத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அர்த்தராத்திரியானவுடன் தங்கள் கையில் கூஸா என்னும் நீர்க்கரகம் ஒன்றை யெடுத்துக்கொண்டு, தனியே புறப்பட்டு அந்தக் கோயிலுக்குப் போனார்கள். அந்நேரமே அந்த ஜின் அங்கேவரும் நேரமாயிருந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அங்கேபோன சமயத்தில் மேற்படித் துஷ்டதேவதையாகிய ஜின் வழக்கப்படி இடிமுழக்கம் போன்ற கர்நகொடூரமான தொனியிட்டு ஆவென்று அலறிக்கொண்டு, கண்களில் அக்கினிபறக்க, விகார ரூபத்துடன் தன் கோரப்பற்களை ஈயென்று இளித்துக்கொண்டு, அந்தக் குமரியைத் தாவி வந்தது. அது வரும் பயங்கரமான காட்சியை ஆண்டவரவர்கள் கண்டு, அதைப்பார்த்து "நில், சற்றே நில்; கொஞ்சம் பொறு. அவளை நெருங்காதே. இங்கே என் முன்வா" என்று கூறினார்கள். இந்தச் சத்தத்தைக்கேட்ட அந்த ஜின் திரும்பிப்பார்த்து ஆண்டவரவர்களைக் கண்டு, உடனே பலங்குன்றி, உடலயர்ந்து, உள்ளஞ்சோர்ந்து, ஊக்கந் தொலைந்து, திரும்பிவந்து ஆண்டவரவர்களின் திவ்விய சேவடியின்கீழ் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்தது.

ஆண்டவரவர்கள் உடனே தாங்கள் கொண்டுபோன நீர்க்கரகத்தை யெடுத்து அதன் கையிற்கொடுத்து: ஏ, பிசாசே, இதைக் கொண்டுபோய், அதோ ஓடுகிற ஆற்றில்

தண்ணீரள்ளிவா என்று கட்டளை யிட்டார்கள். அக் கட்டளைப் பிரகாரம் அந்த ஜின் எழுந்து கரகத்தை வாங்கிக் கொண்டுபோய், அங்கேயோடும் ஆற்றில் அமுக்கிற்று. அவ்வாற்றுத் தண்ணீர் முழுதும் அக் கரகத்திற்குட் புகுந்து, ஆறு வெறுந்தரையாய்விட்டது. இந்த ஆச்சரியத்தை அதுகண்டு திகைத்து, பின் கரகத்தைத் தூக்கிற்று; தூக்கக்கூடவில்லை. தன் முழுப்பலத்தையும் கூட்டி ஒறுத்து நின்று தூக்கியும், அதைத்தூக்க ஏலவில்லை. வெகுநேரம் தள்ளாடிநின்று, பின் கரகத்தை அங்கேயே வைத்துவிட்டு, ஆண்டவரவர்கள் சமுகத்தில் திரும்பிவந்து பணிந்து நின்று, நடந்த சங்கதியைச் சொல்லிற்று. ஆண்டவரவர்கள் அதைப்பார்த்து: நல்லது, இருக்கட்டும். நீபோய் அந்தக் கரகத்தை ஆற்றில் கவிழ்த்துவிடு. நீர் முழுதும் வந்திடும். அதன்பின் பிஸ்மில்லாஹி என்று சொல்லி மறுபடியும் கரகத்தை நீரிலமுக்கி அள்ளு. அதன்பின் தூக்கிக்கொண்டுவா என்று உத்தரவு பண்ணினார்கள்.

இந்தக் கட்டளைப்படி ஜின்போய்க் கரகத்தைக் கவிழ்த்த நீர் முழுதும் ஆறாய்ப் பெருகிற்று. அதன்பின் பிஸ்மில்லாஹி என்று சொல்லிக் கரகத்தில் நீரை மொண்டு தூக்கிக் கொணர்ந்து, ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைத்துக் கைகட்டி நின்றது. ஆண்டவரவர்கள் அந்த நீரைக் கொண்டு உலுசெய்து இரண்டு றக்அத்துத் தொழுதார்கள்.

ஆண்டவரவர்கள் உலு செய்யும்போதும், தொழும் போதும், இந்தக் கரகத்திற்குள் என்ன புதுமை யிருக்கின்றதோ! நாம் அதை அறியவேண்டும் என்று அந்த ஜின் எண்ணிக்கொண்டு நின்றது. தொழுதானவுடன் அது ஆண்டவரவர்களைப் பணிந்து: எஜமானவர்களே, இந்தக் கரகத்திற்குள்ளிருக்கும் புதுமை என்ன? என்றுகேட்டது. அதற்கு ஆண்டவரவர்கள் அதைப்பார்த்து, நீ அந்தப்



புதுமையை அறியவேண்டுமானால், அதனுள்ளே நுழைந்து பார்; அப்போது அறிவாய் என்றார்கள். இதைக்கேட்ட ஜின், நுழைந்து பார்ப்போம் என்று ஆவல்கொண்டு, சிற்றுருவெடுத்து, கரகத்திற்குள் நுழைந்தது. உடனே ஆண்டவரவர்கள் அந்தக் கரகத்தின் வாய்க்கு மூடிபோட்டு, ஜின்னை வெளிவாராமல். தடைசெய்து விட்டார்கள். இதற்குள் கோழிகூவிப் பொழுதுவிடியும் நேரமாயிற்று.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தக் கரகத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு, பஜறுதொழுது முடித்து ஓதிக் கொண்டிருந்தார்கள். அங்கே நடந்த இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் கோயிலுக்குள் பலியிட வைக்கப்பட்ட பெண் அதிசயமாகப் பார்த்துக்கொண் டிருந்தாள். பொழுதுவிடிந்து சூரியயோதயமானவுடன் சேவகர்களும், ஊர்ஜனங்களும் திரண்டு, வழக்கப்படி பிரேதம் எடுக்க வந்தார்கள். அவர்கள் கோயிலுக்குள் வந்துபார்த்து, தாங்கள் பலியிட்ட பெண் யாதொரு பங்கமுமின்றி வைத்த வண்ணம் இருக்கக்கண்டு ஆச்சரிய மடைந்து: இங்கே நடந்தவை யென்ன? என்று அவளைக் கேட்டார்கள். அதற்கு அவள், தான் திருஷ்டாந்த பூர்வமாகக்கண்ட காட்சிகளை அவர்களுக்கு விவரமாகச் சொன்னாள்.

இந்த அதிசயமான சங்கதியைக்கேட்ட அவர்கள் ஆநந்த மடைந்து, அப் பெண்ணை யழைத்துக் கொண்டு ஆண்டவரவர்களின் திருவடிகளில் வந்து விழுந்து சாஷ்டாங்கம் பண்ணிப்புகழ்ந்து, அவ்வூர் அரசனிடம் போய்த் தெரிவித்தார்கள். அரசன் கேட்டு அதிசயப்பட்டு, அந்தப் பெண்ணைத் தாய்வசம் ஒப்படைத்துவிட்டு, தானும், மந்திரி பிரதானிகளும், சேனை வீரர்களுமாகப் புறப்பட்டு வந்து ஆண்டவரவர்களின் பாதத்தில் வீழ்ந்து, பின் வருமாறு சொல்லுகின்றார்கள்:—

எஜமானவர்களே, மூட ஜனங்களாகிய நாங்கள் ஏதும் குற்றங் குறைகள் செய்திருந்தால் மன்னித்து, எங்கள்மேல் இரக்கம் வைக்கவேண்டும். இப்போது எங்களுக்குத் தாங்கள் செய்த பேருதவிக்குப் பிரதிசெய்ய நாங்கள் பாத்திரவான்களல்ல. தங்கள் உதவியுமோ ஈடற்ற உதவியாம். மேகஞ்செய்யும் உதவிக்கு வேறு பிரதியுதவி யில்லாததுபோல, தங்கள் உதவிக்கும் வேறு பிரதியில்லை. ஆகையால், தாங்கள் இட்டகட்டளைக்கு இரண்டில்லாமல் இந்தவூர் ஜனங்களாகிய நாங்கள் எல்லாரும் நடக்கக் காத்திருக்கின்றோம். இன்னும், நாங்கள் இதுவரையும் நற்கதியற்ற வழிகேட்டிலிருந்து காலங்கழித்தோம். இனித் தாங்கள் எங்களுக்கு நேர்வழிகாட்டி ரக்ஷியுங்கள். இன்று முதல் தாங்களேயன்றி, எங்களுக்கு வேறு திக்கில்லை என்று இப்படி முறையிட்டபோது, ஹலறத்து ஆண்டவரவர்கள் அரசன் முதல் அவ்வூரார் எல்லாருக்கும் அபயங் கொடுத்து, தீனுல்லிஸ்லாத்தின் மூலமந்திரமாகிய கலிமாவைப் புகட்டினார்கள். அன்று முகல்லதீவார் அனைவரும் ஆண்டவரவர்களின் கையைப்பிடித்துக் கலிமா சொல்லி, இஸ்லாமானார்கள். பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் அவர்களுக்கு மார்க்கத்தின் விதிவிலக்குகளைத் தெரிவித்து, அவ்வரசரைத் தாமே என்றும் போலிருந்து அரசாளும்படி நியமித்துச் சிங்காசனம் ஏற்றி, பின்னும் அவர்களுக்கு ஆகவேண்டியவைகளையும் திட்டஞ்செய்து வைத்தார்கள்.

இது நடந்த இரண்டு நாட்களுக்குப்பின், அவ்வூரார் பலர் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்துபணிந்து நின்று: எஜமானவர்களே, தாங்கள் கரகத்தில் அடைத்த ஜின்னை அப்படியே வைத்திருந்தால், அது பின்னுக்கு எங்களை என்னபண்ணுமோ வென்று அச்சமுண்டாகின்றது. ஆகையால், அதைப்பற்றித் தாங்கள் என்ன கட்டளையிடுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது ஆண்டவ



ரவர்கள் அவர்களைப்பார்த்து: உங்களுக்கு அதைக்குறித்து அச்ச முண்டுபட்டால், இந்தக் கரகத்தை ஒரு தோணியில் ஏற்றிப்போய், இலங்கைத் தீவைச்சேர்ந்த கடலில் ஆழ்த்தி விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். இதைக் கேட்ட அவர்கள் பின்னும்: எஜமானவர்களே, அடுத்தடுத்து நாங்கள் இலங்கைக்குப் போய்வந்துகொண் டிருக்கின்றோம். நாங்கள் போக்குவரத்துச் செய்யும் வழியிலுள்ள கடலில் இதைக் கொண்டுபோய் ஆழ்த்தியிருந்தால், அங்கிருந்துகொண்டு எங்கள் உருக்களை மோசஞ்செய்யவுங் கூடுமே? என்றார்கள். அதற்கு ஆண்டவரவர்கள்: அப்படி இனி அது ஒன்றுஞ் செய்யாது. நீங்கள் பயப்படாதீர்கள். என் சொற்படி கொண்டுபோய் ஆழ்த்திவிடுங்கள் என்று உத்தரவுபண்ணி, இன்றுதொட்டு ஓடித்திரியும் உங்கள் உருக்களுக்குக் கடலில் அபாயமில்லை என்றும் வாக்கிட்டார்கள். இதைக்கேட்ட அவர்கள் சந்தோஷமாய் ஜின்னை அடைத்திருக்கும் அந்த நீர்க்கரத்தை வாங்கி ஒரு தோணியில் ஏற்றி ஆண்டவரவர்கள் குறித்த கடலிற் கொண்டுபோய் ஆழ்த்தி விட்டார்கள். அன்றுதொட்டு முகல்லதீவார் ஜின்பயம் ஒழிந்து சுகமாய் வாழ்ந்தார்கள். கடலிலும் அவர்கள் உருக்களுக்கு இது பரியந்தம் சேதமுண்டாகவில்லை.

ஜின்னைக் கடலிலாழ்த்தினது முற்றிற்று.

---

## ௬௮-ம் அத்தியாயம்.

# ஆதம்மலையைத் தரிசித்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் முகல்லதீவிலிருந்து அற்புதகரமாகக் கடலைக்கடந்து இலங்கைக்குப் போய், அங்குள்ள நபி ஆதம் அலைகிஸ்ஸலா மவர்கள் இறங்கின மலையைத் தரிசனைபண்ணின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷா ஸாகிபு ஆண்டவரவர்கள் முகல்லதீவாருக்குச் செய்யவேண்டிய மார்க்கத்தின் ஏற்பாடுகள் அனைத்துஞ் செய்துமுடித்து, இலங்கைக்குப் போகவேண்டுமென்று நாடி அவர்களுக்குப் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு அத்தீவின் பலபாகங்களைச் சுற்றிப்பார்த்து, முன்னொருதரம் சூரியனையழைத்து மீன்சுட்டுத் தின்றுவிட்டு அம்மீனை உயிராக்கி யனுப்பின ஒலியுல்லா ஹலறத்து ஷம்ஸுத்தப்றேஜ் ஆண்டவரவர்கள் அடங்கியிருக்கும் தலத்திற்போய் ஜியாறத்துச் செய்துகொண்டு, அங்கிருந்து கடலருகிலுள்ள ஒருதுறைக்கு வந்தார்கள். அப்போது, இலங்கைக்குப் பாய்தூக்கியோடும் உரு அங்கு ஒன்றுமில்லை.

தாங்கள் இலங்கைத் தீவுக்குப் போய்ச்சேர உரு அகப்படாமைகண்டு, அத்துறையை யடுக்கக்கிடந்த ஒரு பாரிய கருங்கற்பாறையைக்கண்டு அதன் அருகிற்போய் நின்றுகொண்டு, தங்கள் மகனார் முதலான பகீர்கள் எல்லாரையும் அந்தப் பாறைக்கல்லில் ஏறியுட்கார்ந்து கண்களை மூடிக்கொள்ளக் கட்டளை பண்ணிவிட்டு, தாங்களும் பிஸ்மி சொல்லி ஏறியுட்கார்ந்தார்கள். ஆண்டவரவர்கள் ஏறியுட்கார்ந்தவுடன் அந்தக்கல் அதிகவேகமாயோடும் மரக்கலத்தைப் போலக் கடலை யூடுருவி யோடத்தொடங்கி, ஒரு



க்ஷணப் பொழுதில் இலங்கையின் எதிர்கரையாகிய காலித் துறையிற்போய்ச் சேர்ந்தது. பின் ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாரைக் கண்களைத்திறக்க ஏவினார்கள். திறந்து பார்க்கும்போது, எல்லாரும் காலியில் கரைசேர்ந்திருக்கக் கண்டு புதுமையுற்றுக் களிகூர்ந்தார்கள்.

பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் கரையிலிறங்கி, காலி நகரத்திற்குட்போய் அந்நகரத்து அலங்காரங்களை நோக்கி, அங்கிருந்து நபி ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் வானத்திலிருந்து இறங்கின சிறப்பான மலையை நோக்கிப்புறப்பட்டு, இலங்கைத்தீவிலுள்ள அடர்ந்த பாரிய வனங்களையும், ஆச்சரியமான கெபிகளமைந்தமலைத் தொடர்களையும், அங்கங்கேயுள்ள புதுமைகளையும் பார்த்துக்கொண்டு பலநாள் நடந்து, ஆதம் மலையிற் போய்ச் சேர்ந்தார்கள்,

மகத்துவமிக்க அந்த மலையை ஹலறத்து ஆண்டவரவர்கள் கண்டபோது அல்லாஹுத்தஆலாவுக்கு சுஜூது செய்து புகழ்ந்து, இரண்டு றக்அத்துத் தொழுது, தங்கள் கூட்டத்தாருடன் அதன்மேல் ஏறினார்கள். ஏறிப்போகும் மலைப் பாதையில் கண்டகாட்சிகள் அநந்தம். அங்கே வசிக்கும் துறவிகளையும், பின்னுமுள்ள புதுமைகளையும் பார்த்துக்கொண்டு சிகரத்திற்குப்போய், அங்கே நபி ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் இட்ட திருவடிச்சுவட்டைக் கண்டு அல்லாஹுத்தஆலாவைப் புகழ்ந்து, இரண்டு றக்அத்துத்தொழுது, பின் அங்கே காணவேண்டிய இடங்களை யெல்லாங் கண்டு, அம்மலைச் சிகரத்தில் தானே ஒருபுறங் விடுதியிட்டுத் தங்கி, இபாதத்துச் செய்துகொண்டு சில தினம்வரையும் இருந்தார்கள்.

[நபி ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் வானத்திலிருந்து தள்ளுண்டு வந்து இறங்கி நின்று அல்லாஹுத்தஆலா இடம் தாங்கள் செய்த பிழையைப் பொறுக்கும்படி பச்சாதாபப்பட்டுப் பலகாலம் மன்றாடி

நின்ற தானமாகிய அந்தமலையின் மகத்துவத்தை வருணிக்க நான் திராணி பெறவில்லை. அதன் சிறப்பைஅல்லாகுந்தஆலா தான் அறிவான். அந்த மலையைப்பற்றிக் கிரந்தகர்த்தாக்கள் பலர் அநேகமாக விசேஷித்து எழுதியிருக்கின்றார்கள். அவற்றை இங்கெழுதினால் விரிவாகுமென்று நிறுத்துகின்றேன்.]

ஹலறத்து ஆண்டவரவர்கள் சாகை பண்ணியிருக்குமிடம் உன்னதமான கொடுமுடியாதலால், தங்கள் கூட்டத்தாருக்கு அடுத்தடுத்து உணவுதேடுவது அசாத்தியமாயிருந்தது. அதனால், தங்கள் மகனார் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களைக் கூப்பிட்டு, நம்மிடத்திலுள்ள கிஸ்கீ என்னும் கமண்டலத்தையெடுத்து வருவீராகவென்று உத்தரவு செய்தார்கள். மகனாரவர்கள் உடனே போய்க் கமண்டலத்தைத் தூக்கினபோது அது கைதவறி மலைக்கல்லில் விழுந்து, சில்லபொல்லமாய் நொறுங்கிற்று. அதனால் அவர்கள் மனம்பதறித் திகைத்து நின்றார்கள். கமண்டலம் ஒடிந்து துண்டுதுண்டாய்ச் சிதறியதையும், அதற்காக மகனார் திகைத்து நிற்பதையும் ஆண்டவரவர்கள் அறிந்து: மகனே, பயப்படாதீர். உமது கையினால் உடைந்த துண்டுகளைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு வாரும் என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். அதைக்கேட்ட மகனாரவர்கள் ஒடிந்துபோன கமண்டலத்துண்டுகளைப் பொறுக்கியெடுத்த மாத்திரத்தில், அது முன்போலப் பழுதற்ற கமண்டலமாய், அவர்கள் கையில் இருந்தது.

ஒடிந்து சிதறின கமண்டலம் பழயவுருவா யிருப்பதை கண்ட மகனார் களிப்புற்று, தகப்பனாரவர்கள் சமுகத்தில் கொணர்ந்து பணிந்து வைத்துக் கைகட்டி நின்றார்கள். ஆண்டவரவர்கள் அந்தக் கமண்டலத்தை யெடுத்துத் தங்கள் வலது கரத்தை, பிஸ்மி சொல்லி அதற்குள் இட்டு, பலவகை உணவுகளை எடுத்தெடுத்து பகீர்களுக்குப் பறிமாறினார்கள். அதனால் உணவு தேடுங்கவலை ஒழிந்



ந்தது. வேண்டுமான சமயங்களி லெல்லாம் இவ்வாறே செய்து வந்தார்கள். சிலவேளை அந்தக் கமண்டலத்தில் மகனாரைக் கையிட்டு எடுத்துக் கொடுக்கவும் ஏவுவார்கள்.

ஆதம்மலையைத் தரிசித்தது முற்றிற்று.

---

௯௯-ம் அத்தியாயம்.

## காயற்பட்டணத்திற்குப்போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஆதம் மலையைவிட்டிறங்கி, இலங்கையைக்கடந்து இந்தியாவுக்குவந்து, காயற் பட்டணத்திற்குப்போய், அங்குள்ள பிரபு ஒருவருக்குத் தங்கள் சட்டைக்கையில் ஹூறுல்லீன்களைக் காட்டின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் பாதுஷா ஆண்டவரவர்கள் நபி ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களின் திருநாமம் பெற்று விளங்கும் சிறந்த மலையை விட்டிறங்கி, தங்கள் கூட்டத்தார் புடைசூழ இலங்கைத் தீவின் வடபுறம் நோக்கி நடந்து, காடுகள், மலைகள், நதிகள் எல்லாவற்றையுங் கடந்து வந்தார்கள், அவர்கள் வரும்போது, வழியிலுள்ள அடவியிற் சஞ்சரிக்கும் மான்களில் இளம்பிராயமும், அதிக லக்ஷணமுமுள்ள ஒரு புள்ளிமான் வலிய ஆண்டவரவர்களைத் தொடர்ந்து வந்தது. ஆண்டவரவர்கள் அது வலிய வருவதைக்கண்டு கூடவே அழைத்துக்கொண்டு, சில தினம் நடந்து இலங்கைத்தீவைக் கடந்து, இந்தியாவின் தென்கரைவந்து * சேர்ந்தார்கள்.

---

* இலங்கையிலிருந்து இந்தியாவுக்குவந்தது உருவில் ஏறியென்றும், அல்லது, வேறு விதமாக வென்றும், ஒரு கிரந்தத்திலும் விவரஞ் சொல்லப்படவில்லை. காரணப்புராணம், பாவா ஆதம் மலையைத் தரிசித்த படலம், ௨௫-ம் கவியில் " கடற்கடவையுங்கடந்து " என்று சொல்வதைக் கவனிக்குமிடத்து, பாமன் கால்வாய் மார்க்கமாகவே வந்திருக்கின்றதாகப் புலப்படுகின்றது.

ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்துடன் இந்தியாக் கரையைச் சேர்ந்தவுடன் அங்கிருந்து நடந்து, பலவூர்களையுங்கண்டு, காயற்பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். ஹலறத்து முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றளியல்லாகு அன்கு ஆண்டவரவர்களின் பௌத்திரராகிய மகாகாரணீக நாயகரவர்கள் வருகின்றார்கள் என்னும் சமாசாரத்தைக் கேள்வியுற்று அவ்வூர் முஸ்லிம்களும், அவர்களுக்குத் தலைவராகிய அப்துல்கப்பாறு என்பவரும் திரளாய்க் கூடி, ஆண்டவரவர்களை எதிர்கொண்டு அழைத்துப்போய் ஒரு தக்க சாகையில் இருக்கச்செய்து, வழிபட்டு உபசரித்தார்கள்.

காயற் பட்டணத்து முஸ்லிம்களுடைய உபசரணையில் ஹலறத்து ஆண்டவரவர்களிருக்கும்போது, ஒரு நாள் அவ்வூர்த் தலைவரும், பிரபுவுமாகிய அந்த அப்துல்கப்பாறென்பவர் வந்து அடிபணிந்து: எஜமானவர்களே, தாங்களும் தங்கள் கூட்டத்தாரும் தமியேனுடைய சிறுமனையில் வந்து விருந்துண்ண வேண்டும் என்று வெகுவாய்ப் பிரார்த்தித்தார். ஆண்டவரவர்கள் அதற்கு உடன்பட்டு, ஒரு நாள் அவர் வீட்டுக்குக் கூட்டத்துடன் விருந்துண்ணப் போனார்கள்.

பிரபு அப்துல்கப்பாறுடைய மாளிகையில் ஆண்டவரவர்களுக்கு அதிக விமரிசையாக விருந்து நடந்தது. எல்லாரும் விருந்துண்டு தீர்ந்தபின், அவரவர் பலவாறு சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அப்துல்கப்பாறென்பவர் ஆண்டவரவர்கள் அருகில்வந்து மரியாதைசெய்து: எஜமானவர்களே எனக்கு ஒரு மகளுண்டு, அவள் மார்க்கத்தின் விதிவிலக்குகளில் நன்றாய்த் தேறிப் பழகினவள்; வணக்கத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்தவள்; குர்ஆன் முழுதும் மனனமானவள். குணத்திலும், அழகிலும் குறைவில்லாதவள். அவளைத் தேவரீர் விவாகஞ்செய்து கொள்ள வேண்டுமென்று பிரியப்படுகிறேன். தங்கள் அபிப்பிராயம் எப்படியோ? என்று சொன்னார்.



இதைக்கேட்ட ஹலறத்து ஆண்டவரவர்கள் அவரைப்பார்த்து: அல்லாகுத்தஆலா எனக்கு இரண்டு பெண்களைத் தந்திருக்கின்றான். அந்தப் பெண்களை இதோபாரும் என்று சொல்லி, தங்கள் இடது கைச்சட்டையை வலது கையால் நீக்கி அவருக்குக் காட்டினார்கள். அப்போது, அக்கைக்குள் ஒரு விசித்திரமான மாளிகையின் மேன்மாடியிற் கொலுவப்பட்ட ரத்தினத்தொட்டிலில் இரண்டு பெண்களிருந்து உல்லாசமாயாடுவதை அவர்கண்டார். கண்கள் மழுங்கத்தக்க விசேஷ ரூபலாவண்யமுள்ள அந்தப்பெண்களை அவர்கண்டு திகைத்து: எஜமானவர்களே, தங்கள் மகத்துவம் இவ்விதமென்று நான் அறியாமையால், இச்சொல்லைச் சொல்லிவிட்டேன். மன்னிக்கவேண்டும் என்று மன்றாடினார். ஆண்டவரவர்கள் அவருக்கு அபயவார்த்தை சொல்லிவிட்டு, சாகைக்கு மீண்டார்கள்.

காயற்பட்டணத்திற்குப்போனது முற்றிற்று.

---

## ௭௦-ம் அத்தியாயம்.

## கீழக்கரைக்குப்போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் கீழக்கரைக் குப்போன வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீரான் சுல்தான் ஷாகுல்ஹமீது பாத்ஷா ஸாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் மகனாராதி பகீர்களுடன் காயற் பட்டணத்தை விட்டுப்புறப்பட்டு, கீழக்கரை யென்னும் ஊரிற்போய், ஒரு சாகையில் தங்கினார்கள். அன்று பொழுதுபட்டு இராவேளை அடுத்தது.

இராவானபோது பகீர்களிற் சிலர் எழுந்து அவ்வூர் முஸ்லிம்களின் வீடுகள்தோறும்போய், உண்ணுவதற்கு ஏதும் கொடுங்கள் என்று கேட்டார்கள். கேட்ட வீடுகளிலெல்லாம் ஒன்றுமில்லை யென்று சொல்லிவிட்டார்கள். பின்பு, பகீர்கள்: எங்கள் சாகை இருண்டிருக்கின்றது; ஒரு சிறிய விளக்காவது கொடுங்கள் என்று வீடுவீடாய்க் கேட்டார்கள். அதுவும் இல்லையென்றே சொல்லிவிட்டார்கள். அதன்பின், குடிக்கத் தண்ணீராவது கொடுங்கள் என்று கேட்டார்கள்.

ஒன்றைவிட்டொன்று வாய் சலிக்காமல் கேட்டதால், இரண்டொரு வீட்டுக்காரர் அலுப்புற்று, உவர் நீரைக் கொணர்ந்து பகீர்கள் கையிற் கொடுத்தார்கள். அந்தக் கைப்பு நீரை அவர்கள் வாங்கிவந்து, ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் நடந்த சங்கதிகளைத் தெரிவித்து, உவர் நீரையும் காட்டினார்கள். ஆண்டவரவர்கள் அதைக் கேட்டு "இந்தவூரில் நல்லஜலம் இல்லைப்போலும்" என்று சொல்லிவிட்டு மௌனமா யிருந்துவிட்டார்கள். அன்று



முதல் அவ்வூரில் நல்லஜலம் அற்றுப்போயிற்று. அநேக ஆண்டுகள்வரையும் அவ்வூரார் குடிக்க நீரற்று, கைப்பு நீர் குடித்துக் காலங்கழித்து வந்ததோடு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களுக்குத் தண்ணீர் கொடாதவர்கள்" என்னுஞ் சொல்லுக்கும் இலக்கா யிருந்தார்கள்.

பின்பு இந்த நூற்றாண்டில் அவ்வூரில் அவதரித்து அடங்கி விளங்கும் ஒலியுல்லா ஹலறத்து சைகு ஸதகத் துல்லாசாகிபவர்கள் தங்கள் ஊருக்கு இடையில் நேரிட்ட ஜலகஷ்டந்தீர ஆண்டவரவர்களிடம் மன்னிப்புக் கேட்டு, துஆவும் செய்தார்கள். அவர்கள் பொருட்டினால் பிறகு அங்கே நல்லஜலம் உண்டாயிற்று.

கீழக்கரைக்குப்போனது முற்றிற்று.

## ௭௧-ம் அத்தியாயம்.

## பட்டணமாரிக்குப்போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பட்டணமாரி யென்னும் ஊரிற்போய், அங்குள்ள ஒரு ஏழைக்குக் காரணத்தோணி யுண்டாக்கிக் கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது சுல்தான் ஷாகுல் ஹமீது காதிறோலி ஆண்டவரவர்கள் கீழக்கரையிலிருந்து தங்கள் கூட்டத்தாருடன் புறப்பட்டு, பட்டணமாரி யென்கிற சிற்றூரிற்போய்த் தங்கினார்கள். அங்குள்ள முஸ்லிமான ஜனங்கள் அனைவரும் ஆண்டவரவர்களின் மகிமையைக் கேள்விப்பட்டு, தங்கள் தங்களால் ஏன்ற பொருட்களைக் கொணர்ந்து பாத காணிக்கை வைத்துத் தரிசனை செய்தார்கள். ஆண்டவரவர்கள் அவர்கள் கொடுக்கும் காணிக்கை வஸ்துகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு துஆ செய்து அனுப்பினார்கள்.

ஒரு நாள் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒட்டியுலர்ந்த மேனியையும், கந்தைத் துணியையு முடைய ஊதப்பறக் குந் தன்மையுள்ள ஒரு எளியவன் தங்கள் கூட்டத்திற் கலந்திருக்கக்கண்டு, அவனை அருகில் அழைத்து: நீயார்? உன் வர்த்தமானங்கள் யாவை? நீ செய்யும் தொழில் என்ன? உன் வீடு எங்கிருக்கின்றது? நீ இங்கே வந்த காரணம் யாது? என்று வினவினார்கள். அதற்கு அந்த ஏழை மனிதன் ஆண்டவரவர்களை நோக்கி: எஜமானவர் களே, நான் இந்த ஊரான்தான். தமியேன் செய்யுந் தொழில் மீன் பிடித்தல். எனக்கு ஒரு தோணி சொந் தத்தில் இருந்தது. அதைக்கொண்டு பல வேலையாட்களை நியமித்து ஏராளமான மீன்களைப் பிடித்து விற்று, திரவிய வந்தனாய் வாழ்ந்திருந்தேன். பின் எனக்குத் தரித்திரந் தொட்டதால், என்மீன்பிடி தோணி புசலில் அகப்பட்டுக் கடலில் ஆழ்ந்துவிட்டது. அன்று முதல் நான் படிப்படி இறங்கினேன். என்கையிலுள்ள பொருள் முழுதும் போய், இரந்து தின்னும் அளவுக்கு வந்துவிட்டது. என் பெண்டு பிள்ளைகளும், நானும், பட்டினி கிடந்து வருந்துங் கஷ்டம் சொல்லுந்தரமுள்ளதல்ல. இருந்தாலும், வாயார வயிறார உண்ணக் கிடைப்பது இந்தவூரில் அரிதா யிருக்கின்றது. இன்றைக்கு மூன்று நாளுக்கு முன்வரையும் நான் வயிறு நிரம்ப உண்டறியேன். தாங்கள்வந்த மூன்று நாளாக நான் தங்கள் கூட்டத்தோடு சேர்ந்து, என் ஆவலடங்க உண்கிறேன். நான் இங்கே தரித்திருப்பது, என்கெளி நிர வுண்ணவேண்டு மென்று எண்ணங்கொண்டுதான் என்று பரிதாபமாகச் சொன்னான்.

இந்த இரக்கமான சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் ஹலறத்து ஆண்டவரவர்களின் மனம் கரைந்து உருகிற்று. உடனே அவனைப் பார்த்து: உன் உடைந்த தோணியின் துண்டுப்பலகை, கயிறு, பாய் ஏதுமிருந்தால், இங்கே



கொண்டுவா என்று கட்டளையிட்டார்கள். இதைக்கேட்ட அவன் விரைந்தோடிப்போய், தன் தோணியின் மண்டின்ற ஒரு சிறு பலகைத்துண்டும், இற்றுப்போன கயிற்றுத் துணுக்கும், கறையானரித்த ரட்டுப்பாய்ச் சிறுதுணியும், உக்கிப்போன ஒருகம்பையும் இருக்கக்கண்டு, அவற்றை யெடுத்துக் கொண்டுவந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைத்தான். ஆண்டவரவர்கள் அவற்றைத் தங்கள் சிறப் பான கையினால் தொட்டுவிட்டு, அவனைப்பார்த்து: நீ இவற்றையெடுத்துக் கொண்டு போய்க் கடலருகிற் போட்டு, பலகையில் கம்பையை நட்டிக் கயிற்றாற் பிணித்து, பாயை அதன்மேற்கொளுவி, பலகைமேற் ஏறி உட்கார்ந்திரு என்று ஏவினார்கள். அவன் அவற்றை தூக்கிக் கொண்டு போய்க் கடலருகில் வைத்து, ஆண்டவரவர்கள் சொன்ன படி செய்து உட்கார்ந்திருந்தான்.

ஆண்டவரவர்கள் ஒருபகீரைக் கூப்பிட்டு ஒருபோர் வையும், பிரம்பும் எடுத்துக்கொண்டு கூடவரும்படி சொல்லிவிட்டு, தாங்கள் அந்த எளியவன் இருக்கும் கட லருகிற் போய், அந்தபகீரைக் கொண்டு போர்வையை அவன்மேல் போர்த்தி மூடச்சொல்லி, பின் அவனைக் கூப் பிட்டு, ஏ, மனிதனே, இப்போது நீ இருக்கும் பலகை தோணியாய்க் கடலில் ஓடும். அப்படி அது ஓடத்தொடங் கினவுடன், நீ அதிவிரைவாக இந்தப்போர்வையை யெடுத்துக் கரையில் எறிந்துவிடு என்று சொல்லிவிட்டு, தங்கள் கையில் அந்தப் பிரம்பை வாங்கிப் போர்வைமீது ஒரு தட்டுத் தட்டினார்கள்; உடனே அவன் ஏறியிருக்கும் பலகை அழகும் பலமுமுள்ள தோணியாய், கடலில் ஓடிற்று. அப்போதே அவன் அந்தப்போர்வையை யெடுத் துக் கரையில் வீசினான். அதன்பின் அந்தத்தோணி எட்டாக் கையில் விரைந்து ஓடிற்று. பிற்பாடு ஆண்டவரவர்கள் அங்கிருந்து தங்கள் சாகைக்குத் திரும்பிவந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் பொருட்டால் உண்டான அந்த அற்புதத்தோணியில், அதற்கு வேண்டுமான கருவிகள் எல்லாம் குறைவற்றிருந்தன. நட்டின பாய்மரம், கட்டினகயிறு, கொளுவினபாய் இவைகளல்லாமல், பின் மாற்றுதலுக்கும் வேறேயிருந்தன. தோணி தரித்துநிற்க இடும் நங்கூரமும் ஜதையாயிருந்தன. தரந்தரமான வலைகளும் தட்டின்மேல் வைக்கப்பட்டிருந்தன.

தோணியில் ஏறியிருக்கும் அவன் சந்தோஷமாய்க் கடலில் வெகுதூரம்போய், அளவற்ற விலையுயர்ந்த மீன்களைப் பிடித்துக்கொண்டு விரைவாய்க் கரைக்குவந்து, தோணியை நங்கூரமிட்டு நிறுத்தி மீன்களைக் கரையிலிறக்கி விற்றுப் பணத்தை முடிந்துகொண்டு, ஹலறத்து ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து பணிந்துநின்றான். ஆண்டவரவர்கள் அவனைப்பார்த்து: உன் காரியம் எப்படி? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: எஜமானவர்களே, எளியேன் தங்கள் திருவடிகளைக் கண்டபோதே பாக்கியவான் ஆனேன். தங்கள் பொருட்டாலான தோணியைக்கொண்டு இன்று எனக்கு அதிகலாபங் கிடைத்தது என்று மறுமொழி சொன்னான். ஆண்டவரவர்கள்: அந்தத் தோணியைக்கொண்டு அதிகமாய் வாழ்ந்திரு என்று அவனை ஆசீர்வதித்து அனுப்பினார்கள்.

பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் அந்தப் பட்டணமாரியை விட்டுப் பிரயாணப்பட்டு, மேற்குநோக்கி நடந்தார்கள்.

அற்புதத்தோணியினால் அன்றுமுதல் அந்த எளிய மனிதனைச் செல்வம்வந்து தொட்டுக்கொண்டது. கூலிக்கு மீன்பிடிப்போர் பலர் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவன் ஒவ்வொருநாளும் கூலிக்காரர்களைக்கொண்டு எல்லாத் தோணிகளுக்கும் முந்தத் தன் தோணியைப் பாய்



தூக்கி யநுப்புவான். அப்படியே அதுபோய் அளவற்ற உயர்தரமீன்களைப் பிடித்துக்கொண்டு, எல்லாத் தோணிகளுக்கும் முந்திக் கரைப்படும். உடனே அம்மீன்களைக் கரையிற் பறித்து அம்பாரமாகக் குவித்து, நல்லவிலைக்கு விற்பான். ஒவ்வொருநாளும் இவ்வாறே நடக்கும். அதனால் அவனுக்கு அதிகவிரைவில் வாழ்வு வந்தது.

உண்ண உடுத்த வகையற்றுக்கிடந்து இரந்து திரிந்தவன் மறுபடியும் செல்வமடைந்தானே, இது ஆண்டவரவர்கள் உண்டாக்கிக் கொடுத்த தோணியினால் நேரிட்டதல்லவா? என்று மற்ற மீன்பிடிகாரர்களுக்கு அவன்மேல் பொறாமை கிளம்பிற்று. ஆகையால், அவர்கள் எல்லாரும் ஒருங்குகூடி, ஒரு ஊரில் ஒரு பெரியோர்வந்து ஒருவனுக்கு ஒரு நன்மையையுண்டுபண்ணினால், அந்த நன்மையை அவன்மாத்திரந்தானா அநுபவிக்கிறது? மற்றவருக்கு இல்லையா? அந்தப்பெரியோர் நமக்கும் பொதுவானவர்கள் தாமே. நாமும் அவர்களுக்கு அடிமைகள் தாமே. அவர்கள் செய்யும் உபகாரமும் ஊர்ப்பொதுதானே. ஆகையால் நமக்கும் அதில் பங்குண்டுதான் என்று கலாபனை பண்ணி, இதை ஊரார்விசாரித்து முடிவு சொல்லட்டும் என்று, மீன்பிடிக்கப் போகாமல் தோணிகளையெல்லாம் மறித்துக் கட்டிவிட்டு, பெரியதனக்காரரிடம் போய் முறையிட்டார்கள். "ஊருக்குத்தக்க நாட்டாண்மையும், உறமுறைக்குத் தக்க அறமுறையும்" என்றபடி அந்தப் பெரியதனக்காரர் இதைக்கேட்டு, தம் இஷ்டப்படி இதன்கீழ் வருமாறு தீர்மானித்து வழக்கறுத்தார்கள். அந்தத் தீர்மானம் ;—

"உங்கள் வழக்குச் சரி. ஆனால், நீங்கள் ஒருகாரியம் பண்ணுங்கள். நீங்கள் எல்லாருஞ் சேர்ந்து பொதுவில் பணஞ் சேகரித்து, இவனுக்கு ஒரு புதுத்தோணிசெய்து கொடுத்துவிடுங்கள். அதன்பின், அவனுடைய காரணத்

தோணியைப் பொதுவாக்கித் துண்டுதுண்டாகத் தறித்து, அவனுள்பட எல்லாரும் உங்கள் ஒவ்வொரு தோணியிலும் அந்தக்காரனைத்தோணித் துண்டைவைத்து ஆணிதைத்துக் கொள்ளுங்கள். அப்போது, அதன்பறக்கத்து உங்களுக்கெல்லாம் உண்டாகும் '' என்பதே.

இந்தத் தீர்மானப்படி மற்ற மீன்பிடிகாரர் அனைவரும் ஒன்றுகூடிப் பொதுநிதிசேர்த்து, ஒரு தோணிசெய்வித்து அவனுக்குக் கொடுத்துவிட்டு, அவனுடைய காரணத்தோணியைப் பலகை பலகையாகப்பிரித்துத் தறித்து, அவன் தோணியுள்பட எல்லாத்தோணியிலும் ஒவ்வொரு துண்டுவைத்து ஆணியறைந்து கொண்டார்கள். அவர்கள் நாட்டப்படி எல்லாத் தோணிக்கும் அன்றுமுதல் அதிகநய முண்டாகத் தலைப்பட்டது. மேற்படிக் காரணத் தோணிக் காரனுக்கும் குறைவில்லை. முன்போலவே அவனுக்குப் பெருகிவந்தது. ஆகவே அவன் நிமித்தம் அவ்வூர் மீன்பிடிகாரர் எல்லாரும் சீமான்களானார்கள்.

பட்டணமாரிக்குப்போனது முற்றிற்று.

---

௭௨-ம் அத்தியாயம்.

## இடபமுயிர்த்தது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மேலைப்பாளையத்திற்குப்போய் அங்கு கல்வத்திருந்து, பின் அங்கிருந்து தென்காசிக்குப்போய், கோயிற்காளைக்கு உயிர்கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது ஷாதல் ஹமீது காதிறுவலி கன்ஜ பக்ஷ் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் பட்டணமாரியிலிருந்து புறப்பட்டுத் தபோதனர் கூட்டத்துடன் மேலைப் பாளையமென்னும் ஊரிற்போய், அங்கே ஒருதானத்தில் விடுதியிட்டுத் தங்கி, நாற்பதுநாள் கல்வத்தில் இருந்தார்கள். நாற்பதுநாள் தீர்ந்தபின் கத்தம் பாத்திஹாவோதி கந்தூரி கொடுத்துவிட்டு, :அங்கிருந்து புறப்பட்டுக் கூட்டத்தாருடன் தென்காசிக்குப் போனார்கள்.

தென்காசி பெரும்பாலும் இந்துக்கள் குடியிருக்கும் ஊர். அங்கே ஒரு இந்து ஆலயமு முண்டு. ஹலறத்து ஆண்டவரவர்கள் அவ்வூரிற்போய் ஒருபுறம் சாகைபண்ணிக் கொண்டிருந்தார்கள். அக்காலம் அவ்வூரில் பெரும் பஞ்சம் உண்டாயிருந்தது.

ஆண்டவரவர்களின் பகீர்களில் பலர் ஒருநாள் புறப்பட்டு ஊர்சுற்றிப் பார்த்துவரும்போது, அவ்வூர்க் கோயிற் காளையொன்று பருத்துக்கொழுத்த மேனியுடன் நிற்கக் கண்டு, உடனே அதைப்பிடித்து நபஹுசெய்து, பலவாறு பாகம்பண்ணிப் புசித்தார்கள். இவர்கள் இப்படிச்செய்த சங்கதி ஊரிற் பிரஸ்தாபமாயிற்று

முகம்மதிய பகீர்கள் திரண்டு கோயிற்காளையைப் பிடித்துக்கொன்று தின்றுவிட்டார்கள் என்றபோதே அவர்களுக்

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE MADRAS-8

காபிர்களாகிய இந்துக்கள் எல்லாரும் கோபம்மீறி, ஒருங்கு திரண்டார்கள். அடிபிடிசண்டைக்குத் தக்க எத்தனத்துடன் அவர்கள் புறப்பட்டு, பகீர்மார்கள் மீது அடர்ந்தேறும் நோக்கமாய் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கூடி நின்று: இதென்ன அநியாயம்! உங்கள் ஆட்கள் எங்கள் கோயிற் காளைமாட்டை வலோற்காரமாக அதிக்கிரமித்துப் பிடித்துக் கொன்று தின்றுவிட்டார்களே! இது பாதகமல்லவா! இத்துஷ்டக் கிர்த்தியத்திற்குப் பிரதிநடந்தாலன்றி, நாங்கள் விடோம் என்று அமாதகுறையாய் ஆத்திரத்துடன் சொன்னார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அதைக்கேட்டு, அவர்கள் நிற்கும் நிலைபரத்தையும் அறிந்து, அவர்களைப் பார்த்துக் கொஞ்சம் பொறுங்கள் என்று ஆறுதல் சொல்லிவிட்டு, பகீர்களைக் கூப்பிட்டு: நீங்கள் அறுத்துத்தின்ற காளையின் என்பு தோல்களை இங்கே எடுத்துவாருங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். உடனே பகீர்கள்போய் அந்த எருதின் என்புகளையும், தோலையும் கொணர்ந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைத்தார்கள். ஆண்டவரவர்கள் அந்தக் காபிர்கள் கண்காண என்புகளைக்குவித்து, தோலை அதன்மேற் போர்த்தி, தங்கள் வலதுகரத்தில் அசா என்னும் தடியை யெடுத்து, அதன்மீது ஒருதட்டுத் தட்டினார்கள். தட்டினமாத்திரத்தில், அறுத்துத்தின்று தீர்ந்த கோயிற் காளை முன்போலவே உயிர்பெற்று எழுந்து நின்றது.

தின்றுதீர்ந்த காளைமாடு பழயதில் சற்றும்பேதமின்றி அச்சம் அதேமாடாயெழுந்து, வாலாட்டி, காதசைத்து, அசைபோட்டு நிற்பதைக்கண்ட காபிர்கள் பிரமைகொண்டார்கள்; "இது ஆச்சரியம்" என்று சொல்லித் திகைத்தார்கள்; சரீரம் விலவிலத்தார்கள். பின் எல்லாரும் ஆண்டவரவர்களின் திருவடிகளில் சாஷ்டாங்கமாய் விழுந்தார்கள். அப்போது ஆண்டவரவர்கள் அவர்களைப்பார்த்து: இது உங்கள் மாடுதானா? கூட்டிக்கொண்டு போங்கள் என்று கட்டளை யிட்டார்கள். காபிர்கள் பேச வாயற்றவர்களாய், அக்காளைமாட்டை அழைத்துக்கொண்டு போனார்கள்.



இச்சங்கதி ஊரெங்கும் பரந்தது. இவர்கள் மகாபெரியோர்கள் என்று எல்லாரும் அஞ்சிப் பயந்தார்கள். ஊரிலுள்ள இந்துக்களில் பிரதானமான சிலர்கூடி ஆலோசனை பண்ணிக்கொண்டு, ஒருநாள் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கைகட்டிநின்று: எஜமானவர்களே, இந்த வூரில் பஞ்சம்பிடித்து ஜனங்கள் வெகு கஷ்டப்படுகின்றார்கள். தொட்டபஞ்சம் தீர ஒரு துளிமழையும் தரையில் விழக்காணோம். கன்று காலிகளெல்லாம் மடிகின்றன. இக் கஷ்டந்தீரும்படி மழைபெய்யச் செய்யவேண்டுமென்று தங்களைப் பிரார்த்திக்க வந்தோம். தேவரீர் மனதிரங்க வேண்டும் என்று முறையிட்டார்கள்.

ஆண்டவரவர்கள் அந்த முறைப்பாட்டைக்கேட்டு, மழைபெய்யும்படி அல்லாகுத்த ஆலா இடம் துஆ செய்தார்கள். அன்றைத்தினமே ஆகாயம் மந்தாரத்தால் மூடப்பட்டு, சோனாமாரி பொழிந்தது. ஏரிகள், குளங்கள், குட்டைகள் எல்லாம் பெருக்கெடுத்தன. பயிர்ப் பச்சைகள் செழித்து, புற்பூண்டுகள் தழைத்தன. கன்றுகாலிகளுக்கு நல்லமேய்ச்சலும், ஜனங்களுக்கு வேளாண்மைக்கு ஜலக்குறை யில்லாமையுமாய், தேசம் வளங்கொண்டது. அவ்வூர்க்குடிகள் அனைவரும் தங்களுக்குச்செய்த பேருதவிக்காக ஹலறத்து ஆண்டவரவர்களை வாயார மனமார வாழ்த்தித் துதித்தார்கள்.

இடபமுயிர்த்தது முற்றிற்று.

## ௭௩-ம் அத்தியாயம்.

## பசாசுகளழிவுண்டது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் நத்தம் என்னுமூரில் பசாசுகளை அழித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல் காதிறு ஷாகுல் ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் தென்காசியிலிருந்து தங்கள் கூட்டத்துடன் புறப்பட்டு நடந்து, ஒரு நாள் மாலை நேரம் நத்தம் என்னும் ஊரிற்போய்த் தங்கினார்கள். அது முஸ்லிமான குடிகள் விசேஷித்தவூர். அங்கேபோய் ஆண்டவரவர்கள் விடுதியிட்டவுடன், பொழுதுபட்டு இராவாயிற்று.

அன்றிரா ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு பகீரைக் கூப்பிட்டு: இந்தவூரில் யார்வீட்டிலாவதுபோய், நமது மானுக்குக் குடிக்கக் கொடுக்கக் கொஞ்சம் பால்வாங்கி வாரும் என்று சொல்லி அநுப்பினார்கள். அவர் ஒருவீட்டு வாசலிற்போய் நின்றுகொண்டு: கொஞ்சம் பால்கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு அவ்வீட்டுக்காரர் "இங்கே பால் கிடைக்காது" என்று சொல்லிவிட்டார்கள். அப்போது அங்கே பால் இருக்கத்தான் அப்படிச் சொன்னார்கள். இதைக்கேட்டபகீர் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து: எஜமானவர்களே, ஒருவீட்டில் பாலைவைத்துக் கொண்டு இங்கே பால்கிடைக்காதென்று சொல்லிவிட்டார்கள் என்று சொன்னார். இதை ஆண்டவரவர்கள் கேட்டு "அந்தவீட்டில் பெண்டுகளுக்கும், ஆடுமாடுகளுக்கும் பால் கிடைக்காதுதான்" என்று சொன்னார்கள். அந்தச்சொற்படி இதுபரியந்தம் அந்தவீட்டில் பெண்டுகளுக்கும், ஆடுமாடுகளுக்கும் பால்சுரக்கிறதில்லை.



ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் திருவாய்மலர்ந்து இப்படிச் சொன்னார்கள் என்னுஞ் சமாசாரம் ஊரில் பிரஸ்தாபமாயிற்று. அதனால், ஊரார் திகில்பிடித்துக் கலங்கி, எல்லாருங் கூடிவந்து ஆண்டவரவர்களின் பாதாரவிந்தங்களைப்பணிந்து: எஜமானவர்களே, தங்களை அறியாமையால், அந்தவீட்டார் தவறுசெய்துவிட்டார்கள்; அதைத் தேவரீர் மன்னிக்கவேண்டும் என்று கெஞ்சி மன்றாடினார்கள். அதற்கு ஆண்டவரவர்கள்: இனி மன்னித்து ஆவதென்ன? வாக்கு முந்திவிட்டது. வேறு கருமம் ஏதும் உங்களுக்கு ஆகவேண்டிய திருந்தால் கேளுங்கள் என்று மறுமொழி சொன்னார்கள்.

இதைக்கேட்ட ஊரார் ஆண்டவரவர்களை நோக்கி வேறு தங்கள் குறையை முறையிடத் தொடங்கிச் சொல்லுகின்றார்கள்:—எஜமானவர்களே, இந்தவூர் ஆற்றில் வருஷத்திற்கு ஒருதரம் வெள்ளம் வரும். அவ்வெள்ளம் வரும்போது பசாசுகள் அதிகமாகத் திரண்டு ஆடையாபரணம் அணிந்து, புஷ்பமாலைகள் பூண்டு, தலையில் செப்புக் குடங்களை வைத்து ஆடிப்பாடிக்கொண்டு உல்லாசமாய் வந்து, குடங்களில் தண்ணீர் மொண்டு தலைகளில் வைத்துக் கொண்டு அதிக ஆநந்தத்துடன் போவது வழக்கம். அவ்வாறுவரும் பசாசுகளைக் கண்ட ஜனங்கள் உடனே தலைநோய், சுரம், வாந்தி, பேதி, குன்மம், சரீரக்கடுப்பு முதலான வியாதிகள் கண்டு அவ்வியாதி தீராமல் மாண்டு போகின்றார்கள். இது வருஷந்தோறும் வழக்கமாயிருக்கின்றது. தேவரீர் தாங்கள் எங்கள்மேல் மனதிரங்கி, இவ்வித ஆபத்து இனி இங்கே உண்டாகாமல் கிருபை செய்து தடைபண்ணி, எங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று சொல்லி, அதிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்கள்.

இதைக்கேட்டு ஹலறத்து ஆண்டவரவர்கள்: நல்லது, அந்த வெள்ளம் எப்போதுவரும்? பசாசுகள் வருவது

என்றைக்கு? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள்: எஜமானவர்களே, இதுதான் வெள்ளம்வருங்காலம். இன்னும் இரண்டொரு தினத்தில் வந்திடும். வெள்ளம் வரும்போது, பசாசுகளும் கூடவே வரும் என்று பிரதி சொன்னார்கள். வரட்டும் என்று ஆண்டவரவர்கள் வெள்ளம் வருவதை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள்.

பின்பு, "வெள்ளம் வருகிறது!" என்று ஊரில் அமளி கிளம்பிற்று. இச்சத்தத்தை ஆண்டவரவர்கள் கேட்டு, அந்த ஆற்றங்கரையிற்போய் இருந்து கொண்டார்கள். அப்போது ஆறு பிரவாகமாய்ப் பெருகிற்று. உடனே பசாசுகள் பல ஒன்றுகூடிப் பட்டுடுத்தி, பணிகள் பூண்டு, பூமாலை சூடி, தலைகளில் குடங்களை வைத்துக் கொண்டு. குரவையிட்டு நடனமாடித் திரண்டு வந்தன.

பைசாசங்கள்வரும் அமளியை ஹலறத்து ஆண்டவரவர்கள் பார்த்துக்கொண்டிருந்து, பின் அவைநெருங்கினவுடன், அவைகளைப்பார்த்து: ஏ, பைசாசங்களே, போகாதீர்கள்; நில்லுங்கள். இங்கே எனக்குமுன் வாருங்கள் என்று கூப்பிட்டார்கள். உடனே அப்பசாசுகள் திரும்பிப் பார்த்து அஞ்சி நடுநடுங்கி, எல்லாப் பசாசுகளும் ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து கைகட்டி நின்று: ஏன்? எஜமானவர்களே, எங்களை அழைத்தகாரணம் என்ன? என்று கேட்டன. ஆண்டவரவர்கள் அவைகளைப்பார்த்து: நீங்கள் ஏன் இப்படித் திரண்டுவருகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு: எங்களுக்கு வருஷத்திற்கு ஒருமுறை திருவிழா வருகின்றது. அதற்காகப் புதுநீரள்ள வருகின்றோம் என்று அப்பசாசுகள் மறுமொழிகூறின. இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் அந்தப் பேய்க்கூட்டத்தைப்பார்த்து: நீங்கள் இவ்வாறு வருவதால், ஊர் ஜனங்களுக்கு ஆபத்து உண்டாகின்றது. ஆகையால், இன்று



தொட்டு நீங்கள் இவ்விதம் வராதீர்கள் என்று கட்டளை பண்ணினார்கள்.

இக் கட்டளைக்கு அவைகள் கீழ்ப்படிந்து திரும்பித் தங்கள் தலைமைப் பசாசிடம்போய்: எங்களை வரவொட்டாமல் ஒரு பெரியவர் தடுக்கின்றார் என்று சொல்லின. அதைக்கேட்டு அந்தத் தலைமைப்பேய் சினமீறி: ஆ! அப்படியா!! அவன் யார்!!! கடலைக் கலக்கவும், காற்றைத் தடுக்கவும், மேகத்தைப் பிழியவும், மலைகளைப் பொடியாக்கவும், காடாக்கினியை அவிக்கவும் திராணிபெற்ற என் சேனையைத் தடுக்கிறவனும் இருக்கின்றானா? அவன் எப்படிப் பட்டவன்? அவன் சமர்த்தை அறிகிறேன் என்று மேகம் போலக் கர்ச்சித்துக்கூறி, தன் பசாசுகூட்டங்கள் அனைத்தையுந் திரட்டி: நீங்கள்போய் அவனையெதிர்த்துத் தாக்கிக் கொன்றெறிந்துவிட்டு வாருங்கள் என்று கட்டளையிட்டது.

எல்லாப் பசாசுகளும் இக் கட்டளைக்குக் கீழ்ப்பட்டுத் திரண்டன. பலவித விகாரரூபங்களுடனும் குமுறொலியுடனும் கண்களில் அக்கினிப்பார்வையும், நாசில் புகையெழும் மூச்சுமாய்ப் புறப்பட்டன. அவை வரும் அமளிக்கு எதிர்படும் எவ்விதப் பொருட்களும் பற்றியெறிந்து சாம்பலாகும். அத்தனை கோரத்துடன் ஹலறத்து ஆண்டவரவர்களை நாடிவந்தன. பயங்கரமான தோற்றத்துடன் பசாசுகள்வரும் ஆரவாரத்தை ஆண்டவரவர்கள் அறிந்து கொண்டார்கள். அறிந்தவுடனே எழுந்துநின்று அந்த ஆற்றைப்பார்த்து "நதியே, உன் அலைகளால் அதோவருகிற பசாசுகளை அமிழ்த்தி அழித்துவிடு" என்று சொன்னார்கள்.

ஆண்டவரவர்களின் திருவாய்மொழிக் கட்டளை பிறந்த மாத்திரத்தில் அந்தப் பிரவாகநதியில் மூன்று

அலைகள் கிளம்பின. ஒன்றன்பின் ஒன்றாய்ப் பாரியமலைபோல எழுந்த அலைகள் மூன்றும் அந்தனை பசாசுகளையும் அடித்து அமுக்கித் தாழ்த்திக்கொன்றன. எல்லாப் பசாசுகளும் அந்த நதியில் மடிந்தன. அன்றோடே ஊராருக்குள்ள பேய்ப்பயம் அறவே தீர்ந்தது. உடனே ஆண்டவரவர்கள் அங்கிருந்து சாகைக்குத் திரும்பினார்கள். ஊர் ஜனங்கள் இதை அறிந்து ஆண்டவரவர்கள் சமுகம்வந்து அடிபணிந்து துதித்தார்கள். அன்று முதல் அந்த ஆற்றில் வெள்ளம் வருந்தோறும் மும்மூன்று அலைகள் மிகப்பெரியதாய்க் கிளம்பி அமிழ்வது இதுவரையும் வழக்கமாயிருக்கின்றது.

பின்பு ஒருநாள் அவ்வூர்த் தலைவன் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து கைகட்டிநின்று: எஜமானவர்களே, நான் இந்தவூருக்கு நாட்டாண்மைகாரன். பரவணியாக எங்களிலேயே இந்த நாட்டாண்மைப்பட்டம் நிலைத்திருக்கின்றது. இப்போது நான் நாட்டாண்மை காரனாய்க் கொஞ்சம் காணி பூமியுடன் இருப்பதைப்பற்றிச் சிலர் பொறாமைகொண்டு, நான் துஷ்டாட்டஞ்செய்யும் அக்கிரமி யென்றும், நாட்டாண்மைக்கு அருக னல்லவென்றும், என்னை விலக்கப் பார்க்கின்றார்கள். அடிக்கடி குழப்படி பண்ணுகின்றார்கள், தாங்கள் தயவுசெய்து, அவர்கள் எனக்கு வழிபடும்படி செய்யவேண்டும் என்று கெஞ்சினான். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் ஜனங்கள் அவனை நல்லவனென்று வழிபட்டு ஒழுகி நடக்கும்படியாக அல்லாகுத்த ஆலா இடம் துஆ செய்துவிட்டு, ஒரு பட்டயக்கத்தியை அவன் கையிற்கொடுத்து: இதை நீ வைத்துக்கொள். உன் தலைமைத்தனம் வழிவழியாக உனக்கே நிலையாகும் என்று வாக்கிட்டு அவனை அனுப்பினார்கள். அன்று முதல் ஊர் ஜனங்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். ஆண்டவரவர்கள் கொடுத்த வாளும், தலைமைத்தன



மும், இன்னும் அவன் வமிசத்திலேயே இருந்து வருகின்றன.

பசாசுகளழிவுண்டது முற்றிற்று.

---

௭௬-ம் அத்தியாயம்.

## தோலுக்குப் பொன்கொடுத்தது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் பகீர்கள் பறித்துக்கொண்ட தோல்களுக்கு விலையாகப் பொன் கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான் சுல்தான் சையிது ஷாகுல்ஹமீது பாத்துஷா ஆண்டவரவர்கள் நத்தமென்கிற ஊரிலிருந்து புறப்பட்டு, தபோதனர் கூட்டத்துடன் ஆயக்குடி யென்னும் சிற்றூரின் அருகிலுள்ள ஒரு சோலையிற் போய்த் தங்கினார்கள். அப்போது, அந்த நாட்டிலுள்ள தோல் வியாபாரிகள் சிலர் மான்தோல்களைச் சுமைசேர்த்துத் தூக்கிக்கொண்டு அயலூர்களிற் கொண்டுபோய் விற்பதற்காகப் புறப்பட்டு, ஆண்டவரவர்கள் விடுதியிட்டிருக்கும் தோட்டத்தின் பக்கத்தில்வந்து, இளைப்பாறவேண்டிச் சுமைகளை இறக்கி வைத்துவிட்டு உட்கார்ந்திருந்தார்கள்.

பாடம் பண்ணின மான்தோற் சுமையை பகீர்கள் கண்ட மாத்திரத்தில், இது நமது ஆண்டவரவர்களுக்கு வெகுமதியாக வந்திருக்கிறது என்று எண்ணி, எல்லாரும் வந்து சுமைகளைப் பிரித்து ஆளுக்கொரு தோலாக எடுத்துக்கொண்டார்கள். பகீர்கள் தோல்களை யெல்லாம் கொள்ளை கொண்டு போனதைத் தோற்காரர்கண்டு, அவர்களைத் தடுக்கமாட்டாமல் ஓவென்று அலறிக்கொண்டு, ஹலறத்து

ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து: நாங்கள் ஏழைகள்; எங்கள் தோற்களை உங்கள் ஆட்கள் கவர்ந்துகொண்டார்கள் என்று அழுது முறையிட்டார்கள். ஆண்டவரவர்கள்கேட்டு: நீங்கள் அழாதீர்கள்: உங்கள் தோல்களுக்குத் தக்க விலைப்பொன் இதோ இந்த இடத்தில் இருக்கின்றது; தோண்டி யெடுத்துக்கொள்ளுங்கள் என்று, தாங்கள் சாய்ந்திருந்தபடியே யிருந்துகொண்டு சிறப்பான வலது பாதத்தைத்தூக்கி முன்னாலே ஒரு இடத்தைக் குறித்துக் காட்டினார்கள்.

ஆண்டவரவர்களின் சொற்படி அவர்கள் அந்த இடத்தை அகழ்ந்து பார்த்தார்கள். அங்குத் தோல்விலை எவ்வளவோ அவ்வளவுக்கு அந்நாட்டுப் பொற்பணங்கள் இருந்தன. அவற்றை அவர்கள் எடுத்துக்கொண்டு, இங்கே புதையல் இருக்கிறது. ஆகையால், இவர்கள் இதைவிட்டுப் போனபின் நாம்வந்து இன்னும் பொன்னையங்கள் எடுக்கலா மென்று எண்ணிப் பேசிக்கொண்டு போய் விட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அங்கிருந்து புறப்பட்ட பின், மறுபடியும் அந்தத் தோல்வியாபாரிகள் அங்கே வந்து, மேற்படித்தானத்தை ஒரு சிறுகேணியாகும் அளவுக்கு வெட்டிக் கொத்திப் பார்த்தார்கள்; ஒரு செம்புச் சல்லியும் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் அஞ்சி, ஆண்டவரவர்கள் மகாபெரியோர்களானதால், அவர்கள் காலாற் குறித்த மண்ணும் பொன்னாயிற்று. பின்னும் ஆகுமா! என்று ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அப்போது அவர்கள் வெட்டின கிடங்கு இன்னும் ஒரு கேணியாய்க் கன்று காலிகளுக்கு ஜலாதாரமாயிருக்கின்றது.

தோலுக்குப் பொன்கொடுத்தது முற்றிற்று.

---

௭௫-ம் அத்தியாயம்.

## பொதியமலைக்குப் போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பொதியமலைக்குப்போய், அங்குள்ள சந்நியாசிகள் திருடின கிஸ்தியை வரவழைத்து, அவர்களை இஸ்லாமிலாக்கின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து குத்புல் ஆலம் செய்யிது ஷாதுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் ஆயக்குடியை விட்டுப் புறப்பட்டு, தக்ஷணதேசத்திற் பேர்போனதும், துறவிகள் அநேகர் வாசஞ்செய்கிறதும், பலவகை மருந்துகள் விளையுந்தானமுமாகிய பொதியமலைக்குப் போகநாடித் தபோதனர் குழுவுடன்நடந்து, அந்தச் சிறந்தமலையை அடுத்தார்கள்.

ஆண்டவரவர்கள் பொதியமலையை அடுத்து அதன் மேல் ஏறி, சிகரத்திலுள்ள ஒரு கெபியில் விடுதியிட்டு, தங்கள் மகனார் செய்யிது முகம்மதுயூசுபு சாகிபவர்களை அழைத்து: நீர் பகீர்களுக்கு நமது கிஸ்தியாகிய கமண்டலத்திலிருந்து உணவுகள் எடுத்துக் கொடுத்துவாரும் என்று கட்டளை பண்ணிவிட்டு, நாற்பது தினம்வரையும் கல்வத்தில் இருந்துவிட்டார்கள். ஆண்டவரவர்கள் கட்டளைப்படி மகனாரவர்கள் கிஸ்தியிலிருந்து வேளைக்கு வேளை உணவுகளெடுத்து பகீர்களுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தார்கள்.

அந்தமலையில் உலகப்பற்றுவிட்ட துறவிகள் பலர் அங்கங்கே வாசஞ்செய்கிறது மல்லாமல், ஆயிரம் சந்நியாசிகள் கூடின ஒரு கூட்டத்தாரும், அவர்களுக்குத் தலைவனாக ஒரு முனிவனும், ஹலறத்து ஆண்டவரவர்கள் விடுதியிட்டிருக்கும் கெபிக்குப் பக்கத்தில் வாசமாயிருந்தார்கள்.

ஆண்டவரவர்கள் போய் அங்கேதங்கின நாள்முதல் இவர்கள் மீது அவர்களுக்கு நோக்கம் உண்டு. சில சமயங்களில் அந்த இருஷிகள் சிலரும் பலருமாய்க்கூடிவந்து, இவர்களைப் பார்த்துநின்று போவார்கள். ஆகாரவேளைகளிலும் வருவார்கள். அப்போது, கமண்டலத்திலிருந்து தரந்தரமான ஆகாரங்களை வேண்டியமட்டும் எடுத்தெடுத்துக் கொடுப்பதை அவர்கள் பார்த்து அதிசயப்படுவார்கள். இதற்கென்று அவர்கள் ஆகாரவேளைகளிலேயே பெரும்பாலும் வந்து நின்று அதிசயம் பார்ப்பார்கள்.

ஆண்டவரவர்கள் கல்வத்திருப்புத் தீர்ந்து வெளிப்பட்டபின் ஒருநாள் அந்த இருஷிகள் திரண்டுவந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் நின்று: நாங்கள் உணவருந்தி நெடுநாளாயின. இப்போது எங்களுக்குப் பசி அதிகரித்திருப்பதால், தாங்கள் உணவுகொடுத்து உதவுங்கள் என்று கேட்டார்கள். ஆண்டவரவர்கள் அவர்களைப்பார்த்து: உங்களுங்கு என்னென்ன உணவுகள் வேண்டும் என்று வினவினார்கள். அதற்கு அவர்கள்: எங்கள் மனங்கள் எது எதை நாடுகின்றனவோ அது அதைத் தரவேண்டும் என்று மறுமொழி சொன்னார்கள். அப்போது ஆண்டவரவர்கள் மகனாரைநோக்கி: மகனே, நீர் கிஸ்தியையெடுத்து இவர்கள் நாடுகிற பதார்த்தங்களை யெடுத்துக்கொடும் என்று கட்டளையிட்டார்கள்.

ஹலறத்து சையிது முகம்மதுபூகூடுராகியவர்கள் கையில் கிஸ்தியைப் பிடித்துக்கொண்டு, அந்த இருஷிகளில் யார் யார் என்ன என்ன நாடுகிறார்களோ அதை அதை எடுத்துக் கொடுத்தார்கள். இவ்வாறே அன்று அவர்கள் எல்லாருக்கும் அவர்கள் நாடினபடி ஆகாரபதார்த்தங்கள் கொடுக்கப்பட்டன. இருஷிகள் அவற்றைவாங்கிப் புசித்து, அவற்றிற்குள்ள நூதனமான சுவைகளையும், மதுரத்தையும் அறிந்து ஆச்சரியப்பட்டு, வியந்து பாராட்டிக்கொண்டு



போனார்கள். போகும்போது அவர்கள் கூடி ஆலோசித்துத் தீர்ப்பிட்டுக்கொண்டது இது :—

" இந்தக்கமண்டலத்தில் ஏதும் ஒரு நூதனசத்துவம் இருக்கும். அப்படிக்கில்லாமல் இவ்வித ஆச்சரியகரமான ஒரு கருமம் அதில் ஆகமாட்டாது. இந்தக் கமண்டலம் நம்மையொத்த ஏகாந்திகளுக்கே அவசியம்வேண்டும். உலகத்தின் பற்றொழித்திருந்து செய்யும் நிஷ்டையாதி எல்லாக் கிரியைகளுக்கும் ஆதாரமான இந்தக் கமண்டலத்தை நாம் கேட்டால், இவர்கள் கொடுப்பார்களா! கொடுக்கமாட்டார்கள்; நாம் கேட்பதும் முறையல்ல. இவர்கள் இரவில் படுத்து மெய்ம்மறந்து நித்திரை செய்யும்போது, சமயம் பார்த்துத் திருடிக்கொள்வதே காரியம்."

என்று இவ்வாறு தீர்மானித்துக்கொண்டு போனார்கள். அன்று பொழுதுபட்டு இரவாயிற்று. எல்லாரும் பள்ளிகொள்ளும் வேளையானபோது, ஹலறத்து ஆண்டவரவர்கள் வணக்கத்திற்பராக்காக, மற்றத் தபோதனர் எல்லாரும் அங்கங்கே படுத்து உறங்கினார்கள். ஹலறத்து சையிது முகம்மதுபூகூடுராகியவர்கள் மேற்படிக் கமண்டலத்தைத் தலைக்கு அணையாகவைத்துக்கொண்டு படுத்திருந்தார்கள்.

அன்று அனைவரும் அயர்ந்துதூங்கும் அர்த்தசாமத்தில் அந்த இருஷிகள் சிலர் அரவங்காட்டாமல் வந்து அசுமாற்றமின்றிக் கமண்டலத்தையெடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். திருடிக்கொண்டுபோன கமண்டலத்தை ஒதுக்கிடம்பார்த்து அங்கு ஆழமாகக் குழியொன்று பறித்து அதிற்புதைத்து, அக்குழிக்குமேல் மணலால் மேடையொன்று செய்து, அந்தமேடைமீது விரிப்புவிரித்து, அதன் மீது அவர்கள் ஆசானாகிய முனிவனை இருக்கச்செய்து, மற்றவர்கள் அதைச்சூழ இருந்து, பிறர் செய்யும் மந்திர தந்திரங்களால் அந்தக்கமண்டலம் வெளி

வராமல் பஸியிட்டு ஆராதனைசெய்து, மந்திரோச்சாரணமும் பண்ணிக்கொண்டு கட்டுக்காவலோடிருந்தார்கள். இதற்குள் சூரியோதயமும் ஆயிற்று.

அன்று பொழுதுவிடிந்து ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபவர்கள் தலைக்குவைத்திருந்த கமண்டலத்தைக் காணாமையால், பகீர்களை விசாரித்தார்கள்; அவர்கள் அனைவரும் நாங்கள் காணவில்லையென்று சொல்லிவிட்டார்கள்.

கமண்டலம் காணாமற் போயிற்று என்னும் செய்தியை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, மகனாரை யழைத்து: அந்த இருஷிகள் நமது கிஸ்தியில் ஆசைப்பட்டுத் திருடிக்கொண்டு போயிருக்கின்றார்கள். நீர் ஒரு ஆளை யனுப்பி அவர்களிடம் கேட்பியும் என்று சொன்னார்கள். உடனே மகனாரவர்கள் கிஸ்தியைக் கேட்டு வாங்கிவரும்படி இருஷிகளிடம் ஒரு பகீரை அனுப்பினார்கள். அந்தபகீர் இருஷிகளிடம் போய் "எங்கள் கமண்டலம் உங்களிடம் இருக்கின்றதாம். அதைக்கேட்டு வாங்கிவரச் சொன்னார்கள்; கொடுங்கள்" என்று கேட்டார். அப்போது மேற்படி இருஷிகள் தூதாய்ப்போன பகீரைப் பார்த்துச் சொல்லுகின்றார்கள்.

"இதென்ன அநியாயம்! நாங்கள் திருடர்களா!! அப்படி நாங்கள் திருடர்களாயிருந்தால், எங்களுக்கு இந்த மலை இருக்க இடங்கொடுக்குமா!!! உலகத்தைத் துறந்த தவசிகளாகிய எங்கள் மனம் நோவக் கமண்டலத்தைத் திருடிக்கொண்டீர்கள் என்று வாய்கூசாமல் சொல்வது பெரியோர்களுக்கு லக்ஷணமல்லவே? எங்களில் யாராவது அங்கே வந்ததையும்; அந்தக் கமண்டலத்தைக் கையால் தீண்டினதையும் கண்டவர் யார்? குற்றமற்ற எங்கள்மேல் வீண்பழி சுமத்தாதீர்கள். உங்கள் கமண்டலம் எங்கள்வசம் இருந்தால், உங்கள் குருவுக்குத் திராணியுண்டா யிருக்கும்



பக்ஷத்தில் அதை வெளிப்படுத்தி அழைத்துக் கொள்ளட்டும்."

என்று இவ்வாறு சொல்லி, ஒரேசாதனையாக நிராகரித்து விட்டார்கள். இதைக்கேட்ட பகீர் திரும்பி வந்து அவர்கள் சொன்னபடி சொன்னார். ஹலறத்து ஆண்டவரவர்கள் மகனாரை நோக்கி: நீர்போய் அந்த இருஷிகளுக்கு முன்னே நின்று கொண்டு, கிஸ்தியைக் கூப்பிடும்; அது வந்திடும் என்று ஏவினார்கள். ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபவர்கள் புறப்பட்டு அந்த இருஷிகளுக்கு முன் போய் நின்றுகொண்டு "கமண்டலமே, இங்கேவா" என்று திருவாய் மலர்ந்து கூப்பிட்டார்கள். கூப்பிட்ட மாத்திரத்தில், குழிக்குள் புதைத்திருந்த கமண்டலம் அவர்கள் கூப்பிடுதலுக்குப் பிரதிதொனியிட்டுக்கொண்டு, அதன்மேல் மேடையிட்டு உட்கார்ந்திருந்த முனிவனைக் குப்புற வீழ்த்திவிட்டு, மற்ற இருஷிகள் எல்லாரும் பிரமை கொள்ள நிலத்தை பீறி வெளிவந்து, ஹலறத்து அவர்கள் கையில் தரிபட்டது. இருஷிகள் அனைவரும அதைக் கண்டு திகைத்து நடுநடுங்கி நின்றார்கள். பின் ஹலறத்து அவர்கள் கமண்டலத்தை யெடுத்துக்கொண்டு சாகைக்குத் திரும்பினார்கள்.

பின்பு, காபிர்களாகிய அந்த இருஷிகளுக்கு மனத்திகில் அதிகமுண்டாயிற்று. இவர்கள் மகா பெரியோர்கள்; இவர்களின் மார்க்கம் பரிசுத்தமும், உண்மையுமானது; இவர்களே நேர்வழிபெற்றவர்கள். ஆகையால், நாம் இப்போதே இவர்களிடம் போய், செய்தபிழைக்குப் பொறுப்புக்கேட்டு, எல்லாரும் அவர்கள் மார்க்கத்தில் ஆய்விடவேண்டும் என்று அவர்கள் ஒருங்கொத்து முடிவு கட்டிக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு ஹலறத்து ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து அடிபணிந்து நின்று:

எஜமானவர்களே, வழிகேடர்களான நாங்கள்செய்த பிழையைப் பொறுத்து, எங்களுக்கு நேர்வழிகாட்டி ரக்ஷிக்க வேண்டும் என்று முறையிட்டார்கள். ஆண்டவரவர்கள் அவர்கள் மீது சந்தோஷப்பட்டு, அவர்கள் எல்லாருக்கும் கலிமாவைச் சொல்லிக்கொடுத்து, தீனுல்லிஸ்லாத்தில் ஆக்கி, மார்க்கத்தின் விதி விலக்குகளையும் கற்பித்து, தீக்ஷையும் செய்வித்தார்கள்.

பின்பு ஆண்டவரவர்கள் அவர்களைப்பார்த்து : நீங்கள் இந்தக் கமண்டலத்தில் ஆசைப்பட்டீர்கள். ஆனதால், இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு வேண்டுமான வஸ்துக்களை இதிலிருந்து அல்லாஹுத்த ஆலா உண்டாக்கித் தருவான் என்று சொல்லி, அவர்களிடம் கிஸ்தியைக் கொடுத்துவிட்டு, கீமியா, லீமியா, ஹிமியா, ரீமியா என்னும் நான்கு வித்தைகளையும் அவர்களுக்குக் கற்பித்து, பின் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்குகளையும் தெரிவித்து முடித்து, அந்த மலையைவிட்டு இறங்கினார்கள்.

பொதியமலைக்குப்போனது முற்றிற்று.

---

௭௯-ம் அத்தியாயம்.

## திருச்சினுப்பள்ளிக்குப்போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் திருச்சினுப்பள்ளிக்குப்போய், ஹலறத்து நத்ஹறேலி தபலேயாலம் பாத்துஷா ஆண்டவரவர்களைக் கண்டு கலந்து பேசின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாதுல்ஹமீது மீறான் சுல்தான் சாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் மகனார் முதலான தபோதனர் கூட்டத்துடன் பொதியமலையைவிட் டிறங்கி, ஹலறத்து நத்ஹறேலி தபலேயாலம் பாத்துஷா ஆண்டவரவர்களைத் தரிசிப்பதற்காகத் திருச்சினுப்பள்ளியைநாடி நடந்தார்கள்.

ஆண்டவரவர்கள் இவ்விதம் பிரயாண வழியில் இருக்கும்போது, திருச்சினுப்பள்ளியில் ஹலறத்து நத்ஹறேலி ஆண்டவரவர்கள் ஒரிரா தங்கள் தர்கா ஊழியர் எல்லார் கனவிலும் வெளியாய் "சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபவர்கள் இதற்கு அடுத்த நாள் என்னைக் காணவேண்டி இங்கே வருகின்றார்கள். அவர்கள்கூட அநேகம் பகீர்களும் வருகிறபடியால், அவர்களுக்கு வேண்டுமான தீன்சாவான்கள் அடங்கலும் தயார் பண்ணி வைத்துக்கொண்டு, அவர்கள் வந்தவுடன் மரியாதையுடன் அழைத்து உபசரியுங்கள்" என்று சொன்னார்கள்.

இந்தச் சொப்பனத்தை தர்கா ஊழியர் எல்லாரும் தனித்தனிக் கண்டுவிழித்து, அதிகாலையில் ஒன்றுகூடிப் புதுமையுடன் பேசிமுடித்து, ஆகுமான சாமான்கள் அடங்கலுந் திட்டஞ்செய்து, தர்காவையும் சாந்துபூசித் துலங்குவித்து, எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் கண்ட கனுப்படி மறுநாட்காலையில் ஹலறத்து ஆண்டவரவர்கள் தபோதனர் கூட்டத்துடன் திருச்சினப் பள்ளியை யடைந்து, மேற்படி தர்காவிற்போய்ச் சேர்ந்தார்கள்.

தர்காவின் ஊழியர்கள் ஹலறத்து ஆண்டவரவர்களையும், அவர்கள் கூட்டத்தையும் கண்ட மாத்திரத்தில் ஆநந்தமடைந்து, எதிர்போயழைத்து உபசரித்தார்கள். தர்காவிற் சேர்ந்தவுடன் ஆண்டவரவர்கள் தங்கள் மகனாரவர்களையும், பகீர்களையும் வெளியிலுள்ள கட்டிடங்களில் தங்கியிருக்கும்படி சொல்லிவிட்டு, தர்காவுக்குள் புகுந்து கதவைச் சார்த்திக்கொண் டிருந்தார்கள். ஆண்டவரவர்கள் உள்ளேயிருந்த தன்மை இப்படிப்பட்டதென்று யாரானப் புராணம், நத்ஹறொலியைக் கன்ஜுற்றபடலம் சொல்லுகின்றது. அதிற்காணலாம்.

ஹலறத்து ஆண்டவரவர்களும், ஹலறத்து நத்ஹறொலி தபலையாலம்பாத்துஷா ஆண்டவரவர்களும் உள்ளே அளவளாய்க் கலந்து பேசிக்கொண் டிருந்தார்கள். வெளியில் தர்காக்காரர்கள், விருந்துவந்தவர்களுக்குப் புலவுச்சாதமும், அறுசுவைக் கறிகளும், கனிவர்க்கங்களும், தீம்பானங்களும் தயாராக்கிவிட்டு, ஆண்டவரவர்கள் உள்ளிருந்து வருவதை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். எல்லாருக்கும் பசி அதிகரித்திருந்தது.

எல்லாருக்கும் பசிமீறினபோது ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் மகனார் சையிது முகம்மது புகாரி சாகிபவர்களின் இதயத்தில் ஒரு எண்ணத்தைப் பிறப்பித்தார்கள். அந்த எண்ணம் பிறந்தபோதே அவர்கள் எல்லாரையும் பார்த்து: எங்கள் நாயகம் இப்போது வரமாட்டார்கள். அவர்கள் அங்கே முறகபாவில் அமர்ந்திருக்கின்றார்கள். ஆகையால், நீங்கள் அவர்களை வழிபார்க்காமல்



சோறு முதலான உணவுகளைப் புசித்துப் பசி தீருங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். அதன்பின் ஆகாரங்களைப் பாத்திரங்களில் வைத்துப் பரப்பி, பகீர்களுக்கு விருந்து கொடுக்கப்பட்டது. எல்லாரும் உண்டு களை தீர்ந்து அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்துகொண் டிருந்தார்கள். பின்பு மாலையாய், பொழுதுபட்டது.

பொழுது அஸ்தமித்தவுடன் தர்காவுக்குள் விளக்கு வைப்பவர் வந்துபார்த்து, கதவு சார்த்தினபடியே யிருக்கக் கண்டு, உள்ளே விளக்குக் கொளுத்தவேண்டுமே? கதவு மூடப்பட் டிருக்கின்றதே? அங்கே என்ன நடக்கிறது பார்ப்போம் என்று கதவிலுள்ள சிறு துவாரத்தில் கண்ணைவைத்துப் பார்த்தார். பார்த்தபோது, உள்ளிடம் முழுதும் கண்கள் மழுங்கத்தக்க சோதியொன்று நிரம்பி யிருக்கின்றதையும், அந்தச் சோதிக்குள் இரண்டு நாயகங்களும் உட்கார்ந்து பிரகாசமான ஒரு பாத்திரத்தில் வெண்மையான தின்னும் வஸ்துவை வைத்துத் தின்றுகொண்டிருக்கின்றதையும் கண்டு மிக ஆச்சரியப்பட்டு, இவர்கள் தின்னும் பதார்த்தம் என்னவோ! அதன் சுவை எவ்வாறிருக்குமோ! என்று நினைத்து, பார்த்தபடி நின்றான். அப்போது, விருந்தாளராய்ப் போயிருக்கும் ஹலறத்து ஆண்டவரவர்கள் தாங்கள் தின்கிறதில் கொஞ்சம் எடுத்துவந்து, கதவை நீக்கிக்கொண்டு அவர்கையில் வைத்தார்கள்; உடனே அவர் இரண்டு கைகளையும் கீழ் மேலாகவைத்து வாங்கிக்கொண்டார். கைகளை யேந்தி வாங்கினவுடன் அது, மேலிருந்த வலது கையிலிருந்து இடது கையில் சொட்டாக வழிந்தது. அப்போது ஆண்டவரவர்கள் "ஏ, ஆசைப் பட்டவரே, சீக்கிரம் தின்றுவிடும்" என்றார்கள். இந்தச் சொல்லைக் கேட்டவுடன் அவர் அதைத் தின்றுவிட்டார்.

அந்த வஸ்துவை இன்னதென்று அவர் அறியமாட்டார்; அதன் சுவையை மாத்திரம் அறிவார். மற்றவர்கள்

அதை அறிவார்களா? தேவாமிர்தமும் ஒப்பாகாத அந்த வஸ்துவை நல்ல விதியுள்ள அவர் தின்றவுடன், அவருடலில் உண்டான புளகம் சொல்லுந்தரமுள்ளதல்ல. அப்போதே அவருக்கு அளவற்ற ரகசியங்கள் வெளியாயின. அன்று முதல் அவருடைய ஸ்திதி நல்ல ஸ்திதியாயேயிருந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அன்று முதல் மூன்று நாள் வரையும் ஹலறத்து நத்ஹறேலி தபலேயாலம் பாத்துஷா ஆண்டவரவர்களுடன் தர்காவுக்குள் அளவளாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்து, அதன் பின் வெளிவந்து, மகானவர்களையும், பகிர் மார்களையும் சந்தித்து அழைத்துக் கொண்டு, திருச்சினாப்பள்ளியை விட்டுப் புறப்பட்டார்கள்.

திருச்சினாப்பள்ளிக்குப்போனது முற்றிற்று.

---

௭௭-ம் அத்தியாயம்.

## தஞ்சாவூருக்குப் போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தஞ்சாவூருக்குப்போய், அவ்வூரரசன் பிணியை மாற்றின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் திருச்சினாப்பள்ளியை விட்டுப் புறப்பட்டு. தங்கள் கூட்டத்துடன் தஞ்சாவூரை நோக்கி நடந்து வந்தார்கள். அந்தக் காலம் தஞ்சாவூரையாளும் அரசர் வடுகச்சாதியார். அப்போது ஆசனத்திருந்து அரசாளும் மன்னன் அச்சுதப்ப நாயக்கன். அவனுக்குப் பிறர் யாரோ சூனியம்பண்ணி, அவனைத் தீராத நோய்க்குள்ளாக்கி, பாயும் படுக்கையுமாகப் போட்டு விட்டார்கள். அதனால் அவன் கைகால்கள் முடங்கி, ஊண் உறக்கம் அற்று, சரீரவருத்தத்தினால்



இராப்பகலாகக் கிடந்து வேதனைப்பட்டான். ராஜவைத்தியர் பலர் பல மருந்துகளைக்கொண்டு சிகிச்சை செய்து பார்த்தும் பலிக்காமல் கைவிட்டார்கள். பேர்போன மாந்திரீகர் பலர் வந்து பார்த்தும் தீரவில்லை. அவன் கோயில்களுக்குப் பண்ணிக்கொண்ட பிரார்த்தனை கொஞ்சமல்ல ; ஒன்றிலும் பலிதமாகவில்லை. ஆகையால், எல்லாரும் கைவிட்டு, இனி என்செய்வோமென்று ஏக்கமுற்றிருந்தார்கள். அரசன் படும் மரணாவஸ்தை பலர்க்கும் ஆருத் துயரத்தை யெழுப்பிக்கொண் டிருந்தது. ராஜாங்கத்துக்குரிய சுகாநுபவங்களில் ஒன்றும் அந்த அரசனுக்கு அநுபவிக்கக் கூடாமல், ஒரு எளிய நோயாளிபோலக் கிடந்து நொந்து கொண்டிருந்தான்.

தஞ்சாவூர் அரசனான அச்சுதப்ப நாயக்கன் இவ்வாறு நோய்வாய்ப் பட்டுக்கிடந்து துன்புறுங்காலத்தில் முகம்மதீயர்களில் மிகப் பேர்போன மகாத்துமாவான ஒரு பெரியோர்கள் பல ராச்சியங்களையுஞ் சுற்றிக்கொண்டு, அளவிறந்த அற்புதங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள் என்னும் சமாசாரம் அவன் காதில் விழுந்தது. அருமருந்தன்ன இச்சொல்லைக் கேட்ட அரசன் அன்றைக்கே தன் பிணி தீர்ந்ததென்று நம்பி மனமகிழ்ந்து, மந்திரிகள், பிரதானிகள், சேனாபதிகள், போர்வீரர்கள் இவர்களில் பலரை அழைத்து, ஒரு மகா பெரியோர்கள் நம்மூரை நோக்கி வருகின்றார்களாம். நீங்கள் அவர்களுக்கு எதிர்கொண்டு போய் அவர்களை உபசரித்து அழைத்து வந்து, நமது அரமனையில் சாகை பண்ணுவியுங்கள் என்று கட்டளை பண்ணினான்.

அரசன் இட்ட கட்டளைப்படி அவர்கள் புறப்பட்டு வந்து ஹலறத்து ஆண்டவரவர்களை யடுத்து, அடிபணிந்து போற்றி நின்று : தாங்கள் ஊருக்குள் வந்து ராஜமாளிகை

யில் விடுதியிட்டுத் தங்கவேண்டும் என்று சொல்லி மன்றாடினார்கள். அவர்கள் வேண்டிக்கொண்டபடி ஆண்டவரவர்கள் உடன்பட்டுத் தங்கள் தபோதனர் கூட்டத்துடன் தஞ்சாவூருக்குள் புகுந்து, அந்நகரத்து அலங்காரமான வீதிகளைக் கண்டு களித்து, அரமனையிற் போய் விடுதியிட்டார்கள். ஆண்டவரவர்களுக்கு வேண்டிய சர்வகாரியங்களும் அரமனை விசாரணை கர்த்தாவால் குறைவற நடத்தப்பட்டன. அரமனை அதிகாரிகளே ஆண்டவரவர்கள் சமுகத்தில் கைகட்டி நின்று ஏவல் செய்தார்கள். வேண்டிய வேண்டியவைகளை உடனுக்குடன் சமர்ப்பிக்கும்படி அரசன் வெகு கண்டிப்பாக ஆக்யாபித்திருந்தான்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அரமனையில் தங்கியிருக்கும்போது, ஒருநாள் அரசன் தன் பிரதான மந்திரியை யழைத்து, நீர் தக்க மனிதர்களுடன் ஆண்டவரவர்கள் சமுகத்திற் போய்ப் பணிந்து, எனக்கிருக்கும் நோயின் வரலாறுகளைச் சொல்லி முறையிடும் என்று அனுப்பினான். அவ்வாறே பிரதான மந்திரி வேறு சில கனவான்களுடன் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து, ஆண்டவரவர்களின் பூரணச் சந்திரனை யொத்த முகவசீகரத்தையும், கருணை நிறைந்த கண்களையும், மற்ற அவயவ லக்ஷணங்களையும் கண்டு பிரமித்து, கைகட்டித் தூர விலகி நின்று, தங்கள் அரசன் கொண்டிருக்கும் பிணியைச் சொல்லி முறைப்பாடு செய்தான்.

ஆண்டவரவர்கள் மந்திரியின் முறைப்பாட்டைக் கேட்டு, அவனைப்பார்த்து: உங்கள் அரசனை நான் கண்ணுற்பார்க்கவேண்டும். ஆகையால், அவனை இங்கே என் முகதாவிற் கொண்டுவாருங்கள் என்று கட்டளையிட்டார்கள். உடனே மந்திரி திரும்பிப்போய் அரசனுக்குத் தெரிவித்து, அவன் உடன்பாட்டின்படி அவனைப் பலர் கூடித் தூக்கிக்



கொணர்ந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் ஒரு பிண்டம் போல வைத்தார்கள்.

தஞ்சாவூர் மன்னனாகிய அச்சுதப்ப நாயக்கன் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைக்கப்பட்டபோது, அவன் ஆண்டவரவர்களை ஏறிட்டுப்பார்த்து, கண்ணீர் தாரை தாரையாய் ஓட அழுது: எஜமானவர்களே, தங்கள் அடியேன் இந்த நோயினாற்படும் வேதனை சொல்லுந்தரமுள்ளதல்ல. உலகாளும் அரசர்களுக்குப் பலவித ஆபத்து விபத்துகள் அடுத்தடுத்து வருமென்பார்கள். அரசாளுந்தொழில் மிக நுட்பமானது. நீதிநெறியில் ஒரு மயிர்க்கிடை தப்பினால், மகாபெரிய பாரதூரமான வில்லங்கம் வந்து அரசன் தலையில் விழுவது நிச்சயம். என்கையிற் பிடிக்கப்பட்ட செங்கோல் நான் அறியாமல் சற்றேசருகியிருந்தாலும் இருக்கும். அதனாலேதான் அடியேன் இந்த வில்லங்கத்திற்கு ஆளானேன். இனித் தீராதென்று கைவிடப்பட்ட நான், எவ்வித நோயையும் அறத்தொலைக்கும் தங்கள் திருவடிகள் என் அரமனையிற் பட்டபோதே நமக்கினித் துன்பமில்லையென்று நம்பிவிட்டேன். தேவரீர் அடியேன்மீது மனதிரங்கி; எனக்குரிய பொல்லாவினைகள் எல்லாந்தீரக் கிருபை செய்யவேண்டும் என்று சொல்லிப் புலம்பினான்.

அரசன் பரிந்துசொல்லும் சொல்லைக்கேட்டு ஹலறத்து ஆண்டவரவர்கள் அவனைப் பார்த்தார்கள். அவன் கொண்டிருக்கும் நோய் இன்னதென்று அவர்களுக்குத் தெரிந்தது. உடனே தங்கள் திருவாயினால் பரிசுத்தவேதமாகிய குர்ஆனின் முஅவ்விதத்தைனி என்னும் இரண்டு சூறத்துகளையும் ஓதி, அவன் உடலில் ஊதினார்கள். அப்போதே அவனுக்கு ஒருவிதப் புளகம் உண்டாயிற்று. பின்பு ஆண்டவரவர்கள் அரசனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் பார்த்து: இந்நோய், வாத - பித்த - சிலேட்டும சேஷ்டைக

ளாலாவது, பிறர் சாபத்தாலாவது, கண்ணேறுகளாலாவது, உண்டுபட்ட நோயல்ல; பகைவனொருவன் செய்த சூனியத்தினால் உண்டான நோய் என்று சொல்லிவிட்டு, தங்கள் பகீர் ஒருவரைப்பார்த்து: இந்த அரமனை மேன்மாடியின் ஒருபக்கத்தில் புறாவொன்றிருக்கும். அங்கேபோய் அதை இங்கே எடுத்துவாரும் என்று ஏவினார்கள்.

அந்தபகீர் எழுந்து மாடிமேல் ஏறி, அங்கொரு மூலையில் நோய்கொண்டு குற்றுயிராய்க் கிடந்த ஒரு புறாவையெடுத்துக்கொணர்ந்து ஆண்டவரவர்கள் முன் வைத்தார். அந்தப்புறாவின் உடல்முழுதும் மந்திரோச்சாரணம் பண்ணினவூசிகள் ஏற்றப்பட்டிருந்தன. பொருத்துகளிலும், நரம்புகளிலும் ஏற்றியிருந்த அந்த இருப்பூசிகளை ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் சிறப்பான கைகொண்டு ஒன்றொன்றாகப் பிடுங்கினார்கள். ஒவ்வொரு ஊசியைப் பிடுங்குந்தோறும் அரசன் உடலிலுள்ள முடக்கு ஒவ்வொன்றும் விட்டு, எல்லாவூசியும் பிடுங்கித் தீர்ந்தபின் சுகதேகியாயெழுந்து நின்றான். அவன்மேனி பழுதற்ற மேனியாய்க் கதிரெறிந்து இலங்கித் துலங்கிற்று.

தஞ்சாவூர் அரசனாகிய அச்சுதப்பநாயக்கன் பிணிதீர்ந்து, பூரணசவுக்கியம்பெற்று எழுந்து நின்றபோது, அவனுக்குண்டான மனாநந்தம் கொஞ்சமல்ல. உடனே ஆண்டவரவர்கள் திருவடிகளில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து கும்பிட்டு எழுந்து நின்று, வாயாரப்புகழ்ந்து தோத்திரம் பண்ணினான். தனக்குள்ள பிணியைப் பலர்காணக் கையுமெய்யுமாகப் போக்கின புதுமையைச் சொல்லிச்சொல்லி, பாராட்டித் துதித்தான். அவன் சந்தோஷ சாகரத்தில் முழுகினவனாய்ப் பின்னும் ஹலறத்து ஆண்டவரவர்களை நோக்கி *" படைகளுறும்படை பதியுறும்பதி குடிகளுறுங்

* காரணப் புராணம், தஞ்சைக்காவலன்விஸ்வாஸீக்குபடலம், ௱௫ - ம் செய்யுள்.



குடி கூழுறும்மது, திடனுறுந்திருப்பதச் சேவைக்கீந்தன, னடிகளென்றடிக்குடி யன்பிற்கூறினான்" என்றபடி, எஜமானவர்களே, அடியேனும், அடியேனுக்குள்ளவை அனைத்தும், அடியேன் குடிக்குங் கஞ்சியும் தங்களுடையவையேயென்று வியந்து வியந்து, பணிந்து பணிந்து சொன்னான்.

பின் அரசன் ஒருபுறந்திரும்பிச் சைக்கினை பண்ணினான். உடனே தங்கத் தாம்பாளங்களில் மாணிக்கமுதலான நவரத்தினங்களையும், தங்கநாணயங்களையுங் குவித்துக் கொணர்ந்து பணிவிடைக்காரர்கள் அவன்முன் வைத்தார்கள். அரசன் எழுந்து அவற்றைத் தூக்கி ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வைத்துக் கைகுவித்து நின்று: இவை எஜமானவர்களுக்குப் பாதகாணிக்கை; இவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்போது ஆண்டவரவர்கள் அரசனைப் பார்த்து "இவைகள் மீது எனக்கு விருப்பமில்லை. இவை இப்போது என்னுடையன வாயினும், உன்னுடையனவாக வைத்து, நீயே அநுபவி. ஆனால், இனிநான் இருந்து வணக்கஞ்செய்வதற்கு, வேண்டும்போது உன்பூமியில் ஒருதுண்டு நிலம் எனக்குக்கொடு" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட அரசன் பூரித்து "தாங்கள் வேண்டியபோது வேண்டிய அளவு தர அடியேன் காத்திருக்கிறேன்" என்று தலைசாய்த்துச் சொன்னான்.

அப்போது அவன் மனைவியாகிய ராசபெருமாட்டி அந்தப்புரத்திலிருந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து அடிபணிந்து நின்று: ஐயா, எஜமானே, அடியாளுக்கு நெடுங்காலம் புத்திரபாக்கிய மில்லை. தாங்கள் அதற்காகக் கிருபைசெய்யவேண்டும். என்று கெஞ்சினாள். ஆண்டவரவர்கள் அவளைப்பார்த்து: உங்களுக்கு ஆண்டவன் கிருபையால் சந்தானமுண்டாகும் என்று வாக்கிட்

டார்கள். அப்படியே அச்சுதப்ப நாயக்கனுக்குச் சந்ததி உண்டாயிற்று.

அதன்பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் அரசன் முதலான அனைவருக்கும் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு, தஞ்சாவூரைவிட்டுப் புறப்பட்டார்கள். அங்கிருந்து ஆண்டவரவர்கள் பயணப்பட்டபோது அரசன்முதல் அதிகாரிகள் அனைவரும், ஊர்க்குடிகளும் கூட்டங்கூட்டமாய் வந்து தரிசனை பண்ணிக்கொண்டு, அதிகதூரம் வரையும் தொடர்ந்துவந்து வழியனுப்பிப் போனார்கள்.

தஞ்சாவூருக்குப்போனது முற்றிற்று.

---

௭௮-ம் அத்தியாயம்.

# தேராம் பேட்டைக்குப்போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தேராம் பேட்டைக்குப் போய், செம்புத்தூண் கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது மீறான்சாகிபு ஆண்டவரவர்கள் தஞ்சாவூரை நீங்கித் தபோதனர்களுடன் நடந்தார்கள். நடந்துவரும் பாதையில் ஒரு வயற்கரையில் ஆண்டவரவர்கள் சற்று நின்று பாத்திஹா வோதிவிட்டு நடந்தார்கள். அதைக்கண்ட பகீர்கள்சிலர்: இங்கே யாருக்காக பாத்திஹா வோதினீர்கள் எஜமானே? என்று கேட்க: இங்கே இரண்டு ஒலிகள் அடங்கியிருக்கின்றார்கள்; இவர்கள் பின்னுக்கு வெளியாவார்கள் என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு நடந்து, தேராம்பேட்டையென்னும் ஊரிற்போய்ச் சேர்ந்தார்கள்.



தேராம்பேட்டைக்குப் போனபோது அவ்வூர் முஸ்லிம்கள் கேள்விப்பட்டுத் திரண்டு வந்து ஹலறத்து ஆண்டவரவர்களைப் பணிந்து, கூட்டத்துடன் உபசரித்து ஊருக்குள் அழைத்துக்கொண்டு போய், அங்கே விழுதூன்றிப் பருத்துக் கிளைத்து நிற்கும் ஒரு ஆலமர நிழலில் இருக்கச் செய்தார்கள். ஆண்டவரவர்கள் பகீர்களுடன் அந்த மர நிழலில் தங்கியிருந்தார்கள்.

பிறகு அவ்வூர் பகீர்மார்களுக்கு விருந்து கொடுக்க வேண்டுமென்று சோறுகறிகள் தயார்பண்ணிக்கொண்டு வந்து பகீர்களிடம் இறக்கி, புசிக்கும்படி வேண்டினார்கள். அப்போது பகீர்மார்கள் மூடியிருந்த பாத்திரங்களைத் திறந்தார்கள். ஒவ்வொரு பாத்திரத்திலும் காரரிசிச் சோறும், சாறுவைத்த அகத்திக்கீரையும் இருந்தன. இவற்றைக் கண்டபோது பகீர்களுக்கு உண்டான கோபத்திற்கு அளவில்லை. கண்கள் சிவந்து, ஊராரைப்பார்த்து வாய்கொண்டமட்டும் நிந்தித்து வெருட்டினார்கள். உங்களுக்கு எங்கள் மீதிருக்கும் அவமதிப்பினாலல்லவா இந்தக் கீழ்த்தரமான பதார்த்தங்களைக் கொணர்ந்து வைத்தீர்கள்? எங்களுக்குச் செய்யும் மரியாதை இதுதானா! என்று சீறிச் சினந்து சொல்லி. வெருட்டும்போது, ஊரார் கட்டுக்கெட்டுத் தடுமாறி, முகஞ்சாம்பி நின்றார்கள்.

இதை ஹலறத்து ஆண்டவரவர்கள் அறிந்து, பகீர்களைக் கூப்பிட்டு: இதென்ன முறைகேடு? தங்களால் என்ற எதைக் கொடுத்த போதிலும் பெருந்தன்மையுள்ளவர்கள், ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பித்தானே அவர்களால் கூடுமானதைக் கொணர்ந்து கொடுத்தார்கள்? அவர்களில் சீமானானாலும் ஏழையானாலும் தின்று வழக்கமானதும், விருந்தென்று கொடுப்பதும் இதுதான். அந்த வழக்கத்தின் பிரகாரமே உங்களுக்கும் கொடுத்தார்களல்லாமல்,

வஞ்சகமல்லவே. அதனால், உங்களுக்குக் கோபமுண்டாகலாமா? கோபத்தை நீங்கள் என்னென்று நினைக்கின்றீர்கள்? அது சத்கருமங்களாகிய நல்வினையனைத்தையும் பற்றறுக்கும் ஒரு கூரியகருவியல்லவா? அந்தக்கருவியைக் கையாடுபவர் யார்? மன்னுயிர்களைத் தன்னுயிரென்று கருதி நடக்குந் தன்மையுடையவர்கள் பிறரை மனநோவப்பண்ணத்துணிவது முறையோ! பெரியோரெல்லாம் சினமென்னும் தீயை நல்லுணர்வென்னும் தண்ணீர்கொண்டு அவித்துப்பழகினார்களே. சினத்தைக் கொண்டு நடப்பவர்களுக்கு என்ன தான் கைகூடும்! ஒன்றுமில்லை. கோபம் சுவர்க்கத்துக்குப் போகும் பாதையைத் தடுக்கும் என்று எல்லாரும் அதற்கு அஞ்சி வெருள்கின்றார்கள். ஆகவே, நீங்கள் அந்தக் கோபத்தைக் கையாட்சிகொள்ளப் பார்க்கின்றீர்கள். அது பழுது என்றும், இன்னும் பலவாறுஞ்சொல்லி அவர்களுக்குப் புத்தி போதித்தார்கள். இதைக்கேட்ட பகீர்கள் அஞ்சித்தடுமாறி, அடிபணிந்து நின்று மன்னிப்புக்கேட்டார்கள். ஹலறத்து சையிது முகம்மதுபுகூபு சாகிபவர்களும் பயந்து, தகப்பனாரவர்கள் முன் தலை வணங்கி நின்று பொறுப்புக் கேட்டார்கள்.

பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் பகீர்களுக்கு நன்முகங்கொடுத்து: உங்களுக்கு அந்தக் கீரையும், சோற்றையும் தின்ன மனமில்ல விட்டால், அதோ இருக்கும் கிணற்றில் கொண்டுபோய்ப் போட்டுவிடுங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். அப்படியே அவர்கள் அந்தச் சோறு கீரை அம்மட்டையும் அருகிலுள்ள கிணற்றிற் போட்டுவிட்டார்கள். அன்றுமுதல் அந்தக்கிணற்றில் தூரெடுக்குந் தோறும் ஒரு அகத்திக்கீரையும், ஒரு சர்ரரிசிச்சோறும் வந்துகொண்டிருக்கின்றன.

பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தவூராரை ஆதரவுடன் அருகழைத்து: நீங்கள் இந்தவூரில் தொழுகிற



பள்ளிகட்டாமல் ஏன் இருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள்: எஜமானவர்களே, பள்ளிகட்ட நாங்கள் சாமான்கள் தயார்பண்ணி வைத்திருக்கிறோம். தூண்கள் மாத்திரம் இல்லை. பொதுவிற் சேகரித்த பணம் செலவழிந்து போயிற்று. தூணுக்கென்று பின்னும் பணஞ் சேர்ப்பது கஷ்டமாயிருக்கின்றது. நான்கு தூண்களே வேண்டியது. அதனாலேதான் பள்ளியின் கட்டிடவேலை ஆரம்பிக்கவில்லை என்று மறுமொழி சொன்னார்கள்.

இதைக்கேட்டு அவர்களைப் பார்த்து: இந்த மரத்தின் கீழ் அகழ்ந்துபாருங்கள்; தூண்கள் அகப்படும் என்று தாங்கள் இருக்கும் ஆலமரத்தைச் சுட்டிக்காட்டி ஆண்டவரவர்கள் திருவாய் மலர்ந்து சொன்னார்கள். உடனே அவர்கள் திரண்டு நின்று மரத்தின்கீழ்த் தோண்டினபோது, அங்கே நான்கு செம்புத்தூண்கள் இருந்தன. அவற்றைச் சந்தோஷத்துடன் எடுத்துப் பள்ளியைக்கட்டி முடித்தார்கள்.

தோரம் பேட்டைக்குப்போனது முற்றிற்று.

---

## எசு-ம் அத்தியாயம்.

## கூத்தானூருக்குப்போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் கூத்தானூருக்குப் போன வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு மீறான் சுல்தான் ஆண்டவரவர்கள் தோரம்பேட்டையாருக்குச் செம்புத்தூண் கொடுத்து, அவர்களைப் பள்ளிகட்டிச் சுகமாய் வாழ்ந்திருங்கள் என்று ஆசீர்வதித்துவிட்டு, அங்கிருந்து தங்கள் கூட்டத்துடன் புறப்பட்டுக் கூத்தானூருக்குப் போனார்கள். ஆண்டவரவர்கள் வருகின்றார்கள் என்று அவ்வூர் முஸ்லிம்

கள் எதிர்கொண்டழைத்துச் சாகைபண்ணுவித்து, விருந்து முதலிய சகல உபசாரணைகளுஞ் செய்தார்கள்.

ஆண்டவரவர்கள் அங்கிருக்கும்போது, ஒரு நாள் அவ்வூர் முஸ்லிம்கள் எல்லாரும் ஒன்றுகூடி ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து, கைகட்டிப் பணிந்து நின்று: எஜமானவர்களே, நாங்கள் எல்லாரும் ஏழைகள். அனைவரும் அன்றாடம் கூலிவேலைசெய்து பிழைக்கிறவர்களும், பயிர்ப்பச்சையிட்டு ஜீவனம் செய்கிறவர்களுமாகவே யிருக்கின்றோம். பாரியவர்த்தகஞ் செய்வோர் எங்களில் இல்லை. எங்கள் வரும்படி குடும்ப சம்ரக்ஷணைக் கல்லாமல், வேறே கையில் நாலுகாசு மிஞ்சக்கூடியதல்ல. இந்தவூரில் குத்பாப் பள்ளியொன்று இல்லையென்கிற கவலை எங்கள் இருதயத்தில் நீண்டகாலம் வேரூன்றி யிருக்கின்றது. இருந்தும், அக்கவலையைத் தீர்த்துக் கொள்ள எங்களுக்குத் திராணியில்லை. பொருளில்லாக் குறையேயன்றி வேறில்லையாகையால், தேவரீர் அதற்காக மனதிரங்கவேண்டும் என்று முறையிட்டார்கள்.

இம்முறைப்பாட்டை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அந்தக் கூட்டத்தாருள் எல்லாரிலும் கடைப்பட்ட ஒரு எளியவனை எழிட்டுப்பார்த்து: ஏ, மனிதனே, இந்த வூரில் குத்பாப்பள்ளி யொன்று நீகட்டு என்று வாக்கிட்டுச் சொல்லி அனுப்பினார்கள். அன்று முதல் அல்லாகுத்த ஆலாவின் உதவிகொண்டு அந்த எளிய மனிதனுக்கு எவ்விதமாகவோ திரவியம் கிடைத்தது. அவன் உடனே, அந்தப் பொருளில் ஆனமட்டுஞ் செலவிட்டு விரைவில் ஒரு பள்ளியைக் கட்டுவித்தான்.

சீக்கிரமாகப் பள்ளிகட்டி முடியவே ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தப் பள்ளியிற் போயிருந்து தறுவுஞ் ஓதி



தொழுது சந்தோஷமுற்றார்கள். ஊரார்களுக்கும் அளவிறந்த சந்தோஷ முண்டாயிற்று. ஒரு எளியவனைச் சீமானாக்கிப் பள்ளிகட்டுவித்தார்கள் என்று ஆண்டவரவர்களை அதிசயித்துக் கொண்டாடினார்கள். ஆண்டவரவர்கள் போயிருந்த நாள்முதல் அந்தப்பள்ளியில் ஒருவரும் இராத் தங்கி, நித்திரை செய்கிறதில்லை. அறியாமல் ஒருவர் தங்கிவிட்டால், இரவில் எடுத்தெறியப்படுகின்றார்கள். அது இன்றும் நடக்கின்றது.

கூத்தாநூருக்குப்போனது முற்றிற்று.

---

௮௦ - ம் அத்தியாயம்.

## திருவாரூருக்குப்போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் திருவாரூருக்குப் போய்த் தேரைத்தடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து காதிறேலி கன்ஜஸவாய் பாத்துஷா ஆண்டவரவர்கள் பகீர்கள் புடைசூழக் கூத்தாநூரை விட்டுப் புறப்பட்டுத் திருவாரூரிற்போய், அங்கொரு இடத்தில் சாகை பண்ணிக்கொண்டு இருந்தார்கள். அப்போது அவ்வூரில் திருவிழாக் கொண்டாடும் காலமாயிருந்தது. ஆண்டவரவர்கள் அங்கே போய்த் தங்கினபின், அவ்வூர் இந்துக்கள் வழக்கப்படி கோயிலைச் சிறப்பித்து, தேரை அலங்கரித்து, தங்கள் சுவாமியாகிய விக்கிரகத்துக்கு ஆடையாபரணங்கள் அணிந்து அத்தேர்மேல் ஏற்றி, தெருக்கள் சுற்றிவரும்படி இழுத்தார்கள். வழக்கப்படி ஓடும் தேர் அன்று இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. அதிக ஜனங்கள் திரண்டு நின்று பலங்கூட்டி யிழுத்தார்கள்; அப்போதும் அது அசையவில்லை. இதென்ன வென்று ஆச்சரியமுற்று, திருவிழாக்கென்று வந்த ஜனங்களும் கூடநின்று இழுத்தார்கள்;

ஒரு மயிர்க்கிடையும் முன்வரவில்லை. அப்போது அவர்கள், வடந்தொட இடமின்றி இத்தனைத் திரளான ஜனங்கள் நின்று இழுத்தும் இத்தேர் ஆடாமல் அசையாமல் இருந்த இடத்தில்தானே யிருக்கின்றதே! இந்த இழுப்புக்கு மலையும் நகருமே! இதென்ன ஆச்சரியம் என்று திகைத்தார்கள். பின்னும் இழுத்திழுத்துப் பார்த்து உடல் சோர்ந்தார்கள். தேர் அசையவில்லையேயென்று மனஞ்சலித்தார்கள். நாம் சுவாமிக்குச் செய்த தீங்கு என்னவோவென்று திகைத்தார்கள். "சுவாமீ! தாங்கள் ஆரோகணம் பண்ணியிருக்கும் இந்தத்தேர் வழக்கப்படி ஏன் ஓடவில்லை? நாங்கள் ஏதும் பிழைசெய்திருந்தால் மன்னித்து, தேரை நடத்துங்கள்" என்று சொல்லி, அந்தத் தேரடியில் நிரைநிரையாய்க் கும்பிட்டு விழுந்தார்கள். மறுபடியுங் கூடிநின்று இழுத்தார்கள். ஒன்றிலும் காரியம் பலிக்கவில்லை.

பின்பு, எல்லாரும் கூடியமட்டும் பார்த்து வடத்தைக் கை விட்டு, இதற்குக்காரணம் என்னவோ வென்று உள்ளஞ்சோர்ந்து நின்றார்கள். திருவிழாக்கூட்டம் திகைப்புற்று நின்றது. அப்போது, கோயில் ஆசாரியனும், மற்ற அதிகாரிகளும் கூடிநின்று: இந்தத்தேர் ஓடாமல் நின்று போவதற்கு இங்கே நூதனம் ஒன்றும்நடக்கவில்லை. ஆனால், இஸ்லாமான ஒருபெரியோர்கள் தங்கள் கூட்டத்தாருடன் சில தினங்களாக இவ்வூரில் வந்திருக்கின்றார்கள். ஒருவேளை அந்தக் காரணத்தினால் இத்தேர் ஓடாமல் நிற்கவுங் கூடும் என்று ஆலோசனைபண்ணி, நாம் அவர்களைப் போய்க் கண்டுகொள்வதே காரியம் என்று தீர்மானித்து, அக்கோயில் ஆசானும், சில அதிகாரிகளும் பெருங்கூட்டத்துடன் ஹலறத்து ஆண்டவரவர்கள் இருக்கும் சாகைக்கு வந்தார்கள்.

எல்லாரும் பின்னேநிற்கக் கோயில் ஆசான் மாத்திரம் ஆண்டவரவர்கள் சமுகத்திற்போய் நெடுஞ்சாண்கிடையாய்



விழுந்து: ஐயா எஜமானே, இவ்வூர் உண்டான காலந் தொட்டு இந்தக் கோயிலிலிருக்கும் எங்கள் தெய்வத்தை அலங்காரஞ்செய்து, தேரைச்சிங்காரித்து அதில் ஏற்றித் தெருச்சுற்றி, திருவிழாக் கொண்டாடுவது வழக்கம். தொன்றுதொட்டு நடக்கும் வழக்கப்படி இந்த வருஷத்திலும் தெய்வத்தைத் தேரில்வைத்து, தெருச்சுற்றும்படி இழுத்தோம். தேர் அசையவில்லை. எங்களால் ஆனமட்டும், அதற்கு மேற்கொண்டும் பிரயத்தினங்கள் செய்து தேரை இழுத்தும், அது எள்ளிடை நகரவில்லை. அதனால், நாங்கள் வாடித் தவிக்கின்றோம், சுமார் பதினாயிரம்பேர் கூடி நின்று இழுத்தும் தேர் அசையவில்லையேயென்று, பின்னும் தெய்வத்திற்குக் கடாப்பலி கொடுத்து, தீபதூபங்களிட்டு, ஆராதனை பண்ணிக்கூட இழுத்துப்பார்த்தோம். காரியம் சாயவில்லை. இனித் தாங்களே கதி; தாங்களே கிருபைசெய்ய வேண்டும். எள்று முறையிட்டான்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அவனைப்பார்த்து உங்கள் தேர் ஓடும்; நீங்கள் ஒருவரும் வடத்தைப்பற்றி இழுக்காதீர்கள்" என்று கட்டளைபண்ணி அனுப்பிவிட்டார்கள். ஆண்டவரவர்கள் வாக்கின்படி ஒருவராவது வடத்தைத் தொட்டு இழுக்காமல் அந்தத்தேர் தானாக ஓடத் தொடங்கி, வழக்கப்படி சுற்றும் தெருக்களையெல்லாஞ் சுற்றியோடி நிலைக்குவந்தது. அதனால், அந்த இந்துக்களுக்கு உண்டான ஆச்சரியம் கொஞ்சமல்ல.

ஆயிரக்கணக்கில் ஜனங்கள் திரண்டுநின்று இழுத்தும் எள்ளத்தனை அசையாத தேர், ஒருவரும் வடந்தொடாமல் தானாக வோடி வழக்கப்படி நிலைக்குவந்ததே! இது மகா புதுமை! இப்படிச் செய்வித்தவர்கள் இந்தப் பெரியோர்களே என்று அவ்வூர் இந்துக்கள் எல்லாரும் கூட்டங் கூட்டமாய்த் திரண்டு ஹலறத்து ஆண்டவரவர்களின் திரு

வடித் தரிசனஞ்செய்து, போற்றிப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

ஒருநாள் அவ்வூரிலுள்ள ஒரு பிராமணன் ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவத்தைக் கேள்வியுற்று வந்து, அடிபணிந்து நின்று: ஐயா, எனக்கு ஒருதென்னமரம் இருந்தது. அதன் காய்ப்பைக் கொண்டு நான் ஜீவனம் பண்ணிவந்தேன். இப்போது அது பட்டுப்போய் மொட்டையாய் நிற்கிறது. அதனால் நான் ஜீவனத்திற்கு முட்டுப்படுகிறேன். தேவரீர் கிருபைசெய்து, அதைக் காய்க்கச் செய்யவேண்டும் என்றுசொல்லி மன்றாடினான். அப்போது ஆண்டவரவர்கள் அவனைப்பார்த்து "அது காய்க்கும்; நீபோ" என்றுசொல்லி அனுப்பினார்கள். அவன் வீடுபோய்ப் பார்க்குமுன் அந்தத் தென்னை தலை தாங்காவண்ணம் குலை சாய்த்துக் குலுங்கிநின்றது. இதைக் கண்ட பார்ப்பான் அகம் பூரித்து, பின்னும் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்துநின்று சங்கதியைச் சொல்லித் துதித்தான்.

திருவாரூருக்குப்போனது முற்றிற்று.

---

௮௧-ம் அத்தியாயம்.

## எருதுகொடுத்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு ஏழைக்கு எருதுமாடொன்று கொடுத்தவரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் இவ்விதம் சிலபலகாரணங்களைச் செய்துகொண்டு, திருவாரூரில் சிலநாள் தங்கியிருந்தார்கள். அப்போது, திருக்களாச்சேரி என்னும் ஊரிலுள்ள இஸ்லாமானஒரு எளியவன் ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து பாதம் பணிந்து நின்று: எஜமானவர்களே, அடியேன் திருக்களாச்சேரியி



லிருக்கும் ஒரு எளியவன். எனக்கு ஒருதுண்டு நிலமுண்டு. அதை உழுது பயிர்செய்தாலன்றி என்ஜீவனம் நடக்காது. வேறு தொழில் செய்யப்பழகினவனுமல்ல; தொழிலுக்கு முதலுமில்லை. ஒரு கூலிப்பாடு படவும் ஏலாது. உள்ள நிலத்தை உழுது பயிரிடலாமென்றாலோ, உழவுமாடுகள் இணையாய் இரண்டுவேண்டும். என்னிடம் உள்ள மாடு ஒரேயொன்று. ஒரெருதுள்ளான் உழுவதெப்படி? அதனால், மற்றொரு மாடில்லாமல் ஒருமாட்டை வைத்துக் கொண்டு, பெண்டுபிள்ளைகளோடு பட்டினி கிடந்து சாவப்பார்க்கின்றேன். தாங்கள் மனதிரங்கி, மற்றொரு மாடு எனக்குண்டாகும்படி அருள்புரியவேண்டும் என்று கெஞ்சினான்.

இதை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு மனதிரங்கி, அவனைப்பார்த்து: நல்லது; நீ உன் ஒருமாட்டைக் கொண்டுபோய் ஒரு மரத்திற்கட்டிவிட்டு, அதன் பக்கத்திலிருக்கும் மற்றொரு மரத்தில் வேறொரு வெறுந்தாம்பைப் பிணித்து வைத்து, அவ்விரண்டிடத்திலும் வைக்கோலைப் போட்டுவை என்று கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

அவ்வாறே அந்தமனிதன் போய், தன்மாட்டை ஒரு மரத்திலும், வெறுந்தாம்பை ஒரு மரத்திலுங்கட்டி, இரண்டிடத்திலும் வைக்கோலைப்போட்டு வைத்துவிட்டு, அன்றிரா படுக்கப்போனான். விடியும்வரையும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அன்று அர்த்தசாமத்தில் ஆண்டவரவர்கள் அல்லாஹுத்தஆலாவிடம் அவனுக்கு மாடுண்டாகும்படி தொழுது துஆ கேட்டார்கள்.

இராமுழுதும் அதே நினைவாய் நித்திரையற்றிருந்த அந்தமனிதன், விடியுமுன் எழுந்துவந்து ஆண்டவரவர்கள் சமுகத்திற்பணிந்து நின்றான். அப்போது ஆண்டவரவர்கள் அவனைப்பார்த்து: நீ கட்டின மரங்களைப் போய்ப் பார். இரண்டுமாடுகள் நிற்கும். பிடித்துக்கொண்டு

உழுதுண்டு வாழ்ந்திரு என்றுசொல்லி அனுப்பினார்கள். உடனே அவன் ஆவலாய்ப் போய்ப்பார்த்தபோது, இரண்டு மரத்திலும் ஒன்றுக்கொன்று ஜதையான இரண்டுமாடுகள் கட்டப்பட்டிருந்தன. அதனால், அவனுக்குண்டான ஆச்சரியமும், ஆநந்தமும் மட்டிடுவதல்ல. அன்றுமுதல் அவன் நிலத்தைப் பயிரிட்டுச் செல்வத்தோடு வாழ்ந்திருந்தான்.

எருதுகொடுத்தது முற்றிற்று.

---

௮௨-ம் அத்தியாயம்.

## மேலநாகூருக்குப் போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மேலநாகூருக்கு வந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது பாத்துஷாசாகிபு அவர்கள் திருவாரூரிலிருந்து புறப்பட்டு தங்கள் அருமை மகனார் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களும், நானூற்றுநான்கு தபோதனர்களாகிய பக்கிர்களும் புடைசூழ்ந்து வரும்படி மேலநாகூர் என்னும் தலத்திற்கு வந்தார்கள்.

மேலநாகூர் என்பது இப்போதுள்ள நாகூருக்குச் சற்று மேற்கில் இருக்கின்றது. அது, அக்காலத்தில் விஸ்தாரமான ஒரு பட்டணமாயிருந்தது. அலங்காரமும், விசித்திரமுமான அநேக மாடமாளிகை, கூடகோபுரங்களால் சிறந்தது. அரணிப்பான உன்னதக் கட்டிடங்கள் அநந்தம் நிரைநிரையாயுள்ள அகன்ற தெருக்கள் கண்ணுக்கு இனிமையான காட்சியைத் தந்துகொண்டிருக்கும். ஊருக்குப் புறத்தில் நெளிந்துவளைந்து ஓடிக் கடலிற்போய் விழும் நதியும், நறுமணங்களையும் பலவிதப் புஷ்பங்களையும் தீங்கனிகளையுஞ் சொரியும் தோப்புகளும், நெல்வகை



முழுதும் விளையும் வயல்களும் நிறைந்து விளங்கும். ஊருக்குள் வடதேசத்திலிருந்து வந்து குடியேறின அநேக உயர் குலத்தார் வாசஞ்செய்தார்கள். மரக்கல வியாபாரிகள் பலர் வர்த்தக விர்த்தியில் சிறந்து வாழ்ந்தார்கள். அவ்வூர்க் குடிகளில் பெரும்பாலும் முஸ்லிம்களே விசேஷித்தவர்களாயிருந்தார்கள்.

முஸ்லிமான பாக்கியவான்களால் சிறந்து விளங்கும் செல்வமிகுந்த அந்த மேலநாகூரில் ஹலறத்து ஆண்டவரவர்கள் வந்து, ஒரு தானத்தில் விடுதியிட்டுத் தங்கினார்கள். அப்போது அவ்வூர்க் குடிகளில் ஒருவராவது ஆண்டவரவர்கள் விஷயத்தில் எண்ணமிடாமல், எல்லாரும் பராமுகமாயிருந்து விட்டார்கள். அக்காலத்தில், அவ்வூர்க் குடிகள் அதிகம்பேர் மார்க்கந்தவறி நடக்கிறவர்களாயிருந்தார்கள்.

பொன்னினாலான மிம்பறென்னும் உபதேசபீடம் அமைந்த குத்பாப்பள்ளிகள் பல தெருக்கள்தோறும் இருந்தும், அங்கேவந்து அல்லாகுத்த ஆலாவைத் தொழுவாரில்லை. ஒவ்வொருவரும் தமக்குக் கிடைத்திருக்கும் பணப்பெருக்கத்தினாலும், பெண்டு பிள்ளைகளாலும், ஆளடிமைகளாலும், மாடாடு முதலிய ஆளும் பொருட்களினாலும், வீடுகள், தோட்டங்கள், கழனிகள் முதலிய காணியாட்சிகளாலும் தம்மை மதித்து, இறுமாந்து, அவற்றைக் கொடுத்த அல்லாகுத்த ஆலாவைக் கனவிலுங்கருதிப்பாராதவர்களாயிருந்தார்கள். இது மாத்திரமா? கொலை, களவு, மதுபானம், வியபிசாரம், சூதாட்டம், பொய், கோள், பெரியோரை யிகழ்தல் முதலான துற்கிருத்தியங்கள் அனைத்தும் அவர்களுக்கு நித்தியகருமமாயிருந்தன. தொழுதல், நோன்பு பிடித்தல், தானதருமம் வழங்குதல், குர்ஆனையோதுதல்முதலான சத்கருமங்கள் அவர்களுக்குக் காஞ்சிரங்காயாயின. முடிவாகச் சொல்லுமிடத்தில்

அல்லாஹுத்த ஆலா விதித்தவை யெல்லாம் விலக்காகவும், விலக்கினவை யெல்லாம் விதியாகவுமே அவ்வூராரில் நாலாறு வீட்டுக் காரர்தவிர மற்ற எல்லாரும் எடுத்து நடந்து தலைதடுமாறி யிருந்தார்கள்.

செல்வப்பெருக்கினால் மமதைகொண்டு அல்லாஹுத்த ஆலாவை மறந்து, மேற்சொன்னபடி தீனுல்இஸ்லாத்தின் கருமங்களில் தலைகீழாய்ப்புரண்டு நடக்கும் அவ்வூர்க் குடிகளை நிலைதெரிந்து ஆண்டவரவர்கள் கவனித்து, நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களின் உம்மத்துமார் இவ்வாறு சீரழிந்து கிடப்பது முறைமையல்லவே யென்று அநுதாபப்பட்டு, இவர்களுக்கு நரகத்தைக்கொண்டு அச்சம் மூட்டி நேர்வழி பெறும்படி உபதேசஞ் செய்யவேண்டு மென்று எண்ணி, அறக்கீழான அறிவற்ற கீழ்மக்கள் கேட்டாலும் திருந்தத்தக்க விஷயங்களை மதுரமான சொற்களைக்கொண்டு போதிக்கத் தொடங்கினார்கள்.

ஜனங்களே, கேளுங்கள். இந்தத் துன்யாவில் ஒருவன் தனக்குக் கிடைத்திருக்கும் பாக்கியத்தினால் மேலான வுணவுண்டு, மேலான வுடையுடுத்தி, மேலான வாகனரூடயாய்த் திரிவான். பின் அப்பாக்கியம் அழிந்தாலோ, கீழான வுணவுக்கும் உடைக்கும் வகையற்று, கால்வருந்த ஊரூராய்த் திரிவான். இது சகசமே. காரியம் இப்படியானால், இனிச் செல்வத்தின் மகத்துவம் என்ன மகத்துவம்! விசித்திரமானசப்பிரமஞ்சத்தின் பஞ்சணைமீது நறுமலர் பரப்பிப் படுத் துறங்கின மேனியும், மலர்மீதும் வைக்கப்பொறாமல் நடையற்றிருந்த கால்களும், வாழ்வு அழிந்து தாழ்வுவந்த போது, பிறர் தடிகொண்டு அடிக்கத் தாங்கி, சுடுநிலத்தில் நடக்க உடன்படுமென்றால், இந்தச் சரீரத்தின் செருக்கு என்ன செருக்கு! வானத்திலிடும் வில்லுக்கும், மின்னுக்கும், மனிதரின் நினைப்புக்கும், காளானுக்கும், ஆற்றுப் பெருக்குக்கும், அழகும், இளமையும், வாழ்வும், சுற்றமும் ஒப்பாகு



மென்றால், துன்யாவைச் சதமென்று நம்பி, அதில் தரிபட்டிருக்க யார்தாம் கருதுவார்கள்! மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளும், அவற்றிலுள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களும், ஒரே படி நில்லாமல் தடுமாறிக் கெடுந்தன்மையை யுடையன வாகையால், அவையமைந்த உடலின் யநுபவம் என்ன அநுபவம்! அளவற்ற அன்புபாராட்டி அதிகப் பற்றுதலுடன் உவந்திருக்கும் சுற்றத்தார், ஒருவன் மரண மடைந்தால் சூழ்ந்திருந்து கண்ணீர்சொரிந்து கூக்குரலிட்டுப் புலம்பிப் பரிதபித்து அழுது, பின் ஒருங்குகூடி அவனைக்கொண்டு போய் மண்ணிற்புதைத்துவிட்டு, அதன்பின், உண்ணல் உடுத்தலாதிப் பலபராக்கிலும் செல்வார்களானால் அவர்களால் உண்டாகும் பெருமை என்ன பெருமை! சர்வ ஜீவகோடிகளையும் சிருஷ்டித்து அவ்வவற்றிற்குத் தக்கபடி இரண மரணாதிகளைச் சங்கற்பித்து ஆள்கிற வல்லவனான அல்லாஹுத்த ஆலாவை அறிந்து, அவனை வழிபட்டு நடக்காதார் யாராயினுஞ்சரி நரகத்திற்கே ஆளாவார். இஸ்லாம் வேஷம்பூண்டு, அஷ்ஹது கலிமாவை நுனிநாவினாற் சொல்லிவிட்டு, விதிவிலக்குகளுக்குக் கட்டுப்படாமல் மனம்போன வழியில் நடப்பார் யாருக்கும் முடிவில் கைசேதமே கண்ட பலனுமன்றி, வேறில்லை. முஸ்லிமான ஜனங்களே, நீங்கள் அல்லாஹுத்தஆலாவுக்குப் பயப்படுங்கள். வணங்கப் படப் பாத்திரன் அல்லாஹுத்த ஆலாவே; மலக்குகள் அவன் ஏவலாளரே; தௌறாத்து, ஜபூர், இஞ்ஜீல், புறுகான் ஆகிய நான்கும், மற்றும் சுகுபுகளும் அவன் வேதங்களே; நபி ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் முதலாக நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களீறாகவுள்ள நபிமார் றசூல்மார் எல்லாரும் அவனுடைய நபியும் றசூலுமே; யவ்முல்ஆகிறு என்று ஒருநாள் உண்டு; அது, நடுத்தீர்க்கும் நாளே. நன்மையுந்தீமையும் அவன் புறத்தினவேயானாலும், தீமைக்கு

அவனுடைய அநுமதியில்லையேயென்று மனதார எண்ணி, வாயாரச் சொல்லுங்கள். ஒவ்வொருதினத்து ஐயைந்து வேளைகளிலும் பரிசுத்தமாக மனதுருகி, அவனை வணங்குங்கள். அதனால், நவரத்தினகசிதமான அபரஞ்சி மாளிகைகளுள்ள சுவர்க்கத்துவாழ்வு உங்களுக்குக் கிடைக்கும். அவன் உங்களுக்குக் கொடுத்த திரவியத்தை அவனுக்குப் பிரீதியான பாதையில் செலவிடுங்கள்; அதற்கு ஏற்பட்ட பாகப்படி ஜக்காத்துக்கொடுங்கள்; இச்சையையடக்கி இருதயந்தெளிய ஒருமையில் தரிபட்டு உபவாச விரதமாகிய நோன்பைத் தவறாது பிடியுங்கள்; அப்படிப் பிடித்தோருடைய வாய்மணத்தை ஹூறுல்ஈன்களும் விரும்புவார்கள். உங்களுக்குள் திரவியபலம், சரீரபலம், மற்றைய சாதனங்களெல்லாம் உண்டாயிருக்குமானால், மக்காவுக்குப் போய் கஃபாவைப் பிரதக்கணஞ் செய்யுங்கள்; இனிச்சுவர்க்கத்தில் பவனிவருவீர்கள். நீங்கள் செய்யும் துர்க்கிர்த்தியங்களை ரகசியமென்று நினைக்காதீர்கள்; இரண்டு பேர் ஒரு ஒதுக்கிற் போயிருந்து பிறரொருவருங்காணாமல் ஒரு கருமத்தைசெய்தால், அங்கே அல்லாகுத்த ஆலாவுங்கூடி மூவராவார்; மூவர் செய்தால், நால்வராவர்; நால்வர் செய்தால், ஐவராவார் என்று நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்து சொன்னார்களே. அதனால் உங்கள் அந்தரங்கம் பயிரங்கந்தான். வித்தினால் மரத்தையும், மரத்தினால் வித்தையும் உண்டாக்குவது போல, ஒரு துள்ளிச் சுக்கிலத்தினால் கரசரணாதி அவயவங்களும் ஜீவனுமுள்ள உடலையும், அவ்வுடலினால் சுக்கிலத்தையும் உண்டாக்கும் கர்த்தாவான அல்லாகுத்தஆலாமகாவல்லவன் என்று வேதஞ் சொல்வதைக் கேட்டபேர் அவனை மறந்து கெடுவழியில் நடப்பரா? இம்மையில் அல்லாகுத்தஆலாவையறியாதவன் மறுமையிலும் குருடனாயிருப்பான் என்னும் வேதவாக்கியத்தை ஆராய்ந்து பாராதார் நபிமுகம்மது



ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களின் மன்றுட்டத்திற்குள் அகப்படுவது எப்படி? முன்னுள்ள நபிமார்தாமும் தனித்தனி என்னை முகம்மதுநபியுடைய உம்மத்திற்கு சேர்ப்பி" என்று அல்லாகுத்தஆலா இடம் இரந்து கேட்டார்கள். ஆதலால், இந்த மேலான உம்மத்தில் யார்தாம் வீணாய்ப் போகலாம்? எனக்கு ஒப்பானவர் ஒருவருமில்லையென்று உலகத்தைக் கட்டியாண்டு சுவர்க்கத்திற்குப் பிரதிசுவர்க்கம் கட்டிய ஸந்தாதுடைய வாழ்க்கைகள் இப்போது எங்கே! நானே கடவுள்; நானேபெரியவன் என்று வழக்கடித்து வையகமுழுதும் ஆண்ட நமுறூதும், பிறஊனும், எப்படி யழிந்தார்கள்! அவர்கள் வாழ்க்கைகள் எப்படி கெட்டன! அவர்களின் வீரசூரத்தனங்கள் இப்போது எங்கே! அநித்தியப் பொருட்களை நித்தியமென்று எண்ணி, நித்தியப்பொருளை நினைத்து பாராதார் யாராயிருந்தாலும், எவ்வளவு வீரசூரரானாலும், எம்மட்டுத்திரண்ட பாக்கியவந்தனானாலும், எத்தனைபெரிய ராசாதிராசனானாலும் ஒதுங்குந்தானம் நரகமே. ஒருவன் பாவஞ்செய்தபின் அவனுக்கு மீட்சியில்லையே யென்று இம்மட்டில் நீங்கள் மனஞ்சோர்ந்து போகாதீர்கள்; செய்தபாவத்தை எண்ணிப் பச்சாதாபப்பட்டு, இனி இப்படிச் செய்வதில்லையென்று தீர்மானித்துக்கொண்டு, நான் செய்த பாவத்தைப் பொறுத்தருள் என்று மனம் வாக்குக் காயம் மூன்றும் ஒன்றுபட அழுது அல்லாகுத்தஆலா இடம்கேட்டு தௌபா செய்தால், அவன் மன்னிப்பான். அவன் பிழைபொறுக்கிறவன்; கிருபை செய்கிறவன். அவனைக் கெஞ்சிக் கேட்கும் பரிசுத்தமனதுள்ளார்க்குக் கேட்டது கிடைப்பது நிச்சயம். ஆகையால், நீங்கள் தௌபா செய்யுங்கள். ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களைப் படைத்து அவர்கள் உடலில் ஜீவாத்மா பரவும்போது அவர்களுக்குத் தும்மல் உண்டாக, அதற்கு அவர்கள் அல்ஹம்துலில்லா என்று சொன்னவுடன்,

அல்லாகுத்தஆலா அதைக்கேட்டு நஅமக்கல்லா என்று பிரதி சொன்னானே, அச்சொல்லின் பொருட்பிரகாரம் அவன் நமக்குக் கிருபை செய்வதற்கு உரியவனாயிருக்கிறான். நமது பிழைகளைப் பொறுத்துக் கிருபைசெய்து, நம்மை அவன் ஆதரித்து ஆள்வான். நீங்கள் அவனுடைய கிருபை நிழலில் ஒதுங்கிக்கொள்ளுங்கள். இனிச்சம்பவிக்கும் நய நஷ்டங்களை அவன் உங்களுக்கு மறைத்து வைக்கவில்லை. அனைத்தையும் இன்னபடி யென்று முந்தியே தெரிவித்து, அவற்றைக் குறித்து எச்சரித்துமிருக்கின்றான். ஜனங்களே, நீங்கள் பயபக்தியாக நடவுங்கள் அப்போது உங்களுக்கு மறுமைப்பலன் உண்டாகும். விருதாவில் மோசம் போகாதீர்கள் என்றும், இன்னும் பலவுமான ஹிதோபதேசங்களை ஆண்டவரவர்கள் தேன்மாரி பெய்வதுபோல மேலை நாகூராருக்குப் பெய்தார்கள். இவ் வுத்தமமொழிகளுள் ஒன்றாவது அவர்கள் செவிக்குள் நுழையவில்லை, ஒன்றையாவது அவர்கள் இதயங்கனிந்து காதுதாழ்த்திக் கேட்கவுமில்லை. காதிற் புகுந்த இரண்டொன்றும் அவர்களுக்கு வேம்பாயிருந்தது. முடிவில் ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவாய்மொழி அனைத்தும் "பன்றிக்கூழ்ப்பத்தரிற் றேமா வடித்தற்றால்" என்றபடி யாயின. அவர்கள் கொண்டிருந்த செல்வச் செருக்கே அவர்களை இவ்வாறு அலக்கழித்தது. "குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர், நடைமெலிந்தூரூர் நண்ணினு நண்ணுவர்" என்பதையும், "நீரிற்குமிழி யிளமை நிறைசெல்வ, நீரிற்சுருட்டு நெடுந்திரைகள், நீரி, லெழுத்தாகும் யாக்கை—" என்பதையும், "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே, யுடம்போ டுயிரிடைநட்பு" என்பதையும், இன்னுமுள்ள நீதி மொழிகளையும் அவர்கள் எண்ணிப் பார்த்தவர்களுமல்ல. ஆகையால் தான் ஆண்டவரவர்களின் திருவாய்மொழி அவர்களுக்குத் தைக்கவில்லை.



ஹலறத்து ஆண்டவரவர்கள் திருவாய் மலர்ந்து சொரிந்த அமிர்தவசனங்களை மேலநாகூரார் அலட்சியஞ் செய்ததுமாத்திரமல்ல; அவர்களைப் பகிடிபண்ணி நகைத்தார்கள். இவர் யார்? எங்குள்ளவர்? இவர் சொல்வது என்ன? என்று பரிகாசம் பண்ணினார்கள். அடிக்கடி நையாண்டி பண்ணினார்கள். "எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார், பெரியார்ப் பிழைத்தொழுகுவார்" என்பதை அவர்கள் அறியவில்லை.

உலகத்தார் "கேடுவருமுன் மதிகெட்டுவரும்" என்கிறபடி தாங்கரிய வில்லங்கங்களை இனிஅனுபவிக்கப் போகிற மதிகெட்ட மேலநாகூரார் ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவாய்மொழிகளை இகழ்ந்து பரிகாசம் பண்ணினபோது, ஆண்டவரவர்கள் மனம் நொந்து, இந்த அறிவற்ற சண்டாளர்கள் வாழும் ஊரில் நாம் அடிவைக்கக்கூடாதென்று, தங்கள் அருமை மகனாரும், பகீர்மார்களும் புடைசூழ அவ்வூரைவிட்டு வெளிப்பட்டு, கீழ்புறத்திலுள்ள கடற்கரை மைதானுக்கு வந்துவிட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மேலநாகூரை விட்டு வெளிப்பட்ட மாத்திரத்தில், அவ்வூராரின் தலைக்குமேல் சமயம் பார்த்து நின்ற ஆபத்து இறங்கத்தொடங்கிற்று. "பெரியாரைப் பேணாதொழுகிற் பெரியாரால், பேரா விடும்பைதரும்" என்றபடி ஆண்டவரவர்களைப் பேணாதபடியால், அவ்வூரார் மேல் அல்லாகுத்தஆலா தனது கஹறை யிறக்கினான். வாந்திபேதி, சுரம், குன்மம், கால்கை யாதி அவயவவீக்கம், வாதம், பித்தம் முதலான எண்ணிறந்த ரோகங்கள் அவர்களுக்கு உண்டாயின. அநேகர் தாங்கரிய பாடுபட்டார்கள்; அநேகர் மடிந்தார்கள். அவ்வூர் வர்த்தகர்களில் மரக்கலவியாபாரிமார் நிறைசரக்குடன் பிரயாணத்திற்கு ஆயத்தமாக்கித் துறைமுகத்தில் நிறுத்தி

யிருந்த பல மரக்கலங்கள் மேடேறின. படகுகள் போக்கு வரத்தின்றித் தடைபடக் கழிமுகத்தில் மணல்மேடெழுந்து பரவின. நான் என்ற அகங்காரம், ஆண்மை, வீரதீரம் எல்லாம் தொலைந்தன. அநேகர் ஊரைவிட்டு வலசை வாங்கினார்கள்.

மேலைநாகூர் இவ்வாறு பரிதபிக்கத்தக்க நிலைபரத்தி லாகவே, இது நாம் செய்த துற்செய்கைகளாலும், உபதே சஞ்செய்த பெரியோரை நிந்தித்ததனாலுமே வந்து நேரிட்ட தென்று சிலர் மனதிற்பட்டது. முடிவிற்பட்டு என்ன? காரியம் முந்திவிட்டது. பொதுப்பட அவ்வூரார் குடிக் கக் கஞ்சிக்கும் வகையற்றுத் தவித்தார்கள். தரித்திரமும், நோயும், அவர்களிடம் குடிகொண்டன. அதனால் அவர்கள் அநுபவித்த கஷ்டநஷ்டங்கள் மெத்த.

மேலைநாகூராரில் முன்சொன்ன அதிக்கிரமங்களில் சேராமல் நெறியோடு நடந்த நாலாறு வீட்டுக்காரர்கள் இந்த ஆபத்துக்குப் பயந்திருந்தார்கள். அவர்களில், பிஜாப் பூரிலிருந்து வந்து அங்கே குடியேறி வர்த்தகத்தில் சிறந் திருந்த சையிது பஹாவுத்தீன் ஸஃபரவர்தீ என்பவர் ஹலற த்து ஆண்டவரவர்களிடம் தனியே புறப்பட்டு வந்து பணிந்து நின்று, தமக்கும் தமது மனைவி மக்களுக்கும் அபயங் கேட்டுக்கொண்டு போனார். பின் அவ்வூரில் சில வீடுகள் தவிர மற்றெல்லாம் பாழாயின. ஊர்முழுதுமே சீரழிந்து போயிற்று.*

மேலைநாகூருக்குப்போனது முற்றிற்று.

---

* மேலைநாகூரில் மண்மாரிபெய்ததென்றுஞ் சொல்லுகிறார்கள்; அதைப்பற்றிக் கிரந்தகர்த்தாக்கள் எழுதவில்லை.

௮௫-ம் அத்தியாயம்.

## நாகூர் ஸ்தல ஸ்தாபனம்.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் மேலைநாகூரை விட்டுக் கடற்கரையில்வந்து தங்கினதும், தஞ்சாவூர் மகாராஜா நிலங் கொடுத்ததும், நாகூர் ஸ்தாபனமானதுமானவரலாறுகளைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து குத்புல்லக்தாபு, கௌதுல்லிஸ்லாம், மீரான் சுல்தான் ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் மேலைநாகூரைவிட்டுக் கடற்கரையில்வந்து, ஒரு பக்கத்தில் ஜாகைபண்ணிக்கொண்டு தங்கினார்கள். அக்காலத்தில் அவ்விடம் ஒன்றோடொன்று அடர்ந்து நெருங்கின பல மணல்மேடுகளையும், பெரும்பாலும் புன்னைமரங்களும், பனைமரங்களும் செறிந்த தோப்புகளையுடையதாயிருந் தது. அந்த மரச்செறிவான தோப்புகளில்தான் பகீர்கள் நானூற்றுநால்வரும் ஜாகைபண்ணிக்கொண் டிருந்தார்கள்.

இது இப்படியாக மேலைநாகூர் பாழாய்ப்போயிற்று என்கிறசங்கதி தஞ்சாவூர் அரசனாகிய அச்சுதப்ப நாயக்கன் காதில் விழுந்தது. அந்நகர் திடீரென்று பாழாக நிமித்தம் என்னவென்று அவன் விசாரித்தபோது, தனக்கு நோய் தீர்த்த நாயகரவர்களின் சன்மார்க்கபோதனைகளை அவ்வூரார் அலட்சியஞ்செய்து, அவர்களையும் அவமதித்ததேயென்று அறிந்து, பின் ஆண்டவரவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று தன் ஆட்களைக்கேட்டான். கடற்கரையிலுள்ள தோப்புகளில் விடுதிபண்ணி யிருக்கின்றார்கள் என்று அவனுக்குச் செய்திகிடைத்தது. உடனே நாம் புறப் பட்டுப்போய் நாயகரவர்களைத் தரிசிக்கவேண்டுமென்று அவன்மனதில் எண்ணம் பிறந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்களைத் தரிசிக்கவேண்டுமென்ற எண்ணம் அச்சுதப்பநாயக்கனுக்கு உண்டானபோது, உடனே மந்திரி, பிரதானி, சேனாபதிமார்களிடம் தன் பிரயாணத்திற்கு வேண்டிய சர்வ எத்தனங்களும் செய்யும்படி கட்டளைபண்ணினான். அரசன் கட்டளைபிறந்தவுடன் பிரயாணத்திற்கு ஆகுமான சர்வ சாமான்களும் தயாராயின. சதுரங்க சேனையாகிய ஒரு சிறுபட்டாளமும் கூடப் புறப்பட்டது. பின்பு, அச்சுதப்பநாயக்கன் என்னும் தஞ்சை ராசன் தன் மந்திரிமார், பிரதானிமார், தளவாய்மார்களில் சிலரும், மேற்சொன்ன பட்டாளமும் உடன்வரத் தஞ்சாவூரைவிட்டுப் புறப்பட்டு மேலைநாகூரைநோக்கி வந்தான்.

அரசன் மேலைநாகூருக்குப்போய் அவ்வூர் பாழ்பட்டிருப்பதைப் பார்த்துக்கொண்டு, ஆண்டவரவர்கள் தங்கியிருக்கும் கடற்கரைக்கு வந்து, தன் சேனாதிகளையெல்லாம் கூடாரமிட்டிறங்கக் கட்டளை பண்ணிவிட்டு, கஜாரூடியாயிருந்தவன் கால்நடையாய் நடந்து, ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து சாஷ்டாங்கம் பண்ணி எழுந்துநின்று, வாய்பொத்திச் சொல்லுகின்றான் :—

எஜமானவர்களே, தாங்கள் இங்கேவந்து தங்கியிருக்கிறதாகத் தமியேன் கேள்விப்பட்டு, தங்கள் திருவடிகளைத் தரிசிக்க நாடிப் புறப்பட்டு வந்தேன். அடிமையாகிய எனக்கு எவராலும் செய்யக்கூடாத ஒரு பேருதவியைத் தாங்கள் செய்து, என்னைக் காப்பாற்றினீர்கள். அதற்குப் பிரதியாகத் தங்கள் மனதைச் சந்தோஷிப்பிக்கும் ஒன்றையும் நான் செய்யவில்லை. இப்போது தேவரீர் தமியேனுக்கு ஏதும் ஒரு கருமத்தைக் கட்டளைபண்ணுவீர்களென்று கருதித் தங்கள் திருவடிக்கீழ்த் தொண்டனாகி வந்து நிற்கின்றேன். தாங்கள் முன் தமியேன் மீது அன்புகூர்ந்து திருவாய்மலர்ந்து அருளினபடி, கொஞ்சம் பூமி



யாவது தங்கள் திருவடிக்குக் காணிக்கையாகக் கொடுக்க ஆசைப்படுகின்றேன். இப்போதே அதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மன்றாட்டத்துடன் சொன்னான். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் அரசனைப் பார்த்து : உன் இஷ்டப்படி செய் என்று சொல்லிவிட்டு, தாங்கள் தங்கியிருக்கும் தானத்திலேயே ஒரு இடத்தைக் குறித்துக்காட்டி இவ்விடத்தில்தான் நிலம் வேண்டும் என்று அறிவித்தார்கள்.

நிலங்கொடுக்க ஆண்டவரவர்களின் உத்தரவுபிறந்தவுடன் தஞ்சாவூர் அரசனாகிய அச்சுதப்ப நாயக்கன் மேலைநாகூருக்குக் கீழ்புறம் கடலருகில் சதுராகாரமான ஒரு துண்டு நிலத்தை அப்போதே எல்லைக்குறித்துக் கல்லுநட்டி, ஆண்டவரவர்களுக்குப் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்தான்.

[அந்த நிலத்தின் எல்லைக்குள்ளேதான் ஹலறத்து ஆண்டவரவர்களின் சிறந்த ஆலாமாகிய தர்காவும் அவர்கள் சந்ததிகளாகிய சாகிபுமார்களின்மனைகளும் அடங்கியிருக்கின்றன. அந்த நிலத்திற்கு எல்லையாவது :—நாகூர் சையிது பள்ளிக்குளத்துத் தென்மேற்கு மூலை தொடங்கிக் கிழக்கே பீரோடும்வீதி வழியாய்க் கடலருகுவரையுமுள்ள நெடும்வழிக்கு வடக்கும், நேரே தெருப்பள்ளித் தெருவழியாய்க் கடலருகுவரையுமுள்ள நெடும்வழிக்குத் தெற்கும், மேற்படி சையிதுபள்ளிக்குளத்து மேல்கரைக்குக் கிழக்கும், கடலருகுக்கு மேற்குமாம். இந்த நான்கெல்லைக்கும் உட்பட்ட நிலத்தைதான் * ஹவேலி என்பார்கள்.]

மேற்குறித்த தலத்தை ஹலறத்து ஆண்டவரவர்களுக்குத் தஞ்சைராசன் இனமாகக் கொடுத்தபின், தன்

* ஹவேலி என்பது சதுராகாரமான குடியிருப்புநிலத்திற்குப் பெயர். இதைக் இக்காலத்தில் ஐவேலி என்கிறார்கள். அப்படிச் சொன்னால் ஐந்துவேலியளவுகொண்ட நிலமென்று பொருள்படுமாதலால், அது பொருந்தாது. இந்த நிலம் சுமார் முப்பதுவேலியளவிருக்கும்.

ஊருக்குப் போக ஆண்டவரவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு பாதம்பணிந்து, தன்பரிவாரங்களுடன் புறப் பட்டுத் தஞ்சாவூரைச் சேர்ந்தான்.

பின்பு ஹலறத்து ஆண்டவரவர்கள் மேற்படி எல்லைக் குள் கடலுகிற்கு மேல்புறமுள்ள புன்னைத் தோப்பில் பனையோலை வேய்ந்த சிறுகுடிசைகள் பல சமைப்பித்துக் கொண்டு, தங்கள் மகனாருடன் வாசஞ் செய்தார்கள். பக்கீர் மார் நானூற்றுநால்வரும் அந்த இடத்திலேயே பலவிடங் களிலும் சாகைபண்ணிக்கொண்டு இருந்தார்கள். பக்கத் தில் மீன்பிடிகாரர் வசிக்கும் பட்டினச்சேரி ஒன்றுதவிர வேறே ஒரு குடியிருப்புமில்லை. மேல்புறத்தில், மேலை நாகூர் செழிப்பற்ற பட்டணமாயிருந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த இடத்தில் வந்து தங்கின ஆரம்பத்தில் அவர்களுக்கு வயது நாற்பது. மகனாராகிய சையிது முகம்மது யூசுபு சாகிபவர்களுக்கு வயது பனிரண்டு.

நாகூர் ஸ்தல ஸ்தாபனம் முற்றிற்று.

---

௮௬-ம் அத்தியாயம்.

## முதுபக்கு வெளியானது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களை நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் வந்துகண்டு, முதுபக்கை வெளியாக்கின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் முன்சொன்ன தானத்தில் தரிபட்டிருக்கும்போது, பங்காளக் குடாக்கடலிலுள்ள அந்துமான் சாதியார் வாசஞ்செய்யும் தீவுகளில் ஒன்றும், ஒற்றைக்கால் அந்துமான்கள் குடியிருப்பும், இரசக்கிணறுள்ளதும், * நபி சுலைமான் அலைகிஸ்ஸலா மவர்களின் கபுறிருப்பதுமான தீவைப்போய்ப் பார்க்கவேண்டு மென்றும், அங்கே வசிக்கும் அந்துமான்களை நேர்வழியிலாக்க வேண்டு மென்றும், அவர்களுக்கு எண்ணம் வந்தது. இந்த எண்ணமுண்டானபோது ஆண்டவரவர்கள் தங்கள் மகனார் முகம்மதுயூசுபு சாகிபவர்களை யழைத்து எல்லாக் காரியங்களையும் அவர்கள்வசம் சாட்டிவிட்டு, நாற்பது கராம்புகளும், ஒரு கரகத்தில் தண்ணீரும் எடுத்துக் கொண்டு கடற்கரையில் ஒரு தனித்த ‡ இடத்திற்போய்க் கல்வத்து இருந்தார்கள், நாற்பது நாள் வரையும் ஒரே படியாக அல்லாகுத்த ஆலாவின் நாட்டத்துடன் அவ்விடத்தில் கல்வத்திருக்கும்போது, ஒரு நாள் இரவு நபி கலிறு அலைகிஸ் ஸலாமவர்கள் ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்துநின்று :

---

* நபி சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்களின் கபுறு அந்துமான் தீவில் இருக்கிறதென்று காரணப் புராணந்தான் சொல்லுகின்றது.

‡ இந்த இடந்தான் இப்போது நாகூர்க் கடற்கரையிலுள்ள சில்லாவடி என்னும் தனிக்கட்டிடம். அது சில்லாடியென்று மருவிழங்குகின்றது.

அப்துல்காதிறே, நீர் அந்துமான்தீவுக்குப் போக அல்லாதந்த ஆலாவின் அநுமதியில்லை. அங்குள்ள பாக்கியமாகிய இரசக்கிணறு முதலானவை யனைத்தையும் இனி வரவிருக்கும் முகமதுமதநீக் கென்று அல்லாதந்த ஆலா வைத்திருக்கின்றான். அந்தத்தீவையும், அங்குள்ளவற்றையும் நீர் காண விரும்பினால், உமக்கு இங்கேயே காட்டும்படி அல்லாதந்த ஆலா எனக்குக் கட்டளைபண்ணினான். ஆகையால், நீர் அங்கேபோக நாடிய நாட்டத்தை விட்டுவிடுமென்று சொன்னார்கள். இதை ஆண்டவரவர்கள் கேட்டு: அப்படியானால், நான் அந்தத் தீவைப் பார்க்க விரும்புகின்றேன் என்று நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்களை நோக்கிச் சொன்னார்கள். உடனே நபியவர்கள் ஆண்டவரவர்களைப் பார்த்து: இதோ உமக்குமுன் பார்ப்பீராக என்றார்கள். இச் சொல்லைக் கேட்டபோது ஆண்டவரவர்கள் தங்களுக்கு முன்னாலே பார்த்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் பார்த்தபோது அந்த அந்துமான்தீவும், அங்குள்ள இரசக்கிணறும், நபி சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கள் கபுறும், அத்தீவின் வாசிகளாகிய அந்துமான்களும், அடர்ந்த வனங்களும், சஞ்சரிக்கும் விலங்கினங்களும், பறவைகளும், மற்றும் பொருள்களும் அவர்கள் கண்களுக்கு எதிரே பிரத்தியக்ஷமாய்த் தெரிந்தன. அவற்றை ஆண்டவரவர்கள் கண்ணாரக்கண்டு அல்லாதந்த ஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள்.

பிறகு, கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஹலறத்து ஆண்டவரவர்களைப் பார்த்து: அப்துல்காதிறே, நீர் மவுத்தாகும் வரையும் இங்கேயே யிருக்கும்படி அல்லாதந்த ஆலா உமக்குக் கட்டளைபண்ணினான் என்று சொல்லி, அவர்கள் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுவந்து: இது நீர் குடியிருக்கும் இடம்; இது நீர் எப்போதும் படுத்துறங்கும்



இடம்: இது நீர் மவுத்தாகும் இடம்; இது உம்மைக் குளிப்பாட்டும் இடம்; இது உம்மைத் தொழுவிக்கும் இடம்; இது உம்மை அடக்கும் இடம் என்று மேற்படி ஹவேலி நிலத்திற்குள்ளேயே சில இடங்களைத் தங்கள் கையினாற் குறித்துக் காட்டிவிட்டு, மறுபடியும் ஒரு இடத்தைக் காட்டி: அப்துல்காதிறே, இந்த மணன் மேட்டுக்குள் ஒருசதுர மண்டபம் இருக்கின்றது. அந்த மண்டபத்துக்குள் ஒரு கிணறிருக்கின்றது. அந்த மண்டபமும், கிணறும், பண்டைக் காலத்தில் மகாசக்கரவர்த்தியாயிருந்த சுல்தான் ஸ்கந்தர் துல்கறுனைன் அவர்களாற் கட்டப்பட்டவை. அந்தக்கிணற்று நீரைக்கொண்டு ஸ்கந்தர் துல்கறுனைன் அவர்களும், நானும் உலுசெய்து தொழுதிருக்கின்றோம். நீரும் அப்படியே செய்துகொண்டிரும். உலகமனைத்தையும் ஒரே குடைக்கீழ் ஆண்ட ஸ்கந்தர் துல்கறுனைன் அவர்கள் ஒரு காலத்தில் இந்தத் தலத்தில் விடுதியிட்டிருந்த படியால், இது மகிமைபெற்ற தலம். இதில் நீர் குடியிரும். உமது நிமித்தம் இந்தத்தலம், இனிப் பட்டணமாகும் என்று சொன்னார்கள். இச் சொற்களை ஆண்டவரவர்கள் கேட்டு, நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்களை நோக்கிக் கீழ் வருமாறு சொல்லுகின்றார்கள்:—

அல்லாதந்த ஆலா என்னை மவுத்தாகும் வரையும் இங்கேயே யிருக்கக் கட்டளை பண்ணினான் என்கின்றீர்கள். சரி; அதற்கு நான் கீழ்ப்படிந்தேன். ஆனால், எனக்கு ஒருவிதக்கவலை யுண்டாகுகின்றது. ஏனென்றால்;—இதற்குப் பக்கத்திலுள்ள ஊரார் என்னை இன்னான் மகன் இன்னான், இப்படிப்பட்டவன் என்று அறியாதவர்கள். என் காரியா காரியங்களைப் பற்றி அப்போதைக்கப்போது உசாவிக்கொள்ள என் சுற்றத்தாரில் ஒருவரும் இங்கில்லை. என்னோடு இருக்கின்றவர்களோ லௌகீகிகளல்ல; பகீர்கள்.

அறிமுகமில்லாதவர்களும், மார்க்கத்தைப் பேணிநடவாதவர்களும், மானமரியாதை யற்றவர்களும் வாசஞ்செய்யும் குடியிருப்புக்குப் பக்கத்தில் காலகாலமும் நான் இருக்க வேண்டுமென்றால், என் காரியங்கள் எவ்வாறு முடியுமோ! இது ஒன்றே எனக்குக் கவலையன்றி வேறில்லை. இதற்குத் தாங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்றார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் சொன்ன இந்தச் சொல்லை நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் கேட்டு, மறுபடியும் பார்த்து: அப்துல்காதிறே, நீர் ஒன்றிலும் கவலைப் படாதீர். கருங்கடற்கீழ்க் கருங்கல்லுக்குள்ளிருக்கும் தேரையையும் பரிபாலிக்கும் மகத்தான அல்லாகுத்த ஆலா உம்மைக் காப்பாற்ற என்றைக்கும் உம் இருதயத்தில் இருக்கின்றான். கொடிய துரோகிகள் செய்யும் எவ்விதத் தீங்கும் வெயிலைக்கண்ட இருளைப்போலப் பறக்கும். பல்லாயிரம் பேர் திரண்டு உம்மோடு பகைசாதிக்க வந்தாலும், அவர்கள் எல்லாரும் விளக்கின்முன் விட்டில் மடிவதுபோல உமக்கு முன் மடிந்து போவார்கள். உமது கீர்த்தியாகிய தீபம் யுக முடியும் வரையும் இங்கே நூராமல் பிரகாசித்துக் கொண்டிருக்கும். எவ்வளவு தூரந்தொலைவிலுள்ள குத்புகளும், ஒலிகளும், இராசாதி ராசர்களும் உம்மைத் தரிசிக்கவேண்டி இந்தத்தலத்திற்கு யுகமுடியுமளவும் வந்து கொண்டிருப்பார்கள். இம்மைப்பேறு மறுமைப் பேறுகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக எல்லா ராச்சியத்து மனிதர்களும் உம்மைநாடி இங்கே வருவார்கள். ஆதல் ஷெய்கே, உம்மைப்பற்றின ஒருவார்த்தைப்பாடு என்னிலுண்டு. அதாவது:—நான் எப்போதும் உம்முடன் இருக்கவேண்டு மென்பதுதான். நீர் அறபிராச்சிய முதலான பலராச்சியங்களையுஞ் சுற்றித் திரிந்தபோது நான் உம்மைப் பிரிந்திருக்கவில்லை. நீர் அங்கங்கே நடத்தின காரியங்களில் ஒன்றாவது நான் உடன்படாமல் நடக்கவில்லை. இமை கண்ணைக் காப்பதுபோல நான் உம்மைக் காத்து நிற்கின்றேன். உம்முடைய ஜீவியகாலத்து எல்லாக் காரியங்களையும் அல்லாகுத்த ஆலா என் கைவசத்தில் ஆக்கியிருக்கின்றான். அவன் என்னை என்றைக்கும் உம்மிடமிருக்கக் கட்டளை பண்ணிவிட்டான். இனி உமது சந்ததியாரின் காரியங்களும் என் கைவசமேயிருக்கும். ஆகையால், நீர் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை. சந்தோஷமாயிரும். நான் போய் வருகின்றேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். இவற்றைக்கேட்ட ஆண்டவரவர்கள் சந்தோஷமுற்றிருந்தார்கள்.



அதன்பின், ஆண்டவரவர்கள், ஜின்களை யழைத்து, கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் சுட்டிக்காட்டின மணல் மேட்டை வெட்டிச் சமதரை யாக்குவித்தார்கள். அங்கே நாற்புறமும் கூடமுள்ள ஒரு சதுரமண்டபமும், அதன் நடுமுற்றத்தில் ஒரு கிணறுமுண்டா யிருந்தன. ஆண்டவரவர்கள் அதைக்கண்டு களிகூர்ந்து, அந்தக்கிணற்றில் தண்ணீரள்ளி உளுசெய்து தொழுதார்கள். அன்றுமுதல் ஆண்டவரவர்கள் தங்கள் சாகையை அந்தமண்டபத்தில் வைத்துக்கொண்டார்கள்.

[அந்த மண்டபந்தான் தர்காவுக்கு வடகிழக்கு மூலையிலிருக்கும் மகத்துவமுள்ள முதுபக்கு என்னும் சதுராகார மண்டபம். அதன் மகிமை இப்படிப்பட்டதென்று இதனால் யாரும் நன்கறியலாம்.]

முதுபக்கு வெளியானது முற்றிற்று.

௮௫-ம் அத்தியாயம்.

## சித்திரகூடங் கண்டது

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்களுடன் இலங்கைக்குப்போய், அங்கிருக்கும் * சித்திரகூடத்தைத் தரிசித்துவந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீருன்சுல்தான் சையிது ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் ஆண்டவரவர்கள், பலநூற்றாண்டுகளுக்கு முன் சுல்தான் ஸிகந்தர் துல்கறுனைன் அவர்களால் கட்டுண்டு, மணலுள் மறைக்கப்பட்டிருந்த மகத்துவமுள்ள முதுபக்ரு என்னும் சிறந்த மண்டபத்தில் தங்கள் மகனாராகிய சையிது முகம்மது யூசுபு சாகிபுடன் வாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். பகீர்களாகிய தபோதனர்கள் நானூற்று நால்வரும் பக்கத்திலுள்ள புன்னைத்தோப்பில் இட்ட ஓலைக்குடிசைகளில் வசித்தார்கள். பக்கத்திலுள்ள பட்டினச்சேரியொன்றே மனிதர்குடியிருப்பாயிருந்தது. தென்புறம் சற்றுத் தூரத்தில் நாகபட்டினமிருந்தது. மேல்புறமுள்ள மேலைநாகூர் பாழ்ம்பட்டினமாய், நிலைமைமாறியிருந்தது. வடபுறம் கொஞ்சந்தூரம் சமவெளியாயிருந்தது. கீழ்புறம் கருங்கடல் ஒலித்துக்கொண்டிருந்தது. இவ்வித நிலைபரத்தில் ஆண்டவரவர்கள் தங்கியிருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் இவ்வாறு இருக்குங் காலத்தில் ஒருநாள் இரவில் இஷாதொழுதபின், நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள்வந்து, ஆண்டவரவர்களைப்பார்த்து: அப்துல்காதிரே, சிலோன்தீவு என்கிற இலங்கையில் ஸிகந்தர் துல்கறுனைனவர்கள் கட்டின அலங்காரமாளிகையொன்று உண்டு. அதை நீர்போய்ப் பார்க்கவேண்டும். இப்போது உம்மை அங்கே அழைத்துப் போய், அதைக் காட்டும்படி அல்லாதுந்த ஆலா கட்டளைபண்ணினன். ஆகையால், அங்கேபோக எழுந்திரும் என்றார்கள். இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் ஆநந்தமடைந்து, உடனே எழுந்து கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் கூட நடந்தார்கள்.

இருவரும் மரக்கல முதலியனவின்றி அற்புதகரமாகக் கடலைக்கடந்து இலங்கை சேர்ந்து, அங்குள்ள தருக்கள் அடர்ந்த அகன்ற வனங்களையும், மலைத்தொடர்களையும் கடந்து போனார்கள். போகையில், அவர்களுக்கு எதிரே வான முகடுவரையும் அளாவி ஜொலிக்கும் பிரகாசமொன்றுண்டாய், ஆண்டவரவர்களின் கண்களுக்குத் தெரிந்தது. அந்தப்பிரகாசமானது அங்குள்ள விசித்திரமான உன்னதமாளிகையிலிருந்து எழுந்து எறிக்கும் பிரகாசமாயிருந்தது. சற்றே போகப்போக அந்த அலங்காரமாளிகை தோன்றிற்று. அதன் சிகரம் அதிக உன்னதமாகவும், அநேக தங்கக் கலசங்களை யுடையதாகவும் இருந்தது. அதன் சுற்றுமதில் பசும்பொன்னாலிருந்தது. அந்தமாளிகையின் சிறப்பையும், அலங்காரத்தையும் வருணிக்க யாராலும் ஏலாது.

இருவரும் அந்தமாளிகையை நெருங்கினபோது, அதன் பக்கத்தில் மாணிக்க நதி ஓடக்கண்டார்கள். அந்நதியின் மணலும், கற்களும், பெரும்பாலும் மாணிக்கமும், மற்ற ரத்தினங்களுமாகவே யிருந்தன. அதன் இருகரையிலும் பவளக்கொடிபடர்ந்து ஜொலித்துக்கொண்டிருந்தது. அந்த நதியின் சிறப்பை வருணிக்க எவருக்கும் இயலாதிராது. இருவரும் அந்த நதியை அடுத்தபோது, கலிறு அலைகிஸ்ஸலாமவர்களின் உத்தரவின்படி ஆண்டவரவர்கள் அதில் இறங்கி நீராடினார்கள்.

* இந்தச்சித்திரகூடம் இலங்கையின் மத்திமபாகத்தில் அடர்ந்த வனத்திலிருக்கின்றது. இதைத்தான் ஆதம்மலை என்கின்றார்கள். இப்போது இது காடுகளடர்ந்த மலைச்செறிக்குள் அடங்கினதாய், சாமானியசனங்கள் உள்ளேபோவதற்கு அரிதாய், வெகு ஆச்சரியகரமுள்ளதாயிருந்து, அங்கே போகிறவர்களால் காணப்படுகின்றது.

நீராடிக் கரையேறினபின் கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஹலறத்து ஆண்டவரவர்களை யழைத்துப்போய் அந்த மாளிகையைச் சுற்றியுள்ள திவ்வியத்தானங்கள் ஒவ்வொன்றையுங்காட்டிக்கொண்டு, பின்பு மாளிகைக்குட் புகுந்தார்கள். அந்த மாளிகைக்குள் ரத்தினம்பதித்த பொற்சுவர்களாலான பலகூடங்களும், அளவற்ற அறைவீடுகளும் உண்டாயிருந்தன. சூரியனைப்போலவும், சந்திரனைப் போலவும், ஒருபுறம் வெயிலையும், ஒருபுறம் நிலவையும் எறிக்கின்ற எண்ணிறந்த பளிங்குத்தீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. நாசி வெடிபடத்தக்க நறுமணவாடை அங்கே கமகமவென்று கமழ்ந்தது. அங்குள்ள பளிங்குத் தூண்கள் பலவித ரத்தினக் கதிர்பாய்தலால் பலநிறங் கொண்டு தோற்றுங் காட்சி, கண்களுக்கு வெகு இனிமையாயிருந்தது. சித்திரகூடம் என்னும் அந்த மாளிகையின் வருணனைகளை மட்டுப்படுத்திச் சொல்ல மனிதரால் கூடாததே.

சுல்தான் ஸ்கந்தர் துல்கறுனைல் அவர்களால் பண்டு கட்டப்பட்ட அந்த அலங்காரமுள்ள சிங்காரச் சித்திர கூடத்தில் இருவரும் நுழைந்தவுடன், கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஆண்டவரவர்களைப் பார்த்து: அல்லாகுத்த ஆலாவை இரண்டு றக் அத்துத் தொழுவீராக என்று ஏவினார்கள். உடனே ஆண்டவரவர்கள் அங்கே தொழுதார்கள். தொழுது தீர்ந்தபின் கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஆண்டவரவர்களை யழைத்துக்கொண்டு போய் அந்த மாளிகைக்குள் காட்ட வேண்டியவைகளையெல்லாம் காட்டி, அங்கங்கே செய்ய வேண்டிய கிரியைகளையும் செய்வித்து, பின் ஒரு அறைக்குள் புகுந்தார்கள். அங்கே ஒரு ரத்தினபீடத்தின்மீது சந்தனக்குழம்பு நிரம்பிய தங்கக்கிண்ணமொன்று வைக்கப்பட்டிருந்தது.



கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஆண்டவரவர்களைப் பார்த்து: அப்துல்காதிரே, இந்தச்சந்தனக் குழம்பில் உமது வலதுகையைத் தோய்த்துக்கொள்ளும் என்று ஏவினார்கள். அப்படியே ஆண்டவரவர்கள் தங்கள் சிறப்பான வலது கையை அந்தக் குழம்பில் தோய்த்துக்கொண்டு நின்றார்கள். பின்பு கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஆண்டவரவர்களை ஒரு கூடத்திற்கு அழைத்துப்போய், அதன் சுவரில் ஏற்கெனவே அடித்திருக்கும் பல சந்தனக்கை அடையாளங்களையுங் காட்டி, இது இது இன்னார் இன்னார் கைக்குறியென்று தெரிவித்து, எல்லார்கைக்கும் மேலேயிருந்த மற்றொருகையைக் குறித்துக் காட்டி: அப்துல்காதிரே, இது உமது பாட்டனார் சையிது முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானியவர்களுடைய கைக்குறி. நீரும் உமது கையின் குறியை இவைகளுடன் வையும் என்று ஏவினார்கள். உடனே ஆண்டவரவர்கள் சந்தோஷங்கொண்டு, சந்தனந் தோய்த்த தங்கள் வலதுகையை ஓங்கி அந்தச் சுவரில் அறைந்தார்கள். ஹலறத்து ஆண்டவரவர்களின் கைக்குறி அங்குள்ள எல்லார் கைக்குறிகளுக்குமேலும், ஹலறத்து சையிது முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்களின் கைக்குறிக்குக் கீழுமாக வைக்கப்பட்டது.

சந்தனக்கை வைத்த அந்த நேரத்தில் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு குத்பு பட்டம் சூட்டப்பட்டது. "அப்துல்காதிரே, உலகமனைத்தையும் நிலைகுலையாமல் காக்கும் அதிகாரமுள்ள குத்பு பட்டம் இன்றைத்தினம் உமக்குக் கொடுக்கப்பட்டு நிரப்பமாயிற்று" என்று அல்லாகுத்த ஆலாவின் புறத்திலிருந்து ஒரு அசரீரியான சத்தம் கேட்டது. இதைக்கேட்டு ஆண்டவரவர்கள் ஆனந்தக்கடலில் மூழ்கிப் பரவசமாய் நின்றார்கள். அப்போது கலிறு அலைகிஸ்ஸலாமவர்களும் ஆண்டவரவர்களை ஆசீர்வதித்தார்கள். அங்கே பெறவேண்டிய வரிசை

களையெல்லாம் ஆண்டவரவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

பிறகு இருவரும் அந்தமாளிகையைவிட்டு வெளியில் வந்தார்கள். வந்தவுடன் கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் பின்னும் மாளிகைக்குள்ளே போய், ஒரு இரும்புச் சங்கிலியைக் கையிற் பிடித்துக்கொண்டு வந்து: அப்துல்காதிறே, இது இந்த மாளிகையில் தொங்கினசங்கிலி. இதனை ஸ்கந்தர் துல்கறுனைன் அவர்களுக்கு அல்லாகுத்த ஆலா கொடுத்தான். இது ஆதியில் அறுபதுமுழ நீளமுள்ளதாயிருந்தது. இப்போது இதை உமக்குக் கொடுக்கும்படி அல்லாகுத்த ஆலா ஏவினான் என்று சொல்லிக்காட்டி ஆண்டவரவர்கள் கையில் கொடுத்தார்கள் அது நான்கு கரணைகளையுடையதாயிருந்தது. அந்தச்சங்கிலியை ஆண்டவரவர்கள் வாங்கிக்கொண்டு, அங்கிருந்து வந்தார்கள். கலிறு அலைகிஸ்ஸாமவர்களும் கூடவே வந்து, ஆண்டவரவர்களைக் கடற்கரையில் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். ஆண்டவரவர்கள் கடற்கரையிலிருந்து முதுபக்கில் வந்து சேர்ந்தார்கள். அப்போது வைகறைவேளையாய்க் கோழி கூவிற்று.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மேற்படிச் சங்கிலியை வெகுநாள்வரையும் தாங்களே வைத்திருந்து, பின்பு மகனாகிய சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள்கையில் கொடுத்து, அதன் வரலாற்றையும் சொல்லிக்காட்டி: மகனே, இது ஆதியில் அறுபதுமுழ அளவுகொண்டது. காலத்திற்குக்காலம் சுருங்குகின்றது. இதற்குள்ள கரணைகள் நான்குதான். கரணைகுறையாமல் நீளமே குறைந்துகொண்டுவரும். இன்னும் காலம் போகப்போகக் கரணைகளுக்கிடையிலுள்ள தொடர்கள் சுருங்கி, இனி கியாமத்து முடிகினவுடன் கரணைகள் நான்கும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும். அது கியாமத்து ஆகிறதற்கு



அடையாளமாயிருக்கும் என்று அதன் மகத்துவத்தையும் தெரிவித்தார்கள்.

[அந்தச் சங்கிலிதான் இப்போது ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபு ஆண்டவரவர்களின் திவ்விய வாசலின் முன்மண்டபத்து நடுவிற் கொளுவப்பட்டுத் தொங்குகின்றது. இந்தச் சங்கிலி ஹலறத்து ஆண்டவரவர்களுக்குக் கிடைத்து அங்கேமாட்டும்போது, இதனிலும் நீளமாகவே யிருந்தது. வரவரக்குறுகி இப்போது இம்மட்டிலாயிருக்கின்றது. பல வருஷங்களுக்கு முன் ஒரு நெட்டைமனிதன் எட்டிப்பிடிக்கும் அளவில் தொங்கக் கண்டதாக இப்போதுமுள்ள வயது முதிர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். இவ்வித அடையாளம் கையுமெய்யுமாய்ப் பலரறிய இருக்கும் நாகூரின்மகத்துவத்தை யாரால் அளவிடக்கூடும்.]

சித்திரகூடங் கண்டது முற்றிற்று.

---

௮௬ - ம் அத்தியாயம்.

## பற்கொம்பு தளிர்த்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களால் மிசுவாக்கென்னும் பற்கொம்பு தளிர்த்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

குத்புல் ஆலம் ஹலறத்து அப்துல்காதிறு மீறான் சுல்தான் ஆண்டவரவர்கள் முதுபக்கில் தங்கள் கூட்டத்தாருடன் இருக்குங்காலத்தில், சிந்து நாட்டிலுள்ள ஒரு இஸ்லாமானவர் தாம் ஒரு தக்க உஸ்தாதைத் தேடிப்பிடித்து அவர்களிடம் முரீதாய் ஈடேறவேண்டுமென்று தம்மூரைவிட்டு வடக்கே வெகுதூரம் வரையும் பிரயாணம் பண்ணி, ஊரூராய்த் தேடினார். அவர் மனம்போல ஒருவருங் கிடைக்கவில்லை. பின் துருக்கிஸ்தானுக்குப் போய், அங்கும் தேடினார். அங்கேயும் ஒருவரும் புலப்படவில்லை. பின், காடுகள், மலைகள் எங்குஞ் சுற்றினார்; அவர் மனதிற்கு இதமான ஒரு மெய்க்குரு ஓரிடத்திலும் அவருக்குக் கிட்டவில்லை. ஸமர்க்கந்து நகரத்து அடர்ந்தவனத்தில் அவர்

வரும்போது, தந்தசுத்தி செய்வதற்காக ஒரு மரத்தில் சிறிய குற்றியொன்றை உடைத்து, இது காய்ந்து போனாலும் இதை இனித் தளிர்க்கச் செய்கிறவர் எவரோ அவர் தாம் எனக்கு ஆசான்; அவரிடந்தான் நான் தீக்ஷைபெறுவேன் என்று ஒரே கடைப்பிடியாக மனதில் தரிபடுத்தி, அந்தக் குற்றியைத் தமது சோளணுப்பைக்குள் வைத்துக் கொண்டு, அங்கிருந்து தென்திசை நோக்கிப் பின்னுந் தேடிக்கொண்டே வந்தார். அப்போதும் ஒருவராவது அவர் எண்ணப்படி வாய்க்கவில்லை.

பரிசுத்த ஆசானைத்தேடி வட இந்தியா முழுதுஞ் சுற்றின அவர், தென்னிந்தியாவுக்கு வந்தார். இங்கே வந்து பல பாகங்களிலும் தேடித் திரியும்போது, தஞ்சாவூர் எல்லையின் கீழ்ப்பாகத்துக் கடற்கரையில் ஸையிது அப்துல் காதிறு ஷாகுல்ஹமீது என்னும் திருநாமத்தையுடைய தூய ஒருவர் இருக்கின்றார்கள் என்கிற சமாசாரம் அவர் காதில் விழுந்தது. இதைக் கேள்விப்பட்டவர், நாம் எத்தனை ராச்சியங்களையோ சுற்றித் திரிந்தோம். நம் கருத்திற்கு இசைந்தார் ஒருவருமில்லை. இப்போது கேள்விப்படுகிறவர்களைக் கொண்டு நம் எண்ணம் நிறைவேறுமோ? என்னவோ? எதற்கும் போயறிவோம் என்று எண்ணிக் கொண்டு, நேராகவே ஹலறத்து ஆண்டவரவர்கள் இருக்கும் தலத்திற்கு வந்து, ஆண்டவரவர்களின் சமுகத்திற் போய் ஸலாம் சொல்லி, வேறொன்றும் பேசாமல் கைகட்டி நின்றார்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் முன் வந்து பணிந்து நிற்கும் அவரை ஏறிட்டுப்பார்த்து: தக்க ஆசானைத் தேடி ஊரூராய்த் திரிந்தும் பலிக்காமல், இப்போது இங்கேயும் சந்தேகத்துடன் வந்தமனிதனே, உன் சோளணுவிலிருக்கிற பற்கொம்பை வெளியிலெடு என்றார்கள். இதைக்கேட்ட அவர் பிரமித்து, தாம் மனதில் மாத்



திரம் நினைத்துப் பிறரறியா வண்ணம் ஒடித்து மறைத்து வைத்திருந்த பற்கொம்பைக் கண்டு பிடித்த இவர்களே மகான்: இவர்களைக் கொண்டே நம் எண்ணம் கைகூடும் என்று எண்ணி, அஞ்சி நடுநடுங்கி, தம் சோளணுவுக்குள் வைத்திருந்த பற்கொம்பை யெடுத்து ஆண்டவரவர்களுக்கு முன்வைத்தார். அதை ஆண்டவரவர்கள் எடுத்துக்கொண்டு வெளியில் வந்து, ஒரு பக்கத்தில் தங்கள் கையால் நிலத்தில் நட்டி, தண்ணீர் கொண்டுவரச் சொல்லி அதில் வழிந்தோடும்படி பக்கத்திலிருந்து உளுசெய்து, மீதி நீரையும் அந்தக் குற்றிமேல் தெளித்து, அந்தக்கரகத்தைக் கவிழ்த்து அதை மூடிவிட்டு, அவரைப்பார்த்து: ஏ மனிதனே, இந்தக் கரகத்தின்மேல் உன் தலையைவைத்து இன்றிரவைக்கு நீ படுத்திரு; தலையை நகர்த்தாமற் படுத்திரு. அதிகாலையில் எழுந்து கரகத்தையெடுத்துப் பார்: அல்லாகுத்த ஆலாவின் மகத்துவம் வெளிப்படும் என்று சொல்லிக் கட்டளை யிட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் கட்டளைப்படியே அவர் அன்றிரா முழுதும் படுத்திருந்து அதிகாலையில் எழுந்து கரகத்தை நீக்கிப்பார்த்தார். காய்ந்துலர்ந்த அந்தப் பற்கொம்பு பசுமைகொண்டு, மூன்று பணரிட்டு, மூன்று கவருள்ள இலைகள் தழைத்துப் பச்சென்றிருந்தது. அதைக் கண்டபோது அவருக்கு உண்டான ஆச்சரியம் கொஞ்சமல்ல. தம் காரியம் நிறைவேறுமென்று ஆநந்தபரவசமடைந்து, உடனே ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து தாழ்ந்து நின்று: எஜமானவர்களே, தமியேனை முரீதாக்கி உபதேசியுங்கள் என்று மன்றாடினார். அப்போது ஆண்டவரவர்கள் மனமகிழ்வுடன் அவரை முரீதாக்கி, தீக்ஷை கொடுத்தார்கள். வெகு காலத்து நாட்டம் அவருக்கு நிறைவேறிற்று.

[ஹலறத்து ஆண்டவரவர்களின் இருக்காத்தினால் நட்டப்பட்டுத் தளிர்த்த அந்தக்குற்றி பின்பு நாட்குநாள் வளர்ந்தோங்கி, பெரிய ஒரு விருக்ஷமாயிற்று. அவ்விருக்ஷம் நாகூர் தர்காவின் கிழக்குப் பூந்தோட்டத்தில் வெகுகாலம் வரையும் நின்றது. அது இன்னசாதி மரமென்று அறியப்படாம லிருந்தபடியால், அதற்குப் பேரில்லா மரம் என்று நாமமிட்டு எல்லாரும் வழங்கிவந்தார்கள். அந்த மரத்தின் பட்டையும், அதில்நின்று உதிர்கிற ஒவ்வொரு சருகும், மனிதர்களின் எவ்விதப் பிணியையுந் தீர்க்கிற அருமருந்தாயிருந்தன. அவற்றைக்கொண்டு அளவற்ற வியாதிகாரர் சுகப்பட்டு வந்தார்கள். சர்வ ரோக சங்காரியாயிருந்த அந்தக் காரணவிருக்ஷம் இன்றைக்குச் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னேதான் அடியற்றுப் பட்டுப் போயிற்று.]

பற்கோம்பு தளிர்த்தது முற்றிற்று.

---

௮௭-ம் அத்தியாயம்.

## திருமணம் பேசினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் மகனார் சையிது முகம்மது யூசுபு சாகிபவர்களுக்குப் பெண் பேசின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது கன்ஜுஸவாய் பாக்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் ஒருநாளிரவு தங்கள் அருமைக் குமாரரான சையிது முகம்மது யூசுபு சாகிபவர்களை அருகழைத்து: மகனே; தகுந்த பெண்ணைத்தேடி உமக்கு விவாகஞ் செய்விக்க நான் ஆசைப்படுகின்றேன் என்று சொன்னார்கள். இச்சொல்லைக் கேட்ட மகனாரவர்கள் தங்கள் காரியத்தைப்பற்றி ஆலோசனை பண்ணி, அதற்கு உடன்படாதவர்களாகத் தகப்பனாரவர்களை நோக்கிச் சொல்லுகிறார்கள்:— என் தகப்பனாரவர்களே, எனக்கு விவாகஞ் செய்விக்கத் தாங்கள் ஆசைப்படுவது நியாயந்தான். ஆனால் நாமோ உலகத்தை முழுதும் வெறுத்த பகீர்களா யிருக்



கின்றோம். இம்மையின் வாழ்க்கையை விரும்பி ஒரு பெண்ணை விவாகஞ் செய்வதானால், இடம், பொருள், ஏவல் என்னும் தக்க சாதனங்கள் அவசியம் வேண்டுமல்லவா? அந்தச் சாதனங்கள் அறவேயில்லாத நாம், பின் அவற்றை வருந்தித்தேடவல்லவா முயலவேண்டிவரும்? அப்போது அல்லாஹுத்த ஆலாவின் பராக்கில் சற்றே குறைவுண்டாக, உலகப்பராக்கிலுமல்லவா பொழுதுகழிக்க நேரிடும்? ஆகவே, துன்யாவை வெறுத்துத் தரித்திரத்தையே பெருமையென்று கொண்டிருக்கும் எளியோர்களுக்கு இல்வாழ்க்கை எப்படி யிதப்படும்? நாமோ இரவுக்குக் கொளுத்திவைக்கும் விளக்குக்கும் வகையற்ற நாம் நமக்கு விவாகமென்றால் எவ்வாறு பொருந்தும். எனக்கு அவ்விஷயத்தைப்பற்றி யுண்டான சிந்தனையில், நமது நிலைபரம் முன்னுக்கு வந்து தடைபண்ணுகின்றது என்று தாழ்மையுடன் சொன்னார்கள்.

இதைக்கேட்ட ஆண்டவரவர்கள் பின்னும் மகனாரைப் பார்த்து: மகனே, நான் சொல்லும் காரியத்தில் நீர் அதிக தூரம் மனதைச் செலுத்தி ஆழ்ந்து ஆலோசிக்கவேண்டாம். அப்படி ஆலோசித்தால், அநேக விபரீத எண்ணங்கள் பிறக்கும். அவ்வெண்ணங்கள் பின்னும் பின்னும் சிந்தனைக்கே இடந்தரும். ஆகையால்; நீர் அவ்வாறு கவனித்து மனஞ்சலிக்காதீர். விவாகம் பண்ணுதல் ஒரு வீண்காரியமல்ல; அது மேலான காரியம். "இனி கியாமத்து நாள் வரும்வரையில் உலகத்திலுள்ள இராசாக்களாதி எளியோர் வரையுமுள்ள எல்லாரும் உமக்கென்று கொணர்ந்து சமர்ப்பிக்கும் எல்லாப் பொருள்களையும் உம்மில் நின்று உண்டாகிற சந்ததியார் கைக்கொண்டு அநுபவிப்பார்கள்" என்று அல்லாஹுத்த ஆலா எனக்கு உறுதிகூறியிருக்கின்றான். அந்தச் சொற்படி, இனிமேல் எனக்குவரும் பொருள்களை அநுபவிப்பவர் யார்? என்சந்ததிகள் என்பது எப்படி?

என்று கவனித்துப் பார்க்கும்போது, அவர்கள் உம்மில் நின்று உண்டாகப்போகிற சந்ததிகளைத் தவிர மற்றவர்களல்ல. உம்மையன்றி எனக்கு வேறேமகன் இல்லையென்பதை நீர் நன்றுயறிவீரல்லவா? உமது முதுகில் ஆறு ஆண் மக்களும், இரண்டு பெண்மக்களும் உண்டு. அம்மக்கள் வெளிப்படவேண்டுமல்லவா? அதற்கு முக்கியகருவி விவாகந்தான். விவாகஞ் செய்வதானால், பொருள் முதலியவை வேண்டுமேயென்று மலைக்காநீர். சர்வஜீவராசிகளையும் படைத்து ஆள்கின்றவன் மகத்தானவன். அவன் அளவற்ற பாக்கியத்தை உமக்குக் கொடுக்கத் திராணியுள்ளவன். எனக்கென்று ஜனங்களைக்கொண்டு காணிக்கைப் பொருள்களைக் கொணர்ந்து குவிக்கப் பண்ணுவான். அவைகள் உமக்கும், உமது சந்ததிகளுக்குமே சொந்தம். ஆகையால், பொருள் வேண்டுமே யென்று நீர் ஏன் மலைக்கின்றீர்? நீரும் உமது பின்சந்ததிகளும் உலகத்தில் குறைவற்று வாழ்ந்திருக்க நான் அல்லாஹுத்த ஆலா இடம் கையேந்தி இரந்தமணியமா யிருப்பேன். இனிக் காலகாலமும் உமது சந்ததியார் உண்ண உடுக்க முட்டுப் படாமல் வாழ்வார்கள். அதற்குச் சந்தேகமேயில்லை. ஆகையால், மகனே, நீர் ஆலோசிக்காமல் என் விருப்பத்திற்கு உடன்படும் என்று சொல்லி, இன்னும் பல தலீல் ஹதீதுகளைக் கொண்டும் அவர்கள் மனதைத் தேற்றினார்கள்.

தகப்பனாரவர்கள் சொன்ன இந்த உத்தம வாக்கியங்களை ஹலறத்து சையிது முகம்மது புக்காரியவர்கள் கேட்டுச் சந்தோஷமாய், அதற்கு உடன்பட்டார்கள். மறுத்து நின்ற மகனார் உடன்பட்டது அல்லாஹுத்த ஆலா கொடுத்த வார்த்தைப்பாடு இனி நடப்பதற்குக் காரணமே யென்று ஆண்டவரவர்கள் களிகூர்ந்து அல்லாஹுத்த ஆலாவைப் புகழ்ந்து சுக்று செய்தார்கள்.



அதன்பின், ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு வெள்ளிக்கிழமை குத்பாவின் பிறகு முதுபக்கிலிருந்து புறப்பட்டு, மேலைநாகூர் வீதிவழியே சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். வரும்போது, அவ்விடத்திலுள்ள ஒரு* குளத்தில் ரூபலாவண்யமுள்ள ரம்பைகளுக்குச் சமானமான இரண்டு இளங்கன்னிப் பெண்கள் நீராடிக்கொண்டிருப்பதைக் கண்டு, இப்பெண்களுள் மூத்தபெண்ணை நமது மைந்தராகிய முகம்மதுயூசுபுக்குக் கலியாணம் செய்வித்தால், மிக நலமாயிருக்கும். இப்பெண்ணின் பிதா அதற்கு உடன்படவேண்டும். அவர் உடன்படும் பக்ஷத்தில் வேறுதடையின்றி நம் மகனுக்கே இப்பெண்ணை மணமுடிக்கலாம் என்று தங்கள் இருதயத்தில் நினைத்துக்கொண்டு, அங்கே போவோர்களைக் கூப்பிட்டு: இவ் விருபெண்களும் யார்பெற்ற மக்கள்? அவர் எங்கிருக்கின்றார்? அவருடைய வரலாறுகள் என்ன? என்று விசாரித்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்ட கேள்விக்கு அவர்கள்: இப்பெண்களின் தந்தை †குவாஜா மகுதூம். இந்த ஊரில்தான் குடியிருக்கிறார். அவர் ஜனனதேசம் இதுவல்ல; அறபி ராச்சியத்து எமன்பகுதி. அங்கிருந்து வர்த்தகத்தின் பொருட்டே இங்கு வந்திருக்கின்றார். பெரிய வர்த்தகர். இரண்டு மரக்கலங்கள் அவருக்குச் சொந்தமாயிருக்கின்றன. அவர் சையிது வமிசத்திலுள்ளவர். இப்

* இந்தக் குளம்குவாஜா மகுதூமவர்களுக்கே சொந்தமானது. இது இப்போதும் நாகூர்த் தமிழர் பகுதியில் இருக்கின்றது. இக் குளத்திற்கு இன்றைக்கும் [குவாஜாகுளம்] கோசாகுளம் என்றே பெயர் வழங்குகின்றது.

† இவர்களுக்குச் சுயதேசத்திலும் மனைவிமக்களுண்டு. பிற்காலத்தில் அந்த வமிசத்தார் இங்குவந்து, ராகிடுமார்களின் பெண்களை விவாகஞ் செய்திருந்தார்கள்.

பெண்களுள் மூத்தபெண்ணின் பெயர் ஜுஹுறாபீவி; இளைய பெண் பெயர் சுல்தான்பீவி, இவ்விரு பெண்களையும் அவர் தமது இரு கண்மணிபோல வளர்க்கின்றார் என்று விடை கொடுத்தார்கள்.

இச்சொல்லை ஆண்டவரவர்கள் கேட்டுச் சந்தோஷமுற்று, அங்கிருந்து பலவீதிகளையுங் கடந்து சையிது துவாஜாமதுதாமவர்கள் வாழும் மனைவாசலிற் போய், இவ்வீட்டுக்காரர் எங்கேயென்று வினவினார்கள். அப்போது அவர்கள் அங்கில்லை. வீட்டிலுள்ளவர்கள்: அவர்கள் பண்டசாலைக்குப் போயிருக்கின்றார்கள் என்று விடை பகர்ந்தார்கள். அப்போது ஆண்டவரவர்கள்: நல்லது; அவர் வந்தவுடன் நான் இங்குவந்தேனென்றும், என் சாகைக்கு ஒரு சங்கதியின் பொருட்டு வரச்சொன்னேனென்றுஞ் சொல்லுங்களென்று சொல்லிவிட்டு, தங்கள் இருப்பிடத்திற்கு மீண்டார்கள்.

அதன்பின், சற்றுநேரஞ் சென்றபிறகு சையிது துவாஜாமதுதாம் பண்டசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தார்கள். வந்தவுடன் வீட்டிலுள்ளவர்கள் ஹலறத்து ஆண்டவரவர்கள் அங்கு வந்ததும், தங்கள் சாகைக்கு வரும்படி சொல்லச் சொன்னதும் அவர்களிடம் சொன்னார்கள்.

இதைக்கேட்டவுடன் சையிது துவாஜாமதுதாம் அங்குள்ளவர்களைப் பார்த்து: கேட்டீர்களா! சையிது அப்துல் காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் இங்கே வந்ததும், ஒரு சங்கதிக்காக என்னை அவர்கள் சாகைக்கு வரச்சொன்னதும் இன்னதென்று நான் அறியேன். காற்றைக்கொண்டு கடலில் ஓடும் கப்பலும், கயிற்றைக்கொண்டு தரையில் ஓடும் தேரும் தன்தன் இடமாறினால் வீணிற்கிடக்கு மன்றி, காரியப்படாது. இவ்வகையான ஒரு கருமத்தை நாடித்



தான் அவர்கள் இங்கேவந்தார்கள். தரித்திரத்திற் சிக்கிச் சஞ்சலத்துடன் நாட்கழிக்கும் எளிய பகீராகிய அவர்கள் மகனுக்கு, பாக்கியவானாகிய என் செல்வமகளை மணமுடிக்க வேண்டியே தேடிவந்தார்கள். அப்படி முடிக்க ஒன்றுக்கொன்று ஒவ்வுமா! தாட்சண்ணியம் பார்த்து நாம்தாம் ஒப்பிக் கொடுத்திட்டாலும், அளவற்ற பாக்கியத்திற் பிறந்து வளர்ந்த இந்தப்பெண் அந்த எளிய பகீருடனிருந்து எவ்விதம் வாழும்? ஏழைகளுக்குப் பலவிதப் பேராசைகள் உண்டு; ஒன்றும் கைகூடாது. சீமான்களுக்கோ அப்படியல்ல; நினைத்ததைச் செய்யக்கூடும். உயர்ந்த பட்டாடைகளையுடுத்தி, ரத்தினாபரணங்களைப்பூண்டு, உயர்ந்த பலவித இனியபோசனாதிகளையுண்டு தின்று உல்லாசமாயிருக்கும் என் அருமைமகள், பகீருக்கு வாழ்க்கைப்பட்டு, வறுமையிற்கிடந்து உழன்று, பொன்னனமேனி வாடிப் புண்ணான மனத்துடன் காலங்கழிப்பது சரியா? உலக வழக்கப்படி என் கையைப் பார்க்கிற ஏழையிடத்தில் என் மகள் போய்க் கீழ்ப்படிந்து அவர்கையைப் பார்த்திருக்க நான் இடம் வைத்தால், எனக்குத்தான் என்ன மகிமை! என் மகளுக்குத்தான் என்ன பெருமை! என்று தமது பணச்செருக்கினால் இவ்விதம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இது இவ்வாறாக, ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் சாகையிற்போய் ஒரு ஆளையழைத்து: நீர் துவாஜாமதுதாமிடம்போய், அவர் மூத்த மகளை என் மகனுக்குப் பேசி முடிவு பண்ணிக்கொண்டு வாரும் என்று அனுப்பினார்கள். அந்தத் தூதாள் சையிது துவாஜாமதுதாமவர்கள் மேற்சொன்னபடி வீட்டிலிருந்து பேசிக்கொண்டிருக்கும்போது வந்து: ஹலறத்து ஆண்டவரவர்களுடைய மகனாருக்குத் தங்கள் மகளை மணம்பேச வந்தேன் என்று சொன்னார். இதைக்கேட்ட துவாஜாமதுதாமவர்கள் அந்தத் தூதரைப்

பார்த்து: உன்னை உடுத்த வகையற்ற எளிய பகீர் தமது ஊழியத்திற்காகச் சுவிகாரங் கொண்ட மகனுக்கு அமீராகிய என் மகள் பாரியாயிருப்பது சரிப்படாது. சூரியனுடன் சந்திரனை வைத்துப்பார்த்தால், ஒன்றுக்கொன்று நிகராகுமா? என் செல்வப் புதல்வியை அந்த ஏழை மகனுக்கு எப்படிக் கொடுக்கக்கூடும்? என்று இறுமாப்புடன் சொன்னார்கள்.

இச் சொல்லைக் கேட்ட அந்தத் தூதர் மறுத்தொன்றும் பேசவில்லை. உடனே அங்கிருந்து புறப்பட்டு ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து, அங்கே நடந்த பேச்சுக்கள் அனைத்தையும் விவரமாகச் சொல்லிக் காட்டினார். அச் சொற்களைக் கேட்ட மாத்திரத்தில் ஆண்டவரவர்களுக்குக் கோபம் பிறந்தது. அக் கோபக்குறியுடன் அங்குள்ளவர்களைப் பார்த்துச் சொல்கின்றார்கள்:—

உலகத்தில் மனிதர்கள் ஜனன மெடுத்தார்கள். அவர்கள் உண்டாகும் ஆரம்பத்தையும், ஒடுங்கும் முடிவையும் சிந்திக்கும்போது, வெறிதாயிருக்கின்றதன்றி, வேறொன்றுமில்லை. அதை யறியாதவர்கள் இடைவழியில் நினைக்கும் எண்ணங்களின் புதுமைகளை நான் என்னென்று சொல்வேன்! "கியாமத்து நாளில் மனிதர்கள் மனைவி, மக்கள், பணம், காணிகள், ஆடு மாடுகள், இன்னுமுள்ள பொருள்கள், ஒன்றுமின்றி, தனித்தவர்களாய் என்னிடம் வருவார்கள்" என்று அல்லாஹுத்தஆலா சொல்லுகின்றான். இந்த வேத வாக்கின் பிரகாரம் மனிதர்களின் முதலும், முடிவும் வெறுமையேயாம். சீமான்களானாலும் சரி; ஏழைகளானாலும் சரி; மூன்றுலகத்திலும் ஒரேபடியா யிருப்பவர்களல்லாமல், ஒருவருக் கொருவர் உயர்வுந் தாழ்வுமுள்ளவர்களல்ல. கவனிக்கு மிடத்தில் அவ்விருவரில் ஏழைகளே சிறந்தவர்களா யிருக்கின்றார்கள். ஏனென்றால்:—"பாக்கியவான்களுக்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முந்தித் தரித்திரவான்கள் சுவர்க்கப் பிரவேசம் பெறுவார்கள்" என்று நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்து சொன்னார்கள். அப்படியிருக்க, ஏழைகளே மேலானவர்கள் என்று இந்த வுலகம் கொண்டாடாமல் விட்டது என்ன புதுமை! அன்றியும், திரவியவந்தர்களையும், வறுமையுடையோரையும் வைத்து, அவர்களின் இயற்கையின் தாரதன்மியத்தை நிறுத்துப் பார்த்தால், எல்லா விதத்திலும் வறுமையை யுடையவர்களே பாக்கியவான்களாய்க் கருதப்படுகின்றார்கள். இது எப்படியென்றால்:— திரவியவான்களுக்கு உம்றா என்றும், தரித்திரவான்களுக்கு புகறா என்றும் பெயர். இவ்விரு பெயர்ச்சொற்களின் கடையெழுத்துக்கள் இரண்டும் ஒன்றேதான். மற்றை யெழுத்துகள் மாறியிருந்தாலும், உம்றாவின் கடையெழுத்துப்போக மற்றைய இரண்டெழுத்துகளுக்கும் இலக்கம் நாற்பத்தொன்று. புகறாவின் கடையெழுத்துப்போக மற்றைய இரண்டெழுத்துகளுக்கும் இலக்கம் நூற்றெண்பது. இந்த பகீர்களின் இலக்கமாகிய நூற்றெண்பதில் அமீர்களின் இலக்கமாகிய நாற்பத்தொன்றைக் கழித்தால், பகீர்களின் இலக்கம் நூற்றுமுப்பத் தொன்பது மேலதிகமாகின்றன. ஆகையால், திரவியவான்களாகிய அமீர்களுக்குத் தரித்திரவான்களாகிய பகீர்கள் நூற்றுமுப்பத்தொன்பது மடங்கு பதவியில் உயர்ந்தவர்களாகின்றார்கள். இன்னும், அந்த நூற்றுமுப்பத் தொன்பதையும் அட்சரமாக்கினால் லக்து என்று ஒரு சொல்லாகின்றது. இந்தச்சொற்குப் பொருள் "அரசர்களும் இம்மை மறுமைப்பலன்களைப் பெறுவதற்காகத் தேடிப்பிடிப்பது பகீர்களையே" என்பதாம். இப்படியிருக்க, துன்யாமகதாம் நம்மை பகீர் என்று பழித்தாராம்; இருக்கட்டும். மேற்சொன்ன பிரமாணப்படி பகீர்களே பாக்கியவான்களா யிருக்கின்றார்கள். தரித்திரத்தை

குவாஜாமக்தூம் நிந்திக்கின்றார். "தரித்திரந்தான் என்னுடைய பாக்கியம்; பாக்கியமோ, என்னிடத்திலுள்ளவைகளில் ஒன்று" என்று நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகி வஸல்லமவர்கள் சொன்னார்கள். ஆகையால், செல்வத்தைப் பார்க்கிலும் தரித்திரம் சிறந்ததே என்று மனம் நொந்து ஹலறத்து ஆண்டவரவர்கள் சொல்லிக்கொண் டிருந்தார்கள். அன்றைத்தினமே குவாஜாமக்தூ மவர்களுக்குச் சொந்தமான மரக்கலங்களில் பெரியது சமுத்திரத்தில் தாழ்ந்துபோயிற்று என்றும், சிறியது மேடேறி யுடைந்தது என்றும், அவர்களுக்குத் திடுகூறாய்ச் செய்திவந்தது. இந்தக் கவலையான செய்தியைக்கேட்டு குவாஜாமக்தூம் துயரமுற்றுக் கொண்டிருக்கும்போதே, தமது பெண்மக்களில் மூத்த பெண்ணாகிய ஜுஹுறாபீவிக்கு நளிர்சுரம் கண்டிருக்கின்றது என்கிற செய்தியும் இடிமேல் இடிவிழுந்தாற் போல அவர்கள் காதில் விழுந்தது.

மரக்கல மிரண்டும் சேதப்பட்டு, அன்றைக்கே மகளுக்கும் நளிர்சுரங் கண்டது என்றால், குவாஜாமக்தூமவர்களுடைய மனம் என்னபாடுதான் படாது! மனங்கலங்கி, முகம்வாடி, நாவடங்கி, துக்கசாகரத்தில் அமிழ்ந்திருந்தார்கள். இருந்தும், கப்பல்கள்போன கவலையைப் பாராட்டாமல், மகளுக்குப் பலவிதப் பரிகார பக்குவங்களுஞ் செய்தார்கள். செய்த பிரயத்தனங்களில் ஒன்றும் பலிதமாகவில்லை. வரவரச் சுரம் அதிகரித்து, அன்றிரவே ஜுஹுறாபீவி கலாவின் பிரகாரம் மௌத்தானார். அதனால் குவாஜாமக்தூமவர்களுக்கு உண்டான துக்கமுந் துயரமும் கொஞ்சமல்ல. வந்தவர்கள் எல்லாரும்: இது ஹலறத்து ஆண்டவரவர்களை அவமதித்துப் பேசினதால் வந்தகேடு என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

காரியம் முந்திவிட்ட படியால், இனி குவாஜாமக்தூம் என்ன செய்வார்கள்! அவர்களுக்கும் அல்லாகுந்த ஆலாவுக்கு



உவப்புள்ள குத்பை நாம் பழித்து அலக்ஷியமாகப் பேசினோமே, அதனாலல்லவா இந்தத் தீங்குகள் நமக்குச் சம்பவித்தன! என்று புத்தியிற்பட்டது. தாங்கள் பேசினது பெருந்தவறுதானென்று நினைத்து, அதிகாலையில் மௌத்தான மகளை அடக்கஞ் செய்துவிட்டு, இளையமகளாகிய சுல்தான்பீவியைக் கையிற் பிடித்துக்கொண்டு ஆண்டவரவர்களிருக்கும் சாவைக்கு வந்தார்கள்.

வந்த குவாஜாமக்தூம் சுல்தான்பீவியை ஹலறத்து ஆண்டவரவர்களின் பாதத் தண்டைவிட்டு, கைகட்டி நின்று, கண்ணீர் தாரைதாரையாயோட அழுதுகொண்டு: எஜமானவர்களே, சிறியேன் தங்கள் மகத்துவத்தை யறியாமல் பேசிவிட்டேன். என் குற்றத்தைத் தேவரீர் மன்னித்தருளவேண்டும். இதோ என் இளையமகளைக் கொணர்ந்துவிட்டு விட்டேன். தயவுசெய்து தங்கள் அருமைக் குமாரருக்கு மணமுடித்து விடுங்கள். என் பிழையைப் பொறுப்பது தங்களுக்குக் கடமையாயிருக்கும் என்று சொல்லி அடுத்தடுத்து மன்றாடினார்கள். அப்போது ஆண்டவரவர்கள் குவாஜாமக்தூமைப் பார்த்து: நல்லது பொறும்; அல்லாகுந்தஆலாவின் உதவிகொண்டு உமது மகளுக்கும், எனது மகனுக்கும் இனி விவாகம் நிறைவேறும். மகளையழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போவீராக என்று கட்டளைபண்ணினார்கள். அக்கட்டளைப்படி குவாஜாமக்தூம் மகளைக் கூட்டிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

திருமணம் பேசினது முற்றிற்று.

---

## ௧௮-ம் அத்தியாயம்.

## தர்ணுச்சரிக்குப் போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் * தர்ணுச்சரி என்னும் ஊருக்குப்போன வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து காதிறொலி கன்ஜஸவாய் ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் கடற்பிரயாணஞ் செய்ய நாட்டங்கொண்டு, தாங்கள் இருந்து நடத்தும் காரியங்கள் எல்லாவற்றையும் மகனாராகிய சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டு, ஒருநாள் புறப்பட்டுக் கடற்கரைவழியே போனார்கள். அன்று, நாகப்பட்டணத் துறைமுகத்தில் பத்தாவியாவுக்குப் பிரயாணமாக உலாந்தாக்கப்பல் ஒன்று தயாராயிருந்தது. அதையறிந்து ஆண்டவரவர்கள் அந்தக் கப்பல் தலைவனைக் கண்டுபேசி, உன் கப்பலில் நான் பயணம் வருகிறேன் என்று கேட்டுக்கொண்டு, அன்றைக்கே கப்பலில் ஏறினார்கள். உடனே கப்பல் நங்கூரந்தூக்கிப் பாய்விரித்து, பத்தாவியா நோக்கி ஓடிற்று.

கப்பல் பாய்தூக்கிச் சிலநாள் ஓடினபின் ஒருநாள், கப்பல் தலைவன் மாலுமியைப் பார்த்து: கப்பல் பாய் விரித்து இத்தனைநாளாயினவே? இப்போது எவ்விடத்தி லிருக்கின்றோம்? என்று கேட்டான். அன்று நண்பகலான படியால், மாலுமி உடனே யெழுந்து பொழுதளக்கும் கண்ணாடிக் கருவியைக் கொண்டு அளந்துபார்த்து அதிசயித்து, கப்பற்காரனைப் பார்த்து: ஐயா, நாம் கப்பலை நங்கூரந்தூக்கி பத்தாவியாவுக்கு நேரே சரியான லக்கு வைத்துச் செலுத்தினோம். காற்றும், நீரும் அந்தவழியே

* இவ்வூர் பர்மாராச்சியத்து மோல்மீன் பட்டணத்தைச் சேர்ந்தது. இதை தணசரிம் என்கின்றார்கள்.



ஒத்து வருகின்றன. இப்போது பார்க்க யாதொரு குறியுமின்றிக் கப்பல் திசைமாறி, தர்ணுச்சரிக்கு நேரே போகின்றது என்று விடை கொடுத்தான். இதைக் கேட்டுக் கப்பல் தலைவன் முதல் எல்லாரும் புதுமையும் கவலையுங் கொண்டு, கலக்கடிபட்டுப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

அறியாத உலாந்தா பாஷையில் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அவற்றை யறிந்துகொண்டு, அவர்களைப்பார்த்து: நீங்கள் ஏன் மலைக்கின்றீர்கள்? கப்பல் இந்தத் திசையில் ஓடுவது தான் நல்லது என்று சொன்னார்கள். இதைக்கேட்ட அந்த நஸாறுக்கள் எல்லாரும் தட்டுக்கெட்டுத் தடுமாறி, நமது பாஷை இவர்களுக்கு எப்படி விளங்கிற்று! இவர்கள் ஒரு மகாத்துமாவாயிருப்பார்கள் என்று எல்லாரும் ஓடிவந்து, ஆண்டவரவர்களைப் பணிந்து கைகட்டி நின்றார்கள்; சிலர் கலிமா சொல்லி இஸ்லாமிலானார்கள்.

சற்று நேரத்தில் கப்பல் தர்ணுச்சரியை நெருங்கி, அவ்வூர்த் துறையிற்போய்த் தரிபட்டுநின்றது. அப்போது ஹலறத்து ஆண்டவரவர்கள் கப்பற்காரர்களைப்பார்த்து: என்னை நீங்கள் இங்கே இறக்கி விட்டுவிட்டு பத்தாவியா வுக்கு ஓடிச்செல்லுங்கள்; நான் இவ்வூருக்குப் போகின்றேன் என்று சொன்னார்கள். உடனே அவர்கள் ஆண்டவரவர்களை ஒருபடவில் இறக்கிக் கரையிற்கொண்டு போய்விட்டு அடிபணிந்து விடைபெற்றுக்கொண்டு, கப்பலேறி பத்தாவியாவை நோக்கி ஓடிப்போனார்கள்.

கரையிலிறங்கின ஹலறத்து ஆண்டவரவர்கள் விக்கிர காராதனைகாரர்களான புத்தமதத்தர் குடியிருக்கும் அந்தத் தர்ணுச்சரிக் குள்ளேபோய், அங்குள்ள தோட்டத்து ஒரு மாநிழலில் அல்லாதுத்த ஆலா வுடைய நாட்டத்தில்

உட்கார்ந்தார்கள். அன்றுமுதல் மூன்றுநாளளவும் ஊண் உறக்கமின்றி, ஒரே யிருப்பா யிருந்தார்கள். ஆண்டவரவர்கள் அங்கேவந்து மூன்றுநாளாக ஊணுறக்கமற்று உட்கார்ந்திருப்பதையும், அவர்களின் முகவஜீகரத்தையும், தேககாந்தியையும், அவயவலக்ஷணங்களையும் அவ்வூர்க் காபிர்கள் கண்டு அதிசயப்பட்டு, மூன்றாம் நாள் பலர் திரண்டு ஆண்டவரவர்களுக்குமுன் வந்துநின்று: தாங்கள் மூன்றுநாளாக ஒன்றுந் தின்னாதிருக்கின்றீர்களே, பசிதீர்க்க ஏதுங்கொணர்ந்து தருகின்றோம்; தின்னுகின்றீர்களா? என்று கேட்டார்கள். அப்போது ஆண்டவரவர்கள் அவர்களைப் பார்த்து: அல்லாஹுத்த ஆலாவுக்கு இணையாக உருவங்களைச் செய்து வைத்து வணங்குகின்றவர்களுடைய உதவியை நான் ஏற்கமாட்டேன். நீங்கள் இஸ்லாமில் ஆய்விட்டால், அதன் பின் கொடுக்கும் உங்கள் உணவை ஏற்பேன். அதுவே பிரயோசனப்படும் என்று சொன்னார்கள். அதற்கு அக் காபிர்கள் மறுத்துப் பேசாமல் போய்விட்டார்கள். ஆண்டவரவர்கள் அங்கேயே தங்கியிருந்தார்கள்.

தர்னாச்சரிக்குப்போனது முற்றிற்று.

---

௮௰ - ம் அத்தியாயம்.

## விக்கிரகங்கள் பேசினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுடன் தர்னாச்சரிக் கோயில்களின் விக்கிரகங்கள் பேசின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாதுல்ஹமீது பாத்துஷா கன்ஜஸவாய் ஆண்டவரவர்கள் தர்னாச்சரியிற்போய் அடிவைத்த அன்றைக்கே அங்குள்ள கோயில்களின் விக்கிரகங்களெல்லாம் தலைகீழாய் உருண்டு கிடந்தன. பின் ஆண்டவரவர்கள் அன்ன ஆகாரமின்றி ஒரே யிருப்பாயிருப்பது ஊரெங்கும் பிரஸ்தாப மாயிற்று. ஆலயங்களின் விக்கிரகங்களனைத்தும் உருண்டது இந்த மகாத்துமாவினாலேதான் என்று எல்லார் மனதிலும் பட்டது. இவர்கள் தெய்வத்துவ முள்ளவர்கள் என்று அவ்வூராரெல்லாம் ஆண்டவரவர்களுக்கு அஞ்சினார்கள். அடிக்கடி கூட்டங் கூட்டமாய் வந்து தரிசிக்கத் தலைப்பட்டார்கள்.

அவ்வூரிலுள்ள வாத - பித்த - சிலேட்டுமாதிக்கத்தினாலுண்டான சகல ரோகஸ்தர்களும், கூனர், குருடர், செவிடர், ஊமையர், முடவர், நொண்டிகளாகிய உடற்குறையாளரும், மேக வியாதிகாரர்களும் திரள் திரளாய், ஒவ்வொரு நாளும் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கும்பிட்டு "ஐயா, எங்கள் நோய்களைத் தீருங்கள்; எங்கள் துயரத்தை யகற்றுங்கள்" என்று கெஞ்சத் தொடங்கினார்கள். ஆண்டவரவர்கள் மனதிரங்கி அல்லாஹுத்த ஆலா இடம் இரந்து, அவரவர் நோயை அகற்றிச் சுகப்படுத்தி வந்தார்கள்.

ஊரிலுள்ள தீராத வியாதிகாரர் எல்லாரும் நோய் தீர்ந்து சுகம்பெற்று, பரிசுத்ததேகிகளானார்கள். இக்

காரியம் அவ் வூராருக்கு அதிகப் பிரயோசனமா யிருந்தது.
ஒரு பெரியோர்கள் இங்கே வந்திருக்கின்றார்கள். அவர்க
ளால் தீராத நோய்களெல்லாந் தீர்ந்து, மனிதர்கள் சுக
மடைகின்றார்கள். கைகால் அழுகின அளவற்றபேர் ராசவடி
வுட னிருக்கிறார்கள் என்னுஞ் சங்கதி அவ்வூர் அரசன்
காதில் விழுந்தது. உடனே அவன், அவ்வித நாதாவை
நாம் காணவேண்டுமென்று விரும்பி, தன் புரோகிதர்களில்
ஒருவனை யழைத்து: தாங்கள்போய் அந்தப் பெரியோரை
இங்கே அழைத்து வாருங்கள் என்று சொல்லி யனுப்பினான்.

அரசன் அனுப்பின அந்தப் புரோகிதன் ஹைலறத்து
ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து அடிபணிந்து நின்று:
தங்களை எங்கள் அரசர் அழைத்துவரச் சொன்னார். தாங்
கள் தயவுசெய்து எழுந்தருள வேண்டும் என்று சொன்
னான். அப்போது ஆண்டவரவர்கள் அவனைப் பார்த்து:
உங்கள் அரசன் திரவியமுதலான சகல சம்பத்துமுள்ள
வன். அவற்றில் ஒன்றிலும் விருப்பமில்லாத எனக்கு
அவனிடத்தில் என்ன வேலை? என்று பிரதி சொன்னார்கள்.
இதைக்கேட்ட புரோகிதன் மற்றொன்றும் பேசாமல் அங்
கிருந்து மீண்டு, அரசனிடம் போய்ச் சங்கதியைத் தெரி
வித்தான். புரோகிதன் சொன்ன சொல்லை அரசன்கேட்டு:
ஆம், சரிதான். அவர்கள் நம்மிடம் வரமாட்டார்கள். நாமே
அவர்களைப் போய்க் காணவேண்டும் என்று சொல்லி,
அரசனே புறப்பட்டான்.

மந்திரிகள், புரோகிதர்கள், சேனாதிபதிகள், ரணவீரர்
கள் அநேகர் புடைசூழ அரசன் புறப்பட்டு, ஹைலறத்து
ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து சாஷ்டாங்கஞ் செய்து
எழுந்து, கைகட்டித் தலைகுனிந்து நின்றான். அப்போது
ஆண்டவரவர்கள் அவனைப்பார்த்து: நீ இங்கேவந்த கார
ணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அரசன்: எஜ



மானவர்களே, இவ்வுலகத்தில் மானிடர்களுக்கு உரிய பல
வித நன்மைகளிலும், பெரியோர்களைத் தரிசிப்பது பிரதா
னமான நன்மையல்லவா? ஆதலால், தமியேன் தேவரீ
ருடைய திருவடிகளைத் தரிசித்துப் பலன் பெறவேண்டி வந்
தேன் என்று விடைசொன்னான். ஆண்டவரவர்கள் பின்
அவனைப்பார்த்து: நீயும், உன்குடிகளும் பற்றிப் பிடித்து
ஒழுகிநடக்கும் மார்க்கம் எந்தமார்க்கம்? நீங்கள் ஆராதித்து
வணங்கும் தெய்வம் எது? என்று கேட்டார்கள். அதற்கு
அரசன்: எஜமானவர்களே, நாங்கள் தங்கள் மார்க்கத்தா
ரல்ல; எங்கள் தெய்வம் பொன்னாதிலோகங்களாலும், மண்
ணாலும், கல்லாலும், மரத்தாலும் செய்த உருவங்களேயன்றி
வேறல்ல என்று மறுமொழி கூறினான். அப்போது
ஆண்டவரவர்கள் அவனைப்பார்த்து: நீங்கள் தொழும்
அந்தச் சிலாரூபங்கள் உங்கள் நோய்களைத் தீர்க்கவும்,
நீங்கள் நினைத்த கருமத்தை நிறைவேற்றித்தரவும் திராணி
யுள்ளனவா? என்று மறுபடியும் கேட்டார்கள். இக்கேள்
விக்கு அவன்: எஜமானவர்களே, நாங்கள் தீபதூபங்கள்
ஏந்திப் புஷ்பமாரி பொழிந்து தொழும் எங்கள் தெய்வம்,
நாங்கள் நினைத்த கருமத்தை இரவில் சொப்பனத்தில் வந்து
எங்களுக்குத் தெரிவிக்கும் என்று விடைகொடுத்தான்.

இதை ஆண்டவரவர்கள் கேட்டு, பின்னும் அவனைப்
பார்த்து: நல்லது, உங்கள் சொப்பனத்தில் உங்கள் தெய்வம்
தோற்றவராய் வந்து, உங்கள் கருமத்தை உங்களுக்குச்
சொல்வது உண்மையானால், இன்றிரவில் நீங்கள் ஏதும்
ஒரு கருமத்தை யெண்ணிப் படுத்திருங்கள். அது வழக்
கம்போல வந்து தெரிவிப்பதை அறியலாம். அப்படித்
தெரிவித்தால், அதை என்னிடம் வந்து சொல்லுங்கள்
என்று கட்டளைபண்ணினார்கள். அதற்கு அரசன் சம்ம
தித்து விடைபெற்றுக்கொண்டு அரமனைக்கு மீண்டான்.
அன்று பொழுது பட்டது.

பொழுதுபட்டு இரவானபின் அரசன் முதல் அனைவரும் உண்டு உறங்கப் போகும்போது, ஒவ்வொருவர் ஒவ்வொரு கருமத்தை நினைத்துக்கொண்டு படுத்தார்கள். அன்றிராமுழுதும் அனைவரும் மெய்ம்மறந்து தூங்கினார்களன்றி, சொப்பனபூசாட்டம் சிறிதுமுண்டாகவில்லை. அதிகாலையில் அரசன் முதல் அனைவரும் விழித்து, இன்று ஏன் நமது தெய்வம்வந்து நமக்குச் சங்கதி தெரிவிக்கவில்லையென்று மனமயங்கி, ஆச்சரியத்துடன் புறப்பட்டு ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கூடினார்கள். அப்போது அரசன் ஆண்டவரவர்களை நோக்கி: எஜமானவர்களே, இன்றிரா எங்கள் தெய்வம் சொப்பனத்தில் வரவில்லை. அதன் காரணம் என்ன? தேவரீர் அதை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று சொல்லி, அடிபணிந்து பலவாறு துதித்து நின்றான்.

அப்போது ஹலறத்து ஆண்டவரவர்கள் அரசனைப் பார்த்து: நல்லது; நான் ஒன்று சொல்கின்றேன் கேள். உள்ளது வெளிப்பட்டால், இல்லாதது மறைந்துபோம். இப்போது நீங்கள் தொழும் உங்கள் தெய்வமேவந்து உங்கள் மார்க்கம் கெடுதலான மார்க்கம் என்பதை விளங்கச் சொல்லுமானால், நீயும், உன்குடிகளும் என் சொல்லுக்கு வழிபடுகின்றீர்களா? என்றார்கள். அதற்கு அரசன்: எஜமானவர்களே, எங்களுக்கு மேலானநன்மை எதுவோ அதைத் தான் நாங்கள் தேடுகின்றோம். இப்போதிருக்கும்வழி கெடுவழியென்று நாங்கள் அறியும் பக்ஷத்தில் தங்கள் சொல்லுக்குக் கீழ்ப்பட என்னதடை? என்று பணிந்து மறுமொழி சொன்னான். உடனே ஆண்டவரவர்கள் அல்லாகுத்த ஆலாவை நாடிச் சற்றுநேரம் தலைகுனிந் திருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் குனிந்தசிரசை உயர்த்துமுன் அவ்வூர் எல்லா ஆலயங்களிலுமுள்ள எல்லா விக்கிரகங்களும் ஆண்டவரவர்கள் இருக்குமிடத்திற்கு உருண்டு வந்து, ஆண்டவரவர்களின் திருவடிகளைத் தெண்டனிட்டு எழுந்து நின்றுகொண்டு, இதன்பின் வருமாறு சொல்லத் தொடங்கின.



“அண்டாதி புவனசராசரங்கள் எல்லாவற்றையும் படைத்து ஆள்கின்ற வல்லதெய்வமாகிய அல்லாகுத்த ஆலாவின் குத்பே, எங்கள் நாயகமே, இந்தச் சிறுபடைப்பாகிய எங்கள் முறைப்பாட்டைத் தாங்கள் கொஞ்சம் மனதிரங்கிக் கேட்டருளவேண்டுகிறோம். அதாவது:—உலகத்தையும், உலகத்திலுள்ள சமஸ்த வஸ்துக்களையும் சிருஷ்டித்து ஆளுந்தன்மை வல்லமையுள்ள அல்லாகுத்த ஆலாவுக்குத்தான் உடையதன்றி, மற்ற யாருக்குமில்லை; எதற்குமில்லை. அப்படியிருக்க, அந்தத்தன்மை கல்லாதி உருவங்களான உங்களுக்கு ஏது! சும்மாகிடந்த எங்களைக் கொணர்ந்து தலையும், காலும், கையும், கண்ணும், மூக்கும், காதும் வைத்து உருவாக்கி, நட்டிவைத்து, பூவைச்சொரிந்து, தீபதூபமிட்டு, வீணில் தண்டஞ் சமர்ப்பித்து ‘சுவாமீ!’ என்று கைகுவித்துக் குப்புறவிழுகிறார்கள். எங்களால் ஆவதென்ன? எங்களுக்கு இவர்கள் செய்துவைத்த பொறிகளில் புலன்கள் உண்டா? இல்லை! அப்படி வணங்கும் இவர்களைக் கவனித்தால், எங்களையொத்த கல்லும், மண்ணும் போலவே காணப்படுகிறார்கள். எஜமானே, இது இருக்கட்டும். இன்னொரு துயரம் எங்களுக்கு என்றைக்கும் தீராத் துயரமாயிருக்கின்றது. அதாவது:—காட்டிலே, மலையிலே, எங்கள் பாட்டில் நாங்கள் கிடக்க இவர்கள் தூக்கிவந்து எங்களைப் பண்ணாதகோலம் பண்ணிவைத்து வீணுக்கு மாரடித்தாற்போல வணங்கிப் பாவிகளாவதோடு, எங்களையும் பாவக்கட்டிகளாக்கி விடுகின்றார்கள். நாளைக்கு அல்லாகுத்த ஆலா இதைப்பற்றி எங்களைக் கேள்விகேட்டால், நாங்கள் என்ன மறுமொழி சொல்வோம்! நரகத்திற்கு நீங்கள்

பயப்படுங்கள்! அது மகாகொடியது. அல்லாகுத்த ஆலா அல்லாத வஸ்துக்களைத் தொழுகிற வழிகேடர்களை அவர்கள் பின்பற்றித் தொழுத உருவங்களுடன் சேர்த்து அந்த நரகத்தில் விறகாகப்போட்டு எரிக்கப்படும்' என்று வேதம் சொல்லுகின்றதே. ஆகையால், இவர்களோடு நாங்களு மல்லவா நரகத்திற் கிடந்து பற்றியெரிவோம்! இதை யெண்ணி யெண்ணித்தான் நாங்கள் துயரப்படுகின்றோம். உலகத்தைத் துறந்த பெரியோர்கள் மிதித்து நடக்க அதனுல் நற்பேறு பெற்றுக்கொண்டு தூரந்தொலையிற்கிடந்த எங்களைக் கொண்டுவந்து, இனித் தாங்கள்போகிற நரகத்திற்குத் துணை சேர்த்து வைத்திருக்கும் கருமசண்டாளர்கள் இதோ இன்னும் எங்கள் பக்கத்தில் நிற்கின்றார்கள். இனிமேலும் தாங்கள் அநுபவிக்கப்போகிற யாதனைக்குப் பங்கு சேர்த்துவைக்கும் கொடுமதியுடைய இவர்கள் கையில் நாங்கள் இருந்து கெட்டுப்போகாமல் தேவரீர் விலக்கி, எங்களுக்கு நற்பேறுண்டாக்கும்படி தங்கள் திருவடிகளை மன்றாடுகின்றோம்" என்று இவ்வாறு சொல்லின. அவ்விக்கிரகங்கள் இப்படிச் சொல்லும்போது, அவற்றின் கண்களிலிருந்து தாரைதாரையாய்த் தண்ணீர் பெருகி ஓடிற்று. இவ்விதம் தங்கள் தெய்வங்கள் அஞ்சியழுது முறைப்பாடு செய்ததை அரசனும், மற்றவர்களும் கண்டு பிரமித்தார்கள். காலகாலமும் பூசைசெய்து வணங்கின நம்மிடத்தில் ஒரு போதும் வாய் திறந்துபேசாத இந்தத்தெய்வங்கள், இப்போது இம்மகாத்துமாவுக்குமுன் அஞ்சிநின்று முறையிடுவது வெகு புதுமை! இவற்றின் சொற்களெல்லாம் உண்மையே யென்று எல்லாரும் நிலைகொண்டார்கள்.

பிறகு, அரசன் ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவடிகளில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து அழுதுநின்று: எஜமானவர்களே, எங்களுக்கு நேர்வழிகாட்டுங்கள் என்று கெஞ்சினுன். உடனே ஆண்டவரவர்கள் அரசன்முதல் எல்லாருக்கும் கலிமாவைச் சொல்லிக்கொடுத்து, எல்லாரையும் இஸ்லாமிலாக்கினுர்கள். எல்லாரும் ஆண்டவரவர்களின் கையைப்பிடித்து ஈமான்கொண்டு இஸ்லாமானுர்கள்.



தர்ஞச்சரியிலுள்ள புத்தமதத்தரான பிர்மாக்காபிர்கள் அனைவரும் முஸ்லிம்களானபின் ஆண்டவரவர்கள் அவர்களுக்கு மார்க்கத்து விதிவிலக்குகளையும், சட்டதிட்டங்களையும் ஒழுங்காகக் கற்பித்தார்கள். பின்பு அவ்வூரிலுள்ள கோயில்களையெல்லாம் இடித்துவிட்டு, பள்ளிவாசல்களாகக் கட்டும்படி கட்டளை பண்ணினுர்கள். அக்கட்டளைப்பிரகாரம் அதிசீக்கிரத்தில் அவ்வூர்க் கோயில்களெல்லாம் இடியுண்டு பள்ளிவாசல்களாகக் கட்டப்பட்டன. பின்பு ஆண்டவரவர்கள் ஒவ்வொரு பள்ளியில் ஒவ்வொருநாளாகப் போயிருந்து, ஜனங்களுக்கு வேத விதிவிலக்குகளை யெடுத்துக்காட்டி, மார்க்கப்பிரசங்கஞ்செய்துவந்தார்கள். இப்படி அவ்வூராரைத் தேற்றிக்கொண்டு பலநாள் வரையும் அங்கேயிருந்தார்கள். அவ்வூரார் ஆண்டவரவர்களுக்கு அதிகமாக வழிபட்டு, ஒழுகி நடந்தார்கள்.

ஒருநாள் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் சமுகத்தில் வந்திருக்கும் அரசர் முதலானவர்களைப்பார்த்து: நான் குடியிருக்கும் இடத்திற்குப் போகவேண்டும். நீங்கள் எல்லாரும் அல்லாகுத்தஆலாவுக்குப் பயந்து நடந்துகொள்ளுங்கள். அவன் உங்கள் ஈமானைத் தரிபடுத்தி வைப்பான் என்று சொன்னுர்கள்.

நான் பிரயாணப்படவேண்டுமென்று ஹலறத்து ஆண்டவரவர்கள் சொன்ன சொல்லைக் கேட்டமாத்திரத்தில் அவர்கள் எல்லாரும் மனங்கலங்கி, முகம்வாடி: எஜமானவர்களே, நரகத்திற் கிடந்து உழல இருந்த எங்களை அங்கே போகாதபடி காத்து, சுவர்க்கத்திற்கு வழிகாட்டின

தேவரீர் தாங்கள், எங்களை விட்டுவிட்டுபோகக் காரணம் என்னவந்தது? நாங்கள் ஏதும் குறைகுற்றங்களைச் செய்து விட்டோமோ! அப்படியிருந்தாலும் தாங்கள் மன்னித் தருளவேண்டும் என்றார்கள். ஆண்டவரவர்கள் அவர்களைப் பார்த்து: அப்படியில்லை. அல்லாகுத்தஆலாவுடைய நாட்டம் நான் இங்கேயே தரிபட்டிருக்க வேண்டுமென்பது அல்ல. அவன் நாட்டப்படியே நான் போகப்போகின்றேன் என்று சொன்னார்கள். இதைக்கேட்டு அவ்வூரார் பின்னும்: எஜமானவர்களே, தாங்கள் காலகாலமும் இங்கேயே தரிபட்டிருக்க வேண்டுமென்றும், நாங்கள் எல்லாரும் தங்கள் திருவடிக்கு ஊழியஞ்செய்துவர வேண்டுமென்றும், இனித் தங்கள் கபுறடிக்கு நாங்கள் தலைமுறை தலைமுறையாகத் தொண்டு செய்து வரவேண்டுமென்றும் ஆசைவைத்துக் கொண்டிருக்கின்றோம். அப்படியிருக்க, எங்கள் பேராசை வீணாகத் தாங்கள் எங்களை விட்டுப்போய், நாங்கள் அநுபவிக்கப் பிரியப்படும் லாபத்தை யாருக்குக் கொடுக்கப் போகின்றீர்கள்! அதை தாங்களே அநுபவிக்கும்படி எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அழுதார்கள்.

பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் எவ்வளவு மறுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அவர்களுக்கு இருக்கும் அன்பினாலும், ஆசையாலும், எங்கள் ஊரிலேயே தாங்கள் இருக்கவேண்டும் என்று ஒரே பிடியாகச் சாதித்தார்கள். அதன்மேல் ஆண்டவரவர்கள் ஒன்றும் பேசாமல் அவர்களுக்கு ஆகவேண்டியவைகளை ஆக்கிக்கொண்டு, சிலநாள்வரையும் அங்கிருந்தார்கள்.

சிலநாள் சென்றபிற்பாடு, ஒருநாள் ஹலறத்து ஆண்டவரவர்கள் அவ்வூர் அரசர் முதலானவர்களை யழைத்து: நான் இன்னதினத்தில் வபாத்தாய்விடுவேன். நீங்கள் என்னைக் குளிப்பாட்டிக் கபனிட்டு, இன்ன இடத்தில் அடக்



குங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். இதைக்கேட்டு அவர்கள் மனம்வாடிக் கலக்கம்பிடித்திருந்தார்கள். ஆண்டவரவர்கள் அவர்களுக்கு உபதேசங்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பின்பு ஆண்டவரவர்கள் வபாத்தாகும் நாளென்று குறிப்பிட்ட தினம் வந்தது.

குறித்த நாள் வந்தபோது ஆண்டவரவர்கள் அவ்வூர் அரசர் முதலானவர்களுக்குச் சொல்லவேண்டிய கடமைகளைச் சொல்லிவிட்டு, வபாத்தாய் விட்டார்கள். இது விநோதமரணம் என்று அவ்வூரார் அறியவில்லை. உண்மையாகவே ஆண்டவரவர்கள் வபாத்தாய்விட்டார்கள் என்று அரசர்முதல் பிரசைகள் அனைவரும் கூடி, மிகவுந் துக்க முற்று, பின் ஆண்டவரவர்களை ஒழுங்கின்படி குளிப்பாட்டிக் கபனிட்டுக் குறித்த தானத்தில் அடக்கஞ் செய்துவிட்டு, எல்லாரும் துக்கமுடையவர்களா யிருந்தார்கள்.

ஆன்மாவைப் போலாதல், மகத்துவமாதல், உடல் கண்டிப்பின்றிக் கண்டிப்பானவைகளை ஊடுருவிப்போதல், இலகுத்துவ மாதல், வேண்டியதை யடைதல், நிறையுள்ளோராதல், ஆட்சியுள்ளோராதல், எல்லாந் தம் வசமாக்க வல்லமை பெறுதலாகிய இவ் வெட்டுச்சித்தியாதிப் பலவிதச் சாதனங்களெல்லாம் கைவசமுள்ள ஹலறத்து ஆண்டவரவர்கள் அன்றிரவே கபுறிலிருந்து புறப்பட்டு, பிறர் அறியாவண்ணம் கடலைக் கடந்து, ஆச்சரியகரமாக இக்கரைசேர்ந்து, முதுபங்கில் வந்து தங்கி என்றும்போல வீற்றிருந்தார்கள்.

தர்ணச்சரியார் இதை அறிந்தவர்களல்ல. உடனே ஹலறத்து ஆண்டவரவர்களை அடக்கினதானத்தில் பல மண்டபங்களையுடைய அலங்காரமான பள்ளியொன்று கட்டி, அநேக திரவியங்களைச் செலவிட்டு அதனைச் சிங்காரித்து, கொண்டாடத் தலைப்பட்டார்கள். வருஷந்

தோறும் பாரிய கந்தூரி யென்னும் திருவிழாவும் நடத்தத் தொடங்கினார்கள்.

[அப்படியே இந்நாள்வரையும் செய்துவருகின்றார்கள். அவர்கள் ஹலறத்து ஆண்டவரவர்கள் அங்கேதான் அடங்கியிருக்கின்றார்களென்று இன்னும் முழு நம்பிக்கையுடனேயே இருந்துவருகின்றார்கள். ஆண்டவரவர்கள் நாகூரில் அடங்கியிருக்கின்றார்கள் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அப்படிச்சொல்லுகிறவர்கள் மீது அவர்களுக்கு மனஸ்தாபமுண்டாகிறதுவழக்கம். அங்கேயும் அவர்கள் நாட்டப்படி காரணங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.]

விக்கிரகங்கள் பேசினது முற்றிற்று.

---

௬0-ம் அத்தியாயம்.

## திருமணஞ் செய்வித்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் மகனாகிய ஸையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களுக்கு விவாகஞ் செய்வலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீருன்சுல்தான் ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய் பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் தர்னுச்சரியிலிருந்து ஆச்சரியகரமாக வந்து முதுபாங்கில் வாசஞ்செய்து கொண்டிருக்கும் போது, மேலைநாகூர் ஸையிது சுல்தானமதுரா மவர்கள் ஒருநாள் தங்கள் மனதில் ஹலறத்து ஸையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் தங்கள் புத்திரருக்கு நமது புத்திரியை மணமுடித்துக்கொள்வதாகச் சொல்லி நம்மை யனுப்பினார்களே! இப்போது அதிக நாளாயும் அதைப்பற்றி ஒன்றும் தெரிவிக்காமலிருக்கின்றார்களே! அதென்ன காரணம்! என்று ஆலோசித்து, தங்கள் பந்துக்களில் சிலரும், அருமை மகளாரும் கூட வரப் புறப்பட்டு முதுபாங்குக்கு வந்து, ஆண்டவரவர்களின் திருவடிகளைப் போற்றி புகழ்ந்து:



எஜமானவர்களே, பெரியோரைப் பேணுதவர்கள் பெரும் பெரும் விபத்துகளுக்கு ஆளாவார்கள் என்பதை அடியேன் என்னிற் கண்டுகொண்டேன். என் மூத்த மகளும், இரண்டு கப்பல்களும் போனதுந்தவிர, இன்னும் மிச்சஞ் சொச்சமாயிருந்த என் ஆஸ்திகளும் நாட்குநாள் அருகிக் கொண்டு வருகின்றன. அதனால், நான் மிக்வும் பயப்படுகின்றேன். தாங்கள் தயவுசெய்து என் புத்திரியைத் தங்கள் புத்திரருக்கு விவாகஞ் செய்வித்துவிடுங்கள் என்று மன்றுடிச் சொன்னார்கள்.

இச்சொல்லைக் கேட்டு ஆண்டவரவர்கள் சுல்தானமதுரா மவர்களைப் பார்த்து: நல்லது; இன்னநாளில் விவாகஞ் செய்விக்கலாம். நீங்கள் போய், உங்கள் மாளிகையையே விவாகத்திற்காக அலங்கரியுங்கள் என்று கட்டளைபண்ணி, ஒரு சுபதினத்தையும் குறிப்பிட்டு அனுப்பினார்கள். உடனே சுல்தானமதுரா மவர்கள் ஆநந்தபரவச மடைந்து, ஆண்டவரவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு மேலை நாகூருக்கு வந்து, தங்கள் பந்துமித்திரர்கள் முதலான எல்லாருக்குந் தெரிவித்து, தங்கள் மாளிகையையும், எல்லாத் தெருக்களையும் அலங்கரிக்கச் சொன்னார்கள்.

ஸையிது சுல்தானமதுரா மவர்களின் மனைவாசலில் சிங்காரமான பெரும்பந்தல் போடப்பட்டது. மற்ற வீதிகளையுங், ஒவ்வொருமனைகளையும் அலங்கரித்தார்கள். இன்னார் மகனுருக்கும், இன்னார் மகளுக்கும்,. இன்ன தினத்தில் விவாகமாகிறபடியால், விருந்துண்ணல் முதலான சர்வசம்பிரமங்களுக்கும் 'வரவேண்டும் என்று, பக்கத்திலுள்ள நாகபட்டணம், பார்ப்பாரூர், சுற்று நாடு முதலியவைகளிலுள்ள உலமாக்கள், மஷாயிகுகள், பிரபுக்கள் வர்த்தகர்கள் எல்லாருக்கும் திருமணவறிக்கை செய்யப்பட்டது. அவ்வாறே எல்லாரும் மேலைநாகூரில் வந்து கூடினார்கள்.

விவாக நாளன்று அறுசுவைப் பதார்த்தங்களுடன் பெரும் விருந்து கொடுக்கப்பட்டது. அன்று மாலையான போது ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் மகனுர் ஹலறத்து சையிது முகம்மது புகுபு சாகிபவர்களை மஞ்சன மாட்டி, சர்வந்து முதலிய ஆடைகள் அணிவித்து, நானூற்று நான்கு தபோதனர் புடைசூழ, தக்பீறு, தஸ்பீகு, தஹ்லீலு, தஹ்மீது, ஸலவாத்துகள் முழங்க அழைத்துக் கொண்டு மேலைநாகூருக்கு வந்தார்கள். மேலைநாகூராரும் பெருந் திரளாய்க் கூடிவந்து எதிர்கொண்டு, தூவாஜாமதுநா மவர்களின் மாளிகைக்கு அழைத்துப்போனுர்கள்.

அந்தமாளிகை வெகுவாக அலங்கரிக்கப்பட்டு, அங்கே அவரவர்களுக்குத் தக்கபடி ஆசனங்களும், விரிப்புகளும் தயார்செய்திருந்தன. தகுந்த கனவான்கள் இடமற நெருங்கி யிருந்தார்கள். மணவாளருக்கு இட்ட ஆசனத்தில் மண வாளர் இருக்க, மற்றவர்கள் தராதரப்படி புடைசூழ்ந் திருந்தார்கள். அன்றிரா மேலைநாகூரார் அதிக ஆநந்தங் கொண்டாடினுர்கள். ஊர்முழுதும் சந்தோஷ கோஷ்ட மாகவே யிருந்தது.

பின்பு, ஹலறத்து ஆண்டவரவர்களும், சையிது தூவா ஜாமதுநாமவர்களும் கலந்துபேசி, மஹர் முதலான பொருத் தனைகள் அனைத்தும் பண்ணிக்கொண்டு, தீனுல்இஸ்லாமின் நியதிப்படி சுபமுகூர்த்தத்தில், சையிது முகம்மதுபுகுபு சாகிபவர்களுக்கும், சையிதத்து சுல்தான்பீவி அவர் களுக்கும் * நிகாகு முடித்தார்கள். விவாகம் நிறைவேறின

* நிகாகு மேலைவாஞ்சூரில் நடந்ததென்றும், தூவாஜாமதுநாம கப்பலேறி அச்சைத்தீவுக்குப் போய் மௌத்தாய் விட்ட பிறகு அவர்கள் மனைவியே மகளாரைக்கூட்டி வந்து ஆண்டவரவர்களிடம் விட்டுச் சென்று அழுததால்தான் விவாக முடித்ததென்றும் ஒரு கிரந்தம் சொல்லுகின்றது.



பின், அப்போதே ஒலிமா என்னும் விவாக விருந்து கொடுக் கப்பட்டது.

பின்பு, மணவாளியாகிய சுல்தான்பீவி யவர்களுக்குச் செய்யவேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஆடை யாபரணுதிகளால் அலங்கரித்து முடிந்தபின், அன்று பின்னிரவிலேயே ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் மகனுர் சையிது முகம்மதுபுகுபுசாகிபவர்களையும், மருமகளார் சுல்தான்பீவி யவர்களையும் மேலைநாகூரிலிருந்து அழைத்துக் கொண்டு, முதுபக்குக்குவந்து, கையளித்துவிட்டு, இருவரை யும் முதுபக்கிலேயே குடியிருத்தினுர்கள். இருவரும் மங்கள கரத்துடன் வாழ்ந்திருந்தார்கள்.

திருமணஞ் செய்வித்தது முற்றிற்று.

௯௩-ம் அத்தியாயம்.

## மதுபான கண்டனம்.

[இவ் வத்தியாயம் மதுபானஞ் செய்த ஒரு பகீரை ஹலறத்து ஆண்டவரவர்கள் கண்டித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் அருமை மகனுரும், மருமகளாரும் சுப சோபனத்துடன் முதுபக்கில் வாழ, அதனுல் களிகூர்ந்தவர்களா யிருக்குங்காலத்தில், ஒருநாள் பகீர்களில் சிலர்வந்து: எஜமானவர்களே, நமது பகீர்களில் இன்னுர் கள்ளுக்குடிக்கின்றுர் என்றுர்கள். உடனே ஆண்டவரவர்கள் அவரை அழைத்துவரச்சொல்லி, அவரைப்பார்த்து: நீர் ஏன் கள்ளுக்குடிக்கின்றீர்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்: நான் ஒருபோதும் குடிக்கவில்லை என்று மறுத்து விடைகூறினுர். அப்போது சாக்ஷிகாரர்கள்: இவர் குடிக்கின்றுர் என்றே உறுதி கூறினுர்கள். ஆண்டவரவர்கள் அவரைப் பார்த்து: நீர்

கள்ளுக்குடிக்காதீர் ; அது மகாபாவம். அல்லாகுத்த ஆலாவினால் விலக்கப்பட்ட கருமங்களில் அது பிரதான மானது. ஹறாமானகாரியம் வழிகெடுக்கும் என்று சொல்லிவிட்டு, மற்றவர்களைப்பார்த்து: இவர் இனிக் கள்ளுக்குடித்தால், கையுமெய்யுமாகப் பிடித்துக்கொண்டு வாருங்கள் என்று கட்டளைபண்ணி அநுப்பினார்கள்.

சிலநாள் சென்றபின், ஒருநாள் அந்தபகீர் பின்னும் கள்ளுக்குடித்தார். அதைக் கண்வைத்துப் பார்த்திருந்த சிலர் அவரைச் சீசாவுங்கையுமாகப் பிடித்துக்கொணர்ந்து, ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் விட்டார்கள். அப்போது ஆண்டவரவர்களுக்குக் கோபம் பிறந்து, அவரைப் பார்த்து: ஏ, பாவீ! உன்னைநான் கண்டித்தபின்னும் கள்ளுக்குடித்தாயா? இதென்ன முறைகேடு! என்று கடிந்து கேட்டார்கள். அதற்கு அந்தபகீர்: எஜமானவர்களே, நான் கள்ளுக் குடிக்கவில்லை ; தாகசாந்திக்காகப் பால் குடித்தேன். என்மேல் பொறாமைகொண்ட இவர்கள் கள்ளுக்குடித்தேனென்று குற்றஞ் சாட்டுகின்றார்கள் என்று சொல்லி, அந்தச் சீசாவைவாங்கிக் கவிழ்த்திக் காட்டினார். அதிலிருந்து பால்தான் சொட்டுச் சொட்டென்று விழுந்தது.

அந்தபகீர் கள்ளைக் குடித்துவிட்டு அகப்பட்டுக் கொண்டு, அதனைப் பாலாக மாற்றிக்காட்டிச் சாதிக்கவே ஹலறத்து ஆண்டவரவர்களுக்குப் பின்னும் கோபம் அதிகரித்து, பெற்றதாயிடத்திலும் கற்றவித்தையைக் காட்டுகின்றாயா? என்று ஒரு சிறுவனையழைத்து நாலுபேர் அறிய அந்தச் சீசாவில் மூத்திரம் பெய்யச் சொன்னார்கள். அவன் பெய்தவுடன் அந்த மூத்திரம் பாலாகி, சீசாவில் நுங்கு நுரையுடன் நிரம்பியிருந்தது. ஆண்டவரவர்கள் அந்த பகீரைப்பார்த்து: ஏ, பாவீ! இதுவும் பால்தானோ? இதையும் குடி என்றார்கள். அதைக்கண்ட உடனே அந்த



பகீர் தட்டுக்கெட்டுத் தடுமாறி, ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவடிகளில் விழுந்து: எஜமானவர்களே, அடியேன் குற்றஞ் செய்துவிட்டேன். மன்னிப்பது தங்கள் கடன். ரக்ஷியுங்கள் என்று அழுது மன்றாடினார். ஆண்டவரவர்கள் அவரை, செய்தகுற்றத்திற்காக தௌபா செய்யச்சொல்லி, பின்னும் பல அறிவுகளையும் புகட்டிக் கண்டித்துப் போகச்சொன்னார்கள்.

மதுபானகண்டனம் முற்றிற்று.

---

௯௨-ம் அத்தியாயம்.

## ஸ்தனங்களை மீட்டினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு ஸ்திரீக்கு அமிழ்ந்தின ஸ்தனங்களை மீட்டின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது பாத்துஷா கன்ஜஸவாய் ஆண்டவரவர்கள் ஒருநாள் அஸறு நேரம் முதுபக்கிலிருந்து புறப்பட்டு, மேலைநாகூரிலுள்ள ஒரு குளக்கரையிற் போய்த் தொழுதுமுடித்து ஒருபக்கத்தி லுட்கார்ந்து ஓதிக்கொண்டிருந்தார்கள். அக்குளக்கரை பலரும்வந்து நீர் மொண்டுகொண்டு போகும் இடமாயிருந்தது. அங்கே ஆண்டவரவர்கள் உட்கார்ந்திருக்கும் போது, பாலியமுள்ள ஒரு தமிழ்ப்பெண் இடுப்பில் குடத்தை வைத்துக் கொண்டு அங்கே வந்து குடத்தைத் துறையில் வைத்து விட்டு, தான் உடுத்தியிருந்த புடவையைக் களைந்து ஒரு தலைப்பையிடுப்பிற் சுற்றிக்கொண்டு, மற்றொரு தலைப்பை நீரில் தோய்த்துப் படியில் அடித்தாள் ; அப்புடவையிலுள்ள நீர்த்துளி யொன்று ஆண்டவரவர்களுக்கு முன் தெறித்து வந்து விழுந்தது. அப்போது ஆண்டவரவர்கள் அவளை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் பார்க்கும்போது புடவை துவைத்துக்கொண்டிருந்த அந்தப்பெண்ணின் அழகிய இரண்டுஸ்தனங்களும் மறைவின்றி வெளியில் தெரிந்து கொண்டிருந்தன. அவர்களின் திருக்கண் நோக்கம் திடீரென்று அந்தஸ்தனங்களின் மேல் விழுந்தபோது, அவ்விருஸ்தனங்களும் அப்பார்வைக்கு முன் இராமல் உள்ளேயமிழ்ந்திக் காணாதபடி மறைந்துபோயின. ஆண்டவரவர்கள் சட்டென்று சிரசைக் கவிழ்த்துக்கொண்டிருந்துவிட்டார்கள்.

ஸ்தனங்கள் காணாமற்போன அசுகையை அவள் அறியவில்லை. தன் புடைவையைத் துவைத்துக்கொண்டு குளித்து, நீர்மொண்டு கொண்டு வீட்டுக்குப்போனாள். அப்போது அவள் பிள்ளை பால்கேட்டு அழுதது. விரைவாய் வேறு புடவையை யுடுத்திக்கொண்டு, பிள்ளையைத்தூக்கி நெஞ்சோடணைத்து மார்ப்புட்வையை நீக்கினாள்; அங்கே ஒன்று மின்றி, வெறுந்தடமா யிருந்தது. முலையின் குறியு மில்லாம லிருக்கவே ஏக்கங்கொண்டு பயந்து அழுது, தன் தாயைக் கூப்பிட்டுக் காட்டினாள்; அவளுக்கும் அச்சமும் ஆச்சரியமும் அதிகரித்தன.

சற்றுநேரத்திற்குமுன் பொற்குடம் போலப் பருத்துத் திரண்டு, பளபளத்துக் கைக்கு அடங்காததாய் விம்மி யிருந்த கனதனமிரண்டும் காணாமற் போய்விட்டால், கண்டவர் கேட்டவர்களுக்கு எவ்வளவு புதுமையும், பயங்கரமுமாயிருக்கும்! தாயும், மகளும் ஓவென்று அலறவே, அக்கம் பக்கத்திலுள்ளார் வந்துகூடினார்கள். பிள்ளையும் பாலுக்காகக் கிடந்து கதறிற்று.

பின்பு, தாய் மகளைப்பார்த்து: மகளே, இருந்த முலைகள் போனவழி தெரியவில்லை. நீ குளத்திற்குப் போனாயே. அங்கே ஏதும் நடந்ததுண்டா சொல்? என்று கேட்டாள்.



அதற்கு மகள்: அம்மா! நான் ஒன்றையும் அறியேன். குளக்கரையிற்போய்ப் புடவைதுவைத்துக் குளித்துக் கொண்டிருக்கும்போது, இப்போது இங்கே வந்திருக்கின்றார்களே இஸ்லாமான பெரியோர்கள், அவர்கள் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். இதுவன்றி, அங்கே வேறொன்றும் நடக்கவில்லை என்று மறுமொழி சொன்னாள்.

இதைக்கேட்ட அவள் தாய் சரிதான்; அவர்களாலே தான் இவைகள் காணாமற்போயிருக்கவேண்டுமென்று எண்ணி, மகளையழைத்துக்கொண்டு அதிசீக்கிரமாகக் குளத்தடிக்குவந்தாள்; அப்போதும் ஆண்டவரவர்கள் அங்கே ஓதிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ஆண்டவரவர்களைக் கண்டவுடன் அப்பெண்ணின்தாய் வந்து சமுகத்தில் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து: எஜமானவர்களே, உலக விஷயங்களில் தாங்கள் அறியாதது ஒன்றில்லை, ஸ்திரீகளுக்கு ஸ்தனங்கள் பிரதானம். ஸ்தனமில்லாதவளை ஸ்திரீ என்று வாய்நிறையச் சொல்லமுடியாது. அதைப்பற்றிய நியாயங்கள் எம்மட்டோ தாங்கள் அறிவீர்கள். இப்போது என் மகள் அதிபாலியள். அவளுக்குப் பிள்ளையுமுண்டு. அவளுக்கிருந்த ஸ்தனங்கள் இரண்டும் இப்போது இங்கே வந்த விடத்திற் காணாமற்போயின. பிள்ளையோ பாலுக்கு அழுகின்றது. தேவரீர் மனதிரங்கி, அவளுக்குரிய இரு ஸ்தனங்களும் முன்போலாகக் கிருபைசெய்யவேண்டும் என்று அழுது கெஞ்சினாள்.

தாய் குப்புறக்கிடந்து புலம்பி அழுவதையும், மகள் பக்கத்தில் முகம்வாடி நிற்பதையும், அவள் இடுப்பில் இடுக்கினபிள்ளையை வீரிட்டு அழுவதையும், தொடர்ந்து வந்தோர்பலர் பின்னே கூடிநிற்பதையும் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஏறிட்டுப்பார்த்து, பின் அக்குமரியைக் கூப்பிட்டு: ஏ! நீ வெட்கமற்று அவற்றைப் பிறர்காண விட்டிருந்தபடியால், என்பார்வை அவற்றின்மீது அகஸ்

மாத்தாய்விழநேரிட்டது. அவற்றை என்கண் கண்டபோது எனக்குண்டான அருவருப்பினாலேதான் உடனே அவை அமிழ்ந்துவிட்டன. இப்போது நீ அஞ்சாதே; அவை முன் போல உண்டாகும் என்று சொல்லிவிட்டு, தங்கள் சிறப்பான இரண்டுகைகளையும் ஆகாயத்தில் ஏந்தி: யா அல்லா, என்பார்வையால் மறைந்த இவளுடைய ஸ்தனங்களை முன்போல ஆக்கியருள் என்று அல்லாகுத்தஆலா இடம் துஆ இரந்தார்கள். இப்படியிருக்கும் போதே, அவள் மார்ப்புடவைக்குள் முன்னிருந்தபடியே இரண்டு ஸ்தனங்களும் புடைத்து விம்மி, சுரந்துகட்டின பாலுடன் குலுங்கி நின்றன. பின்பு ஆண்டவரவர்கள் அவளைப் போகும்படி உத்தரவுசெய்தார்கள். உடனே தாயும், மகளும் ஆண்டவரவர்களின் திருவடிகளைப் போற்றிப் புகழ்ந்து தங்கள் வீட்டுக்குப் போனார்கள். ஆண்டவரவர்களும் அங்கிருந்து முதுபக்குக்கு வந்தார்கள்.

ஸ்தனங்களை மீட்டினது முற்றிற்று.

---

௬௩-ம் அத்தியாயம்.

## பாரிற் பொறுத்த கப்பலை மீட்டினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் கற்பாரிற் பொறுத்துப்போன கப்பலொன்றைத் தள்ளி மீட்டிவிட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்கல்தான் சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் ஒருநாள் தங்கள் அருமைக்குமாரர் முதலான சிலருக்கு அறிவுசொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கும்போதே திடீரென்று எழுந்து பின்புறத்திற்போய் நின்று, சற்றுநேரத்தில் திரும்பிவந்தார்கள், வரும்போது அவர்களின் இடதுகைச்



சட்டை நீரில் நனைந்து ஈரமாயிருந்தது. அதைக்கண்டவுடன் மகனார் முதலானவர்கள்: இது ஏன் நனைந்திருக்கிறது? என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவரவர்கள்: இதன் விவரம் உங்களுக்குப் பிந்தித்தெரியும் என்று விடை சொல்லிவிட்டு, தங்கள் பராக்கில் இருந்தார்கள்.

சிலநாட்களின் பிறகு நாகபட்டணத் துறையில் ஒரு கப்பல் ஓடிவந்து, நங்கூரம் பாய்ச்சி, அதிலுள்ள சிலர் இறங்கி, அவர்கள் தலைகளில் சில காணிக்கைப்பொருள்களைச் சுமந்துகொண்டு ஹலறத்து ஆண்டவரவர்களிருக்கும் முதுபக்குக்கு வந்து, அப்பொருள்களை ஆண்டவரவர்களின் திருவடிகளில்வைத்துப் பணிந்து, கைகட்டி நின்று: எஜமானவர்களே, நடுக்கடலில் மாண்டுபோகாமல் எங்களைக் காப்பாற்றின தங்கள் திருவடிகளுக்கு இந்த அற்பப் பொருள்களை நாங்கள் காணிக்கையாகச் சமர்ப்பித்தோம். தாங்கள் ஏற்றருளவேண்டும் என்று சொல்லிப் பிரார்த்தித்தார்கள். அப்போது ஆண்டவரவர்கள் அப்பொருள்களை ஏற்றுக்கொண்டார்கள்.

ஹலறத்து சையிது முகம்மதுயூசுபுசாகிபு முதலான சிலர் அந்தக் கப்பலாட்களைப் பார்த்து இந்தக் காணிக்கையை நீங்கள் எதற்காகக் கொணர்ந்தீர்கள்? நடந்த காரியம் என்ன? என்று கேட்டார்கள். அவர்கள்: எங்கள் கப்பல் நடுக்கடலில் ஓடிவரும்போது, ஒருநாள் திடீரென்று ஒரு பாரில் பொறுத்துக்கொண்டது. அதைக் கண்ட நாங்கள் தட்டுக்கெட்டுத் தடுமாறி, இந்த நடுச்சமுத்திரத்தில் நீருட்கிடக்கும் பாரிற்பொறுத்த கப்பல் சிதைந்து போனாலும், அல்லது, பெயராதிருந்தாலும் நாங்கள் என்ன செய்வோமென்று ஏங்கிப் பரிதபித்து, இனி மீட்சியில்லை ஆனாலும் தற்காலம் தென்னிந்திய கீழ்கரையில் பேர்போக வாசஞ்செய்யும் மகத்துமாவாகிய மீறான்சாகிபு ஆண்டவரவர்

களுக்கு ஒரு பிரார்த்தனை பண்ணிக்கொள்வோம் என்று தீர்மானித்து "ஆண்டவரே, எங்களை இந்தச் சமுத்திராபத்தினின்று மீட்டி ரக்ஷிக்கவேண்டும்" என்று எல்லாரும் குரலுயர்த்திச் சொல்லி, சில பொருட்களையும் காணிக்கை வைத்தோம். நாங்கள் இப்படிச்செய்த சில நிமிஷத்தில் எங்கள் உரு குலுங்கி அசைந்தது. இது என்ன அதிர்ச்சியென்று பறந்து விழுந்து உருவின் அடியை உற்றுப்பார்த்தோம். பொறுத்திருந்த உரு பெயர்ந்து ஓடிற்று. பாரிற் பொறுத்து நின்றுபோன கப்பல் எங்களால் ஒரு முயற்சியும் ஆகாதிருக்க, அதுதானே ஓடக்கண்ட எங்களுக்கு உண்டான ஆநந்தத்திற்கு அளவேது! இந்த எஜமானவர்கள் மீது எங்களுக்குண்டான ஆச்சரியம் கொஞ்சமல்ல. சில தினத்திற்குள் சிந்தாயாத்திரையாக நாங்கள் ஓடிவந்து, நாகபட்டணத் துறையில் நங்கூரமிட்டோம். உயிருதவி செய்த எஜமானவர்களுக்கு நேர்ந்த காணிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டிய நாங்கள் இங்கே வந்தோம் என்று சொன்னார்கள்.

இதைக்கேட்டு சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் முதலானவர்கள் ஆச்சரியப்பட்டு, சில தினங்களுக்குமுன் ஆண்டவரவர்கள் அறைக்குட் போனதும், சட்டைக்கை நனைந்திருந்ததும் இதனாலேதான். பொறுத்த கப்பலைக் கையினால் தள்ளிவிட்டிருக்கின்றார்கள் என்று அறிந்து கொண்டு, அதையும் அந்தக் கப்பலாட்களிடம் சொல்லிக் காட்டினார்கள். அவர்கள் கேட்டு ஆச்சரியமுற்று, விடைபெற்றுப் போனார்கள்.

பாரிற் பொறுத்தகப்பலை மீட்டினது முற்றிற்று.

---

௯௪-ம் அத்தியாயம்.

## கள்ளிக்குருவிகளை மீட்டினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் கள்ளிக்குருவிகளுக்குச் சீட்டுவிட்டு, அவற்றைமீட்டின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் குடியிருக்கும் தானம் தருக்கள் அடர்ந்த பெருந் தோப்பு ஆனதால், அங்கேபலவிதப் பறவைகளும் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. அப்பறவைகளுள் சாம்பல்வர்ண முள்ள கள்ளிக்குருவிகள் ஒரு கூட்டமாய் அந்தத் தோப்பில் குடியிருந்தன. அந்தக் குருவிகள் சிலபோது ஆண்டவரவர்களின் விரிப்பின்மேலும் வந்து துள்ளித்துள்ளி உலாவிப் போகும். அதை ஆண்டவரவர்கள் சந்தோஷமாய்ப் பார்த்துக்கொண் டிருப்பார்கள். அக்குருவிகள் தங்கள் இருப்பிடம்வந்து சத்தமிட்டுக்கொண் டிருப்பதைப் பற்றி ஒரு நாளாவது அவர்கள் மனம் நோகவில்லை.

இப்படி யிருக்கும்போது, அடுப்பிற்கு விறகொடிக்கப்போன பகீர் ஒருவர் மேற்படிக் கள்ளிக்குருவிக்கூட்டத்தைக்கண்டு, அதை இலக்குவைத்து ஒரு கல்லையெடுத்து வில்லில்வைத்துத் தெறித்தார். அந்தக்கல் ஒருகுருவிமேற்படவே, அந்தக்குருவி பொத்தென்று விழுந்து செத்தது. ஒருபகீர் தங்கள் இனத்தில் ஒன்றைக் கல்லெறிந்து கொன்றவுடன் அந்தக் கள்ளிக் குருவிகளெல்லாம் ஏகோபித்து, நம்மை உயிர்வதை செய்யும் இந்தச் சண்டாளரிருக்குமிடத்தில் நாம் இனி இருக்கக்கூடாது. வேறே எங்கேயாவது போய்விடலாம் என்று தீர்மானித்துக்கொண்டு, இந்தச்சங்கதியை ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில்

தெரிவித்துவிட்டு வரும்படி ஒருகுருவியை மாத்திரம் அநுப்பிவிட்டு, மற்ற எல்லாக் குருவிகளும் புறப்பட்டு வாஞ்சூருக்குப் போய்விட்டன.

முறையிடவந்த குருவி ஆண்டவரவர்கள் சமூகத்தில் வந்து தலைசாய்ந்து நின்று: எஜமானவர்களே, அற்ப ஜெந்துவாகிய நாங்கள் இதுவரையும் இந்தத்தோப்பில் உல்லாசமா யுலாவித்திரிந்தோம். தங்கள் சாலையில் தங்களுடன் மருவியிருந்த எங்கள் பாக்கியமே பாக்கியம். இப்போது நாங்கள் அந்தப் பாக்கியத்தை இழக்க நேரிட்டது. மகத்துவமுள்ள தாங்கள் வீற்றிருக்கும் விரிப்பின்மேலும் ஏறி மிதித்து விளையாடத் தாங்களும் சருவைக்கண்களாற் பார்த்துச் சந்தோஷப் படுவதை அறிந்த யாராவது எங்களைக் கொல்லத் துணிவார்களா? இப்போது தங்கள் பகீர்களில் ஒருவர் எங்களில் ஒரு குருவியை நிமித்தமின்றிக் கல்லால் எறிந்து கொன்றுவிட்டார். அதனால், நாங்களெல்லாம் இனி இங்கிருப்பதில்லையென்று குடி வாங்கிப் போய்விட்டோம். இந்தச் செய்தியைத் தங்கள் சமூகத்தில் தெரிவிக்க வேண்டியே நான் வந்தேன் என்று சொல்லிற்று.

மன்னுயிரைத் தம்முயிரென்று பாவிக்கும் மகத்துவமுள்ள ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தக் குருவியின் முறைப்பாட்டைக் கேட்ட மாத்திரத்தில், அவர்கள் கண்களில் தண்ணீர் ததும்பிற்று. மனதுருகி இரக்கங்கொண்டவுடனே பகீர்களைக் கூப்பிட்டு கள்ளிக்குருவிகளைக் கொன்றவர் யார்? என்று விசாரித்தார்கள். உடனே பகீர்கள் அவரைக் கண்டுபிடித்து, ஆண்டவரவர்கள் சமூகத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

ஆண்டவரவர்கள் அவரைக் கடிந்து கோபித்துவிட்டு, தங்கள் கையால் ஒரு பத்திரம் எழுதி, அதை சைகுஹஸன் என்பவர் கையிற்கொடுத்து: நீர் இதைக் கொண்டுபோய் அந்தக் குருவிகளிருக்கும் இடத்தில் நின்றுகொண்டு, அவைகள் கேட்கும்படி வாசித்துக் காட்டிவிட்டு வாரும் என்று கட்டளைபண்ணி யநுப்பினார்கள்.



சைகுஹஸன் பத்திரத்தை வாங்கிக்கொண்டு வாஞ்சூருக்குப் போனார். அப்போது, இங்கிருந்து போன கள்ளிக்குருவிகள் எல்லாம் அங்கே ஒரு மரங்களடர்ந்த தோப்பில் கூடிக்கொண்டிருந்தன. அவர் அவைகளுக்கு முன்னே போய் நின்றுகொண்டு, பத்திரத்தை வாசித்தார். அவர் வாசிப்பதை அக்குருவிகள் தலைசாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்தன.

சைகுஹஸன் குருவிகள் கேட்க வாசித்துமுடித்துவிட்டு, அங்கிருந்து மீண்டுவந்தார். அவர் வருமுன்னமே அந்தக்குருவிகள் எல்லாம் கூட்டங்கூட்டமாய் வாஞ்சூரைவிட்டு நீங்கி, முதுபக்குத் தோப்பில் வந்து, முன்போலவே குடியிருந்தன.

[ஹலறத்து ஆண்டவரவர்கள் எழுதியநுப்பின பத்திரம், அக்குருவிகளுக்குச் சமாதானஞ்சொல்லி அடைக்கலங்கொடுத்து, அழைத்த பத்திரமேயாம்.]

கள்ளிக்குருவிகளை மீட்டினது முற்றிற்று.

## ௯௫-ம் அத்தியாயம்.

# கம்பத்துக்கப்பலைக் கண்ணாடியாலடைத்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் நடுக்கடலிற் கம்பத்துக்கொண்ட கப்பலொன்றைக் கைக்கண்ணாடியால் அடைத்துக்காத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து கௌதுல்லிஸ்லாம், மீறான்சல்தான், ஷாகுல் ஹமீது பாத்துஷா ஆண்டவரவர்கள் தங்கள் கீர்த்தி உலகமெங்கும் பரவ அற்புதங்களை விளைத்துக்கொண்டு முதுபக்கில் வீற்றிருக்குங்காலத்தில், நஸாறுக்களாகிய கிறிஸ்தர்களின் மரக்கலமொன்று நடுச்சமுத்திரத்தில் ஓடிவரும்போது அதற்குக் கம்பத்துக்கண்டது. உடனே கலாசுகாரர்கள் கையோயாமல் நீரிறைகருவியால் நீரை இறைத்தார்கள். இறைக்க இறைக்க நீர் ஊறிக்கொண்டேயிருந்தது. நீரிறைகருவியா லன்றி, பின்னும் பல பாத்திரங்களைக் கொண்டும் எல்லாரும் ஒருங்குநின்று அள்ளியள்ளி இறைத்தார்கள். செய்யும் பிரயத்தினங்கள் எல்லாம் வியர்த்தமாயினவன்றி, வருநீர் சற்றும் குறையவில்லை. கைசலிக்கப் பாடு பட்டும் நீர் வரவர அதிகரிப்பதால், மாலுமிமுதல் எல்லாரும் உள்ளஞ்சோர்ந்து கலங்கினார்கள்; இந்த நடுச்சமுத்திரத்தில் எல்லாரும் முழுகிப் போவோமேயென்று ஏங்கினார்கள்; "ஓ! கடவுளே, எங்களை ரக்ஷியும்; எங்களுக்குத் திக்கில்லை" என்று சத்தமிட்டார்கள்; ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு: நமக்கு இனி மீக்ஷியில்லையேயென்று புலம்பினார்கள். இன்னும் சற்றுநேரத்தில் கப்பல் முழுகிப் போகும் என்று அவர்களுக்குள் தீர்மானம்பிறந்தது. கூடக் காற்றும் உரத்துக் கடல் கொந்தளித்ததால், வர வர அலைக்கிளர்ச்சி அதிகப்பட்டுக் கப்பலை ஓடவொட்டாமல் மறித்தது. விசையாய்ச் செல்லும் போதினின்று



மறித்து நிற்கும்போது நீரூறுதல் அதிகரிக்குந்தானே. ஆகையால், கப்பல் நீரூறி அரைபாகமளவும் கட்டிக்கொண்டது. இதைக் கண்ட கப்பலாட்கள் பின்னும் ஓ வென்று அலறினார்கள்.

கப்பற் கம்பத்தினாற் கலக்கடிபட்டுக் கடலில் முழுகிப்போக எத்தனமாயிருக்கும் அந்த கிறிஸ்தசாதியருள் இஸ்லாமான ஒருவருமிருந்தார். அவர் எழுந்து மாலுமியிடம்போய்: நான் ஒன்று சொல்லுகிறேன் கேளும், அதாவது:— தற்காலம் தேசாதி தேசங்களிலுள்ள ராசாதிராசர்களுக்கும் நேரிட்ட ஆபத்தை விலக்கி ரக்ஷிக்கும் மகாத்துமா ஒருவர் நாகபட்டணத்திற்குக் கொஞ்சம் வடபுறத்திலுள்ள கடற்கரையில் வாசஞ்செய்கிறார்கள். அவர்கள் பெயர் பலவற்றிலும் சிறந்தது ஷாகுல்ஹமீது. இப்போது நீங்கள் அவர்களை நாடிப் பிரார்த்தனை பண்ணிக்கொள்ளுங்கள். உங்கள் மரக்கலம் அபாயமின்றிக் கரைசேரும் என்று சொன்னார்.

இதைக் கேட்டவுடன் மாலுமி அதற்கு இசைய, ஒரு தொகைப் பணத்தை முடிப்பாக முடிந்து, "இது ஷாகுல் ஹமீது ஆண்டவரவர்களுக்கு காணிக்கை" என்று பாய்மரக் கயிற்றிற்கட்டி வைத்துவிட்டு, எல்லாரும் ஹலறத்து ஆண்டவரவர்கள் பேரில் ஒரே சிந்தனையாயிருந்தார்கள்.

இது இப்படி நடுச்சமுத்திரத்தில் நடக்கும் அந்த நேரத்தில், ஆண்டவரவர்கள் கடற்கரையில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது முகப்பணி செய்வதற்காக நாவிதன் வந்து பணிந்து நின்று கண்ணாடியை யெடுத்து ஆண்டவரவர்கள்கையிற் கொடுத்தான். ஆண்டவரவர்களுக்கு அந்த வேளையில் கம்பத்துக்கப்பற்காரர்கள் தங்களை நாடிப் பிரார்த்தனை பண்ணித் தோத்திரஞ்செய்வது இருதயத்தில் உதிப்பாய், நாவிதன் கொடுத்த கைக்கண்ணாடியை

வாங்கி, அதை விரைவாகக் கடலில் வீசியெறிந்தார்கள். அதைக்கண்ட நாவிதன் பதறி: எஜமானவர்களே, அந்தக் கண்ணாடி தமியேனுடைய ஜீவனக்கருவிகளில் ஒன்றல்லவா! என்று சொன்னான். அதற்கு ஆண்டவரவர்கள்: பதறுதே; உன்கண்ணாடி உன்னிடம் பின்னுக்கு வரும் என்று சொன்னார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் எறிந்த கண்ணாடிபோய் நடுக்கடலிற்கிடந்து தத்தளிக்கும் கப்பலின் கம்பத்துத் துவாரத்தில் ஒட்டிக்கொண்டு, அடைத்துவிட்டது. அதனால், அதற்குப்பின் சமுத்திரத்திலிருந்து ஒருதுளி நீராவது கப்பலுட் செல்லவில்லை. வரவர ஏறிக்கொண்டுவந்த நீர் பிரார்த்தனை செய்ததற்குப்பின் இருந்தமட்டத்தி லிருப்பதைக் கலாசுகாரர்கள் அறிந்து, மாலுமிக்குத் தெரிவித்தார்கள். மாலுமி, இப்போது நீரை இறைத்துப்பாருங்கள் என்று ஏவினான். உடனே அவர்கள் திரண்டுநின்று இறைத்தார்கள். சற்றுநேரத்தில் நீரெல்லாம் இறைப்புண்டு, கப்பல் ஒருசொட்டு நீருமின்றி வெறிதாயிற்று. ஆகவே, இதைக்கண்ட கப்பலாட்களுக்கு ஆநந்தமும், ஆச்சரியமும் அளவுகடந்து அதிகமாயின. பின்பு ஆண்டவரவர்களை மனதார வாயாரத் துதித்துக்கொண்டு, இரண்டொருநாளில் நாகபட்டணம் வந்து நங்கூரமிட்டார்கள்.

கப்பல் கரைசேர்ந்த அன்றைத்தினமே ஹலறத்து ஆண்டவரவர்கள் மேற்படி நாவிதனை யழைப்பித்து, அவன் கூட ஒருபகீரைச்சேர்த்து: இன்றைத்தினம் நாகபட்டணத்தில் வந்துசேர்ந்த இன்ன கப்பற்காரனிடம் போய், இந்த நாவிதனுடைய கண்ணாடியை வாங்கிக்கொடும் என்று சொல்லியனுப்பினார்கள். அந்தபகீர் நாவிதனையழைத்துக் கொண்டு நாகபட்டணம்போய், மேற்படிக் கப்பற்காரனை விசாரித்துக் கண்டுபிடித்து: உங்கள் கப்பலில் இவனுடைய



கண்ணாடியிருக்கின்றது; அதை எடுத்துக் கொடுங்கள் என்று கேட்டார்.

கப்பலின் கம்பத்துக் கண்ணாடியாலேதான் அடை
பட்ட தென்று அவர்களுக்குத் தெரியுமா? தெரியாது
ஆண்டவரவர்களின் மகத்துவத்தால் எவ்விதமோ அடை
பட்டதென்றே நம்பியிருந்தார்கள். அப்படியிருக்க, இடை
யிற்போய்க் கண்ணாடி யென்று கேட்டால், அவர்கள்
என்ன அறிவார்கள்? பகீரைநோக்கி: ஏதுகண்ணாடி? யார்
கொடுத்தது? எங்கிருக்கின்றது? என்று மாலுமி சொன்
னான். அப்போது பகீர் மாலுமியைப்பார்த்து: கண்ணா
டியா? நீங்கள் நடுகடலில் அபாயமுண்டாய்த் தவிக்கும்
போது, உங்கள் கப்பற்கம்பத்தை அடைக்க எங்கள் ஆண்
டவரவர்கள் எறிந்த கண்ணாடி அது. அது இப்போது
உங்கள் கப்பலிற் பாருங்கள்; கம்பத்துத் துவாரத்தை
அடைத்துக் கொண்டிருக்கும் என்று சொன்னார்.

இதைக்கேட்ட மாலுமி ஆச்சரியப்பட்டு, ஆட்களை
விட்டுக் கப்பலின் வெளிப்புறத்தில் நாலாபக்கமுஞ் சோதி
த்துப் பார்த்தான். பகீர் சொன்னபடி அந்தக் கண்ணாடி
ஒரு பக்கத்தில் ஒடிந்த பலகைத் துவாரத்தில் ஒட்டி
அடைத்துக்கொண் டிருந்தது. உடனே அதையெடுத்து
பகீர்கையிற் கொடுத்து அநுப்பிவிட்டு, கப்பலைப் பழுது
பார்த்தார்கள். நாவிதன் தன் கண்ணாடியைப் பெற்றுக்
கொண்டு போய்ச் சேர்ந்தான்.

மேற்படிக்கப்பல் மாலுமி இச்செய்தியை நாகபட்ட
டணத்து அதிகாரிகளுக்குத் தெரிவித்தான்; அது ஊரெங்
கும் பரவிற்று. பின், அந்த மாலுமியும், கலாசுகாரரிற்
சிலரும், ஊராரிற் பலரும் கூடி, நேர்ந்து பாய்மரக்கயிற்
றிற் கட்டின காணிக்கை முடிப்பையும் எடுத்துக்கொண்டு
ஹலறத்து ஆண்டவர்களைத் தரிசிக்கவந்து, பாதங்களைப்

பணிந்து, காணிக்கையைச் சமர்ப்பித்து: எஜமானவர்களே,
நாகபட்டணத்தில் மழை பெய்யாமல் பஞ்சம் பிடித்திருக்
கின்றது. மழைபெய்யக் கிருபைசெய்யுங்கள் என்று
வேண்டிக்கொண்டார்கள். உடனே ஆண்டவரவர்கள் துஆ
செய்தார்கள். அப்போது மழைவருஷித்துப் பஞ்சம்
நீங்கி நாடு செழித்தது.

கம்பத்துக் கப்பலைக் கண்ணாடியாலடைத்தது முற்றிற்று.

---

௬௯-ம் அத்தியாயம்.

## பச்சைக்கராம்பழைத்தது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் நஸாறுக்களுக்
குப் பச்சைக்கராம்பை யழைத்துக்கொடுத்த வரலாற்றைச் சொல்லு
கின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது
ஆண்டவரவர்கள் கப்பற்கம்பத்தைக் கண்ணாடி கொண்டு
அடைத்ததும், பஞ்சந்தீர மழை பெய்வித்ததும், நாக
பட்டணத்திலுள்ள உலாந்தாக்காரர்களுக்கு மகத்துவமாகத்
தோற்றவில்லை. இவைகள் மாயாஜாலம் என்று அவர்களுக்
குள் நகைத்துப் பேசிக்கொண்டார்கள். மற்றக்கருமாத்து
களைப் பற்றியும் அவர்களுக்குத் திருப்தியில்லை. அதனால்,
அவர்கள் பின்னும் ஆண்டவரவர்களைப் பரீக்ஷிக்கவேண்டு
மென்று எண்ணி, எல்லாரும் கூடி ஒரு முடிவுபண்ணிக்
கொண்டு புறப்பட்டு, ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து:
எஜமானவர்களே, நாங்கள் எங்கள் ராச்சியத்தை விட்டு
வந்து நெடுங்காலமாயிற்று. எங்கள் தேசத்தில் பச்சைக்
கராம்பு அதிகம். அது இங்கில்லை. இப்போது நாங்கள்
அதைப்பார்க்க ஆசைப்படுகின்றோம். தாங்கள் அங்கிருந்து
அதை அழைத்துக் காட்டக்கூடுமா? என்று கேட்டார்கள்.



இதைக்கேட்ட ஹலறத்து ஆண்டவரவர்கள் யாதொரு
பிரதியுஞ் சொல்லவில்லை. உடனே தங்கள் வலதுகை
யைத் தாங்கள் போர்த்தியிருக்கும் போர்வைக்குள் இட்டு,
பூங்கொத்தும், தளிருஞ்செறிந்த முறிக்கப்பட்ட ஒரு கொம்
பையெடுத்து, அந்த நஸாறுக்களுக்குமுன் நீட்டினார்கள்;
அது, கமகமென்ற வாசனையுடன் பச்சென்று அன்
றொடித்ததா யிருந்தது. அதை அந்த நஸாறுக்கள் வாங்
கிப்பார்த்து ஆச்சரியமுற்று, நாதபட்டணத்திற்குப் போய்
விட்டார்கள். அப்போதுங்கூட, அவர்கள் மனம் உறுதிப்
பட்டு நம்பவில்லை.

அந்த நஸாறுக்கள் இதை நாம் கண்டறிய வேண்டு
மென்று, இங்கே நடந்த இக்காரணத்தையும், மாதம் திகதி
களையும் குறித்து ஒரு கடிதமெழுதி, அங்கே யார் தோட்
டத்திலாவது பச்சைக்கராம்பு முறிக்கப்பட்டிருக்கிறதா?
என்று கேட்டு, தங்கள் தேசத்துக்கு விரைவில் அனுப்பி
னார்கள். இந்தக்கடிதம் அங்கேபோனபோது, அங்குள்ள
வர்கள் எல்லாத் தோட்டங்களையும் பரிசோதித்து, ஒரு
தோட்டத்தில் ஒருமரத்தில் ஒரு சிறுகிளை முறிபட்டிருக்
கக்கண்டு, இன்னார் தோட்டத்தில் இன்னதினத்தில் நீங்கள்
எழுதின அடையாளப்படி ஒருகிளை முறிக்கப்பட் டிருக்
கின்றது. அது உண்மைதான் என்று வதிற்கடிதம் எழுதி
யனுப்பினார்கள்.

இந்தக் கடிதம் வந்தபின்புதான் நாகபட்டணத்தி
லுள்ள உலாந்தாக் கிறிஸ்தர்களுக்கு ஹலறத்து ஆண்டவ
ரவர்கள் மீது நம்பிக்கையும், பயபக்தியும் உண்டாயின.
அவர்கள் மகாத்துமாவென்றும், அவர்களின் கருமங்களெல்
லாம் மகத்துவமென்றும் ஒப்புக்கொண்டார்கள்.

ஒருநாள் அவ்வுலாந்தாக்காரர் அனைவருங்கூடி ஹல
றத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில்வந்து போற்றிப்

புகழ்ந்து: எஜமானவர்களே, நாங்கள் தங்களுக்குத் தொண்டர்கள். தங்கள் பணிவிடைசெய்ய என்றைக்கும் காத்திருக்கின்றோமென்று சொல்லிவிட்டு, பின் ஆண்டவரவர்களின் கட்டளை பெற்றுக்கொண்டு, சிறிய ஒரு * நாற்கால் மண்டபமும், அதற்கு மேல்புறத்தில் ஒரு † கிணறும் கட்டினார்கள். அவை இன்றைக்கும் பேர்பெற்று விளங்குகின்றன.

பச்சைக்கராம்பழைத்தது முற்றிற்று.

---

௬௭-ம் அத்தியாயம்.

## காணிக்கை நிலைப்பாடு.

---

[ இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தங்கள் காணிக்கைப்பொருட்களைச் சத்தியார்களுக்கு நிலைப்பாடாக்கின வரலாற்றைச் சொல்லுகின்றது.

ஹலறத்து பீருன் சுல்தான் ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் முதுபங்கில் வாழ்ந்திருக்கும் காலத்தில், பகீர்களில் நாலுபேர் பத்துப்பேராகக் கூடிக்கொண்டு, அடிக்கடி நாகபட்டணத்திற்குப் போய்வருவார்கள். அப்படிப் போய்வருகிறவர்கள் நாகபட்டணத்து அலங்காரங்களை ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களிடம் சொல்லிக் காட்டுவார்கள். இது இடைக்கிடை வழக்கமாயிருந்தது.

---

* நாற்கால் மண்டபமானது, தரீசாவுக்குள்ளிருக்கும் பீர் மண்டபத்தின் நடுவிலுள்ள நான்கு தூண்களையுடைய மண்டபம்.

† கிணறானது, குளிர்ந்த மண்டபத்திற்குத் தெற்கிலுள்ள மினகு முப்பும் சேர்ந்து போகிற இரட்டைக்கிணறு.



பகீர்கள் நாகபட்டணத்துச் சிறப்பை அடுத்தடுத்
துச் சொல்லக்கேட்ட சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்
களுக்கு நாமும் அங்கேபோய்ப் பார்த்துவரவேண்டுமென்று
ஆசை யுண்டாயிற்று, ஒருநாள் அவர்கள் தங்கள் தகப்
பனார் சமுகத்தில் வந்து பணிந்துநின்று: என் பிதாவே,
தமியேன் சில பகீர்களுடன் நாகபட்டணத்தைப் போய்ப்
பார்த்து வருகிறேன்; விடைதாருங்கள் என்று கேட்டார்
கள். அதற்கு ஆண்டவரவர்கள்: நல்லது, போய்வாரும்
என்று மகனாருக்கு விடைகொடுத்து அனுப்பினார்கள்.

தந்தையவர்களின் உத்தரவு பெற்றவுடன் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் சில பகீர்களுடன் கூடிக்கொண்டு நாகபட்டணத்திற்குப் போய், அங்குள்ள அரணிப்பான கோட்டையையும், அகழையும், அலங்காரமான உலாந்தக் கட்டிடங்களையும், கடைத்தெருக்களையும் பார்வையிட்டுக் கொண்டு, முஸ்லிம்கள் குடியிருக்கும் வீதிவழியே போனார்கள். அப்போது அங்குள்ள முஸ்லிம்கள் ஹலறத்து அவர்களின் முகவசீகரத்தையும், அவயவலக்ஷணங்களையுங் கண்டு அதிகமாக மகிழ்ந்து, ஒவ்வொரு வீட்டிலும் அழைத்துப்போய்ப் பசியாற்றி, அவரவரால் ஏன்ற பொருள்களைக் காணிக்கை வைத்து, உபசரித்து அனுப்பினார்கள்.

சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் நாகபட்டணத்து முஸ்லிம்கள் கொடுத்த காணிக்கைப் பொருள்கள் எல்லாவற்றையும் கையேற்றுவாங்கி ஒரு முடிப்பாகக் கட்டிக் கொண்டு, பின்னும் அங்கே பார்க்கவேண்டிய இடங்களையும் பார்த்துக்கொண்டு, கூடிப்போன பகீர்களுடன் மீண்டு முதுபங்குக்குவந்து, தாங்கள் வாங்கிவந்த காணிக்கை முடிப்பைத் தகப்பனாரவர்கள் சமுகத்தில்வைத்துக் கைகட்டி நின்றார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் மகனாரைப் பார்த்து: மகனே, நாகபட்டணம் போனீரா? அங்குள்ள மாட கூடங்களையும், கோட்டை கொத்தளங்களையும், அலங்கார வீதிகளையும் பார்வையிட்டீரா? உமது எண்ணம் நிறைவேறிற்றா? நல்லது, இந்த முடிப்பு என்னமுடிப்பு? என்று கேட்டார்கள். அப்போது மகனார்: ஆம்; பார்த்தேன். இது அவ்வூரார் எனக்கு உபசாரணைபண்ணிக் கொடுத்த காணிக்கைப்பொருள் என்று பிரதி சொன்னார்கள்.

இதை ஆண்டவரவர்கள் கேட்டு: மகனே, மனிதர்களின் பலவிதத்தீங்கின் நிமித்தம் கிடைக்கும் இந்தப் பொருள் தகாதபொருளென்று நீர் அறியவில்லையா? அதை உமக்கு அறிவிக்கின்றேன் பாரும் என்று சொல்லிவிட்டு, ஒருபகீரை நோக்கி: இதையெடுத்துப் பிழியும் என்று ஏவினார்கள். அவர் அந்தப் பணமுடிப்பையெடுத்துக் கையினாற் பிழிந்தார். அப்போது அதிலிருந்து சீழும், இரத்தமும் வடிந்தன. அதைக்கண்ட எல்லாரும் மனம்வாடி நின்றார்கள். ஹலறத்து அவர்களும் இந்தத் தீங்கான பொருளை உத்தரவின்றி ஒப்புக்கொண்டு வந்ததற்குத் தகப்பனாரவர்கள் என்ன பண்ணுவார்களோ என்று மனங்கலங்கி நின்றார்கள்.

பிறகு, ஆண்டவரவர்கள் மகனாரைப் பார்த்து: மகனே, உமக்கும், உமது சந்ததிகளுக்கும் காலகாலமும் அநுபவிக்கும்படி கீமியா என்னும் வாதவித்தையைக் கற்பிக்க நாடியிருந்தேன். அது உங்களுக்கு ஏற்றதல்லவென்று அல்லாகுத்தஆலா இதை நியமகமாக்கினான். உமக்கு வரும் காணிக்கைகளை உமது சந்ததிகள் அநுபவிப்பார்கள் என்று அல்லாகுத்தஆலா எனக்குத் தந்த வாக்கை நிறைவேற்ற வேண்டித்தான் உம்மை நாகபட்டணம் போய் இதை வாங்கிவரச் செய்தான். அவன் செய்வனவெல்லாம்



நன்மைக்காகவேயாயிருக்கும், எல்லாம் அவன் நாடியபடி நடக்கும். இவ்விதக் காணிக்கைப்பொருளே மீரும், இனி யுகமுடியும் வரையுமுள்ள உமது சந்ததிகளும் அநுபவிக்கிற பொருளன்றி, வேறில்லை. இந்தக் காணிக்கைப் பொருள் இனி யுகமுடியும்வரையும் முப்பத்துமூன்று வருஷத்திற்கு ஒருதரம் அதிகரித்துக்கொண்டேவரும். நடைக்குத் தடவை இரட்டிப்பாய்க்கொண்டு வளர்ந்து வரும். இவ்விதக் காணிக்கைதான் இனி உங்களுக்கு ஜீவனப்பொருள். "உலகத்திலுள்ள மனிதர்களுக்குள் யார் யாருக்கு எந்தெந்தவழி யேற்பட்டதோ அந்தந்த வழியில் நாம் இரணங்கொடுப்போம்" என்று அல்லாகுத்தஆலா சொன்னபடி, இந்தவழியை உங்களுக்குக் காட்டினான். இவ்விதமான இந்தக் காணிக்கைப்பொருள் உமக்கும், உமது சந்ததியாருக்குமே ஆகும். அது உங்களுக்கு ரத்தமாய் விடும். மற்ற அந்நியருக்குச் சிறிதும் ஆகாது. அவர்கள் மீறி அநுபவித்தால், அவர்களுக்கு அது சீழாய்விடும் என்று சொன்னார்கள்.

இதைக்கேட்ட ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் சஞ்சலந்தீர்ந்து, முகமலர்ந்தார்கள். பிறகு ஆண்டவரவர்கள் மகனாரைக் கூட்டிக் கொண்டு போய், முதுபக்கிலிருக்கிற கிணற்றைக்காட்டி: மகனே, இந்தக் கிணறு மகத்துவமுள்ள கிணறு. சுல்தான் ஸ்கந்தர்துல்கறுனைவர்கள் கட்டினது. இதில் தண்ணீரெடுத்து சுல்தான் ஸ்கந்தரவர்களும், நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்களும் உளுச் செய்து தொழுதார்கள். இப்போது நீர் இதை உற்றுப் பாரும் என்றார்கள். அவர்கள் பார்த்தவுடன் அந்தக் கிணற்றுள் செங்கழுநீர்க் கொடி யொன்று படர்ந்து பூத்திருந்தது. அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு நின்றார்கள். பின்னும் ஆண்டவரவர்கள் மகனாரைப்பார்த்து: மகனே, இந்த ராச்சியத்தில் ஏதும் ஒரு ஆபத்து உண்டாவதானால்,

அதற்கு முன்னமே உற்பாதமாக இந்தக்கிணற்றுள் இது போலச் செங்கழுநீர் பூக்கும். அதைக்கொண்டு வருகிற ஆபத்தை முந்தியே அறியலாம். அன்றியும், இந்தக் கிணற்று நீரால் பலவித ரோகங்களும் தீரும் என்று சொல்லி விட்டு, இன்றுமுதல் நீரே சமுசாரசகிதமாக இந்த முதுபக்கில் குடியிருந்து வாழ்வீராக. நான் என்சாகையை வெளியில் வைத்துக்கொள்கிறேன் என்று சொல்லி, மகனாரைவாழ்த்தி முதுபக்கில் வைத்துவிட்டு, தாங்கள் அதற்கு மேல்புறமிருந்த பெரிய ஒரு புளியமரத்து அடியில் சாகைபண்ணிக் கொண்டார்கள்.

அன்று முதல் ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்தப் புளியமரத்தின் கீழேதான் பெரும்பாலும் வாசஞ்செய் தார்கள். அந்தமரம் பீர்மண்டபத்திற்குச் சமீபத்தில் வடபுறமிருக்கும் நான்குகூட மண்டபத்திற்கு நடுவிலுள்ள முற்றத்தில் வெகு அடர்த்தியா யிருந்தது.

[ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவாக்குப் பிரகாரம், அவர்கள் உபாத்தானபின், அடிக்கடி சேரிடும் பஞ்சங்களுக்கு முன்னும், புசல்களுக்கு முன்னும், சென்னபட்டணத்து நவாபு தஞ்சாவூர்மீது படையெடுத்து வருமுன்னும் ஹைதர் கலகம் வருமுன்னும், திப்பு சுல்தான் ரணகளத்தில் ஷஹீதாகுமுன்னும் முதுபக்குக் கிணற்றில் செங்கழுநீர் பூத்ததென்று சொல்லப்படுகின்றது. காலம்குறுகிக் காரியமும் பிறழ்ந்த பின்பு, அவ்வித உர்பாதம் உண்டாவது நின்று போயிற்று.]

காணிக்கை நிலைப்பாடு முற்றிற்று.

௬அ-ம் அத்தியாயம்.

## பார்ப்பாருருக்குப் போனது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பார்ப்பாருருக்குப்போய் விருந்துண்டு, காணாமற்போனகப்பலை அழைத்துக் கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்சுல்தான் ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் முதுபக்கிலிருந்து புளியமரத்தடியில் வந்து சாகைபண்ணினபின், அடிக்கடி அதற்கு மேல் புறத்திலுள்ள ஒரு மணல்மேட்டில் உட்கார்ந்திருப்பார்கள்.

[அந்த மணல்மேடு ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹி ஆண்டவரவர்கள் அடங்கியிருக்கும் இடத்திலிருந்தது.]

ஒருநாள் ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த மேட்டில் உட்கார்ந்திருக்கும்போது, பார்ப்பாருரிலுள்ள இஸ்லாமான வர்த்தகர் ஒருவர் வந்து ஸலாம் சொல்லிப் பணிந்து நின்று: எஜமானவர்களே, தமியேன் தங்களுக்கு விருந்து கொடுக்க வேண்டுமென்று பலநாளாக நாடியிருந்து, இன்றைத்தினம் எனக்கேன்றமட்டில் சில தீன்கள் தயார் பண்ணி வைத்துவிட்டு, தங்கள் சமுகத்திற்குத் தெரியப் படுத்தும்படி வந்தேன். தாங்கள் எளியேன்மீது கிருபை கூர்ந்து, தங்கள் திருவடிகளை என் சிற்றிலில் வைத்தருள வேண்டும் என்று பலவாறு புகழ்ந்து கேட்டுக்கொண்டார். அதற்கு ஆண்டவரவர்களையும், மகனார் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களையும், தபோதனர்களாகிய பகீர்களில் பலரையும் விருந்துக்காக அழைத்துக்கொண்டு பார்ப்பாருருக்குப்போனார். இதற்கிடையில் அவர் வீட்டில் புலவுச்சாதம் முதலான பலவித பதார்த்தங்கள் திட்டஞ் செய்யப்பட்டிருந்தன.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அந்த வர்த்தகர் வீட்டிற் போய்ச் சேர்ந்தவுடன், அவர் ஆண்டவரவர்களுக்காக அலங்கரித்திருந்த இடத்தில் அழைத்துப்போய் இருக்கச் செய்தார். ஆண்டவரவர்கள் அங்கிருக்கவே, மற்றவர்களும் தரந்தரமா யுட்கார்ந்திருந்தார்கள். பின் விருந்து கொடுக்கப்பட்டது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் முதலான அனைவரும் விருந்துண்டு முடிந்தபின், அந்த வர்த்தகர் தாமேயெழுந்து சந்தனம், புஷ்பம், தாம்பூலங்கள் பரிமாறினார். விருந்து விஷயம் சம்பிரமமாய் முடிந்தது. ஆண்டவரவர்கள் வீற்றிருக்கும் அந்தச்சபை அதிக அமைதியாயிருந்தது. பிறகு, விருந்துகொடுத்த வர்த்தகர் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கைகட்டிநின்று: எஜமானவர்களே, தங்கள் சமுகத்தில் தமியேன் சொல்லிக்கொள்ள வேண்டிய ஒரு முறையீடுண்டு. அது :—எனக்கு இரண்டு கப்பல்கள் சொந்தமா யிருக்கின்றன அவ்விரண்டையும் நிறைசரக்குடன் இங்கிருந்து பத்தாவியாவுக்குப் பாய்விரித் தனுப்பினேன். அவைபோய் அதிகநாளாயின. அவற்றின் சங்கதியொன்றும் இன்னுந் தெரியவில்லை. அதனால் என்மனம் சஞ்சலத்தில் அமிழ்ந்திக் கிடக்கின்றது. தேவரீர் தாங்கள் எளியேன்மீது அன்புகூர்ந்து, அக்கப்பல்கள் சிந்தாயாத்திரையாய் வந்துசேரச் செய்யவேண்டும். இது வொன்றே என்முறைப்பாடு என்று சொன்னார்.

அந்தவர்த்தகர் சொன்ன இந்த முறைப்பாட்டை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டு, அதற்கு யாதொரு பிரதியும் சொல்லவில்லை. பேசாமல் வாயை மூடிக்கொண்டு, தங்கள் சாகைக்குவர எழுந்தார்கள். எழும்போது, அவர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தில் சாய்ந்து கொள்ளவும், துடைகளுக்கு வைத்துக்கொள்ளவும் போட்டியிருந்த வில்



லாதித் திண்டுகளில் இருதுடைகளுக்கும் இட்டிருந்த இரண்டு திண்டுகளையும் இருகைகளாலும் இடுக்கிக் கக்கத்தில் அணைத்துத் தூக்கிக்கொண்டு எழுந்தார்கள். அதன் மர்மம் அந்த வர்த்தகருக்கு என்னவென்று தெரியுமா? தமது அழகிய திண்டுகளை ஆண்டவரவர்கள் எடுத்துக் கொண்டு போகின்றார்களென்றே நம்பினார். அப்படி நம்பினவர் பின்னும் ஆண்டவரவர்கள் நமது இரண்டு திண்டுகளையும் கொண்டு போகின்றார்களே ஒன்றை வைத்துவிட்டு, ஒன்றையாவது கொண்டுபோகக் கூடாதா! என்று தமது இருதயத்தில் எண்ணினார். காரணநாயகர் கருத்தையறியாத அவர் இப்படி யெண்ணின மாத்திரத்தில் ஆண்டவரவர்கள் சட்டென்று ஒருகக்கத்துத்திண்டை நழுவ விட்டு, மற்றொரு திண்டைமாத்திரம் தூக்கிக்கொண்டு வெளியில்வந்து, அந்தத்திண்டையும் ஆகாயத்தில் வீசி யெறிந்துவிட்டு, முதுபக்கத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

இது நடந்த சிலநாட்களுக்குப்பின் அந்த வர்த்தகருடைய இரண்டு கப்பலில் ஒன்றுமாத்திரம் சிந்தாயாத்திரையாய் நாகபட்டணத்துறையில்வந்து சேர்ந்தது. மற்றொன்று வரவேயில்லை. அப்போது வர்த்தகர் வந்த கப்பல் மாலுமியைப்பார்த்து: அதிகநாள் சென்ற காரணம் என்ன? இன்னொருகப்பல் எங்கே? என்றுகேட்டார். அதற்கு அவன்: நாங்கள் இரண்டு கப்பலும் ஒன்றாகவே பாய் தூக்கி ஓடிவந்தோம். நடுக்கடலில் வரும்போது இரண்டுக்கும் ஒன்றாகவே கம்பத்துக் கண்டது. அதனால் ஓட்டொழிந்து, நீரிறைத்துக்கொண்டு நடுக்கடலில் கிடந்து தவித்தோம். திடீரென்று இந்தக்கப்பல் நீரற்றுச் சுகமா யோடிற்று. மற்றொரு கப்பல் நாங்கள் பார்த்திருக்கக் கடலில் மூழ்கிப்போயிற்று. நாங்கள்மாத்திரம் அபாயமின்றி வந்துசேர்ந்தோம் என்று சங்கதி சொன்னான்.

இதைக்கேட்ட வர்த்தகர் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து அடிபணிந்து நின்று : எஜமானவர்களே, ஒருகப்பல் மாத்திரம் வந்துசேர்ந்தது. மற்றொருகப்பல் கடலில் முழுகிப் போயிற்றும் என்று முறையிட்டார், தாமாக் கெடுத்துக்கொண்டு தவிக்கும் அவர் முறைப்பாட்டைக் கேட்ட ஆண்டவரவர்கள் அவரைப்பார்த்து : கடலில் முழுகிப்போகுந் தறுவாயிலிருந்த உமது இரண்டு கப்பல்களையுமே கரைசேரும்படி கைதூக்கி விடுவதற்காக உமதுவீட்டில் இரண்டு தின்டுகளையும் நான் தூக்கினேன். நீர், ஒன்றை விட்டுவிட்டு ஒன்றைக் கொண்டுபோகக் கூடாதா? என்று எண்ணினீர். உமது எண்ணப்படி ஒன்றை விட்டுவிட்டேன். அதனால் ஒருகப்பல் ஆழ்ந்தது; மற்றொன்று வந்தது என்று காரியத்தை வெளியிட்டுச் சொன்னார்கள். அந்த வர்த்தகர் இதைக்கேட்டு, தாம் அறியாமையால் நினைத்ததற்காகக் கவலைப் பட்டவராய், ஆண்டவரவர்களைப் போற்றிப் புகழ்ந்து விடைபெற்றுக் கொண்டு, பார்ப்பாரூர் போய்ச்சேர்ந்தார்.

பார்ப்பாருருக்குப் போனது முற்றிற்று.

---

௯௯-ம் அத்தியாயம்.

## பிளவைநோய் தீர்த்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் நாகபட்டணத்து இராயதுஞ்சாலி மரைக்காயருடைய பிளவை நோயைத் தீர்த்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது ஆண்டவரவர்களை நாகபட்டணத்து முஸ்லிம்களில் அநேகர் பிரதிதினமும் வந்து தரிசனை பண்ணிக்கொண்டு போவது வழக்கமாயிருந்தது. அந்நாளில் நாகபட்டணத்தில் பாக்கியவந்தரும், ஊர்த்தலைவருமாக இராயதுஞ்சாலி மரைக்காயர் என்றொருவர் வாழ்ந்திருந்தார். அவர் ஒருநாள் தமது ஊராரைப் பார்த்து : நீங்கள் ஏன் அடிக்கடி அந்த பகீரிடத்திற் போகின்றீர்கள்? அவர் கஞ்சாப்புகை குடிக்கிறவர். அவரிடத்தில் உங்களுக்கு என்னவேலை? இனி ஒருவரும் போகாதீர்கள் என்று ஆஞ்ஞைபண்ணினார். அவர் தங்கள் தலைமைத்தனக்காரராகையால், எல்லாரும் அவர் சொல்லுக்கு அடங்கி நின்றுபோனார்கள். அன்றுமுதல் ஒருவரும் ஆண்டவரவர்களைக் காணவருகிற தில்லை.

மேற்படிமரைக்காயர் கர்வம்பிடித்து மதிகெட்டு அந்தச் சொல்லைச்சொன்ன அன்றைத்தினமே அவர் வாயில் பாரிய பிளவையொன்று கிளம்பி, அது வரவரப்பருத்து வீங்கிவெடித்துப் புழுக்கள் சொரிந்தது. அதனால், அவர் பட்டவேதனை கொஞ்சமல்ல. இராப்பகலாக அன்ன ஆகாரமற்றுக் கிடந்துவருந்தினார். அவர் பண்ணிக்கொண்ட பக்குவ பரிகாரங்கள் ஒன்றினாலும் காரியப்படவில்லை. பெரியோரைப் பழுதுபேசின கருமத்தினால் நேரிட்ட சண்டாள ரோகத்திற்கும் பரிகாரம் எது!

அல்லாதுந்த ஆலாவின் குத்பை வாய்கூசாமல் பழுது பேசினதால் சம்பவித்த தீங்கு இது என்று அவர் எண்ணத் தில் வரவில்லை. ஒருநாள் அவர் தமது சிநேகிதராகிய ஸையிது மதுநாம் என்பவரை யழைப்பித்து அருகிலிருத்தி: நான் தீனுல்லிஸ்லாத்தின் பிரகாரம் ஒரு அணுவளவும் தவறாது நடக்கிறவனாயிருக்க, இந்த ரோகம்வரக் காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு ஸையிது மதுநாம் அவ ரைப்பார்த்து: நீர் அறியவில்லையா! அல்லாதுந்தஆலாவுடைய ஒலியும், குத்பு மானவர்களை நீர் நிந்திக்கவில்லையா! பலர் அறிய நிந்தனை பேசினீரே! அதனாலேதான் நிந்தனைபேசின வாயில் அல்லாதுந்த ஆலா இதையுண்டாக்கினான். இது கர்மவியாதி. இதற்கு மருந்துமில்லை. மந்திரமுமில்லை. நீர்போய் அந்த ஆண்டவரவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும். அப்படிச் செய்தாலன்றி, இது தீராது என்று மறுமொழி சொன்னார்.

இதைக்கேட்ட மரைக்காயர்: ஆம், சரிதான். அத னாலேதான் இந்தவியாதி எனக்கு வந்தது. ஆனால், நான் அந்த ஆண்டவரவர்களின் முகதாவிற்போகப் பயப்படு கிறேன். நீரும் என் கூடவந்து, எனக்காக அவர்களிடம் பரிந்து பேசுவீரானால் வருகிறேன். தயவுசெய்து வருகி றீரா? என்று கேட்டார்.

இதற்கு அவர் நல்லதென்று சம்மதித்து, மரைக் காயரை ஒரு பல்லக்கில் ஏற்றிக்கொண்டுவந்து ஒரு மறைவில் வைத்துவிட்டு, தாம் மாத்திரம் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் வந்து கைகட்டிநின்று: எஜமானவர்களே, நாகபட்டணத்து இராயதுஞ்சாலிமரைக் காயர் என்பவர் தங்களை மதிப்புக்குறைவான கெட்ட சொற்சொல்லி நிந்தித்தாராம். அதனால் அவர் வாயில் பிளவை கிளம்பி, அதிகம் பாடுபடுகின்றார். இப்போது தாம் பேசினது தவறென்று கண்டு, தங்களிடம் மன்னிப்புக்



கேட்க என்னையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றார். தங்கள் முகதாவில் வர அஞ்சுகிறார். அவர்செய்தது இது வொருதவறன்றி, மற்றவையெல்லாம் நன்மையாகவே நடக்கின்றார். தாங்கள் அல்லாதுந்தஆலாவுக்காக வேண்டி அவர்பிழையைப் பொறுத்து, வந்தநோய் தீரும்படி மனதிரங்கி ரக்ஷிக்கவேண்டுகின்றேன். எஜமானவர்களே, தயவு செய்யுங்கள் என்று கெஞ்சி மன்றாடினார்.

ஸையிது மதுநாம் என்பவர் இராயதுஞ்சாலி மரைக்காயருக் காகப் பரிந்து பேசினதை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டுக்கொண்டிருந்து, யார்யார் என்னென்ன தீங்குகள் செய்தாலும் உடனுக்குடன் நன்மையையே செய்யும் வழக்கப்படி அவரைப்பார்த்து: நல்லது; அந்த மரைக்காயரை இங்கே கொண்டுவாரும் என்று உத்தரவு செய்தார்கள். உடனே அவர் ஓடிப்போய் இராய துஞ்சாலி மரைக்காயரை அழைத்துவந்து ஆண்டவரவர்களின் பாதாரவிந்தத்தில் விட்டார்.

உடனே மரைக்காயர் குப்புறவிழுந்து: எஜமானவர் களே, சிறியேன் தங்கள் மகத்துவத்தை இன்னபடியென்று அறியாதபடியால், வாய்கொழுத்துப் பேசிவிட்டேன். அதனால் நான் பட்டபாடு போதும். இனி என்னை ரக்ஷிப்பது தங்கள் கடன் என்று புலம்பி அழுதார். அழவே, ஆண்டவரவர்கள் அவர்மீது மனதிரங்கி, அவர் பேசினதைமன்னித்துக்கொண்டு, தேவாமிர்தம் போன்ற தங்கள் திருவாய் உமிழ்நீரை அவர்வாயில் பிளவையிற்பட உமிழ்ந்தார்கள். உடனே அந்தப் பிளவை முற்றிலும் அற்று, வாய் முன்போலச் சுகமாயிற்று.

பிளவைநோய் தீர்ந்து சுகம்பெற்ற இராயதுஞ்சாலி மரைக்காயர் ஆண்டவரவர்களைப் பணிந்து திருவடிகளைத் தொட்டு முத்தமிட்டுக்கொண்டு, வாயாரப்புகழ்ந்து, பின்:

எஜமானவர்களே, தாங்கள் என்னை ரக்ஷித்ததுபோல என் குடும்பத்தையும், ஊராரையும் ரக்ஷிக்க வேண்டி நாகபட்டணத்திற்கு எழுந்தருள வேண்டும் என்று மன்றாடினார். ஆண்டவரவர்கள் அதற்கு உடன்பட்டு, அவர்கூடவே நாகபட்டணம் போனார்கள்.

இராயதுந்நாலி மரைக்காயர் ஹலறத்து ஆண்டவரவர்களை அழைத்துக்கொண்டுபோய், தாம்கட்டின குத்பாப் பள்ளியில் மூன்று நாள்வரையும் இருக்கச்செய்து, ஊராரைக்கொண்டு சம்பிரமமான விருந்துகள் கொடுப்பித்து, தாமும் கொண்டாட்டமான பெரும்விருந்து கொடுத்து, அவர்களின் துஆ பறக்கத்தைப் பெற்றுக் கொண்டு, அதிக மரியாதையுடன் அநுப்பினார். மூன்று நாளுக்குப்பின் ஆண்டவரவர்கள் சாகைக்கு வந்தார்கள்.

பிளவைநோய் தீர்த்தது முற்றிற்று.

---

## ௪00 - ம் அத்தியாயம்.

## வாஞ்சூருக்குப் போனது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் வாஞ்சூரிற் போய் கல்வத்திருந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல் ஹமீது கன்ஜுஸவாய் ஆண்டவரவர்கள் ஒருநாள், குடும்ப விஷயத்தைத் தங்கள் மகனாரிடம் எச்சரிக்கை பண்ணிவிட்டு, சில பகீர்களை யழைத்துக் கொண்டு ஆற்றுக்கு வடபுறம் இருக்கும் * வாஞ்சூருக்குப் போனார்கள். அவ்வூர் அந்தக்காலத்தில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, மேலைவாஞ்சூர் என்றும், கீழை வாஞ்சூர் என்றும் இருகூறுயிருந்தது.

---

* வாஞ்சியென்று பேர்போன ஒருவன் குடியிருந்ததால் வாஞ்சியூர் என்று பேர்பெற்று, பின்வாஞ்சூர் என்றுமருவிவழங்குகின்றது.



அவ் விருபாகத்துள் ஆண்டவரவர்கள் கீழைவாஞ்சூருக்குப்போய், அங்கே தனித்த ஓரிடத்தில் கபுறளவில் ஒரு பள்ளம் அகழ்வித்து, அதில் இறங்கியிருந்துகொண்டு, அதன்மேல் பலகைகொண்டு மூடச்சொல்லிவிட்டு, அன்ன ஆகாரமின்றி கல்வத்தென்னும் யோகத்தி லிருந்தார்கள். நாற்பது நாள்வரையும் அந்தப்பள்ளத்தில் ஒரேயிருப்பாய் கல்வத்திருந்து, நாற்பது நாட்களுந் தீர்ந்தபின் வெளியில் வந்து, அன்றைக்கே தங்கள் பாட்டனார்மார்களாகிய நபி முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் பேரிலும், குத்புல்லக்தாபு ஹலறத்து சையிது முகியித்தீன் அப்துல்காதிறு ஜைலானி றலியல்லாகு அன்கு அவர்கள் பேரிலும் பாத்திஹாவோதி, கந்தூரிகொடுத்தார்கள். கொடுத்த கந்தூரியின் சோறு கறிகள் வேறே அரிசிமுதலியனகொண்டு சமைத்துக் கொடுக்கவில்லை; தாங்கள் கல்வத்திருந்த வெறும்பள்ளத்தில் தங்கள் கையையிட்டுப் பலவகைக்கறிகளும், நறுமணமுள்ள புலவுச்சோறுமாக அள்ளியள்ளி எவரும் அதிசயிக்கத்தக்கதாக வந்தவர்களுக்கெல்லாம் கொடுத்தார்கள்.

இவ்விதம் ஆச்சரியத்துடன் கந்தூரிகொடுத்துவிட்டு, தாங்கள் கல்வத்திருந்த தானத்தில் ஒரு பள்ளிகட்டும்படி கட்டளை பண்ணினார்கள். அந்தக் கட்டளைப்படி சில தினத்திற்குள் அங்கே ஒரு சிறுபள்ளி கட்டப்பட்டது. அதன்பின் ஆண்டவரவர்கள் தங்கள் சாகைக்கு மீண்டு வந்தார்கள்.

[அப்போது கட்டின அந்தப்பள்ளிதான் இன்றைக்கும் வாஞ்சூர்ப்பள்ளிவாசல் என்று, வருஷத்திற்கு ஒருதரம் திருவிழாநடந்து விளங்குகின்றது. பிரார்த்தனைக்குத் திரள்திரளாக ஜனங்கள் அங்கே போகின்றார்கள். இப்போது அது புரான்ஸி ராஜாங்கத்திற்குள்ளிருக்கின்றது. இருந்தாலும், அதன் பரிபாலனம் நாகூர் தர்காவின் ஆதினத்திலிருந்தே நடந்து வருகின்றது.]

வாஞ்சூருக்குப்போனது முற்றிற்று.

---

## ௪௦௯-ம் அத்தியாயம்.

# புதையலை வெளியாக்கினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் பரதர்கள் புதைத்துவைத்துக் காணாமற்போன பொருளை வெளியாக்கிக் கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது பாத்ஷா ஆண்டவரவர்களின் குடியிருப்புக்குக் கொஞ்சங் கிழக்கில் கடலருகில் மீன்பிடிகாரர்களாகிய பரதர்கள் குடியிருக்கும் பட்டினச்சேரி மாத்திரம் ஒன்றிருக்கிறதென்று முன் சொல்லப்பட்டதே, அந்தச்சேரியிலுள்ள பரதர்கள் ஆண்டவரவர்கள் சமுகத்திற்கு அடிக்கடிவந்து ஊழியஞ் செய்து கொண்டிருந்தார்கள். இது ஆண்டவரவர்கள் அங்குவந்து தங்கின காலந்தொடங்கி வழக்கமாய் நடந்துவந்தது.

மேற்படிப் பரதர்களில் சிலர்கையில் கொஞ்சம் பணஞ் சேர்ந்து விட்டது. அந்தப்பணக்காரர்கள் ஒருநாள் ஒன்று கூடி: நாம் பணம் வைத்திருப்பது நமது சேரித்தலைவனாகிய சேர்ப்பன் அறிந்தால், பிடுங்கிக்கொள்வான். ஆகையால், அப்பணங்களையெல்லாம் கணக்குப்படி ஒன்றாகச்சேர்த்து ஒருமுடிப்பாக்கி, நிலத்தையகழ்ந்து புதைத்துவைப்போம். தேவையானபோது எடுத்துக்கொள்ளலாம் என்று பேசித் தீர்மானித்து, அவ்வாறே அந்தப் பணங்களையெல்லாம் சேர்த்து ஒருமுடிப்பாக்கி, தங்கள் சேரியில் ஒரு ஒதுக்கிடத்தில் ஆழமான குழியொன்று வெட்டி, அதில் புதைத்து வைத்தார்கள். இந்தரகசியம் அவர்களுக்கன்றி மற்ற யாருக்கும் தெரியாது.

சிலகாலத்திற்குப்பின் அவர்களுக்குப் பணந்தேவை யாயிருந்தது. அந்த முடிப்பின் பங்குக்காரர் எல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்து, புதைத்த குழியின்படி வந்து தோண்டிப்



பார்த்தார்கள்; பணமுடிப்பு இல்லை. பின் நாலாபக்கமும் தோண்டிப் பார்த்தார்கள்; ஒருபக்கத்திலும் காணவில்லை. நாங்கள் புதைத்த இடத்தைச்சேர அங்குமிங்குமாகப் பல இடத்திலும் கைசலிக்க வெட்டியகழ்ந்து, மணலைக் கிண்டிக் கிளறிப் பார்த்தார்கள்; பணமுடிப்பு அகப்படவேயில்லை. பின்பு அவர்கள்: இதென்னமாயம்! யாரும் பார்த்திருந்து கவர்ந்து கொண்டார்கள் போலும்! அல்லது பூதங்களே மறைத்துக்கொண்டனபோலும்! இன்னதென்றும் தெரியவில்லையே யென்று உள்ளஞ்சோர்ந்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, பின்பு, இதைப்போய் ஆண்டவரவர்கள் சமுகத்தில் முறையிடலாமென்று முடிவுசெய்துகொண்டு, அவர்கள் அத்தனைபேரும் கூடிக்கொண்டு ஆண்டவரவர்கள் சமுகத்திற்கு வந்தார்கள்.

வந்தபரதர்கள் ஹலறத்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் கைகட்டிநின்று: எஜமானவர்களே, எங்கள் பணங்களைச் சேரித்தலைவன் பிடுங்கிக்கொள்வானென்று பயந்து ஒன்றாகச்சேர்த்து முடிந்து, நிலத்தைத்தோண்டிப் புதைத்து வைத்தோம். இன்று போய் நாங்கள் வெட்டிப்பார்க்க அது அகப்படவில்லை. தேவரீர் அதை வெளியாக்கித்தர வேண்டும். நாங்கள் ஏழைகள் என்று சொல்லிக் கெஞ்சினார்கள். இதைக்கேட்டவுடன் ஆண்டவரவர்கள் தாங்கள் உலுசெய்து மீந்திருந்த தண்ணீரை ஒருபாத்திரத்தில் ஊற்றி, சில அஸ்மாக்களையோதி அதில் ஊதி, அவர்கள் கையிற்கொடுத்து: நீங்கள் இதைக்கொண்டுபோய், பணம் புதைத்த இடம் பார்த்துத் தெளித்துவிட்டு, பின்பு தோண்டிப் பாருங்கள்; உங்கள் பணமுடிப்பு அகப்படும் என்று சொல்லியனுப்பினார்கள்.

அந்தப்பரதர்கள் தண்ணீரைவாங்கிக் கொண்டுபோய்ப் பணம்புதைத்த இடத்தில் தெளித்து, பின் தோண்டினார்கள். அவர்கள் வைத்தமுடிப்பு வைத்தாற்போல இலகு

வாய் அகப்பட்டுக்கொண்டது. அதனால், அவர்கள் அளவற்ற சந்தோஷத்துடன் அதை யெடுத்துவந்து ஆண்டவரவர்கள் சமுகத்தில் தெரிவித்துவிட்டு, அதிக தோத்திரஞ் செய்து விடைபெற்றுக்கொண்டு போனார்கள்.

புதையலை வெளியாக்கினது முற்றிற்று.

---

௧௦௨ - ம் அத்தியாயம்.

## புளியமரம் பேசினது

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுடன் புளிய மரம் பேசின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் சாதைபண்ணிக்கொண்டிருக்க இடம் ஒரு புளியமரத்தின் அடியல்லவா? ஒருநாள் ஆண்டவரவர்கள் தனித்து அந்த மரநிழலில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது அந்தமரம் ஆச்சரியகரமாக ஆண்டவரவர்களைக் கூப்பிட்டு: எஜமானவர்களே, நான் தங்கள் சமுகத்தில் ஒரு மனுப்பண்ணிக் கொள்கின்றேன், அதாவது:—தாங்கள் என் நிழலில் உட்கார்ந்து, என்மீது சாய்ந்து, என்னை மேன்மைப்படுத்திவருகின்றீர்கள். அதனால் நான்பெற்ற பாக்கியத்தைப்போல மற்ற எந்தமரமும் பெற்றிராது. ஆனால், இனி, என்னிலிருந்து வித்து விழுந்து கன்றுகளாய், மரங்களாய், அசுசியான இடங்களிலும், அசுசியான விஷயங்களிலும் சம்பந்தப்படுவதைப்பற்றி விசனப்படுகிறேன். அதற்காகத் தேவரீர் ஒரு காரியஞ்செய்யவேண்டும். என்னவென்றால்:—நான் பூத்து, காய்த்து, பழுத்திருக்கத்தான் வேண்டும். அப்படியிருந்தாலும், என் பழத்தில் வித்தில்லாதிருக்கும்படி வேண்டுகின்றேன். அப்படியேயாகத் தாங்கள் கிருபைசெய்ய வேண்டும் என்று சொல்லிற்று.



புளியமரம் சொன்ன இந்தச்சொல்லை ஹலறத்து ஆண்டவரவர்கள் கேட்டுச் சந்தோஷப்பட்டு, அதைப் பார்த்து: மரமே, உன் பிரியப்படியே உனக்கு வித்தில்லாமற்போகக் கடவது; நீ நீண்டகாலம் வளர்ந்தோங்கி நிற்கக்கடவது; உன் பட்டையை, இலையை உபயோகித்த எந்த நோயாளிக்கும் எந்தநோயானாலும் தீரக்கடவது என்று வாக்குக் கொடுத்தார்கள்.

[ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவாக்குப்படி அந்தப் புளிய மரம் பழுத்தும் வித்தற்றதாய், நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாய், வெகுகாலம் வரையும் நின்று, அதன்பின் பட்டுப்போயிற்று. அதன் வேரிலிருந்து கிளைத்த மற்றொரு சிறுமரம் சிலகாலம் நின்று, கொஞ்சக்காலத்திற்குமுன் அடித்த புசலால் விழுந்து விட்டது.]

புளியமரம்பேசினது முற்றிற்று.

---

௧௦௫ - ம் அத்தியாயம்.

## உபாத்து.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுடைய உபாத்தின் வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து குத்புல்லக்தாபு, கௌதுல் இஸ்லாம், மீரான்சுல்தான், சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது கன்ஜஸவாய், கன்ஜபக்ஷ் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் மகத்துவம் உலகமெங்கும் பரவிவிளங்க வாழ்ந்திருக்கும் காலத்தில், அவர்கள் மகனார் ஹலறத்து ஷாஹா சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் தங்கள் மனைவியாருடன் தகப்பனாரவர்களின் பணிவிடையில் அமர்ந்து, முதுபக்து என்னும் மகத்துவ மண்டபத்தில் அதிக சிறப்புடனும், ஆநந்தத்துடனும், ஆண்மக்கள் அறுவரையும், பெண்மக்கள் இருவரையும் பெற்று, புத்திரபாக்கியத்

திலும் குறைவற்று வாழ்ந்தார்கள். ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் பௌத்திரர்மீது அதிக அன்பு பாராட்டி வந்தார்கள். அப்பிள்ளைகளின் நாமங்கள் :—1. ஷாஹறா பாபாபதுறுந்தீன், 2. ஷாஹறா ஹமீதுல் ஆஷிக்கீன், 3. ஷாஹறா சுல்தான்கபீர், 4. ஷாஹறா சுல்தான்ஹுஸங்கானி, 5. ஷாஹறா சுல்தான் நாறுத்தீன்காமிலி, 6. ஷாஹறா சுல்தான்சகீர், 7. ஜுஹறு பீவி, 8. பாத்திமாபீவி. ஆக இந்தப் பௌத்திர பௌத்திரிகள் எட்டுப்பேர்களில் மூன்றும் பௌத்திராகிய ஷாஹறா சுல்தான்கபீர் சாகிபவர்கள் மீதே ஆண்டவரவர்கள் அதிக அன்புடையவர்களாய், அவர்களை அடிக்கடி மடிமீது வைத்துக்கொண்டு உவந்திருப்பார்கள்.

நானா தேசத்தாரும் நாலாபக்கங்களிலிருந்து வந்து தங்கள் திருவடிகளைத் தரிசித்துப் போகும் மகத்துவத்துடனும், புத்திர பௌத்திரர்களாலான சம்பத்துடனும், பட்டினச்சேரிப் பரதர்கள் ஊழியஞ்செய்ய, சிஷர்களான நானூற்று நான்கு தபோதனர் புடைமருவியிருக்க ஹலறத்து ஆண்டவரவர்கள் வாழ்ந்திருக்கும் காலத்தில், அவர்களுக்கு * அறுபத்தெட்டு வயது நிரப்பமாயிற்று. தங்களின் அறுபத்தெட்டாம் வயது நிரப்பமாய்த்திரும் ஹிஜ்றத்துத் தொளாயிரத்து எழுபத்து எட்டாம் வருஷம், ஜமாதுல்லாகிறுமாதம், பத்தாந்திகதி, வெள்ளிக்கிழமை யிரவானவுடன், தங்கள் துன்யாவிலின்று ஆகிறுவுக்குப் பிரயாணப்படும் நாள் இதுதான் என்பதை முன்னமே அறிந்திருப்பதால், அன்றிரவு தங்கள் சாகையை முதுபத்துக்குள் வடகிழக்கு மூலையில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு அங்கேயே யிருந்தார்கள்.

* அறுபத்தெட்டுவயது, முறையே பதினெட்டுவயது பிதாமாக்கள் சகவாசத்திலும், பத்துவயது ஆசிரியர்சகவாசத்திலும், பனிரண்டுவயது பரதேச சஞ்சாரத்திலும், இருபத்தெட்டு வயது முதுபத்திலமாக முடிந்தனவென்று காரணப்புராணஞ் சொல்லுகின்றது.



அன்றிரா இஷாதொழுதபின் ஹலறத்து ஆண்டவரவர்கள் தங்கள் அருமைமகனார் ஹலறத்துஸையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களைத் தனியே யழைத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு: மகனே, மரணம் என்கிற மவுத்தை நீர் இன்னதென்று அறிவீரா? அது ஒருபாலம். என்ன பாலமென்றால்; ஒருவன் எதை உவந்திருக்கின்றானோ அதிற் கொண்டுபோய்ச் சேர்க்கும் பாலம். அல்லாஹுத்தஆலா எனக்கு நியமித்த மவுத்தின் வேளை இப்போது வந்துவிட்டது. இன்றைத்தினம் நான் அவனைநாடிப் பிரயாணப்படப் போகின்றேன் என்று ரகசியமாகச் சொன்னார்கள்.

இந்தச்சொல் செவிக்குள் நுழைந்தபோது ஸையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் உடலயர்ந்து, உள்ளஞ்சோர்ந்து, மதிமயங்கி, முகம்வாடி, கண்களிலிருந்து தண்ணீர் தாரைதாரையாயோட அழுதார்கள். நபிமுகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் உபாத்தாய் விட்டார்கள் என்ற சொல் காதில்விழுந்தபோது அமீறுல் மூமினீன் உமறுறலியல்லாகு அன்கு அவர்கள் ஸ்மரணையற்று, தங்கள் பட்டயத்தை யுருவிக் கையிற்பிடித்துக்கொண்டு: யாராகுதல் நபிநாயகரவர்கள் உபாத்தாய் விட்டார்களென்று சொன்னால், இரண்டாப் பிளந்தெறிவேன் என்று புலம்பிக்கொண்டிருந்தார்களானால், மவுத்து என்னும் சொல்லைக் கேட்ட யாருக்குத்தான் அழுகைவராது!

தங்கள் மகனார் அழக்கண்ட மாத்திரத்தில் ஹலறத்து ஆண்டவரவர்கள் பின்னும் மகனாரைப் பார்த்து: மகனே, நீர் ஏன் அழுகிறீர்? அழாதீர். காணப்பட்டவை யனைத்தும் மறையப்பட்டவை யென்பதை நீர் அறியீரோ? மனிதனுக்கு மரணத்தின் காலம் இப்போதுதான் என்று ஒரு வரையறையில்லை. பிறந்தநேரமுதல் அவன் எத்தனையாண்டு சீவனோடிருந்தாலும் ஒவ்வொரு நிமிஷமும் மரணத்

திற்கு ஏற்றதேயாம். உண்டானவை யனைத்தும் மீண்டு போகுதல் உண்மை. இதைப்பற்றி நாம் பல திருஷ்டாந்தங்களுடன் கேட்டதுபோலே பார்க்கிறோம். நபிமார்கள், வலிமார்கள், அரசர்கள் முதலான யாருஞ்சரி எல்லாரும் மவுத்தென்கிற மரணபானம் பருகினவர்களன்றி, பருகாதவர்களில்லை. நாடு காடாகவும், காடு நாடாகவும், இரந்தவர் ஈயவும் ஈந்தவர் இரக்கவும் உலகத்தில் நேரிட்டு நடப்பதை ஆராய்ந்து பார்த்தால், அல்லாகுத்தஆலா ஒருவனைத் தவிர மற்றவையெல்லாம் தலைதடுமாறிப்போமென்பது நிச்சயம். துன்யாவில் பெண்டுபிள்ளையென்றும், காணி பூமியென்றும், மாடமாளிகையென்றும், ஆடுமாடுகளென்றும், ஆடையாபரணங்களென்றும், பணங்காசுகளென்றும், ஒருவருக்கொருவர் மல்லுக்கு நின்றாலும், பின்னுக்கு எல்லாவற்றையும் போட்டபடி போட்டுவிட்டு மீளா ஓட்டம் பிடிப்பார்கள். சூரிய சந்திர நக்ஷத்திரங்களானாலும் சரி, மேகசாலங்களானாலும் சரி, பரந்த சமுத்திரமானாலும் சரி தன்தன் நிலைபரம் மாறிப்போம் என்றால், இனி மனிதர் பாடென்ன? எவ்வளவு மகத்துவங்கொண்டவரானாலும் மவுத்தை அநுபவிக்கவேண்டுந்தான். மகனே, உயிரைப்போல மருவியிருந்த பிதாவோ, மாதாவோ, உற்றாரோ, மித்திரரோ, ஒருவர் மவுத்தானால், துக்கிக்கவேண்டித்தான் வரும். ஆனாலும், அத்துக்கத்தைப் பக்கத்திற்காட்டாமல் அடக்குவதே உத்தமம். நீர் பெரியவர் என்று யாரை நினைக்கின்றீர். நன்மையையே கடைபிடித்து நிற்கும்போது தமது இருதயத்திற்கு எவ்விதத் துக்கந் துயரங்கள் நேரிட்டாலும், இவையெல்லாம் நம்மைப் படைத்து ஆள்கிற அல்லாகுத்தஆலாவின் புறத்திலுள்ளவை யென்று அவற்றை ஒரு திரணமாகவும் மதிக்காமல் பொறுத்து நிற்கிறவர் யாரோ, அவர்தாம் பெரியவர். அவரே எல்லாத் தகுதிகளையுமுடையவர். ஆகையால், மகனே, நீர் அழாதீர்; பொறுமை



யைக் கொண்டிரும். உமது அழுகை என் மவுத்தைத் தடுக்காது. ஆனபடியால், இந்தமவுத்து எல்லாருக்கும் கடமையானதுதான் என்று மனதைத் தேற்றிக்கொள்ளும். நான் இன்று தஹஜ்ஜத்தில் மவுத்தாய் விடுவேன். என் ஆன்மா பிரிந்தபின், நீரே தனித்து நின்று, ஆகாயத்திலிருந்து மேகமொன்றிறங்கி நின்று சொரியும் தண்ணீரைக் கொண்டு என்னைக் குளிப்பாட்டும். இந்த முதுபக்கு என்னும் கட்டடத்திற்குள் இன்னபக்கத்தில் ஒரு பெட்டி புதைக்கப்பட்டிருக்கின்றது. அதைத் தோண்டி யெடும். அப்பெட்டிக்குள் கபன்புடவை முதலான வேண்டியபொருள்கள் அனைத்துமிருக்கும். அவற்றைக்கொண்டு எனக்குச் செய்யவேண்டிய கபனிடு முதலியவற்றைச் செய்யும். ஆனால், இன்ன இடத்தில் என்னைவைத்துக் குளிப்பாட்டும். இன்ன இடத்தில் என்னை அடக்கஞ்செய்யும். என்றைக்கும் உமது கண்முன்னிருந்த நான் மறைந்து போனேனென்று கவலைப்படாதீர். என்னை யடக்கின மூன்றும் நாள் அதிகாலையிலெழுந்து, என்கபுறின் கால்மாட்டில் வந்து நின்று எனக்கு ஸலாம் சொல்லும். உடனே நான் உமக்குப் பிரதிசொல்லுகிறேன். அப்படி என்னிடமிருந்து பிரதி வந்ததானால், நான் உயிருடன் என்றைக்கும் உமது பக்கத்திலிருக்கிறேனென்று எண்ணிக்கொள்ளும். நீர் உமது மனைவி மக்களுடன் இந்தத்தலத்தை விட்டு வேறே எங்கேயும் போகாதீர். இங்கேயே தரிபட்டிரும். அப்படி நீர் சொல்லும்ஸலாமுக்கு என்னிடமிருந்து பிரதி ஸலாம் வராமற்போனால், உமது மனைவிமக்களை யழைத்துக் கொண்டு, நீர் பிறந்ததும், உமது உறவின்முறையாரின் குடியிருப்புமான லாகூருக்குப் போய்விடும். என் தகப்பனாரைவிட்டு நான் எப்படிப் போவேனென்று மனங்கலங்காதீர். லாகூருக்கு அல்ல, வேறே நீர் எங்கேபோக நாடுகின்றீரோ அங்கே போய்விடும். நான் கபுறிலிருந்து உமக்குப் பிரதிசொல்லி, நீர் இங்கேயே

யிருக்க நேரிட்டால், நான் அடங்கின மூன்றும்நாளான
அன்று காலையிலேயே என் கபுறின் கால்மாட்டில் ஒரு
பெரியவர் வந்து நின்று பாத்திஹா வோதிக்கொண்டிருப்பார்.
நீர் அவரைக்கண்டு, அவர் ஓதிமுடிந்து போகிறபோது
கொஞ்சதூரம் கூடப்போய், அவருக்கு ஸலாம் சொல்
லும்; அவர் உமக்குப் பிரதிசொல்லுவார். அதன்பின் நீர்
அவரை யாரென்றுகேளும். அவர் தம்மை இன்னாரென்று
உமக்குத்தெரிவிப்பார். அப்போது உமக்கு உலகத்தில்
ஆகவேண்டிய விஷயங்களைப்பற்றி அவரிடம் முறையிடும்.
அவர் உமக்கு வேண்டியவைகளுக்கு வழி சொல்லுவார்.
நீர் அவர் சொற்பிரகாரம் நடந்துகொள்ளும். ஒன்றுக்கும்
ஆலோசிக்காதீர் மகனே, என்று இம்மட்டும் சொல்லிவிட்டு,
மறுபடியும்: மகனே, உமது பிள்ளைகளை இங்கேயழைத்து
வாரும் என்று சொன்னார்கள். உடனே ஹலறத்து அவர்
கள் எழுந்துபோய், தங்கள் புத்திரபுத்திரிகள் * எட்டுப்
பேரையும் அழைத்துக்கொண்டு போய்த் தகப்பனார் முன்
விட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் எட்டுப் பிள்ளைகளையும்
கண்குளிர நோக்கி அணைத்துப் பக்கத்தில் வைத்து, வழக்
கப்படி மூன்றும் பௌத்திரராகிய ஷாஹா சுல்தான்கபீரி
யவர்களைத் தூக்கி மடிமீது வைத்துக்கொண்டு, தங்கள்
இரண்டு கைகளையும் ஏந்தி ''யா அல்லா, யாகறீம், யாறஹீம்,
இந்தக் கண்மணியான பிள்ளைகளையும், இந்தப் பிள்ளைகளின்
சந்ததிகளையும், நீ சிறப்பாக்குவாயாக. இவர்கள்குடும்பத்தை

* ஆண்டவரவர்கள் உபாத்தாகும்போது பாபாபதுருத்தீன், ஹமீதுல் ஆஷிகீன், சுல்தான்கபீர் என்னும் மூன்று பிள்ளைகளே பிறந்திருந்தார்களென்றும், சுல்தான்ஸகீர் என்னும் பிள்ளை வயிற்றில் கருப்பமாயிருந்தார்களென்றும், சில கிரந்தங்கள்சொல்லுகின்றன.



மகிமையும், மகத்துவமுமுள்ள குடும்பமாக்குவாயாக''
என்று துஆ செய்து, அதன்பின் பிள்ளைகளைத் தாயார்வசம்
அநுப்பிவிட்டார்கள்.

இதற்குள் இரவு நடுச்சாமமாயிற்று. இவ்வளவுக்குள்
ஹலறத்து ஆண்டவரவர்களின் காரியம் இப்படியென்று
பகீர்களுக்குள் பிரஸ்தாபப்பட்டது. அனைவரும் ஏங்கித்
திகில்பிடித்துப் பதறியெழுந்து, முதுபக்குத்து உள்ளும் புறமு
மாகச்சூழ்ந்து செறிந்துகொண்டிருந்தார்கள். அப்போது
ஆண்டவரவர்கள் மகனுருக்கும்: தபோதனர்களாகிய பகீர்
களுக்கும், சில நல்லறிவுகளை அடியில் வருமாறு போதித்
தார்கள் :—

என்மீது அன்புள்ளவர்களே, கேளுங்கள். சர்வ
வஸ்துக்களையும் சிருஷ்டித்துப் பரிபாலனம் பண்ணி
ஆள்கிற கர்த்தா இன்னவிதமானவன், அவன் கிர்த்தியங்கள்
இன்னவிதமானவை யென்று ஆராய்ந்தறிவது நரஜென்ம
மெடுத்த எவனுக்கும் முக்கிய கடமையாகும். இது
ஒன்றே பிரதான காரியமல்லாமல், மற்றொன்றில்லை. நர
ஜென்ம மெடுத்தல் அரிது. அவ்வித ஜன்மத்தை
யெடுத்தவன் தன்னையறியத்தக்க கருமத்தில் பிரவேசிக்
காமல் வேறு கருமங்களில் பிரவேசித்து, நான் என்னும்
அகங்காரத்தைக் கைக்கொண்டு, அந்தகாரத்தில் அமிழ்வது
பின்னுக்குக் கைசேதத்தைக் கொடுக்கும். துற்குணங்கள்
எல்லாவற்றையும் அறவே நீக்கி, நற்குணங்களைக்கொண்டு
நடத்தலே பெருந்தன்மை. அல்லாதுத்தஆலாவின் விதி
விலக்குகளை நன்றாயறிந்து, அவற்றின் பிரகாரம் ஒழுகித்
தவநிலையில் தரிபட்டுநிற்பதே தவத்திற்கு லக்ஷணம்.
செய்த குற்றங்களுக்கு அடிக்கடி தௌபா செய்து பரிசுத்தம்
பெறவேண்டியது யாருக்குங்கடனே. அல்லாதுத்த ஆலாவின்
உவப்பு யாருக்கு மிருக்கவேண்டும். இறக்குமுன்
இறப்பதும், இதுபோன்ற இன்னும் பல சாதனங்களும்,

மெய்க்குருவினிடத்து வழிபட்ட யாருக்கும் கைகூடும். இபாதத்துகளில் தொழுகை மிக மேலானது. அதில் கலப்பின்றி நிறைவேறத் தொழுவதே காரியம். பொறுமையோ எல்லாவற்றிலும் சிறந்தது. யார் யார் என்னென்ன தீங்கு செய்யினும், அப்போதைக் கப்போது விட்டொழித்து, அதற்குப் பிரதியாக நன்மைசெய்துவிட்டாலோ, அதனாற் கிடைக்கும் பலன் அதிகம். நன்றியறிதலும் அவசியம் வேண்டிய ஒன்றே. தவமும், ஒழுக்கமும், தருமமும், சன்மார்க்கமும், அல்லாகுத்தஆலாவின் கற்பனைக்குக் கீழ்ப்படிதலுமான எல்லாம் மனிதன் பழகிவரும் பிரதான பழக்கங்களாம். துன்யாவை வெறுத்துப் பாடுபட்டவர்கள் ஆகிறுவில் சுவர்க்கவாழ்வைபெற்று, அளவற்ற ஆநந்தத்தை யநுபவிப்பார்கள். துன்யாவை யுவந்து அல்லாகுத்தஆலாவையும், அவன் விதிவிலக்குகளையும் கருதிப்பாராதவர்கள் நரகயாதனைபெற்று, அளவற்ற துன்பங்களை யநுபவிப்பார்கள். இவ்விரண்டும் சத்தியம். ஆகையால், நீங்கள் துன்யாவில் மிக விழிப்பாயிருந்துகொள்ளுங்கள். துன்யாவோ மூமின்களுக்குச் சிறைக்கூடம் என்பது உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும். துன்யாவில் நேரிடும் தீமைகளையெல்லாம் நன்மைகளென்றே நினையுங்கள். நீங்கள் இதுவரையும் அறிந்துள்ளவை உங்களுக்குப் போதுந்தான். ஆனாலும், பின்னும் நினைப்பூட்டுகிறேன். ஞாபகமிருக்கட்டும் என்று இம்மட்டுஞ் சொல்லி, இன்னும் பல ஞானசாரங்களையும் போதித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது மகனாரவர்களும், மற்றத் தபோதனர்களும் புடைசெறிந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். இதற்குள் தஹஜ்ஜத்து நேரம் அடுத்தது. மகத்துவம் பொருந்தின அந்த தஹஜ்ஜத்தென்னும் வைகறைவேளையானவுடன், முதாபந்து முழுதும் அல்லாகுத்தஆலாவின் றகுமத்து இறங்கி நிரம்பிற்று.



சுவர்க்கத்துப் பரிமளம் கமகமவென்று வீசிக்கொண்டிருந்தது.

ஹிஜ்றத்துத் தொளாயிரத்து எழுபத்து எட்டாம் வருஷம், ஜமாத்துல்லாகிறு மாதம், பத்தாந்திகதி, வெள்ளிக்கிழமை தஹஜ்ஜத்துநேரமானவுடன், ஹலறத்து குத்புல்லக்தாபு, கௌதுல்இஸ்லாம், மீறான்சுல்தான், சையிது அப்துல்காதிறு, ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் அறுபத்தெட்டாம் வயதில், அல்லாகுத்ஆலாவின் ஹலறத்திலாய், தங்கள் பாட்டனார் நபிமுகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களின் கிருபைபெற்றுப் பேரின்பத்தை யநுபவிக்கும்படி, சிறப்பாகவும், மகத்துவமாகவும் * உபாத்தானார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தானவுடன் தபோதனர்களாகிய நானூற்று நான்கு பகீர்களும் மனங் கலங்கி, கொல்லென்று சத்தமிட்டு அழுதார்கள். அன்று அவர்கள் எல்லாரும் விடியும்வரையும் மெய்ம்மறந் திருந்தார்கள். பின் சூரியோதயமானவுடன் ஆண்டவரவர்கள் உபாத்தான சங்கதி மேலைநாகூர் நாகப்பட்டணம் முதலான பக்கத்து ஊர்களுக்கெல்லாம் தெரிவிக்கப்பட்டது. உடனே அங்கேயுள்ள முஸ்லிம்மான ஜனங்கள் எல்லாரும் திரள் திரளாய்ப் புறப்பட்டு வந்துசேர்ந்து, துக்கக்கடலில் முழுகினவர்களாய்க் கூடி யிருந்தார்கள்.

பின்பு, ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களை துக்கித்துக்கொண் டிருக்கும் பகீர்கள் முதலானவர்களுக்கு மார்க்கப்பிரசங்கஞ்செய்து துக்கந்தீர்த்து, தகப்பனு

---

* ஹலறத்து ஆண்டவரவர்கள் சத்துருக்களால் கொடுக்கப்பட்ட நஞ்சைப் பலதரம் உட்கொண்டிருப்பதால், உபாத்தின் காலத்தில் அந்த நஞ்சுகளின் குணம் மேலிட்டு, ஷஹீதாய் உபாத்தானார்களென்றும், அதனால், ஆண்டவரவர்கள் ஷுஹதாக்களி லுள்ளவர்களென்றும் ஒரு கிரந்தம் சொல்லுகின்றது.

ரவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் கட்டளைப்படி முதுபக்கில் குறித்த * தானத்தில் தோண்டினார்கள். அங்கே ஆச்சரியகரமாக ஒருபெட்டி புதைக்கப்பட் டிருந்தது. அதற்குள்ளிருந்த கபன்புடவை முதலியவைகளை யெடுத்துத் தயாராக வைத்துக்கொண்டு, ஆண்டவரவர்களைக் குளிப்பாட்ட ஆரம்பித்தார்கள். நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் குறித்துக் காட்டினபடி குளிப்பாட்டுமிடம் இதுவென்று ஆண்டவரவர்கள் தெரிவித்திருந்த † இடத்தில் வளைதிரையொன்று கட்டப்பட்டது. அந்தத் திரைக்குள் ஹலறத்து ஆண்டவரவர்களைக் கலிமா முழக்கத்துடன் தூக்கிக் கொண்டுபோய் வைத்து, ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபவர்கள் மாத்திரம் திரைக்குள் இருந்து கொண்டு குளிப்பாட்டத் தொடங்கினார்கள்.

அப்போது, ஆகாயத்திலிருந்து ஒரு மேகம் இறங்கி நிழலிட்டு நின்றுகொண்டு, தன்னிலின்று யானையின் துதிக் கையைப்போல ஒரு கையைநீட்டி, அதன் வழியாக வேண்டிய அளவுக்குத் தண்ணீரைச் சொரிந்து கொண் டிருந்தது. ‡ அந்தப் பரியளமிருந்த நீரைக்கொண்டு

* இந்தத் தானம் முதுபக்கின் வடகிழக்குமூலைச் சுவர். அதன் அடையாளம் இன்னுமிருக்கின்றது.

† இந்த இடம் முதுபக்குக்கு வெளியில் தென்புறத்தில் ஒரு பள்ளியாகக் கட்டப்பட்டு, யாஹு—ஸைன்பள்ளியென்று வழங்குகின்றது.

‡ அந்தத் தண்ணீர் கீழ்ப்புறமாக வழிந்தோடி ஒரு பள்ளத்திற் கட்டுண்டு நின்றதென்றும், அந்தப்பள்ளம் வெகுகாலம் ஒரு குட்டை போலிருந்ததென்றும், அதன்பின் அச்சை சுல்தானவர்கள் அதைப் பெருங்குளமாக வெட்டினார்களென்றும், அதுதான் தீர்த்தக்குளமென்றும் சொல்லப்படுகின்றது.



ஹலறத்து ஆண்டவரவர்களின் திவ்விய திருமேனியை மகனாரே நின்று குளிப்பாட்டினார்கள்.

குளிப்பாட்டி முடிந்தபின், அற்புதமாக எடுத்த பெட்டிக்குள்ளிருந்த பரிசுத்த ஆடையைக்கொண்டு கபனிட்டு, மற்றும் சுறுமா முதலியவை யனைத்துங்கொண்டு ஒழுங்கின்படி செய்வன செய்வித்து, இதற்கிடையில் தயார்செய்யப்பட்ட மஞ்சு என்னும் சந்தூக்கில் ஹலறத்து ஆண்டவரவர்களின் திருமேனியைத் தூக்கிவைத்து, மேலோர்கள் பலர்கூடி, கலிமா முழக்கத்துடன் தூக்கிக் கொணர்ந்து, தொழுவிக்குமிடம் இதுவென்று குறித்த * இடத்தில் வைத்து, ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபவர்கள் இமாமாய், மற்ற எல்லாரும் மௌமூமாய் நின்று தொழுவித்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களைத் தொழுவித்தபின், அங்கிருந்து கலிமா முழங்கத் தூக்கி, அடக்கம் பண்ணுவதற்கென்று முன்னமே குறிப்பிட்டதும், இப்போதும், இனி எப்போதும், சுவர்க்கத்திற்குச் சமானமாய் விளங்குவதும், என்றைக்கும், பரிமளமும், ஜோதியும், நாசியையும் கண்ணையும் மருட்டத்தக்கதுமான மகத்துவமுள்ள இடத்தில், ஏற்கனவே அகழ்ந்திருந்த அலங்காரமான குழியில் கொண்டுபோய் இறங்கினார்கள். ஹலறத்து ஆண்டவரவர்களின் திருமேனியைக் கொண்டுபோய் இறங்கினவுடன் கபுறாகிய அந்தக்குழிக்குள் அல்லாகுத்தஆலாவின் றகுமத்தும், சுவர்க்கத்துப் பிரகாசமும், பரிமளமும், இறங்கி நிரம்பின.

பின்பு, மகனாரவர்களும், தபோதனர்களும், புறவூரார்களும் புடைசூழ நின்று ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாதுஷாசாகிபு ஆண்டவரவர்களை அதிக

* இந்த இடம் உலாந்தாக்காரர் கட்டின நாற்கால் மண்டபம், இதுதான் பீர்மண்டபமாய் வழங்குகின்றது.

அலங்காரத்துடன் அடக்கஞ்செய்து, அங்கே ஓத வேண்டி-
யது முதலான கடமைகளையெல்லாஞ் செய்துமுடித்துக்
கொண்டு, அங்கிருந்து முதுபாக்குக்கு வந்து பாத்திஹாவோதி,
எல்லாருக்கும் ஸலாம் சொன்னார்கள். எல்லாரும் ஹல
றத்து சையிது முகம்மதுபுகாரி சாகிபு ஆரிபில்லாஹி யவர்
களின் திருக்கரந்தொட்டு தஸ்லீயத்துச்செய்துகொண்டு
விடைபெற்று அவரவர் இடங்களுக்கு மீண்டார்கள்.

பின்பு, ஹலறத்து சையிது முகம்மதுபுகாரி சாகிபு ஆரிபு
பில்லாஹியவர்கள் தங்கள் மனைவி மக்களுக்கும், தபோத
னர்களான பகீர்மார்களுக்கும், ஆறுதலுக்குச் சொல்லத்
தக்க அறிவுகளைச் சொல்லிக்கொண்டு, தந்தையவர்கள்
இட்ட கட்டளைப்படி நடத்துவதற்காக மூன்றாந் தினத்தை
எதிர்ப்பார்த் திருந்தார்கள்.

[முன் கௌன் என்னும் மலையில் ஹலறத்து ஆண்டவரவர்
களின் கையைப்பிடித்துக் கலிமா சொல்லி இஸ்லாமிலான இருவரி
களுள் மௌலா அலி, முஹ்ஸின் என்னும் இருவர் வெகுகாலத்திற்
குப் பின் ஆண்டவரவர்களைத் தரிசிக்கவாடிப் புறப்பட்டு வரும்போது
வழியில் மௌலா அலி என்பவர் மௌத்தாய்விட முஹ்ஸின் என்ப
வர் மாத்திரம் பரதேசியாய்ச் சுற்றிக்கொண்டு ஆண்டவரவர்களை
அடக்கஞ் செய்த அன்றைத்தினம் நாகூர் வந்துசேர்ந்து, ஆண்டவ
வர்கள் இன்றுதான் உபாத்தானார்களென்று கேட்டுமிகப் பிரலாபித்து
அழுதாரென்றும், ஹலறத்து சையிது முகம்மதுபுகாரி சாகிபவர்கள்
அதையறிந்து அவரைத்தேற்றி அழைத்துக்கொண்டுபோய், இப்
போது பீர்மண்டபம் என்று வழங்குகிற நாற்கால் மண்டபத்தில் உட்
காரவைத்து: நீர் என் தந்தையவர்களைக்காணவேண்டுமானால், இங்கே
கல்வத்திலிரும் என்றுசொல்லிக் கட்டளையிட்டார்களென்றும், அப்
படியே அவர் மூன்றுநாள் வரையும் ஊணுறக்கமின்றி அங்கிருந்து
ஆண்டவரவர்களைத் தரிசித்துக் கொண்டாரென்றும், மூன்றாம் நாள்
ஹலறத்து சையிது முகம்மதுபுகாரி சாகிபவர்கள் அவர்கையைப்
பிடித்துத் தூக்கிவிட்டு: நீர் நாடிய நாட்டம் நிறைவேறப் பெற்றீர்.
இப்போது உமது தேசத்திற்குப் போய்விட்டு, என் தந்தையவர்



களின் வரும் வருஷத்துக்கு பாத்திஹாவுக்கு வாருமென்று சொல்லி
அனுப்பிவிட்டார்களென்றும், அப்படியே அந்தமுஹ்ஸின் என்பவர்
போய் மறுவருஷத்து ஜமாத்துல் ஆகிறுமாதம் ஒன்பதாந் திகதியிரவு
நாகூருக்கு வந்தாரென்றும், அவர்வந்த அப்போதே சையிது
முகம்மதுபுகாரி சாகிபவர்கள் அவரை முன்போல அந்த மண்டபத்
தில் மூன்றுநாள் கல்வத்திருக்கச்செய்து, பதினோராந்திகதிச் சாயந்
தரம் கையைப்பிடித்துத் தூக்கிவிட்டுக் கடற்கரைக்கு அழைத்துப்
போய், ஆண்டவரவர்கள் கல்வத்திருந்த மணல்மேட்டைக் காண்
பித்து, அங்கு இரண்டு றக்அத்துத் தொழச் சொல்லி கூட்டிவந்து
வைத்திருந்து, பகீர்மார் திரும்பிப்போகும்போது அவருக்கும் கொஞ்
சந் தொகைப் பணங்கொடுத்து அனுப்பினார்களென்றும், அதன்பின்
அந்த முஹ்ஸின் என்பவர் ஏழுவருஷம் வரையில் வந்து ஒவ்வொரு
வருஷமும் அம்மண்டபத்தில் வழக்கப்படி கல்வத்திருந்து போனா
ரென்றும், எட்டாம் வருஷம் அவர் மௌத்தாய் வாராதபடியால்,
பகீர்மார்களில் ஜடாதாரிகளான மலங்கு என்னும் வகுப்பாரில் ஒரு
வரை அந்த முஹ்ஸின் என்பவருக்குப் பிரதியாக மூன்றுநாள் அந்த
மண்டபத்தில் கல்வத்திருத்தி முன்போல நடத்தினார்களென்றும்,
அக்காலமுதல் இதுபரியந்தம் அப்படியே. அந்த மலங்கு வகுப்பாரி
லேயே ஒருவர் கல்வத்துவைக்கப் படுகிறாரென்றும், இதுதான் பீர்
வைத்தல் என்னும் கொண்டாட்டமென்றும், பரம்பரியாகச்
சொல்லப்படுகின்றது.]

உபாத்து முற்றிற்று.

௧௰௪-ம் அத்தியாயம்.

## உத்தரவளித்தது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் கபுறிலிருந்து கொண்டு தங்கள் மகனுருக்கு உத்தரவு கொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சுல்தானுல்லெளலியா, குத்புல்லக்தாபு, சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாதுஷாசாகிபு ஆண்டவரவர்கள் உபாத்தாய் அடங்கின மூன்றும்நாள் அதிகாலையில் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபுசாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் எழுந்து, தந்தையவர்கள் உபாத்தின்போது இட்ட கட்டளைப்படி செய்வதற்காக முதுபக்கிலிருந்து புறப்பட்டு, தந்தையவர்களின் சிறப்பான கபுறினிடத்திற்கு வந்தார்கள். அப்போது அங்கேயொரு முதியவர் கபுறின் கால்மாட்டில் நின்று ஓதிக்கொண்டிருந்தார்கள். அதை ஹலறத்தவர்கள் கண்டு, அவர்கள் ஓதிமுடியும் வரையும் கொஞ்சம் விலகிப் பார்த்துநின்று, அந்த முதியவர் ஓதி முடித்துத் திரும்பி நடந்துபோவதைக் கண்டு, அவர்கள் அடியைத் தொடர்ந்துபோய் ஸலாம்சொன்னார்கள். அந்த முதியவர் திரும்பிப்பார்த்துப் பிரதிஸலாம் சொன்னார்கள். ஹலறத்தவர்கள் முதியவரைநோக்கி "தேவரீருடைய திருநாமம் யாது?" என்று கேட்டார்கள். இக் கேள்விக்கு அவர்கள் "என் நாமம் கலிறு" என்று பிரதிசொன்னார்கள்

நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் தங்கள் திருநாமத்தைச் சொன்னவுடன் சையிது முகமதுயூசுபு சாகிபவர்கள் முகம் வாடினவர்களாய்நின்று அவர்களைநோக்கி: நாயகமே, என் தந்தையவர்கள் மவுத்தாய்விட்டார்கள். நான் என் மனைவிமக்களுடன் இந்தக்கடற்கரையில் தனித்திருக்கின்றேன். இனி எனக்கு இன்னபடித்தான் காலம் போமென்று தெரியவில்லை. அதனுல் என்மனம் சஞ்சலப்படுகின்றது. என் கருமங்கள் சஞ்சலத்திற்கு இடம்படாமல் நடைபெறவேண்டுமே? அதைப்பற்றித் தாங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்? என்று துக்கமான குரலுடன் கேட்டார்கள். நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் ஹலறத்தவர்களைப் பார்த்து: முகம்மதுயூசுபே, நீர் ஒன்றுக்கும் கவலைப்படாதீர். உமது தந்தை மவுத்தாய்விட்டார்களே யென்று பயப்படாதீர். அதற்காக மனவருத்தமும் வைக்காதீர். அல்லாஹுத்தஆலா உமது தந்தைக்குச்சொன்ன சில விஷயங்களை நான் வந்து அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றேன். அதன் பிரகாரம் உமக்கும், உமது மனைவிமக்களுக்கும், இனி வரவிருக்கும் உமது சந்ததிகளுக்கும் நானே உபகாரி. உங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வருவது என் கடமை. உம்முடைய காரியங்களனைத்தும் என்வசம் ஒப்படைக்கப்பட் டிருக்கின்றன. இன்றுமுதல் எந்த வேளையில் நீர் என்னை நினைப்பீரோ அந்த வேளையில் நான் உம்மிடம்வந்து, உமக்கு ஆகவேண்டியதை ஆக்குவிப்பேன். ஆகையால், முகமதுயூசுபே, சஞ்சலப்படாதீர். தைரியமாகவும், சந்தோஷமாகவுமிரும் என்று சொல்லிவிட்டு, மறைந்து போனார்கள்.

தாங்கள் கேட்ட துக்கமான கேள்விக்கு நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்கள் சந்தோஷமான பிரதி சொல்லிவிட்டு மறைந்தவுடன், ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் மனத்துயர்நீங்கி முகமலர்ந்தவர்களாய், அங்கிருந்து திரும்பி முதுபக்குக்கு வந்தார்கள். கொஞ்சநேரத்திற்குள் சூரியனுதயமாகும் வேளையாயிற்று. மேலைநாகூர், நாகப்பட்டணம், பார்ப்பாரூர் மற்றும் சமீபத்திலுள்ள கிராமங்களாகிய இவ்விடங்களில் வசிக்கும் முஸ்லிம்களில் பிரதானமானவர்கள் அந்த அதிகாலையில் புறப்பட்டு, ஆண்டவரவர்களின் ஜியாறத்துக்

காகவும், ஹலறத்தவர்களின் தரிசனைக்காகவும்வேண்டி. முதுபக்குடைய தானத்திற்கு வந்தார்கள்.

முஸ்லிமான ஜனங்கள் திரளாய்வந்து கூடினவுடன் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் வந்தவர்களையும், தபோதனர்களான பகீர்மார்களையும் அழைத்துக் கொண்டு கபுறினிடத்திற்குவந்து, அங்கே செய்யவேண்டியவற்றைச்செய்து குறுஆன் ஓதி மூன்றுந்தின ஸியாறத்தை முடித்து பாத்திஹாவோதி, இனிமையான பதார்த்தங்கள் பகிர்ந்து, அன்றைச் சடங்குகள் அனைத்தையு நிறைவேற்றினார்கள்.

கபுறிடத்தில் செய்யவேண்டிய வடங்கலும் முடிந்த பின், ஹலறத்தவர்கள் அங்குக்கூடி நிற்கும் அனைவரையும் பார்த்து : சகோதரர்களே, என் தந்தையவர்கள் எனக்கிட்ட கட்டளைப் பிரகாரம் நான் அவர்கள் கால்மாட்டில் நின்று அவர்களுக்கு ஸலாம் சொல்லப் போகின்றேன். அதற்கு பதில் வரும். நீங்கள் அதைக் கேளுங்கள் என்று சொல்லி விட்டு, கபுறின் கால்மாட்டிற்போய் மரியாதையுடன் தலை குனிந்துநின்று " அஸ்ஸலாமு அலைக்கும் என் தந்தையே " என்று திருவாய்மலர்ந்து சொன்னார்கள். இப்படிச் சொன்னவுடன் கபுறிலிருந்து " அலைக்குமுஸ்ஸலாம் என்மகனே, நீர் என் சொல்லைத் தொடர்ந்தபடியால், சிறப்படையக் கடவீர். நீரும், உமது மனைவிமக்களும், இங்கே யிருக்க வேண்டும். இனி உமது சந்ததிகள் அனைவரும் கியாம நாள் வரும்வரையும் இங்குதான் குடியிருக்கவேண்டும். நீரும், இனி வரவிருக்கும் உமது சந்ததிகளும், இவ்விடம் விட்டு எங்கேயும் குடிபோகக்கூடாது. என்னுடைய அன்பும் ஆதரவும் என்றைக்கும் உங்கள்மீது மாறாமலிருக்கும். ஆகையால், என்மகனே, சையிது முகம்மதுயூசுபே, நீர் இங்கேதானே யிரும் " என்று மறுமொழிவந்தது.



ஹலறத்து ஆண்டவரவர்கள் கபுறிலிருந்து தங்கள்
மகனருக்கு உத்தரவருளின சத்தம் எல்லார் காதிலும் கேட்
டது. எல்லாரும் ஆச்சரியப்பட்டு ஆண்டவரவர்களைப்
புகழ்ந்தார்கள். ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகி
பவர்கள் ஆநந்த மடைந்து, நமது தந்தை நம்மைவிட்டு
மறைந்தும் நம்மோடு தானிருக்கின்றார்களென்று கவலை
தீர்ந்து, முகமலர்ந்தார்கள். வந்த ஜனங்களனைவரும் சையிது
முகம்மதுயூசுபு சாகிபவர்கள் இனி இங்கேயே யிருக்கத் தீர்
மானமானதைப்பற்றிக் களிகூர்ந்து, விடை பெற்றுக்
கொண்டு அவரவருருக்குப் போய்விட்டார்கள். பின் ஹல
றத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள்
நமக்கும், நமது சந்ததிகளுக்கும் இதுவே குடியிருப்பிடம்
என்று தீர்மானித்துக்கொண்டு, முதுபக்கில் தரிபட்டார்கள்.

உத்தரவளித்தது முற்றிற்று.

---

௧௦௫ - ம் அத்தியாயம்.

## தபோதனர் புறப்பாடு.

---

[இவ் வத்தியாயம் தபோதனர்களாகிய பகீர்கள் நானூற்று நால்வரும், பரதேச சஞ்சாரிகளாய்ப் புறப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு
ஆண்டவரவர்களின் அருமைமகனராகிய ஹலறத்து சையிது
முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் தங்கள்
தந்தையின் திருவாக்குப்படி, நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்
களின் சொற்களைக் கொண்டு சந்தோஷப் பட்டவர்களாய்,
மனைவி மக்களுடன் முதுபக்கில் தரிபட்டிருந்தார்கள்.
ஆண்டவரவர்கள் உபாத்தாய்ச் சிலநாட்கள் சென்றன.
இதற்கிடையில் தபோதனர்களாகிய பகீர்மார்களுக்கு ஒரு

விதக் கவலைபிறந்தது. அதாவது:—நம்முடைய எஜமானுகிய ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தாய், நம்மைவிட்டு மறைந்துபோனார்கள். நமது கலீபாவாகிய சையிது முகம்மதுபுகூடு சாகிபவர்கள் தங்கள் தந்தையார் ஜீவியகாலத்தில் வலியத்தாகவும், உபாத்தானபின் கபுறிலிருந்துகொண்டு தீர்ப்பான கட்டளையாகவும் சொன்னபடி இந்தத் தானத்தில்தானே குடியாயிருந்துவிட்டார்கள். இவர்களுக்கு மனைவி மக்களுண்டாய் ஒரு குடும்பமாயிருக்கிறபடியால், இவர்கள் இங்கிருந்துவிடுவதே உத்தமம். நாம் நானூறுபேர்களும் இங்குத்தானே யிருதாவா யிருந்துவிடுவது சிலாக்கியமாகாதே. இதற்கு என்ன பண்ணலாமென்பதே.

இவ்விதக்கவலை பிறந்தபோது அவர்களின் தலைவர்களான நான்குபேர்களுங் கூடி ஒரு முடிவுசெய்துகொண்டு, ஹலறத்து சையிது முகம்மதுபுகூடு சாகிபவர்கள் சமுகத்தில் வந்து "எங்கள் நாயகமே, நமது எஜமானுகிய ஆண்டவரவர்களின் மகத்துவமான கட்டளைப்படி தாங்கள் இங்கேயே குடியிருங்கள். அடிமைகளாகிய எங்களுக்கு ஒரு வழி சொல்லுங்கள். நாங்கள் நானூற்று நால்வரும் இங்கிருந்து புறப்பட்டுப்போய்ப் பல தேசங்களையுஞ் சுற்றிக் காலங்கழிக்கின்றோம். தாங்கள் எந்தக்காலத்தில் இங்கு வரச் சொல்லுகின்றீர்களோ அந்தக்காலத்தில் வந்து சேர்கின்றோம். இவ்விதம் கட்டளை பண்ணுவீர்களானால், நாங்கள் தவறுமல் நடந்துகொள்ளுகின்றோம்" என்று சொன்னார்கள். இப்படி அவர்கள் சொன்னசொல்லை ஹலறத்தவர்கள் கேட்டு, அவர்களைப் பார்த்து "என் சகோதரர்களே, நீங்கள் நானூற்று நால்வரும் பலகாலம் என்னோடு மருவியிருந்து, பலராச்சியங்களையும் சுற்றினீர்கள். அப்படிப்பட்ட உங்களை நான் விட்டுப் பிரிந்து ஒருகணப்பொழுது மிருக்க என்மனம் உடன்படவில்லை. உங்கள் மீதுள்ள பக்ஷம் அளவுகடந்தது. ஆயினும், நீங்களை



வரும் விணில் இங்கேயே யிருப்பதிலும் காரியமில்லைதான். எதற்கும் என் தந்தையவர்களின் நாற்பதாந்தினத்து பாத்திஹா முடியட்டும். அதன்பின் உங்கள் பிரியப்படிக்கே நானொரு முடிவு சொல்லுகிறேன். அப்படியே நீங்கள் நடந்துகொள்ளுங்கள்" என்று வதில் சொன்னார்கள். இதைக்கேட்ட அவர்கள் சந்தோஷப்பட்டு, ஆகட்டுமென்று இருந்துவிட்டார்கள். சில தினங்கள் சென்றபின் ஆண்டவரவர்கள் உபாத்தான நாற்பதாந்தினம் அடுத்தது. அனைவரும் அந்தத்தினத்தை எதிர்பார்த்திருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தான நாற்பதாம் நாளின் மாலையானபோது சையிது முகம்மதுபுகூடு சாகிபவர்களும், தபோதனர்களும் ஒருங்குகூடி, திவ்வியமான உணவுகள் தயார்பண்ணி வைத்துக்கொண்டு, சிறப்பும், மகிமையும் பொருந்தின கபுறைச்சூழப் பெருக்கி, நீர் தெளித்து, கபுறின்மேல் பரிசுத்தமான வெண்துகில் போர்த்து, நறுமலர்சொரிந்து, தூபமிட்டு, சூழ்வரத் தீபங்கள் வைத்து, அனைவரும் மொய்த்திருந்து குறுஆன் ஓதி ஹதியாசெய்து, பாத்திஹா வோதி முடித்து, அவ்வுணவுகளைப் பகிர்ந்துண்டு களிகூர்ந்து, துஆ செய்தார்கள். இவ்வாறு நாற்பதாஞ்சடங்கு முடிந்தது.

மறுநாட் காலையில் தபோதனர் தலைவர்கள் நால்வரும் ஹலறத்தவர்கள் சமுகத்தில் வந்து, பணிந்துநின்று "எஜமானே, தாங்கள் கட்டளையிட்டபடி நாற்பதாஞ்சடங்கு முடிந்தது. எங்களுக்கு ஒரு கட்டளையிடுங்கள்" என்று கேட்டார்கள். அப்போது ஹலறத்தவர்கள் அவர்களைப் பார்த்து "சகோதரர்களே, நீங்கள் எல்லாரும் பிரியம் போலப் பலராச்சியங்களையுஞ் சுற்றுவதாகப் புறப்படுங்கள்: நான் இன்றைக்கே உத்தரவு தருகின்றேன். ஆனால், நீங்கள் எந்தக்காலத்தில் எந்தத்திசையில் என்ன அலுவலி

லிருந்தாலும் என் தந்தையவர்கள் உபாத்தானகாலம் நெருங்கினால், அங்கிருந்து திரும்பி, இங்கே வந்திடவேண்டும். அப்படிவந்து அவர்கள் உபாத்தான வருஷ பாத்திஹாவை முடித்துவிட்டு, மறுபடியும் நீங்கள் பரதேசஞ் சஞ்சாரஞ் செய்யப் போய்விடலாம். இவ்வாறாக நீங்கள் வருஷமுழுவதும்ஊரூராய்ச் சுற்றி, வருஷ பாத்திஹாவுக்கு மாத்திரம் இங்கே வந்துவிடுங்கள். இதில் தவறுநீர்கள்'' என்று சொல்லி, அவர்கள் பிரயாணப்பட உத்தரவுங்கொடுத்தார்கள். அப்போது அவர்கள் ஹலறத்தவர்களை நோக்கி ''யாசையிதீ, தங்கள் திருவாய்மொழியைத் தங்கள் தகப்பனாகிய எங்கள் எஜமானவர்களின் திருவாய்மொழியாகவே ஒப்புக்கொண்டோம். தங்கள் கட்டளைப்படியே, நாங்கள் எங்கிருந்தாலும் எஜமானவர்களின் வருஷ பாத்திஹாவுக்கு இங்கே வந்து சேர்கின்றோம். அவ்வாறாகவே வருஷந்தோறும் தவறாமல் வந்துகொண்டிருக்கிறோம். இதில் எவ்வளவும் தவறமாட்டோம்'' என்று உறுதி கூறினார்கள்.

பின் நானூற்று நால்வரும் பரதேச சஞ்சாரஞ் செய்வதற்காக இங்கிருந்து புறப்படத் தயாரானார்கள். ஹலறத்து சையிது முகம்மதுபுகாரீபுசாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் அவர்களுக்கு இன்றியமையாத சில அறிவுகளைப்போதித்து, பிரியாவிடை கொடுத்துப் பயணமநுப்பினார்கள். நானூற்று நால்வரென்னும் பகீர்மார்களனைவரும் பரதேசசஞ்சாரஞ் செய்யவேண்டி, இங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

தபோதனர் புறப்பாடு முற்றிற்று.

---

௧௦௬-ம் அத்தியாயம்.

## பள்ளிக்கட்டினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் கபுறுஸ்தானத்தில் ஆரம்பமாகப் பள்ளிகட்டின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்களின் அருமைவாய்ந்த சீஷர்களான நானூற்றுநான்கு தபோதனர்களும் பரதேச சஞ்சாரஞ் செய்யப் புறப்பட்டுப் போனபின், ஹலறத்து சையிது முகம்மதுபுகாரீபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் தனித்தவர்களாய் மனைவிமக்களுடன் முதுபக்கில் குடியாயிருந்தார்கள். கீழ்ப்புறமுள்ள பட்டினச்சேரிப் பாதர்கள் அடிக்கடி வந்து ஹலறத்தவர்களுக்கு ஊழியஞ்செய்து போவார்கள். அன்றியும், சுற்றூர்வாசிகளும் சிலபோது வந்து தரிசனைசெய்து போவார்கள். அப்போது ஆண்டவரவர்களின் மகத்துவமுள்ள கபுறு மைதான் வெளியிலேயே யிருந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஹயாத்துடன் முதுபக்கிலிருக்கும்போது, புதைத்துவைத்த புதையலொன்று காணாமற் போயிற்றென்று வந்து முறையிட்டு, உலுசெய்த தண்ணீர்கொடுக்க வாங்கிக்கொண்டு போய்ப் புதைத்தவிடத்தில் தெளித்து, பின் அப்புதையலைக் கண்டெடுத்தார்களே சிலபாதர்கள்? அவர்கள், ஆண்டவரவர்கள் உபாத்தாயடங்கின சிலமாதங்களுக்குப் பின் ஒருநாள், ஹலறத்து சையிது முகம்மதுபுகாரீபு சாகிபவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து கைகட்டி நின்று: காணாமற்போன எங்கள் பொருளைக்காட்டிக் கொடுத்த பெருமானார் அடங்கியிருக்கும் சிறப்பான கபுறு மைதான் வெளியிலிக்கின்றபடியால், அதைச் சூழப் பலகைகொண்டு ஒரு பள்ளிபோ

லடைத்து மறைக்க நாங்கள் விரும்புகின்றோம். அப்படிச் செய்வதற்கு எஜமானவர்கள் உத்தரவு தரவேண்டும் என்று கேட்டார்கள். இதைக்கேட்ட ஹலறத்தவர்கள் சந்தோஷப் பட்டு : நல்லது ; உங்கள் பிரியப்படியே செய்யுங்கள் என்று உத்தரவு கொடுத்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் கபுறுஸ்தானத்தில் பள்ளிகட்ட உத்தரவுபெற்றுக்கொண்ட அந்தப்பரதர்கள் தங்கள் சேரிக்குப்போய், கட்டிடத்திற்குச் சாமான்கள் தயார் பண்ணினார்கள். பாரிய மரத்தூண்கள், உத்திரங்கள், அடைப்புப் பலகைகள், பாவுபலகைகள் ; குறுக்குக் கம்பைகள், பலவகை இருப்பாணிகள் அனைத்தும் தயாராயின. பலகை கட்டிடத்திற்கு வேண்டியவெல்லாம் தயாரான வுடன் தச்சுத்தொழிலிற் சிறந்த ஓடாவிகளும், பரதர் சிலருங்கூடிக் குளித்து சுத்தத்துடன் கபுறிடம் வந்து, சிறப்பான கபுறை நடுவில்வைத்து நான்குபுறமும் சதுராகாரமாக இடங்கோலி எல்லைக்குழியிட்டு, வேலை தொடங்கினார்கள். அதிகாலையில் வந்து வேலை தொடங்கி, மாலைவரையும் செய்வார்கள். ஒவ்வொருநாளும் நோடி, சுத்தத்திலோடேதான் வந்து நின்று வேலைசெய்வார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் கபுறுக்கு வடமேற்கு, வடகிழக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு ஆகிய நான்கு மூலைகளிலும் முந்தி நான்கு பாரியதூண்களை நட்டினார்கள். ஒரு தூணுக்கொரு தூணிடையில் பல சிறுதூண்களும் கட்டினார்கள். குறுக்கே நெருக்கமாகப் பலமான கம்பைகளை நிரையாக வைத்து தூண்களோடிணைக்கி, இருப்பாணி வைத்து அறைந்தார்கள். ஸ்தம்பங்களான நட்டுமரங்களும், குறுக்குச் சட்டங்களும் பலப்படுத்தப் பட்டபின், நான்குபுறமும் அடைப்பாகப் பலமான பாரிய பலகைகளை நெருங்கப் பிடித்து, நிரைநிரையாக ஆணி தைத்தார்கள்.



மேல்புறம், வடபுறம், கீழ்ப்புறமாகிய மூன்றுபக்கமும் பொருத்துவாயுள்ள பலகைகள் பிடித்து, இல்லிகீர ஆணியடித்து அடைத்தபின், கபுறின் கால்மாடான தென்புறம் நடுவில் சிறுவாசல்வைத்து, இருபுறமும் பலகையால் அடைத்தார்கள். அவ்வாசலுக்குச் சித்திரவேலை செய்த கதவுமிட்டார்கள். நான்கு பக்கமும் இப்படி பலமான அடைப்படைத்தபின், மேலே திறந்துள்ளதற்குப் பருத்த உத்திரங்களை நெருங்கப் பரத்தி, இருதலைகளிலும் ஆணிகள் கடாவி, அதன்மேல் பாவுபலகைகளைப் பரப்பி, ஆணியறைந்தார்கள். அப் பாவுபலகைகளின் இருபுறமும் பொருத்துவாய் வெட்டி வெகு பலமாக இணக்கியிருந்தது. மழைநீர் சிறிதுங்கசியாத வண்ணம் மேலே திடப்படுத்தி, அதற்கு மேன்கூரையொன்று பலகையால் செய்தார்கள். அதன் சிகரத்தில் கண்ணுக் கலங்காரமான கொத்துவேலை செய்த சித்திரவிமானம் ஒன்று செய்துவைத்தார்கள். இவ்விதப் பணிக்காகப் பள்ளிவேலை முடிந்தபின், உள்ளே பல தீபங்களும், வெளியில் முன்புறம் பலதீபங்களும் எரியத் தக்கனவாகத் தீபக்கால்களும் செய்து வைத்தார்கள்.

இவ்விதமாகப் பரதர்கள் பலநாள் பாடுபட்டுப் பள்ளியைக் கட்டிமுடித்து, ஹலறத்தவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்கள். பள்ளிகட்டி முடிந்த நாள் முதல் ஹலறத்தவர்கள் தந்தையவர்களின் மகத்துவமும், சிறப்புந்தங்கின தர்கா என்னும் அப்பள்ளிக்கு விளக்கேற்றி, எல்லாக் கைங்கரியங்களுஞ் செய்யத் தொடங்கி நடத்தி வந்தார்கள். ஹலறத்து ஆண்டவரவர்களின் கபுறுஸ்தானத்தில் பரதர்கள் மரத்தில் பள்ளியொன்று கட்டினார்களென்று சுற்றாரெங்கும் பிரஸ்தாபப்பட்டது. அநேகர் பிரதிதினமும் வந்து அப்பள்ளியைத் தரிசனை பண்ணிக் கொண்டு போக ஆரம்பித்தார்கள். பரதர்களாற் கட்டுண்ட அலங்காரமான பள்ளி சுவர்க்கத்து விசித்திரமான ஓரறைக்

குச் சமானமாயிருந்தது. பிரதிதினமும் தீபதூபங்களால் சிறந்து விளங்கிற்று.

பள்ளிகட்டி விளக்கு வைத்த அந்நாள் முதல் பலதிசைமனிதர்களும் வந்து ஆண்டவரவர்களுக்குக் காணிக்கை சமர்ப்பிக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு நாளும் ஜனங்கள் வந்து காணிக்கை வைத்தல் தவறாமல் நடந்தது. அக்காணிக்கைப் பொருட்களை ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவாக்கின்படி அவர்கள் மகனாராகிய சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்களே அநுபவித்துக்கொண்டு, முதூங்கில் குடியிருந்தார்கள்.

பள்ளிகட்டினது முற்றிற்று.

---

௪௰-ம் அத்தியாயம்.

## கந்தூரி.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு முதலாம் கந்தூரி நடத்தின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது காதிறேலி கன்ஜஸவாய் ஆண்டவரவர்களின் அருமை மகனாரான சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் தந்தையாரவர்களின் திவ்வியாலயப் பணிவிடைசெய்துகொண்டு இருக்குங்காலத்தில், ஜாமத்துல்லாகிறுமாதம் அடுத்தது. ஆண்டவரவர்கள் உபாத்தானமாதம் அடுக்கவே ஹலறத்தவர்கள் வருஷக் கந்தூரி நடத்துவதற்கு ஆயத்தமானார்கள். பரதேசஞ் சுற்றப் போயிருக்கும் தபோதனர்கள் வருவார்களென்கிற நம்பிக்கையும் அவர்களுக்கிருந்தது. ஆகலால், ஜமாத்துல்லவ்வல் மாதக் கடைக்கூற்றிலேயே சர்வசாமான்களும் தயார் பண்ணினார்கள். சுற்றார்களுக்குத் தெரிவித்து அரிசி, பருப்பு, கறிச்சரக்கு, நெய், விறகு, எண்ணெய், காய்



கனிப் பதார்த்தங்கள், பாய்கள், தென்னங்கீற்றுகள், கடாக்கள், இன்னும் வேண்டியவை யனைத்தும் சேகரித்து வைத்தார்கள்.

பெருந்திரளினரான விருந்தினராய் வரும் நானூற்று நால்வருக்கும், தந்தையவர்களின் கந்தூரிக்குமாக மேற்சொன்னவையனைத்தையும் தயார்பண்ணிக் கொண்டு, ஜமாத்துல்லாகிறு மாதப் பிறையையும், அத் தபோதனர் வருகையையும் எதிர்ப்பார்த்தவர்களாய் ஹலறத்தவர்கள் இருந்தார்கள். ஆண்டவரவர்கள் உபாத்தான மகத்துவமுள்ள ஜமாத்துல்லாகிறுமாதப் பிறைகாணும் அன்று சாயரக்ஷை, பரதேசசஞ்சாரத்தில் ஒருவருஷம்வரையுஞ் சுற்றித்திரிந்த தபோதனர் நானூற்று நால்வரும் கூட்டங் கூட்டமாய் வரத் தலைப்பட்டார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தான நாற்பதாம் நாள் தீர்ந்தபின் இங்கிருந்து புறப்பட்ட தபோதனர்களான பகீர்மார் பலபாகங்களையுஞ்சுற்றிக்கொண்டு குவாலீர் வரையும் போய், பின் அங்கிருந்து திரும்பி, நாட்கணக்குத் தவறாமல் எங்குஞ்சுற்றி, ஒருநாளுக்கு முந்தியே மேலைநாகூரில் வந்து தங்கி, மறுநாள் சாயந்தரம் புறப்பட்டு இங்கே வந்தார்கள்.

[தபோதனர்களான பகீர்மார் நானூற்று நால்வரும் இங்கிருந்துபோனபின், நான்கு வகுப்பாய் பிரிந்துகொண்டார்கள். அவ்வகுப்புக்களில் முதலாவது பான்வா என்றும், இரண்டாவது மலங்கு என்றும், மூன்றாவது மதாரி என்றும், நான்காவது ஜலாலி என்றுஞ் சொல்லப்படும். இவ்வகுப்பாரில் பான்வா வகுப்பார் சுத்தாறிய்யா காதிறிய்யா தரீக்குகளிலுள்ளவர்கள். மற்ற மூன்று வகுப்பாரும் வேறுபல தரீக்குகளிலுள்ளவர்கள். ஒவ்வொரு வகுப்புக்கு ஒவ்வொரு தலைவரும் அத்தலைவரின்கீழ் சில உத்தியோகஸ்தரு மிருக்கின்றார்கள். வகுப்பைக் கிரு வென்று, தலைவரை சர்கிரு வென்றும் சொல்லுவார்கள். இந்நான்கு வகுப்பிலும் பான்வாவே பிரதானமாது.

இரண்டாவதான மலங்கு என்னும் வகுப்பார் ஜடாதாரிகள், இவர்கள் விவாகஞ்செய்யாத பிரமசாரிகள். இவர்களிலொருவர் ஸ்திரீ சம்பந்தப்பட்டால், சடை புழுத்துப்போம். அதையறிந்து சடையைக்களைந்து கீழ்த்தரத்திலாக்கப் படுவார். மூன்றாவதான மதாரிகள் வடதேசம்போகாமல் பிரதிவருஷமும் தென்மண்டலத்திலேயே சுற்றித்திரிவதால், மண்டல்தாரி என்றுஞ் சொல்லப்படுவார்கள். நான்காவதான ஜலாலிகள் எக்காளகாரர். இவர்கள் எப்போதும் எக்காளம் ஊதுகிறவர்கள். இவர்களை உறமிபகீர் என்றுஞ்சொல்லுவார்கள். இவர்களுள் ஒவ்வொருவருக்கும் வலதுதோளில் முத்திரை வைக்கப்பட்டிருக்கும். சிரசில் கம்பளிக்கயிறு சுற்றியிருப்பார்கள். இந்நான்குவகுப்பிலும் பிரதானமான பான்வாவுக்குமாத்திரந்தான் *பில்குண்டா நகரத்தில் ஹலறத்து ஷாஹா பாபாபதுருத்தீன் ஆண்டவரவர்களின் தானத்தில் வருஷத்திற்கொருதரம் தலைவர் நியமிக்கப்படுவார். அந் நியமகம் ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தான ஜமாத்துல்லாகிறு மாதப் பத்தாந்திகதியாகிய கத்தத்து இரவுதான் அங்கே நடக்கும். அங்கே நியமிக்கப்பட்ட தலைவர் அங்கிருந்து புறப்பட்டுப் பலதேசமுஞ்சுற்றி, ரமலான்மாதம் திருச்சிராப்பள்ளியில் வந்திருப்பார். பான்வாவகுப்பு இங்கிருந்து கந்தூரி கழித்துப் புறப்பட்டு, ரமலான் மாதம் திருச்சினாப்பள்ளியிற் போனவுடன், இங்கிருந்த தலைவர் விலகிவிடுவார். அங்கிருந்து வந்தவர் அவ்வகுப்புத் தலைவராய், எங்குஞ் சுற்றித்திரிந்து மறுவருஷ கந்தூரிக்கு இங்குவருவார். ஒவ்வொரு வருஷமும் இவ்வாறே நடக்கின்றது. கந்தூரிகழித்து இங்கிருந்து புறப்படும் நான்கு வகுப்பும் ஒரே திசையிற் போகவேண்டுமென்கிற ஏற்பாடு இல்லை. அவ்வவ்வகுப்பார் நாடினதிசையிற் போவார்கள். ஆனால், சில தானங்களில் நான்குவகுப்பும் சந்திப்பதுண்டு. இந்நான்கு வகுப்பல்லாமல், ஐந்தாவதாக ஒரு வகுப்புப் பிற்காலத்தில் வந்துசேர்ந்தது. அதன்பெயர் றபாஇய்யா. இவர்களே தாயிறு வென்னும் கொட்டடிக்கிறவர்கள். ஆக இவ்வைந்து வகுப்புகளே ஒவ்வொருவருஷ கந்தூரியிலும் வந்துகொண்டிருக்கின்றன. இவ்வகுப்பார்களாக அக்காலந்தொட்டிருப்பவர்கள், வமிசபரம்பரையாரல்ல; இடையில்வந்து சேர்கிற தீட்சதர்களே.]

*. இவ்வூர் வடதேசத்திலுள்ளது.



அன்று சாயங்காலம் முதலாவதாக பான்வா வகுப்பாரும், இரண்டாவதாக மலங்கு வகுப்பாரும், மூன்றாவதாக மதாரி வகுப்பாரும், நான்காவதாக ஜலாலி வகுப்பாரும் ஒருவர்பின் ஒருவராய் வந்துசேர்ந்தார்கள். வந்த பகீர்மார் எல்லாரையும் ஹலறத்து முகம்மதுயூசுபு சாகிபவர்கள் எதிர்சென்று உபசரித்து அழைத்தார்கள், அவர்கள் ஹலறத்தவர்களுக்கு அடிபணிந்து ஸலாம் சொல்லி அனைவரும் ஆண்டவரவர்களின் கபுறுஸ்தானத்துக் கட்டிடத்தைப் பார்த்துக் களிகூர்ந்து, பாத்திஹா வோதி ஜியாறத்துச் செய்துகொண்டு, அவரவருக்கு வசதியாக இருப்பிடந் தயார்பண்ணிக்கொண்டு, தங்கினார்கள். கபுறுஸ்தானத்திற்குத் தென்புறமுள்ள தோப்பிலேயே கொட்டகைகளிட்டு அவற்றிலிருந்தார்கள். குதிரை முதலான வாகனங்கள் பலவிடமுங் கட்டப்பட்டிருந்தன.

அன்று சாய்ந்தரமே ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்கா வென்னும் பள்ளிக்குமுன் அலங்காரமான பூம்பந்தலொன்று போடப்பட்டது. தலைமாட்டுக்கு மேல்புறம் ஒரு பாரிய மூங்கிலைவெட்டி, ஆண்டவரவர்கள் உபாத்தான மாதமென்னும் அடையாளமாகக் கொடியேற்றுவதற்கு நாட்டினார்கள். மாலைநேரம் நெருங்கவே, முன்னமே தயார் பண்ணியிருந்த இளம்பிறைக்கொடியொன்றை ஹலறத்து முகம்மதுயூசுபு சாகிபவர்களும், தபோதனர்களுங் கூடிநின்று பூம்போர்வையுடன் அலங்கரித்த ஒரு ஒட்டக முதுகில் வைத்து, முதுபக்கிலிருந்து கபுறுஸ்தானத்திற்குக் கொணர்ந்தார்கள். அப்போது, புறவூர்களிலுள்ள ஜனங்கள் பலர் ஜியாறத்திற்காக வந்திருந்தார்கள். பொழுது படுமுன் பள்ளியின் உள்ளும்புறமும் பல தீபங்களேற்றப்பட்டன. வாசலுக்குமுன் தூபம் கமகமவென்று கமழ்ந்துகொண்டிருந்தது. பள்ளியின் பிரகாசமும், நறுமணமும், ஜனங்களைப் பிரமிக்கச் செய்தன.

சூரியன் அஸ்தமித்துப் பொழுதுபட்டபின் எல்லாரும் மேற்றிசையில் பிறை பார்த்தார்கள். ஜமாத்துல்லாகிறு மாதத்து இளம்பிறை தெரிந்தது. உடனே சந்தோஷ கோஷ்டத்தோடு கொடியேற்றப்பட்டது. அதன்பின் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களும், தபோதனர்களும், மற்ற ஜனங்களும், ஆண்டவரவர்களின் பள்ளிக்கு முன்வந்து நின்று பாத்திஹாவோதி, ஜியாறத்துச் செய்தார்கள். அன்று இராமுழுதும் குறுஆன் வேத சத்தம் பள்ளியிலும், பக்கத்திலும், பலரிருந்து ஓதுவதால் முழங்கிக் கொண்டிருந்தது.

அன்றிரவுபோய் மறுநாள் நாகபட்டணத்து முஸ்லிம்களின் பிரதானமான சிலரும், அவ்வூர்த் தலைவருமாகப் புறப்பட்டு, ஹலறத்து முகம்மதுயூசுபு சாகிபவர்கள் சமுகத்தில்வந்து ஸலாம்சொல்லிப் பணிந்து நின்று: நாயகமே, தங்கள் தகப்பனாராகிய எங்கள் ஆண்டவரவர்கள் உபாத்தான இம்மாதத்துப் பத்தாமிரவாகிய கத்தத்தின் போது நாங்கள் ஒரு காரியஞ்செய்ய விரும்புகின்றோம். அதாவது:—உயர்ந்த சந்தனமரத்து வயிரம்பாய்ந்த கட்டை தயார்செய்து அதனையரைத்த குழம்பை ஒரு பாத்திரத்தில் வைத்து, மூங்கிற்கழிகளாற்கட்டிப் பலவர்ணத் தாள்களால் விசித்திரமாகப் பொத்திமூடிப் பிரகாசமாக ஒரு கூடு செய்து, அச் சந்தனக்குழம்புள்ள பாத்திரத்தை அக்கூட்டில்வைத்து, ஊர்கோலஞ்சுற்றிக் கொண்டுவரவேண்டுமென்பதே. அப்படி நாங்கள் ஆடம்பரமாகக் கொணர்ந்து தரும் சந்தனத்தை ஆண்டவரவர்களின் கபுறின்மீது பூசவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றோம் என்று சொன்னார்கள். இதை ஹலறத்தவர்கள் கேட்டு அவர்களைப் பார்த்து: சகோதரர்களே, உங்கள் விருப்பத்தை நான் தடுக்கமாட்டேன். நீங்கள் கருதினபடியே செய்யுங்கள். ஆனால், நீங்கள் சந்தனம் அரைத்துக்கொண்டு வருவதை



நிறுத்திவிட்டு, கூடுமாத்திரம் உங்கள் விருப்பப்படி செய்து கொண்டு வாருங்கள். சந்தனம் நீங்கள் கொண்டுவர வேண்டாம் என்று உத்தரவு பண்ணினார்கள். இதைக்கேட்டு அதற்கு உடன்பட்டு நாகபட்டணத்தார் போய்விட்டார்கள்.

அப்போது நாகபட்டணத்தில் ஒரு பிராமணனிருந்தான். அவன், ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல் ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் ஹயாத்துடன் முதாபங்கிலிருக்கும்போது ஒருநாள் வந்து, தன் உடலிலுள்ள தீராப் பிணியைப்பற்றி முறையிட்டு அழுதான். ஆண்டவரவர்கள் மனதிரங்கி, அல்லாகுத்தஆலா இடம் துஆ விரந்து, அப்பிணியை நீக்கிவிட்டார்கள். அன்றுமுதல் அவன் அடிக்கடி சந்தனமரைத்துக் கொணர்ந்து ஆண்டவரவர்களுக்குச் சமர்ப்பித்து, தரிசனைபண்ணிப் போய்க்கொண்டிருந்தான். ஆண்டவரவர்கள் உபாத்தானபின், தன் வழக்கப்படி ஹலறத்து சையிது முகம்மதுயூசுபுசாகிபவர்களுக்குச் சந்தனங்கொணர்ந்து கொடுத்துத் தரிசனை பண்ணிக் கொண்டிருந்தான். அந்தப் பிராமணனை ஹலறத்தவர்கள் ஆள்விட்டழைத்து: என் தந்தையவர்களின் மகிமையுள்ள கபுறின்மீது பூசுவதற்குப் பரிசுத்தமாகச் சந்தனம் அரைத்து, இந்தமாதப் பந்தாந்திகதியிரவு, இங்கே கொண்டுவா வென்று அவனுக்குக் கட்டளைபண்ணினார்கள்.

அப் பிராமணன் இக்கட்டளையைச் சிரமேலேற்று நாகபட்டணம்போய், தகுந்த சந்தனக் கட்டைகள் தேடிவாங்கி, அதிகமான பயபக்தியுடன் தன் பணிவிடையை அன்றைத் தினமே தொடங்கினான். கூடுகட்டிக் கொண்டுவர உத்தரவு பெற்றுபோன முஸ்லிம்களும் தங்கள் வேலையை அன்றைக்கே ஆரம்பித்துக் கொண்டார்கள்.

கூட்டுவேலை வெகு சிறப்பாய் நடந்தது. சித்திரகாரர் பலர்கூடிக் கூடுகட்டத் தொடங்கினார்கள். அதற்காகுமான மரக்கம்பைகள், பலகைகள், சட்டங்கள், பலவர்ணத்

தாட்கள், நானாநிறச் சாயங்கள், அப்பிரேகத்தகடுகள், ஈயத்தகடுகள், சருகுபித்தளைகள், பொன்வெள்ளி முலாமிட்ட தாட்கள், இன்னும் வேண்டியவெல்லாம் தயாராயின. இவற்றைக் கொண்டு, கட்டவேண்டியவைகளைக் கட்டி, பொருத்தியிணக்கி, யிணங்க வேண்டியவைகளை பொருத்தியிணக்கி சாயந்தீரவேண்டியதற்குச் சாயந்தீர்த்து, ஒட்டவேண்டியவைகளை ஒட்டி, பொத்தவேண்டியவைகளைப் பொத்தி, சுழல்வன சுழலவும், நால்வன நாலவுஞ் செய்து, பருத்த அடியும், கூர்த்த சிகரமுள்ளதாக, கொத்து வேலையும், மற்றவேலையும் பளிக்காகச்செய்து, உயர்ந்த பொன்னாலும் வெள்ளியாலுஞ் செய்து நவரத்தினங்களையும் பதித்தாற்போலக் கூட்டு வேலையை முடித்தார்கள். இவ்வளவில் ஜமாத்துல்லாகிறு மாதம் ஒன்பதாந்திகதி யாயிற்று. முன்சொன்ன பிராமணனும் சந்தனம் தயார் செய்துவிட்டான்.

ஒன்பதாந்திகதிச் சாயந்தரமே ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்கா வெகு அலங்காரமாகச் சோடிக்கப்பட்டது. சுற்றிலும் வாழை, கமுகு முதலியன மங்களகரமான விருக்ஷங்கள் நட்டப்பட்டு, ஒரு பூங்காவனம்போலிருந்தது. பள்ளிக்குமுன் பலவிதப் புஷ்பங்களால் அலங்கரித்த பந்தல் போடப்பட்டது, பத்தாந்திகதி இரவாகப் பொழுதுபடவே பள்ளிமுழுதும் விளக்கேற்றி, நாற்புறமும் தீபஸ்தம்பங்களை நட்டி, ஏகசோதிமயமாக்கினார்கள். மகத்துவமுள்ள முதுபக்கிலும் தீபாலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. பலவிடங்களிலும் நறுமணங்கமழும் தூபமிட்டார்கள். இவ்வளவும் ஹலறத்தவர்களும், தபோதனர்களுமே நின்று நடத்தினார்கள். இவ்வளவுக்குள் சுற்றூர்களிலிருந்தும், நாட்டுப் புறங்களிலிருந்தும் அநேக ஜனங்கள் ஆண்டவரவர்களின் வருஷ கந்தூரியின் கத்தத்திரவென்று திரள் திரளாய் வந்து கூடியிருந்தார்கள். மாலை தொடங்கி தர்காவில் வேதவாக்கியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன,



இரவானபோது, நாகப்பட்டணத்து முஸ்லிம்கள் திரண்டுகூடி, தாங்கள்செய்து வைத்திருக்கும் சித்திரக் கூட்டைத் தூக்கி, ஊர்கோலம் சுற்றினார்கள். கூட்டின் பல்பாகமும் தீபங்களால் ஜொலித்தன. இரு புறமும் தீவர்த்திகள் நிரையாகச் சென்றன. பலவகை வாத்தியங்களும் இடிபோல முழங்கின. அக்கினி பாணங்கள் ஆகாயத்தைக் கிழிக் கிழித்துச் சிறிச்சினந்து போயின. கூட்டுக்கு முன்னும் பின்னும் ஜனசந்தடி வெகு மும்முரமாயிருந்தது. இவ்வித ஆடம்பரத்துடன் சந்தனக் கூட்டை நாகப்பட்டணத்து வீதிமுழுதுஞ் சுற்றி, தர்காவுக்கு கொண்டுவருவதற்காக வடபுறம் நோக்கிச் சிறப்புடன் திருப்பினார்கள். இச் சந்தனக்கூடு இங்குவந்து சேருமுன், பிராமணன் சந்தனம் தயார்செய்து புதிய செப்புக்குடமொன்றில்வைத்து, தலைமேற் சுமந்துகொண்டுவந்து, ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களிடம் கொடுத்துவிட்டான்.

நாகப்பட்டணத்து முஸ்லிம்கள் கூட்டைக் கொணர்ந்து முதுபக்கு வாசலில் நிறுத்தினார்கள். அதை ஹலறத்தவர்களும் தபோதனர்களும் பார்த்து ஆச்சரியானந்தமடைந்து, பிராமணன் கொணர்ந்த சந்தனக்குடத்தை அதனுள் வைத்து, கூட்டை அங்கிருந்து தூக்குவித்து தர்காவுக்கு முன்கொணர்ந்து நிறுத்தச் செய்தார்கள். கண்களை மழுக்கும் பல தீபங்களாலும், பலவகை நறுமணங்களாலும் சுவர்க்கத்தை யொத்துவிளங்கும் பள்ளிக்குமுன் கூடு தரிபட்டவுடன், ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு ஆரிபுபில்லாஹியவர்கள் அச் சந்தனக் குடத்தை வாங்கித் தலைமேற் சுமந்துகொண்டு தர்காவுக்குள் புகுந்தார்கள், அந்நேரம் ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தானவைகறையென்னும் த்ஹஜ்ஜத்து நேரமாயிருந்தது.

ஹலறத்தவர்கள் சந்தனக்குடத்துடன் உள்ளே புகுந்த போது கதவு சார்த்தப்பட்டது. ஹலறத்தவர்களே தனித்திருந்து ஆண்டவரவர்களின் சிறப்பான கபுறின்மேல் சந்தனத்தைப் பூசினார்கள். அந்நேரம் வெளியிலுள்ள முஸ்லிம்களெல்லாரும் ஃறாத்தியா ஓதிக்கொண்டிருந்தார்கள். உள்ளே சந்தனம்பூசி முடிந்தவுடன் ஹலறத்தவர்கள் கூடவே கொண்டுபோயிருந்த * வெள்ளைப்புடவை யொன்றைப் பூசின சந்தனத்தின் மேல் விரித்து, கபுறில் போர்த்தினார்கள். இவ்வளவும் உள்ளே முடிந்தபின், ஹலறத்தவர்கள் வெளியில்வந்து ஓத வேண்டியவைகளை யோதி, ஜியாரத்தை முடித்தார்கள்.

பொழுதுவிடிந்து சூரியனுதய மாயிற்று. மேலான புலவுச்சாதம் பாத்திஹாவுக்காக அன்றிரவே தயார்செய்யப் பட்டிருந்தபடியால், அதை ஹலறத்தவர்களின் உத்தரவுப்படி அன்று காலையில் எல்லாருக்கும் பகிர்ந்தார்கள். ஒவ்வொருவரும் கிடைத்தமட்டுக்கும் அந்தச் சாதத்தைப் பிரசாதமாகப் பெற்று உட்கொண்டு புளகமடைந்து, அவரவர் தானம் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்றைத்தினமே நாகப்பட்டணத்து முஸ்லிம்கள் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆண்டவரவர்களிடம்: நாங்கள் இதுபோல ஒவ்வொரு வருஷமும் பிறையன்றைக்குக் கொடி கொண்டுவர ஒரு இரதமும், பத்தாமிரவு சந்தனங்கொண்டுவர ஒரு கூடும், செய்து வருகின்றோமென்று கேட்டுக்கொண்டார்கள். ஹலறத்தவர்கள் அதற்குச் சம்மதித்து உத்தரவு கொடுத்தார்கள்.

* இப்படியே அன்றுமுதல் ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு வெள்ளைப்புடவையைப் பூசின சந்தனத்தின்மேல் ஒன்றுமேலொன்றாகப் போர்த்துவருகின்றார்கள். முந்நூற்றுச் சில்வான வருஷம் இப்படிப்போர்த்தியும் ஆண்டவரவர்களின் கபுறு கட்டின உயரத்தளவுக்கு எள்ளத்தனையும் அதிகப்படாமலேயே யிருக்கின்றது.



பின் ஹலறத்தவர்கள் சந்தனங் கொணர்ந்த பிராமணனைப் பார்த்து: இதுபோல இனி ஒவ்வொரு வருஷமும் நீயும், உன் சந்ததிகளுமே சந்தனமரத்தைக் கொடுத்துவர வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். அக்கட்டளையை அவன் சந்தோஷத்துடன் சிரமேலேற்றுச் சென்றான்.

[இப் பிராமணன் தன் ஆயுசுபரியந்தம் வருஷந்தோறும் சந்தனங்கொடுத்து வந்தான். பின் இவன் சந்ததிகளும் கொடுத்துவந்தார்கள். சில பத்தாண்டுகளுக்கு முன் அச் சந்தனங்கொடுப்பவனில் ஒரு பிசகுகண்டு, அப்போதிருந்த சாகிபுமார்கள் அவனை விலக்கி விட்டார்கள். அன்று முதல் தர்கா நாட்டாண்மைக்காரர்களாகும் எட்டுப்பேர் வீடுகளிலும் சந்தனமரைத்துக் கொடுக்கப்பட்டுவருகின்றது.]

கத்தங் கழித்த பத்தாந்திகதியாகிய அன்று காலையிலேயே முதல்திகதிப் பிறைகண்டு ஏற்றின கொடியை * இறக்கி விட்டார்கள். தபோதனர்களாகிய பகீர்கள் சில நாள் தங்கியிருந்தார்கள். அதன்பின் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்கள் அத் தபோதனர்களுக்குச் செலவுக்கென்று சிலதொகைப் பணங்கொடுத்து, அவர்களைப் பயணப் படுத்தினார்கள். மறு வருஷம் இப்படியே வருவதாக அவர்கள் அனைவரும் ஹலறத்தவர்களுக்குப் பயணஞ் சொல்லிக்கொண்டு, முன்போலப் பரதேசசஞ்சாரஞ் செய்யப் புறப்பட்டு விட்டார்கள். ஹலறத்தவர்கள் தந்தையவர்களின் பணிவிடையில் மனைவி மக்களுடன் முதுபக்கியிருந்தார்கள்.

[இப்போது நடந்த முதலாம் கந்தூரி யாரம்பமாகவே ஒவ்வொரு வருஷமும் பகீர்மார்கள் கந்தூரிப் பிறைகாண வருதலும், கத்தம் தீர்ந்தபின் முந்தின பிரகாரம் ஒருதொகைப் பணம் வாங்கிக்கொண்டு போதலும் நடந்துவருகின்றன.

கந்தூரி முற்றிற்று.

* பதினொன்காந்திகதியிரவில் கொடியிறக்கும் வழக்கம் பிற்காலத்திலேற்பட்டது.

## ௧௦௮-ம் அத்தியாயம்.

## விவாகம்.

[இவ் வத்தியாயம் ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபு ஆரிபு பில்லாஹியவர்களின் மக்கள் எட்டுப்பேருக்கும் விவாகம் நிறைவேறின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்கள் உபாத்தா யடங்கியிருக்கும் சமாசாரம் இந்தியா முழுதும் பிரஸ்தாபமாயிற்று. வெகு தூரந்தொலைகளிலிருந்தும் அநேகம் பேர்வந்து ஆண்டவரவர்களின் சிறப்பான கபுறைத் தரிசித்து, நற்பேறு பெற்றுப்போகத் தலைப்பட்டார்கள். சாதிபேதம், மதபேதமின்றி எல்லாருக்கும் ஆண்டவரவர்கள் கிருபை செய்துவர ஆரம்பித்தார்கள். யார் யார் எதை நாடிவந்தும் கேட்கும் எல்லா வரங்களும் கொடுக்கப்பட்டன. அவரவர் நாட்டம் நிறைவேற நிறைவேற, காணிக்கைவரத்து இடைவிடாமல் வரத்தொடங்கிற்று. ஆகையால், ஆண்டவரவர்கள் அடங்கி விளங்குந் தானம் என்றைக்கும் ஜனசந்தடி யுள்ளதாகவே யிருந்தது. தரிசனைக்கு வருவோர் நாள் தவறாமல் வந்துகொண் டிருந்தார்கள். அதனால், ஹலறத்து முகம்மது யூசுபு சாகிபவர்கள் மனம் களிப்படைந்திருந்தது. நாம் நமது குடும்பம் பல்கும்படி இங்கேயே யிருந்துவிட்டோம். தந்தையவர்கள் திருவாய் மலர்ந்து சொன்னபடியே பலபகுதிகளிலுமுள்ள பலரும் இங்குவந்து, காணிக்கையாகப் பலபொருள்களையும் நமக்குக் கொடுக்கின்றார்கள். சர்வ வல்லவனாகிய அல்லாகுத்த ஆலா நமது தந்தைக்குச் சொன்னபடியே நம்மை ஆதரித்து ஆள்கின்றான். அவன் காவல் கொண்டும், தந்தையவர்கள் பக்கத்திலிருக்கும் ஆதரவுகொண்டும், நமக்கு



ஒரு தீங்கும் சம்பவிக்காது என்று ஹலறத்தவர்கள் கருதி, அதிகமான மனத்திருப்தியுடன் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் செலவுக்குத் தக்கபடியே குறைவின்றிக் காணிக்கை வந்து குவிந்துகொண்டிருந்தது. ஆகவே, அவர்கள் குடும்பம் செல்வத்தோடிருந்தது. பக்கத்திலுள்ள பட்டினச்சேரிப் பரதர்கள் அடிக்கடிவந்து இடுங்கட்டளைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். ஹலறத்தவர்களின் ஆண்மக்கள் ஆறுபேரும், பெண்மக்கள் இரண்டுபேருமாகிய எட்டுப்பேர்களும் பதினன்கு இல்மிலுந் தேர்ந்த மகான்களாகும்படி தங்கள் தந்தையாகிய ஹலறத்தவர்களிடமே கல்வி பயின்றுவந்தார்கள். ஹலறத்தவர்கள் அல்லாகுத்த ஆலாவை வணங்குவதும், அவ்வந் நேரங்களில் தந்தையவர்களின் தர்கா ஊழியஞ்செய்வதும், மற்ற வேளைகளில் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதுமே அலுவலாயிருந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தாய்ச் சில வருஷங்கள் சென்றன. இதற்குள் கபுறைச்சூழப் பரதர்கள் கட்டின மரக்கட்டிடம் பழுதுபட்டது. நட்டின ஸ்தம்பங்கள் மண்தின்னப்பட்டு, வெயிலிலும், மழையிலும், மிருப்பதால் பலகைகள் வெடித்து, பலவாறு கலைந்து பிரியத்தலைப்பட்டது. தாங்கள் கட்டின கட்டிடம் பழுதானதை அந்தப் பரதர்கள் கண்டு, பின்னும் அவர்களே வந்து நின்று, நாற்புறமுள்ள பலகையடைப்பைப் பிரித்துவிட்டு, மண்ணால் சுவரெழுப்பி, மேலே பலகையாலேயே கூரையிட்டுக் கட்டிமுடித்தார்கள். அந்த மண்கட்டிடந்தான் அதன்பின்பு தர்காவா யிருந்தது.

இவ்வாறிருக்கையில், முன் ஹலறத்து ஆண்டவரவர்களை நிந்தனையாகப் பேசினபடியால் வாயில் பிளவை கிளம்பிப் பாடுபட்டு, பின் ஆண்டவரவர்களிடம் வந்து மன்னிப்புப்பெற்றுச் சுகமடைந்தாரே நாகபட்டணத்து இராயதுஞ்சாலிமரைக்காயர், அவர் ஒருநாள் ஹலறத்து

னைசயிதுமுகம்மதுயூசுபு சாகிபவர்கள் சமூகத்தில் வந்து: எஜமானே, எனக்கு நேரிட்ட ஆபத்திலிருந்து என்னை ரக்ஷித்த எஜமானாகிய ஆண்டவரவர்களின் மகிமையான தர்கா மண்கட்டிடமாயிருக்கின்றபடியால், அதை நாங்கள் கற்கட்டிடமாகச் செய்ய விருப்பமுற் றிருக்கின்றேன். தாங்கள் உத்தரவு தாருங்கள் என்று கேட்டார். ஹலறத் தவர்கள் சந்தோஷங்கொண்டு, அதற்கு உத்தரவு கொடுத்தார்கள்.

அப்போதே இராயதுஞ்ராலி மரைக்காயர் என்பவர் நாகபட்டணம் போய், கருங்கற்கள், செங்கற்கள், சாந்து, மரம், மற்றும் வேண்டியவை யனைத்தும் தயாராக்கி, கைதேர்ந்த சிற்பர்களையும், தச்சர்களையும், கொற்றர் களையும் வைத்துக் கட்டிடவேலையைத் தொடங்கினர். பரதர்கள் முன் மரத்தாற்கட்டின அளவில், பின் மண்ணு லெழுப்பின சுவரை உள்ளடக்கி, கருங்கற்களால் அத்திவார மிட்டு, செங்கற்களால் சாந்திட்டுச் சுவரெழுப்பி, சதுரா காரக் கட்டிடமாகக் கட்டி, மேலே குவிந்த * மண்டபமுஞ் செய்து முடிக்கப்பட்டது. அன்றியும், சதுராகார மதிலுக்கு வெளியில் நான்குபுறமுஞ் சூழத் தாழ்வாரமிட்டு, மேலே நீண்டமண்டபங் கட்டப்பட்டது. முன்னிருந்த வாசலில் பாரிய நிலைவைத்து, இரட்டைக்கபாட மிடப்பட்டது. இவ்வண்ணமாக ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்கா என்னும் திவ்விய கட்டிடம் நடுவே சதுராகாரமதிலும், நாற் புறமும் மண்டபத் தாழ்வாரமும், நடுவிலுள்ள குவிந்த மண்டபச் சிகரத்தில் பொற்கலசமுமுள்ளதாய், சுவர்க்கத்து அலங்கார அறைக்குச் சமானமாய்முடிந்தது. பார்ப்பவர் கண்களை மருக்கத்தக்க பொற்கலச மண்டபம் அதிக அலங் காரத்துடன் விளங்கிற்று. பலகைக் கட்டிடமா யிருந்த

* இந்த மண்டபம் ஆண்டவரவர்களின் கபுறஸ்தானத்தின் மேலே தெரிகிற பாரிய மண்டபத்துக்கு உள்ளே யிருக்கின்றது.



ஆண்டவரவர்களின் தர்கா கல்லாற்கட்டப்பட்ட தென்கிற பிரஸ்தாபம் எங்கும் பரந்தது. நாலுதிசையிலுமுள்ள ஜனங்கள் தர்காவைப் பார்க்கவேண்டித் திரள் திரளாய்க்கூடி, வந்து பார்த்து ஆநந்தங் கொண்டார்கள்.

இந்தத் திவ்வியஸ்தலத்தில் அக்காலத்தில் முதுபக்து என்கிற பூர்வகட்டிடமும், புளியமரத்திற்குத் தென்புற முள்ள நாற்கால்மண்டபமும், தர்காவும் ஆகிய இம்மூன்று கட்டிடமல்லாமல், வேறு ஒருகட்டிடமும் * இல்லை. இம் மூன்று கட்டிடங்களும், கீழ்புறம் பட்டினச்சேரியுமான இந்தஸ்தலத்தில் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹி யவர்கள் தங்கள் புத்திரர் புத்திரிகள் புடை யிருக்க வாழ்ந்திருந்தார்கள். ஹலறத்தவர்களின் புத்திரர்க ளான பாபாபகுறுத்தீன், ஹமீதுல்லாஷிக்கீன், சுல்தான்கபீரி, சுல்தான்ஹக்கானீ, சுல்தான்நாறுத்தீன், சுல்தான்சகீரி என் னும் அறுவரும், புத்திரிகளான ஜுஹறாபீவி, பாத்திமாபீவி என்னும் இருவரும் தீனுல்லிஸ்லாத்தின் இல்முகளனைத் தையுங் கற்றுத் தேறி, வரவரத் தகுந்த பிராயத்தையும் அடைந்துவந்தார்கள்.

அக்காலத்தில் மேலைநாகூரில் பஹாவுத்தீன் ஸஹறவர்தீ என்று ஒரு வர்த்தகர் குடியிருந்தார்கள். இவர்கள் வட தேசத்திலிருந்து கொஞ்சகாலத்திற்கு முன் வர்த்தகஞ்செய் வதற்காக இங்கேவந்து குடியேறி, மரக்கல வியாபாரியாய் விளங்கும் ஒரு உயர்குலப் பிரபு. ஹலறத்து ஆண்டவ ரவர்கள் மேலைநாகூருக்கு வந்தபோது, அவர்களை அவ மதித்த அவ்வூர்ச் சனங்களில் சேராமல் விலகிக்கொண்ட சில வீட்டுக்காரர்களில் இவர்களு மொருவர். ஆண்டவர

* ஆண்டவரவர்கள் தனித்திருக்கப் பனையோலைவேய்ந்த சிறு வீடொன்று கட்டப்பட்டிருந்ததென்றும், அவ்வீடு வெகுகாலம் அழி யாமலிருந்ததென்றும் சொல்லுகின்றார்கள். அப்படி கிரந்தகர்த்தாக் கள் எழுதவில்லை.

வர்கள் முதுபக்குக்கு வந்தபின் இந்த பஹாவுத்தீன் ஸஹுரவர்தீ யவர்கள் ஆண்டவரவர்களிடம் வந்து, தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும், அபயங்கேட்டுக்கொண்டார்கள். அப்போதே ஆண்டவரவர்கள் இவர்களுக்கு அபயங் கொடுத்து: நீர் உமது புத்திர புத்திரிகளோடு க்ஷேமமாக வாழ்ந்திரு மென்று திருவாக்கிட்டு அநுப்பியிருந்தார்கள். அன்றுமுதல் இவர்கள் மேலைநாகூரில் முப்தியாகவும், செல்வப்பெருக்குள்ள சீமானாகவும் வாழ்ந்திருந்தார்கள். இவர்களுக்கு இரண்டு ஆண்மக்களும், ஆறு பெண்மக்களு முண்டு.

ஹலறத்து ஸையிது முஹம்மதுயூசுபு சாகிபவர்களுக்குத் தங்கள் மக்கள் பருவமடைந்திருப்பதைக் கண்டு, இனி இவர்களுக்கு விவாகஞ்செய்துவிடவேண்டு மென்று எண்ண முண்டாயிற்று. உண்டாகவே, பெண்களும், மாப்பிள்ளை மாரும் எங்கே தேடலாமென்று பலவழியிலும் ஆலோசித் தார்கள்; ஒன்றும் புலப்படவில்லை. கடைசியாக, மேலை நாகூரிலிருக்கின்ற பஹாவுத்தீன் ஸஹுரவர்தீ யவர்களின் ஞாபகம் வந்தது. வந்தபோது, ஹலறத்தவர்கள் பஹாவுத்தீன் ஸஹுரவர்தீக்கு ஆறு பெண்மக்களும், இரண்டு ஆண்மக்களு மிருக்கின்றார்கள். அந்தப் பெண்மக்கள் அறுவரையும் நமது புத்திரர்கள் அறுவருக்கும்: இரண்டு ஆண் மக்களையும் நமது புத்திரிகள் இருவருக்குமாகப் பேசி, விவாகஞ் செய்துவிடலாம். இதுதான் உத்தமமாகத் தெரிகின்றதென்று தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு, ஒரு ஆளை யநுப்பி பஹாவுத்தீன் ஸஹுரவர்தீயை வரவழைத்தார்கள்.

ஹலறத்தவர்கள் விடுத்த ஆள் போனவுடன் அவர்கள் புறப்பட்டு வந்தார்கள். தங்கள் சமுகத்தில்வந்த பஹாவுத்தீன் ஸஹுரவர்தீயவர்களை ஹலறத்தவர்கள் அருகிலிருத்தி, பல சம்பாஷணைகளையும் சம்பாஷித்துக்கொண்டிருந்து, பின்பு அவர்களைப் பார்த்து: பஹாவுத்தீனே, என் மக்கள்



பிராயமடைந்துவிட்டார்கள். அவர்களுக்கு விவாகஞ் செய்துவிட வேண்டுமென்று நினைக்கின்றேன். தங்களுடைய ஆறு பெண்மக்களையும் என் புத்திரர்கள் அறுவருக்கும் விவாகஞ்செய்துகொள்ளச் சம்மதிப்பீர்களானால், என் இரண்டு பெண்மக்களையும் தங்கள் இரண்டு புத்திரர்களுக்கும் மணமுடித்துத் தருகின்றேன். இது சம்மதமா? என்று கேட்டார்கள். உடனே பஹாவுத்தீன் ஸஹுரவர்தீ: நாயகமே தங்களின் மேன்மக்களான புத்திரர்களுக்கு என் பெண்களை விவாகஞ்செய்விப்பது சாமானியகருமம். தங்கள் செல்வப் புதல்விகளை என் ஆண்மக்களுக்குத் தருவது பிரதானமல்லவா! இதற்கு என்னைப்போன்ற ஒருவன் சம்மதிக்காமலிருப்பானா! ஆ! பாக்கியமே!! என்மக்கள் எட்டுப்பேருக்கும் இருலோக வாழ்க்கையும் கிடைப்பதற்கு இனி என்னதடை? இப்போதே சம்மதித்தேன் என்று பேராநந்தத்துடன் இதயபூர்வமாகச் சொன்னார்கள். இதைக் கேட்ட ஹலறத்தவர்கள் சந்தோஷப்பட்டார்கள். பின் இருவருமொத்து, விவாகநாள் இன்னதென்று அப்போதே குறிப்பிட்டுக் கொண்டார்கள்.

பின்பு பஹாவுத்தீன் ஸஹுரவர்தீ ஹலறத்தவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மேலைநாகூருக்குப்போய், விவாக தீர்மானத்தைத் தங்கள் குடும்பத்தாருக்கும், சுற்றத்தாருக்கும் தெரிவித்தார்கள். இதை எல்லாருங் கேட்டுக் களிகூர்ந்தார்கள். சமீபத்தில் நாள் குறித்திருந்தபடியால், விவாகத்திற் காகுமான சர்வ பிரயத்தனங்களும் செய்யப்பட்டன. பஹாவுத்தீன்ஸஹுரவர்தீயவர்களின் மனைவாசலில் அலங்காரமான பாரிய பந்தல்கள் போட்டுச் சோடிக்கப்பட்டன. மேலைநாகூர்த் தெருக்கள் முழுதும் அலங்கரிக்கப்பட்டன. முதுபக்கிலும் விவாகத்திற்கு வேண்டிய கருமங்களை ஹலறத்தவர்கள் நடத்திக்கொண்டு தயாராயிருந்தார்கள். நாகபட்டணம், பார்ப்பாரூர்களிலுள்ள முஸ்லிமானவர்

களுக்கு இன்னநாள் இன்னாரின்னாரின் புத்திர புத்திரிகளுக்கு விவாகமென்று இருபுறத்தாரும் தெரிவித்தார்கள்.

விவாகநாள் அடுத்தபோது ஜனங்கள்வந்து கூடினார்கள். அனைவருக்கும் மேலநாகூரிலேயே சம்பிரமமான விருந்துகள் அன்று காலைதொடங்கிக் கொடுக்கப்பட்டன. மாலையானபோது, ஹலறத்தவர்களின் இரு பெண்மக்களும் பல்லக்கிலேறி, மேலநாகூருக்கே அனுப்பப்பட்டார்கள். மற்ற ஆண்மக்களான ஆறுபேர்களும் புதிய மாப்பிள்ளைமாராகத் தயார் பண்ணப்பட்டு முத்பக்கி லிருந்தார்கள். பஹாவுத்தீன்ஸாஹிபவர்கள் மனையில் அவர்களின் பெண்கள் ஆறுபேர்களுடன் ஹலறத்தவர்களின் இருபெண் மணிகளையுஞ்சேர்த்து, ஆக எட்டுபேர்களையும் புதியமணவறைப் பெண்களாக ஆடையாபரணாதிகள் அணிவித்து, அலங்கரித்து வைத்திருந்தார்கள்.

பொழுதுபட்டு இரவாகவே பஹாவுத்தீன் ஸாஹிபவர்களும், அவர்கள் குடும்பத்தாரும், மேலநாகூரிலுள்ள பிரதானமானவர்களும், நாகபட்டணம் முதலான விடங்களிலிருந்து வந்துள்ள முஸ்லிம்களுமாகப் புறப்பட்டு முத்பக்குக்குவந்து, ஹலறத்தவர்களையும், அவர்களின் ஆறு குமாரர்களையும் அழைத்துக்கொண்டு பைத்துகள் முழங்க வெகு மகிழ்ச்சியுடன் மேலநாகூருக்குப் போனார்கள். பின்பு, அங்கே தயாராயிருந்த பஹாவுத்தீன்ஸாஹிபவர்களின் குமாரர்கள் இருவரையுஞ்சேர்த்து ஆக எட்டுப் பேர்களையும் புதிய மணவாளர்களாக அலங்கரித்து, பைத்து முழக்கத்துடனும், மங்கலவாழ்த்துடனும், அவரவருக்கிட்ட ஆசனங்களிலிருக்கச்செய்து, ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களும் பஹாவுத்தீன்ஸாஹிபவர்களும், முஸ்லிம் பிரபுகள் புடைசூழவிருந்து, தீனுல் இஸ்லாத்தின் முறைமைதவறாமல் நிகாஹை நிறைவேற்றினார்கள். எட்டு மணவாளர்களுக்கு, எட்டு நிகாஹுகள்



செய்யப்பட்டன. நிகாஹு முடிந்தவுடனே, ஒலிமாவென்னும் விருந்து கொடுக்கப்பட்டது. இன்னா ரின்னாரெனக் குறிப்பிடப்பட்டிருந்தபடி அவ்வம் மணவாளர் மணவாளிகளைச்சேர்த்து, அவரவருக்கென்று அலங்கரிக்கப்பட்ட அறைவீடுகளுக்கு அனுப்பினார்கள். இவ்வித மகிமையுடனும், சிறப்புடனும், அலங்காரமான விவாகம் நிறைவேறிற்று.

சிலநாள்வரையுமே மணவாளர் மணவாளிகள் எட்டுப் பேரும் மேலநாகூரில் இருந்தார்கள். அதன்பின் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களின் விருப்பப்படி எல்லாரும் முத்பக்குக்கே வந்துவிட்டார்கள். ஹலறத்தவர்களின் மருமகப்பெண்கள் அறுவரும், புத்திரிகள் இருவரும், முத்பக்கிலேயே குடியிருந்தார்கள். அவ்வவருக்கென்று அங்கே வெவ்வேறு இடங்கள் குறிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறாக ஹலறத்து சையிது முகமதுயூசுபு சாகிபவர்கள் பாரிய குடும்பத்தை யுடையவர்களாய், இபாதத்திலும், தந்தையவர்களின் ஊழியத்திலும் தரிபட்டு, வருகிற காணிக்கைப் பொருளைச் செல்வுசெய்துகொண்டு, மனைவி, மக்கள், மருமக்கள் சகிதமாய் வாழ்ந்திருந்தார்கள்.

[ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களின் பெண்மக்களிருவரின் மணவாளர்களும், ஆண்மக்களறுவரின் மணவாட்டிகளுமான எண்மரின் திருநாமங்களும் இன்னின்னவையென்று கிரந்த கர்த்தாக்கள் எழுதத் தவறிப்போனபடியால், அந்நாமங்கள் எனக்குக் கிடைக்கவில்லை. அந்நாமங்களை அவரவர் வமிசத்தாரையே கேட்டறிய வேண்டும்.]

விவாகம் முற்றிற்று.

௧௦௬-ம் அத்தியாயம்.

## ஹலறத்தவர்களின் உபாத்து.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஸையிது முகம்மதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹி யவர்கள் உபாத்தான வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது ஷாஹுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்களின் மகனாராகிய ஹலறத்து ஸையிது முகமதுயூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹியவர்கள் நாகூர் என்னும் திவ்விய ஸ்தலத்தில் மனைவி, மக்கள், மருமக்களுடன் காணிக்கைப் பொருள்களை அநுபவித்துக்கொண்டு குறைவற்ற செல்வத்துடன் வாழ்ந்திருக்குங் காலத்தில், எட்டு மக்களுக்கும் ஆண்பிள்ளை பெண்பிள்ளைகள் பிறந்து, குடும்பம் பல்கத் தொடங்கிவிட்டது. அதனால், ஹலறத்தவர்கள் தங்கள் மக்களுக்கு வெவ்வேறாகச் சிறுவீடுகள் கட்டுவித்து, அவரவர் தம் தம் மனைவிமக்களுடன் வேறு வேறாய்க் குடியிருக்கச் செய்தார்கள். அவ்வாறு அவர்கள் பிரிந்திருந்தும், ஹலறத்தவர்களின் சமிரட்சணையிலேயே யிருந்தார்கள். அவர்கள் குடியிருக்கும் அவ்வீடுகளனைத்தும் ஆண்டவரவர்களின் தர்கா என்னும் திவ்வியாலயத்தைச் சூழவே கட்டப்பட்டிருந்தன.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அடங்கப்பெற்று அவர்களின் சந்ததிகள் குடியிருக்கும் மகத்துவத்தினால், இந்த ஸ்தலத்தில் அயலூரார் பலர்வந்து குடியேறத் தலைப்பட்டார்கள். குடியிருக்க நாடி வருகிறவர்கள் ஹலறத்தவர்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு, அடர்ந்தோங்கி வளர்ந்திருக்கும் மரங்களை வெட்டி, மணல்மேடுகளையெல்லாம் சமதரையாக்கி, வீடுகள்கட்டிக் குடியேறினார்கள். பெரும்பாலும் தெற்கிராச்சியத்து முஸ்லிம்களே ஆதியில் குடியேறி வந்தார்கள். இவ்வாறாகவே முதலில் ஒரு சிறுபட்டணமாய் * நாகூர் என்று பெயர் வழங்கத் தொடங்கிற்று.



நாகூரானது சிறு சிறு வீதிகளையும், பல வீடுகளையும், சில கடைவீதிகளையு முடைய சிறுபட்டணமாய், எங்கும் பிரஸ்தாபப்படவே, பின்னும் அநேகர்வந்து குடியேறினார்கள். பலவகைக் கைத்தொழிலாளர்கள், வர்த்தகர்கள் அனைவரும் குடியேறினார்கள். குடியேறுவோர் அனைவரும் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவுக்குத் தென்புறமாகவே ஆதியில் வீடுகள் கட்டினார்கள். தர்காவைச் சூழ ஹலறத்து முகம்மதுயூசுபு சாகிபவர்களின் சந்ததிகளே வீடுகள் கட்டிக் குடியிருந்தார்கள்.

ஹலறத்து முகம்மதுயூசுபு சாகிபவர்கள் புத்திர புத்திரிகள், பௌத்திர பௌத்திரிகள், பிரபௌத்திர பௌத்திரிகளுடன் தொண்ணூறு வயதுக்கு மேற்பட வாழ்ந்திருந்தார்கள். வடதேச வழக்கப்பிரகாரம் பௌத்திர பிரபௌத்திரர்களெல்லாரும் ஹலறத்தவர்களை தாதா என்று அழைப்பார்கள். அதனால், அவர்களுக்கு தாதா சாகிபு என்றும் ஒரு பெயர் வழங்கிற்று. இவ்வித மகிமையுடன் ஹலறத்தவர்கள் வாழுங்காலத்தில், அவர்களுக்கு தொண்ணூற்று நான்கு வயது நிரப்பமாயிற்று.

ஹலறத்து ஸையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களுக்கு வயது தொண்ணூற்று நான்கு நிரப்பமானபோது தங்களுக்கு மோத்து நெருங்கி, நாள் அடுத்துவிட்டதைத்

---

* இத் திவ்விய ஸ்தலத்தில் ஆதியில் பல விருக்ஷங்களுண்டாயிருந்தாலும், புன்னை விருக்ஷங்களே அதிகமாயிருந்தபடியால் "பன்மை பற்றியவழக்கு" என்னும் தமிழிலக்கண விதிப்படிபுன்னை விருக்ஷத்தின் பெயராகிய நாகம் என்பதை யடுத்து நாகவூர் என்று பெயர்பெற்று, பின் அது நாகூர் என்று மருவி வழங்குகின்றது. இவ்வூர் மூர்த்தியும் உண்டாயிருந்து, பின் அழிந்து போனதாகவுந் தெரிகின்றது.

தெரிந்துகொண்டார்கள். தாங்கள் மௌத்தாகும் நாளாகிய அன்றுபகல் தங்கள் சந்ததிகளையெல்லாம் அழைத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, தங்களின் மௌத்தை அவர்களுக்குத் தெரிவித்து, அறிவுசொல்லத் தொடங்கினார்கள்.

என் அருமை மக்களே, மனிதர்களுக்கு மௌத்தானது பிடரி நரம்பைப் போல நெருங்கினது, அவரவர் நிழலைப்போல அகலாததுமாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் மௌத்தாகிற நாள் ஒன்றுண்டு. அது வந்து விட்டால் அவன் எங்கே யிருந்தாலும், எப்படியிருந்தாலும், ஒரு க்ஷணப் பொழுதாவது அதற்குப் பிந்திநிற்க ஏலாது. இவ்வுலகத்தில் வாழ்கிற மனிதர்கள் எப்போதும் இங்கேயே யிருக்கமாட்டார்கள். அவர்களுக்கு இவ்வுலகம் இருந்தெழுந்து போகத்தக்க ஒரு தங்கு மடமேயன்றி, வேறல்ல. ஒருவன் திரவியவந்தனாய், திடகாத்திர சரீரியாய், நீண்ட வாணுளாளனாய் வாழ்ந்திருந்தாலும், அவனுடைய சீவிய காலம் ஒரு நீர்மேற் குமிழிபோன்றதேயாம். என் பிள்ளைகளே, உங்கள் பணமும், ஏறுவாகனமும், வீடும், மனைவி மக்களும், மற்றுமுள்ள பாக்கியங்களெல்லாமும் அடிக்கடி உங்களை மருட்டும். அதனால் நீங்கள் மருளாதீர்கள். சீவியவந்தர் துயில்கின்றார்கள்: இனி விழிப்பார்கள். விழித்தபின் இவ்வுலகவாழ்வு இன்னதென்று காண்பார்கள். உங்களுக்குத் தரித்திர முண்டானாலும், செல்வ முண்டானாலும், ஒரேபடியாயிருங்கள், தீமையை நினைத்தும் பாராதீர்கள். நன்மையைக் கடைப்பிடியுங்கள். நீங்கள் இவ்வுலகத்திலிருக்கும் காலமெல்லாம் தாமரையில் தண்ணீர் போலப் பற்றுவிட்டிருங்கள். அல்லாகுத்த ஆலாவுடைய வணக்கத்தில் பராக்காய், நேரான பாதையைத் தொடர்ந்து ஒழுகியிருங்கள். அடிக்கடி சுவர்க்கத்தையும்; நரகத்தையும் நினைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களைவிட்டுப் பிரிந்துபோகும் நாள் வந்துவிட்டது. என் தந்தையவர்கள் எனக்குச்



சொன்ன திருவாக்கின்படியே செய்துவருகின்றார்கள். அது அவர்களுக்கு அல்லாகுத்த ஆலா அறிவித்த ஒரு முக்கிய அறிவிப்பு. அப்படியே அவன் உங்களைக் காப்பாற்றுவான். என் பிள்ளைகளான நீங்கள் எட்டுப்பேரும், உங்கள் சந்ததிகளும், என் தந்தையவர்களின் தாபூத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். இதில் வரும் காணிக்கை வகைகளை எல்லாரும் பாகித்து அநுபவித்துக்கொள்ளுங்கள். இனி என் சந்ததிகளில் ஒருவராவது வேறிடத்திற்குக் குடிபோகக்கூடாது. இப்படி அல்லாகுத்த ஆலா என் தந்தையவர்களுக்குத் தெரிவித்தான்; அவர்கள் எனக்குக் கட்டளை பண்ணினார்கள். நபி கலிறு அலைகிஸ்ஸலாமவர்களும் என் முகதாவில் சொல்லியிருக்கின்றார்கள். நீங்கள் இங்கிருப்பதோடு, உங்கள் வமிசமும் பரம்பரையாய் இங்கேயே யிருக்கவேண்டும். உங்கள் நிமித்தம் இது பெரிய பட்டணமாகும். உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும், அல்லாகுத்த ஆலா போதுமானவன். என் தந்தையவர்களும் உங்கள் பக்கத்திலிருக்கின்றார்கள். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள். சஞ்சலப்படாதீர்கள் என்றும், இன்னும் பலவுஞ் சொல்லிமுடித்தார்கள். இதைக்கேட்ட மக்கள் முதலானவர்கள் ஹலறத்வர்களின் மௌத்தையறிந்து துக்கக்கடலில் மிதந்தவர்களா யிருந்தார்கள்.

பின் ஹலறத்தவர்களின் உபாத்துவேளை யடுத்தது. அப்போது அவர்கள் குடும்பம் புடைசூழ்ந்து இருந்தது. ஹலறத்தவர்கள் மனைவியுடன் குடியிருந்த முதுபக்கு மண்டபத்து வடமேற்கே மூலையைவிட் டெழுந்து, ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தான இடமாகிய அம்மண்டபத்து வடகிழக்கு மூலையிற்போய்ப் படுத்திருந்தார்கள். அவ்விடமுழுதும் நறுமணம் கமகமவென்று வீசிக்கொண்டிருந்தது. ஹிஜ்றத்து ஆயிரத்து முப்பத்திரண்டாம் வருஷம், துல்ஹஜ்ஜு மாதம், மூன்றாந்திகதி, ஹலறத்து

சையிது முகம்மது புகாரி ஆரிபுபில்லாஹி யவர்கள் உபாத்தானார்கள்.

ஹலறத்தவர்கள் உபாத்தான சங்கதி சுற்றார் முழுதும் பிரஸ்தாபமாயிற்று. மேலைநாகூர், நாகபட்டணம், பார்ப்பாரூர் முதலான இடங்களிலிருந்து கணக்கற்ற முஸ்லிம்கள் வந்து கூடினார்கள். அன்று நாகூர் முழுதும் துக்கத்தில் முழுகியிருந்தது. பின் ஹலறத்தவர்களை மக்கள், மருமக்கள், பௌத்திரர் அனைவரும் கூடிநின்று குளிப்பாட்டி, கபனிட்டு, சிறப்பான மஞ்சில் வைத்து, முன் ஹலறத்து ஆண்டவரவர்கள் அடிக்கடிப்போய் உட்கார்ந்திருந்ததும், அவர்கள் சீவியகாலத்திலேயே நீர் அடங்குந்தானம் இதுவென்று ஹலறத்தவர்களுக்குக் குறித்துக் காட்டப்பட்டதும், அவர்களின் கபுறுஸ்தானத்திற்கு மேல்புறமுள்ளதுமான மணல்மேட்டை வெட்டியகழ்ந்து, அந்த மகத்துவமுள்ள கபுறில் அடக்கினார்கள்.

ஹலறத்தவர்களை அடக்கி பாத்திஹா வோதி முடிந்தபின் வந்த முஸ்லிம்கள் அனைவரும் அவர்கள் குடும்பத்தாரைத் தஃஜியத்துச் செய்துகொண்டு, அவரவர் தானம் போய்ச் சேர்ந்தார்கள். பின்பு ஹலறத்தவர்களின் புத்திர பௌத்திரர்கள், பாட்டனாராகிய ஆண்டவரவர்களுக்கும், தகப்பனாராகிய ஹலறத்தவர்களுக்கும் பணிவிடைகாரர்களா யிருந்தார்கள். ஹலறத்தவர்களின் மூத்தகுமாரராகிய பாபா பகுறுத்தீன் சாகிபவர்களே குடும்பத்தலைவரா யிருந்து வாழ்ந்தார்கள்.

[ஹலறத்து சையிது முகம்மது புகாரி சாகிபவர்கள் உபாத்தான பின் அவர்களின் மூத்தகுமாரராகிய ஷாஹா பாபா பகுறுத்தீன் சாகிபவர்கள் தர்காவில் வரும் காணிக்கை வரும்படிகளை எட்டுப் பங்காக்கி, ஒருபங்கை தாயாரவர்களுக்கும், ஆறுபங்குகளைத் தாங்கள் உள்பட ஆறு சகோதரர்களுக்கும், ஒருபங்கை இரண்டு சகோ



தரிகளுக்குமாகப் பிரித்துக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இவ்வாறு நடந்துவருங்காலத்தில், சிலகாலஞ்சென்றபின் * பாபா பகுறுத்தீன் சாகிபவர்கள் தங்கள் மனைவிமக்களை விட்டு இல்லறம் நீத்துத் துறவுபூண்டு, வனவாசியாய்ப் போய்விட்டார்கள். அதன்பின் இரண்டாம் குமாரராகிய † ஹமீதுல்லாஷிக்கீன் சாகிபவர்கள் குடும்பத்தலைவராய்ச் சிலகால மிருந்து, பின்பு அவர்களும் மனைவி மக்களைவிட்டுத் துறவியாய், வானவாசஞ்செய்யப் போய்விட்டார்கள். அதற்குபின் மூன்றாம் குமாரராகிய ஹலறத்து சுல்தான்கபீர் சாகிபவர்களே சகல அதிகாரங்களையு மேற்று, குடும்பத்தலைவராயிருந்து, முன்போலவே தர்காவின் வருமானத்தை எட்டுப்பங்காக்கிக் கொடுத்து வந்தார்கள். அதன்பின், அவர்களின் சந்ததிகளில் அவ்வெட்டுப் பங்குகளையும் பெறுகிறவர்கள் தம்முள் சமாதானமாய்க் குடும்பத்திற் கேற்றபடி ஒரு பங்கை எண்பதாகப் பிரித்துப் பெற்று அநுபவித்து வந்தார்கள். அதனால்தான் ஒரு பங்கு எண்பதாய், எட்டுப்பங்கும் அறுநூற்றுநாற்பதாய் இதுவரையும் பிரிக்கப்படுகின்றன. ஆதியில் பங்குபெற்ற எட்டுப்பேர்களின் உரித்தாளரே பரம்பரையாய் நாட்டாண்மைக்காரர் என்று சொல்லப்படுகின்றார்கள்.]

ஹலறத்தவர்களின் உபாத்து முற்றிற்று.

---

* இவர்கள் புதுக்கோட்டையைச் சேர்ந்த வனத்தில் உபாத்தாய் அடங்கியிருக்கின்றார்கள். இப்போதும் அவ்விடம் காட்டுபாவாசாகிபு பள்ளிவாசல் என்று வழங்குகின்றது.

† இவர்கள் நத்தம் என்னுமூரில் அடங்கி யிருக்கின்றார்கள்.

௧௪௦-ம் அத்தியாயம்.

## போர்வை வந்தது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் கபுறின்மீது போர்த்துவதற்காக ஒரு அரசன் போர்வையொன்று அநுப்பினதும், அது வந்துசேர்ந்த ஆச்சரியமுமான வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்கள் அடங்கி விளங்கும் திவ்வியஸ்தலம் பட்டணமாய் நாகூர் என்று வழங்குவதும், அவர்கள் சந்ததியார் பாரிய குடும்பமாய்ப் பல்கியிருப்பதும், உலகமெங்கும் பிரபலமாயின. இடைக்கிடை ஆண்டவரவர்களால் அநந்த அற்புதங்களும் நிகழ்ந்துவந்தன. வெகுதூரந்தொலையிலுள்ளவர்களின் பிரார்த்தனைகளும் நிறைவேறி, அவரவர் நாகூருக்கு வந்து காணிக்கை சமர்ப்பித்துப் போவார்கள். ஹலறத்து ஆண்டவரவர்கள் பர்மாராச்சியத்தின் ஸஞ்சரிக்குப் போனவர்களாதலால், அவ்விராச்சியத்திலும் அவர்கள் மகிமை பரவிற்று.

அவ்விராச்சியத்து * பாந்தன் என்னும் ஊரிலுள்ள அரசன் ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவத்தைக் கேள்விப்பட்டு, பலதேசத்தாரும் பலபொருள்களை ஆண்டவரவர்களுக்குக் காணிக்கையாக அநுப்புவதுபோல, நாமும் சில பொருள்களை அநுப்பவேண்டுமென்று கருதி, ஆண்டவரவர்களின் கபுறுமீது போர்த்துவதற்காக ஒரு போர்வை தயார்பண்ணினான். அது, உயர்ந்த பசும்பட்டினால், பொன்னாலிழைக்கப் பட்டு, விசித்திரமான வேலைப்பாட்டுடன் முடிக்கப்பட்டது. அந்தச் சிறப்பான

* இவ்வூர் பர்மாராச்சியத்து ரங்கூன் பட்டணத்தைச் சேர்ந்த காட்டுக்குள் இருக்கின்றது. இதை இப்போது பாந்தனு என்கிறார்கள்.



போர்வையுடன் இன்னுஞ்சில பொருள்களை யநுப்பவேண்டுமென்று அரசன் சிந்தித்து, தர்காவின் தூபத்திற்காக உயர்ந்த குமஞ்சானும், வயிரம் பாய்ந்த சந்தனக்கட்டைகளும் சேகரித்தான்.

போர்வையும், குமஞ்சானும், சந்தனக்கட்டைகளும் தயாரானவுடன், அவற்றை ஒரு பாரிய மரப்பெட்டிக்குள் பக்குவமாக வைத்து ஒரு காகிதமுமெழுதிக் கூடவைத்து, மூடி, பூட்டிட்டு, பூட்டுவாய்க்கு முத்திரைவைத்துப் பத்திரப்படுத்தி, அப்பெட்டியின்மேல் ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் என்று விலாசமெழுதி, நாகபட்டணம் போகிற கப்பலில் ஏற்றியநுப்பி, நாகூர் தர்காவிற்கொடுத்துவிடச் செய்யும்படி அவ்வரசன் கட்டளைபண்ணினான். உடனே ஏவலாட்கள் அப்பெட்டியைத் துறைமுகப்பட்டணங் கொணர்ந்து நாகபட்டணத்திற்குப் பயணமாயிருந்த கப்பலில் மாலுமிவசம் ஒப்படைத்து, நாகூருக்கு அனுப்பிவிடும்படி சொன்னார்கள். மாலுமி அதையொப்புக்கொண்டு, தன் அறைக்குள் வைத்துக்கொண்டான்.

பின்பு பெட்டியேற்றின கப்பல் அங்கிருந்து நங்கூரந் தூக்கி, நாகபட்டணம் நோக்கி ஓடிவந்தது. சிலநாள் வரையும் சீராயோடி நடுக்கடலில் வந்தபோது அக்கப்பலுக்கு மீளாத ஆபத்துச் சம்பவித்தது. அதுவரையும் கொண்டலாயடித்துநின்ற காற்று, திடீரென்று கச்சானாய் மாறிற்று. மாறினகாற்றுச் சீராயடிக்கவில்லை; அதிகமும்முரமாய் மோதிற்று. காற்று உரக்கவே கடல்கொந்தளித்தது. வரவரக் காற்றுரமும், அலைக்கிளர்ச்சியும் அதிகமாயின. ஆகாயத்தில் மந்தாரம் மூடிக்கொண்டது. எங்கும் இருள் பரந்திருந்தது. இவ்வளவு கடுமையான சண்டமாருதம் தொடங்கினபோது, சிறியகப்பல் என்ன செய்யும்! நாலா பக்கமும் ஓங்கியெழுந்து மோதும் அலைத்திரளிலகப்பட்டுத் தத்தளித்தது. ஒவ்வொரு அலையிலும் நாம் முழுகிப்

போவோமென்றே கப்பலாட்கள் பரிதபித்தார்கள். கொஞ்ச நேரத்திற்குள் பாய்மரங்களெல்லாம் முறிந்துவிழுந்தன. கடுமையாக எழுந்து தாக்கும் அலைகளின் அதிர்ச்சியால், கப்பலின் இரண்டருகும் பழுதாய்ச் சிதைந்தன. பின் நாற்புறமும் வரும் திரிதிரைமுழுதும் கப்பலுக்குள்ளாயின. ஆதரவற்ற நடுக்கடலில் புசலிலடிபட்டுத் தவிக்கும் கப்பலாட்கள் மீட்சிபெற என்ன வழியுண்டு! எல்லாரும் ஏங்கி மரணத்திற்கே தயாராயிருந்தார்கள். சற்று நேரத்தில் ஓவென்ற பேரிரைச்சலுடன் கப்பல் கடலில் முழுகிற்று. எல்லாரும் விதிப்படி முழுகியிறந்தார்கள். முழுகின கப்பல் அலைகளால் அடியுண்டு, சின்னபின்னமாயிற்று. ஏற்றியிருந்த சரக்குகள் பல திசையும் மிதந்து அலைந்து, சிதைந்து அழிந்து போயின.

கப்பலும், ஆட்களும், சரக்குகளும் இவ்வாறாக, ஹலறத்து ஆண்டவரவர்களுக்காக விலாசமிட்டு ஏற்றின பெட்டி மாத்திரம் ஒரு பழுதுமடையாமல் மிதந்தது. பின்பு புசலடங்கிக் கடல் சாந்தமாகவே, பழயபடி கொண்டலடிக்கத் தலைப்பட்டது. உரத்தடிக்கும் அக்காற்றினாலும், எழுந்து மோதும் அலைகளாலும் அப்பெட்டி தள்ளுண்டு, நாகபட்டணத்திற்கு நேராக மிதந்து வந்தது. கப்பல் முழுகிப்போன நாலாறு தினங்களுக்குள் பெட்டி மிதந்து நாகபட்டணத்துறையில் வந்து சேர்ந்தது.

நாகபட்டணத் துறைநோக்கி வந்த பெட்டி ஆளோடிச் செலுத்தும் படகைப் போலக் கரையருகில் வந்து, அங்கிருந்து வடக்கே திரும்பி, நாகூரை நோக்கி மிதந்துவந்தது. இதை அங்குள்ள ஆட்கள்கண்டு, துறைமுக அதிகாரிக்குத் தெரிவித்தார்கள். அதிகாரியின் கட்டளைப்படி சில சேவகர்கள் புறப்பட்டு அப்பெட்டியோடே கரையில் நடந்து அதைப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். பின்பு, பெட்டி நாகூரில்வந்து, தர்காவுக்கு நேரே கரையில் ஒதுங்கிற்று.



பெட்டி கரையடைந்த போது துறைமுக அதிகாரச் சேவகர்கள் நெருங்கிப் போய்ப் பார்த்தார்கள்; அதன் மேல் ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் என்று விலாசமிட்டிருந்தது. உடனே அதைத்தூக்கி நாகூரில் கொணர்ந்து, தர்காவில் ஒப்படைத்தார்கள். ஹலறத்து ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள் அதை யொப்புக்கொண்டு பூட்டைத் திறந்து பார்த்து, அதிலிருந்த கடிதத்தையெடுத்து வாசித்தார்கள். அதைக்கொண்டு, பாந்தன் நகரத்து அரசன் ஆண்டவரவர்களுக்கு அநுப்பின வெகுமதிகளென்றும், இதையேற்றின கப்பல் கடலில் முழுகிப்போயிற்றென்றும், இப்பெட்டி மாத்திரம் மிதந்து அற்புதகரமாய் வந்து சேர்ந்த தென்றும் தெரியவந்தது. பின் அந்தப் போர்வையை ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவமுள்ள கபுறின்மீது போர்த்திவிட்டு, குமஞ்சாணையும், சந்தனக்கட்டைகளையும் தர்காவின் தூப உபயோகத்திற்காக வைத்துக்கொண்டார்கள்.

துறைமுகச் சேவகாட்கள் போய் இச்சமாசாரத்தை அதிகாரிக்குத் தெரிவித்தபோது, இந்த விவரங்களனைத்தும் எழுதி பாந்தன் நகரத்து அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரசன் இதையறிந்து அதிக ஆச்சரியமடைந்தான். பெட்டிபோய்ச் சேர்ந்த அற்புதத்தைக் கேட்கும் ஒவ்வொருவரும் ஆண்டவரவர்களை முப்பொழுதும் தொழுது துதித்தார்கள்.

போர்வை வந்தது முற்றிற்று.

௧௧௧-ம் அத்தியாயம்.

# கொலைத்தீர்ப்பை மாற்றினது.

---

[இவ் வத்தியாயம் ஹஜரத்து ஆண்டவரவர்கள் திருமலைச் செட்டிக்கு விதித்த கொலைத் தீர்ப்பை மாற்றின வரலாற்றைச் சொல்லுகின்றது]

ஹஜரத்து சையிது அப்துல்காதிறு பாத்ஷாசாகிபு ஆண்டவரவர்களின் அற்புதமகத்துவம் இவ்வாறு விளங்கி வரும் அக்காலத்தில், மலாய்ந்தேசத்திலுள்ள மலாக்கா என்னும் ஊரை உலாந்தாக்காரர் ஆண்டுவந்தார்கள். அவ் வூர் அரசாங்க வுத்தியோகக் காரருள் திருமலைச்செட்டி யென்னும் ஒரு தமிழனு மிருந்தான். இவன் இந்தியாவின் தென் மேற்பகுதியிலுள்ளவன். இவனத்தொழிலுக்காக மலாக்காவிற் போய்ப் பல வேலைகளுஞ்செய்து, பின் அவ் வூர்க் கம்பட்டச்சாலைக்கு அதிபனானான். இவனுக்கு அரசாங்கத்தில் அதிக செல்வாக்கிருந்தது. அதிகாரிகள் இவனை மிகவும் உவந்திருந்தார்கள். ஏவரவ இவனுக்குக் கர்சேறித் திரவியந்தனாய், மனைவிமக்களுடன் வாழ்ந் திருந்தான்.

"கேடுவரும்போது மதி கெட்டுவரும்" என்பது மூத்தோர் சொல்லல்லவா? திருமலைச்செட்டி சகல சம்பத்துடன் துரைத்தன வுத்தியோகத்திலமர்ந்து வாழும் காலத்தில், ஒரு மதிகேடுவந்து அவனைத் தொட்டது. நாணயமடிக்கும் கம்பட்டச்சாலையின் அதிகாரம் நம் கையிலிருப்பதால், நாம் நாடினதைச் செய்யலாமென்று இவன் புத்தி மருண்டது. கள்ள நாணயத்தையடித்து, அரசாங்க நாணயத்தோடு கலந்து, அதன் ஊதியத்தை நாமடையலாம். அதனால் நமக்குத் திரவியம் பெருகும். இதனிலும் அதிக



செல்வாக்குப் பெறலாமென்று நாடி, மாற்றுக்குறைந்த வெள்ளி பொன்களைக் கொண்டு திரளான நாணயங்களை யடித்து, துரைத்தன நாணயங்களுடன் கலந்துவிட்டான். இரு நாணயங்களும் பார்வையில் பேதந்தோற்றுமல் வழங்கத்தொடங்கின.

ஊரில் அளவுக்கு அதிகமாக நாணயங்கள் வழங்குவது அரசாங்கத்தாருக்குச் சமுசயத்தைக் கொடுத்தது. துரைத்தன அதிகாரியும், அவன் உத்தியோகஸ்தரும் ஒருங்குகூடி இதைப்பற்றி ஆலோசித்து, நாணயங்களைப் பரிசோதிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் பரிசோதனையில் கள்ளநாணயங் கலந்திருப்பது வெளிப்பட்டது. இது யார் செய்த வேலையென்று துப்புவைத்து, தூண்டித் துருவிப் பார்த்தார்கள். திருமலைச்செட்டி செய்த வேலைதான் என்று தீர்மானமாய் வெளிப்பட்டது. அவனைப் பிடிக்கும்படி உடனே கட்டளை பிறப்பித்தார்கள். துரைத்தனக் கட்டளைப்படி திருமலைச்செட்டி பிடிபட்டு, விலங்குமாட்டி, சிறையிலடைக்கப்பட்டான். அவன் திரவியமுழுதும் துரைத்தனத்திற் சேர்க்கப்பட்டன. வீடு முதலானவகைகளுங்களும் அதிகாரிகளால் காவல் வைக்கப்பட்டன.

திருமலைச்செட்டியைப் பிடித்து அடைத்தபின், அவ் வூர் அதிகாரியும், அவனைச்சேர்ந்த மந்திராலோசனை சபையார் எட்டுப்பேர்களுமிருந்து, அவன்செய்த குற்றத்தை விளக்கி, குற்றவாளியென்றே தீர்மானித்து, நாளைக்காலை ஆறுமணிக்குத் திருமலைச்செட்டியைக் கழுவிலேற்றிக் கொல்லவேண்டியது என்று தீர்ப்பெழுதி, அதிகாரியும் எட்டுப்பேரும் கையெழுத்திட்டு, அந்தத் தீர்ப்புப் பத்திரத்தை ஒரு கைப்பெட்டிக்குள் வைத்துவிட்டு, அவரவர் சாகைக்குப் போய்விட்டார்கள். பிடிபட்ட திருமலைச்செட்டி சிறைச்சாலையில் தனியே அடைபட் டிருந்தான். கழுமாமும் நட்டப்பட்டது.

துரைத்தனக் குற்றவாளியென்று சிறைப்பட்டிருக்கும் திருமலைச்செட்டிக்கு மீட்சிபெற வழியொன்றுமில்லை. "பட்டாலறிவான் சண்டாளன்" என்பதுபோல, அப்போதுதான் நாம்செய்தது பெருங் குற்றமென்று அவனுக்குத் தெரிந்தது. சிறைமீட்சி பெறுவதற்குப் பல வழியும் சிந்தனை பண்ணினான்; ஒன்றினும் அவனுக்கு நன்மைகிடைக்குமென்று தோன்றவில்லை. இனி நாம் என் செய்வோம்! என்று மனம் வாடினவனாய், சிறைச்சாலையிலேயே யிருந்தான். அன்று பொழுதுபட்டு இரவாயிற்று. ஊணுறக்கமின்றித் துக்கத்தில் முழுகினவனாய் உட்கார்ந்திருந்தான். பின்னும் அவன் மனம் சும்மா இருக்கவில்லை. பலவகையிலும் ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தது. நமது தெய்வங்களையாவது பிரார்த்தனைபண்ணி வேண்டிக் கொள்ளலாமென்று நினைத்து, ஒவ்வொரு தெய்வத்தையும் குறித்து, ஒவ்வொரு விதமாக நேர்ந்து, எனக்குச் சாதகமாவதற்கு ஒரு குறிகாட்ட வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அப்படிப்பட்ட குறியொன்றும் அவனுக்குக் காணப்படவில்லை. அதற்கு பிரதிபலனாக, நாளைக்காலை ஆறுமணிக்கு நீ கழுமரத்தில் கொல்லப்படுவாயென்று நடுச்சாமத்தில் ஒருவன்போய் அவனுக்குச் சொன்னான்.

கழுவிலிட்டுக் கொல்லப்படுவோமென்பதைத் திருமலைச்செட்டி அறிந்தவுடன் அவன் மனம் என்னபாடுதான் படாது! திகில்பிடித்துத் தடுமாறினான். சிறைமீட்சிக்கே சாதகஞ்செய்யத் திராணியில்லாத நமது தெய்வங்கள் இனி நம்மை கொலையிலிருந்து மீட்கப்போகின்றனவா! என்று எல்லாவற்றையும் கைவிட்டுச் சோர்ந்துபோனான். அவனுக்கு பரிவுற்று உதவிசெய்வார் யாருமில்லையே. அதனால், இனி நமக்கு மரணமே கதியென்று உள்ளஞ் சோர்ந்து படுத்திருந்தான். அப்போது அவனுக்குத் திடீரென்று ஒரு நினைப்புவந்தது. அதாவது:— நமது தெய்வங்கள் தாம் நமக்கு உதவி செய்யவில்லை; தொலையட்டும். இனி நாம் இக்கொலையிலிருந்து மீட்சிபெற வேறுவழியில்லை. ஆயினும், இக்காலத்தில் நாகூரில் அடங்கி விளங்குகின்ற மீறன்சாகிபு ஆண்டவர்களை நாம் இப்போது வேண்டிக் கொண்டால், அவர்கள் நமக்கு உதவிசெய்ய மாட்டார்களா? என்பதே.



இவ்வித நினைப்பு அவனுக்கு அர்த்தசாமத்தில் வந்தது. வரவே, மற்றுமான எவ்வித எண்ணங்களையும் விட்டொழித்து, பரிசுத்தமானதாய், நாகூரைத் தியானித்துக்கொண்டு "நாகூர்மீறன்சாகிபே, தமியேன் தவறுசெய்து விட்டேன். இப்போது அகப்பட்டுக் கலங்குகின்றேன். நாளைக்கு என்னைக் கழுவிலிட்டுக் கொல்லப்போகின்றார்கள். இக்கொலையிலிருந்து என்னைமீட்டி ரக்ஷிக்கவேண்டும். அடியேன் மீட்சிபெறுவேனானால், ஈயப்பாளங்களும், குமஞ்சாணும், அகிற்கட்டை சந்தனக்கட்டைகளும் என் கப்பல் நிறையவேற்றி, அக்கப்பலோடே தங்கள் திருவடிகளுக்குத் தக்ஷிணையாக 'அநுப்புகின்றேன்" என்று இவ்வாறு பிரார்த்தனை பண்ணினான். இந்தப் பிரார்த்தனையெண்ணத்துடன் ஒரே சிந்தனையாக ஹலறத்து ஆண்டவரவர்கள் மீது மனதை வைத்தவனாய் உட்கார்ந்திருந்தான். அப்போது அவனுக்கு தூக்கம் வந்தது.

பிரார்த்தனை பண்ணிக்கொண்ட திருமலைச்செட்டிக்குத் தூக்கம்வந்து கண்ணைமயக்கினவுடன், ஒரு சொப்பனங்கண்டான். அந்தச் சொப்பனத்தில் பிரகாச முகத்தையுடைய மகா துறவிகளிற்சிறந்த தவத்தினரான ஒரு முதியவர் கையில் தடியுடன் வந்துநின்று "ஏ, திருமலைச்செட்டி, அஞ்சாதிரு. நாளைக் காலையில் நீ விடுதல் பெறுவாய்" என்றுசொல்லி, கைத்தடியால் அவன் முதுகில் ஒரு அடியடித்துவிட்டு மறைந்தார். தடியடியால் திருமலைச்செட்டி பதறிவிழித்து, கண்டகனவை நினைவுகூர்ந்து,

ஆண்டவரவர்கள் நம்மை ரக்ஷிப்பார்களென்று தைரியமுற்று, சந்தோஷத்துடன் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

திருமலைச்செட்டியின் சொப்பனத்தில் வந்த முதியவர் அப்போதே அதிகாரியிடத்திலும், அவன் மனைவியிடத்திலும், கொலைத்தீர்ப்பில் கையெழுத்திட்ட எட்டுப்பேரிடத்திலும், அவரவர் மனைவிகளிடத்திலும்போய் "திருமலைச்செட்டி நம்மிடம் அடைக்கலமாயிருக்கின்றான். அவனைக் கொல்லுதல் நமக்குச் சம்மதமல்ல. நாளைக்கே விடுதல்செய்துவிடவேண்டும்" என்றுசொல்லி, கைத்தடியால் முதுகுகளில் அடித்துவிட்டுப்போய்விட்டார். இச்சொப்பனத்தை அவர்களெல்லாரும் ஒரேவேளையில் கண்டார்கள்.

அவரவர் வீட்டில் அர்த்தசாமத்தில் சொப்பனங்கண்ட அவர்களனைவரும் பதறியெழுந்து, அவரவர் மனைவிகளோடு ஆச்சரியத்துடன் பேசிக்கொண்டு, பொழுது விடிவதை எதிர்பார்த்திருந்தார்கள். பின் சேவல்கூவிப் பொழுது விடிந்தது. அதிகாரியே அவசரப் பட்டவனாய் முந்தி உத்தியோகசாலைக்குவந்து, எட்டுபேர்களையுமழைத்துவர ஆள் விட்டான். அவ்வெட்டுப் பேர்களும் இவனைப் போலவே தனித்தனி ஆச்சரியப்பட்டவர்களாய்ப் புறப்பட்டுவந்து கூடினார்கள்.

எல்லாருங்கூடி உட்கார்ந்தவுடன் அதிகாரியே தான் கண்ட சொப்பனத்தை முந்தி அவர்களுக்குச் சொன்னான். இதைக்கேட்ட அவர்களும் தனித்தனியாகத் தாங்கள் கண்ட சொப்பனத்தைச் சொல்லி, அடிபட்ட முதுகுகளையும் ஒருவருக்கொருவர் காட்டிக்கொண்டார்கள். இது அவர்களுக்கு அதிக ஆச்சரியாற்புதமா யிருந்தது. திருமலைச்செட்டிக்காகவே இது நடந்ததென்று நிர்மாணித்துக் கொண்டு, முதல்நாள் எழுதிக் கைப்பெட்டிக்குள் வைத்த தீர்ப்பை யெடுத்துப் பார்த்தார்கள். அதில் "கழுவேற்றிக்



கொல்லவேண்டியது" என்று எழுதின எழுத்துகள் இல்லாமல் "விடுதல் செய்யவேண்டியது" என்று மாற்றியெழுதப்பட்டிருந்தது. இதைக்கண்டவுடனே அவர்கள் வேர்த்து விதிர்த்துப்போய், திருமலைச்செட்டியைக் கொண்டுவரும்படி சிறைச்சாலைக்கு ஆளனுப்பினார்கள்.

திருமலைச்செட்டி சிறைச்சாலையிலிருந்து இட்ட விலங்குடன் கொண்டுவந்து அங்கே நிறுத்தப்பட்டான். அவன் விலங்கை தறித்துவிடும்படி அதிகாரியின் கட்டளை பிறந்தது. அப்படியே விலங்கு தறிக்கப்பட்டது. பின்பு அதிகாரி முதலான உத்தியோகஸ்தர்கள் அவனைப் பார்த்து:—நீ இன்றிரா சிறைக்கூடத்திலிருக்கும்போது நூதனம் யாதும் கண்டதுண்டா? என்று கேட்டார்கள். அதற்குத் திருமலைச்செட்டி: துரைகளே, நான் சிறையிலடைபட்டபோது என் குலதெய்வமுதலான பல தெய்வங்களையுந் தியானித்து, சிறையிருப்பை விட்டு மீட்டவேண்டிப் பிரார்த்தித்தேன். அதனால் அநுகூலமான யாதொரு அறிகுறியும் எனக்குத் தோற்றப்படவில்லை. நாளைக்காலையில் நீ கழுவிலேற்றிக் கொல்லப்படுவாயென்று அர்த்தசாமத்தில் ஒருவன் வந்து சொன்னான். அதைக்கேட்டு நான் மனந்தடுமாறி, இக்காலத்தில் நாகூரிலடங்கி விளங்கும் மீறவ்ராகிபு ஆண்டவரைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டேன். நான் மீட்சிப்பெற்றால் சில தக்ஷணைகளனுப்புவதாகவும் நேர்ந்தேன். அப்போது எனக்கு நித்திரை வந்தது. கண்மயங்கும்போது, ஒரு முதியவர் என் சொப்பனத்தில் வந்து: "நீ அஞ்சாதிரு. நாளைகாலையில் விடுதல் பெறுவாய்" என்று சொல்லி, கையிலிருந்த தடியால் முதுகில் அடித்துவிட்டுப் போனார். வேறுநூதனமொன்றுமில்லை என்று சொல்லி, முதுகைக் காட்டினான். இதைக்கேட்ட அவர்கள் மறத்துப்போய், இதுமகா ஆச்சரியம்: இவன் கண்டவிதமும், அதற்கொத்தபடியே நாம் கண்டவை

களும், அதிக ஆச்சரியமாயிருக்கின்றன. இவனை நாம் விடுதல் செய்யாவிடில், நமக்கு ஏதாம் ஆபத்துச் சம்பவிக்கும். ஆதலால், இவனை விட்டுவிடுவதே உத்தமமென்று ஆலோசித்துக்கொண்டு, திருமலைச்செட்டியைப் பார்த்து: நாகூரிலுள்ள அந்த மகா பெரியவர் உன் குற்றத்தை மன்னித்துவிட்டார். அதனால் நீ விடுதலடைவாயாக. உன்னை நாங்கள் விடுதல் செய்துவிட்டோம். நீ போய், உன் பிரார்த்தனைப்படி நடத்து என்று சொல்லி, அவனையனுப்பிவிட்டார்கள். பின் அவனுடைய திரவியமுதலியவை யெல்லாம் அவனுக்கு ஒப்படைக்கப்பட்டன. திருமலைச்செட்டி விடுதலடைந்து, சந்தோஷகரத்தினனாய் வீடு சேர்ந்தான்.

கொலைத்தீர்ப்பை மாற்றினது முற்றிற்று.

---

௧௧௨-ம் அத்தியாயம்.

## மரக்கல மழைத்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் திருமலைச்செட்டியனுப்பின ஆளில்லாமரக்கலத்தை அழைத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீருன் சுல்தான் ஷாகுல்ஹமீது பாதுஷா சாகிபு ஆண்டவரவர்களின் அற்புத மகத்துவத்தினால் கொலையிலிருந்து விடுதல்பெற்ற திருமலைச்செட்டி வீடு சேர்ந்த அன்றைக்கே, தன் பிரார்த்தனைப்படி ஆண்டவரவர்களுக்குக் காணிக்கையனுப்ப எத்தனப்பட்டு, ஈயப்பாளங்களும், உயர்தரப் பாற்குமஞ்சாலும், சந்தனமரம் அகில் மரங்களும் ஏராளமாக வாங்கி, தனக்குச் சொந்தமான ஒரு கப்பல் நிறைய ஏற்றினான். இந்தச் சாமான்களடங்கலும் நிறைபாரமாக ஏற்றினபின், இதை ஊரதிகாரிக்கும், அவனைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும், ஊரிலுள்ள மற்றப் பிரதானமானவர்களுக்குந் தெரிவித்து, எல்லாரையு மழைத்துக்கொண்டு கப்பலுக்கு வந்தான். கப்பலில் வேறே யேற்றுமதியின்றி, இந்தக் காணிக்கைப்பொருள்களே யேற்றப்பட்டிருந்ததுமன்றி, மாலுமி முதலான கலாசுகாரக்கடலோடிக ளெல்லாரும் தயாரா யிருந்தார்கள்.



கப்பலுக்குச் சென்ற திருமலைச்செட்டி ஏற்றுமதிகளைப் பார்வையிட்டுக்கொண்டு, கப்பலின் தட்டுவாய்களில் மூடிபோட்டு அடைத்து, துரைத்தனமுத்திரை வைத்தான். அதன்பின், ஒருகடிதமெடுத்து அதில் தனக்கு நேரிட்ட விபத்தையும், தான்கண்ட புதுமையையும், விடுதல் பெற்றதையும் விவரமா எழுதி, இக்கப்பலும், ஏற்றுமதிச்சாமான்களும். நாகூர் மீறன்ஸாகிபு ஆண்டவர்களுக்குக் காணிக்கையாக அனுப்பப்படுகின்றனவென்பதையுங் குறித்துக் கீழே கையெழுத்திட்டு மடித்து, அக்கடிதத்தை ஒரு கைப்பெட்டிக்குள் வைத்துப் பூட்டி, சாவியை அதன்வாயில் கட்டித் தொங்கவிட்டு, அப்பெட்டியை மாலுமியிருக்கும் அறைக்குள் வைத்துவிட்டு, கப்பலின் பாய்களனைத்தையும் அவிழ்த்து, விரித்து இழுத்துக் கட்டும்படி உத்தரவு செய்தான்: அப்படியே கலாசுகாரர்கள் செய்து முடித்தார்கள். பின் நங்கூரத்தைத் தூக்கக் கட்டளை பண்ணினான். நங்கூரமுந் தூக்கப்பட்டது. கப்பல் ஒடும்பக்குவத்திலானபோது, மாலுமிமுதலான கலாசுகாரர்களும், மற்றவர்களும், கரைக்குப்போகப் படகுகளிலிறங்கிவிடுங்க ளென்று கட்டளை யிட்டான். அப்போது துரைத்தன அதிகாரி அவனைப்பார்த்து; செட்டீ, ஆளொன்று மில்லாமல் வெறுங்கப்பல் எப்படி ஓடிச்செல்லும்? எல்லாரையும் இறங்கச் சொல்லுகின்றாயே! இதென்ன ஆச்சரியம்!! என்று கேட்டான். அதற்குச் செட்டி: அதிகாலையில் கழுவேறிமாளவிருந்த என்னை அதிலிருந்து மீட்டி

ரக்ஷித்த நாகூராண்டவர், இக்கப்பலை ஆளோடியிருந்து செலுத்தாமல் அழைத்துக்கொள்ளுவது ஆச்சரியமா? அல்ல; அல்ல. அப்படியே அழைத்துக் கொள்ளுவார். வேண்டுமானால் அதை நீங்கள் பாருங்கள், கரையிறங்குங்கள் என்று வதில் சொன்னான். இதைக்கேட்ட எல்லாரும் படகுகளிலிறங்கினார்கள். திருமலைச்செட்டியும் இறங்கிவிட்டான்.

எல்லாரும் படகுகளிலிறங்கிக் கரையிற்போய், அங்கேயே நின்று கப்பலைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். காற்று முகத்திற் கிடந்த கப்பல் தானாகத்திரும்பி, மேல்புறம் நோக்கி ஓடத் தொடங்கிற்று. கப்பல் நாகூர்த் துறைக்கு நேராய்த் தலைவைத்து ஓடுவதை அதிகாரிமுதல் எல்லாரும் பார்த்து அதிசயித்தவர்களாய், கப்பல் மறையும் வரையும் நின்று, மறைந்தபின் அவரவர் சாகைபோய்ச் சேர்ந்தார்கள். திருமலைச்செட்டியும் வீடுபோய்ச் சேர்ந்தான். ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவம் அங்கே மிகவும் பாராட்டிப் பேசப்பட்டது.

மலாக்காத் துறையிலிருந்து ஆளின்றித் தானாக ஓட ஆரம்பித்த காணிக்கைக்கப்பல் இரண்டு மூன்று தினத்திற்குள் நாகூர்க்கரைக்கு நேரேவந்து, பின் அங்கிருந்து தெற்கே திரும்பி நாகபட்டணத்துறைக்குப்போய், அங்கு நங்கூரமிட்டுக் கிடக்கும் கப்பல்களுக்குப் பக்கத்தில் தரிபட்டு நின்றது. அப்போது மீன்பிடிப்பதற்கு அங்கே திரிந்த கட்டுமரக்காரப் பரதர்கள், புதிதாயோடிவந்த கப்பலாயிற்றே, மீன் வாங்குவார்கள் என்று எண்ணி, கப்பலருகிற்போய்ப் பார்த்தார்கள். கப்பலில் ஆட்பழக்கமேயில்லை. நங்கூரமிடாமலும், பாய்கள் கட்டப்படாமலும், கப்பல் நிற்பதைப் பார்த்துக் கரைக்குவந்து, துறைமுக அதிகாரிக்குத் தெரிவித்தார்கள். இதைக்கேட்ட அதிகாரியும், சேவகாட்களும் புறப்பட்டு, படகேறிக் கப்பலுக்குப் போய்ப் பார்வை யிட்டார்கள். கப்பலில் ஒரு ஆளாவ



தில்லை. நங்கூரம் போடப்படாமல் தூக்கிவைத்தபடி யிருந்தது. பாய்களும் விரித்தபடி யிருந்தன. இவ் வெல்லாவற்றையும் பார்த்துவிட்டு, தட்டுவாய்களைப் பார்த்தார்கள்; எல்லாம் மூடப்பட்டு, உலாந்தா முத்திரை வைத்திருந்தன. மாலுமியிருக்கும் அறைக்குள் நுழைந்து பார்த்தபோது, அங்கே கைப்பெட்டி யொன்று சாவியோடிருக்கக்கண்டு, அதைத் திறந்தார்கள்; உள்ளே கடிதமொன்றிருந்தது. அதையெடுத்து வாசித்து, இக்கப்பல் திருமலைச்செட்டி யென்பவன் மலாக்காவிலிருந்து ஆண்டவரவர்களுக்கு அனுப்பினதென்று தெரிந்து, ஆளில்லாதபடி இக்கப்பலை ஆண்டவரவர்களே அழைத்தார்களென்று ஆச்சரியப்பட்டு, இவர்களும் உலாந்தா துரைத்தனத்தார் ஆகையால், தட்டுவாய் முத்திரைகளை யுடைத்துப் பார்வையிட்டுக்கொண்டு, நங்கூரம் போடுவித்து, பாய்களைக் கட்டுவித்து, கரைக்குவந்து, படகுவிட்டுச் சாமான்களை யிறக்கக் கட்டளை பண்ணினார்கள்.

ஈயப் பாளங்களும், குமஞ்சான் பெட்டிகளும் இறக்கி, பண்ட சாலைகளில் வைக்கப்பட்டன. அகில் மரங்களும், சந்தன மரங்களும் இறக்கி, கடற்கரை மைதானில் அடுக்கப்பட்டன இப்படி எல்லாமிறங்கினபின், துறைமுகவதிகாரி அச்சாமான்களுக்குக் காவற்காரரை நியமித்து வைத்துவிட்டு, கப்பலிலும் இரண்டுமூன்று பேரைக் காவல்வைத்துவிட்டு, இவற்றை என்ன செய்கிறதென்று ஊரதிகாரிக்குத் தெரிவித்து வதிலை யெதிர்பார்த்திருந்தான். இதற்குள் இந்தச் சமாசாரம் நாகூருக்கு வந்துவிட்டது.

ஹலறத்து ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள் காதில் இது விழுந்தபோது, சில ஆட்களையழைத்து, எங்கள் பொருள்கள் உங்கள்வசம் வந்திருக்கின்றன. அவற்றை

உடனே எங்களுக்கு அநுப்பிவிடுங்களென்று ஊரதிகாரிக்குச் சொல்லியநுப்பினார்கள். இவ்வாட்கள் அங்கேபோய்ச் சங்கதியைச் சொன்னவுடன், அவ்வதிகாரி இவர்களைப் பார்த்து: ஆம்; உங்கள் பொருள்கள் எங்கள் வசந்தானிருக்கின்றன. கடற்கரையிலிருக்கிற சந்தனமரம் அகில் மரங்களையெல்லாம் தெப்பங்கட்டி, அவ்விடத்தில்தானே வைத்துவிடுகிறோம். இப்போது ஊரில் மழைபெய்யாமல் பஞ்சம் பிடித்திருக்கின்றது. ஜனங்கள் மிகக் கஷ்டப்படுகின்றார்கள். ஆளில்லாக் கப்பலை அற்புதகரமாக அழைத்த ஆண்டவரவர்கள் மழைபெய்யச்செய்து எங்கும் வெள்ளக்காடாக்கி, அந்த வெள்ளத்திலேயே தெப்பங்களை மிதப்பித்து நாகூருக்கு வரவழைக்கவேண்டும். இதுதான் எங்கள் கோரிக்கை. அதன்பின் மற்றப்பொருள்களை ஒப்படைத்துவிடுகின்றோம் என்று சொன்னான். இதைக்கேட்ட ஆட்கள் திரும்பிவந்து ஒறலறத்து ஆண்டவரவர்களின் பௌத்திரர்களிடம் தெரிவித்தார்கள்.

இதைக்கேட்ட அப்போதே அவர்கள் ஆண்டவரவர்களின் தர்காவின் முன்வாசலிற்போய் நின்று, சங்கதியை முறையிட்டார்கள். அன்று பொழுதுபட்டு இரவாகவே, ஆகாய முழுதும் மந்தாரத்தால் மூடப்பட்டு மழைபெய்யத் தொடங்கிற்று. முன்னிரவிலேயே பெய்யத் தொடங்கின மழை விடியும் வரையும் சோனாமாரியாகப் பொழிந்தது. எங்கே பார்த்தாலும் வெள்ளமயமாயிருந்தது. நாகபட்டணத் துறையிலிருந்து நாகூர்வரையுமுள்ள கடற்கரை மைதான் முழுதும் மழைவெள்ளம் பிரவாகித்துக் கட்டிக்கொண்டது. பொழுது விடியுமுன் அந்த வெள்ளத்தின்வழியே சந்தனமரம் அகில் மரங்கள் கட்டப்பட்ட தெப்பங்கள் மிதந்து, நாகூருக்குவந்து, தர்காவின் பக்கத்தில் ஒதுங்கிக் கிடந்தன.



[அன்று முதலாகவே மாரிகாலங்களில் நாகப்பட்டணத்திற்கும், நாகூருக்கும் இடையிலுள்ள கடற்கரை மைதானில் தண்ணீர்கட்டி நின்று, பிரவாகமாகக் காணப்படுகின்றது.]

பொழுது விடிந்தவுடன் அதிகாரி முதலானவர்கள் கடற்கரைக்குவந்து தெப்பங்களைக் காணாமல், நாகூருக்கு ஆளநுப்பித் தெப்பம்போய்ச் சேர்ந்துவிட்டதை யறிந்து, புதுமையாய்ச் சந்தோஷப் பட்டார்கள். அன்றோடே பஞ்சமுந் தொலைந்தது. அன்றுகாலையில் தெப்பங்களைப் பிரித்து மரங்களாக்கி, தர்காவுக்குக் கொண்டுவரப் பட்டன.

பின்பு ஊரதிகாரி ஆண்டவரவர்களின் பௌத்திரர்களுக்கு ஆளநுப்பி, மற்றவைகளை ஒப்புக்கொள்ளச் சொன்னான். இவர்கள் உடனே தகுந்த ஆட்களுக்குக் கட்டளை பண்ணி, கப்பலையும், ஈயப்பாளங்களையும், அங்கேயே விற்கச்செய்து, அந்தப் பணத்தையும், குமஞ்சான்பெட்டிகளையும் தங்களிடம் வரவழைத்துக் கொண்டார்கள்.

[கப்பல் விற்றதும், ஈயப்பாளம் விற்றதுமான பணங்களை ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள் அநுபவித்துக்கொள்ளவில்லை. அந்தப்பணத்தைக்கொண்டு, ஆண்டவரவர்களின் தர்காவைப் பருப்பித்துக் கட்டினார்கள். முன் இராயதுஞ்சாலி மரைக்காயர் கட்டின கட்டிடத்தின்முன் முகப்பலிருந்து இப்போது வெள்ளிக்கதவிட்டிருக்கும் முன்வாசல்வரையும் பருப்பித்துக் கட்டப்பட்டது. உள்ளே இராயதுஞ்சாலி மரைக்காயர் கட்டின கட்டிடத்து முதல்வாசலுக்குப்பின் நான்குவாசல்கள் ஒன்றுக்குமுன் ஒன்றாக வைக்கப்பட்டு, ஆக ஐந்துவாசல்களையும் யுடையதாகக் கட்டிமுடிந்தது. முந்தியிருந்த தாழ்வார மண்டபத்தை யுள்ளடக்கி அதையொருசுற்றாக்கி, அதன் வெளியில் மற்றொருசுற்று மண்டபமும் கட்டினார்கள். அந்த இரண்டு சுற்று மண்டபத்திற்கு உள்ளேதான் ஆண்டவரவர்களின் சிறப்பான கபுறு இருக்கின்றது. கபுறிருக்கும் கட்டிடத்தின் மேல் முன் கட்டப்பட்ட குவிந்த சிகரமண்டபத்தை உள்ளடக்கி, மேலேயொரு குவிந்த சிகர மண்டபமும் கட்டினார்கள். அந்த மண்டபந்தான் கபுறுக்கு நேராகத் தோற்றப்படுகின்றது. திருமலைச் செட்டி

யநப்பின சந்தனமரம், அகில்மரங்கள் முன்வாசற் பக்கத்திலுள்ள மண்டபங்களுக்குள்ளே வேலைசெய்து போடப்பட்டிருக்கின்றன. உள்ளே போய்ப் பார்ப்பவர்களுக்கு அந்தமரங்கள் நன்றாய்த் தெரியும்.]

மரக்கலமழைத்தது முற்றிற்று.

---

கஙக-ம் அத்தியாயம்.

## கூலி கொடுத்தது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவைச் சூழ வேலியடைத்த ஆட்களுக்குக் கூலிகொடுத்த வரலாற்றைச் சொல்லுகின்றன.]

ஹலறத்து பீருன்சுல்தான் ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களின் அன்புபெற்ற பௌத்திரர்கள் சுகமாக வாழ்ந்திருக்கும் அக்காலத்தில், காணிக்கைவரும்படி அடுத்தடுத்துவருவதால் தர்காவாசலில் ஆளிருந்து அதை வாங்குவது கஷ்டமா யிருப்பதைப்பற்றி ஒரு உண்டியற்குடம் தயார்பண்ணி, அந்தக்குடத்தை முன்வாசற்படிமேல் வைத்தார்கள். பிரார்த்தனைக்கு வருகிற ஜனங்கள் தங்கள் காணிக்கைகளை அக்குடத்தில் போட்டுவந்தார்கள். அதிகாலையில் வைக்கும் உண்டியற் குடத்தை மாலையானபின் எடுத்து, அதிலுள்ள பொருள்களைப் பங்குபிரித்து, அவரவர் எடுத்துக்கொள்ளுவார்கள். அன்று முதல் இப்படி வழக்கமாயிற்று.

ஹலறத்து ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள் அலங்காரமான தர்காவைச்சூழ நான்குபுறமும் அரணாக வேலியடைத்து வைக்கவேண்டுமென்று நாடி, அதற்கான சாமான்கள் தயார்செய்து, கூலிக்காரர்களை யழைத்துவேலி வேலை தொடங்கினார்கள். அக்கூலிக்காரர்கள் நாலைந்து தினம் நின்று வேலியடைத்து வந்தார்கள். கடைசிநாள்



* வேலியடைத்து முடிந்தது. வேலியடைத்து முடியும் அன்றுமாலைக்குப்பின் ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள் ஒவ்வொருநாளும் பங்குபிரித்துக்கொள்ளும் வழக்கப்படி உண்டியற்குடத்தையெடுத்துப் பங்குபிரித்துக்கொண்டார்கள்.

பொழுதுபட்டபின் வேலியடைத்த கூலிக்காரர்கள் வந்துநின்று கூலிகேட்டார்கள். அப்போது ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள், ஆ! என்னவேலை செய்தோம்!! உண்டியலைப் பங்கிட்டுவிட்டோமே! இவர்களின் கூலியை! கொடுப்பவர் யார்? ஒருவரே கொடுப்பதும் கூடாதே! எல்லாருஞ் சேர்ந்து மறுபடியும் பணஞ்சேர்த்தா கொடுப்போம்? உண்டியல் பங்கிடுமுன்னமே இவர்கள் கூலியை அதிலிருந்து பொதுவிலெடுத்தல்லவா கொடுத்திட வேண்டும்? ஞாபகமின்றிச் செய்துவிட்டோமே! என்று ஒருவரோடொருவர் கவலையுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தநேரத்தில் தர்காவின் பக்கத்திலிருந்து விருத்தாப்பியமான ஒரு புதுமனிதர் வந்துநின்று அவர்களைப்பார்த்து: நீங்கள் என் கவலைப்படுகின்றீர்கள்? உங்களைச் சஞ்சலப்படவிடாமல் ஆதரிக்கும் ஆண்டவர்கள் உங்களுக்கு இருக்கின்றார்களே? நீங்கள் அந்த உண்டியற்குடத்தை யெடுத்துப் பாருங்கள். கூலிக்குத்தக்க பணமிருக்கும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

உடனே அவர்கள் உண்டியற்குடத்தைக் கொண்டுவரச் சொல்லி, குலுக்கிப் பார்த்தார்கள்; உள்ளே பணமிருப்ப

---

* இந்த வேலியானது இப்போது சாகிபுமனாரா விருக்குமிடம் ஒருமூலையும், ஓட்டுமனாரா விருக்குமிடம், ஒருமூலையும், முதுபக்கு மனாரா விருக்குமிடம் ஒருமூலையும், தலைமாட்டுமனாரா விருக்குமிடம் ஒருமூலையுமாக தர்காவை உள்ளடக்கிச் சதுராகாரமாக முந்தி அடைக்கப்பட்டிருந்தது.

தாகத் தெரிந்தது. அவிழ்த்துக் கொட்டினார்கள்; கலகலவென்று வெள்ளிநாணயங்கள் விழுந்தன. விழுந்த நாணயத்தை யெடுத்து எண்ணிப்பார்த்தார்கள், வேலையடைந்த கூலிக்காரர் அத்தனைபெயர்களுக்கும் கொடுக்கவேண்டிகூலி எவ்வளவோ, அவ்வளவுபணந்தான் இருந்தது. ஒரு சல்லியாவது கூடவுமில்லை; குறையவுமில்லை. அந்தப் பணத்தைக்கூலிக்காரர்களுக்குக் கணக்குப்படி கொடுத்து அனுப்பிவிட்டு, ஹலறத்து ஆண்டவரவர்களைப் புகழ்ந்து, சந்தோஷத்துடன் வாழ்ந்திருந்தார்கள்.

கூலிகோடுத்தது முற்றிற்று.

---

௧௧௪-ம் அத்தியாயம்.

## அற்புதவாட்செய்தி.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவுக்கு வடபுறமிருந்த மூங்கில்களை வெட்டின ஒருதலைவன், அற்புதகரமான வாளினால் கழுத்தறுப்புண்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்களின் தர்காவின் தலைமாட்டுப்புறத்தில் சில மூங்கிற் புதர்களிருந்தன. அம்மூங்கில்கள் மிகச்செழித்து, ஓங்கி வளர்ந்திருந்தன. அக்காலத்தில் நாகூருக்கு மேல்புறமுள்ள நாட்டின் அதிகாரியொருவனுண்டாயிருந்தான். அவன் அதிக்கிரமியானவன். அவனுக்கு வீட்டுவேலைக்காக நல்ல மூங்கில்கள் தேவையாயிருந்தன. அதனால், அவன் தன் ஆட்களைப் பலதிசையும்போய் நல்லமூங்கில் எங்கிருக்கிறதென்று பார்த்துவரும்படி அனுப்பியிருந்தான்.

மூங்கில் தேடிப் புறப்பட்ட ஆட்கள் பலபக்கமாகப் பிரிந்து போனார்கள். ஒருபிரிவார் கிழ்புறமாகப் பார்வையிட்டுக்கொண்டே நாகூர்வரையும் வந்தார்கள். இங்கே



தர்காவின் தலைமாட்டுப்பக்கம் வளமானமூங்கில்களிருப்பது அவர்களுக்குத் தெரிந்தது. வந்து பார்த்து உடனே திரும்பிப்போய், இன்னவிடத்தில் நல்ல நல்ல மூங்கில்களிருக்கின்றனவென்று, அதிகாரியினிடம் தெரிவித்தார்கள். அப்போதே அவன் பல்லக்குத் தயார்பண்ணி யேறிக்கொண்டு, தன் சேவகர் பலர் புடைசூழ நாகூருக்கு வந்து, மூங்கில்களைப் பார்வையிட்டான். தன் வேலைக்குத் தகுதியான மூங்கிலென்று அவன் சந்தோஷப்பட்டு, அவற்றை வெட்டும்படி ஆட்களையேவினான்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் திவ்வியஸ்தலத்திலுள்ளதாயிற்றே யென்று அஞ்சினவனுமல்ல: அதற்குரியவர்களான ஆண்டவரவர்களின் பௌத்திரர்களிடம் அநுமதிபெற்றுக்கொண்டவனுமல்ல. அவன் ஒன்றையும் கவனிக்காமல் வெட்டக் கட்டளைபண்ணினவுடன், ஆட்கள் நின்று வெட்டினார்கள். மூங்கில் வெட்டுகின்றார்களென்று ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள் அறிந்து அங்கே போய், இது ஆண்டவரவர்களின் தர்காவைச் சேர்ந்தது: வெட்டப்படாது; வெட்டாதீர்கள் என்று தடுத்தார்கள். அதிக்கிரமியான அந்த அதிகாரி இவர்கள் தடுப்பதைக் கொஞ்சமும் சட்டைபண்ணவில்லை. தனக்கு வேண்டியமட்டும் வெட்டுவித்து, எல்லாவற்றையும் புணையாகச் சேர்த்துக்கட்டி, ஆற்றுவழியாய் இழுத்துக் கொண்டு வாருங்களென்று கட்டளை பண்ணிவிட்டு, சிலசேவகர் பின்னேவரப் பல்லக்கிலேறிப் போய்விட்டான். அவன் கட்டளைப்படியே ஆட்கள் மூங்கில்களைத் தெப்பமாகக் கட்டி, ஆற்றி லிழுத்துக் கொண்டு போனார்கள்:

இவற்றை பார்த்து நின்ற பௌத்திரர்கள் தங்கள் பாட்டனாரவர்களின் தர்கா வாசலில் வந்து நின்று: எங்கள் மூங்கிலை அநுமதியின்றி அதிக்கிரமமாய் வெட்டிக்கொண்டு போகிறார்கள். இதைத் தாங்கள் கேட்டுக்கொடுங்கள்

என்று முறையிட்டார்கள். இப்படியிவர்கள் முறையிட்டு நிற்கும்போதே, ஹலறத்து ஆண்டவரவர்களின் கபுறுமீது போர்த்திருக்கும் போர்வைக்குள்ளிருந்து ஒரு ஓலைச்சுருள் புறப்பட்டது.

புறப்பட்ட ஓலைச்சுருள் பறவை பறந்தாற்போல ஆகாயமார்க்கமாய்ப் பறந்து, பல்லக்கிற் போகிற அதிகாரியின் மடியிற்போய் விழுந்தது. மடியில் என்ன வந்து விழுந்ததென்று பதறினவனாகப் பார்த்தான்; ஓலைச்சுருளென்று தெரிந்தது. உடனே அதைக் கையிலெடுத்து, அதன் இருதலைப்பையும் விரித்து வாசிக்கலாமென்று முகத்துக்கு முன் கொண்டுபோனான். அவ்வோலை இருபுறமும் கருக்குள்ள வாளாய் நீண்டது. அவன்கையே அதைக்கொண்டுபோய்க் கழுத்தில்வைத்து இறுக்கிற்று. அவன் கழுத்து அறுப்புண்டு பிரேதமாய்ப் பல்லக்குள்ளே சாய்ந்தான்.

பல்லக்கின் இருபுறமும் ரத்தம் பிரவாகித்து வழிந்து ஓடிற்று. பல்லக்குச் சுமந்து செல்வோர் ரத்தத்தைக்கண்டு, இதென்ன? ரத்தமேது? என்று சொல்லிப் பல்லக்கை யிறக்கிவைத்து, உள்ளே பார்த்தார்கள். அவர்கள் எஜமான் கழுத்தறுப்புண்டு, பிரேதமாய்க் கிடப்பது தெரிந்தது. அவர்கள் கூக்குரலிட்டார்கள். பின்னேபோன சில சேவகர்கள் ஓடிப்போய்ப் பிரேதமாய்க் கிடைப்பதைக் கண்டார்கள்.

கூடப்போன சேவகர்களுக்கு, இது வேறொன்றுமல்ல மீறான்சாகிபு ஆண்டவர்களுடைய பள்ளியருகில் நின்ற மூங்கிலை அவர்களின் பௌத்திரர்கள் தடுத்தும் மதிக்காமல் இவன் வெட்டினபடியாலேதான் இப்படி நேரிட்டது என்று தெரியவந்தது. உடனே அவர்கள் அஞ்சி நடுநடுங்கி, நாம் மூங்கில் தெப்பத்தைத் திருப்பிக் கொண்டுபோய் உடையவர்களிடம் ஒப்படைத்து, மன்னிப்புப் பெறவேண்



டும். இல்லாவிட்டால், நமக்கும் ஆபத்துவரும் என்று தீர்மானித்துக்கொண்டு, பிரேதத்தைப் பல்லக்குடன் அவன் சாகைக்குக் கொண்டுபோகச் சொல்லிவிட்டு, ஆற்றுவழியே யிழுத்துப்போகிற தெப்பத்தைத் திருப்பிக்கொண்டு நாகூருக்கு வரும்படி ஒரு ஆளையனுப்பிவிட்டு நாகூருக்கு வந்தார்கள். அதன்பின் மூங்கிற்புணையும் திரும்பி நாகூர் வந்து சேர்ந்தது.

வந்த சேவகர்கள் தர்காவுக்கு முன் நடுங்கி நின்று: எஜமானவர்களே, எங்கள் எஜமானுடன் கூடி அவன் சொற்கேட்டு, நாங்களும் குற்றஞ்செய்துவிட்டோம். தேவரீர் மன்னித்து எங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று நெடுநேரம் மன்றாடிவிட்டு, பின் ஆண்டவரவர்களின் பௌத்திரர்களிருக்குமிடம் போய் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து: எஜமான்மார்களே, எங்கள் தலைவன் ஆண்டவரவர்களின் மகத்துவத்தை அறிந்திருந்தும் கொஞ்சமும் மதிக்காமல் செய்தவேலைக்குத் தக்கபடி தண்டனை யடைந்து மாண்டான். ஆண்டவரவர்கள் அவன் தலையை யறுத்துத் தண்டித்துவிட்டார்கள். அவன் மூங்கிலைத் தறித்ததற்குத் தலை தறிபட்டதே தக்கதண்டனை. இப்போது தங்கள் மூங்கில்களில் ஒன்றாவது பழுதுபடாமல் கொணர்ந்து சேர்த்துவிட்டோம். தாங்கள் ஒப்புக்கொண்டு, எங்களுக்கு மன்னிப்பருளவேண்டும் என்று கெஞ்சினார்கள். ஹலறத்து ஆண்டவரவர்களின் பௌத்திரர்கள் அவர்களுக்கு அபயங் கொடுத்து அனுப்பிவிட்டு, மூங்கில்களை ஒப்புக்கொண்டார்கள்.

அற்புதவாட்செய்தி முற்றிற்று.

௧௩௫-ம் அத்தியாயம்.

## சேவற் செய்தி.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவடிகளுக்குப் பிரார்த்தனை செய்து காணிக்கையாக விட்டிருந்த சேவலின் வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்கள் உபாத்தாயடங்கின முதல்வருஷஞ் செய்ததுபோல ஒவ்வொரு வருஷமும் கந்தூரி செய்யப்பட்டே வந்தது. ஆதலால், கந்தூரியும் நானாதிசைகளிலும் பிரபலமாயிற்று. அவ்வித கந்தூரிக்கு முந்தியே பலதிசைகளிலுமுள்ள பலஜாதியாரும் கூட்டங் கூட்டமாய் வந்து கூடுவார்கள். கந்தூரிச் சிறப்பைப் பார்க்க விரும்பினவர்களும், நாகூரின் மகிமையைக் காண விரும்பினவர்களும், ஆண்டவரவர்களின் ஜியாரத்தை விரும்பினவர்களும், பலவித நாட்டத்துடன் வரங்கேட்டுப் பெற விரும்பினவர்களும், நாட்டம் நிறைவேறிக் காணிக்கை சமர்ப்பிக்க வேண்டியவர்களும், கூட்டத்தில் வியாபாரம் பண்ணலாமென்று விரும்பினவர்களும், இன்னும்பல விருப்பமுடையவர்களுமாக அநேகர் வருஷத்திற் கொருதரம் வந்து கூடுவார்கள். இது வருஷத்திற்கு வருஷம் அதிகரித்தே வந்தது.

இவ்வாறு வருஷந்தோறும் நடைபெறும் கந்தூரிகளைப் போல ஒருவருஷம் அதிக சிறப்பாக கந்தூரி நடக்க ஆரம்பித்தது. வழக்கம்போல கந்தூரி மாதத்திற்கு முந்தியே பலதேசத்தாரும் வரத் தலைப்பட்டார்கள். தொட்டியத் தேசத்தாரும் பலர் ஆண் பெண் சிறுவர்களாக நாகூர் கந்தூரிக் கென்று புறப்பட்டார்கள். சுக்கத்துப் பொக்கணத்தோடும், தலைச்சுமையோடும், முதுகு மூட்டை



யோடும் பலர் அங்கிருந்து புறப்படும்போது, ஒரு தொட்டியப் பெண் அவர்களைப் பார்த்து: நீங்கள் எங்கே போவதற்காக இவ்வாறு புறப்படுகின்றீர்கள்? என்று கேட்டாள். அதற்கு அவர்கள்: நாங்கள் நாகூர் கந்தூரிக்குப் போகின்றோம். எங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றின ஆண்டவருக்குக் காணிக்கை சமர்ப்பிக்கவும், வேறுபல நாட்டங்களை நிறைவேற்றக் கேட்டுப் பிரார்த்தனை பண்ணிக் கொள்ளவுமே இவ்வளவுபேரும் போகின்றோம். கந்தூரி பார்க்கப் பிரியப்பட்டவர்களும் எங்களோடு வருகின்றார்கள் என்று வதில் சொன்னார்கள்.

இதைக்கேட்ட தொட்டிச்சி அவர்களைப்பார்த்து: நீங்கள் போகிற அந்த நாகூராண்டவர், நீண்ட நாளாகநோய் வாய்ப்பட்டுப் பாயிற்கிடக்கிற என் கணவனையும், மகனையும் சௌக்கியம் பெறச்செய்வாரானால், வருகிறவருஷ கந்தூரிக்குக் காணிக்கைகொண்டு நானும், என் கணவனும், மகனும் வருவோம். இது தான் என் பிரார்த்தனை என்று சொன்னாள். இதைக்கேட்ட அவர்கள் ஆகட்டுமென்று சொல்லிப் போய்விட்டார்கள்.

உடனே அந்தத் தொட்டியப்பெண் வீட்டுக்குப்போய், தான் வளர்த்த ஒரு இளஞ்சேவலைப்பிடித்து வியாதியாய்க் கிடக்கின்ற கணவனையும், மகனையும் அந்தச் சேவலைத் தொடச்சொல்லி, அதைத் தன் கையில் ஏந்திக்கொண்டு: இது நாகூர் மீறான்சாகிபு ஆண்டவருடையது என்று சொல்லி விட்டு விட்டாள்.

இது செய்த சிலதினங்களுக்குள் அவளுடைய கணவனும், மகனும் சுகப்பட்டு, நாட்குநாள் திடகாத்திரரானார்கள். இருவரும் பூரணசுகம் பெற்றதை அவள்கண்டு பூரித்து, ஹலறத்து ஆண்டவரவர்கள்மீது அதிக பயபக்தி

யுள்ளவளாய், அந்தப் பிரார்த்தனைச்சேவலைக் கண்ணுங் கருத்துமாகப் பார்த்து வளர்த்து வந்தாள். அன்புடன் வளர்க்கப்படும் அந்தச்சேவல் நாளொருவண்ணமாய் வளர்ந்துவந்தது. சிலமாதங்களுக்குள் அது கொழுத்து மதாளித்து, பருஞ்சேவலாய்த் திரிந்துகொண்டிருந்தது.

கொட்டியத் தேசத்துக் குறுநிலமன்னனுடைய சேவகனொருவன் தெருவழியே வரும்போது, அந்தப் பிரார்த்தனைச் சேவல் மேய்ந்துகொண்டு நிற்பதை அவன் கண் கண்டது. கட்டுவிட்டு, மதர்த்து, பருத்து, கொழுத்து, செல்வத்தில் வளர்க்கப்பட்டு, அழகினதாய் நிற்குஞ் சேவலை அவன் கண்டபோது, இதை யறுத்துச் சமைத்து நாம் தின்னவேண்டுமென்று நினைத்துக்கொண்டு போனான். அவன் தின்ன ஆசைப்பட்ட அந்தச் சேவல்மீது கண்போட்டுக்கொண்டே பல நாட்களைப் போக்கினான். ஒருநாள் அவனுக்குச் சமயம் வாய்த்தது.

வழக்கப்படி அந்தச் சேவகன் அன்று தெருவழியே வரும்போது சேவலைக்கண்டு, வெருட்டி மறித்துப் பிடித்தான். பிரார்த்தனைச் சேவலை ஒருவன் பிடிக்கின்றானென்று அந்தத் தொட்டியப்பெண் செய்திகேட்டு, பறந்து விழுந்து ஓடிவந்து நின்றுகொண்டு: ஐயா, அது நாகூர்மீறன் சாகிபு ஆண்டவருக்குப் பிரார்த்தனைசெய்து, அவர் பேரால் விடப்பட்ட சேவல். பிடிக்காதீர்; விட்டுவிடும். அந்த ஆண்டவர் மகாபெரியவர். அவர் சேவலைப்பிடிப்பது ஆகாது. வேண்டாம்; விட்டுவிடும் என்று பலதரம் சொன்னாள். இவள் சொல்வது அவன் காதில் ஏறவில்லை. சேவலைப்பிடித்து இரண்டு கால்களையும் சேர்த்துக் கட்டிக் கழியில் கோத்துத் தோளில் வைத்துக்கொண்டு, பேசாமல் நடந்தான். இவள் அவன் பின்னே முன்போலச் சொல்லிக் கொண்டே தொடர்ந்துபோனாள். சேவல் அடிக்கடிக்கூவி,



அவன் தலையில் கொத்திக்கொண்டே போயிற்று. அவன் ஒன்றையுங் கவனிக்காமலே நடந்தான்.

மறுபடியும் அந்தத் தொட்டிச்சி அவனைப்பார்த்து: ஐயா, அந்தச் சேவல் கூவுவதையும், கொத்துவதையும் நீர் கவனிக்கிறதில்லையா! இதென்ன பேராசை!! அது மீறன் சாகிபுக்கு உரியதல்லவா!!! அதை விட்டுவிடும். உமக்குச் சேவல் வேண்டுமானால், ஒரு சேவலுக்கு வேறு நான்கு சேவல்கள் இதைப்போலக் கொழுத்துப் பருத்தனவாகத் தருகிறேன். விட்டுவிடும் என்று சொன்னாள். அதற்கு அவன் சினக்குறியுடன் அவளைத் திரும்பிப் பார்த்து: ஏடி, இன்னும் அரைநாழிகையில் இதை அறுத்துத் தின்று விடுவேன். இது மீறன் சாகிபுக்கு உரியதென்றால், வயிற்றி லிருந்துகொண்டு கூவுமோ! கொத்துமோ! போ! போ! பைத்தியக்காரி என்று சொல்லிவிட்டு நடந்தான். இதைக் கேட்ட அவள் மனம்நொந்து திரும்பி வந்துவிட்டாள்.

அவன் சேவலைக் கொண்டுபோய் அப்போதே அறுத்துக்கறிசமைத்து, அவ்வளவையும் தானாகவே தின்று விட்டு, அன்றிரா படுத்துத் தூங்கிவிட்டான். அர்த்த சாமத்தில் அவனுக்கு வயிற்றுவலி கண்டது. வலி கண்ட வுடனே பதறிவிழித்து, இதென்ன வயிற்றுவலியென்று கலங்கினான். கொஞ்ச நேரத்தில் குடல்புரண்டு, வயிறு பொருமி, நோக்காடு அதிகப்பட்டது. வர வர வலி தாங்கக் கூடவில்லை. கீழே கிடந்து உருண்டு புரண்டு, ஐயோ! ஐயோ!! ஐயையோ!!! என்று கூவி, அழுது கதறினான். அவன் மனைவி மக்களும், அயலாரும் வந்துகூடி, இதென்ன பரிதாபமென்று துக்கித்தார்கள். வந்து கூடினவர்கள் பேயென்றும், நோயென்றும், செய்வினையென்றும், தீவினை யென்றும் பலவாறு பேசினார்கள். மந்திரம் ஜெபித்துப் பார்த்தார்கள்; பலவித மருந்துகள் கொடுத்தார்கள்:

தெய்வங்களுக்கு வேண்டுதல் செய்தார்கள்; ஒன்றிலுஞ் சாயவில்லை. வரவர அமளி அதிகப்படுகிறதன்றி, இருந்தபடி யிருந்தபாடுமில்லை. கீழே கிடந்து உருண்டு, கதறிக் கொண்டே யிருந்தான். பொழுது விடியும் வேளையாயிற்று.

பொழுது விடிவதற்கு முன் சேவல் கூவுவது உலக வழக்கமாயிற்றே? இவன் தின்ற சேவல்தான் வயிற்று ளிருந்து முதலாவதாகக்கூவ ஆரம்பித்தது. வயிற்றுக்குள் ளிருக்கும் சேவல் இரண்டு சிறகுகளையும் உதறியடித்து, கூவிற்று. இச்சத்தத்தைக் கேட்டே ஊரிலுள்ள மற்றச் சேவல்களெல்லாம் சிறகடித்துக் கூவின. தன் வயிற்று ளிருந்து சேவல் கூவினசத்தம் காதில் விழுந்தபோதே அந்தப் பாதகன் தடுமாறி, மூர்ச்சித்து விழுந்தான். மற்றும் நின்றவர்களெல்லாம்: என்ன! இவன் வயிற்றுவலி யென்றானே! வயிற்றுக்குள் சேவல் கூவுகிறதே! என்று புதுமைப்பட்டு, மறந்துப் போனார்கள்.

பின்பு அவர்கள் என்னசெய்வார்கள்? அவன் மனைவி யைப் பார்த்து: நடந்ததாதன மென்ன? சொல்லென்று கேட்டார்கள். அதற்கு அவள்: நானொன்று மறியேன். வளர்த்தவள் பரிதபிக்கும்படி ஒரு சேவலைப் பிடித்துவந்து, கறிசமைத்துத் தின்றார். அதுதான் எனக்குத் தெரியும் என்று வதில் சொன்னாள். இதைக்கேட்ட அவர்கள், அது யாருடைய சேவல்? என்ன சேவல்? என்று அங்கேயே விசாரித்தார்கள். இன்னாருடைய சேவலென்றும், இன்ன வகையான சேவ லென்றும் வெளிப்பட்டது. இதைக் கேட்ட அவர்கள், இது அந்த நாகூராண்டவரை வேண்டிக் கொண்டாலன்றித் தீராதென்று, சேவற்காரியை அழைத்து வர ஆளனுப்பினார்கள். உடனே அந்த ஆள்சென்று அழைத்தபோது அவள்: என்சேவல் ஆண்டவருக்குப் பிரார்த்தனை பண்ணி விடுத்ததென்று எவ்வளவு சொல்லிக்



கெஞ்சி மன்றாடியும், அதைக் கொஞ்சமும் கவனிக்காமல், பிடித்துப்போய்ச் சமைத்துத் தின்றான். அவன் செய்த தற்குத் தக்கபடி நீங்கநுபவிக்கின்றான். அந்தப் பாதக னுடைய முகத்தில் நான் விழிக்கமாட்டேன். அங்கே வரவு மாட்டேன் என்று சொல்லி மறுத்துவிட்டாள்.

இவ்வளவுக்கும் அந்தப் பாதகனுடைய வயிற்றுக்குள் அடிக்கடி சேவலானது கூவிக்கொண்டும், கொத்திக் கொண்டுமே யிருந்தது. அவன் அழுது புலம்பிப் புரண் டுருண்டபடும் வருத்தம் பார்ப்பவர்களுக்கு மிகப் பரிதாபத் தைக் கொடுத்தது. ஓயாமல் கூவும் சேவற் சத்தத்தை யும், வயிற்றுக்குள் உண்டாயிருக்கும் அடங்காத தாங்கரிய வருத்தத்தையும் அவன் அறிந்து, பக்கத்தில் கூடிநிற்ப வர்களைப் பார்த்து; என்னைத்தூக்கி இஸ்லாமானவர்கள் குடியிருக்கு மிடத்திற்குக் கொண்டுபோய்ப் போடுங்கள் என்று சொன்னான். அங்கு நின்றவர்கள் அவன் சொற்படி அவனைத் தூக்கிக்கொண்டுபோய், இஸ்லாமானவர்களின் தெருவில் போட்டார்கள். அங்கிருந்த இஸ்லாமானவர்கள்: இதென்ன சம்பவம்? என்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பாதகனே அழுது சொல்லுகின்றான்:—

ஐயாமார்களே, நான் மதிகேட்டினால் உங்கள் நாகூ ராண்டவருடைய பிரார்த்தனைச் சேவலைப் பிடித்து, அறுத்துத் தின்றுவிட்டேன். அந்தச் சேவல் இப்போது என்வயிற்றுக் குள்ளிருந்துகொண்டு கூவுகின்றது. அன்றியும், தாங்கொண் ணாத வலியும் புரட்டலுமாய் வயிறுபொருமி, வேதனையா யிருக்கின்றது. நீங்கள் தயவுவைத்து அந்த ஆண்டவ ரிடம் வேண்டுதல்செய்து, என் ஆபத்தை நீக்குங்கள். இப்போதே என் ஆஸ்திகள் எல்லாவற்றையும் விற்றுக் கொண்டு நாகூருக்குப்போய், அந்த ஆண்டவருடைய திரு வடிகளுக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிடுகிறேன். இன்

னும், நானும், என் மனைவி மக்களும், இஸ்லாம் மார்க்கத்தில் ஆய்விடுகிறோம் என்று உறுதியுடன் சொன்னான். இதைக் கேட்ட இஸ்லாமானவர்கள் அவன்மீது இரக்கமுற்று "ஷாகுல்ஹமீது பாத்ஷாசாகிபு ஆண்டவரவர்களே! இவன்செய்த குற்றத்தைப் பொறுத்து, இவனுடைய வில்லங்கத்தை நீக்கி ரக்ஷிக்கவேண்டும்" என்று ஒருமனப்பட்டு நின்று, ஹலறத்து ஆண்டவரவர்களிடம் முறையாந்து செய்தார்கள்.

அகில ரக்ஷகராகிய ஆண்டவரவர்கள் தீனுல்இஸ்லாம் செழித்தோங்கும் வண்ணம் அவன் குற்றத்தை மன்னித்தார்கள். அதனால், அவனுடைய வயிற்றுவலி அந்தக்ஷணமே தீர்ந்து, சேவற்சத்தமும் அடங்கிற்று. அங்குக் கூடிநின்ற எல்லாரும் ஆச்சரியப்பட்டு, ஹலறத்து ஆண்டவரவர்களை வாயார மனதாரப் போற்றிப் புகழ்ந்து, துதித்தார்கள்.

வயிற்று வில்லங்கம் தீர்ந்த அவன் எழுந்து நின்று: இன்றைக்கே என் பிரார்த்தனைகளை முடிப்பேன் என்று சொல்லிவிட்டு, வீடுபோய்ச் சேர்ந்து, மனைவி மக்களோடு மீண்டு அவர்களிடம்போய், கலிமா சொல்லி இஸ்லாமிலானான். பின்பு, தன் ஆஸ்திகளனைத்தையும் விற்றுப் பணமாக்கிக் கொண்டு. மனைவி மக்களுடன் புறப்பட்டு நாகூருக்குவந்து, தான் கொணர்ந்த பணத்தை உண்டியலில் போட்டுவிட்டு, ஆண்டவரவர்களைப் பணிந்து துதித்து, தன் வரலாற்றை தர்காவில் நின்று பிரஸ்தாபமாகப் பலர்க்கும் சொல்லிக் காட்டினான். கேட்ட எல்லாரும் அதிசயித்து, ஆண்டவரவர்களைப் புகழ்ந்தார்கள். பின்பு சில நாள் வரையும் அவன் நாகூரில் இருந்து, அதன்பின் தன் ஊருக்குப் போனான்.

சேவற்சேய்தி முற்றிற்று.

---

கஙசு - ம் அத்தியாயம்.

## குருடு மாற்றினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒரு ஸ்திரீக்குண்டான குருட்டை மாற்றின வறலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து, காதிறேலி கன்ஜஸவாய் ஆண்டவரவர்களின் ஒரு வருஷத்து கந்தூரியில் வழக்கம்போல நாலு தேசத்தாரும் வந்தார்கள். அவர்களில் மேல்நாட்டிலுள்ள ஒரு பிராமணப் பெண்ணும் வந்திருந்தாள். அவள் தன் பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்காக தர்காவுக்கு வந்து, தான் கொணர்ந்த கலயத்திலிருந்த நெய்யை அங்கு முன் வாசலிருந்த விளக்கில் ஊற்றினாள். அந்தநெய் விளக்கில் தரிபடாமல், தண்ணீர்போலுருகித் தரையில் வழிந்தோடி விட்டது. அப்போதே அவளுடைய இரண்டு கண்களும் குருடாயின.

நல்ல கண்ணோடுவந்து விளக்கில் நெய்யையூற்றின மாத்திரத்தில் நெய்யும் வழிந்தோடி, கண்களும் குருடாயின படியால், அவள் அஞ்சி நடுங்கி, ஆ! இதென்ன!! என் பிரார்த்தனைப் பிரகாரம் நெய் கொணர்ந்து ஊற்றினேனே!!! அது வழிந்தோடினதுமன்றி, கண்களும் குருடாயினவே! நான் என் செய்வேன்!! இனி எனக்கு என்ன ஆபத்துகள் நேரிடுமோ!!! என்று பிரலாபித்து அலறியழுதாள். அவள் நிற்குமிடத்தில் கூட்டம்வந்து கூடிற்று.

கண்கெட்டுத் தடுமாறிநின்று புலம்பிப் பரிதபிக்கும் அந்தப் பார்ப்பாரப்பெண்ணை வந்துகூடினவர்கள் பார்த்து: ஏ, பெண்பிள்ளாய், நீ ஏன் இப்படி யழுகின்றாய்? என்று கேட்டார்கள். கேட்டபோது அவள் நின்றபடியே குப்புற

விழுந்து கும்பிட்டு: ஐயன்மாரே, கேளுங்கள். எங்கள் நாட்டிலிருந்து ஒருநாள் சிலர் பயணப்பட்டார்கள். நான் எங்கே போகிறீர்களென்று அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர்கள், நாகூர் ஆண்டவருக்குக் காணிக்கைகொடுக்கப் போகிறோமென்று வதில் சொன்னார்கள். உடனே நான் நாகூர் ஆண்டவரே, என் கணவருடைய கண்கள் குருடு நீங்கித்தெளிவுபெற்றால், வருகிறவருஷ கந்தூரியில் ஒரு பணத்துக்கு நெய்வாங்கிக் கொணர்ந்து உங்கள் கோயில் விளக்கில் ஊற்றுகிறேன் என்று நேர்ந்துகொண்டேன். அப்போதே நெடுநாட் குருடாயிருந்த என் கணவர் கண்கள் தெளிவடைந்தன. நான் பண்ணிக்கொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கு அங்கேயே ஒரு பணத்திற்கு நெய் வாங்கிக்கொண்டு இங்கே வந்தேன். ஆனால், வந்தவிடத்தில் இந்த ஆபத்துவந்ததற்குக் காரணம் ஒன்றுண்டு:— நான் ஒருபணத்திற்கு வாங்கிவந்தநெய், இங்கே மூன்றுபணத்திற்கு விற்குமென்று கேள்விப்பட்டேன். அப்போதே எனக்குக் கேடுவந்தது. நமது பிரார்த்தனை ஒருபண நெய் தானே? இங்கே இதை மூன்றுபணத்திற்குவிற்று, இரண்டு பணத்தை முந்தியில் முடிந்துகொண்டு, இங்கேயே ஒரு பணத்திற்கு நெய்வாங்கிக் கொண்டுபோய் ஊற்றிவிடலா மென்று நினைத்து, நான் கொணர்ந்த நெய்யை ஒரு கடைகாரனிடத்தில் கொண்டுபோய் மூன்றுபணத்திற்கு விற்று, அவனிடந்தானே ஒருபணத்திற்கு வேறுநெய் வாங்கி, இரண்டுபணத்தை மிச்சம் பிடித்துக்கொண்டு, விளக்கில் கொணர்ந்து ஊற்றினேன். அது தண்ணீராயுருகி வழிந்தோடி விட்டதுமன்றி, என் கண்களும் குருடாயின. இனிப் பேச்சென்ன? பணத்திற்கொரு கண்ணாக இரண்டுபணத்திற்கு இரண்டு கண்களையும் மிழந்தேன். இனி என் செய்வேன்! கெட்டேனேயென்று தன்வரலாற்றைச் சொல்லிக்காட்டி, பின்னும் பிரலாபித்து அழுதாள்.



உடனே அவர்கள் அவள்கையைப்பிடித்து அழைத்துக்
கொண்டு கடைவீதியிற்போய், இவளிடத்தில் நெய்
வாங்கினவன் யார்? என்று விசாரித்தார்கள்: வாங்கின கடை
காரன் நான்தான் வாங்கினேனென்று சொன்னான். அவ
ளிடம் சங்கதிகளைச் சொல்லிக்காட்டி, அவளிட மிருந்த
இரண்டுபணத்தையும் வாங்கி அவனிடம் கொடுத்துவிட்டு,
அவன் விற்ற பழயநெய்யை வாங்கி அவள்கையிற் கொடுத்து
அழைத்துவந்து விளக்கடியில் விட்டு, இதை
ஊற்று என்று சொன்னார்கள். உடனே அவள்: ஐயா, ஆண்
டவரே, தங்கள் மகிமையை அறியாமல் பெண்புத்தியால்
இது செய்தேன். நான்செய்ததை மன்னித்தருளவேண்டு
கிறேன். இதோ என் பிரார்த்தனைப்படி நெய் ஊற்றுகி
றேன். ஏற்றருளவேண்டுமென்று பிரார்த்தித்து, மனமுருகி
நின்று அதிக அச்சப்பாட்டுடன் விளக்கில் ஊற்றினாள்.
ஊற்றினநெய் விளக்கில் தரிப்பட்டது. இருகண்களும் பளீ
ரென்று திறந்தன. அவள் அகம்பூரித்துச் சாஷ்டாங்கமாய்
விழுந்தெழுந்து: இவ்விதக் கருமத்தை இனியொருவர்
செய்யாமல் நானேயெச்சரித்தேன். இவ் வாண்டவரின்
பொருளுக்கு ஆசை வைப்பவர்கள் ஒருகாலும் வாழமாட்
டார்க ளென்று சொல்லிவிட்டு, தன் ஊருக்குப் போனாள்.

குருடு மாற்றினது முற்றிற்று.

---

## ௧௧௭-ம் அத்தியாயம்.

## தரியாபீவியின் சபதம்.

[இவ் வத்தியாயம் ஷாஹுல்ஹமீது ஆண்டவரவர்களின் பௌத்திரர்களிமீது தரியாபீவி சபதமிட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது மீறான்சாகிபு ஆண்டவரவர்களின் அற்புதக்கிரணங்கள் அகிலமெங்கும்பரந்து பிரகாசித்தது. உலகமுழுவதுமே கொண்டாடத் தொடங்கிக்கொண்டது. ஆண்டவரவர்கள் உபாத்தாய்ச் சில வருஷங்கள் சென்றன. இதற்கிடையில், ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபு ஆரிபுபில்லாஹி யவர்களின் புத்திரர்களில் முதன்மைபெற்றிருந்த ஹலறத்து ஷாஹுறா சுல்தான் கபீர் சாகிபவர்கள் உபாத்தாய், தகப்பனாருகில் அடக்கஞ் செய்யப்பட்டார்கள். இவர்களின் குமாரராகிய ஹலறத்து சுல்தானப்துல்காதிறு சாகிபவர்கள் குடும்பத்தலைவரானார்கள். ஹலறத்து சையிது முகம்மது யூசுபு சாகிபவர்களின் சந்ததிகள் பல்கிவிட்டார்கள். அவர்கள் குடும்பம் பனியூசுபு என்று பெயர்பெற்று, சாகிபுமார்கள் என்று அழைக்கப்பட்டார்கள். நாகூர் வரவர விஸ்தீரணமாய்க்கொண்டு வந்தது. கந்தூரி யென்னும் திருவிழாவானது வருஷத்திற்கு வருஷம் மிகச் சிறப்பாய் நடந்துவந்தது.

ஒருவருஷத்து கந்தூரியில், நாகூருக்குத் தெற்கில் நாகபட்டணத்தைச் சேர்ந்ததாயிருக்கும் பார்ப்பாரூரிலுள்ள பொன்னிமரைக்காயர் என்பவருடைய மனைவியாகிய தரியாபீவி என்பவள் நாகூருக்குவந்தாள். பொன்னிமரைக்காயர் என்பவர் ஒரு பிரபு; அவர்மனைவியான தரியாபீவி மிகச் செல்வாக் குள்ளவள். பணப்பெருக்குள்ள அவள் தன் பரிவார ஜனங்களோடு புறப்பட்டுப் பல்லக்கேறி வெகு



சிறப்புடன் நாகூருக்குவந்து, தர்காவிற்போய் ஹலறத்து ஆண்டவரவர்களை ஜியாறத்துச் செய்துவிட்டு, ஒரு இடத்தில் சாகைபண்ணிக்கொண்டு கந்தூரி முடியும்வரையும் இருந்தாள்.

[கந்தூரிமுடிந்த கத்தத்துக்காலையில் புலவுச்சோறாக்கி வந்தவர் களுக்குப் பகிர்வது, ஹலறத்து ஆண்டவரவர்கள் உபாத்தானமுதல் வருஷந் தொடங்கிச் சிலவருஷங்களில்தான் நடந்தது. வரவர ஆயிரக்கணக்கில் ஜனங்கள்வந்து கூடத்தலைப்பட்டபின், அதிகசெல விட்டுப் புலவுச் சோறாக்கக் கூடாமையாலும், ஆக்கினாலும், எண் ணிறந்த ஜனக்கூட்டத்திற்குப் பகிர்வது அசாத்தியமானதாலும், கொழியலரிசிச்சோற்றை அதிகமாகச் சமைத்து உண்டைபிடித்து ஜனசந்தடியில் எறிவதையும், அவரவர் அகப்பட்டதைப் பிரசாத மாகப் பெற்றுக்கொண்டு போவதையும், வழக்கப்படுத்திக் கொண் டார்கள். அப்படியே இதுபரியந்தம் நடந்துவருகின்றது. அந்தக் கொழியரிசிச்சோற்றில் ஒருசோறுபெற அடித்துவிழுந்து ஒருவரோ டொருவர் முந்தப்பார்க்கும் அமளியை ஒவ்வொரு வருஷத்திலும் பார்க்கலாம். அந்தச் சோறு வெகு தூரந்தொலைகளுக்கும் அருமருந் தாகப் பேணிப் போகப்படுகின்றது.]

தரியாபீவி வந்திருக்கும் வருஷகந்தூரியின் கத்தத்துக் காலையில் வழக்கப்படி உண்டைச்சோறு எறிந்து முடிந்த பின், அந்த மகத்துவமுள்ள விலைமதிக்கக் கூடாத சோற்றில் கொஞ்சமெடுத்து ஒரு மண்பாத்திரத்தில் போட்டு, ஆண்டவரவர்களின் மேன்மையுள்ள கபுறின்மீது பூசி மிஞ்சின சந்தனத்தில் கொஞ்சம் அதன் நடுவில்வைத்து; அந்த தரியாபீவிக்கு சாகிபுமார்கள் அனுப்பினார்கள். அது தரியாபீவி முன் கொண்டுபோய் வைக்கப்பட்டபோது, அவள் அதைப் பார்த்து அடக்கக்கூடாத கோபங்கொண்டு சாகிபுமார் தாதிமார்களைக் கண்களில் உதிரம்பாயப் பார்த்து "பார்த்தீர்களா இந்த சாகிபுமார்களுக் குள்ள குணத்தை என் மகிமையைக் கொஞ்சமும் மதிக்காமல் கொழி யலரிசிச் சோற்றை மண்பாத்திரத்திற் போட்டு, எனக்


ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS

யெளியோர்களுக்குக் கொடுப்பது போல எனக்குக் கொடுத்தார்களே? என்னை இன்னாளென்று இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை; நல்லதிருக்கட்டும். இவர்கள் எல்லாரையும் இந்த தர்காவை விட்டு ஓடும்படி அடித்துத் துரத்திவிட்டு, இவர்களுக்குப் பிரதியாக இங்கிருந்து கொண்டு தர்காவின் பணிவிடைகளைச் செய்துவருவதற்கு பிஜாப்பூரிலிருக்கின்ற சைகு அதீக்துல்லா சாகிபவர்களையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும் அழைத்து வைத்துவிடுகிறேன். இப்படி நான் ஒரு மாதத்திற்குள் செய்து முடிக்காவிட்டால், என் முலைகளை யறுத்து நாய்க்கு இரையாகப் போடுகிறேன்; பாருங்கள் என்று சொன்னாள்.

தரியாபீவி இப்படிச் சபதமிட்டுச் சொல்லிவிட்டு, அன்றைத்தினமே பரிவாரத்துடன் நாகூரை விட்டுப் புறப்பட்டுப் பார்ப்பாருருக்குப் போய், உடனே பிஜாப்பூரிலிருக்கும் சைகு அதீக்துல்லா சாகிபுக்கு ஒரு கடிதமெழுதினாள். அதில் தான் நாகூருக்குப் போனதையும், தனக்கு சாகிபுமார்கள் செய்த அவமரியாதையையும், அதனால் தான் சபதமிட்டு வந்திருப்பதையும் விவரமாக வெழுதி, இக்கடிதங் கண்டவுடனே தாங்களும், தங்களைச் சேர்ந்தவர்களும் புறப்பட்டு நாகூருக்கு வாருங்கள். நானும் அங்கு வருகிறேன் என்று கண்டிப்பாயெழுதி, அப்போதே பிஜாப்பூருக்கு அனுப்பிவிட்டாள்.

தரியாபீவி பிஜாப்பூருக்குக் கடிதமெழுதி அனுப்பிவிட்டு, இவ்வாறு சிந்தனை பண்ணினாள்:—நாம் நாகூர் தர்காவிலுள்ள அதன் ஆதினஸ்தர்களானவர்களை விலக்கி, வேறு அந்நியர்களை நியமிக்கப் போகிறோம், தஞ்சாவூர் அரசனுடைய கவனம் அந்த தர்கா மீது இருந்துவருகின்றது. நூதனமாக நாம் செய்யப்போகிற கருமத்திற்கு அந்த அரசனுடைய அனுமதி அவசியம் வேண்டுமே. அதற்கு



நாம் ஒரு உபாயஞ் செய்யவேண்டும். எப்படி யென்றால், நாம் புறப்பட்டு நேரே தஞ்சாவூருக்குப் போய் அரசரைக் கண்டுகொண்டு, இந்த சாகிபுமார்கள் மீது இல்லாததும் பொல்லாததுமான குற்றங்களைச் சுமத்தி அரசருக்குச் சொல்லிக்காட்டிக் கோள்மூட்டிக் கோபத்தையெழுப்பி, அதன் பின் நாம் செய்யப்போகிறதைத் தெரிவிக்கலாம். உடனே அனுமதி தருவார். பெற்றுவந்து இலகுவில் துரத்திவிடலாமென்று இப்படிச் சிந்தனைபண்ணிக்கொண்டு, சீக்கிரமாகத் தஞ்சாவூருக்குப் பயணப்பட்டாள்.

தரியாபீவி மேற்சொன்னபடி தீர்மானம் பண்ணிக்கொண்டு இராஜாவுக்கு வெகுமதிகொடுக்க விலையுயர்ந்த சாமான்களும் தயார்பண்ணிக்கொண்டு, பாங்கிமார், தாதிமார், வேலைக்காரர்கள் பலரோடு, பல்லக்கிலேறிக் கொண்டு தஞ்சாவூருக்குப் புறப்பட்டுச் சில நாட்களில் போய்ச் சேர்ந்து, அங்கே ஒருவீடு தயார்பண்ணி, அதிலிருந்து கொண்டாள். பணக்காரியாதலால், அங்கே நாடினவெல்லாம் அவளுக்கு நடந்தன. பணத்தை அள்ளியிறைத்து அரமனை உத்தியோகஸ்தர்களை வசமாக்கினாள். அதைக்கொண்டு மந்திரி பிரதானிகளின் சிநேகத்தையும் பெற்றுக்கொண்டாள். சில நாட்களில் இவ்வளவுமானபின், மகாராஜனுடைய தரிசனை கிடைத்தது.

அரசனின் தரிசனைகிடைத்தநாள் முதல் நாளுக்கொருதரம் அரமனைக்குப்போய் வருவதை வழக்கமாக்கிக் கொண்டாள். அரமனைக்குப்போனால், அரசனைச் சந்திக்காமல் வருகிறதில்லை. சந்திக்குந்தோறும் பலிதச் சம்பாஷணைகளுடன் நாகூர் தர்கா விஷயத்தையுந் தொடங்கிக் கொண்டாள். அச்சம்பாஷணையில் இடைக்கிடை சாகிபுமார்கள் மீது கோபமுண்டாகத்தக்க கோள்களையும் பற்றவைத்துக்கொண்டேவந்தாள், அதைக் கேட்கக் கேட்க சாகிபுமார்

ஸ்மரணையற்றுக் கிடப்பது தெரிந்தது. அதைக்கண்ட எல்லாரும் ஓவென்று அலறி அழுதார்கள். அழுது ஆவதென்ன? போனமுலைக்குப் புதுமுலை செய்து பொருந்த வைக்கிறதா! இல்லையே!! அதனால் அவர்கள்: இது ஹலறத்து ஆண்டவரவர்களின் கோபத்தினால்வந்த கேடு என்று தெரிந்துகொண்டு, பல்லக்குடன் அவளைத் தூக்கிக்கொண்டு பார்ப்பாரூர் வந்து சேர்ந்தார்கள். பின்பு தரியாபீவி மூன்று நாள் வரையும் நாய்போலக் குரைத்துக்கொண்டே கிடந்து செத்தாள். அவள் வாய்ச்சொற்படி முலைகள் நாய்க்கே யிரையாயின.

இங்கேயிது இவ்வாறாக, தரியாபீவி அனுப்பின கடிதம் அங்கே பிஜாப்பூர் போய்ச்சேர்ந்தது. ஷைகு அதீக்துல்லா சாகிபு அதைவாங்கி வாசித்துப் பார்த்துக்கொண்டு, ஹலறத்து ஆண்டவரவர்களின் அற்புதாதிகளை அவர் நன்றாயறிந்திருந்தும் அதிக வருமானமுள்ள ஸ்தலத்தில் ஆசைப் பெருக்கினால் அவள் எழுத்துக்கு உடன்பட்டு, உடனே தமது குடும்பத்துடன் பிஜாப்பூரைவிட்டு, நாகூருக்குப்புறப் பட்டார். புறப்பட்டவர் இரவுப்பகலாக நடந்து தரியாபீவி கொறடாச்சேரியில் முலைகளை நாய்க்குப் பலிகொடுத்தாளோ அந்த இரவில் மேலைநாகூரில் வந்து தங்கினார்.

அன்றிரா கொறடாச்சேரியிலிட்ட மந்தாரம் மேலைநாகூரிலும் வந்து மூடிக்கொண்டது. ஆனால், காற்று மழை முதலான புசலில்லை. ஆகாயத்திற் பரந்துநின்ற மேகசாலங்களிலிருந்து எறும்புகள் திரள் திரளா யிறங்கின. இறங்கின எறும்புகளெல்லாம் ஷைகு அதீக்துல்லா சாகிபு மேலேயே வந்து விழுந்தன. பந்துபந்தாய் வந்துவிழும் எறும்புகள் அவரை உச்சிதொட்டு உள்ளங்கால் வரையும் கடிக்கத் தொடங்கின. அவருண்ணும் உணவிலும், குடிக்கும் நீரிலும் கட்டிகட்டியாய் விழுந்தன. அவற்றில் விழுந்



தாலும், தம்மீது விழுந்துகடிக்கும் கடியை அவரால் பொறுக்கக்கூடவில்லை. ஒதுங்கினார்; ஓடினார்; ஒளித்தார்; மூடினார்; செய்யாதனவெல்லாஞ் செய்து பார்த்தார்; ஒன்றிலும் தடைபடவில்லை. பின் என்னசெய்வார்; இது ஹலறத்து ஆண்டவரவர்களால் நேரிட்டதுதானென்று அவருக்கு நன்றாய் விளங்கிக்கொண்டது. அன்றிராவே நாகூரை மறந்து, பிஜாப்பூரை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

ஷைகு அதீக்துல்லாசாகிபு மேலைநாகூரைவிட்டுப் பந்துசனங்களோடு ஓடத்தொடங்கியும், எறும்புகள் அவரை விடவில்லை. பலநாள்வரையுந் தொடர்ந்து தொல்லைபடுத்திக்கொண்டே, நருமதை யாறுவரையும்போய், அவர் அக்கரை சேர்ந்தபின் விட்டு விலகின. நருமதையாற்றைக் கடந்தபின் அவர் சுகமாய் பிஜாப்பூர் போய்ச் சேர்ந்தார். அன்றுமுதல் ஷைகு அதீக்துல்லாசாகிபு நருமதை யாற்றைக் கடந்து தென்புறம் வந்தால், முன்போல எறும்புகள் அவர் மேல் பந்து பந்தாய் வந்து விழும். உடனேபயந்து வெருண்டோடி விடுவார். வேறு வேலையாகவாவது ஆயுசுபரியந்தம் அவரை நருமதையாற்றைக்கடந்து தென்புறம் வரவிடவில்லை. ஆகையால் அவர் வெகு எச்சரிப்பாயிருந்து காலந்தள்ளினார்.

தரியாபீவியின் சபதம் முற்றிற்று.

கநஅ-ம் அத்தியாயம்.

## மலடு தீர்த்தது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒருவருக்கு மலடுதீர்த்து, சந்ததியுண்டாகச் செய்த வாலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு பாத்ஷா ஆண்டவரவர்களின் மகத்துவம் உலகமெங்கும் பிரஸ்தாபமாய் விளங்கிவருங்காலத்தில், தஞ்சாவூரில் பாவாராவுத்தர் என்று ஒருவரிருந்தார். அவர், தீனுல்லிஸ்லாமின் கல்வியனைத்தையுங் கற்றுத்தேறியிருந்ததுமன்றி, தமிழிலும் மிகச் சிறந்த கவிராயராய் விளங்கினார். அல்லாதுந்தஆலா அவருக்குக் கல்விப்பொருள் செல்வப்பொருள்கள் முழுவதையுங் கொடுத்திருந்தும், புத்திரபாக்கியம் ஒன்றுமாத்திரம் இல்லாமலிருந்தது. இதுவொன்றே அவர்மனதை இராப்பகல் வருத்தி வந்தது.

சந்ததியில்லாத மனக்குறையினால் சந்தோஷமற்று வாழுங்காலத்தில் ஹலறத்து ஆண்டவரவர்களின் அற்புதங்கள் ஒவ்வொன்றும் அவர் காதில் விழுந்துவந்தது: நாள்தோறும் தாம் கேள்விப்படும் அற்புதங்களால் சந்தோஷமுற்று, தமது குறையையும் அந்த ஆண்டவரவர்கள் நீக்குவார்களென்று நம்பி, ஒருநாள் மனைவியை நோக்கி: நாம் பிள்ளையின்றி வருந்துகின்றோமே, நாகூரில் அடங்கிவிளங்கும் அற்புதக்கடலாகிய ஆண்டவரவர்கள் அளவற்ற அற்புதங்களைச் செய்துவருகின்றார்களே? அவர்களின் திருவடிகளில்போய் நமது குறையை முறையிட்டு வரங்கேட்டால், அவர்கள் நமக்குக் கிருபைசெய்யமாட்டார்களா? நாம் கட்டாயம் நாகூருக்குப் போய், சந்ததியுண்டாகும் வரையும் அங்கேயே யிருக்கவேண்டும் என்று சொன்னார். இதைக்



கேட்ட அவர்மனைவி; ஆம்; அவ்வாறே செய்வோம், நமக்கு அந்த ஆண்டவரவர்கள் அருள் செய்வார்கள் என்று சொல்லி உடன்பட்டாள்.

உடனே பாவாராவுத்தர் தமது மனைவியுடன் சில ஏவலாட்களையுஞ் சேர்த்துக்கொண்டு தஞ்சாவூரைவிட்டுப் புறப்பட்டு, நாகூர் வந்து சேர்ந்தார். வந்தவர் நேரே ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்கா முன்வாசலில் நின்று தமது மனக்குறையடங்கினதாகச் சில பாடல்களைப் பாடித் துதித்தார். அப்படித் துதித்த பின், பிள்ளைவரங் கேட்டதாக ஒரு நொண்டிநாடகம் பாடி அரங்கேற்றினார், அதன்பின் பாத்திஹா வோதி, அங்குள்ள முதியோர்கள் கொடுத்த சர்க்கரையைவாங்கித் தாமும் மனைவியும் தின்று பிரார்த்தனை பண்ணிக் கொண்டு, பக்கத்தில் ஒரு வீட்டைத் தயார் பண்ணிக் கொண்டு அதில் தங்கியிருந்தார்.

பாவாராவுத்தர் இவ்வாறு பிரார்த்தனை பண்ணிக் கொண்டு நாகூரிலேயே தங்கின மறுமாதம், அவர் மனைவி கருப்பமானாள். ஹலறத்து ஆண்டவரவர்களின் கிருபையென்னும் திவ்வியௌடதத்தினால் மலடு தீர்ந்து மனைவி சூலானதைக் கண்ட அவர் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினார். அவர் மனைவியும் மனம்பூரித்திருந்தாள். இருவரும் இவ்வாறு களிகூர்ந்திருக்குங் காலத்தில் ஒன்பது மாதங்களுஞ் சென்றபின் ஆண்பிள்ளையொன்று பிறந்தது. தமது கருத்தின்படி ஆண்குழந்தை பிறந்த சந்தோஷம் பாவாராவுத்தருக்கு வரம்பு கடந்து பெருகிற்று. உடனே செய்ய வேண்டிய சடங்குகள் எல்லாவற்றையுஞ்செய்து முடித்து, ஏழாம் நாள் தர்காவிற் கொணர்ந்து வைத்து நாமமிட்டு, அருமையாக வளர்க்கத் தொடங்கினார்.

அருமந்தபிள்ளையை பாவாராவுத்தரும், அவர்மனைவியும், இருவரின் கண்மணிகளைப் போலப் பாவித்து, நாகூரி

லேயே வைத்து வளர்த்து வந்தார்கள். பிள்ளைக்குப் பிராயம் வந்தபோது வித்தியாரம்பஞ் செய்து குருஆன் முதலான மார்க்க இல்முகளையும், அதன்பின், தமிழ்பாஷையையுங் கற்பித்து, தாம் கற்றிருக்கும் இலக்கிய இலக்கணங்கள் முழுவதையும் போதித்தார். அதனால் பாவாராவுத்தரின் மகன் மகா பண்டிதனாய் விளங்கினான்,

தமது தவப்புத்திரன் பண்டிதனாகும் பரியந்தம் நாகூரிலேயே அவர் தங்கியிருந்து, அதன்பின் ஹலறத்து ஆண்டவரவர்கள் மீது வேறுபல கவிதைகளைப் பாடி அரங்கேற்றி, பெருஞ்சோறாக்கி விருந்து கொடுத்து, தர்காவின் சாகிபுமார்களின் விடைபெற்று, மனைவி மக்கள் முதலானவர்களுடன் புறப்பட்டு, தமது சுய நகரமாகிய தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தார். பிள்ளையின்றி பெருந்துயர் கொண்டிருந்தவர் பாலிய குமாரனோடு வந்து சேர்ந்ததை, சுற்றத்தார்கண்டு களிகூர்ந்தார்கள்.

மலடு தீர்த்தது முற்றிற்று.

---

கககூ-ம் அத்தியாயம்.

## இலையான் விழுந்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவத்தினால், ஒருவன் செவியிலிருந்து ஈக்கள் துண்டு துண்டாய் விழுந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது மீறான் சாகிபு ஆண்டவரவர்கள் அடங்கி விளங்கும் மகத்துவமுள்ள நாகூருக்கு மேற்புறமிருக்கும் சிற்றூரொன்றிலுள்ள ஒருவன் காதில், நாய்மேல் மொய்க்கின்ற ஈக்களில் ஒரு ஈ புகுந்துகொண்டது. அதனால் அவன் காதுக்குள் வருத்தமுண்டாயிற்று. செவிக்குள் நுழைந்த ஈ வெளிப்படாமல், அங்கேயே தங்கிவிட்டது. குடியாயிருந்தபடியால்; சில நாளில் அது பல குஞ்சுகளைப் பொரித்துப் பல்கச் செய்தது.

செவியில் இலையான் புகுந்த நாள் முதல் ஒவ்வொரு நாளாக அவனுக்கு வேதனை அதிகரித்து வந்தது. இராப் பகல் ஊணுறக்கமின்றிக் கிடந்து வருந்தினான். ஈயும், அதன் குஞ்சுகளும் செவிக்குள்ளிருந்து கரகர வென்று சுற்றிச் சுழல்வதும்; அங்குள்ள மெல்லிய தசைகளைக் கடிப்பதும், அவனுக்கு அதிக உபத்திரவத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன. காதில் கையை வைத்து அழுத்திக்கொண்டு அலறுவதே அவனுக்கு வேலையல்லாமல், வேறுவேலையில்லை. தரையில் தலையைச் சாய்க்கக் கூடாமல் இருந்தபடியே யிருந்து, இரவு பகலாய் வருத்தப்பட்டு, உடல் மெலிந்து போனான்.

பக்கத்தில் மனைவி மக்களிருந்து அழுது, பரிதபிப்பார்கள். வந்து பார்க்கும் யாரும் துக்கப்படா திருக்கவில்லை.

காதிற் பிழியாத மருந்து ஒன்றில்லை. மந்திரிக்காத மாந்திரீகரும் இல்லை. எல்லாப் பக்குவங்களும் பார்த்துக் கைவிட்டு, பரிதாப ஸ்திதியிலானார்கள். பின் தீரும் வழியில்லையே யென்று அவன் ஏங்கி, இனி நமக்கு நாகூர் மீறான் சாகிபு ஆண்டவரே கதியென்று மனதில் வைத்துக்கொண்டு, மனைவிமக்களுடன் புறப்பட்டு நாகூருக்கு வந்து சேர்ந்தான்.

நாகூர் வந்தவன் நேரே தர்கா வாசலிற்போய்க் குப்புற விழுந்து: ஆண்டவரே, என் காதுநோய் என்னாற் பொறுக்கக்கூடியதாயில்லை. மனதிரங்கி அதை நீக்கி, என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று சொல்லி அழுதான். அழுது முறையிட்ட பின், எழுந்து போய்ப் பக்கத்தில் படுத்திருந்தான். அவன் தர்காவில் கால்வைத்த அந்நேரமுதல் காது வருத்தம் படிப்படியாய்க் குறைந்து வந்தது. அதை யறிந்து அவன் அங்கிருந்து நகரவேயில்லை. கொஞ்ச நேரத்துக்குள் நித்திரை வந்தது. நீண்டநாள் தூங்காதவன் அயர்ந்து தூங்கினான். மனைவியும், மக்களும், கொஞ்சம் கவலை தீர்ந்து, பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள். தூங்கி விழித்தவுடன் காது நோய் அதிக பாகம் குறைந்திருந்தது. அதையறிந்த அவன் அங்கிருந்துபோய் இருப்பிடமொன்று தயார் பண்ணிக்கொண்டு, உண்பது தவிர, மற்ற நேரமெல்லாம் முந்தி வந்து படுத்துத்தூங்கின இடத்திலேயே வந்து இருப்பதும், படுத்துறங்குவதுமாக நியமகம் பண்ணிக்கொண்டிருந்தான்.

இவ்வாறாக அவனிருக்கும்போது, காது வேதனை வரவரத் தணிந்தது. ஒரு நாள் காது வருத்தம் கொஞ்சமுமில்லாமல் தீர்ந்துபோய், படுத்து அயர்ந்து தூங்கினான். சற்றுநேரந் தூங்கி விழித்தவன் தன் தலைமாட்டுப்புறம் பார்த்தான். அங்கே. அவன் காதிருந்த விடத்தில் பல சக்கள் ஒவ்வொன்று மும்மூன்று துண்டாய் அறுப்புண்டு விழுந்து, குவிந்திருந்தன. அதைக்கண்ட வுடனே அவன்



ஆச்சரியப்பட்டு, மனைவி மக்களைக் கூப்பிட்டுக் காட்டி: இது ஆண்டவர் செய்கை யென்று சொல்லி, ஆநந்தமடைந்தான். இப்புதுமையைப் பலபேர் வந்து கூடி நின்று பார்த்து, ஹலறத்து ஆண்டவரவர்களை வியந்து புகழ்ந்து துதித்தார்கள்.

செவிநோய் தீர்ந்தவன் ஆச்சரியமும், சந்தோஷமுமுள்ளவனாய் ஆண்டவரவர்களைத் தோத்திரம் பண்ணி, அங்குள்ள சாகிபுமார்களிடம் விடைபெற்றுக்கொண்டு தன் ஊருக்குப் போய்ச் சேர்ந்தான்.

இலையான் விழுந்தது முற்றிற்று.

---

## ௯௨0-ம் அத்தியாயம்.

## ஊமையுங் குருடுந் தீர்ந்தது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களால் ஒருவனுடைய ஊமையும், குருடும் தீர்ந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான் சாகிபு ஆண்டவரவர்களின் திவ்விய க்ஷேத்திரமாகிய நாகூருக்கு மேல்புறத்திலுள்ள ஒரு ஊரில் ஒரு தனவந்த னிருந்தான். செழிப்புடன் வாழ்ந்திருந்த அவன் திடீரென்று தரித்திரனானான். உண்ணவுடுத்த மிகக் கஷ்டப்படும் ஸ்திதியிலாய்ச் சஞ்சலப்படுங்காலத்தில், நன்றாயிருந்த அவன் மகனுக்கு இருகண்களும் குருடாய், வாயும் வழங்காதபடி ஊமையாயிற்று. தரித்திர நிலையில் தன் மகனுக்கு நேரிட்ட துன்பத்தைப் பற்றி அவன் மனம் மிகத்துக்கப்பட்டது. உள்ளதை உரியதை விற்றுத் தன் அருமைப்புதல்வனுக்காக அழித்து, பக்குவங்கள் பண்ணிப் பார்த்தான்; ஒன்றிலும் பலன்படவில்லை. ஒருவழியிலும் மைந்தனுக்கு நேரிட்ட துன்பம் தீரவில்லையே யென்று அவனும், அவன் மனைவியும் சஞ்சலமுற்று, இனி நாகூர்

ஆண்டவர் திருவடிகளே தஞ்சமென்று, ஊமையுங் குருடுமான மகனையும் அழைத்துக்கொண்டு நாகூருக்கு வந்தார்கள்.

கணவனும், மனைவியும், தங்கள் மைந்தனுடனே வந்து தர்காவின் முன்வாசலில் நின்று: எங்கள் ஆண்டவரே, நாங்கள் மிக ஏழைகள். எங்கள் எளிய நிலைமையில் உதவத்தக்க ஒரே மகன் திடீரென்று ஊமையனும், குருடனுமாய் விட்டான். அவனுக்கு நேரிட்ட துன்பத்தை நீக்கி எங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று நெடுநேரம் முறையிட்டுப் பிரார்த்தித்து, பின் அங்கிருக்கும் சாகிபுமார்களிடம் போய்த் தங்கள் காரியத்தை முறைப்பாடு செய்து: மகிமையுள்ளவர்களே. நீங்களும் எங்களுக்காக ஆண்டவரிடம் இரந்து கேளுங்கள் என்று அழுது சொன்னார்கள்.

உடனே அங்கிருந்த சாகிபுமார்கள் மனமிரங்கி, அவர்களை அழைத்துக்கொண்டு, முன் ஒருவர் சமர்க்கந்து வனத்திலுடைத்துச் சோளனுவில் வைத்திருந்த குற்றியுடன் ஹலறத்து ஆண்டவரவர்களிடம் வர, அந்தக் குற்றியைத் தளிர்க்கச் செய்தார்களே? அது, ஓங்கி வளர்ந்து அப்போது ஒரு மரமாயிருந்தது. அந்த மரத்தடியிற் கூட்டி வந்து அதன் பட்டையிற் கொஞ்சம் வெட்டி யெடுத்து அதையொரு கல்லில் உரைத்து, அந்தச் சிறுவனுடைய கண்களிலும், நாவிலும் தடவி: நீங்கள் இந்த மரத்தடியிலேயே ஆண்டவரவர்களைத் தியானித்துக் கொண்டிருங்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அவ்வாறே அம்மூவரும் அந்த அற்புதகரமான மரத்தடியில் சாகை பண்ணிக்கொண்டு, சில நாளிருந்தார்கள்.

அப்படியிருக்கும் போது சில தினங்களுக்குள் அந்தச் சிறுவனுடைய குருடுமாறிக் கண்கள் திறந்து, ஊமையுந்தீர்ந்து பேசுதற்கு நாவழங்கிற்று. இதைக்கண்ட அவன் தந்தையும் தாயும் களிகூர்ந்து, ஹலறத்து ஆண்டவரவர்களைப் பலவாறு துதித்து, இயன்ற மட்டுக்குக் கொஞ்சம் காணிக்கையுஞ் சமர்ப்பித்துவிட்டு, தங்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.



ஊமையுங் குருடுந் தீர்ந்தது முற்றிற்று.

---

௯௨௬-ம் அத்தியாயம்.

## அற்புத நாகர்செய்தி.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் உண்டியற் குடத்தைத் தூக்கிக்கொண்டுபோன ஒரு சுபைதார், அற்புதநாகத்தினால் கடியுண்டிறந்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்சுல்தான் ஷாதுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்களின் கந்தூரியென்னும் திருவிழாக் கொண்டாட்டம் வருஷத்திற்கு வருஷம் அதிகமான சிறப்புடன் நடந்து வந்தது. அதேபோல ஒருவருஷத்து கந்தூரி வெகு அலங்காரமாய் நடந்தது. அப்போது பலதேசத்தாரும் திரள் திரளாய்வந்து கூடியிருந்தார்கள். தர்கா முன் வாசலில் வைக்கப்பட்டிருக்கும் உண்டியற்குடத்தில் பொன்னாணயங்களும், வெள்ளி நாணயங்களும், அபரிமிதமாய் விழுந்தன.

தஞ்சாவூர் அரசனால் சிக்கல் என்னும் ஊருக்கு அதிகாரியாய் நியமிக்கப்பட்டிருந்த சுபைதார் ஒருவனும் கந்தூரிக்கு வந்திருந்தான். அவன் உண்டியற் குடத்தில் வந்து விழும் பணத்திரளைப் பார்த்துப் பிரமித்து, இந்த உண்டியற்குடத்தை நாம் தூக்கிக்கொண்டுபோய் நமது மகாராஜாவினிடம் கொடுத்தால், அவர் நம்மீது அதிகபக்ஷமாயிருப்பாரென்று மூடத்தனமாக எண்ணிக்கொண்டு, தன்

சேவகர்களோடு திடுதிடென்று வந்து குடத்தைத்தூக்கிப் பல்லக்கில் வைத்துத் தானும் ஏறிக்கொண்டு, சிக்கலை நோக்கிப் போய்விட்டான்.

உண்டியற் குடத்தைத் தூக்கிக்கொண்டு போகிறவன் அதிகாரியாதலால், அவனை ஒருவருந் தடைபண்ணவில்லை. அவன் கொண்டுபோனபின், அங்கிருந்த சாகிபுமார்கள் நர்காவின் வாசலிற்போய்நின்று : எங்களுக்குரிய பொருளை அதிக்கிரமமாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். தேவரீர் அதைக் கேட்டுக்கொடுக்கவேண்டும் என்று முறையிட்டார்கள். இப்படி முறையிடும்போதே ஹலறத்து ஆண்டவரவர்களின் திவ்விய கபுறின்மீது போர்த்தியிருந்த போர்வைக்குள்ளிருந்து ஒரு ஓலைச்சுருள் வெளிப்பட்டது.

புறப்பட்ட ஓலைச்சுருள் ஒரு புள்ளுப் பறப்பதுபோல அதிக விசையாய்ப் பறந்துபோய், சுபைதாருடைய பல்லக்குக்குள் புகுந்து, அவன் மடிமேல் விழுந்தது. என்னவந்து விழுந்ததென்று தன் மடியைப் பார்த்தான் ; ஒரு ஓலைச்சுருள் கிடந்தது. அதை சுபைதார் கையிலெடுத்தபோதே அது ஒரு கொடிய சர்ப்பமாய்ச் சீறிவிழுந்து பலதரம் அவனைக் கடித்தது.

இரண்டொரு கடியிலேயே சுபைதாருக்கு விஷம் மண்டைகொண்டது. "ஆ!" என்ற ஒரு சத்தத்துடன் மூர்ச்சித்து விழுந்து பிரேதமானான். பல்லக்கின் இருபுறமும்போன சேவகர்கள் "இதென்ன சத்தம்?" என்று பல்லக்கைப் பார்த்தார்கள். சுபைதார் மாண்டுகிடப்பதும், சர்ப்பந் தீண்டிற்றென்பதும் தெரிந்தன. உடனே அவர்கள் : "ஓ! ஓ!! இது ஆண்டவர் செய்த வேலை!!!" என்று சொல்லி, பல்லக்கை அங்கேயே பிரேதத்துடன் இறக்கி வைத்துவிட்டு, உண்டியற்குடத்தைத் தூக்கித் தலையிற்



சுமந்துகொண்டு நாகூருக்குள் ஓடிவந்து, நர்காவின் முன் வாசலிற் கொணர்ந்து முன்போல வைத்து நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து "மீறான்சாகிபுஆண்டவர்களே, எங்கள் சுபைதார் அநியாயமாகவே தங்கள் உண்டியற் குடத்தைத் தூக்கிக் கொண்டுபோனான். நாங்கள் அவன் சேவகர்களாதலால் அதற்குடன்பட்டு ஏவினதைச் செய்தோமல்லாமல், உண்மையாகவே உடன்படவில்லை. எங்களுக்கு அது சம்மதமல்ல. இதோ அதை நாங்கள் கொணர்ந்து வைத்துவிட்டோம். எங்களை ரக்ஷிக்கவேண்டும்" என்று முறையிட்டு இரந்தார்கள்.

அச் சேவகர்கள் இவ்வாறு நெடுநேரம் இரந்து மன்றாடி, சாகிபுமார்கள் சமுகத்திலும் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு, மீண்டுபோய், பிரேதத்தைச் சிக்கலிற்கொண்டு சேர்த்துத் தகனம்பண்ணினார்கள். இது தேசமெங்கும் பிரஸ்தாபமாயிற்று. தஞ்சாவூர் அரசன் தன் சுபைதார் செய்த வேலையையும், அவனுக்குச் சம்பவித்ததையும் கேள்விப்பட்டுக் கவலையடைந்தான்.

அற்புத நாகச்செய்தி முற்றிற்று.

௧௨௨-ம் அத்தியாயம்.

# பஞ்சமாற்றினது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் சந்ததிகளுக்குப் பஞ்சத்தை மாற்றின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு பாத்துஷா ஆண்டவரவர்களின் அருமைமகனாராகிய ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களின் சந்ததிகள் வரவரப் பல்கிக் கொண்டு வந்தார்கள். நாகூரும் மிகச்சிறந்து வந்தது. அக்காலத்தில் சிலமாதங்களாகப் பருவமழை பெய்யாமல் தானியாதிகள் விளைவுகுன்றி, ஊரெங்கும் பஞ்சம்பிடித்தது. மேய்ச்சல் வளமில்லாமையால் கன்றுகாலிகளெல்லாம் மடிந்து குறைந்தன. அப்போது நாகூரிலும் கொள்வனவு விற்பனவுகள் குறைந்து, வருவாயின்றி ஜனங்கள் கஷ்டப்பட்டார்கள். அநேகர் ஊரைவிட்டுப் புறநாடுகளுக்குப் போய்விட்டார்கள்.

நாடெங்கும் பஞ்சம் பரந்தபடியால், ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவுக்கு ஜனவரத்து நின்றுபோயிற்று. அதனால் காணிக்கை வரத்தும் நின்றது. முன்வாசலிலிருக்கும் உண்டியற்குடம் வெறிதாயிருந்தது. உண்டியல் வரும்படியன்றி வேறுவழியால் ஜீவனம் பண்ணாத சாகிபுமார்கள் என்ன செய்வார்கள்? அவர்களும் ஜீவனத்திற்கு அதிக முட்டுப்பட்டார்கள்.

ஜீவனத்திற்குக் கஷ்டப்படும் சாகிபுமார்கள் ஒருநாளிரவில் ஆண்டவரவர்களின் தர்காவாசலில் வந்துகூடி, எல்லாரும் முன்னோக்கி நின்று கைகளையேந்தி: எங்களை என்றைக்கும் ரக்ஷிக்கின்ற நாயகமே, இது பஞ்சகாலமென்பது தாங்



கள் அறியாததல்ல. தங்கள் மகனாரின் மக்களாகிய நாங்கள் பல்கிப்போனோம். எங்கள் ஜீவனத்திற்கு அதிக முடையாயிருக்கின்றது. நாங்கள் படும் கஷ்டத்தை நீக்கவேண்டும் என்று முறைப்பாடு செய்துவிட்டு, அங்கேயே கூடிக் கொண்டிருந்தார்கள்.

முதியோர் முதல் இளையோரெல்லாரும் கூடியிருந்து துஆவும் ஓதிக்கொண்டு, அன்றிரவெல்லாம் அங்கிருந்தார்கள். அர்த்தசாமத்தில் அவர்களுள் ஒரு முதியோரிடம் ஹலறத்து ஆண்டவரவர்கள் தரிசனமாய்: என் அன்புக்குரியவர்களே, பஞ்சத்தைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். இன்று சூரியோதயத்தில் இந்தப் பள்ளியின் முன் வாசற்படியின் கீழிருந்து உங்களுக்கு உணவுகிடைக்கும் என்று சொல்லிவிட்டு மறைந்தார்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் தரிசனைபெற்ற அந்த முதியோர், உடனே மற்ற எல்லாருக்கும் அதைச் சொல்லிக் காட்டினார்கள். கேட்ட எல்லாரும் களிப்படைந்து, பொழுது விடிவதை எதிர்பார்த்திருந்தார்கள். கிழக்கு வெளுத்துச் சூரியன் உதயமாயிற்று. முந்தியே வணக்க முதலான செய்கடன்களை முடித்திருந்த சாகிபுமார்கள் சூரியனுதித்தவுடன் தர்காவின் முன்வாசற்படியிடம் வந்துகூடி, அதன் கீழ்புறம் என்னவிதமாக உணவுகிடைக்குமோவென்று ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அப்போது காலை நேரமாதலால், வெயிலெறித்து எங்கும் வெளிச்சமாயிருந்தது.

எல்லாருங் கூடி வாசற்படியைப் பார்த்து நிற்கும்போது, அந்தப்படியின் கீழுள்ள ஒருசிறு துவாரத்திலிருந்து எறும்புகள் கூட்டங் கூட்டமாய்ப் புறப்பட்டு வந்தன. வருகிற எறும்புகள் சும்மாவரவில்லை. ஒரு எறும்பு சிறிய ஒரு பொற்பணத்தையும், ஒரு எறும்பு ஒரு

அரிசியையுங் கவ்விக்கொண்டே வந்தன. பொற்பணம் கவ்விவரும் எறும்புகளெல்லாம் ஆண்டவரவர்களின் கபுறுக்கு மேல் புறமும், அரிசி கவ்விவரும் எறும்புகளெல்லாம் கீழ்புறமுமாகக் கொண்டுபோய்க் குவித்தன.

அளவற்ற எறும்புகள் இவ்வாறாகப் பொற்பணமும், அரிசியுங் கவ்விக்கொணர்ந்து குவித்துவிட்டுப் போயின. இதைக்கண்ட ராகிபுமார்கள் சந்தோஷமடைந்து, இவ்விதம் பொற்பணமும், அரிசியும் வெவ்வேறாக நமக்கருளிக் காட்டின ஆண்டவரவர்களின் கருத்தானது: ஒரு பொற்பணத்திற்கு ஒரு அரிசிவிகிதம் விலைப்பட்டாலும், உங்களை நாம் தவிக்கவிடமாட்டோம் என்பதே யன்றி வேறல்ல வென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, அந்தப் பணத்தையும், அரிசியையும், அவரவர் பாகப்படி பிரித்தெடுத்துக் கொண்டார்கள். அன்றுமுதல் அவர்கள் மிடி தீர்ந்தது.

இது நடந்த சிலதினங்களுள் ஆண்டவரர்களின் பொருட்டால் நல்லமழை பெய்து, நாடெங்கும் செழித்தது. நடந்தபுதுமையும் எங்கும் பரந்தது. பஞ்சத்தால் குடிவிட்டுப் போனவர்களனைவரும் மீண்டு நாகூர் வந்து சேர்ந்தார்கள்.

பஞ்சமாற்றினது முற்றிற்று.

---

௧௨௩-ம் அத்தியாயம்.

## முதல்மனாருக் கட்டினது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவில் முதலாம் மனாருக் கட்டப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து மீறான்சுல்தான் சையிது ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களின் மகத்துவம் நாளுக்குநாள் உலகெங்கும் அதிகரித்து வந்தது. அக்காலத்தில் செஞ்சிநகரத்தில் பிரதான அதிகாரியாய் இப்றாகீம்கான் என்று ஒரு கனவானிருந்தார். அவர் நாளாடகம் ஆண்டவரவர்களின் அற்புதங்களைக் கேட்டுக்கேட்டு, மனதில் வைத்துக்கொண்டே யிருந்தார். அப்படியிருக்குங் காலத்தில் அவருக்கு ஒரு எண்ணம் பிறந்தது.

ஒருநாள் இரவில் போஜனமருந்திப் படுக்கைக்குப் போகும்போது, பரிசுத்தமான மனதையுடையவராயிருந்து "ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களே, இன்றிரவில் எனது சொப்பனத்தில் தாங்கள் தோற்றவராய், நான் கொண்டிருக்கும் நாட்டம் இன்னதென்று எனக்குத் தெரிவித்துத், பின் அதை நிறைவேற்றியருள்வீர்களானால், தங்களின் சிறப்பான தர்காவில் பாரிய மண்டபமொன்று கட்டி, ஒரு மனாருவுங்கட்டி முடிக்கின்றேன்" என்று எண்ணிக் கொண்டு படுத்துத் தூங்கினார்.

இப்றாகீம்கான் இவ்வாறு நாட்டம் வைத்துக்கொண்டு படுத்து நித்திரைசெய்த அன்றிரவே ஹலறத்து ஆண்டவரவர்கள் அவர் சொப்பனத்தில் தோற்றவராய், உமது நாட்டம் இன்னதென்று தெரிவித்து, அந்தப்பொழுதுவிடிந்த பகலே அதை நிறைவேற்றிவிட்டார்கள். அதனால் அவருக்குண்டான ஆச்சரியமும், சந்தோஷமும் அளவிடக்

கூடியனவா யிருக்கவில்லை. சந்தோஷக் கடலில் முழுகினவராய், உடனே தாம் எண்ணிக்கொண்டபடி செய்விக்க ஆரம்பித்தார்கள்.

மீறன்ராவுத்தர், மதாறுராவுத்தர் என்று இரண்டு காரியதரிசிகள் அவருக்கிருந்தார்கள். அவ்விருவரையு மழைத்து, அவர்கள்வசம் வேண்டுமான பணப்பைகளைக் கொடுத்து: நீங்கள் இருவரும் நாகூருக்குப்போய், ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்க்காவுக்கு முன்னே ஒரு பாரியமண்டபமும், ஒரு மனாருவுங்கட்டி முடித்துவிட்டு வாருங்கள் என்று கட்டளைபண்ணி அனுப்பினர். அவ் விருராவுத்தர்களும் எஜமான் கட்டளைப்படி செஞ்சியைவிட்டுப் புறப்பட்டு, நாகூருக்கு வந்தார்கள்.

அக்காலத்தில் ஹலறத்து சையிது முகம்மதுயூசுபு சாகிபவர்களின் மூன்றாங் குமாரராகிய ஹலறத்து சுல்தாங்கபீர் சாகிபவர்களின் குமாரர் சுல்தானப்துல்காதிறு சாகிபவர்களே பனியூசுபு களுக்குத் தலைவராயும், விருத்தாப்பியராயு மிருந்தார்கள். வந்த ராவுத்தரிருவரும் அவர்களைத் தரிசித்து: நாங்கள் செஞ்சிநகர் இபுறாகீம்கான் அவர்களின் காரியகாரர்கள். தர்க்காவில் சில கட்டிடங்கள் கட்டவந்திருக்கின்றோம் என்று தெரிவித்தார்கள். அதற்கு சுல்தானப்துல்காதிறு சாகிபவர்கள் அவர்களைப்பார்த்து: நல்லதிருங்கள். நான் எங்கள் எஜமானாகிய ஆண்டவரவர்களிடம் உத்தரவுபெற்று, தங்களுக்கு தெரிவிக்கின்றேன். அதன்பின் கட்டிடவேலை தொடங்குங்கள் என்று சொல்லிவிட்டு, ஒரு இரவு தங்கள் மனதில் இதை நாடிக்கொண்டு படுத்திருந்தார்கள். அன்றிரவே ஆண்டவரவர்கள் சொப்பனத்தில் தோன்றி, இன்ன இடத்தில் மனாருவும், இன்னபடி கட்டிடமும் கட்டச் சொல்லுமென்று தெரிவித்தார்கள். இதைக்கண்டு விழித்த சுல்தானப்துல்காதிறு சாகிபவர்கள் அதிகாலையில் அவ்விரா



வுத்தர்களை யழைத்து, மனாருக்கட்டும் மாதிரியும், கட்டிடமும், மண்டப விதமும் தெரிவித்து, உத்தரவு பண்ணினார்கள்.

முந்தி மனாருக் கட்டத்தான் வேலை தொடங்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட மாதிரியில், முந்தியடைந்த வேலியின் தென்மேற்கு மூலையில் மனாருக்கட்ட அஸ்திவாரமிட்டு, நிபிடிகரமாகக் கட்டினார்கள். ஹிஜ்றத்து ஆயிரத்து ஐம்பத்தைந்தாம் வருஷம் (ஆண்டவரவர்கள் உபாத்தான எழுபத்தேழாம் வருஷம்) முதலாம் மனாருக்கட்டி முடிந்தது. இது * சாகிபுமனாறு என்று பெயர்பெற்று விளங்குகின்றது.

இம்மனாருக் கட்டி முடிந்தவுடன் அவ்விருராவுத்தர்களும் நின்று மண்டபவேலையைத் தொடங்கினார்கள். முன் திருமலைச்செட்டி யனுப்பின கப்பல்களையும், ஈயத்தையும் விற்ற பணத்தைக்கொண்டு இப்போதிருக்கிற முதல்வாசல் வரையுந் தானே கட்டியிருந்தார்கள். இப்போது அந்தப் பெரிய வாசலுக்கு முன்னே தென்புறத்தில் அகன்று உயர்ந்து குவிந்த பாரிய † மண்டபமொன்றும், அதைச் சூழ நான்குபுறமும், நீண்ட மண்டபமும், அதைச்சூழ நான்குபுறமும் அரைவளைவு மண்டபமும் கட்டிமுடிந்தன. மண்டபங்களும் கட்டி முடிந்தபின் அந்தப் பாரிய மண்டபத்தில் இருந்தெரிவதற்கு ஐந்துதட்டுகளடுக்குள்ள பாரிய இரண்டு பித்தளைக் குத்துவிளக்குகள் வார்ப்பித்து அவ்விராவுத்தர்களிருவரும் கொண்டுவந்து வைத்து,

* சுல்தானப்துல்காதிறு சாகிபவர்கள் காலத்திற் கட்டப்பட்டபடியால், அவர்களின் ஞாபகத்திற்காக சாகிபுமனாறு என்று இதற்குப் பெயரிடப்பட்டது.

† இது தர்க்காவுக்கு நடுவிலிருப்பதால், நடுமண்டபம் என்று பெயர்பெற்று வழங்குகின்றது.

அதில் நெய்யிட்டு விளக்கேற்றி நின்று, தங்கள் எஜமானாகிய டேபுறகீய்காருக்கும், தங்களுக்கும் ஆண்டவர்களிடம் முனாஜாத்துச் செய்துகொண்டு, பின் சாகிபுமார்களின் விடைபெற்று, நாகூரைவிட்டுச் செஞ்சிபோய்ச் சேர்ந்தார்கள்.

தாம் நாடியபடி மனாறாவும், மண்டபமுங்கட்டி, பாரிய விளக்குகளும் வார்த்துவைத்து, மீண்டுவந்த காரியதரிசிகளை டேபுறகீய்கான் அன்புடன் புகழ்ந்து, சந்தோஷ மடைந்திருந்தார்.

முதல் மனாறாக் கட்டினது முற்றிற்று.

---

௧௨௪-ம் அத்தியாயம்.

## கொம்புத் தேங்காய்ச்செய்தி.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களால், தேங்காய்க்குக் கொம்பு முளைத்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாகுல்ஹமீது பாத்துஷா சாகிபு ஆண்டவரவர்களின் சிறப்பான தர்காவில் மனாறாவும், மண்டபமும் கட்டின கனவான்வாழும் செஞ்சி நகரத்தில் ஒரு பாக்கியவானிருந்தான். அவனுக்குச் சில தென்னந் தோப்புகளிருந்தன. அத்தோப்புகள் காலந்தவறாமல் ஏராளமாகக் காய் காய்ப்பது வழக்கம்.

ஒரு வருஷம் அந்தத் தோப்புகளில் ஒரு தென்னையாவது காய்க்கவில்லை. தோப்புக்காரன் காய்க்கும் காய்க்குமென்று காத்திருந்தான்; காலம்போகிறதன்றி, தென்னைகள் காய்க்கவேயில்லை. அதையறிந்த தோப்புக்காரன் ஒரு நாள் அங்கேபோய் நின்றுகொண்டு, ஹலறத்து ஆண்டவரவர்களை இருதயத்தில் நாடி: நாகூர் ஆண்டவரே திடீ



ரென்று காய்க்காமற்போன என் தென்னந்தோப்பு இந்தப் பருவத்தில் காய்க்கவேண்டும். அப்படிக் காய்க்குமானால் இன்ன மரத்திற் காய்க்கின்ற தேங்காய்கள் அவ்வளவையும் பறித்து, தங்கள் ஆலயத்தில் கொண்டுவந்து தந்துவிடுகிறேன் என்று பிரார்த்தனைபண்ணி, ஒரு மரத்தையுங் குறிப்பிட்டு விட்டுப்போனான்.

பிரார்த்தனை பண்ணிக்கொண்ட சில தினங்களில் அவன் தோப்புகளிலுள்ள தென்னமரங்கள் அத்தனையும் பாளையிட்டு, பூத்துக் காய்த்துக் குலுங்கின. ஒரு மரமாவது குலைசாய்க்காமல் வெறிதா யிருக்கவில்லை. தோப்புகள் காய்த்துக் குலுங்கக்கண்ட அவனுக்கு அளவற்ற ஆநந்தமுண்டாயிற்று. மரங்களை வெகு பக்குவமாகப் பார்த்து வந்தான். காய்க்குங்காலங்களிலும். சில மரங்கள் காய்க்காமலிருக்குமே, இப்போது ஒரு மரமாவது காய்க்காதிருக்கவில்லையே, இவ்வளவு காய்ப்பும் ஒருபோதும் காய்க்கவில்லையே, இது ஆண்டவரின் மகிமையல்லவா? என்று அவன் மனம்பூரித்திருந்தான்.

காய் வெட்டும் பருவமானவுடன், தோப்புகளின் எல்லாமரத்துக் காய்களையும் ஒன்று விடாமல் வெட்டியெடுத்துக்கொண்டான். ஹலறத்து ஆண்டவரவர்களுக்கென்று பிரார்த்தனை பண்ணி விடப்பட்ட அந்த ஒரு மரத்துக் காய்களை மாத்திரம் வெட்டவில்லை. அந்தக் காய்களைப் பிந்தி வெட்டி, நாகூரிற் கொண்டுவந்து கொடுக்கலாமென்று விட்டு வைத்திருந்தான்.

சில தினங்களின் பின் அவ்வூர் அதிகாரியின் சேவகர் சிலர் தேங்காய்தேடி எங்குஞ் சுற்றித்திரிந்து, இந்தத் தோப்பில்வந்து புகுந்து, மரங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தார்கள். எல்லா மரங்களும் காய் வெட்டப்பட்டு வெறிதா

யிருந்தன. ஒரு மரத்திலும் காயில்லையே யென்று அவர்கள் சுற்றிக்கொண்டு வரும்போது, ஆண்டவரவர்களுக் கென்று விட்டிருந்த அந்த ஒருமரம் அவர்கள் கண்களில் தெரிந்தது. உடனே அவர்கள் அந்த மரத்தடியில்வந்து அதில் காய்கள் குலுங்கப் பழுத்திருப்பதைக்கண்டு, இதோ நமக்குத் தேங்காய் கிடைத்தது; ஏறுங்கள்; பறியுங்கள் என்று ஆர்பரித்தார்கள்.

சேவகர்கள் வந்து தேங்காய் பறிக்கப் போகின்றார்களென்னும் செய்தி தோப்புக்காரன் காதில் விழுந்தது. உடனே அவனெழுந்து தோப்புக்கு ஓடிவந்து, அவர்களைப் பார்த்து, இந்தமரம் நாகூராண்டவர் பெயரால் பிரார்த்தனை பண்ணிவிட்டமரம். இதிலுள்ள காய்கள் அந்த ஆண்டவருடைய காய்கள். ஆதலால், நீங்கள் ஏறுதீர்கள்; ஒரு காயையுந் தொடாதீர்கள் என்று சொல்லித் தடுத்தான். இந்தத் தடையில் அவர்கள் நிற்கவில்லை. அவனைப்பார்த்து: போ; போ. "ஆண்டவருடைய காயென்றால் கொம்பு முளைத்திருக்குமோ" என்று சொல்லிவிட்டு, ஒருவனை மரத்திலேறிக் காய்களைப்பறிக்க ஏவினார்கள்.

சேவகர்களி லொருவன் மரத்திலேறி, முந்தி ஒரு காயைப்பறித்துப் பார்த்தான்; அந்தத் தேங்காயில் அவர்கள் சொன்னபடி கொம்புதான் முளைத்திருந்தது. உடனே அவன்: இதென்ன ஆச்சரியம்! நாம் பகிடி பேசினபடி கொம்பு முளைத்துத்தானே யிருக்கிறது! இதோ பாருங்கள் என்று சொல்லிக்கொண்டு கீழேயிறங்கி, அந்தத் தேங்காயை அவர்களிடம் காட்டினான். அவர்களெல்லாரும் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு நடுநடுங்கி: ஆ! மகிமையுள்ள நாகூராண்டவரே, முட்டாள்களான நாங்கள் செய்த இந்தப்பிழையை பொறுத்து, எங்களுக்கு ஒரு விக்கினமுமுண்டாகாதபடி காப்பாற்றுங்கள் என்று வேண்டிக்



கொண்டு, அந்தக்காயைத் தோப்புக்காரன் கையில் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

பிறகு, தோப்புக்காரன் உடனே எல்லாக் காய்களையும் பறித்து, அக்காய்களையும், அந்தக் கொம்புமுளைத்த காயையும் எடுத்துக்கொண்டு நாகூருக்குவந்து, தர்காவில் கொணர்ந்து கொடுத்து, சங்கதியையும் தெரிவித்துவிட்டுச் சென்றான். அந்தக் கொம்பு முளைத்த தேங்காய் தர்காவின் முன்வாசல் நிலைக்கருகில் இன்னும் கட்டிவைக்கப்பட்டிருக்கின்றது.

கொம்புத்தேங்காய்ச் செய்தி முற்றிற்று.

---

௧௨௫-ம் அத்தியாயம்.

## இரண்டாம் மனாருக்கட்டினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவில் இரண்டாம் மனாருக்கட்டப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்களின் கருமாத்தென்னும் அற்புதங்கள் காலத்திற்குக்காலம் அதிகரித்துக்கொண்டே வந்தன. அதனால், ஆண்டவரவர்களின் மகிமை யென்னும் சோதி உலகமெங்கும் சொலித்தது. வருஷத்திற் கொரு தரம் நடைபெறும் கந்தூரியும் வருஷந்தோறும் சிறந்து நடந்து வந்தது.

இக்காலத்தில், நாகபட்டணத்தில் நல்லாயிது மரைக்காயர் என்று ஒருவரிருந்தார். அவர் கப்பல் வர்த்தகர். அக்கரைத் தேசத்திற்கு ஏற்றுமதி யிறக்குமதி செய்பவர். தகுந்த பிரபு. அவருக்கு ஒரு பிரமாதமான காரியம் கைகூடவேண்டியதா யிருந்தது. என்ன பாடுபட்டும் அது கைகூடாம லிருந்தபடியால், ஒருநாள் ஹலறத்து ஆண்டவ

ரவர்களின் தர்காவில் வந்து: எஜமானவர்களே, என் காரியத்தைக் கைகூடச் செய்யுங்கள். அது நிறைவேறுமானால், தங்களின் திவ்வியாலயமாகிய தர்காவில் கட்டப்பட்டிருக்கும் மனாருவுக்கு இணையாக நான் ஒரு மனாருவைக் கட்டுகிறேன் என்று பிரார்த்தனை பண்ணிக்கொண்டார். அவர் பிரார்த்தனை பண்ணிக்கொண்டுபோன சிலதினங்களில் தாம் நாடிய கருமம் கைகூடப்பெற்று, மிகவும் ஆநந்தமடைந்தார்.

காரியம் கைகூடப்பெற்ற நல்லசயீதுமரைக்காயர் என்பவர் மனாருக் கட்டுவதற்காக நாகூருக்குவந்து, சாகிபு மார்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கட்டிட வேலையைத் தொடங்கினார். முதலாவதாகக் கட்டப்பட்ட சாகிபுமனாறவுக்கு வடபுறம் முந்திய வேலியடைப்பின் வடமேற்கு மூலையில் அஸ்திவாரமிட்டு, மனாருவேலை அதிக சுறுசுறுப்புடன் நடந்துவந்தது. ஹிஜ்றத்து ஆயிரத்து நூறும்வருஷம் (ஆண்டவரவர்கள் உபாத்தான நூற்றிருபத்திரண்டாம் வருஷம்) இரண்டாம் மனாருக் கட்டிமுடிந்தது. இது * தலைமாட்டுமனாற என்று பெயர்பெற்று விளங்குகின்றது.

இரண்டாம் மனாருவைக் கட்டுவித்த நல்லசயீதுமரைக்காயர் என்பவர் ஹலறத்து ஆண்டவரவர்களின் அருள் பெற்று, சகல சம்பத்துகளுடன் சுகபோகமாக நாகபட்டணத்தில் வாழ்ந்திருந்தார்.

இரண்டாம் மனாருக் கட்டினது முற்றிற்று.

---

* ஹலறத்து ஆண்டவரவர்களின் தலைமாட்டுப்பக்கத்திலிருப்பதால், தலைமாட்டுமனாற என்று இதற்குப் பெயரிடப்பட்டது.

௩௰௯-ம் அத்தியாயம்.

## மூன்றும் மனாருக்கட்டினது.

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவில் மூன்றும் மனாருக் கட்டப்பட்ட வரலாற்றை சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது அப்துல்காதிறு பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்களின் அலங்காரமான தர்காவில் இரண்டாம் மனாருவைக் கட்டின நாகபட்டணத்து நல்லசயீது மரைக்காயர் என்பவருக்கு அன்புள்ள சிநேகராகிய பீர்நயினார் என்பவர், மலாய் நாட்டிலுள்ள மலாக்கா என்னுமூரில் வர்த்தகம் பண்ணிக்கொண்டிருந்தார். அவர் தமது நேசராகிய நல்லசயீது மரைக்காயர் முறுதுவைத்துக்கொண்டதையும், அது நிறைவேறினதையும், மனாருக் கட்டினதையும் அறிந்து, தமக்கு ஒரு முறுது நிறைவேறவேண்டுமென்றும், அது நிறைவேறினால், தாமும் ஒரு மனாருக்கட்ட வேண்டுமென்று நாடி, அப்படியே முறுதுவைத்துக்கொண்டார். ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவத்தினால், அவருடைய நாட்டமும் சீக்கிரம் நிறைவேறிற்று.

பீர்நயினார் என்பவர் தமது நாட்டம் நிறைவேறப் பெற்றவுடன், சிநேகிதராகிய நல்லசயீது மரைக்காயருக்கே பணமனுப்பி, தாங்கள் கட்டினதுபோல ஒரு மனாருவைக் கட்டுங்களென்று கடிதமுமெழுதினார். நல்லசயீது மரைக்காயர் அந்தப்பணங்களை யொப்புக்கொண்டு, அவர் எழுதினபடி மனாருக்கட்டுவதற்கு நாகூருக்குவந்து, சாகிபுமார்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, பீர்நயினார் பேரால் ஒரு மனாருக்கட்டத் தொடங்கினார்கள்.

தலைமாட்டுமனாறவுக்குக் கீழ்புறம் முந்தினவேலி யடைப்பின் வடகிழக்கு மூலையில் அஸ்திவாரமிட்டு, மனாருவேலை

ஆரம்பிக்கப்பட்டது. ஹிஜ்றத்து ஆயிரத்து நூற்றுப் பத்தாம் வருஷம் (ஆண்டவரவர்கள் உபாத்தான நூற்று முப்பத்திரண்டாம் வருஷம்) மூன்றும்மனாராக் கட்டி முடிந்தது. இது * முதுபக்குமனாரா என்று பெயர்பெற்று விளங்குகின்றது.

மனாராக்கட்டி முடிந்ததென்று நல்லசாயிதுமரைக்காயர் தமது நேசராகிய பீர்நயினார் என்பவருக்கு எழுதியனுப்பினார். அவர் அதையறிந்து அதிகசந்தோஷ மடைந்து, தமது சிநேகர் தமக்காகப்பட்ட பிரயாசைக்கு நன்றியறிதலுள்ளவராயிருந்தார்.

மூன்றும் மனாராக்கட்டினது முற்றிற்று.

---

௧௦௭-ம் அத்தியாயம்.

## உருவமாற்றினது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒருவரடைந்த பன்றியுருவத்தை மாற்றின வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது ஷாகுல்ஹமீது மீறான்சுல்தான் ஆண்டவரவர்களின் பௌத்திரர்களென்னும் சாகிபுமார்களில் ஸையிதுநயினார் என்பவர் அக்காலத்தில் வர்த்தகத்தில் மிகச் சிறப்படைந்திருந்த மலாய்நாட்டுக் கிட்டா என்னும் ஊருக்கு கப்பலேறிப் போயிருந்தார். இவரை அங்குள்ள முஸ்லிம்கள் அதிக அன்பாதரவாக உபசரித்து, தாங்கள் வைத்திருந்த ஆண்டவரவர்களின் காணிக்கைகளையுங் கொடுத்து, மரியாதைபண்ணி வைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அங்குள்ள முஸ்லிம்கள் ஸையிதுநயினாரை நோக்கி: சாகிபவர்களே, இந்தவூர் அரசருடைய ஆசிரிய

* முதுபக்குக்குப் பக்கத்திலிருப்பதால், முதுபக்குமனாரா என்று இதற்குப் பெயரிட்டப்பட்டது.



ரொருவர் இங்கிருந்து கொஞ்சந் தூரத்திலுள்ள ஒரு காட்டில் வாசஞ்செய்து கொண்டிருக்கின்றார். அந்த வனத்தில் சேகரிக்கப்படும் தேனையும், யானைக்கொம்பையும், அந்தக்குருவே எடுத்துக்கொள்ளும்படி அரசர் கட்டளைபண்ணியிருக்கின்றார். அதனால், அந்தக்குருவுக்கு அதிக வரும்படி வருகின்றது. அவர் வருஷத்திற்கொருதரம் நூறுபிங்கி செலவுசெய்து பெருஞ்சோறாக்கி, தங்கள் பாட்டனாராகிய ஹலறத்து ஷாகுல்ஹமீது பாத்துஷா ஆண்டவரவர்கள் பேரால் கந்தூரி கொடுக்கின்றார். தாங்கள் அவரிடம் போனால், காணிக்கைகள் அதிகமாகக் கிடைக்கும். ஒருவழி போய் வாருங்கள் என்று சொன்னார்கள்.

இதைக்கேட்ட ஸையிதுநயினார் கிட்டாநகரத்தை விட்டுப் புறப்பட்டு அந்தக்காட்டைத் தேடிப்போய்ச் சேர்ந்து, அரசரின் தேசிகராகிய அவரைக் கண்டுகொண்டார். ஸையிதுநயினார் ஸலாம்சொல்லி உட்கார்ந்தவுடன் அந்தக்குரு இவரைப்பார்த்து “நீ யார்? இந்தக் காடுதேடிவந்த காரணமென்ன?” என்று கேட்டார். அதற்கு இவர் “நான் நாகூரிலுள்ளவன். ஹலறத்து ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களின் காணிக்கைகள் தங்கள்வசம் இருப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன்” என்று விடைகொடுத்தார். இதைக்கேட்டு அந்தக்குரு பின்னும் இவரைநோக்கி “அந்த ஆண்டவரவர்களுக்கு நீர் யார்?” என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு இவர் “நான் அவர்களின் பௌத்திரன்” என்று மறுமொழி சொன்னார். இச்சொல் குருவுக்குக் கோபத்தை மூட்டி விட்டது.

உடனே குரு ஸையிதுநயினாரைப் பார்த்து “நீசொல்வது பொய். அந்த ஆண்டவரவர்கள் மிகமேலான நாயகத்தனத்தை யுடையவர்கள். நான் அவர்களுடைய பௌத்திரனென்று சொல்கின்றாயே? உன் முகத்தைப் பார்த்தால், பன்றி முகம்போ லிருக்கின்றதே? என்று மரியாதையீன

மாகச் சொன்னார். இதைக்கேட்ட ஸையிது நயினார் கோபங்கொண்டு, அந்தக்குருவைப் பலவாறு நிந்தனையாகப் பேசினார். உடனே குரு தமது ஏவலாட்களைக் கூப்பிட்டு, இவனை அடியுங்களென்று கட்டளை பண்ணினார்.

ஏவலாளரான காட்டு மலாய்க்காரர்கள் குருவின் கட்டளைப்படி ஸையிது நயினார் மேல் கையை நீட்ட ஆரம்பித்தார்கள். அவ்வளவில் இவர் தட்டிக்கொண்டு அங்கிருந்து ஒரே யோட்டமாய்க் கிட்டாநகரம்வந்து சேர்ந்துவிட்டார். வந்தவர் பயிரங்கமா யிருக்கவில்லை; தம்மீது அன்புள்ள ஒரு மலாய்க்காரன் வீட்டிற்போய் ஒளித்துக்கொண்டிருந்தார்.

அங்கே காட்டில் குருவானவர் அன்று இராப்போஜன மருந்தி, தமது படுக்கை யறையிற்போய் படுத்து நித்திரை செய்தார். அர்த்த சாமத்தில் அவருக்குக் கேடு வந்தது. அயர்ந்து தூங்கினவர் சாமத்தில் விழித்துக்கொண்டு, உறுமத் தொடங்கினார். அறைக்குள் நெடுநேரம் உறுமுகிற சத்தம் வெளியிற்படுத்திருக்கும் ஆட்களின் காதில் விழுந்தது. அவர்கள் எழுந்து, விளக்குக்கொண்டு உள்ளே புகுந்து பார்த்தார்கள். அரசனுடைய ஆசிரியர்* பன்றியுருக்கொண்டு, அறைக்குள் உறுமிக்கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள்.

உணவருந்திப் படுக்கப்போன பெரியமனிதர் பன்றியாயிருப்பதைப் பார்க்கும் யாருக்குத்தான் ஆச்சரியம் பிறவாது! கண்ட மலாய்க்காரர்கள் பதறி, இதென்ன புதுமையென்று உடனே அங்கிருந்து கிட்டாவுக்கு வந்து, அரச

* ஆண்டவரவர்களின் கருமாத்தினால் பார்ப்பவர்கண்ணுக்குப் பன்றியுருவாய்த் தோன்றினதே யன்றி, இயற்கையில் அவர் பன்றியாய் மாறிவிடவில்லை. அவருக்கும் தாம் பன்றியாய்ப்போனதாகவே தோற்றிற்று.



ரிடம் தெரிவித்தார்கள். தமதுகுரு பன்றியாயிருக்கின்று
றென்ற சொல்லை அரசர்கேட்டுத் திடுக்கிட்டு, அப்போதே
புறப்பட்டு அங்கேபோய், பன்றியுருவாய் நிற்கும் தேசி
கரைக்கண்டு புதுமைப்பட்டு, அங்கிருப்பவர்களைப் பார்த்து:
இங்கே என்ன நடந்தது? என்று விசாரித்தார்.

அப்போது அங்குள்ளவர்கள் பயந்து, அரசரை
நோக்கி: மகாராஜாவே, நேற்றுச் சாயந்தரம் ஒரு புது
மனிதர் இங்குவந்தார். அவர்: நான் நாகூர் மீறன் சாகிபு
ஆண்டவரவர்களுடைய பௌத்திரன் என்று இவரிடம்
சொன்னார். இவர் அவரைப்பார்த்து: நீ பொய் சொல்லு
கின்றாய், உன்முகம் பன்றிமுகப்போ லிருக்கின்றதே
யென்று சொல்லிவிட்டு, அவரை அடிக்கும்படியும் ஏவினார்.
இதுவொன்றுதான் எங்களுக்குத் தெரியும் என்று
சொன்னார்கள். இதைக்கேட்ட அரசர் மனதில் நிதானித்து
கொண்டு: அந்த மனிதர் இப்போது எங்கிருக்கின்றார்?
என்று அவர்களைக் கேட்டார். அதற்கு அவர்கள்: அவர்
இங்கில்லை; கிட்டாவுக்குத்தான் வந்திருப்பார் என்று வதில்
சொன்னார்கள்.

உடனே அரசர் பன்றியுருவாய் நிற்கும் தமது ஆசிரியர்
கழுத்தில் மெல்லிய இரும்புச் சங்கிலியைக் கட்டி இழுத்துக்
கொண்டு கிட்டாநகரம் வந்துசேர்ந்து, அந்த உருமாறி
நிற்பவரை மறைவாக வைத்துக்கொண்டு "நாகூரி
லிருந்து வந்திருக்கும் ஸையிது நயினார் என்பவரை யாராவது
காட்டிக்கொடுத்தால், காட்டிக் கொடுத்தவருக்குத் தகுந்த
வெகுமதி கொடுக்கப்படும். அவரை ஒளித்து மறைத்து
வைத்துக்கொண்டு தெரிவிக்காமல் இருப்பவர்களுக்குத்
தகுந்தபடி தண்டனை கொடுக்கப்படும்" என்று விளம்பரம்
பண்ணினார்.

இவ்விளம்பரம் பிரஸ்தாபமானவுடன் ஸையிது நயினாரை
ஒளித்து வைத்திருக்கும் மலாய்க்காரன் பயந்து, அரச

ரிடம் வந்து பணிந்து நின்று : இராஜா அவர்களே அந்த சையிதுநயினார் என் வீட்டில்தான் பயந்து ஒளிந்துக்கொண் டிருக்கின்றார் என்று தெரிவித்துவிட்டான். இதைக்கேட்ட போதே அரசர் தமது ஆட்களுடன் பன்றியையும் இழுத்துக்கொண்டு, அந்த மலாய்க்காரன் வீடுநோக்கிப் புறப்பட்டு வந்தார்.

அரசன் வருவதை மலாய்க்காரனின் வீட்டுக்குள்ளிருக் கும் சையிதுநயினார் ஜன்னல் வழியாய்ப் பார்த்து, அரசன் தன் குருவுக்காக ஏவங் கேட்கவே வருகின்றான். தன் இடையிலுள்ள குற்றுடைவாளால் நம்மைக் குற்றிவிழுத்து வானென்று அஞ்சிநடுங்கி, தங்கள் பாட்டனாராகிய ஹல றத்து ஆண்டவரவர்களை மனதில் தரிபடுத்திக்கொண்டு வீட்டைவிட்டு வெளிப்பட்டு, அரசரை எதிர்நோக்கி வந்தார். உடனே அரசர் அவரை நெருங்கி, அவருடைய பாதத்தில் விழுந்து : எங்களை ரக்ஷிக்கவந்த எஜமானே, கோபத்தைத் தணியுங்கள். பொறுமை செய்யுங்கள். தங்கள் அடிமையாகிய என்குரு தங்களுடைய மகிமையை அறியாத மடத்தனத்தினால் அந்தக் கெட்டவார்த்தையைச் சொல்லிவிட்டார். அது மகாகொடியதான குற்றமே. அதனை அவர்தாமே அநுபவித்துக்கொண்டார்; இனி அவர் சொன்ன சொல்லைத் தாங்களே பொறுத்தருளவேண்டும். சிறியவர்செய்த பிழையைப் பெரியவர் பொறுப்பது கடமை யல்லவா ? தாங்கள் பொறுப்பீர்களானால், தங்கள் பாட்ட னாரவர்களும் பொறுத்துக் கொள்வார்கள். தாங்களே அவர்களிடத்திலும் இரந்து கேட்டு, என் ஆசான்கொண்ட உருவத்தை மாற்றுங்கள். அப்படிச் செய்யும் வரையும் நான் தங்கள் திருவடிகளை விடமாட்டேன் என்றுசொல்லி, அழுத கண்ணுடன் குப்புறக்கிடந்தார்.

குற்றிக்கொல்ல வருவதாக நினைக்கப்பட்ட அரசர் இவ்வாறு அடியில் விழுந்து அழுவதைக்கண்ட சையிது



நயினார் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி உளுசெய்து, அல்லா தஅலாவை இரண்டு றக்அத்துத் தொழுதுவிட்டு, நாகூர்த் திசையை நோக்கிக் கையேந்தி : எங்கள் நாயகமே, அர சரின் குரு எனக்குச் செய்த குற்றத்தை நான் பொறுத்துக் கொண்டேன். தாங்களும் பொறுத்துக்கொண்டு, குரு வின் உருவம் மாறும்படி கிருபைசெய்யுங்கள் என்று இரந் தார். இப்படியிரக்கும்போதே, பன்றியாய் நின்ற குரு மனிதவடிவாய் நின்றார். அதைக் கண்ட எல்லாரும் ஆச் சரிய மடைந்தார்கள்.

பின்பு அந்தக்குரு சையிதுநயினாரைத்தழுவி : நாயகமே, என்பிழையை மன்னியுங்கள் என்று பரிந்து கேட்டு நின் றார். தமதுகுரு முன்போல மனிதராய் நிற்பதைக் கண்ட அரசர் சந்தோஷ முற்று, பின் குருவை நோக்கி : நடந்த தென்ன ? என்றுகேட்டார். அதற்குக் குரு இவர்களை நான் பன்றிமுகம் போன்ற முகமுள்ளவனென்று கேட்டது நிசந் தான். அன்றிரா நான் படுத்துத் தூங்கும்போது சில தபோதனர்கள் கைத்தடியுடன் வந்து என்னைச் சூழவளைந்து அடிப்பது போலத் தோற்றமாயிற்று. அடிபொறுக்கா மல் பதறிவிழித்தேன். நான் பன்றியாயிருப்பதாக எனக் குத் தெரிந்தது. அதன்பின் நடந்தது ஒன்றும் எனக்குத் தெரியாது. இப்போது மனிதனாய் நிற்கின்றேனே, இது தான் தெரியும். இவர்கள் மகாபெரியோர்கள் என்று அரச ரிடம் சொன்னார்.

இதைக் கேட்ட அரசர்முதல் எல்லாரும் ஆனந்தாச் சரியப்பட்டவர்களாய், ஹலறத்து ஆண்டவர்களைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அதன்பின் அரசர் சையிது நயினாரை அழைத்துப்போய்த் தமது அரமனையிலேயே சிலநாள் வைத்திருந்து, பின் அவர் இஷ்டப்படி நாகூருக்கு வரும் கப்பலிலேற்றி, அநேக வெகுமதிகளுங் கொடுத்து

அநுப்பிவைத்தார். ஸையிதுமயினார் நாகூர் வந்துசேர்ந்து முந்தி தர்காவுக்கு வந்து பாத்திஹா வோதிவிட்டு, வீடு போய்ச் சேர்ந்தார்.

உருவமாற்றினது முற்றிற்று.

---

௧௨௮-ம் அத்தியாயம்.

## நாலாம் மனாருக் கட்டினது.

---

[இவ்வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவில் நாலாம்மனாருக் கட்டப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து ஸையிது சுல்தான் ஷாகுல்ஹமீது ஆண்டவரவர்களின் கந்தூரியொன்று வந்தது. அந்த கந்தூரியில் அநேக தனதனவான்கள் வந்திருந்தார்கள். மகுமூதுபந்தர் என்னும் பறங்கிப்பேட்டையில் நியாயாதிபதியாயிருந்த தாவூதுகான் என்னும் ஒரு பிரபுவும் வந்திருந்தார்.

அவர் தர்காவைச் சுற்றிப்பார்த்து, மூன்றுமனாருக்கள் மாத்திரமிருப்பது நன்றாயிருந்தாலுங் கூட, நான்காவதாகத் தென்புறமும் ஒரு மனாரு இருந்தால், மிக அலங்காரமாயிருக்குமென்று மனதில் எண்ணிக்கொண்டு, தர்காவின் முன்வாசலில்வந்து நின்று: எஜமானவர்களே, என்னுடைய இன்ன கோரிக்கை நிறைவேறினால், நானும் ஒரு மனாருவைக் கட்டுகிறேன் என்று பிரார்த்தனை பண்ணிக்கொண்டு, பாத்திஹா வோதிவிட்டு, கந்தூரி முடியும்வரையும் நாகூரிலேயே யிருந்துகொண்டார்.

தாவூதுகான் கந்தூரி முடிந்தவுடன் சுயநகரமாகிய பறங்கிப்பேட்டைக்குப் போனார். அவர்போன சிலதினத்தில், கொண்டகோரிக்கை நிறைவேறிவிட்டது. உடனே



பணத்துடன் பயணப்பட்டு, மனாருக்கட்டுவதற்காக நாகூர் வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் சாகிபுமார்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு மனாருக்கட்ட ஆரம்பித்தார்.

முதுபக்குமனாருவுக்குத் தென்புறம் முந்தின வேலி படைப்பின் தென்கிழக்கு மூலையில் அஸ்திவாரமிட்டு, மனாருவேலை தொடங்கி, மிகவிரைவாய் நடந்து வந்தது. ஹிஜ்றத்து ஆயிரத்து நூற்று முப்பத்தேழாம் வருஷம் (ஆண்டவரவர்கள் உபாத்தான நூற்றைம்பத்தொன்பதாம் வருஷம்) நாலாம் மனாருக் கட்டிமுடிந்தது. இது * ஓட்டுமனாரு என்று பெயர் பெற்று விளங்குகின்றது.

நாலாம் மனாருவைக் கட்டிமுடித்த தாவூதுகான் பின் நாகூரிலிருந்து ஹலறத்து ஆண்டவரவர்களின் கிருபையை மிகப்பெற்றவராய்த் தமதூர்போய், சுகபோகமாய் வாழ்ந்திருந்தார்.

நாலாம் மனாருக்கட்டினது முற்றிற்று.

---

* மேல்த்தளத்தில் நான்குபுறமும் ஓட்டுச்சாய்ப்பான மேன்கூரை யிருந்தபடியால், இதற்குஓட்டுமனாரு என்று பெயரிடப்பட்டது. சில வருஷங்களுக்கு முன்னேதான் அதன் மேன்கூரை தகர்ந்து விழுந்தது.

௧௨௧-ம் அத்தியாயம்.

## குன்மந்தீர்த்தது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்கள் சாகிபுமார்களுள் ஒருவருக்குள்ள குன்மரோய் தீர்த்த வரலாற்றை சொல்லுகின்றது.]

ஹலறத்து சையிது ஷாதுல்ஹமீது மீருன்சாகிபு ஆண்டவரவர்களின் சந்ததிகளிலுள்ள யீறல்லெப்பைசாகிபு, யூசுபுலெப்பைசாகிபு என்னும் இரண்டுபேர் சகோதரர்கள் மலாக்காநகரம் போய்ப் பார்க்க விருப்பங்கொண்டு, கப்பலேறிப் பயணப்பட்டார்கள். இருவரும் மலாக்காவிற் போய்ச்சேர்ந்தவுடன் அங்குள்ள முஸ்லிம்கள் உபசரித்து அழைத்து வைத்துக்கொண்டு, அவரவரிடத்திலிருந்த காணிக்கைப் பொருள்களைக் கொடுத்துவந்தார்கள். அப்பொருள்களை அவ்விருவரும் பெற்று அநுபவித்துக்கொண்டு, அங்கேயே தங்கியிருந்தார்கள்.

ஒருநாள் அவ்வூரிலுள்ள முஸ்லிம்கள் அநேகர், இந்த மலாக்காவின் காட்டில் ஒரு ஒலி வந்திருக்கின்றார்கள்; அவர்களைப்போய்த் தரிசிக்கப்போகிறோமென்று சொல்லிக்கொண்டு புறப்பட்டார்கள். அதை சாகிபுமார்களான சகோதரரிருவருங் கேட்டு, இருவரில் ஒருவருக்குள்ள குன்மநோயை அந்த ஒலியிடம் போய்த் தீர்த்துக்கொள்ளலாமென்று நாடி, அந்த முஸ்லிம்களை நோக்கி: நாங்களும் அந்த ஒலியைத் தரிசிக்க உங்களோடு வருகிறோம் என்றார்கள். அவர்கள் நல்லதென்று இவ்விருவரையும் அழைத்துக்கொண்டு மலாக்காவைவிட்டுப் புறப்பட்டு, அந்த ஒலியிருக்கும் வனத்திற்குப் போனார்கள்.



அந்த ஒலி அங்கே ஒரு இடத்தில் விருத்தாகாரமான
ஒரு வேலியை அடைத்துக்கொண்டு, அதற்குள் இருந்தார்
கள். அந்தவேலியடைப்பின் உட்புறத்தில் நாலாபக்கமும்
கொடிய வேங்கைகளும், மதயானைகளும், கரடிகளும் அவர்
களுக்கு காவலாய் நின்றன. அந்த மிருகங்கள் அங்கே
காவலாயிருப்பது இங்கிருந்துபோன ஜனங்களுக்குத் தெரி
யும். ஆதலால் அவர்கள் வேலியை நெருங்காமல், வெளியி
லேயே தூரத்தில் நின்றுகொண்டார்கள். சங்கதி தெரியாத
சாகிபுமாரிருவரும் வேலியை நெருங்கிப்போனார்கள். அப்
போது, ஜனங்கள் இருவரையுங் கூப்பிட்டு: அங்கே போகா
தீர்கள். துஷ்டமிருகங்கள் நிற்கும். நெருங்கினால்
வந்து விழும். உங்களிடம் காணிக்கை யிருந்தால், முடிச்
சுக்கட்டி இங்கிருந்து வேலிக்குள் எறிந்துவிடுங்கள். இது
தான் வழக்கம். ஒலி உள்ளே யிருக்கின்றார்கள்; பார்த்துக்
கொள்ளுங்கள் என்று சத்தமிட்டார்கள்.

ஜனங்கள் இவ்வாறு கூப்பிட்டுச் சொல்லுவதைச்
சகோதரரிருவரும் சட்டைபண்ணவில்லை. அதை மீறிக்
கொண்டு வேலியை நெருங்கி, உள்ளே நிற்கும் மிருகங்களைக்
கண்டு அஞ்சி, போகாமல் நின்றார்கள். இவர்கள் அஞ்சி
நிற்பதை அங்கேயிருக்கும் ஒலி கண்டு, உடனே யெழுந்து:
மகத்துவமுள்ள சையிது முகம்மதுயூசுபு சாகிபுடைய
மக்களே, உள்ளே வாருங்கள். அஞ்சாதீர்கள் என்று சொல்
லிக் கொண்டு எதிரே வந்தார்கள். அப்போது சகோதர
ரிருவரும் வேலிக்கு உள்ளே புகுந்தார்கள். அந்த ஒலி
இவர்களையடுத்துக் கட்டியணைத்து அழைத்துக் கொண்டு
போய், தங்களிருப்பிடத்தில் உட்காரவைத்துத் தாங்களும்
உட்கார்ந்து, சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

முந்தி ஒலி இருசகோதரர்களையும் நோக்கி "ஏழை
யாகிய என்னை இங்கேயும் இருக்கவொட்டாமல், வேறே

எங்கே தூரத்துவதற்காக நீங்கள் இருவரும் வந்தீர்கள்?" என்று கேட்டார்கள். இப்படிச் சொன்னபோது இவர்கள் திடுக்கிட்டு "தாங்கள் ஏன் இவ்வாறு சொல்லுகின்றீர்கள்!" என்று பதறிக்கொண்டு கேட்டார்கள். அதற்கு ஒலி சொல்லுகின்றார்கள்:—

"கேளுங்கள்: சகோதரர்களே, உங்கள் நாகூர் கந்தூரிக்குப் பலபேர்களும் வருவதுபோல, அடியேனாகிய நானும் ஒரு வருஷம் வந்தேன். வந்து, தர்காவின் மேல்புறமுள்ள மேடைமேல் சாகை பண்ணிக்கொண்டிருந்தேன். கெடு மதியுள்ள நான் ஒருநாள் உங்களிலுள்ள ஒரு சிறு பிள்ளையைக் கூப்பிட்டு, புகைகுடிக்கும் குடுக்கையைக் கொடுத்து, அதில் கொஞ்சம் தண்ணீரூற்றி நெருப்புவைத்து வரும்படி சொன்னேன். சொன்னவாய் மூடுமுன் ஒரு பெரிய ஜின் வந்து என்னைத் தூக்கி, ஆகாயத்தில் கொண்டுபோயிற்று. அதிக விசையாய் ஜின் தூக்கிக்கொண்டு போகப்படுகிற நான் மனந்தடுமாறி, கைகால் சோர்ந்து, மதிமயங்கி, நமக்கு ஏன் இந்த ஆபத்து நேர்ந்ததென்று எண்ணிக் கலங்கினேன். அப்போது ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஆண்டவர்களுடைய சந்ததிகளிலுள்ள பிள்ளையைக் கூப்பிட்டு, வேலைசெய்ய ஏவினேனே, அதனால்தான் இப்படி வந்து சம்பவித்தது என்று தெரிந்துகொண்டேன். உடனே கண்ணீர்விட்டு அழுது, வாய்விட்டுப்புலம்பி, எஜமானே, அடியேன் தெரியாத் தன்மையால் தங்கள் பிள்ளையை வேலை யேவினேன். தேவரீர் அதை மன்னித்து, என்னை ரக்ஷிக்க வேண்டும் என்று ஹலறத்து ஆண்டவரவர்களைத் துதித்து வேண்டிக்கொண்டேன். அப்போது எனக்கிருந்த திகில் கொஞ்சமல்ல, ஆகாயத்தில் வெகுதூரங்கொண்டு போகப்பட்ட பின்னே நான் இவ்வாறு தோத்திரம் பண்ணினேன். நான் தடுமாறி நாக்குளறி தோத்திரம் பண்ணினவுடன், அந்த ஜின் என்னைப் பார்த்து நீர் இன்னுங்



கொஞ்சநேரம் ஆண்டவரவர்களை நாடி வேண்டிக்கொள்ளா திருந்தால், உம்மை முன்வானம் வரையும் கொண்டு போய், எழுவான் பக்கத்தில் எறிந்துவிடுவேன். ஆண்டவ ரவர்களை நாடினீர் பிழைத்தீர் என்று சொல்லி, அங்கேயே என்னை விட்டுவிட்டது. ஆகாயத்திலேயே விடப்பட்ட நான் இந்த வனத்தில் வந்து விழுந்தேன். அன்றுமுதல் இங்கேயே யிருக்கின்றேன். இப்போது நீங்கள் நாடினபடிக் குன்மந்தீர்க்குங் காரியத்தில் நான் தலையிட்டால், இனி இங்கிருந்து எங்கே எடுத்தெறியப்படுவேனோ! இவ்வளவு போதும், நீங்கள் போய்வாருங்கள்"

என்று சொல்லி முடித்து, ஒரு பட்டுப்போர்வையும் சில சந்தனக் கட்டைகளும், தங்களுக்குவந்த காணிக்கை யில் வேண்டிய மட்டுக்கும் கொடுத்து, அவ்விருவரையும் அநுப்பினார்கள், அவ்விருவரும், அவற்றைப் பெற்றுக் கொண்டு சந்தோஷத்துடன் மீண்டுவந்து, வேலிக்கு வெளி யில் நிற்கும் முஸ்லிம்மானவர்களிடம் சங்கதிகளைச் சொல் லிக்காட்டினார்கள். எல்லாரும் அதைக்கேட்டு, ஆச்சரியப் பட்டார்கள். அன்று பொழுது பட்டது.

சூரியன் அஸ்தமித்தபின் காடெங்கும் இருளாயிருந் தது. போனஜனங்கள் அன்றிரா அந்தக் காட்டிலேயே தங்கினார்கள். இவ்விரு சகோதரர்களும் ஒருபாரிய விருக்ஷத் தடியிற்போய்ப் படுத்திருந்தார்கள். அர்த்தசாமத்தில் ஹலறத்து ஆண்டவரவர்கள் குன்மநோ யுள்ளவருடைய கனவிற்போய் "நீங்கள் குன்மநோயைத் தீர்த்துக்கொள்ள இந்த ஒலி யிடத்திலா வந்தீர்கள்! அவர் அப்படிச் செய் திருப்பாரானால், இங்கிருந்து எடுத்து இன்னும் அதிக தூரத் தில் எறியப்படுவார்" என்று சினக்குறியுடன் சொல்லி விட்டு, வாயைப்பிளக்கச் சொன்னார்கள். அவர் உடனே வாயைப் பிளந்தார். வாய்க்குள் கையையிட்டு, ஒரு மயிர்ப்

பந்தைப் பிடுங்கி யெடுத்தார்கள். அவர் பதறிக்கொண்டு விழித்துவிட்டார்.

விழித்தவர் இது சொப்பனமென்று கண்டு, தமது சகோதரரை யெழுப்பிச் சொல்லிக் காட்டினர். அப்போதே குன்மநோய் தீர்ந்துவிட்டது. அவ் விராமுழுதும் சகோதர ரிருவரும் ஆண்டவரவர்களுக்கு அஞ்சி: எஜமானே, நாங்கள் அறியாமையினால் இந்த ஒலியிடம் அந்த நாட்டத்துடன் வந்தோம். அதை மன்னிக்கவேண்டும் என்று இரந்து கேட்டுக்கொண் டிருந்தார்கள். பொழுது விடிந்தது. அதிகாலையில் இருவரும் எழுந்து, செய்கடன் முடித்து, நாகூரை நோக்கி பாத்திஹா வோதிவிட்டு, இரவில் நடந்ததை மற்ற ஜனங்களிடம் சொல்லிக் காட்டினர்கள். எல்லாரும் அதைக்கேட்டு ஆச்சரியமும், சந்தோஷமு மடைந்து, அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு மலாக்காவந்து சேர்ந்தார்கள்.

மீறன்லெப்பைசாகிபு, யூசுபுலெப்பை சாகிபு என்னும் சாகோதர ரிருவரும் அதன்பின் சிலமாதம் வரையும் மலாக்காவிலிருந்து, பின்பு அங்கிருந்தவரும் கப்பலில் பிரயாணப் பட்டார்கள். மலாக்காமுஸ்லிம்கள் அநேக பொருட்களைக் கொடுத்து, இருவரையும் பயணமநுப்பினர்கள். சந்தோஷத்துடன் இருவரும் கப்பலேறி, நாகூர்வந்து சேர்ந்தார்கள்.

மலாக்காவின் வனத்திலிருக்கும் அந்த * ஒலிக்கு அந்தப் பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் அன்றுமுதல் அதிக பயபக்தியாய் நடந்து வந்தார்கள்.

குன்மந்தீர்த்தது முற்றிற்று.

* அந்த ஒலி அங்கேயே உபாத்தாய் அடங்கியிருக்கின்றார்கள். மலாக்காசாகிபு என்று முஸ்லிம்கள் கொண்டாடப் படுகிறவர்கள் இவர்களே.

௧௩௦-ம் அத்தியாயம்.

## ஐந்தாம்மனாருக் கட்டினது.

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்காவில் ஐந்தாம் மனாருக் கட்டப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஹலறத்து சுல்தான் ஷாகுல்ஹமீது பாத்குஷா ஆண்டவரவர்களின் அற்புதங்கள் அதிகரித்து, காலத்திற்குக் காலம் திசையெங்குஞ் சென்று விளங்கின. அவர்களின் திவ்வியாலயமாகிய தர்கா மனாருக்கள் என்கிற நான்கு கோபுரங்களையும் நான்கு பக்கமுமுள்ளதாய், அலங்காரமான ஒரு சித்திரப்படம்போல விளங்கிக்கொண்டிருந்தது. ஆலயதரிசனம் என்கிற தர்காஜியாறத்து நாடி அநேகராச்சியத்தார் பிரதிதினமும் வந்துகொண்டே யிருந்தார்கள். நாகூர் வரவர அகன்று பட்டணமாய்க்கொண்டு வந்தது.

ஹலறத்து ஆண்டவரவர்களுக்கு ஹவேலி நிலங் கொடுத்த அச்சுதப்ப நாயக்கன் என்னும் அரசன் வமிசத்தில் ஆளப்பட்டுவந்த தஞ்சாவூர், நாயக்கன்மார் ஆளுகையி லிருந்து மகாராட்டிரர் ஆளுகையில் ஆய்விட்டது. இக்காலத்தில் தஞ்சாவூருக்கு அரசனாய், பிரதாபசிங்கு என்னும் மகாராட்டிர ராஜனிருந்து ஆண்டுவந்தான்.

பிரதாபசிங்கு மகாராஜா பட்டத்திற்கு வந்தபின், ஆண்டவரவர்களின் மகிமை நாள்தோறும் அவன் செவியில் ஏறிக்கொண்டிருந்தது. அவன் ஆண்டவரவர்களின் பூர்வ வரலாறு முதலிய எல்லாவற்றையும் விசாரித்து அறிந்து கொண்டு, நாம் ஒருதரம் நாகூர்போய் வரவேண்டும் என்று எண்ணியிருந்தான்.

இவ்வெண்ணம் நாளாடகம் மனதில் குடியாயிருந்தபடியால், நாம் நாகூர்போய், ஆண்டவர்களிடம் ஒரு நாட்

டத்தை முறையிட்டு வரவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு, பயணத்திற்கு யத்தனம்பண்ணும்படி மந்திரிக்கு அறிக்கை பண்ணினான். உடனே மந்திரி பிரதானிகள் கூடி மகாராஜாவின் பிரயாணத்திற்கு ஆகவேண்டியவைகளைத்தும் தயார் பண்ணினார்கள். இரத-கஜ-துரக-பதாதி என்னும் ஒரு சதுரங்கசேனை கூடவரும்படி கட்டளை பிறந்தது. குடைகள், கொடிகள், ஆலவட்டங்கள், சாமரங்கள், மற்றுமுள்ள விருதுகள் அனைத்தும் சரிபண்ணப்பட்டன. கூடாரங்கள் முதலான சகலசாமான்களும் தயாராயின. முடிவாக ஒரு அரசன் பிரயாணத்திற்கு வேண்டிய அவ்வளவும் தயார் பண்ணி முடிந்தன.

பின்பு, பிரதாபசிங்கு மகாராஜா தனது மந்திரி முதலானவர்களோடு தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு, சதுரங்கசேனை புடைசூழ நாகூர் வந்து சேர்ந்தான். வந்தவுடன் தனது பட்டாள பரிவாரங்கள் அனைத்தையும் ஊருக்கு வெளிப்புறத்தில் கூடார மடித்துத் தங்கச்செய்துவிட்டு, மந்திரி, சேனாபதி முதலிய சில பரிவாரங்கள் பின்வரக் கால்நடையாக அரசன்நடந்து நாகூருக்குள் புகுந்து, தர்காவுக்கு வந்தான்.

ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவமுள்ள தர்காவுக்குள் பிரதாபசிங்கு மகாராஜன் நுழையுமுன்னே, தான் அணிந்திருந்த பாதகோசங்களைக் கழற்றிவிட்டு, இடையில் தொங்கின பட்டத்துவாளையும் எடுத்துவிட்டு, முன்வாசலில்வந்து கிரீடமிலங்கும் தலையைக்குனிந்து கைகட்டி ஒரு அடிமைபோல நின்று, பரிசுத்தமான இருதய உருக்கத்துடன் கீழ்வருமாறு பிரார்த்தித்தான் :—

"எங்கள் எளிய ராச்சியத்திற்கு எஜமானாய் எழுந்தருளிவந்த ஆண்டவரவர்களே, தங்கள் அடியேனாகிய நான்



உலகாளும் அரசனாயிருந்தும், ஒரு பெருங்கவலையால் மனப்
பாக்கியமற்றவனாயிருக்கின்றேன். அந்தக் கவலையானது :—
எனக்குப் பின் என் அரசையாளுதற்கு ஒரு சந்ததி
யில்லையே யென்பதுதான் என்று தாங்கள் அறிவீர்கள்.
இனி என் ராச்சியபாரத்தைச் சுமந்து ஆள எனக்கு ஒரு
மகன் பிறக்கவேண்டும். இக்குறை தீரவேண்டுமென்றே
தங்கள் சந்நிதானத்தில் முறைப்பாடு செய்கின்றேன்.
எனக்கு ஒரு மகன் பிறந்து ஆயுசுள்ள பிள்ளையா
யிருப்பானானால், மகத்துவமுள்ள தங்களின் திவ்விய
ஆலயத்தில் ஒரு மனாரு என்னும் கோபுரமுங்கட்டி, ஒரு
கிராமமும் தங்களுக்குத் தத்தம் பண்ணுகின்றேன்" என்பதே.

பிரதாபசிங்கு இவ்வாறு பிரார்த்தனை பண்ணிக்கொண்டு, அளவற்ற திரவியத்தை உண்டியற்குடத்தில் கொட்டி விட்டு, சாகிபுமார்கள் பாத்திஹாவோதி விடைகொடுக்கப் பெற்றுக் கொண்டு கூடாரத்திற்குவந்து, மறுநாளே புறப்பட்டுத் தஞ்சாவூர்போய்ச் சேர்ந்தான்.

பிரதாபசிங்கு மகாராஜன் பிரார்த்தனை பண்ணிக் கொண்டு தஞ்சாவூர் போய்ச்சேர்ந்த சில தினங்களில், அவன் முதல் மனைவியாகிய இராஜஸ்திரீ கருப்பமானாள். தன் பட்டஸ்திரீ கருப்பமாயிருப்பதை யறிந்த மகாராஜன் ஆநந்த சாகரத்தில் மூழ்கியிருந்தான். மாதம் ஒன்பதுஞ் சென்று, அவள் ஒரு ஆண்குழந்தையை யீன்றாள். தன் கோரிக்கைப்படி ஆண்பிள்ளை பிறந்ததனால், மகாராஜாவுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. பிள்ளைக்குச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் சிறப்புடன் செய்து, அளவற்ற தானங்களும் வழங்கினான்.

பின்பு, பிரதாபசிங்கு மகாராஜன் தன் மகனுக்குத் துளசி மகாராஜன் என்று பெயரிட்டான். ஆண்டவரவர்களின்

வரத்தினற் பிறந்த அந்தக்குழந்தை யாதொரு தீங்குமின்றி, வளர்பிறைபோல நாளொருவண்ணமாய் வளர்வதை அரசன்கண்டு பூரித்து, சில காரியகாரர்களை நாகூருக்கு அநுப்பி, மனூருக் கட்டும்படி கட்டளை பண்ணினன். கட்டளை பிறந்தவுடனே அரசன் காரியகாரர்கள் தஞ்சாவூரிலிருந்து நாகூருக்குவந்து, சாகிபுமார்களின் அநுமதிபெற்று, மனூருக் கட்டத் தொடங்கினர்கள்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் அடங்கி விளங்கும் சிறப்பான தர்காவுக்கு மேல்புறமிருந்த வெளிநிலத்தில் அஸ்திவாரமிட்டு, வெகுபலமாகக் கட்டிடவேலை நடந்துவந்தது. இராஜ கட்டளை யாதலால், வேலை அதிக சுருசுருப்பாய் நடந்தது. ஆயிரக் கணக்கான ஆட்கள் நின்று வேலை செய்தார்கள். ஆயினும், கட்டிமுடியச் சில வருஷங்கள் சென்றன. ஹிஜ்றத்து ஆயிரத்து நாற்றெழுபத்தேழாம் வருஷம் (ஆண்டவரவர்கள் உபாத்தான நாற்றுத் தொண்ணூற்றொன்பதாம் வருஷம்) ஐந்தாம் மனூருக்கட்டி முடிந்தது. இது *பெரியமனூறு என்று பெயர்பெற்று விளங்குகின்றது.

மனூருக்கட்டி முடிந்ததென்று காரியகாரர்கள் மகாராஜாவுக்கு எழுதினர்கள். அதை யறிந்தவுடனே மகாராஜா சந்தோஷப்பட்டு, தானேபோய் மனூருவைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி, தான்பெற்ற அருமை மகனாகிய துளசிமகாராஜன் என்னும் சிறுவனையும் அழைத்துக் கொண்டு, முன்போல மந்திரி பிரதானிகளும், சதுரங்க சேனையும் புடைசூழத் தஞ்சாவூரைவிட்டுப் புறப்பட்டு நாகூர் வந்து சேர்ந்து, பாளையங்களை வெளியில் இருத்திவிட்டு, தானும் தன்மைந்தனும் பரிவாரம் புடைவர ஊருக்குள் பிரவேசித்து, தான்கட்டின மனூருவென்னும் கோபுரத்

* நான்கு மனூருக்களிலும் இது பெரிதாயிருப்பதால், இதற்குப் பெரியமனூறு என்று பெயரிடப்பட்டது.



தைக்கண்டு கைகுவித்துக் கும்பிட்டுக்கொண்டு தர்காவுக்குள் நுழைந்தான்.

தர்கா முன்வாசலில் தன்மகன் துளசிமகாராஜனைக் கொண்டுபோய்விட்டு, ஹலறத்து ஆண்டவர்களைப் பலவாறு தோத்திரஞ் செய்து முடித்து, சாகிபுமார்களை நோக்கி எம்பெருமானூர் எனக்குச்செய்த பேருதவிக்குக் கைம்மாறு செய்ய நான் பாத்திரனல்ல. ஆயினும், நான் பிரார்த்தனை பண்ணிக்கொண்ட இரண்டில், ஒன்றாகிய மனூருவைக் கட்டிவிட்டேன். மற்றொன்று கிராமம் தத்தம் பண்ணுவது தான். அதை இப்போதே செய்கிறேன் என்று சொல்லி தஞ்சாவூர் எல்லையின் கீழ்ப்புறத்திலுள்ள இளங் கடம்பனூர் என்னும் கிராமத்தை தர்காவுக்கு மானியமாகச் செம்புபட்டயம் எழுதி, சாகிபுமார்கள் கையில் கொடுத் தான். அதை சாகிபுமார்கள் பிரதாபசிங்கு மகாராஜாவிட மிருந்து ஒப்புக்கொண்டார்கள்.

அதன்பின் பிரதாபசிங்கு மகாராஜா தர்காவின் உண்டியலிலும் அளவற்ற திரவியங்களைப் போட்டுவிட்டு, ஹலறத்து ஆண்டவரவர்களைத் துதித்துக்கொண்டாடி, நாகூரிலிருந்து புறப்பட்டு, தஞ்சாவூர்போய்ச் சேர்ந்து, சுகமாக வாழ்ந்திருந்தான். அன்று முதல் அந்தக் கிராம வரும்படியை சாகிபுமார்கள் அநுபவிக்கத் தொடங்கினர்கள்.

ஐந்தாம் மனூருக்கட்டினது முற்றிற்று.

௧௯௧-ம் அத்தியாயம்.

## மானியம் விட்டது.

---

[இவ் வத்தியாயம் ஹலறத்து ஆண்டவரவர்களின் தர்கா வுக்குத் தஞ்சாவூர் துளசி மகாராஜா மானியம் விட்ட வரலாற்றை சொல்லுகின்றது.]

ஹலறத்து சுல்தானுல் ஒளலியா, குத்புல் அக்தாபு பறுதுல் அஹபாபு: கௌதுல் இஸ்லாம், மீருன் சுல்தான், சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது கன்ஜுஸவாய் கன்ஜு பக்ஷ் பாத்துஷாசாகிபு ஆண்டவரவர்களின் மகத்துவத்தி னால், தஞ்சாவூர் பிரதாபசிங்கு மகாராஜாவின் மகனாய் அவதரித்த துளசிமகாராஜா நாளொருவண்ணமும், பொழு தொரு மேனியுமாய் வளர்ந்து, சகல சாஸ்திரங்களையுங் கற்று, படைப்பயிற்சி முதலானவற்றிலும் பழகி இராஜாங்க காரியங்களிலும் நன்குதேறிப் பருவமடைந்தபின் பிரதாப சிங்கு மகாராஜா மனம்பூரித்து, தன் மகனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து முடிசூட்டி, சிங்காசன மேற்றி னான். பின் துளசிமகாராஜாவே தஞ்சாவூர் முடிமன்னரா யிருந்து குடிகளைக்காத்து அரசாண்டுவந்தார்.

துளசிமகாராஜா பட்டத்திற்குவந்த சிலகாலத்திற்குப் பின், தமது தந்தை பிள்ளையில்லாதிருந்தும், நாகூருக்குப் போய் ஆண்டவரவர்களிடம் வரங்கேட்டு வந்ததும், அதனால் தான் பிறந்ததும், அதற்காகப் பெரியமனாராவைக் கட்டினதும், கிராமமொன்று தத்தம் பண்ணினதுமான வரலாறுகள் அனைத்தையும் கேள்விப்பட்டுத் தாமும் ஒரு வழி நாகூருக்குப்போய், ஆண்டவரவர்களின் சந்நிதியைத் தரிசிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

அந்த ஆசை துளசிமகா ராஜாவுக்கு வரவர அதிகரித்த படியால், சீக்கிரம் நாகூர்போய் வரவேண்டுமென்று தமது மந்திரிமாருக்குத் தெரிவித்தார். உடனே பட்டாளங் களும், பரிவாரங்களும் தயாராயின. சதுரங்கசேனை புடை சூழ, சேனாபதிகள் முன்வர, பக்கத்தில் மந்திரி பிரதானிகள் நெருங்கி நிற்க, குடை, கொடி, ஆலவட்டம், வெண் சாமரம் முதலான விருதுகளோங்க, முரசு முதலான வாத்தி யங்கள் தொனிக்கத் துளசிமகாராஜா தஞ்சாவூரை விட்டுப் புறப்பட்டு, நாகூரை நோக்கி வந்தார்.

துளசிமகாராஜா சில தினங்களில் நாகூர் வந்து சேர்ந்து, தமது படைகளை ஊருக்கு வெளியில் கூடாரமிட்டிருக்கச் செய்து விட்டு, தாமும், மந்திரி பிரதானிகளுமாக ஊருக் குள் புகுந்து, தமக்காகக் கட்டப்பட்ட பெரியமனாரா என் னும் கோபுரத்தைக் கண்டு களிகூர்ந்து கும்பிட்டு, தர்கா வுக்குள் அதிக பயபக்தியுடன் தாமொரு அடிமைபோலப் புகுந்து சந்நிதிவாசலில் வந்தார். சாகிபுமார்கள் மகா ராஜாவை அதிக அன்புடன் உபசரித்து அழைத்தார்கள். ஜனங்கள் அதிகமாய்க் கூடியிருந்தார்கள்.

பின், பொன் வெள்ளிகளாலான தாம்பாளங்களில் கற்கண்டுகளும், வாழைப்பழங்களும், குமஞ்சானும், புஷ்ப மும் கொண்டுவரப்பட்டன. அவற்றை முன்வாசலில் வைத்து, மகாராஜா மணிமுடிசாய்த்து மலர்க்கையேந்தி நின்றார். சாகிபுமார்கள் பாத்திஹா வோதினார்கள். பிறகு மகாராஜா ஹலறத்து ஆண்டவரவர்களைப் போற்றிப் புகழ்ந்து தோத்திரஞ் செய்துவிட்டு அங்கிருந்து திரும்பி, தர்கா முழுவதையும் சுற்றிப்பார்த்தார். அக்காலத்தில் இப்போதிருக்கும் அளவுக்குச் சற்றேறக்குறைய எல்லாக் கட்டிடங்களுங் கட்டப்பட்டு, கண்ணுக்கு வெகு அலங்கார

மாயிருந்தது. பஞ்ச கோபுரங்களான ஐந்து மனாருக்களும், அழகிய மண்டபங்களும், அலங்காரமாய்க் காணப்பட்டன.

தர்கா முழுவதையும் சுற்றிப்பார்க்கும் போதே தர்காவின் ஆதினஸ்தராயுள்ள சாகிபுமார்களைப் பற்றியும், அவர்களின் வரும்படியைப் பற்றியும், செலவைப் பற்றியும், ஒவ்வொன்றாக விசாரித்தார். அனைத்தும் விவரமாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டன. அப்போது மகாராஜா தமது இருதயத்தில், பரிசுத்தவான்களாகிய சாகிபுமார்கள் அதிகமாய்ப் பல்கியிருக்கின்றார்கள். பல குடும்பங்களாயிருக்கும் இவர்களுக்குச் ஜீவனார்த்தமாகச் செலவிடப் போதுமான தொகை வருஷந்தோறும் வருமானமாய் வரவேண்டும். அல்லாமலும், தர்கா அகன்ற பாரிய கட்டிடமா யிருக்கின்றது. இதற்கு எங்கும் விளக்கெரியவேண்டும். அவ்விளக்குச் செலவுக்கும், இன்னும் தர்கா விஷயமான செலவுகளுக்கும் மாதந்தோறும் ஒரு தொகைப்பணம் வேண்டியதுமுண்டு. ஆக எல்லாச் செலவுகளையுங்கூட்டி வரும்படியோடு ஒத்துபார்த்தால், அச்செலவுக்குப் போதுமான வரும்படியாயிருக்க வில்லை. ஆதலால் இவர்கள் செலவுக்குக் கஷ்டப்படுவார்கள். நமது தந்தைவிட்ட மானியம் ஒரு கிராமந்தானே? அந்த கிராமத்தோடு இன்னும் சில கிராமங்களை நாம் மானியமாக விட்டால், அவற்றின் வரும்படிகளுஞ் சேர்ந்து இவர்கள் ஜீவனத்திற்குப் போதுமாயிருக்கும், போதாவிட்டால் தர்காவின் காணிக்கை வரும்படிகளையுஞ் சேர்த்துச் சரிக்கட்டிக்கொள்ளுவார்கள். ஆதலால், நாமும் சில கிராமங்களை மானியம் விடவேண்டும் என்று நினைத்துக் கொண்டே பார்வையிட்டார்.

துளசிமகாராஜா இவ்வாறு எண்ணமிட்டு எங்குஞ் சுற்றிப்பார்த்து விட்டு, அன்றைத்தினமே தர்காவி லிருந்து கொண்டு, தாம் பதினன்கு கிராமங்களை மானியமாக விட்



டார். அந்தப்பதினன்கு கிராமங்களும் இன்னின்னதென்று குறித்து, அதன் வரும்படி தர்கா சாகிபுமார்களின் ஜீவனத்திற்கென்றும், தர்காவின் செலவுக்கென்றும், * செம்புப் பட்டயமெழுதி, சாகிபுமார்கள்வசம் ஒப்படைத்தார். அந் தச்செம்புப் பட்டயத்தை அவர்கள் அதிக சந்தோஷத் துடன் பெற்றுக்கொண்டு, மகாராஜாவை வாழ்த்தினார்கள்.

தருமகுணசீலரான துளசிமகாராஜா கிராமங்களை மானியமாக விட்டபின், தர்கா சாகிபுமார்களிடம் விடை பெற்றுக்கொண்டு நாகூரிலிருந்து தஞ்சாவூர் போய்ச் சேர்ந்து, சுகமாகவும், சந்தோஷமுமாகவும் வாழ்ந்திருந் தார். அந்நாள் முதல் அத்தருமராஜாவின் கீர்த்தி உலகமெங் கும் பிரகாசித்து, குன்றின்மேலிட்ட தீபம்போல் விளங்கு கின்றது.

முந்திப் பிரதாபசிங் மகாராஜா மானியம் விட்ட ஒரு கிராமமும், பிந்தித் துளசிமகாராஜா மானியம் விட்ட பதி னன்கு கிராமங்களுஞ் சேர்ந்து, ஆகப் பதினைந்து கிராமங் களாயின. அக்கிராமங்கள் அந்நாள்முதல் நாகூர் தர்கா சாகிபுமார்களின் ஆதினத்திலிருந்து, அவர்களாலேயே அநு பவிக்கப்படுகின்றன. அக்கிராமங்களாவன :—

1. நெடுங்காட்டங்குடி.
2. வடகுடி.
3. சோழங்கநல்லூர்.
4. குறும்பேரி.
5. ஆளியூர்.
6. கடம்பர்வாழ்க்கை.
7. நாங்குடி.
8. சருங்குடி.
9. திருக்கண்ணன்குடி.
10. புலியூர்.
11. இளங்கடம்பனூர்.
12. வெற்றிவாழ்க்கை
13. புல்லூர்.
14. தெத்தி.
15. மேலநாகூர்.

* இந்தச் செம்புப்பட்டயம் மகாராட்டிரபாஷையில் எழுதப் பட்டு சிக்கா என்னும் பெயருடன் நாகூர்தர்காவில் இருக்கின்றது.

[ஆளிபூர்க் கிராமத்தை இரண்டாகப்பிரித்து ஒன்றுக்குப் பாமணி என்றுபெயரிடப்பட்டு பதினாறு கிராமங்களாய் இப்போதிருக்கின்றன.]

இக் கிராமங்களின் வருமானத்தையும், காணிக்கையாய்வரும் பலவித வருமானங்களையும், ஹலறத்து ஆண்டவரவர்களின் திருவாக்கின்படி அவர்களின் சந்ததிகளான சாகிபுமார்கள் அனுபவித்துக் கொண்டு ஒரு குறைவுமின்றி அக்காலத்திலும் வாழ்ந்தார்கள்; இக்காலத்திலும் வாழ்கின்றார்கள்; இனி எக்காலத்திலும் வாழ்வார்கள். காலத்திற்குக் காலம் ஆண்டவரவர்களின் கருமாத்துகளான அற்புதங்கள் அதிகப்பட வளர்கின்றன வாதலால், வருமானங்களும் வளர்கின்றன; அவ்வருமானங்கள் அவர்களுக்கே யுரியவனவன்றி, மற்றவர்களுக்கு உரியனவேயல்ல.

ஹலறத்து ஆண்டவரவர்களின் மகத்துவத்தையும் கருமாத்துகளையும் அளவிட்டு எழுதிமுடிக்க யாவரும் சக்தி பெறமாட்டார்கள். அவர்களின் ஜீவிய காலத்தில் நிகழ்ந்தவைகளில் பிரதானமானவைகளே சரித்திர காரர்களால் எழுதப்பட்டிருந்தன. உபாத்தான பின்னும் குறிப்பான சில கருமாத்துகளே எழுதப்பட்டன. அந்த கருமாத்துகள் எழுதப்படாமல் விடப்பட்டன. மானியம் விட்டபின் முதற்கொண்டு இந்நாள் பரியந்தம் அளவிறந்த கருமாத்துகள் நிகழ்ந்திருக்கின்றன. அவை தோரணைதவறுமல் எழுதுவாரின்றி, மறைந்து கிடக்கின்றன. இக்காலத்திலும் நிமிஷத்திற்கு ஒன்றாகக் கருமாத்துகள் நடந்துகொண்டேயிருக்கின்றன. இஃது உண்மையென்பதற்கு, நாகூர் தர்காவுக்கு வருகிற பலஜாதி மனிதர்களைக் கொண்டும், அவர்கள் கொணர்ந்து சமர்ப்பிக்கும் காணிக்கைப் பொருட்களைக்கொண்டும் திருஷ்டாந்தப் படுத்தலாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாட்டம் நிறைவேறப்



பெற்றே இங்கு வரநேரிடுகின்றது. இனி யுகம் முடியும் வரையும் இவ்வாறே நடைபெறும்.

ஹலறத்து ஆண்டவரவர்கள் ஒளலியாக்களுக்கு நாயகமானவர்கள்; குத்புகளில் சிறப்பானவர்கள். இன்னும் அளவற்ற மகத்துவங்களுள்ளவர்கள். அவர்கள் வந்து தங்கின நகரமாகிய நாகூர் இப்படிப்பட்ட தென்பதை ஹலறத்து ஆண்டவரவர்களின் மகிமையைக் கொண்ட நன்கறியலாம். நாகூருக்கு நடுவில் அவர்கள் அடங்கி விளங்கும் தர்கா அதிக மகிமையுள்ளது. பூர்வத்தில் சிறிய சில கட்டிடங்களாயிருந்தும், காலத்திற்குக் காலம் பல தனவான்களால் இப்போதுள்ள அளவில் கட்டப்பட்டு, வடக்கே தலைமாட்டுவாசல் கிழக்கே கிழக்குவாசல், தெற்கே கால்மாட்டுவாசல் மேற்கே அலங்காரவாசல் என்னும் நான்கு திருவாசல்களையுடைய அரண்சூழ்ந்ததாய், பஞ்சகோபுரங்கள் என்னும் ஐந்து மனாருக்களுள்ளதால், கண்களுக்கு அலங்காரமானதாய், எந்நாளும் ஜனசந்தடியில் குறைவற்றதாய், வருஷந்தோரும் உலகபிரசித்தமான சந்தூரி என்னும் திருவிழாவுடையதாய், அரசர்முதல் எளியோர் வரையுமுள்ள யாருக்கும் அவரவர் நாட்டத்தை நிறைவேற்றுகிற தானமாய் அற்புதங்கள் விளைநிலமாய், வெகு பிரபலமாயிருந்து விளங்குகின்றது.

ஹலறத்து ஆண்ட்வரவர்களின் மகத்துவமும், அவர்கள் வந்து தங்கின நாகூரின் மகத்துவமும் அவர்கள் அடங்கி விளங்கும் தர்காவின் மகத்துவமும் இப்படிப் பட்டவையென்று எளிதில் அறிந்துகொள்வதற்கு இக் கிரந்தமே போதுமானதாயிருப்பதால், இன்னும் அவைகளைப்பற்றி விரித்துச்சொல்லாமல் இம்மட்டில் இக் கிரந்தத்தை முடித்து, இதை நிறைவேற்றின மகத்துவமுள்ள அல்லாஹுத்த ஆலாவைப் புகழ்ந்து சுக்றுசெய்கின்றேன்.

௫௫௪ கன்ஜுல் கருமாத்து.

அளவிறந்த மகத்துவங்களையுடைய நாயகமான ஹலறத்து சையிது அப்துல்காதிறு ஷாகுல்ஹமீது பாதுஷா சாகிபு ஆண்டவரவர்கள் தங்கள் அற்புதச் சரித்திரத்தை இவ்வாறு முழுகிரந்தமாகச் செய்வதற்குக் காரணமாயிருந்து செய்வித்த ஹலறத்து சையிது ஜலால் முகம்மதுகௌதுசாகி பவர்களுக்கும் செய்தவனாகிய குலாம்காதிறு என்பவனுக்கும், இம்மையிலும், மறுமையிலும், பேருதவி செய்வார்களாக. "ஆமீன்"

மாணியம்விட்டது முற்றிற்று.

---

கன்ஜுல் கருமாத்து

முற்றுப்பெற்றது.


Q7:23
N49

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110956
EGMORE, MADRAS-8


KABEER PRINTING WORKS, MADRAS 5—Fer. 1949.